தேவ ஊழியம்
தேவ வழியில் செய்யப்படட்டும்

(புதிய உடன்படிக்கை சபைகளின் தலைமைத்துவம்)

சகரியா பூணன்

தேவ வழியில் . . .

1. பூர்வ கிறிஸ்தவ ஊழியமும்! இன்றைய ஊழியமும்! 5
2. புதிய உடன்படிக்கையின் மாதிரி ஊழியம் 10
3. மனுரூபத்தின் கோட்பாடுகள் 24
4. எங்கும் நிறைந்த தூய சாட்சி 39
5. மதவாத குழுவா? அல்லது, கிறிஸ்துவின் சரீரமா? 52
6. மற்றவர்கள் பின்பற்ற உகந்த ஒரு தலைவன் 65
7. சிறந்த தலைவர்களின் சில குணாதிசயங்கள். 69
8. ஒரு தலைவனுக்குரிய பொறுப்பு 75
9. வேலைக்கார - தலைவனின் ஆவிக்குரிய அதிகாரம் 94
10. முழுமையும் சார்ந்து, அவரை சேவியுங்கள் 105
11. ஆவிக்குரிய பெருமையும் தேவனுடைய அங்கீகாரமும் 118
12. சபையில் பொருளாதார விஷயங்கள் 131
13. மெய்யான தீர்க்கதரிசிகள்! கள்ளத் தீர்க்கதரிசிகள்! 146
14. தேவ வார்த்தை தேவ வழியில் பிரசங்கித்திட வேண்டும்! 161
15. தலைவர்கள் வீழ்ச்சி அடைவது ஏன்? 180
16. திருத்துதலை ஏற்றுக்கொண்டு நொறுங்குதல் 193
17. சாத்தான் மேற்கொள்ளப்பட வேண்டும் 205
18. உபத்திரவம் வரும் வேளையில்? 217
19. தேவ மனிதர்களின் ஐம்பது அடையாளங்கள் 229
20. ஆவிக்குரிய இயக்கங்களின் எழுச்சியும்! வீழ்ச்சியும்! 235
21. 'இருதயத்தின்' அந்தரங்க சிந்தைகள் வெளிப்படும் 249

தேவ ஊழியம் தேவ வழியில் செய்யப்படட்டும் (God's Work done in God's Way)-2018

Copyright - ZAC POONEN

இந்த புத்தகம் பதிப்புரிமை பெற்றுள்ளது. இந்த பணியின் எந்த பகுதியும் மறுபதிப்போ அல்லது எந்த ரூபத்திலும் கடத்தல் கூடாது. அதாவது, பதிப்பாளர் எழுதித்தந்த அனுமதி இல்லாமல் மின்னனு சாசனமோ அல்லது எந்திர சாசனமோ (ஜெராக்ஸ் உட்பட) பதிவு செய்தல் கூடாது.

மேலும் விபரங்களுக்கு
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149, Karnataka, India
email: cfc@cfcindia.com

கடைசி நாளில் ‘உங்கள் ஊழியத்தின் தரத்தை’ அக்கினியினால் தேவன் சோதிப்பார்! பொன், வெள்ளி விலையேறப்பெற்ற கற்களால் கட்டப்பட்டவைகள் நிலைத்திருக்கும்! மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளால் கட்டப்பட்டவைகள் எரிந்து சாம்பலாகும். ஆகவே, அவனவன் ‘தான் எவ்வாறு எத்தன்மையுடன் கட்டுகிறோம்’ என்பதில் கவனமாயிருக்கக்கடவர்கள்!

(1கொரிந்தியர்.3:10-15).

1

பூர்வ கிறிஸ்தவ ஊழியமும்! இன்றைய ஊழியமும்!

நோவாவின் காலத்தில் நான் வாழ்ந்திருந்தால், என் ஜீவியத்தின் 'தலையாய முக்கியத்துவம்' என்னுடைய எஞ்சிய எல்லா நேரத்தையும், நோவா கட்டும் பேழைக்கு உதவி செய்வதற்கே செலவழித்திருப்பேன். ஏனென்றால், கட்டப்படும் இந்த பேழை ஒன்று மாத்திரமே, அந்நாட்களில் நடைபெற இருந்த **தேவனுடைய நியாயத்தீர்ப்பில்** தப்பி பிழைத்திருக்கும் என நான் அறிந்திருக்கிறேன்.

அதுபோலவே 'இன்று' இயேசு கிறிஸ்துவின் சபை கட்டப்படுவதே 'தலையாய முக்கியத்துவம் கொண்ட பணி' எனக் காண்கிறேன். நீங்கள் ஞானவான்களாயிருந்தால், நீங்களும் இதே பணியைத்தான் மேற்கொள்வீர்கள்!

இன்றைய கிறிஸ்தவ ஊழியம் புதிய ஏற்பாட்டின் தரத்தில் உள்ளதா?

இன்று பூமியில் செய்யப்படும் கிறிஸ்தவ ஊழியங்களை, புதிய ஏற்பாட்டில் செய்யப்பட்ட ஊழியத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், 'ஏராளமான வித்தியாசம்' இருப்பதைக் காண்பீர்கள்! **புதிய ஏற்பாட்டின் கொள்கைப்படி** சபையைக் கட்டுவதற்கு நாடுபவர்கள் வெகு குறைவாகவே இருக்கிறார்கள். மாறாக, இன்றைய திரளான கிறிஸ்தவ தலைவர்கள் **'அந்த கொள்கைகளை இந்நாட்களில் பின்பற்றுவது' முடியாது!** நடைமுறைக்கு ஒவ்வாது! என்றே எண்ணுகிறார்கள். ஆகவேதான், பெரும்பாலான கிறிஸ்தவ ஊழியங்கள், இந்த உலகத்திலுள்ள 'நகராட்சி அலுவலகப் பணியைப்போலவே' செய்கிறார்கள்! அந்த பணி, அப்போஸ்தலர்கள் செய்த ஊழிய வழிமுறைக்கு முற்றிலும் வித்தியாசமாயிருக்கிறது!

சில உதாரணங்களை கவனியுங்கள்:

- ஒரு கம்பெனிக்கு 'டைரக்டார்கள்' கூலிக்கு அழைக்கப்படுவதைப் போல், சபையில் 'பாஸ்டார்கள்' கூலிக்கு அழைக்கப்படுகிறார்கள்.

- ஒரு கம்பெனி 'டைரக்டர்களுக்கு' சம்பளம் கொடுப்பதைப்போல், சபைகள் 'பாஸ்டர்களுக்கு' சம்பளம் கொடுக்கிறது.
- எந்த கம்பெனி அதிக மதிப்பும், அதிக சம்பளமும் தருகிறது? என்பதை வைத்து, அந்தக் கம்பெனியை டைரக்டர்கள் தேர்வு செய்வதைப்போல், பெரும்பாலான பாஸ்டர்கள் மிகப்பெரிய மதிப்பும், அதிக சம்பளமும் கொடுக்கும் சபையை தெரிந்து கொள்கிறார்கள்.
- இந்த உலக கம்பெனிகளில் **'பணம்'** எவ்வளவு முக்கியமோ, அதே அளவு சபையிலும் பணமே இன்று முக்கியமாயிருக்கிறது.
- கம்பெனி பணிக்கு கல்லூரி பட்டம் முக்கியமாயிருப்பதைப் போலவே, கிறிஸ்தவ ஊழியங்களில் வேதாகம கல்வி பட்டம் முக்கியமாயிருக்கிறது! (இந்த தரத்தின்படி, இயேசுவின் பதினொரு சீஷர்களில் ஒருவர்கூட இன்றைய கிறிஸ்தவ ஊழியத்தில் தகுதி பெற்றிட மாட்டார்கள்).
- உலக நிர்வாகிகள் பின்பற்றும் சாதுரிய உக்திகளையே, பெரும் பாலான பாஸ்டர்கள் தங்கள் சபையை நடத்த பயன்படுத்து கிறார்கள்! இவர்கள் பரிசுத்தாவியின் **அபிஷேகத்தையோ,** அவர் தரும் **நடத்துதலையோ** தேடுவதில்லை.
- இவ்வாறு 'ஒரு கம்பெனி நடத்தும் மாதிரிகளே' ஏராளமாய் இன்றுள்ள சபைகளில், பின்பற்றப்படுகிறது.

இன்றைய கிறிஸ்தவ ஊழியங்களில் நாம் காணும் ஏராளமான வைகள், புதியஏற்பாட்டின் சபைக்கென தேவன் வைத்திருக்கும் திட்டத்திற்கு நேர் எதிர்மறையாக இருப்பதையே காண்கிறோம்.

சபை, உலகத்தைப் பாவனை செய்கிறபடியால், இன்றைய அநேக சபைகளில் 'ஆவிக்குரிய மரணம்' ஆளுகைச் செய்கிறது! இந்த சபைகள் தங்களை 'மெகா - சபைகள்' என அழைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான மெம்பர்களைச் சேர்த்து, தங்கள் கொள்கை முழுவதும் 'சுவிசேஷம் அறிவிப்பது' ஒன்றையே பிரதானமாய் வைத்திருக்கும் இவர்களையும் 'ஆவிக்குரிய மரணமே' ஆளுகைச் செய்கிறது.

பாபிலோனிய கிறிஸ்தவம் என்பது ஒரு மிகப்பெரிய அமைப் பாகும். இவர்கள் 'சுவிசேஷம் அறிவிப்பதை' உபதேசமாய் வைத்துக் கொண்டு, அவர்களின் **ஜீவியத்திற்கோ** பிழையான முக்கியத்துவத்தை கொடுத்து விட்டார்கள்! இதனிமித்தமே 'பாபிலோனிய ஊழியங்கள்' ஒரு நாளில் முற்றிலுமாய் தேவனால் அழிந்துபோகும்! (வெளி.17,18).

அநேக கிறிஸ்தவர்கள் மத்தேயு.7:1-ல் கூறப்பட்ட 'மற்றவர்களை

நியாயந்தீர்க்காதிருங்கள்' என்ற வாசகத்தை தவறாய் புரிந்து கொண்டு, மற்ற கிறிஸ்தவர்களிடமும், சபைகளிலும் நாம் காணும் எந்த தவறையும் குறிப்பிடக்கூடாது! எனக்கூறுகிறார்கள். இது, 'ஆவிக்குரிய அன்பான ஆலோசனைப்போல்' தொனிக்கிறது! ஆனால், அது ஆவிக்குரிய தன்மையல்ல. வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் வரும் ஐந்து சபைகளிலும், அதன் தலைவர்களிடத்திலும் தேவன் கண்ட பிழைகள் அனைத்தையும் 'கடிந்துகொண்டு' அவர்களுக்கு நிருபம் எழுதும்படி யோவானுக்கு ஆண்டவர் இயேசு கூறினார். அந்த நிருபங்களை 'அந்தரங்கத்திற்கு மாத்திரம்' (Confidential) என பாதுகாக்கப் படவில்லை. அன்றைய ஊழியப்பகுதிகளில் உள்ள **எல்லா சபைகளுக்கும்** அந்த நிருபங்களை அனுப்பி, பின்மாற்றமடைந்த சபைகளின் நிலையையும், அந்த சபையின் தலைவர்களின் நிலையையும் எல்லோரும் அறிந்து, எச்சரிக்கையாய் எடுத்துக்கொள்ளும்படியே ஆண்டவர் யோவானுக்கு கட்டளையிட்டார்! ஒரு சபைக்கும் அதன் தலைவருக்கும் யோவான் எழுதும்படி ஆண்டவர் கூறியது என்ன வென்றால் "**நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும், ஆவிக்குரிய நிலையில் செத்தவன்!**" (வெளி.3:1) என எழுதும்படி கூறினார். யோவான் மூலமாய் மற்றொரு சபைக்கும் அதன் தலைவனுக்கும் ஆண்டவர் தந்த செய்தி யாதெனில்: "நீ ஆவிக்குரிய பூர்வமாய் நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமா யிருக்கிறாய்" (வெளி.3:17) என எழுதினார். ஆண்டவர் பவுலை ஆவியின் நிறைவினால் உந்தச்செய்து கொரிந்திய, கலாத்திய கிறிஸ்தவர்களிடத்திலும், அவர்களின் சபைகளிலும் காணப்பட்ட ஏராளமான குறைகளை நிருபத்தில் எழுதும்படி கூறினார் (1கொரிந்தியர், கலாத்தியர் நிருபம்). இதுவே தேவனுடைய வழியாய் இருக்கிறது.

நம் ஆண்டவராகிய இயேசு, இன்றும் மாறாதவராகவே இருக்கிறார்! ஆகவே, சபையின் தலையாயிருக்கும் அவர் இதுபோன்ற பிழைகளை தொடர்ந்து வெளியரங்கப்படுத்தி கிறிஸ்தவ தலைவர் களுக்கும், சபைகளுக்கும், தன்னுடைய ஊழியர்கள் மூலமாய் 'செய்திகளை' அனுப்புகிறார். அன்று முதல் நூற்றாண்டைப்போலவே, இன்றும்..... அதிகப்பட்சமான சபைத்தலைவர்கள் கர்த்தருடைய திருத்துதலை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார்! ஆகவேதான், தன் ஒவ்வொரு கடைசி வார்த்தையிலும் "ஆவியானவர் கூறுவதை, காதுள்ளவன் கேட்கக்கடவன்" என கூறினார் (வெளி.2:7,11,17,29; 3:6,13,22). அநேகர் கேட்காவிட்டாலும்,

ஆண்டவர் கூறுவதை **'கொஞ்சம்பேர்'** கண்டிப்பாய் கேட்பார்கள்.

மே 1966-ம் ஆண்டு, தேவனுடைய அழைப்பினிமித்தம் கப்பற்படையிலிருந்து என்னுடைய வேலையை ராஜினாமா செய்து முழு நேர ஊழியத்திற்கு நான் வந்தவுடன்..... கிறிஸ்தவ ஊழியங்களில் இருக்கிற ஒவ்வொரு ஊழியனும், பரலோக சிந்தையும், ஆவியில் நிறைந்தவனுமாய் இருப்பார்கள் என நான் எண்ணியிருந்தேன்! ஆனால், சில வருடங்களுக்குள்ளாகவே, நான் எண்ணியது தவறு என கண்டுக் கொண்டேன்.

பவுலைப்போல் வெகு குறைவான ஊழியர்களே, தங்கள் பொருளாதார தேவையை தாங்களே பூர்த்தி செய்துக்கொண்டு ஸ்தல சபைகளை ஆரம்பித்து, அதைக் கட்டினார்கள் என்றும், அவர்கள் தங்களுக்கான யாதொன்றையும் தேடவில்லை என்றும் நான் கண்டேன். இதற்கு மாறாக, அநேக பிரசங்கிகள் பணத்தையும், கனத்தையும் புகழையும் மாத்திரமே விரும்பியதைக் கண்டேன். பவுலின் நாட்களிலிருந்த தேமாவைப்போல், அநேகர் தங்கள் சுய ஆதாயத்தைத் தேடினார்கள் (2தீமோ.4:10). 'சுய நலமற்ற தீமோத்தேயு' பவுலின் நாட்களில் வெகு குறைவாய் இருந்ததைப்போலவே, இன்றும் அதுபோன்றவர்கள் அபூர்வமாகவே காணப்படுகிறார்கள்! (பிலி.2:19-21).

ஜனவரி 1975-ம் ஆண்டு, தேவன் என்னைச் சந்தித்து **பரிசுத்தாவியினால் நிறைத்தார்.** இந்த அபிஷேகமே, பவுல் அனுபவித்து கூறியதைப்போலவே "கிறிஸ்துவுக்குள் எப்போதும் எங்களை வெற்றி சிறக்கச் செய்கிற தேவன்" மற்றும் "கிறிஸ்துவுக்குள் முற்றிலும் ஜெயம் பெற்றவர்கள்" போன்ற வசனங்களில் காணப்படும் 'ஜெய ஜீவியத்தை' நானும் வாழும்படி ஆர்வமுடன் தேவனைத் தேடிட வைத்தது! (2கொரி.2:14; ரோமர்.8:37).

7 - மாதங்களுக்குப் பிறகு (ஆகஸ்ட் 1975), ஓர் ஜெயம் பெற்ற வாழ்க்கை வாழ்ந்திட தேவனைத்தேடி, வல்லமைப் பெற்றிட வாஞ்சித்த, சிலரைக் கொண்டு எங்கள் வீட்டில் ஒரு கூட்டத்தை ஆரம்பித்தோம். சில வருடங்கள் தொடர்ச்சியாய், கொஞ்சம் பேர் வருவார்கள்! போவார்கள்! வெகு சிலரே எங்கள் கூடுகையில் தங்கியிருக்கிறார்கள். நாங்கள் மற்ற கிறிஸ்தவர்களால் 'பிரிவினைக்காரர்கள்' மற்றும் 'கள்ள உபதேசக்காரர்கள்' எனவும் அழைக்கப்பட்டோம். ஆனால், அவர்கள் இவ்விதம் எங்களை அழைத்ததினால் நாங்கள் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால், இயேசுவும், பவுலும் அதுபோலவே, பிரிவினைக்காரன்! கள்ளஉபதேசம் செய்பவன்! என அவருடைய காலங்களில் கருதப்பட்டார்கள். உண்மை என்னவென்றால், இன்று நாம் மதிப்பிடும்

தீர்க்கதரிசிகளும், சீர்திருத்தவாதிகளும் ஆகிய தேவனுடைய வல்லமையான ஊழியர்கள், அவர்களுடைய ஜீவிய காலங்களிலும் பிரிவினைக்காரர்கள்! கள்ள உபதேசம் செய்பவர்கள்! என்றே கருதப்பட்டார்கள்!

*ஒரு வாரத்தில் பலமுறை எங்கள் வீட்டில் கூடிவந்தோம். படிப்படியாக, நாங்கள் வெறும் "விசுவாசிகளின் ஐக்கியமாய் இல்லாமல்" புதிய உடன்படிக்கையின் சபையை ஸ்தாபித்தோம்! ஏழு ஆண்டுகளாய் கர்த்தர் எங்களை இந்தியாவிலுள்ள பெங்களூர் பட்டணத்தின் ஒரு மூலையில் தேங்கி இருக்க அனுமதித்து, புதிய உடன்படிக்கை கிறிஸ்தவத்தின் மெய் அனுபவங்களை அனுபவித்து வாழ்ந்திடச் செய்தார். பின்பு, **1983**-ம் வருடம் தொடங்கி, இந்திய தேசத்திலுள்ள எளிய கிராமங்கள், உயர்ந்த நகரங்கள் ஆகிய பல இடங்களில் ஏராளமான புதிய உடன்படிக்கை சபைகளை கர்த்தர் ஸ்தாபித்தார்! சில வருடங்களுக்குப் பின்பு, பிற நாடுகளுக்கும் சென்று, அங்கும் இதுபோன்ற சபைகளை தேவன் ஸ்தாபித்தார்.*

இருளின் வல்லமைகள், பல்வேறு ரூபத்தில் எங்களைத் தாக்கின. ஆனால், எங்கள் நடுவே தேவன் எழுப்பிய சபைக்கு எதிராக, அவைகள் எங்களை மேற்கொள்ள முடியவில்லை!

இந்த புத்தகத்தை எழுதுவதற்கு சுமார் 43 வருடங்கள் நான் காத்திருந்தேன்! அது ஏனென்றால், நானோ நிரூபிக்கப்படாத கோட்பாடுகளை எழுதுவதற்கு விரும்பவில்லை! எங்கள் ஊழியத்தில் தங்கிய தேவனுடைய ஆசீர்வாதம்! தேவன் தம்முடைய வார்த்தையில் தந்த ஆச்சரியமான வெளிப்பாடுகள்! தேவன் அற்புதமாய் ஸ்தாபித்த அநேக சபைகள்! ஆகிய இவை அனைத்தும், "புதிய உடன்படிக்கை சபைகளை" கட்டுவதற்கு தேவன் எனக்கு கற்றுக்கொடுத்த வழிகளை எங்களுடைய எல்லா விசுவாசிகளுக்கும் பகிர்ந்து கொடுப்பதற்கு என்னை 'ஒரு கடனாளியாய்' அவர்களுக்கு மாற்றிவிட்டது!

இந்த புத்தகம், அந்த கடனைத் தீர்ப்பதற்காக எழுதப்பட்ட முயற்சியே ஆகும்.

இந்த புத்தகம், இயேசு கிறிஸ்துவின் மாதிரியைத் தங்கள் அனுதின வாழ்க்கையில் பின்பற்ற பேரார்வம் கொண்டவர்களுக்காகவும், புதிய உடன்படிக்கை சபைகளை 'தேவனுடைய மகிமைக்காக' கட்டிய அப்போஸ்தலர்களின் மாதிரியை பின்பற்றுவதற்கு பேரார்வம் கொண்டவர்களுக்காகவும் எழுதப்பட்டதாகும்!

2

புதிய உடன்படிக்கையின் மாதிரி ஊழியம்

“இயேசு முதலாவது செய்யவும், பின்பு உபதேசிக்கவும் தொடங்கினார்” (அப்போஸ்தலர்.1:1).

பழைய உடன்படிக்கையில், தீர்க்கதரிசிகளின் அந்தரங்க வாழ்க்கையைவிட, அவர்கள் பிரசங்கித்த ‘செய்திகளே’ அதிக முக்கியத்துவம் நிறைந்ததாயிருந்தது. ஆனால், இயேசு வந்தவுடன் ‘முதலாவது ஜீவித்தார்!’ அதற்குப் பிறகு ‘தான் செய்தவைகளை மாத்திரமே பிரசங்கித்தார்!’.

பழைய உடன்படிக்கை தீர்க்கதரிசிகளின் அழைப்பு “கர்த்தருடைய செய்தியை **வந்து கேளுங்கள்**” *என்பதாகும். இதை மாற்றி அமைத்த புதியஉடன்படிக்கை கிறிஸ்தவர்களின் அழைப்போ “கர்த்தர் எங்கள் ஜீவியத்தை எவ்வாறு மாற்றியுள்ளார் என்பதை* **வந்துப் பாருங்கள்**” *என்பதேயாகும்!*

புதிய உடன்படிக்கையில், நாம் பிறருக்கு கர்த்தரின் வழியைப் போதிப்பதற்கு முன்பாக, அதை முதலாவது, தேவன் நம் ஜீவியத்தில் கிரியை நடப்பித்ததை அனுபவமாய் கொண்டிருக்க வேண்டும்! இது, ஜெயம் பெற்று வாழும் **ஜீவியத்திற்கு** *மாத்திரமல்ல, ஸ்தல சபைகளைக் கட்டுவதற்குச் செய்திடும் கர்த்தருடைய* **ஊழியத்திற்கும்** *உரியதாகும்.*

இயேசு கட்டும் சபை “பாதாளத்தின் அந்தகாரத்தை” ஜெயிக்கும் வலிமைக் கொண்டது! எனக் கூறினார் (மத்.16:18). விசுவாசிகளை இந்த ஜெயம் கொண்ட வாழ்க்கைக்குள் நடத்தி, அந்த சபையை கட்டுவதற்காக பவுல் தன்னுடைய முழு ஜீவியத்தையும் ஊற்றிவிட்டார்! அதுபோலவே, தீமோத்தேயுவும் செய்தார்!

தன்னுடைய அப்போஸ்தலர்கள் நிறைவேற்றும்படி இரண்டு பெரிய முக்கிய கட்டளைகளை ஆண்டவர் தந்தார்:

1. *எல்லா ஜனங்களுக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்! (மாற்.16:15,16).*

2. அவர்களை சீஷர்களாக்கி, இயேசு கற்பித்த யாவையும் கைக் கொள்ளும்படி போதியுங்கள்! (மத்தேயு.28:18-20).

முதல் பகுதியாகிய சுவிசேஷ ஊழியத்தைத் தொடர்ந்து 'இயற்கைக்கு மாறான அடையாளங்கள்' நடக்கும் என இயேசு கூறினார் (மாற்கு.16:17,18). இரண்டாவது பகுதியாகிய "சீஷர்களாக்கும் ஊழியம்" தொடர்ந்து 'அற்புத அடையாளத்தால் அல்ல'..... மாறாக, அந்த சீஷர்களை, அவருடைய கட்டளைகள் அனைத்தையும் கைக் கொள்ளும்படி போதிப்பதேயாகும் (மத்தேயு.28:20).

பிறரை 'மனம் மாறச் செய்யும்' சுவிசேஷ ஊழியம், உலகமெங்கும் அநேக விசுவாசிகளால் செய்யப்படுகிறது. ஆனால், இரண்டாவது பகுதியாகிய 'சீஷர்களை உருவாக்கும்' ஊழியமோ, பெருமளவில் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது.

ஏராளமான சுவிசேஷகர்களும், மிஷனெரிகளும், காணாமல் போன ஒரு ஆட்டை தேடி மந்தைக்குள் சேர்க்கிறார்கள், அது நல்லது தான்! ஆனால், துரதிருஷ்டவசமாய் மந்தைக்குள் வந்த 'காணாமல் போன ஆடு' இயேசு லூக்கா.15:7-ம் வசனத்தில் குறிப்பிட்ட "மனந்திரும்ப அவசியமில்லாத 99 நீதியுள்ள ஜனங்களாய்" இருப்பதில்லை. இன்றைய அநேக கிறிஸ்தவ மந்தையான சபையில் உள்ள ஜனங்கள் கோபத்தினாலும், பாலிய இச்சையினாலும் தோற்கடிக்கப்பட்டு! பண ஆசையில் தோற்கடிக்கப்பட்டு! இன்னும் அநேகர் 'மாம்ஷீகமான அநேக காரியங்களால்' தோற்கடிக்கப்பட்டு! ..... உள்ளே வந்து சேர்ந்த **காணாமல் போன ஆட்டைவிட அதிக மனந்திரும்புதல்** தேவை கொண்டவர்களாய் இருக்கிறார்கள்!

ஆகவே, இன்று மிகப்பெரிய தேவையாய் இருப்பதெல்லாம், மந்தையிலுள்ள 99 ஆடுகளும் மெய்யான மனந்திரும்புதலுக்கும், நீதியின் வாழ்க்கைக்குள்ளும் நடத்தப்படுவதேயாகும்! அப்போதுதான், உள்ளே வந்த காணாமல்போன ஆடு "ஒரு தேவ பக்தியான மந்தைக்குள்" தஞ்சமடைய முடியும். அப்படி இல்லையென்றால், 'அந்த ஒரு ஆடு' மந்தையிலிருக்கும் 99 ஆடுகளின் வியாதிகளாலும் பாதிக்கப்பட்டு நாசமடையும்!

ஆகவேதான் எங்கள் சபையை (கிறிஸ்தவ ஐக்கிய சபை, CFC - பெங்களூர், இந்தியா) ஆண்டவர் அழைத்து சீஷத்துவத்தையும், இயேசுவின் எல்லா கட்டளைகளுக்கு, கீழ்ப்படிதலையும் வலியுறுத்தும் படி பணித்தார்! நாங்கள் தொடர்ந்து சுவிசேஷ ஊழியமும் செய்கிறோம்! அதினிமித்தம், எங்கள் சபை எண்ணிக்கை 1975 - ம் ஆண்டு 10 பேருக்கும் குறைவாய் இருந்த மக்கள், இன்று அநேகமாயிரம்

விசுவாசிகளைக் கொண்ட அநேக சபைகளாய் பெருகியும் இருக்கிறோம்!

ஆனால், எங்களுடைய சுவிசேஷ ஊழியத்திற்குப் பிறகு, மனம் மாறி வந்தவர்களை 'சீஷர்களாகும்படி' நடத்துகிறோம். பின்பு, அந்த சீஷர்கள் இயேசுவின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி போதிக்கிறோம்.

இயேசு பணித்த பிரதான கட்டளையின் இரண்டாவது பகுதியில் ஏழு முக்கியமான சத்தியங்கள் மத்தேயு.28:18-20 வசனங்களில் தரப்பட்டுள்ளது:

1. **"வானத்திலும் பூமியிலும் உள்ள சகல அதிகாரமும் கர்த்தருடையது".** *இதை ஆதாரமாகக் கொண்டே, நாம் புறப்பட்டுச் சென்று சீஷர்களை உருவாக்க வேண்டும். எங்கு பார்த்தாலும், தேவை இருப்பதை நாம் காண்கிறபடியால், தேவையின் அடிப்படையில் 'எல்லா தேசத்திற்கும்' நாம் போய்விடக்கூடாது. அப்படி இல்லை! "சகல அதிகாரமும் கொண்ட இயேசுவுக்கு கீழாக" நாம் இருக்கிறப்படியால்.... அவருடைய அதிகாரத்திற்குட்பட்டே, அவர் எங்கு நம்மை போகச்சொல்கிறாரோ 'அங்கு மாத்திரமே' நாம் செல்ல வேண்டும். அப்போதுதான், நாம் எங்கு செல்கிறோமோ, அங்கே அவருடைய அதிகாரம் நம்மை காப்பாற்றி பாதுகாத்திட முடியும்! இப்படி நம்மால் விசுவாசிக்க முடியவில்லையென்றால், நாம் போகவும் கூடாது! ஏனெனில், அதுபோன்றவர்களால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க இயலாது!*

2. **"சீஷராக்குங்கள்"** *சீஷத்துவத்திற்கு இயேசு விதித்த மூன்று நிபந்தனைகளை பிரகடனம் செய்வதற்கு, எவ்விதத்திலும் நாம் ஒத்தவேஷம் தரித்திடக்கூடாது. அந்த நிபந்தனைகளை லூக்கா.14:26,27,33 வசனங்களில் இயேசு போதித்துள்ளார். அதன் சாரம் என்னவெனில்:* **இயேசுவின் மீது கொண்ட அன்பே** *எல்லாவற்றிற்கும் மேலாய் 1) நம்முடைய உறவினர்களை விட 2)நம்முடைய சுய - ஜீவியத்தை விட 3) நம்முடைய அனைத்து உடைமைகளை விட ..... அதிகமாய் அன்புகூர வேண்டும்!*

3. **"சகல தேசத்திற்கும்"** *நம்மால் எவ்வளவு முடியுமோ, அந்த அளவிற்கு, உலகத்தின் அநேகப் பகுதிகளுக்குச் சென்று,* **நம்மால் கூடிய அனைத்து முயற்சிகளையும் கொண்டு,** *இந்த சீஷத்துவத்தின் செய்தியை பிரகடனப்படுத்த வேண்டும். நம்முடைய ஸ்தல சபையில் 'சில சீஷர்களை உருவாக்கியதில்' நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது.*

4. **"பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்"**. *இவ்வாறாக, யாதொரு வெட்கமுமின்றி தேவனை, திரியேகம் கொண்டவராய் தெரிவிக்க வேண்டும்! மேலும் 'இயேசுவின் சீஷர்களாய்' மாற விரும்புகிறவர்களுக்கு மாத்திரமே நாம் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமே அல்லாமல், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டால் போதும் என விரும்புகிறவர்களுக்கு அல்ல!*

5. **"இயேசு கற்றுக்கொடுத்த யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசிக்க வேண்டும்"**. *கிறிஸ்து பிரசங்கித்த ஒவ்வொரு கட்டளைகளையும், எவ்வாறு கைக்கொள்ள வேண்டும்? என ஒவ்வொரு சீஷனுக்கும் போதிக்க வேண்டும்.*

6. **"நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"** *என கர்த்தர் கூறினார். நாம் இந்த ஊழியத்தை நம் ஆண்டவரோடு சேர்ந்த ஓர் பங்கு தாரராகவே செய்திட வேண்டும்! ஆகவே, அவர் நிச்சயமாய் தம்முடைய பிரசன்னத்தையும், வல்லமையையும் கொடுத்து, நம் ஊழியத்தை முழுவதும் ஆதரிப்பார்!*

7. **"இந்த உலகத்தின் முடிவுபரியந்தம்"** *நம்முடைய ஜீவியத்தின் முடிவு பரியந்தம் தொடர்ந்து நம்மை ஆதரிப்பார் என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும்! நாமோ, மேலே குறிப்பிடப்பட்ட ஊழியங்களை நம் ஜீவகாலம் முழுவதும் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்!*

தம்முடைய கிரியைகளை இன்றும் அவருடைய வழியில் செய்திடும் கர்த்தர்

கீழ்கண்டவாறு தேவனுடைய வார்த்தை கூறுகிறது:

"தேவ வசனத்தை உங்களுக்குப்போதித்து, உங்களை நடத்தினவர்களை, நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய் சிந்தித்து, அவர்கள் கர்த்தரை விசுவாசித்ததைப் போலவே நீங்களும் விசுவாசித்து நடவுங்கள்.... ஏனென்றால், இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்! இதைத்தவிர அந்நிய போதனைகளால் ஈர்க்கப்படாதிருங்கள்" (எபி.13:7-9 - Living).

மேற்கண்ட வசனங்களை அப்படியே நாம் பின்பற்ற விரும்புகிறோம்:

- *தேவனுடைய வார்த்தையை நமக்குப்போதித்த முதல் அப்போஸ்தலர்களை 'நம்முடைய தலைவர்களாய்' நாம் ஏற்றுக் கொள்கிறோம்!*

- *புதிய ஏற்பாட்டின் பக்கங்களில், அவர்கள் செய்த நற்கிரியைகளை நாம் கண்டிருக்கிறோம்!*
- *நாம் கர்த்தரை நம்பி, அவர்கள் செய்ததைப்போலவே நம் மத்தியிலும் அதே கிரியைகள் செய்யப்படுவதைக் காண்கிறோம்! ஏனென்றால் இயேசு கிறிஸ்து, அன்றுப்போலவே இன்றும் மாறாதவராயிருக்கிறார்!*
- *"பலவித நூதனான வழிகளில்" நம்மைச் சுற்றியுள்ள கிறிஸ்தவ உலகம் செய்திடும் ஊழியங்களால், நாமும் இழுப்புண்டு போக நம்மை அனுமதித்துவிடக்கூடாது!*

உங்கள் விசுவாசம் ஸ்திரப்படுத்தப்பட்டு, உங்கள் மூலமாகவும் தேவன் அதே கிரியைகளைச் செய்வார்! என விசுவாசிப்பீர்கள் என்றே நம்புகிறோம். ஏனென்றால், தேவனிடத்தில் பாரபட்சம் ஏதுமில்லை. அவர் தம்மை தீவிரமாய் தேடுகிறவர்களுக்கு.... எந்த ஸ்தலத்திலும், ஒவ்வொரு சந்ததியிலும், பலன் தருகிறவராயிருக்கிறார் (எபி.11:6).

அப்போஸ்தலர்களின் மாதிரியைப் பின்பற்றுதல்

பரிசுத்தாவியானவர் பவுலை அபிஷேகித்து, அவருடைய நிருபங்கள் மூலமாய், அவருடைய காலத்திலிருந்த திரளான பிரசங்கிகளைக் காட்டிலும் "ஓர் உயர்ந்த தரத்தை வாழ்வதற்கு" கர்த்தர் எவ்வாறு அவருக்கு பெலன் தந்தார்! என எழுதினார். அவர் கூறும்போது "நான் மேன்மைபாராட்டுவதை யாதொன்றும் அவித்துவிட முடியாது. நான் செய்வதைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பேன்! 'நாங்களும் இதே வழியில்தான் தேவனுடைய கிரியையைச் செய்து கொண்டிருக்கிறோம்' என மேன்மை பாராட்டுவோரின் ஆதாரத்தை முற்றிலும் அகற்றும்படியே, இவ்வாறு தொடர்ந்து செய்கிறோம். அந்த மனுஷர்களை தேவன் ஒருபோதும் அனுப்பவில்லை. அவர்கள் 'வார்த்தை ஜாலங்களைக் கொண்டு' அவர்களும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என உங்களைச் சிந்திக்க வைத்து மதி மயக்கி விட்டார்கள்" என்றார் (2கொரி.11:10-13 - TEV Living*).*

அந்நாட்களிலிருந்த பிரசங்கிகளோடு பவுல் தன்னை ஒப்பிட்டு கூறிய வாக்கியங்கள், ஒரு வெற்று மேன்மைப்பாராட்டுதல் அல்ல! அதற்கு மாறாக தேவனுக்கு மிகப்பெரிய மகிமையைக் கொண்டு வந்த **அவரது வல்லமையான சாட்சி** *என்றே கூற வேண்டும். அன்று இருந்த விசுவாசிகள், அவருடைய மாதிரியைப் பின்பற்றுவதற்கு, அவருடைய வார்த்தைகள் 'ஓர் சவாலாய்' மாறியது. பரிசுத்தாவியினால் நிறைந்து,*

பவுல் முழங்கிய "**ஆவிக்குரிய மேன்மைப்பாராட்டுதலுக்கும்**" (தேவனுடைய ஊழியத்தை செய்யும் அனைவரும் இதைப் பெற்றிருக்க வேண்டும்), ஆவிக்குரிய பெருமையினால் நிறைந்து பரிசேயர்கள் கொண்டிருந்த "**மாம்ஷீகமான மேன்மைப்பாராட்டுதலுக்கும்**" (இதை நாம் அனைவரும் வெறுத்திட வேண்டும்).... ஆகிய இந்த இரண்டிற்கும் எவ்வளவோ வித்தியாசம் உள்ளது.

பரிசுத்தாவியானவர் பவுலின் மூலமாகவே "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்" (1கொரி.11:1;பிலி.3:17) என்றே திருவுளம் பற்றினார். பவுலின் ஜீவியமும் ஊழியமும், கிறிஸ்தவ விசுவாசிகள் பின்பற்ற உகந்த மாதிரியாய் தரப்பட்டுள்ளது. பவுல் எவ்வாறு தனக்கு தரப்பட்ட புதிய உடன்படிக்கை ஊழியத்தை எவ்வாறு நிறைவேற்றினார்?:

பவுல் தேவனிடமிருந்து ஓர் விசேஷித்த அழைப்பைப் பெற்றார். அவருடைய ஊழியம் இருவிதமானது:

1. முதலாவதாக, கிறிஸ்துவைப் பற்றி ஒருபோதும் கேள்விப்படாத ஜனங்களிடத்திற்குச் சென்று **ஓர் மிஷனெரி சுவிசேஷகராக சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்தார்.** அவர் கூறும்போது "என்னுடைய நோக்கமெல்லாம், யாரோ சிலரால் ஏற்கெனவே சபை ஆரம்பிக்கப்பட்ட ஸ்தலத்திற்குச் செல்லாமல் **கிறிஸ்துவின் நாமம் ஒருபோதும் அறிவிக்கப்படாத** ஸ்தலங்களில் பிரசங்கித்திடவே விரும்புகிறேன்" (ரோமர்.15:20 - Living) என்று கூறினார்.
2. இரண்டாவதாக, பழைய உடன்படிக்கையின் தரத்தில் மாத்திரமே கூடிவரும் இடங்களில், பவுல் **ஓர் அப்போஸ்தலனாய் புதிய உடன்படிக்கை சபைகளை ஸ்தாபித்தார்.** கொரிந்திய சபைக்கு பவுல் கூறும்போது "நான் உங்களை **ஓர் கற்புள்ள கன்னியாக**" **கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு** ஒப்புக்கொடுக்க நியமித்தேன்" (2கொரி.11:2) என்றார்.

<u>முதல் ஊழியப்பகுதியில் பவுலின் மாதிரியை பின்பற்றுவது:</u>

பல நூற்றாண்டு காலமாய், தேவபக்தியான அநேக மிஷனெரிகள் பவுலின் இந்த மாதிரியைப் பின்பற்றியே தங்களுக்கு தேவனால் அழைக்கப்பட்ட மிஷனெரி சுவிசேஷ ஊழியம் செய்தார்கள். ஆம், கிறிஸ்துவை அறியாத இடங்களில், கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அந்த ஊழியத்தை மிகுந்த விலைக்கிரயம் கொடுத்துச் செய்தார்கள். இன்றும் 'பிரபல்யமாகாத' ஏராளமான மிஷனெரிகள், இந்த மாதிரியின் படியே செய்கிறார்கள். அவ்வாறு பணியாற்றும் அனைவர் மீதும் நான்

மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன்! அவர்களுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இன்று, பிரபல்யமான சுவிசேஷ ஊழியர்கள் பவுல் செய்ததைப்போன்ற மிஷனெரி சுவிசேஷ ஊழியத்தைச் செய்யவில்லை. ஏற்கெனவே பல ஆயிரம் கிறிஸ்தவர்களும் அநேக சபைகளும் கொண்ட இடங்களுக்குச் சென்றே, இவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்.

இரண்டாவது ஊழியப்பகுதியில் பவுலின் மாதிரியைப் பின்பற்றுவது:

எனக்கும் என் சபைகளுக்கும், பவுலின் இந்த இரண்டாவது ஊழியப்பகுதியை நிறைவேற்றுவதற்கே தேவன் அழைத்திருக்கிறார். அதாவது பழைய உடன்படிக்கையிலான சபைகள் நிறைந்த இடங்களில், புதிய உடன்படிக்கை சபைகளை ஸ்தாபிக்கும் ஊழியம்! இந்த ஊழியத்தையே தேவன் எங்கள் மூலமாய் செய்திருக்கிறபடியால் அதை மாத்திரமே நான் எழுத முடியும்.

புதிய உடன்படிக்கை சபைகளை ஸ்தாபிக்கும் ஊழியத்தில், இரண்டு அபாயங்களை பவுல் கண்டு, அதற்கு விலகி இருந்தார்:

பணத்தின் அபாயம்: *நாம் தேவனுக்கும், பணத்திற்கும் (ஆஸ்திகளுக்கும்) ஆகிய இரண்டிற்கும் ஊழியம் செய்யமுடியாது என கூறினார் (லூக்கா.16:13). ஆகவேதான், எல்லாவற்றிற்கும் முதலாவதாக, தன் ஜீவியத்திலும் ஊழியத்திலும் "பணத்தின் வலிமையை அகற்றி" அதன் பின்பே, தேவனுக்கு மாத்திரம் ஊழியம் செய்திட பவுல் விரும்பினார். பவுலின் இந்த மாதிரியைப் பின்பற்றவே நாங்களும் வாஞ்சிக்கிறோம்.*

மனுஷீக ஸ்தாபனத்தின் அபாயம்: *இந்த இரண்டாவது அபாயம், சபையில் கொண்ட கிறிஸ்துவின் தலைமையை 'மனுஷன்' எடுத்துக் கொள்ளும் அபாயம். பவுல் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள்மீது, தேவன்தந்த அப்போஸ்தல அதிகாரத்தை பவுல் கொண்டிருந்தார்.* ***ஆகிலும், தனக்குத் தரப்பட்ட அதிகாரத்தின் எல்லைக்குள் தங்கியிருப்பதற்கே பவுல் மிகுந்த கவனமாயிருந்தார்.*** *அதன் மூலமாய், சபைகளிலுள்ள மூப்பர்களும் விசுவாசிகளும் கிறிஸ்துவை தங்கள் தலையாகக்கொண்டு அவரிடத்தில் நேரடிதொடர்பு கொண்டவர்களாயிருக்க உறுதிப் படுத்தினார். இந்த பவுலின் மாதிரியையும் நாங்கள் பின்பற்ற நாடினோம்.*

பணத்தின் அபாயத்தை மேற்கொள்ளுதல்

1. **பொருளாதார ஆதரவை பவுலே ஏற்றுக்கொண்டார்!** *ஆகவே தன்னுடைய ஜீவனத்திற்காக எந்த மனிதனையும் அவர் சார்ந்து கொள்ளவில்லை (அப்.20:33,34). கர்த்தருடைய ஊழியன், தான் ஊழியம் செய்கிற*

வர்கள் மூலமாக நிச்சயமாய் ஆதரிக்கப்பட முடியும் (1கொரி.9:6-14). தன்னுடைய நாட்களிலிருந்த பொருளாசை கொண்ட, பணத்தை நேசிக்கும் பிரசங்கிகளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காண்பிக்க, பவுல் சொந்தமாய் தன் தேவையைத் தாங்கிக் கொண்டார் (1கொரி 9:15-19; 2கொரி 11:12,13). இன்று இந்தியாவிலுள்ள அநேக 'பாஸ்டர்கள்' பொருளாசையும் பேராசையும் பணத்தை நேசிக்கிற வர்களுமாய் இருக்கிறார்கள். ஆகவேதான், அவர்களுக்கு நேர் மாறாக **எங்கள் சபையிலுள்ள எல்லா மூப்பர்களும் தங்கள் பொருளாதார தேவைகளை தாங்களே ஆதரித்துக்கொள்ள தீர்மானித்திருக்கிறார்கள்.** ஒரு மனிதனையும், தங்கள் பிழைப்பிற்கு அவர்கள் சார்ந்து கொள்ள வில்லை. ஆகவேதான், எல்லா இத்தனை வருடங்களும் நாங்கள் அனைவரும் சொந்த அலுவல் செய்கிறோம்.

2. **இயேசுவைப்போலவே, தன் பொருளாதாரத் தேவைகளை ஒருவரிடமும் குறிப்பிடாமல் தேவனிடம் மாத்திரமே கூறினார்.** ஆகிலும் அதற்குப் பதிலாக, ஏழைகளுக்கு பணம் கொடுப்பதை ஊக்குவித்தார். (1கொரி 16:1,2; 2கொரி.8,9). இந்த மாதிரியையும் எங்கள் சபைகளில் பின்பற்றியிருக்கிறோம். எங்கள் தேவைகளை, எந்த மனுஷரிடமும் நாங்கள் ஒருபோதும் குறிப்பிட்டதில்லை. இருப்பினும், ஏழை விசுவாசிகளுக்கு பல இலட்சம் ரூபாய்கள் கொடுத்து உதவி யிருக்கிறோம். நம்முடைய காணிக்கைகளை 'இரகசியமாய்' கொடுக்கும்படியே இயேசு போதித்துள்ளார் (மத்தேயு.6:4). **ஆகவே காணிக்கை சேர்த்திட, ஒரு காணிக்கை பையை ஜனங்களிடத்தில் ஒருமுறை கூட நாங்கள் எடுத்துச் சென்றதில்லை.** கடந்த 43 ஆண்டுகளாய் அந்த பழக்கத்தை நாங்கள் கையாளவில்லை. எங்கள் கூட்ட அரங்கின் வெளிவாசல் அருகில் காணிக்கைப் பெட்டிகளை வைத்திருக்கிறோம். இவ்விதமாய், ஜனங்கள் தங்கள் காணிக்கையை 'அந்தரங்கத்தில்' கொடுத்திடமுடியும் (மாற்கு.12:41-44 அப்படியே கூறுகிறது). மகிழ்ச்சியுடன் கொடுக்கிறவர்களையே கர்த்தர் நேசிக்கிறார் (2கொரி.9:7). ஆகவே, **காணிக்கைப் பெட்டியில் பணம் போடும்படி ஒருவரையும் ஒருசமயம் கூட நாங்கள் கேட்டதில்லை.**

எங்கள் சபைகளில், எவ்விதமான கொடுப்பதும் மனப்பூர்வ மானதேயாகும்! இந்தியாவில் சுமார் 200 மாநாடுகள் நடத்தி யிருக்கிறோம். அதில் ஆயிரக்கணக்கான விசுவாசிகள் பங்கேற்றிருக் கிறார்கள். அந்த எல்லா மாநாடுகளிலும் நாங்கள் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி திரளான ஜனங்களுக்கு இலவசமாய் உணவளித்து, **யாரிடத்திலும் எவ்விதத்திலும் பணம் கேட்டதில்லை.**

3. **சுவிசேஷத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கும் யாரிடத்திலும் பவுல் பணம் கேட்கவில்லை.** *பவுல் ஜனங்களுக்குச் செய்த தன்னுடைய ஊழியத்தைக் குறித்த யாதொரு அறிக்கைகளைக் குறிப்பிடவோ, அதற்குரிய பணத்தேவையை குறிப்பிட்டதோ இல்லை.* **அதுபோலவே நாங்களும், சுவிசேஷத்தை பிரபல்யப்படுத்த யாரிடமும் பணம் கேட்டதே யில்லை. எங்கள் ஊழியத்தைக் குறித்த சிறு தகவலைக்கூட யாரிடமும் எந்த இடத்திற்கும் கடந்த 43 வருடங்களாய் அனுப்பியதில்லை.** *மனுஷீகமான எந்த தூண்டுதலும் இல்லாமல் இந்த ஊழியத்தை கர்த்தரே சில விசுவாசிகளை பாரப்படுத்தி தாங்கினார்! இயேசுவின் மாதிரியையும் பவுலின் மாதிரியையும் பின்பற்றி அவர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு பெற்றுக்கொண்டதைப்போலவே, நாங்களும் அவ்வழி பின்பற்றினோம் (லூக்.8:2,3; 2கொரி.11:7-9; பிலிப்பியர்.4:12-19).*

4. **பவுல் தன்னுடைய ஊழியத்திற்கு, யாரிடமும் எவ்விடமும் எந்த காணிக் கைகளும் பெறவில்லை.** *சில விசுவாசிகளிடமிருந்து மாத்திரமே, காணிக்கைகளை ஏற்றுக்கொண்டார் (பிலி.4:15-19).* **யாரிடமிருந்து காணிக்கைகளை பெற்றுக்கொள்ள முடியும்? என்பதை அவர் கொண்டிருந்த கோட்பாடுகள் வழிவகுத்தது.** *ஓர் சபையாக, அதே கோட்பாடுகளையே நாங்கள் பின்பற்றினோம். யாரேனும் எங்கள் சபைக்கு பணம் தரவிரும்பினால், அதற்கு முன்பாக ஐந்து கேள்வி களுக்கு அவர்கள் பதில் கூறிய பிறகே கொடுக்கும்படி செய்தோம்:*

   i. **நீங்கள் மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளையா?** *இந்த பூமியில் தேவனுடைய பணியை ஆதரிப்பது ஓர் கனத்திற்குரிய சிலாக்கியமேயாகும். ஆனால் அந்த சிலாக்கியம், மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே அருளப் பட்டிருக்கிறது (3யோவான்.7).*

   ii. **உங்கள் சொந்த குடும்ப தேவைக்கு போதுமான பணம் உள்ளதா?** *நீங்கள் காணிக்கைகளை கொடுப்பதால் உங்கள் குடும்ப பொருளாதார தேவைக்கு நெருக்கடி ஏற்படுமா? இச்சமயத்தில், உங்கள் குடும்ப தேவையே முதலாவது உங்கள் அக்கறையா யிருக்க வேண்டும் (மாற்கு.7:9-13; 1தீமோ.5:8). நம்முடைய பரமபிதா, இந்த பூமியிலுள்ள எந்த ஐசுவரியவானைப் போலவே, மகா ஐசுவரியம் கொண்டவர். எனவே, அவர்கள், தேவனுடைய ஊழியத்திற்கு கொடுத்ததினிமித்தம் அவருடைய பிள்ளைகளில் ஒருவராது பசியாலோ அல்லது வேறு எந்த விதத்திலோ கஷ்டப்பட அவர் விரும்புவதில்லை.*

iii. **நீங்கள் திருப்பி செலுத்த வேண்டிய ஏராளமான கடன்கள் உள்ளதா?** *அப்படியிருந்தால், அந்த கடன்களை முதலாவது கொடுத்து தீருங்கள். தன்னுடைய பிள்ளைகள் இளைப்பாறுதலோடு எந்த கடனும் இல்லாமல் வாழ்ந்திடவே தேவன் விரும்புகிறார் (ரோமர்.13:8). நாம் தேவனுக்கு கொடுப்பதற்கு முன்பாக, 'முதலாவதாக' இராயனுக்குரியதை கொடுத்து விட வேண்டும். ஏனென்றால் இராயனுக்குரிய பணத்தையோ அல்லது வேறொருவருடைய பணத்தையோ நாம் அவருக்கு கொடுத்திட தேவன் விரும்புவதில்லை. இதை இயேசு தெளிவாக மத்தேயு.22:21 -ம் வசனத்தில் கூறியுள்ளார். "வீட்டுக்கடன்" என்பது ஒரு கடனாகாது. ஏனெனில், நீங்கள் கட்டும் ஒரு வீடு உங்கள் சொத்தாய் மாறுகிறபடியால், நீங்கள் கடன் வாங்கிய பணத்தின் மதிப்பிற்கு அது ஈடுகட்டுவதாயிருக்கிறது. அதுபோலவே ஒரு வாகன கடனும், ஒரு கடனாக கருதமுடியாது. அந்த வாகனம் வாங்கிய கடன் மதிப்பிற்கு இன்சுயூரன்ஸ் பெற்றிருந்தால், அதுபோதும்!*

iv. **ஓர் சுத்தமனசாட்சியை நீங்கள் வைத்திருக்கிறீர்களா?** *நீங்கள் யாதொரு வகையில் பாதித்த சிலரிடம், உங்களால் முடிந்த அளவிற்கு ஒப்புரவாகி இருக்கிறீர்களா? யாரோ சிலரை பாதித்து விட்டு, அந்த நபரிடம் இன்னமும் மன்னிப்பு கேட்காதிருந்தால், அதுபோன்ற ஒருவரிடமும் 'எந்த காணிக்கையையும்' தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் (மத்.5:23,24).*

v. **சுயாதீனமாகவும் மகிழ்ச்சியாகவும் நீங்கள் கொடுத்தீர்களா?** *எந்த ஒரு நபரின் கட்டாயத்தினிமித்தமோ அல்லது உங்கள் சொந்த மனசாட்சியின் உறுத்துதலுக்காகவோ கொடுக்கக்கூடாது. தேவன், மகிழ்ச்சியுடன் உற்சாகமாய் கொடுப்பவர்களையே நேசிக்கிறார். அரைகுறை மனதோடோ, பிறருடைய கட்டாயத்தோடோ, அல்லது நேர்த்திக்கடன் போலவோ அல்லது தங்கள் மனசாட்சியை சமாதானப்படுத்துவதற்கோ அல்லது தான் கொடுத்ததற்குப் பதிலாய் தேவன் தனக்கு அதிகமாய் திருப்பித்தர வேண்டும் என்பதற்கோ, கொடுக்கக்கூடாது (2கொரி.9:7).*

5. **விசுவாசிகள் ஒருபோதும் கடன்படக்கூடாது என பவுல் வலியுறுத்தினார் (ரோமர்.13:8).** *எங்களுடைய எல்லா சபைகளும், யாரிடமும் எச்சமயத்திலும் கடன்படாமல், தங்கள் தேவைகளை பூர்த்தி செய்துள்ளார்கள். இந்தியாவின் பல பாகங்களில் எங்கள் சபை பெருகியபடியால், அநேக சபை கட்டிடங்கள் கட்டவேண்டியது*

அவசியமாயிருந்தது. ஆனால், நாங்கள் ஒருவரிடமும் கடன் வாங்கவில்லை. எந்த சபை கட்டிடங்களுக்கும், வங்கியில் கூட கடன் வாங்கவில்லை. அவைகளை கட்டுவதற்குப் போதுமானஅளவு பணம் சேகரித்த பிறகே கட்டினோம்.

6. **பவுல் தன்னுடைய புத்தகங்களுக்காக "உரிமம் – வருமானம்" ஒருபோதும் பெற்றதில்லை.** இன்று, அநேக புத்தக ஆசிரியர்கள் அவ்வித வருமானம் ஈட்டுகிறார்கள். தங்கள் உரிமம் - வருமானத்தின் (ROYALTY) மூலமாய் கோடிக்கணக்கான பணம் சம்பாதிக்கிறார்கள். எங்கள் சபை, சுமார் 30 தலைப்புகளைக் கொண்ட புத்தகங்களை பல மொழிகளில் ஒரு லட்சம் பிரதிகளுக்கு மேல் பிரசுரித்திருக்கிறோம். ஆனால் எங்களுடைய எந்த ஒரு புத்தகத்திற்கும், யாரிடமும் உரிமம்- வருமானத்தைப் பெற்றதில்லை. இங்கும் பவுலைப்போலவே, அவர் எழுதின புத்தகங்களை எல்லோரும் இலவசமாய் படித்திட அனுமதித்ததைப் போலவே, நாங்களும் எங்கள் வலைதளத்தில் www.cfcindia.com செய்திருக்கிறோம். மேலும், எங்கள் வலைதளத்தில் 1000-க்கும் மேலாய் வீடியோ செய்திகளை எங்கள் வலைதளத்திலும் YouTube-லும் பல மொழிகளில் வழங்கி, எல்லோரும் இலவசமாய் பார்க்கவும், இலவசமாய் பதிவு செய்யவும் கொடுத்திருக்கிறோம்.

7. **இயேசுவும் பவுலும் வரதட்சனை வாங்கும் தீமையை எதிர்த்திருக்கிறார்கள்.** இந்திய திருமணங்களில் மணப்பெண்ணின் தந்தை திரளான தொகையை மணமகனின் தகப்பனிடம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த தீய அணுகுமுறை, இந்தியாவிலுள்ள எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் கடைப்பிடிக்கிறார்கள். நாங்களோ **இந்த வரதட்சணை முறையை முற்றிலுமாய் எதிர்த்து நின்றிருக்கிறோம்.** ஒவ்வொரு திருமணத்திலும், மணமகனிடமிருந்தும் மணமகளிடமிருந்தும் "பெற்றோர்கள் யாதொரு வரதட்சணை கொடுக்கவோ அல்லது வாங்கவோ இல்லை" என்பதை ஓர் அறிக்கையாக எழுதி வாங்கிக்கொள்கிறோம்.

மனுஷீக ஆளுகையின் அபாயம்

1. **பவுல் ஸ்தாபித்த ஒவ்வொரு சபையிலும் 'மூப்பர்களை' (பன்மை) நியமித்தார்! ஒரு பாஸ்டரை அல்ல!** (அப்.14:23; தீத்து.1:5). இதுவே, சபையை ஒரு மனிதன் ஆளுகை செய்வதைத் தடுக்கிறது. அந்த மூப்பர்கள், 'அந்த சபையின் மக்களைக்கொண்டே' நியமனம் செய்யப்படுகிறது. இவ்வாறாக மந்தையிலுள்ள

அனைவரும் தங்கள் மூப்பரை அறிந்திருக்கிறபடியால், அவர்கள், மந்தைக்கு ஆவிக்குரிய தகப்பன்மார்களாய் எளிதில் மாறுகிறார்கள். எங்கள் எல்லா சபைகளிலும், இந்த வழிமுறையையே கடைப்பிடித்திருக்கிறோம். எங்கள் சபைகளில் பாஸ்டர்கள் இல்லை! நாங்கள் மூப்பர்களையே நியமனம் செய்கிறோம், அந்த மூப்பர்கள் அதே ஸ்தல சபையிலிருந்து தெரிந்து கொள்ளப் பட்டவர்கள். வேறு ஸ்தலங்களிலிருந்து ஒருவரை, எந்த சபையையும் நடத்தும்படி நாங்கள் கொண்டு வந்ததில்லை!

2. **பவுல் ஸ்தாபித்த எந்த சபைகளுக்கும் "மத்திய தலைமையகத்தை" ஸ்தாபிக்கவில்லை.** *ஏனென்றால், சபைகள் ஒரு ஸ்தாபனம் அல்ல! ஒவ்வொரு ஸ்தல சபையும், கிறிஸ்துவின் தலைமைக்கு மாத்திரம் கீழிருந்த மூப்பர்களால் நடத்தப்பட்டது. இதே மாதிரியை நாங்களும் பின்பற்றினோம். ஒரு சபை ஸ்திரமாய் உருவாகிய வுடன், அதன் தலைமைத்துவத்தை, ஸ்தல மூப்பர்களுக்கே கொடுத்து விடுகிறோம். அந்த சபையைக் குறித்த சகல விஷயங்களையும் அவர்களே தீர்மானித்து, தங்கள் சொந்த பொருளாதார நிலைகளை அவர்களே கையாளுகிறார்கள். எங்களுடைய ஒரு சபைகளுக்குக்கூட "மத்திய தலைமையகம்" கிடையாது. பவுல் சபைகளுக்கு எழுதின நிருபங்களைப் போலவே, நாங்களும் ஆலோசனைகள் தந்து, மூப்பர்களை தொடர்ச்சியாய் கண்காணிக்கிறோம். மனப்பூர்வமாய் ஆலோசனை விரும்பி, அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுகொள்பவர்களுக்கு அவ்வாறு செய்கிறோம்..... ஆகிலும், எந்த ஒரு மூப்பரிடத்திலும் 'ஆவிக்குரிய அதிகாரத்தை' நாங்கள் திணித்ததில்லை.*

எங்கள் ஊழியத்தின் எல்லா பகுதியிலும் ஆண்டவராகிய இயேசுவின் மாதிரியையும் அப்போஸ்தலனாகிய பவுலின் மாதிரியையும் முழு இருதயமாய் பின்பற்றவே நாங்கள் வாஞ்சித்திருக்கிறோம். இன்று நம்முடைய நாட்களிலும் காலங்களிலும், புதிய ஏற்பாட்டின் தரத்தை பின்பற்ற முடியும் என்பதை நாங்கள் கண்டுகொண்டோம். இவ்வாறாக, எங்கள் ஊழியத்தின் மூலமாய், இயேசு கிறிஸ்து மெய்யாகவே நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்! என்பதை நிரூபித்திருக்கிறோம்.

தேவனுடைய ஊழியத்தில், எங்கள் பங்கு மிகச்சிறியதே!

முழு உலகத்திலுமுள்ள 'கிறிஸ்துவின் சரீரத்திலிருக்கும்' பல்வேறு ஊழியங்களில், வெகு சொற்பமான பகுதி ஊழியத்தையே நாங்கள்

செய்து வருவதாக அறிந்திருக்கிறோம்.

ஆகிலும் ஒவ்வொரு ஊழியமும் தேவனுடைய வார்த்தையில் காணப்படும் தரத்தையும் கோட்பாட்டையும் அடிப்படையாக கொண்டே செய்யப்பட வேண்டும்.

அவைகளை இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் போதித்து நிலைநிறுத்தியிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் இந்தத் தரத்தை பின்பற்றாத சபைகளையோ அல்லது ஊழியங்களையோ நாங்கள் நியாயந்தீர்ப்பதில்லை. அது ஏனென்றால், கடைசிநாளில், அவர்கள் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பாகவே பதில் தர வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இருப்பினும், எங்கள் CFC சபைகளில் **'ஓர் உயிருள்ள சாட்சியாக'** *வாழ விரும்புகிறோம். நம் ஆண்டவருடைய தரமும், அவருடைய அப்போஸ்தலர் மூலம் போதித்த அவர்களுடைய வார்த்தைகளின் தரமும், 98% கிறிஸ்தவரல்லாத நம் ஏழை இந்திய தேசத்திலும் பின்பற்றி வாழமுடியும் என்பதை நிரூபித்திருக்கிறோம்.*

நாங்கள் ஒருபோதும், எங்கள் சபைகளில் அதிக எண்ணிக்கை கொண்ட ஜனங்கள் வந்துசேர ஆர்வம் கொண்டதில்லை. ஏனெனில், ஜீவனுக்குள் நடத்தும் வழி குறுகலானது! அதைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர்! என ஆண்டவர் கூறியுள்ளார் (மத்தேயு.7:14). எங்களுடைய நோக்கமெல்லாம் 'அந்த சிலரை' கண்டுபிடிப்பதுதான். தாங்கள் செத்தவுடன், பரலோகம் போகவேண்டுமென விரும்புகிறவர்களை நாங்கள் ஒருபோதும் தேடியதில்லை. ஏனென்றால், இந்த பூமியிலுள்ள எல்லோருமே, பரலோகம் சென்றுவிட ஆசையாயிருக்கிறார்கள். ஆனால், இந்த பூமியில் தாங்கள் மரிப்பதற்கு முன்பாக, **முழு இருதயம் கொண்ட சீஷர்களாய் இயேசுவை பின்பற்ற விரும்புகிறவர்களை** *மாத்திரமே நாங்கள் காண வாஞ்சிக்கிறோம். ஆகவேதான், எங்கள் சபைகள் "மெகா-சபைகளாக" இருப்பதில்லை! என்றும் இருப்பதில்லை! பரிசுத்தாவியினால் நிறைந்து பவுல் கூறும்போது, சபைகளை பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் போன்ற உயர்ந்த தரத்தால் கட்டமுடியும் என கூறினார்! அதேசமயம் வேறு சிலர் "மரம், புல், வைக்கோல்" போன்ற தரத்தைக் கொண்டும் கட்டமுடியும்! எனவும் கூறினார் (1கொரி.3:12-15). சீஷத்துவத்தின் நிபந்தனைகளையும், பரிசுத்தவாழ்வின் வழிகளையும் நாம் பிரசங்கிக்காவிட்டால், ஒரு பெரிய "மெகா-சபை" நாம் கட்டமுடியும். ஆனால் அந்த கட்டடமோ, மரம், புல், வைக்கோலால் கட்டப்பட்டதாயிருக்கும். ஆனால், அதுபோன்ற கிரியைகளை தேவன் தமது அக்கினியினால் முழுவதும் எரித்துப் போடுவார்! ஆனால் சீஷத்துவத்தை பிரகடனம் செய்து, கிறிஸ்துவின் எல்லா கட்டளைகளுக்கும் முழுமையான கீழ்ப்படிதலைப்*

*போதிக்கும் 'சிறிதான அந்த கிரியை' ....பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கற்களால் கட்டப்பட்டதாயிருக்கும். அந்த கிரியைகள் அக்கினியின் ஊடாய் சென்றாலும், நெருப்பு அதைத் தீண்ட முடிவதில்லை! அந்த கிரியை, நித்தியமாய் நிலைத்திருக்கும்! ஆனால், சீஷத்துவத்தை பிரகடனம் செய்து, கிறிஸ்துவின் எல்லா கட்டளை களுக்கும் கீழ்ப்படிவதாகிய "***இந்த சிறிய ஊழியம்***" பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்லால் கட்டப்படுவதால்...... அது, நெருப்பின் ஊடாய் கடந்து, நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும்!* **ஞானமுள்ள கிறிஸ்தவன் தன் ஊழியத்தில் தரம் ஒன்றே நாடுவான், எண்ணிக்கை அல்ல!** *தேவன் எங்கள் மத்தியில் செய்தவைகளைக்குறித்து, ஒரு மாயமான தாழ்மையில் "ஒன்றும் பேசாமல் இருப்பது" மிக எளிதேயாகும்! அப்படிச்செய்தால்:*

1. *தேவனுக்குரிய மகிமையை நாங்கள் திருடியதுப்போல் ஆகும்!*
2. *புதிய உடன்படிக்கையின் கோட்பாட்டையும் தரத்தையும் 'இந்நாட்களில்' தீவிரமாய் கைக்கொண்டு வாழ்ந்த விசுவாசி களையும், நாங்களே திருடியதுபோல் ஆகும்!*

தேவன் எங்கள் மத்தியில் செய்தவைகளை நாங்கள் வலியுறுத்திக் கூறிட அவசியமாயிருப்பதற்கு, மற்றொரு காரணமும் உண்டு: **கர்த்தருடைய ஜனமாகிய அடுத்த சந்ததி** *இந்த கோட்பாடுகளை விளங்கி, அவர்களும் ஜீவிக்கவேண்டியதாயிருக்கிறது! அதன் மூலமாய், அவர்க ளுடைய ஜீவிய காலத்தில், சாரத்தை இழக்காத உப்பாய் அவர்களும் இருந்திடவேண்டும் என்பதேயாகும். தனக்குள்ளும், தன் ஊழியம் மூலமாயும் தேவனுடைய கிருபை செய்து முடித்தவைகளை பவுல் கூறாமல் மௌனமாய் இருக்கவில்லை. பவுல் செய்ததைப்போலவே, நாங்களும் "எங்களுடைய இந்த புகழ்ச்சி ஒருவராலும் வாய் மூடப் படுவதில்லை" (2கொரி.11:10) என்றே பெருமிதம் அடைகின்றோம்!*

கர்த்தருடைய ஊழியத்தை ஆதி அப்போஸ்தலர்கள் செயல் படுத்தியதைப் போலவே, அதே கோட்பாடுகளைக் கொண்டு இன்றும் செயல்பட முடியும்! என்பதை நிரூபித்து, நாங்கள் செய்து கொண்டிருக்கிற பணியைத் தொடர்ந்து செய்திடுவோம்!!

3

மனுரூபத்தின் கோட்பாடுகள்

எல்லா வலிமையான ஊழியத்திற்கும், அடிப்படையான கோட்பாடாய் இருப்பதே "இந்த மனுரூபத்தின் கோட்பாடு". அந்த கோட்பாட்டின் பொருள் என்னவென்றால்: ஆண்டவர் தம்முடைய பரலோக மகிமையைத் துறந்து, ஓர் மனிதனாய் இந்த பூமியில் வாழ்ந்து, அவரே ஏற்படுத்தித் தந்த மாதிரியேயாகும். கொலோசெயர் கிறிஸ்தவர்களுக்காக பவுல் ஜெபித்தபோது "நீங்கள் எல்லாவற்றையும், அது இருக்கிறபடியே, **தேவனுடைய கண்ணோட்டத்தோடு** *நீங்கள் காண வேண்டும் என உங்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்" என்றார் (கொலோசெயர்.1:9 - J.B. பிலிப்ஸ்).*

தேவன் நம்முடைய **மனதைப் புதிதாக்கி,** *நாம் சிந்திக்கும் விதத்தை மாற்றவே விரும்புகிறார். அதன் மூலமாய், நாம் அதிகஅதிகமாய், அவர் சிந்திக்கிற விதமாகவே சிந்தித்திட துவங்குகிறோம். அப்படியாக வளர்ந்து, ஒவ்வொரு நபரையும், பொருளையும், சூழ்நிலையையும் 'அவர் கண்ணோட்டத்தின்படி' நாமும் காண்கிறோம்! இதுவே, கிறிஸ்துவைப் போலவே நாமும் நடந்து, அவருடைய சாயலாக மாறுவதற்கு அர்த்தமாகும் (1யோவான்.2:6). நம் சிந்தையிலிருந்தே, கிறிஸ்துவைப் போல் மாறிடும் மறுரூபம் துவங்குகிறது!*

'நம்மைப்போலவே' இந்த பூமிக்கு இயேசு வந்தார்

அவர் இந்த பூமிக்கு 'நம்மைப்போலவே' வந்தார், என்ற வேத வாக்கியத்தில் நாம் முதலாவதாக மனம் ஸ்திரப்படவில்லையென்றால், 'இயேசுவைப் போலவே நடக்க வேண்டும்' என்ற இந்த சவாலையும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது!

"தேவ காரியங்களைக் குறித்து, இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு **எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு** *ஒப்பாக வேண்டியதாயிருந்தது" என்றே எபிரெயர்.2:17*

கூறுகிறது. மேலும் பிலிப்பியர்.2:6,7 வசனங்களில் "அவர் (இயேசு) தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமை யாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, **மனுஷர் சாயலானார்**" என வாசிக்கிறோம்.

அவருடைய ஆள்த்துவத்தில், இயேசு இந்த பூமியிலிருந்தபோது 'தொடர்ந்து தேவனாகவே' இருந்தார்! இந்த பூமியில், ஜனங்களின் **ஆராதனையை அவர் ஏற்றுக்கொண்டதே** அதற்கு நிரூபணமாகும். அதை சுவிசேஷங்களில் ஏழுமுறை காண்கிறோம் - மத்தேயு.8:2; 9:18; 14:33; 15:25; 20:20; மாற்கு.5:6; யோவான்.9:38 - இருப்பினும், அவர் இந்த பூமியில் இருந்த காலங்களில், அவர் தேவனாயிருக்கும்போது பெற்றிருந்த எல்லா வல்லமையையும் இழந்தே, ஒரு மனுஷனுக்குரிய ஓர் குறுகிய வட்டத்தை ஏற்றுக்கொண்டார். யோவான்.6:38-ம் வசனத்தில் இயேசு கூறும்போது "**என் சித்தத்தின்படி அல்ல,** என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" என்றார்.

நித்திய காலம் முழுவதும், இயேசுவானவர் பிதாவுக்கும், பரிசுத்தாவியானவருக்கும் சமமாகவே இருந்தார்! அவர்கள் மூவரும் சேர்ந்தே கிரியைச் செய்தார்கள். 'அவர்களின் இணைந்த சித்தம்' எப்போதும் ஒரே விதமாயிருந்தது.

> **ஆனால் இயேசு ஒரு மனிதனாய் இந்த பூமிக்கு வந்தபிறகு, மனுஷர்களாகிய நாம் கொண்டிருக்கிறதைப் போலவே, அவருக்கும் 'தனக்கென்று ஓர் சித்தத்தைப்' பெற்றிருந்தார். இதைத்தான் புதியஏற்பாடு "இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார்" என பொருள்படுத்திக் கூறுகிறது.**

ஒருவன் 'தன்னுடைய சொந்த சித்தத்தை வைத்திருப்பது' ஒன்றும் பாவமல்ல. தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது, ஆதாம் தனக்கென்று சுயசித்தம் கொண்டிருந்தான். அந்நிலையிலும், அவன் பாவமற்ற வனாகவே இருந்தான்!

ஆனால், இயேசுவோ தன்னுடைய சுய சித்தத்தை ஒருபோதும் நிறைவேற்றவில்லை. அவர் எப்போதுமே தன் பிதாவின் சித்தத்தைச் செய்தார். இவ்வாறாக, அவர் ஒருபோதும் பாவம் செய்யவில்லை! இதை கெத்செமனே தோட்டத்தில் அவர் ஏறெடுத்த ஜெபத்திலிருந்து மிகத்தெளிவாக காண்கிறோம். அவர் ஜெபிக்கும்போது "பிதாவே, என்னுடைய சித்தத்தின்படி அல்ல - உம்முடைய சித்தத்தின்படியே - உம் சித்தமே ஆகக்கடவது" (மத்.26:39,42) என ஜெபித்தார். ஆலயத்தி லுள்ள திரைச்சீலையை தேவன் இரண்டாகக் கிழித்தபோது (மத்.27:51),

அதைக்கொண்டு அடையாளமாய் தேவன் செய்து காண்பித்தது என்னவென்றால் **இயேசு தம்முடைய மாம்சமாகிய திரையைக் கிழித்தார்.** அல்லது தன்னுடைய சுயசித்தத்திற்கு மறுத்து, இந்த பூமியில் வாழ்ந்த காலமெல்லாம் உண்மையுள்ளவராய் இருந்து மரித்தார். இவ்வாறாகவே, நாமும் நடந்து வரும்படியான "**ஓர் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை (வழியை) நமக்கு திறந்து வைத்தார்!**" (எபிரெயர்.10:20). 'மனுஷன் தன்னுடைய சுயசித்தத்திற்கு மரிப்பதே'இயேசு அனுதினமும் சுமந்த சிலுவையா யிருக்கிறது! இப்போது **அவர் எடுத்த சிலுவையை** நாமும் அனுதினமும் எடுத்து வர நமக்கு கட்டளையிடுகிறார்! (லூக்கா.9:23).

சில கிறிஸ்தவ குழுவினர்கள், தேவன் மூன்று நபர்களைக் கொண்டவரல்ல, மாறாக ஒரே நபர் மூன்று பெயருடையவராயிருந்தார் என தவறாய் போதிக்கிறார்கள். அவர்கள் போதிப்பதெல்லாம் இயேசுவே .... பிதாவும்! குமாரனும்! பரிசுத்தாவியும்! ஆக இருந்தார். எனக்கூறி, ஜனங்களுக்கு 'இயேசுவின் நாமத்தில்' மாத்திரமே (Jesus only) ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் செய்வது, மத்தேயு.28:19-ம் வசனத்தில், பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி கூறிய இயேசுவின் கட்டளைக்கு விரோதமாயிருக்கிறது. இவ்வாறு அவர்கள் செய்வதி னிமித்தம், இயேசு மாம்சத்தில் வந்தார் என்ற சத்தியத்தை 'தாங்களே' மறுக்கிறோம் என்பதை உணராதிருக்கிறார்கள். இயேசுவும் பிதாவும் ஒரே நபராயிருந்தால், அவர் கெத்செமனேயில் **பிதாவிடம் ஜெபித்த ஜெபம்,** தனக்குத்தானே ஜெபித்துக்கொண்ட ஜெபமாய் இருந்திருக்கும்! அப்படி இருப்பது ஒரு மதியீனமேயாகும்! அப்படி இருந்திருந்தால், யோவான்.6:38-ம் வசனம் கூறுவதை மாற்றிக் கூறுவதைப்போல் இருக்கும். "நான் வானத்திலிருந்து கீழே இறங்கி வந்தது என் சித்தம் செய்வதற்கல்ல, **மாறாக என் சித்தம் செய்வதற்கே வந்தேன்**" எனக் கூறுவதைப் போலாகும். இதுவும் மதியீனமேயாகும்! எனவே திரித்துவத்தை மறுப்பவர்கள் "இயேசு மாம்சத்தில் வந்தார்" என்ற சத்தியத்தையே மெய்யாகவே மறுக்கிறார்கள். இதை யோவான் குறிப்பிட்டு, இது ஒரு அந்திக்கிறிஸ்துவின் ஆவி! என்றார் (2யோ.1:7). இதுபோன்ற கள்ளஉபதேசத்திற்கு நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

ஆகவே, யாராவது உங்கள் சபைக்கு 'நான் இயேசுவின் நாமத்தில் மாத்திரம்' ஞானஸ்நானம் எடுத்தேன் எனக்கூறினால், நீங்கள் அவருக்கு சத்தியத்தை விளக்கிக்கூறி, அவர்கள் தங்கள் செயலின் மூலமாய் பிதாவைத் தள்ளிவிட்டார்கள்! பரிசுத்தாவியையும் தள்ளிவிட்டார்கள்! என விளங்கச்செய்யவேண்டும். பின்பு அந்த நபருக்கு சரியான வழியில்

இயேசு கட்டளையிட்ட மத்தேயு.28:19-ம் வசனத்தின்படி ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும்.

'இயேசுவின் மானிடம்' என்ற தலைப்பில் முழு போதனைகளை கீழ்கண்ட வலைதளத்தில் வாசியுங்கள்:

cfcindia.com/article/the-truth-that-we-believe

நம்மைப்போலவே இயேசு சோதிக்கப்பட்டும், பாவம் செய்யவில்லை

1தீமோத்தேயு.3:16-ம் வசனத்தில், தேவபக்தியின் இரகசியம் "மாம்சத்தில் இருந்த கிறிஸ்துவிலும், அவருடைய ஆவியில் காக்கப்பட்ட தூய்மையிலும்" அடங்கியிருக்கிறது என்றே வேதம் கூறுகிறது. மேலும் "இந்த சத்தியத்திற்கே சபை தூணும் ஆதாரமுமாய் இருக்க வேண்டும்"(1தீமோத்தேயு.3:15) என வாசிக்கிறோம்.

இந்த வசனத்தை Living Bible விரிவாக்கமாய் கூறும்போது:

"ஒரு தேவபக்தியான வாழ்க்கை வாழும் வழி அவ்வளவு எளிதானதல்ல! இருப்பினும் ஒரு நல்ல விடை கிறிஸ்துவுக்குள் இருக்கிறது: அவர் ஒரு மனுஷனாய் இந்த பூமியில் வந்து, தன்னுடைய ஆவியில் பழுதற்ற தூய்மையுள்ளவராய் நிரூபித்துவிட்டார்!" இந்த வசனம் தொடர்ந்து கூறும்போது, இதை அப்போஸ்தலர்கள், அவர்கள் நாட்களிலிருந்த உலகத்தின் "தேசங்களுக்கு பிரசங்கித்தார்கள்".

ஆனால், இந்த சத்தியமோ, இன்று அநேக கிறிஸ்தவர்களால் எதிர்க்கப்படுகிறது. அவர்கள் கூறுவதெல்லாம், இயேசு பாவம் செய்திருக்கமாட்டார்! அது உண்மையாயிருந்தால், அவர் நம்மைப் போல் சோதிக்கப்பட்டிருக்கவும் மாட்டார்! என்றே கூறுகிறார்கள்.

ஆனால் எபிரெயர்.4:15 "கிறிஸ்து நம்மைப்போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார்" என்றல்லவா கூறுகிறது. மேலும் எபிரெயர்.2:17 கூறும்போது, அவர் நம்மைப்போலவே சோதிக்கப் பட்டபடியால், நாம் சோதிக்கப்படும்போது நமக்கு உதவி செய்யும்படி விரைந்து வருகிறவராயிருக்கிறார். நாம் சோதிக்கப்படும் வேளையில் அடைந்திட வேண்டிய **இந்த பெலனையும், ஆறுதலையும்** *நம்மிடமிருந்து பறித்துக் கொள்ளவே சாத்தான் விரும்புகிறான்.*

இதைத் தொடர்புப்படுத்தி பக்தன் A.W. டோசர் எழுதும்போது:

ஒருவன் பாவத்தினால் சோதிக்கப்படும் சூழ்நிலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டால், அவனோ அல்லது அவளோ எலக்ட்ரானிக் விசை - பட்டன்களால் இயக்கப்படும் **'ரோபார்ட் என்ஜினாய்'** *இருப்பார்கள்! ஒரு நபர், எந்த தீமையினாலும் ஈர்க்கப்படாதவரா*

யிருந்தால், அதேவிதத்தில், நன்மை செய்வதும் அவரால் முடியாது! ஒருவனுடைய ஒழுக்க குணாதிசயத்திற்கு 'மானிட சுயாதீனம்' அவசியமாயிருக்கிறது. நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்: நம்முடைய சித்தம், தீமை செய்வதற்கு சுயாதீனம் கொண்டிராவிட்டால், நன்மை செய்திடும் சுயாதீனமும், நம்மிடம் இல்லாது போய்விடும்!

ஆகவேதான் "நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் பாவம் செய்திருக்க முடியாது!" என்ற வியூகத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. "என்னால் பாவம் செய்யமுடியாதென்றால்" வனாந்தரத்தில் ஏற்பட்ட சோதனை 'வெறும் நாடகம்' என்றே கூற வேண்டும்! அந்த நாடகத்தில் தேவனும் ஒரு பங்காய் இருந்தார் என்றே கூறவேண்டும்! அப்படி அல்லவே அல்ல!

ஓர் மனுஷனாய் வந்த அவர், பாவம் செய்திருக்கமுடியும்.... ஆனால் அவர் பாவம் செய்யவில்லை என்ற குறிப்பான அடையாளம், அவரை 'பரிசுத்த மனிதராய்' நமக்கு சுட்டிக்காட்டுகிறது!

"பாவம் **செய்ய முடியாத** தன்மை" ஒருவனை பரிசுத்தவானாய் மாற்றுவதில்லை! ஆனால், அவன் பாவம் **செய்திட விரும்பாத** தன்மையே, அவனை பரிசுத்தவானாய் சுட்டிக்காட்டும்! தன்னால் பாவம் செய்ய முடியாத ஒருவனை 'பரிசுத்தவான்'என கூறிட முடியாது. ஆனால் 'பாவம் செய்யாதவனையே' பரிசுத்தவான் எனக்கூறுவது பொருந்தும்!

பேசமுடியாத ஒருவனை "உண்மையே பேசுவான்" எனக்கூறிட முடியாது. ஆனால், பேசுகின்ற ஒருவன், பொய்சொல்ல முடிந்தும், அவன் அப்படி செய்யவில்லையென்றால் 'உண்மை பேசுபவன்' எனக்கூறிட முடியும்! ஒரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒருவன் "நேர்மை கொண்ட மனுஷனாய்" இருப்பதில்லை. அது ஏனென்றால், சிறைச்சாலையில் அவன் நேர்மையற்றவனாய் இருந்திட முடியாது, அவ்வளவுதான்! ஆனால் ஒருவன் நேர்மையற்றவனாய் இருப்பதற்குரிய சுதந்திரம் இருந்தும், அப்படி அவன் நேர்மை யற்றவனாய் மாறாதிருந்தால் மாத்திரமே 'நேர்மையுள்ளவன்' என்ற தகுதி கொண்டவனாயிருக்கிறான்!

(A.W. டோசர் புத்தகம் : சபையின் துயரம் - இழந்துபோன ஈவுகள் - அதிகாரம் 7).

வேத வாக்கியங்களில் நேர்மை கொண்ட ஒவ்வொரு நபரும், அவர் தன் சொந்த சடங்காச்சாரங்களால் பீடிக்கப்படாமல், பிறருடைய அபிப்பிராயங்களுக்கு அஞ்சாதவராயிருந்தால், அதுபோன்ற ஒருவனே "இயேசு நம்மைப்போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும்,

பாவமற்றவராயிருக்கிறார்" (எபிரெயர்.4:15) என்ற வசனத்தை மனதார ஏற்றுக்கொள்வார்கள்.

சோதனைக்கும் பாவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் அறிந்திருக்க வேண்டும். இயேசு "நம்மைப்போலவே எல்லா விதத்திலும்" சோதிக்கப்பட்டார். ஆனால் அவரோ ஒருமுறை கூட, தன் சிந்தையில் கூட அந்த சோதனைகளுக்கு இணங்கவில்லை. அதை வேறு விதமாய் சொல்வோமென்றால் **அவர் தன் சுய – சித்தத்தை ஒருபோதும் செய்யவில்லை. அல்லது ஒருமுறைகூட தன்னை அவர் பிரியப்படுத்தவில்லை** *(ரோமர்.15:3). எல்லா சோதனைகளுமே, பல்வேறு நம் ஜீவிய பகுதியில் நம்மை பிரியப்படுத்துவதற்கோ அல்லது சுய-சித்தம் செய்வதற்கோ வழங்கப்பட்ட ஓர் அழைப்பாகவே இருக்கிறது! ஒருவன் அந்த அழைப்பிற்கு இணங்கும்போது மாத்திரமே பாவம் செய்கிறான், தன் சுய சித்தத்தையும் நிறைவேற்றுகிறான். பவுல் எழுதும் "இச்சை" என்ற வார்த்தையானது "வலிமையான விருப்பம்" என்பதேயாகும். அதற்கு 'தீமையான விருப்பம்' எனக்கூற இயலாது. ஏனெனில், பரிசுத்தாவியானவர்கூட "ஆவி மாம்சத்திற்கு எதிராக இச்சிக்கிறது" (கலாத்தியர்.5:17) என்றே வாசிக்கிறோம். அதன் பொருள் என்ன வென்றால், பரிசுத்தாவியானவர் நம் சுய சித்தத்திற்கு விரோதமாகவே வலிமையான விருப்பம் கொண்டுள்ளார்!*

இந்த சுயசித்தம் தன்னை விட்டுக்கொடுத்து இணங்கும்போது மாத்திரமே, அங்கே கர்ப்பம் நிகழ்ந்து, பாவத்தைப் பிறப்பிக்கிறது! என யாக்கோபு.1:15 கூறுகிறது. ஆகிலும் நம் சுய சித்தத்தை நாம் வெறுத்து விட்டால், அப்போது நாம் பாவம் செய்திட மாட்டோம். பூர்வ காலத்து பரிசுத்தவான் ஒருமுறை கூறும்போது "பறவைகள் என் தலைக்கு மேலாய் பறந்துச் செல்வதை என்னால் தடை செய்ய இயலாது. ஆனால், அவைகள் என் தலைமுடியைக் கொண்டு கூடு கட்டாதிருக்க **நான் தடை செய்ய முடியும்**" *என்றார். ஒரு பொல்லாத சிந்தை எனக்கு முன்பாக வரும் போது, அதை என் 'சிந்தையில் ஏற்றுக்கொண்டு' ஒரு கணப்பொழுது அனுபவித்தாலும், அந்த சிந்தை 'ஒரு கூடு கட்டுவதற்கு அனுமதித்த நேரத்தில்' நாம் பாவம் செய்து விடுவோம். ஆனால் நம்முடைய மாதிரியோ இயேசு! அவர் நம்மைப்போல் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டாலும், அவரோ ஒருபோதும் பாவம் செய்யவில்லை!!*

கிறிஸ்துவின் மீது கொண்ட உண்மை சோதிக்கப்படும்

ஒரு விசுவாசி தேவபக்தியின் மேல் வாஞ்சை இல்லாமலோ அல்லது வேத வாக்கியங்களில் காணப்படும் சத்தியங்களுக்காக

நிற்கும்போது, மற்றவர்களிடமிருந்து வரும் பரியாசங்களுக்கு அஞ்சும் ஒரு கோழையாயிருந்தாலோ, அவனிடமிருந்து இந்த சத்தியத்தை மறைத்து விடுவார்! இதனிமித்தமே இந்த சத்தியத்திற்கு **"தேவ பக்தியின் இரகசியம்"** *என பெயர் சூட்டப்பட்டுள்ளது (1தீமோ.3:16). தனக்கு பயந்தவர்களுக்கு மாத்திரமே, தம்முடைய இரகசியத்தை தேவன் வெளிப்படுத்துவார் (சங்.25:14). தேவனுடைய விஷயங்களில் நாம் ஒரு கோழையாயிருப்பது அபாயம் நிறைந்ததாகும். ஏனென்றால், பயப்படுகிறவர்கள் அல்லது 'கோழைகள்' வெளிப்படுத்தின விசேஷம்.21:8-ம் வசனத்தில் அக்கினி கடலில் தள்ளப்படுபவர்களின் பட்டியலில் 'அந்த கோழைகளே' முதல் நபராய் வருகிறார்கள். அதற்கு பின்புதான் 'கொலை செய்பவர்கள், காமவிகாரம் கொண்டவர்கள்...... விக்கிரகாராதனைக்காரர்கள்' வருகிறார்கள்.*

மார்டின் லூத்தர் கூறும்போது:

"தேவனுடைய சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியையும் உரத்த சத்தமாய் நான் அறிவித்துவிட்டு, பிசாசானவன் இந்நாட்களில் தாக்கும் **சில குறிப்பிட்ட சத்தியங்களைக் குறித்து நான் மௌனமாயிருந்து விட்டால்,** *நான் கிறிஸ்துவை உத்தமமான அறிக்கைச் செய்கிறவனாயிருந்திட இயலாது! இக்காலத்தில் காணப்படும் 'கொடூரமான போர் முனையில்தான்' ஒரு போர் வீரனின் உத்தமம் சோதிக்கப்படுகிறது. போர்களத்தின் எல்லா பகுதியிலும் நான் உண்மையுள்ளவனா யிருந்தேன் என கூறிக்கொண்டு, இப்போது போர்முனையில் விளைந்த நெருக்கத்திற்கு எதிராக போர் செய்யவில்லையென்றால், அது தகுதியிழந்த! கிருபைக்கு பாத்திரமற்ற! நிலையாகும்".*

இந்த சத்தியமாகிய "*கிறிஸ்து நம்மைப்போலவே எல்லா விதத்திலும்* சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாதிருந்தார்" என்ற வசனத்தை சூழ்ந்தே கடந்த 43 ஆண்டுகளாய், இந்தியாவிலுள்ள எங்கள் எல்லா சபைகளுக்கும் கடும்போர் நிலை ஏற்பட்டது. ஆனால் நாங்களோ "இந்த சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாய்" இருந்தோம் (1தீமோ.3:15).

மேலும் இந்த சத்தியத்தை தைரியமாகவும், வெட்கப்படாமலும் பிரசங்கித்தோம். இதன் விளைவாய், அநேகருடைய ஜீவியத்தில் மறுரூபமான மாற்றம் நிகழ்ந்தது. 'தேவ பக்தியின் இரகசியம்' எனக்கூறும் இடத்தில் "கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார் என்ற **உபதேசம்"** *என எழுதப்படாமல் "மாம்சத்தில் வந்த கிறிஸ்துவாகிய* **நபரை"** *குறிப்பிட்டே "தேவ பக்தியின் இரகசியம்" என 1தீமோத்தேயு.3:16 கூறுகிறது. இன்று அநேகர் இதை ஒரு உபதேசமாகக் கண்டு 'பரிசேயர்களாய்' முடிவடைந்து விட்டார்கள்! ஆம்*

'கிறிஸ்துவாகிய நபரை' காணத் தவறிவிட்டார்கள். "சரியான உபதேசமாகிய - எழுத்து கொல்லும்! ஆவி மாத்திரமே ஜீவன் தரும்" (2கொரி.3:6). ஆகவே, நாம் எப்போதும் ஜனங்களுக்கு கிறிஸ்துவையே காண்பிக்க வேண்டும், எந்த உபதேசத்தையும் அல்ல!

"நம்மைப்போலவே அவர் சோதிக்கப்பட்டார்" என்ற சத்தியத்தை நம் முழுமனதாய் விசுவாசித்திருந்தால், ஒவ்வொரு சோதனை நேரங்களிலும் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய 'பரிசுத்தஆவியைத்தவிர' வேறொரு விசேஷித்த அதிகமான ஆவியின் வல்லமையை இயேசு பெற்றிருக்கவில்லை என நாம் அறிந்து விசுவாசிப்பதும் "அவரைப் போலவே நாமும் நடக்க முடியும்!" என்ற விசுவாசத்தைத் தருகிறது (1யோவான்.2:6). மேலும் நம்முடைய ஆவி அவருடைய அடிச்சுவடு களைப் பின்பற்ற வாஞ்சிக்கும் நேரத்தில் "நமக்கு சொந்தமானவை களை நாடுவதோ அல்லது நம் சுய சித்தத்தை நாடுவதோ முடியாது" என்பதையும் நம் ஆவியில் அறிந்திருக்கிறோம்!

"இயேசு தன் பிதாவுக்கு கீழ்ப்படிந்திருந்த" கல்வித்திட்டத்தை நாமும் கற்றுக்கொள்ள **ஆவியின் வெளிப்பாடு** *அவசியமாயிருக்கிறது. இயேசுவும், தான் வாழ்ந்த பூமியின் நாட்களில் இவ்வாறாகவே தனக்கு நேர்ந்த சோதனைகளின் நடுவே கற்றுக்கொண்டார்! எபிரெயர்.5:8 இவ்வாறாகவே கூறுகிறது: "அவர் குமாரனாயிருந்தும், பட்டபாடுகளி னாலே* **கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்**" *என காண்கிறோம். தன் யுத்த களத்தில் சந்தித்த 'ஒவ்வொரு சோதனைகளிலும்' அவர் முற்றிலும் உண்மையுள்ளவராயிருந்தார். மேலும் அவர் "தன்* **ஆத்தும - வாழ்க்கையை** *மரணத்தில் ஊற்றுவதற்கும்" உண்மையுள்ளவரா யிருந்தார் (ஏசாயா.53:12). இவ்விதமாய் அவருடைய சரீரத்தின் மூலமாய் 'தேவனுடைய ஜீவியம்' முழுமையாக வெளிப்பட்டது! வெகு கொஞ்சமான பேர்களே, தங்கள் ஆத்தும ஜீவியத்தை மரணத்திற்கு ஊற்றும் நிலைக்கு வருகிறார்கள்! அவர்களின் 'பரிசுத்தமாகும் ஜீவியத்தை' தொடர்ந்து செல்லும் பாதையில், வெகு குறைவான வர்களே "தேவனுடைய பார்வையில்" உண்மையுள்ளவர்களாயிருந்து தங்கள் ஜீவியத்தில் காணப்படும் "எல்லா அறிந்த பாவங்களையும்" எதிர்த்துப் போரிடுகிறார்கள்!*

இந்தப் பகுதியை குறிப்பிட்டு விவரித்திட அதிக பிரயாசம் எடுத்துக் கொண்டேன். அதுஏனென்றால் அநேக விசுவாசிகள், தங்கள் ஜீவியத்தைக் குறித்த தேவனுடைய சித்தத்தை இழந்ததற்குக் காரணம், இந்த சத்தியத்தை அவர்கள் தெளிவாய் அறிந்து கொள்ளாததாலேயே, இயேசு தன் மாம்சத்தில் நமக்காகத் திறந்து வைத்த 'புதிதும் ஜீவனுமான

மார்க்கத்தைக்' குறித்த சத்தியமும் அவர்களுக்கு விளங்கவில்லை (எபிரெயர்.10:20). நாமோ முதலாவதாக 'சத்தியத்தை' நன்றாக அறிந்திருக்க வேண்டும் எனவும், பின்புதான் "சத்தியம் நம்மை விடுதலையாக்கும்" எனவும் இயேசு கூறினார் (யோவான்.8:32).

இயேசுவே நம்முடைய மூத்த சகோதரன்

இயேசுவே நம்முடைய மூத்த சகோதரனாயிருக்கிறார்! ஆகவேதான், இயேசுவை நேசித்ததைப்போலவே தேவன் நம்மையும் நேசிக்கிறார்! ஏனெனில், தேவனிடத்தில் எந்த பாரபட்சமும் இல்லை! (ரோமர்.8:29; யோவான்.17:23; ரோமர்.2:11), இதை நாம் அப்படியே விசுவாசிக்கிறோம்:

1. **தேவன் இயேசுவுக்கு செய்த அனைத்தையும்** *அவருடைய இளைய சகோதரர்கள், சகோதரிகளாகிய நமக்கும் செய்வார்! ஆகவே, நம்மையும் பாவத்தின் சகல வல்லமையிலிருந்தும் நம்மை விடுவிப்பார்!*
2. **இயேசுவின் மீது அக்கறை கொண்டு தேவன் பாதுகாத்ததைப் போலவே** *நம்மீதும் அக்கறைக்கொண்டு பாதுகாப்பார். எனவே, எல்லா பயத்திலிருந்தும் கவலையிலிருந்தும் நம்மை விடுதலை செய்வார்!*

இந்த பூமியில் நாம் காணும் மிகப்பெரிய இரண்டு பிரச்சனைகள் **1)பாவம் 2)பயம்.** *இந்த இரண்டு பகுதியிலிருந்து நாம் பெற்றிடும் விடுதலை, "இயேசுவை நோக்கிப் பார்த்து" இந்த இரண்டு பகுதிகளிலும் அவர் நம்மைப்போலவே சோதிக்கப்பட்டபோது, 1)பாவம் செய்யவில்லை 2) ஒருபோதும் பயந்ததில்லை, கவலைப்பட்டதில்லை! என்ற அவரது வெளிப்பாடே, நாம் மெய்யாகவே, இயேசு நடந்ததைப்போலவே நாமும் நடந்திட முடியும் என்ற விசுவாசத்தை தந்திட முடியும்! (1யோவான்.2:6).*

1977 - ம் ஆண்டு நான் இந்த சத்தியத்தால் பிடிக்கப்பட்டபோது, கீழ்காணும் பாமாலையை (Hymn) *நான் எழுதினேன்:*

பாரமும் கவலையும் அழுத்தும்போது
உங்கள் ஆத்துமா கலங்கும் வேளையில்
நீங்கள் பயப்படத் தேவையில்லை,
தேவன் உங்கள் அருகில் இருக்கிறார்!
குமாரனை நேசித்ததைப்போலவே உங்களையும் நேசிக்கிறார்
உங்களுக்கும் அவர் உதவி செய்வார்

அவருடைய வாக்குதத்தத்தை நம்புங்கள் போதும்
உங்கள் முழு ஜீவியத்தையும் பார்த்துக்கொள்வார்!

பல்லவி

தேவன் என்ன செய்வார்? இங்கே ஓர் நற்செய்தி!
அவர் இயேசுவுக்கு செய்ததையே, நமக்கும் செய்வார்
தமது சர்வ வல்லமையால் உங்களைப் பெலப்படுத்துவார்
அவர் என்ன செய்வார்? என விவரித்திட முடிவே இல்லை!

பாவமும் தீமையும் இந்த உலகை நிறைத்து
உங்களை மேற்கொண்டாலும்
இதோ தேவனுடைய வாக்குதத்தம் உண்மை....
''பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது''
சோதனையின் ஈர்ப்பு அதிகரிக்க, அதிகரிக்க
'தேவனுடைய கிருபை' உங்கள் தாபரம்!
ஆகவே, இயேசுவைப்போல் நடவுங்கள்!
நாள்தோறும் ஜெயித்து நடவுங்கள்!

துன்பம் வியாதியே உனக்கு நேரிட்டாலும்
உன் பிரியமானவர்களுக்கும் வந்து எட்டினாலும்
உன் பரிதபிப்பை தேவன் அறிவார்
சுகமளிக்கும் வல்லமையுடன் வருகைத் தருவார்.
உங்கள் தந்தை உங்கள் தேவையைத் தருவார்
அவர் மகா உண்மையுள்ளவர்
அவர் இயேசுவை காத்ததுப்போலவே
உங்களையும் காப்பார்!
ஓ, அது, ஒரு மகிமையான ஆறுதல்
அதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.
''இயேசுவே உங்கள் ஆண்டவராக'' அறிந்திடுங்கள்
உங்கள் மூத்த சகோதரனும் அவரே!
தேவனுடையதெல்லாம் இப்போது உங்கள் சொந்தம்
அவர் உங்களை கைவிடார்!
வல்ல தேவனே உங்கள் பட்சமிருந்தால்,
யார் உங்கள் எதிரியாக முடியும்?

நாம் இயேசுவை பின்பற்ற வேண்டிய ஏழு முக்கிய பகுதிகள்

முதலாவதாக, இயேசு தான் செய்த எல்லாவற்றிலும் தன் பிதாவின் மகிமையைத் தேடினார் (யோவான்.7:18). அவருக்கு மிகப் பெரிய பேரார்வமாயிருந்ததெல்லாம், மானிட சமுதாயம் எண்ணுகின்ற மிகச்

சிறந்தவைகளாயிருந்தாலும், அது எவ்வளவு மிக நல்ல நோக்கத்தோடு இருந்தாலும்..... "அவரின் பிதாவின் நாம மகிமையே" அவருக்கு பேரார்வமாய் இருந்தது (யோவான்.17:4). அவர் பிதாவின் முகத்திற்கு முன்பாகவே வாழ்ந்தார்! எல்லாவற்றிலும் தன் பிதாவை மாத்திரமே பிரியப்படுத்த விரும்பினார்! அவர் பேசும்போது தன்னை கவனித்து கேட்ட மக்களுக்கு முன்பாக நில்லாமல், **தன் பிதாவுக்கு முன்பாக நின்றே** *தேவனுடைய வார்த்தையைப் பேசினார். இவ்வாறாக, ஜனங்களை அல்ல...... பிதாவையே பிரதானமாக சேவித்தார்.*

இவ்விதமாகவே, நாமும் தேவனை சேவித்திட வேண்டும். நாம் முதலாவதாக சபையின் ஊழியனாய் அழைக்கப்படவில்லை.... ஆனால் "கர்த்தரின் ஊழியனாகவே" அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் முதலாவதாக ஜெபிக்கும்படி ஆண்டவர் கற்றுத் தந்த ஜெபம் "பிதாவே, உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" என்பதேயாகும். நாம் ஜனங்களுக்கு ஊழியம் செய்திட விரும்பினால், 'மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாய்' கதியடைந்து, நமக்காகவே ஓர் கௌரவத்தை கட்டுகிறவர்களாயிருப்போம்.

<u>இரண்டாவதாக, இயேசு தான் பெற்றிருந்த எல்லாவற்றையும் விட்டுவிட்டார்!</u> அதை சபைக்காகவே செய்தார். அவர் சபையின் அஸ்திபாரத்தை போட வந்தபோது, எதையும் தனக்காக வைத்துக் கொள்ளவில்லை. "கிறிஸ்து சபையை அன்புகூர்ந்து, தன்னையே சபைக்கு ஒப்புக்கொடுத்தார்" (எபேசியர்.5:25) என்றே வாசிக்கிறோம்!

அவருடைய மரணத்தை விவரித்த ஏசாயா தீர்க்கதரிசி: "**அவர் தன்னுடைய சொந்த நன்மைகளுக்கு யாதொரு சிந்தையும் வைக்காமல் மரித்தார்**" *என்றார் (ஏசாயா.53:8* Message Bible). *இதை சற்று யோசித்துப் பாருங்கள்: அவர் ஜீவித்து மரிக்கும்வரை தன் சொந்த நன்மைக்காக ஒரு சிறிய சிந்தை கூட வைத்திருக்கவில்லை! தன்னை முழுவதும் சபைக்கு ஒப்புக்கொடுத்து விட்டார். இந்த வழி நடக்கவே அவர் நம்மை அழைக்கிறார்! இவ்வழி நடக்க விரும்புகிறவர்கள் மாத்திரமே, 'புதிய உடன்படிக்கை சபையை' கட்டமுடியும்!*

அப்படி ஒரு சபையை கட்டுவதற்கு, நம் ஜீவியத்தில் ஏராளமான அசௌகரியங்களை சந்திக்க நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்! நம்முடைய அன்றாட நடைமுறை சுமுகமான ஜீவியம் சீர்குலைந்து போகவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்! நம்மை பிறர் ஆதாயப்படுத்திக் கொள்ளவும், நம்முடைய பூமிக்குரிய ஆஸ்திகள் பிறரால் துஷ்பிரயோகம் பண்ணப்படவும், வாழ்வின் எவ்வித அழுத்தத்தையும்,

யாதொரு குறைசொல்லும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளவும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்!

மூன்றாவதாக, இயேசு நம்முடைய துக்கங்களில் பிரவேசித்தார். அவர் நம்முடைய அனைத்திலும் ஒன்றரக் கலந்தார். அவர் நமக்கு உதவி செய்வதற்கு, அவர் **தேவ குமாரனாயிருந்தும் ஒரு கல்வி திட்டத்தை** அவரே முதலாவதாகப் பெற்றுக் கொண்டார்! பல பாடுகள் மத்தியில் அந்த கல்வித்திட்டத்தைக் கற்றுக்கொண்டார் (எபிரெயர்.2:17;5:8). இவ்வாறாகவே, அவர் நம்முடைய முன்னோடியாய் மாறினார்! (எபிரெயர்.6:20).

நாம் பல்வேறு உபத்திரவங்களில் பாடுபட்டு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாயில்லையென்றால், நாம் பிறருக்கு உதவி செய்யமுடியாது. இவ்வகையில், வெறும் பிரசங்கிகளாய் அல்ல! நம் சபையிலுள்ள சகோதர சகோதரிகளுக்கு **'சிறிய – முன்னோடிகளாய்'** இருப்பதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம். இதன் விளைவாய், நாம் பல வேதனையும் கஷ்டமும் நிறைந்த உபத்திரவங்களுக்குள் சென்று, தேவனுடைய ஆறுதலையும், அவர் தரும் பெலனையும், அந்த எல்லா சூழ்நிலைகளிலும் பெற்றுக் கொள்கிறோம்! இப்போது நாம் பிறருக்கு ஜீவன் - தரும் பங்கைக் கொடுப்பதற்கு முடியும்! அதுவெறும், வேதத்தை படித்து அல்லது புத்தகத்தைப்படித்து அல்லது ஒரு பிரசங்கத்தை கேட்டு பேசுகின்ற ஒரு செய்தி அல்ல! (2கொரி.1:4).

நான்காவதாக, இயேசு தொடர்ச்சியாக தன் இருதயத்தில் சீஷர்களை சுமந்தார்! அதை அவர்களுடைய நன்மையை எப்போதும் விரும்பியே அவ்வாறு செய்தார். இந்த அவருடைய செயலில் இரண்டு பகுதிகள் உண்டு:

1. அவர் எல்லா நேரங்களிலும் தன் சீஷர்களிடத்தில் ஒரு அடிமையின் மனப்பான்மையை வைத்திருந்தார். அவர் யாரிடமும், யாதொன்றும் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை! ஆனால் அவர்களை எப்படி ஆசீர்வதிக்கலாம்! எவ்வாறு உதவி செய்யலாம்! என்ற சிந்தையே எப்போதும் கொண்டிருந்தார்.
2. அவர் சீஷர்களுக்கு நன்மையான புத்திமதிகளைத்தர, அது சில சமயங்களில் கடினமான **கடிந்து கொள்ளும் வார்த்தையாயிருந்தாலும்** அப்படிச் செய்தார்! ஏனென்றால், அவர்களுடைய நித்திய நன்மையை அவர் தேடினாரே அல்லாமல், தன்னை ஒரு 'மென்மையான புருஷன்' என சேர்க்கும் மதிப்பை அவர் விரும்பவில்லை.

கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு ஊழியம் செய்யும் நாம் எல்லோரும் “பவுலைப் போலவே கூறுவதற்கு” திராணியுள்ளவர் களாயிருக்க வேண்டும்: “உங்களுக்கு உண்டான யாதொன்றிலும் எனக்கென்று ஆதாயம் தேடவில்லை. நான் ஒருபோதும் உங்கள் பணத்தையோ அல்லது உங்கள் பரிசுகளையோ நான் விரும்பியதில்லை. உங்களுக்குரிய யாதொன்றையும் நான் விரும்பாமல், ***உங்களையே விரும்பினேன்!*** *நான் தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் மறைக்காமல் உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்படி எல்லா வற்றையும் அறிவித்தேன்”* என்றார் *(2கொரி.7:2; அப்.20:33; 1கொரி.9:15; பிலி.4:17; 2கொரி.12:14; அப்.20:20, ஆகிய வசனங்களைத் தியானியுங்கள்).*

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ‘இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் பேசுவதற்கு முன்பாக’ தேவனுடைய சமூகத்தில் அவர்களுடைய நிலையை முன்வைத்து சிந்தித்தார்கள்!

இவ்வாறு ‘தேவனுடைய சமூகத்தில்’ மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து சிந்தித்து, அவர்களுடைய துக்கங்களையும், அவர்களுடைய பிரச்சனைகளையும் குறித்து அக்கறைக்கொள்ளும் தம் தாசர்களுக்கே ‘ஒரு தீர்க்கதரிசன ஊழியத்தை’ தேவன் தர முடியும்.

பிறருடைய இடத்தில் நம்மை வைத்து அவர்கள் செல்லும் துயரத்தை புரிந்துக்கொள்ள, நம் மனதை பழக்குவிக்க வேண்டும். நம்மைவிட ஏழைகளானவர்களின் வீடுகளை சிந்தித்து, அவர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும்! அப்போது மாத்திரமே, நாம் அவர்களுடைய உபத்திரவங்களுக்குள் பிரவேசித்திட முடியும். அப்படியில்லையென்றால், நம்முடைய ஊழியம் அவர்களுடைய தேவைக்கும் பிரச்சனைகளுக்கும் பொருந்தாததாய் மாறிவிடும்!

ஐந்தாவதாக, இயேசு தன் ஜீவியத்தில் முதலாவதாக வாழ்ந்து அதன் பின்பே அவைகளைப் பேசினார். ‘மலைப்பிரசங்க செய்திகள்’ (மத்தேயு.5,6,7) அன்று முன் இரவு இயேசு தயாரித்த செய்திகள் அல்ல. அப்படி அவர் செய்யவில்லை! அது, 30 ஆண்டு காலமாய் வாழ்ந்து அனுபவித்த பலன்களையே, அவர்களுக்கு அங்கு பிரசங்கித்தார்! இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் “நாம் ஒரு இளைப்பாறுதலின் ஜீவியத்திற்குள் பிரவேசிக்காமல் இருந்து கொண்டு” அதில் பிரவேசித்ததைப் போன்ற தோற்றத்தை நம் பிரசங்கத்தின் மூலம் ஒருபோதும் கொடுத்துவிடக்கூடாது. இதற்கு பதிலாக, இளைப்பாறு தலுக்குள் பிரவேசிக்கும் ஒரு இனிய வாழ்க்கைக்காக நம்மிடம் தீராத ஏக்கம் இல்லையென்றால், அதைக்குறித்து நாம் முற்றிலுமாய்

வெட்கமடைய வேண்டும். அவ்வாறு துயரம் அடைந்து, இந்த அருமையான ஜீவியத்திற்குள்ளாக நாமும் பிரவேசித்திட ஓர் பற்றி எரியும் விருப்பத்தை பெறும்வரை, தேவனுடைய முகத்தை தேட வேண்டும்! இதன் பின்பே, "ஓர் அதிகாரத்தோடு" நாம் பேசமுடியும்.

இவ்வாறு நம் ஜீவியத்தில் ஒன்றாக மாறிவிட்டவைகளை மாத்திரமே நாம் பேசுவதற்கு, எப்போதும் தாழ்மை கொண்டவர்களாயிருக்க வேண்டும்! அல்லது 'குறைந்த பட்சம்' நம் முழு இருதயத்தோடு சில பகுதிகளைக் குறித்து 'நாம் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தால்' அவைகளைப் பேசலாம்!

<u>ஆறாவதாக, எல்லாவற்றையும் தானே செய்யும்படி இயேசு ஒருபோதும் விரும்பியதில்லை!</u> அவர் செய்த அற்புதங்களில் கூட பிறரை ஈடுபடுத்திக்கொண்டார்..... கானாவூரில் திராட்சரசத்தைக் கொடுத்தது, ஐயாயிரம் பேர்களை போஷித்தது, லாசருவை உயிரோடு எழுப்பியதிலும்கூட பிறரை ஈடுபடுத்திக்கொண்டார். ஒவ்வொரு சமயத்திலும் 'எளியபகுதியை' மற்றவர்கள் செய்யும்படி கேட்டுக் கொண்டார், 'ஆனால் அவரோ கடின (முடியாது போன்ற) பகுதியை' அவரே செய்து முடித்தார். கடைசியாக, அவர் தன் சீஷர்களிடத்தில் கூறும்போது, தான் செய்தவைகளைக் காட்டிலும் பெரிதான கிரியைகளை நீங்கள் செய்வீர்கள் என்றே கூறினார் (யோவான்.14:12).

இந்த மாதிரியையே நாமும் பின்பற்றி, நம் ஸ்தல சபைகளிலுள்ள சரீர-ஊழியத்தின் ஓர் சமநிலை இருந்திடச் செய்யவேண்டும்! அப்போது மாத்திரமே, நம் சபைகளில் தேவனுடைய நோக்கம் நிறைவேறிட முடியும். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவங்களுக்கும், ஒரு குறிப்பிட்ட காரியத்தை செய்யவைத்து, ஒரு விசேஷித்த கல்வியைத்தந்து, நம் எல்லோரையும் தேவன் நடத்தி வந்திருக்கிறார். இவ்வாறு, நம் ஒவ்வொருவருக்கும், சபையை ஐசுவரியமுள்ளதாய் மாற்ற 'விசேஷித்த காணிக்கையை' நமக்கு தந்திருக்கிறார்.

இவ்வாறு, ஒருசபையிலுள்ள எல்லா சகோதர சகோதரிகளும் "பாடுபட்டு, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களே" தாங்கள் கொண்டுவரும் ஜீவிய காணிக்கை மூலமாக ஒரு சபையை ஐசுவரியமுள்ளதாய் மாற்ற முடியும்!

ஆகவே, தங்கள் உபத்திரவங்களில் 'தேவனிடமிருந்து கற்றுக் கொண்டவைகளை' பகிர்ந்தளிக்கும்படி சகோதர சகோதரிகள் ஊக்குவிக்கப்படவில்லையென்றால், அந்த சபை ஒரு ஏழை சபையாய் மாறி விடும்! "நீங்கள் மாத்திரமே சபையை ஆசீர்வதித்திட முடியும்" என்ற எண்ணத்தில் உங்களைக் குறித்தும், உங்கள் ஊழியத்தைக்

குறித்தும், அப்படி ஒரு உயர்ந்த சிந்தை கொண்டிருந்து.... பிறருடைய ஊழியங்களுக்கு ஒருபோதும் இடையூறாய் இருந்திடக்கூடாது!

ஏழாவதாக, இயேசு தொடர்ச்சியாக தன் பிதாவின் முகத்தை ஜெப நேரத்தில் தேடி, தன் ஜீவியத்திற்கும் தன் ஊழியத்திற்கும் அவரிடமிருந்தே உதவி பெற்றார். நம்முடைய ஊழியம் வலிமையுடையதாய் இருக்கவேண்டுமென்றால், நாம் கர்த்தரையும், பரிசுத்த ஆவியின் வரங்களையும், வாஞ்சை நிறைந்த ஜெபத்தோடு தேட வேண்டும்! தம்முடைய சபையை கர்த்தர் கட்டுகிற விதமாகவே நாமும் கட்ட விரும்பினால், நம்முடைய சொந்த ஞானத்தை, திறமைகளை, சார்ந்து கொள்ளக் கூடாது!

பரிசுத்தமும்! அன்பும்!

பரிசுத்தத்தையும் ஜெயவாழ்வையும் நாம் பின்தொடர்ந்து வருகையில், இயேசு தன் ஜீவியத்தில் செய்து காண்பித்த - **உண்மையான பரிசுத்தம் எப்போதுமே 'பிறர்மீது கொண்ட ஊக்கமான அன்பை' பிரதிபலிக்கும்!**

1தெசலோனிக்கேயர்.3:12,13 வசனங்களில் பவுல் கூறும்போது "நீங்கள் **ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பில் பெருகவும்.....** *நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக* **பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி** *உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" என்றே கூறினார். தேவனுடைய சத்தியத்தினிமித்தம், நாம் எவ்வளவு ஒத்தவேஷம் தரியாமல், பரிசுத்தத்தில் ஓர் கிறிஸ்தவனாய் நிலைநிற்கிறோமோ, அதே அளவிற்கு அதிகமாய் எல்லா ஜனங்களையும் நாம் அன்புகூரவேண்டும்! குறிப்பாக, 'நம்மிடம் ஒன்றித்து இல்லாதவர்களிடமும்' அன்புகூர வேண்டும். அப்படிஇல்லையென்றால், நம் சுயவஞ்சகத்தில் வாழ்ந்து, நம் ஜீவியம் போலியானதாய் மாறிவிடும்!*

"மனுஷர் வசனிப்பு பேசியும், அன்புகூராவிட்டால், துருப்பிடித்த கதவின் 'கிரீச்' ஒலியாவேன்!

நான் தேவனுடைய வார்த்தையை வல்லமையாய் பேசி! அவருடைய இரகசியங்களை வெளிப்படுத்தி! பகலின் ஒளிபோல் விளங்கினாலும், நான் அன்புகூராவிட்டால், நான் ஒன்றுமில்லை!

நான் எதைப் பேசினாலும், நான் எதை விசுவாசித்தாலும், நான் எதைச் செய்தாலும், அன்பு இல்லாவிட்டால் 'திவாலாகிப்' போனேன்!

அன்பு, தன்னிடம் இல்லாததை, நாடுவதில்லை!

அன்பிற்கு, 'பெருத்த தலை' இருப்பதில்லை!

அன்பு தன் கைப்பிடியை நழுவவிடாது! (நிதானமிழக்காது)

அன்பு பிறருடைய பாவங்களின் பட்டியல் வைத்திராது!

'அன்பின் ஜீவியத்தை' பின்பற்றுங்கள், *உங்கள் ஜீவியத்திற்கு அன்பு ஒன்றே ஆதாரம்...... அது ஒன்றே நிலைநிற்கும்!" (1கொரி.13:1 முதல் 14:1 வரை -* Message Bible*)*

4

எங்கும் நிறைந்த தூய சாட்சி

இந்த புதிய உடன்படிக்கையின் காலத்தில், நம் கர்த்தர் விரும்புவதெல்லாம் "எங்கும் நிறைந்த தூய சாட்சி"- ஒவ்வொரு தேசத்திலும், கிழக்கிலிருந்து மேற்கு வரை காணப்பட வேண்டும்! இதுவே மல்கியா உரைத்த தீர்க்கதரிசனம் (மல்.1:11). நாங்கள் பெங்களூரில் 1975 - ம் ஆண்டு சபை துவங்கியபோது, இந்த வசனத்தையே நாங்கள் பின் தொடரும்படியான இலக்காய் தந்தார்!

ஆனால் சாத்தானுடைய பிரதான நோக்கமோ, ஜனங்கள் கூடும் சபைகளின் எண்ணிக்கை பெருக்கத்தை தடை செய்வதைவிட "ஒரு ஆவிக்குரிய - மனதுடைய சபையை" **கறைப்படுத்துவதே** நோக்கமாகும்.

மெய்யாகவே சொல்லவேண்டுமானால், அநேக நபர்கள் நம் போன்ற சபையில் வந்திட அனுமதிப்பது, சாத்தானுடைய நோக்கம் இலகுவாய் நிறைவேற்றப் படுவதற்கு ஒரு வழியாகும். ஏனென்றால், மாம்சீகமான விசுவாசிகள் மூலமாய் எளிதில் உள்ளே பிரவேசித்து "சபையின் சாட்சியை" கெடுத்து விடமுடியும்!

எந்த சபையானாலும் அதை கர்த்தருக்கென்று தூய்மையாய் வைத்திருப்பது, ஓர் யுத்தமேயாகும்! ஒரு நல்ல ஆரம்பத்தை துவங்குவது எளிதாயிருந்தாலும், சில காலத்துக்குப் பிறகு, அதன் தரம் படிப்படியாய் குறைந்து 'ஒரு செத்த சபையாய் முடிவடைகிறது'. இங்குதான் நாம் ஆவிக்குரிய விழிப்புடையவர்களாய், சாத்தானுடைய தந்திரங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இதுபோன்ற ஜாக்கிரதையும் விழிப்பும், நாம் முதலாவதாக "நம் சொந்த ஜீவியத்தில் கவனம் செலுத்தினால் மாத்திரமே" 'கூர்மை மழுங்காமல்' காத்துக்கொள்ள முடியும்.

மாம்சீகமான ஜனங்கள், நம் சபைக்கூட்டங்களில் கலந்து கொள்வதை தடை செய்ய முடியாது. இயேசுவும்கூட, 12 பேர்கள் கூடிய அவருடைய சபையில் யூதாஸ்காரியோத்து அமர்ந்திருந்தான். பவுல் ஸ்தாபித்த கொரிந்திய சபையில் அநேக மாம்சீக ஜனங்கள் இருந்தார்கள். அதுபோலவே, நம்முடைய சபைகளிலும் மாம்சீக

ஜனங்கள் இருந்திட முடியும். அவர்களை தவிர்த்திட முடியாது!

இதுபோன்ற சமயங்களில், அந்த சபையின் தலைமைத்துவம், எப்போதுமே 'ஆவிக்குரிய மனிதர்களின் கரங்களில்' இருக்கவேண்டும் என்பதை, நாம் உறுதிசெய்ய வேண்டும். மேலும் சபையில் பிரசங்கிக்கப்படும் செய்திகள் எப்போதுமே தூய்மையும், புதிய உடன்படிக்கை செய்தியுமாயிருப்பதற்கு உறுதி செய்து கொள்ள வேண்டும்!

பவுல் தீமோத்தேயுவிடம் கூறும்போது "**உன்னைக் குறித்தே** *முதலாவதாக எச்சரிக்கையாயிரு!" என்றார் (1தீமோத்தேயு.4:15,16). யாரெல்லாம் தங்கள் மாம்சத்திலுள்ள எல்லா அசுசியையும், ஆவியிலுள்ள எல்லா அசுசிகளையும் கழுவிக்கொள்ள உண்மையுள்ள வர்களாயிருக்கிறார்களோ (2கொரி.7:1), அவர்களே 'பிசாசின் தந்திரங்களைக் குறித்து ஒரு ஆவிக்குரிய விழிப்பு' பெற்றவர்களா யிருப்பார்கள். இது ஒன்றேதான் வழி, வேறில்லை! உபதேச அறிவு, பிரசங்க திறமை, ஆவிக்குரிய வரங்கள் கூட இங்கு பயன்படாது! ஏனெனில், நம்முடைய யுத்தமோ மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, ஞான-வல்லவர்களிடத்திலும் அல்ல! ஆவிக்குரிய பொல்லாத சேனைகளோடு போராட்டம் உண்டு! அவைகளே வஞ்சிக்கப்பட ஆயத்தமாயுள்ளவர்களை வஞ்சித்திட காத்திருக்கும் எதிரிகள்!*

தாழ்மையான தலைவர்கள்! அவர்களுக்கு சபையே முதல் பிரதானம்

இயேசு கூறும்போது 'ஆவிக்குரிய மரணத்தின் வல்லமை' மேற் கொள்ளாத ஒரு சபையை நான் கட்டுவேன் என்றார் (மத்.16:18). அப்படி ஒரு சபையை, ஆண்டவர் மாத்திரமே கட்டமுடியும்! **நம்மால் முடியாது.** *நம்முடைய முழு பங்காய் இருப்பதோ, "அவர் விரும்புகிறபடி நம்மை ஒரு கருவியாய் பயன்படுத்த எப்போதும் ஆயத்தமாய் ஒப்புக்கொடுப்பதே ஆகும்". சபையின் ஆளுகை அல்லது அரசாங்கம், அவருடைய தோளின் மீது மாத்திரமே இருக்கவேண்டும் (ஏசா.9:6). இதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் சபையை கட்டாவிடில், நம்முடைய எல்லா பிரயாசங்களும் விருதா (சங்கீதம்.127:1). எந்த ஸ்தலத்திலாவது, தாங்களே கர்த்தருடைய சபையை கட்டுவதாக எண்ணிக்கொள்பவர்கள், தங்களையும் அறியாமல் 'நேபுகாத்நேச்சாரோடு' ஐக்கியம் கொள்கிறார்கள். அந்த அரசன் "நானே கட்டிய மகா பாபிலோன் அல்லவா!" என பெருமிதம் கொண்டான் (தானி.4:30). இதுபோன்ற பெருமை, ஒரு "பாபிலோனிய - உலக சபையை மாத்திரமே" உருவாக்க முடியும் (வெளி.17:5).*

தாழ்மையுள்ள தலைவர்களையே தேவன் எதிர்நோக்குகிறார்.

மேலும் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவதாக தேடுகிறவர் களையும், அவர்கள் ஜீவியத்தில் 'நோவா பேழையை கட்டியதைப் போல' **சபையை கட்டுவதே முதல் பிரதானமாய்** கொண்டவர்களையுமே எதிர்நோக்குகிறார். கிறிஸ்து சபையை நேசித்து, தன்னையே அதற்கு முழுவதுமாய் ஒப்புவித்தார் (எபே.5:25). நாமும் சபையை நேசித்தால், நம்மையும், நம்முடைய யாவையும் முழுவதுமாய் அவருக்கு ஒப்புவித்து விடுவோம். யாரெல்லாம், தங்கள் உலக வேலைகளை ஸ்தல சபையை கட்டுவதைக் காட்டிலும் அதிக மதிப்பு தருகிறார்களோ, அவர்கள் தேவனுக்கு யாதொன்றும் கட்டஇயலாது, வேண்டுமானால் பாபிலோனைக் கட்டலாம்!

அதன்பொருள், நம்முடைய உலக வேலையை விட்டு விட வேண்டும் என்பதல்ல. அப்படி அல்ல! நம் நாட்களில், அப்போஸ்தல னாகிய பவுலைப்போல் நம் தேவைக்கு சுய-ஆதரவு கொண்டிருப்பது நல்லது! ஏனென்றால், இன்றுள்ள கிறிஸ்தவரல்லாத ஜனங்களுக்கு முன்பாக அதுவே ஒரு நல்ல சாட்சியாய் இருக்கிறது. ஏனெனில், அவர்கள் கிறிஸ்தவ ஊழியர்கள் எல்லோரையும் **'பணத்திற்காகவே ஊழியம் செய்கிறார்கள்'** என்ற குற்றத்தை முன் வைக்கிறார்கள். ஆனால் நாமோ உலக அலுவல்களில் இருந்தாலும், நம்முடைய சிந்தையில் தேவனுடைய இராஜ்ஜியமே மேலானதாய் நிலை நிற்கவேண்டும்! 'அவருடைய சபையே' நமக்கு முதல் முக்கியமாயிருக்கிறதா? என தேவன் சோதித்தறிவார். நம்முடைய சிந்தையிலும், நம்முடைய ஜீவியத்திலும் சோதித்தறிவார்! அதன் பின்பே "அவருடைய சபையைக் கட்டுவதற்கு நம்மைத் தாங்குவார்!".

நாம் ஒருபோதும் எண்ணிக்கை பெருக்கத்தில் ஆர்வம் கொண்டிருத்தல் கூடாது! விசுவாசிகள் பெருக்கமோ, சபைகள் பெருக்கமோகூட, நம் ஆர்வமாய் இருந்து விடக்கூடாது. நாம் "கர்த்தருக்கு தூய்மையான சாட்சியில் மாத்திரமே" ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். அதுவே தேவனுடைய ஆர்வமாயும் இருக்கிறது. நாம் தேவனிடத்தில் ஏறெடுக்கும் முதல் ஜெபமே "உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" என்றே எப்போதும் இருக்க வேண்டும் என இயேசு போதித்தார். அது அல்லாமல் "சபை எண்ணிக்கையை பெருக்க வேண்டும்" என்பதாய் இருக்கவே கூடாது. ஒரு ஸ்தலத்தில், தூய்மை இழந்த சபையாய் "கிறிஸ்துவுக்கு ஓர் கெட்ட சாட்சியாய்" இருப்பதை விட, அந்த ஸ்தலத்தில் 'சபை இல்லாமல் இருப்பதே' நலம்!

தேவ ஜனமாயிருக்கும் அவரது மேய்ப்பர்களிடத்தில் காண வேண்டிய இரண்டு முக்கிய தேவையெல்லாம் 1) தேவன் மீது கொண்ட

அளவில்லா பயபக்தி 2) அதிகமான தாழ்மை!

'தியாக ஆவி உடைய' தலைவர்கள்

உண்மையான சபை, "இயேசுவைப்போலவே" எல்லாவற்றையும் சபைக்காய் இழந்துவிட ஆயத்தமானவர்களைக் கொண்டே கட்டப்பட முடியும். "கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:25). இன்றும், சபையை கட்ட விரும்பும் ஒவ்வொருவரும் "நம் சுய ஜீவியத்தின் முழுமையையும் தினசரி காணிக்கையாக்கிடும்" அதே விலைக்கிரயத்தைதான் நாமும் செலுத்த வேண்டும்! கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு, வேறொரு எளிதான வழி இல்லை! இதே கோட்பாடுதான், ஆதி மானிட சரித்திரம் துவங்கி காணப்படுகிறது.

*காயீன் கர்த்தருக்கு "***ஒரு காணிக்கையை***" கொண்டு வந்தான்! அதை தேவன் அங்கீகரிக்கவில்லை. ஆனால் ஆபேலோ "தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில்* **கொழுமையானவைகளை (Very Best)**" *கொண்டு வந்தான்! அதை தேவன் அங்கீகரித்தார் (ஆதி.4:3-5). இந்த காயீன், ஒரு மதவாத கிறிஸ்தவர்களையே அடையாளம் காட்டுகிறான். அவர்கள், தேவனுக்கு கொண்டுவரும் காணிக்கைகளில் 'வெகு குறைவானதோ' அல்லது 'யாதொரு விலைக்கிரயமும் இல்லாததாகவோ' காணப்படுகிறது. ஆனால் ஆபேலோ, 'ஆவிக்குரிய விசுவாசிகளையே அடையாளம் காட்டுகிறான்'. இவர்களோ, தேவனுக்கு 'மிகுந்த விலைக்கிரயம் கொண்ட சிறந்தவைகளையே' காணிக்கையாக கொண்டு வருகிறார்கள்!*

ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை மோரியா மலையின் பலிபீடத்தில் கொடுத்திட தேவன் அழைத்தபோது, அவன் தேவனுக்கு தரக்கூடிய வேறு எதைக்காட்டிலும் 'இந்த தியாகமே' அதிக விலைக்கிரயமாயிருந்தது. அவனும், ஆபேலின் அடிச்சுவடுகளையே பின்பற்றினான்! (ஆதி.22).

சுமார் 1000 வருடங்களுக்குப் பிறகு, தாவீது தேவனுக்கு ஒரு பலியை இதே மோரியா மலையில் (அர்வனாவின் களத்தில்) செலுத்தினான். அச்சமயத்தில் தன்னை முழுஅர்ப்பணமாய் தந்துவிட்ட வார்த்தைகளைக் தாவீது கூறினான்:"எனக்கு விலைக்கிரயம் இல்லாத யாதொன்றையும் தேவனாகிய கர்த்தருக்குப் பலி செலுத்தமாட்டான்" என்பதேயாகும். (2சாமுவேல்.24:24).

ஆபிரகாமும் தாவீதும் "விலைக்கிரயமான பலி செலுத்திய" அந்த ஸ்தலத்திலேயே தம்முடைய ஆலயத்தைக் கட்டும்படி சாலமோனுக்கு

தேவன் கட்டளையிட்டார். அது, மோரியா மலையிலுள்ள அர்வனாவின் களமேயாகும் (2நாளா.3:1).

இவ்வாறாக, தம்முடைய வீடானது "இந்த முழு தியாக ஆவி" கொண்ட ஜனங்களைக் கொண்டு மாத்திரமே கட்டப்படமுடியும் என்பதை தேவன் காண்பித்துள்ளார். அவர்கள் மாத்திரமே "கிறிஸ்துவின் மணவாட்டியாகிய எருசலேமை" கட்டமுடியும் (வெளி.21:2). மற்ற எல்லா கிறிஸ்தவர்களும் "பாபிலோனாகிய வேசியைக்" கட்டுவார்கள் (வெளி.17,18). காயீனும் ஆபேலும் இரண்டு சந்ததிக்கு வழி வகுத்தார்கள்: 1) மதவாத ஜனங்கள் 2)ஆவிக்குரிய ஜனங்கள். பிற்காலங்களில் இந்த இரண்டு சந்ததியினர் 'கள்ளதீர்க்கதரிசிகளும் உண்மை தீர்க்கதரிசிகளும்' என இஸ்ரவேல் சரித்திரத்திலும்! பரிசேயர்கள் .... இயேசு! என புதிய உடன்படிக்கையிலும், முடிவில், 'பாபிலோன்.... எருசலேம்!' எனவும் முற்றுப்பெருகிறது (வெளி.17,18,21).

இயேசுவின் மகிமையைக் கண்ட தலைவர்கள்

அநேக விசுவாசிகள், தூதர்களின் தரிசனத்தையும், சரீர ரூபத்தில் தோன்றும் இயேசுவின் தரிசனத்தையும் காணவிரும்புகிறார்கள். நம்முடைய தீராத ஏக்கமெல்லாம், இயேசு தன் மகிமையான ஜீவியத்தை, இந்த பூமியில் எவ்விதத்தில் வாழ்ந்தார்? என்பதைக் காணவே வாஞ்சிக்கிறோம். அதுவே, நாம் பின்பற்ற உகந்த மாதிரியாயிருக்கிறது! பவுல் கூறும்போது "என்னுடைய மாம்சத்தில் நன்மை ஏதும் வாசமாயில்லை.... நிர்ப்பந்தமான மனுஷன் நான்!" என கூறினார் (ரோமர்.7:18,24). இவ்வாறு தன்னை கண்டதினிமித்தம், தன்னை முற்றிலுமாய், சுத்திகரித்துக்கொள்ள 'ஓர் தகிக்கும் பேரார்வம்' பெற்றிருந்தார். அவரைப்போலவே 'நம்முடைய மாம்சத்தில் குடிகொண்டிருக்கும் கறைகளைக் காண்பதற்கு' நாமும் வெளிப்பாடு பெற வேண்டும். அப்போது மாத்திரமே "நம்முடைய மாம்சத்திலுள்ள எல்லா அசுசியும் நீங்க சுத்திகரித்து, தேவபயத்தோடு பரிசுத்தத்தில் பூரணமாக முடியும்". இவ்வாறாகவே, சபையானது பரிசுத்தத்தில் காக்கப்படுகிறது (2கொரி.7:1).

நாம் விசுவாசித்து பிரசங்கிக்கும் இந்த தூய்மையான உபதேசங்கள், நாளாவட்டத்தில் பெலனிழந்த தேவபக்தியின் வேஷமாய், தரங் குறைந்து 'வெறும் உபதேசங்களாய்' எளிதில் மாறிவிட முடியும். எனவே, இந்த சத்தியங்கள் நமக்கு வெறும் உபதேசங்களைவிட மேலானதாயிருக்க வேண்டும். ஆம், அவைகள் நமக்கு 'வெளிப்பாடாய்' மாறவேண்டும்! அந்த வெளிப்பாடு, நம் ஜீவியத்தில் தொடர்ந்து

பெருகிக்கொண்டே இருக்கவேண்டும். நாம் எவ்வளவு உத்தமமாய், நம் ஜீவியத்தின் பல்வேறு சோதனைகளில் போரிடுகிறோமோ, அந்த அளவிற்கே ஆவியின் வெளிப்பாட்டை நாம் அதிகமாய் பெற முடியும்! அந்த வெளிப்பாடோ, நம்மிடமிருந்து கழுவிக்கொள்ளும்படியான 'கிறிஸ்துவைப்போல் இல்லாத நம் உள்ளான ஜீவியத்தில்' நாம் பெறும் வெளிப்பாடாயிருக்கும்.

இதுபோன்ற தொடர்ச்சியான வெளிப்பாடு இல்லாமல், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டுவது ஒருக்காலும் முடியாது. இவ்வாறு நம் மாம்சத்திலுள்ள அசுசிகளைக் குறித்த வெளிப்பாடு இல்லாமல் பெற்றிடும் "பரிசுத்தம்" பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் கொண்ட நியாயப்பிரமாணத்தின் வெளித்தோற்றமான நீதியாகவே இருக்கும்! அதைக்கொண்டு நம் சக விசுவாசிகளிடம் ஓர் மதிப்பை நாம் பெற்று விடலாம்.... ஆனால், அது "தேவனுடைய பார்வையில் பூரண மானதாய்" (வெளி.3:1,2) ஒருபோதும் இருப்பதில்லை.

சோதனை நேரங்களில் நாம் "இயேசுவை நம் மாதிரியாக" காணவில்லையென்றால், நம்மை பின்மாற்றக்காரர்கள் என்றே விளங்கிக்கொள்ள வேண்டும்!

"தூய சாட்சியை" கட்டும் போதகங்கள்

எல்லா இடங்களிலும் **சீஷர்களை உருவாக்குங்கள்** என்றே இயேசு கூறினார்..... வெறும் மனம் மாறுகிறவர்களை அல்ல!

ஆகவே ஒரு தூய சாட்சியை பெறுவதற்கு, நாம் **முதலாவதாக** ஒரு சீஷனாய் மாறுவதற்குள்ள நிபந்தனைகளை தெளிவாய் போதிக்க வேண்டும். சபையில் ஒன்றாகி ஒரே அங்கமாய் மாற விரும்புகிற யாவருக்குமே சீஷத்துவத்தைப் போதித்து, அது அவர்களின் தனிப்பட்ட ஜீவியத்தையும், குடும்ப ஜீவியத்தையும், சபை ஜீவியத்தையும் எவ்விதமாய் மாற்றி அமைக்கும் என்பதை விவரித்துப்போதிக்க வேண்டும்.

இந்த போதகத்தை, லூக்கா.14:26-33 வரை இயேசு தந்த சீஷத்துவத்தின் மூன்று நிபந்தனைகளைக் கூறி ஆரம்பிக்க வேண்டும்:

1. நம் குடும்பத்திலுள்ள எல்லோரைக் காட்டிலும், உறவினர்களைக் காட்டிலும், சகோதர சகோதரிகளைக் காட்டிலும் **இயேசுவையே அதிகமாய் அன்புகூர வேண்டும்** (லூக்கா.14:26). அவர்களில் ஒருவராது, நாம் கர்த்தருக்குச் செய்ய விரும்புவதைச் செய்வதற்கு தடையாய் அனுமதித்து விடக்கூடாது.

2. நம் சுயத்தைக் காட்டிலும், இயேசுவையே அதிகமாய் அன்புகூர வேண்டும் (லூக்கா.14:27). **நம்முடைய சுய ஜீவியம்** மறுக்கப்பட்டு, தினசரி சிலுவையில் அறையப்பட்டு.... ஒரே நாளில் பலமுறை சோதிக்கப்பட்டாலும், சுய வாழ்வு சிலுவையில் அறையப்பட வேண்டும்!

3. இந்த பூமியில் நமக்கு உண்டான எல்லாவற்றையும் காட்டிலும் இயேசுவையே அதிகமாய் அன்புகூர வேண்டும் (லூக்கா.14:33). இந்த பூமியில் நாம் வைத்துக்கொள்ளும்படி அநேக காரியங்களை தேவன் அனுமதித்திருக்கிறார். ஆனால் நமக்கோ, யாதொன்றின் மீதும் 'சொந்தமான பற்றுதல்' இருக்கக்கூடாது. நம் உலகப் பொருட்கள் அனைத்தும் நம் திறந்த கையில் வைக்கப்பட்ட **'தேவனுடைய சம்பத்தாகவே'** கொண்டிருக்க வேண்டும்!

இரண்டாவதாக, மலைப்பிரசங்கத்தில் இயேசு கற்பித்து எச்சரித்த சத்தியங்கள் 'விரிவாகவும் தெளிவாகவும்' போதிக்கப்பட வேண்டும் (மத்தேயு.5,6,7). இயேசு தன் பிரசங்கத்தை மூன்று உதாரணங்கள் கூறி முடித்தார்.

i. இயேசு கூறிய பிரசங்கப் போதகத்தில் **ஜீவனுக்கு நடத்தும் வழி குறுகலானது** என்றே விவரித்தார் (மத்தேயு.7:14).

ii. இந்த பிரசங்கத்தில் உள்ள போதகங்களுக்கு கீழ்ப்படிந்தால் மாத்திரமே, அவருடைய சீஷர்கள் 'தேவனுடைய மகிமைக்கென' கனிதரும் மரமாய் மாறுவார்கள் (மத்தேயு.7:16-20).

iii. இந்த பிரசங்கத்தில் இயேசு கற்பித்த அனைத்திற்கும் கீழ்ப்படிந்தால் மாத்திரமே, அவருடைய சீஷர்கள் தங்கள் சொந்த ஜீவியத்தையும், தங்கள் குடும்ப ஜீவியத்தையும், தங்கள் சபையையும் நித்தியத்திற்கும் அசைக்கப்படாத அஸ்திபாரத்தில் கட்டமுடியும்! (மத்தேயு.7:24-27).

மூன்றாவதாக, சபையிலுள்ள ஒவ்வொருவரும் பரிசுத்தாவியினால் நிறைந்திருப்பதற்கு தேவனை தேடும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். ஏனென்றால், மேலே கூறப்பட்ட தரத்தின்படி ஜீவிப்பது, நம் சொந்த பெலத்தால் முடியாது! ஆகிலும் பரிசுத்தாவியின் பெலத்தினால் வாழ்ந்திட முடியும்! (அப்.1:8; எபேசியர்.5:18).

நான்காவதாக, சபையிலுள்ள ஒவ்வொரு விசுவாசியும், தேவனை தங்கள் சொந்த பரம பிதாவாய் அறிந்துகொள்ள நடத்த வேண்டும். இவ்விதமாய், நிச்சயமற்ற இந்த பொல்லாத உலகில், தங்கள் முழு

பாதுகாப்பை அவரில் கண்டுகொள்ள உதவ வேண்டும்.

ஐந்தாவதாக, இயேசுவைப் பற்றிய மகா சத்தியமாகிய 'அவர் எல்லா விதத்திலும் நம்மைப் போலானார்' (எபிரெயர்.2:17). 'எல்லா விதத்திலும் நம்மைப்போலவே சோதிக்கப்பட்டார்' (எபிரெயர்.4:15). .....இவைகளை அறிந்து எல்லோருமே 'இயேசு நடந்ததுபோல நடக்க முடியும்' என்ற **விசுவாசத்தைப் பெற்றிட** உதவ வேண்டும்! (1யோவா.2:6).

வேதாகமத்தின் இந்த முக்கிய சத்தியங்களை கற்றுக்கொள்வதற்கு பல மாதங்கள் எங்கள் ஆரம்ப ஊழியங்காலங்களில் செய்தோம். அதன் மூலமாய் ஆச்சரியமான விளைவுகள் ஏற்பட்டதையும் கண்டோம்.

இவ்வாறாக மாத்திரமே "கர்த்தருக்கு தூய்மையான சாட்சியாக" ஒரு புதிய உடன்படிக்கை சபையை கட்ட முடியும்!

தலைவர்கள் ஆத்துமத்திற்குரியவர்களல்ல, ஆவிக்குரியவர்கள்!

நாம் சபையை கட்ட வேண்டுமென்றால், நம்முடைய ஆத்துமத்தி லிருந்து (நம்முடைய மனது, நமது உணர்வு எழுச்சிகள்) எழும்பும் மிக வலிமையான 'பக்தியுள்ள விருப்பங்கள் கூட' மரணத்திற்கு உட்படுத்த வேண்டும். தேவனுடைய வார்த்தையே நம் ஜீவியத்திலுள்ள ஆத்து மாவையும் ஆவியையும் பிரித்திட வாஞ்சிக்கிறது (எபி.4:12). இந்த ஆத்தும விருப்பங்கள், சவுல் கொன்று போடாத 'நல்ல அமலேக்கிய ஆடுகளைப்போல்' ஒப்பிடலாம். இதனிமித்தமே சவுல் தன் இராஜ்ஜிய பாரத்தை இழந்தான்(1சாமு.15:15). அது, நம்முடைய மாம்ச இச்சைக்குட்பட்ட அருவருப்பைப்போல் தோன்றுவதில்லை. அமலேக்கியரின் அந்த கெட்ட ஆடுகளை சவுல் கொன்று விட்டான்! **ஆகவே நம் ஆத்தும விருப்பத்திற்குரிய 'நல்ல ஆடுகளே' அதிக அபாய முள்ளவைகள்! அவைகளே, அதிக வஞ்சனைக்கு உரியவைகள்!**

சபையை கறைப்படுத்த விரும்பும் சாத்தானுடைய நோக்கத்தில் வெளிப்படையான பாவங்கள்தான் என்பதில்லை..... மிகுந்த தந்திர வழியில் மனுஷீக புத்தியாலும், எழுச்சி உணர்வுகளாலும் இன்னும் பல ஆத்தும செயல்களாலும் கறைப்படுத்த நாடுவான்! நம் புத்தியுள்ள மனதில் தோன்றும் திட்டங்களால் ஈர்க்கப்பட்டு, அவைகள் 'தேவனால் பிறக்கவில்லை' என அறிந்தும், தேவனை விட்டு ஒரு கோடிக்கு இழுத்து செல்லப்பட முடியும். எந்த செயல்களெல்லாம் 'தேவனால் உண்டாக வில்லையோ, அவைகளை தேவன் ஒருநாளில் வேறோடு பிடுங்கி அழித்துப்போடுவார் என இயேசு கூறினார் (மத்தேயு.15:13).

நம்முடைய ஊழியம் 'இதுபோன்ற விஷயங்களில்' நம்மை நாமே

நியாயந்தீர்த்து உண்மையுள்ளவர்களாயிருந்தால் மாத்திரமே, அதிக ஐசுவரியமும் தீர்க்கதரிசன வலிமையும் கொண்டதாயிருக்கும். மனுஷீக புத்தியிலிருந்து தோன்றும் எல்லா பிரசங்கங்களும், 'ஆவிக்குரிய மரணத்தையே' கொண்டுவரும். அதுபோலவே, ஜனங்களின் உணர்வுகளை எழுச்சியூட்ட செய்யும் எந்த ஊழியமும் 'ஆவிக்குரிய மரணத்தையே' கொண்டுவரும்!

துரதிருஷ்டவசமாய் இன்று அநேகர் மனுஷீக எழுச்சியைத் தூண்டும் ஊழியங்களுக்கும், பரிசுத்தாவியின் கிரியைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை காணமுடியாமல் தத்தளிக்கிறார்கள்.

நாமோ, நம் ஊழியத்திலுள்ள 'யாதொரு ஆத்தும கிரியை களையும்' குறித்த வெளிச்சத்தைப் பெறவேண்டும். இல்லையென்றால், நம்முடைய எல்லா நல்ல நோக்கங்களையும் கொண்டு யாரும் அறிந்திடாத வகையில் 'சபையை தந்திரமாய் கறைப்படுத்த முடியும்!'.

நம் எல்லோருமே அடிப்படை பூர்வமாய் புத்திசாலிகள்! மாம்சத்தின் புத்திசாலிதனத்தில், நம்முடைய 'ஆத்தும வல்லமையை' வெளிப்படுத்தும் ஒரு தொடர்ச்சியான அபாயம் உண்டு. மனுஷீக அறிவுத்திறனும், நம் செய்தியில் தோன்றும் 'நகைச்சுவை பேச்சுகளும்' இந்த ஆத்தும வல்லமைக்குரியதாகும். நீங்கள் யாவருமே 1கொரி.2:1-5 வசனங்களை வாசித்து தியானித்து.... புத்தி திறன் படைத்த பவுல் 'தேவனுடைய வார்த்தையை பகிர்ந்தளிக்கும் போதெல்லாம் ஏன் பயந்து நடுங்கினார்?' என்பதை அறியும்படி உங்களை உற்சாகப் படுத்துகிறேன். அவர் தனது உலக ஞானத்தை சார்ந்துக் கொள்ளக் கூடாது என்றே பயந்திருந்தார்! ஆகவேதான் அவர் நமக்குப் புத்திகூறும் பொருட்டு "ஒருவன் ஞானியாகும்படிக்கு, பைத்தியக்காரனாகக் கடவன்!" என போதித்தார் (1கொரிந்தியர்.3:18).

'கர்த்தருடைய பாரத்திற்கும்' 'சிறந்த சிந்தனைக்கும்' உலகளாவிய வித்தியாசம் உள்ளது. **கர்த்தருடைய பாரமானது,** *அதிக ஜெபத்திற்கு பிறகும், நம் ஜீவியத்தில் கர்த்தர் இடைப்பட்ட கண்டிப்பிற்கு பிறகும் 'நம் மனதில் பூத்திடும்' ஒன்றாகவே இருக்கிறது. ஆனால்* **'ஒரு சிறந்த சிந்தனை'** *பிறரிடமிருந்து கனத்தை பெறுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட வெறும் அறிவுப்பூர்வமானதேயாகும். நம்முடைய பிரசங்கத்தில் கனத்தை தேடுவதிலிருந்து விடுதலை பெறுவது, ஓர் நீண்ட போர்க் களமே ஆகும். ஆகிலும், அந்த யுத்தத்தை நாம் தொடர்ச்சியாக புரிந்து, முற்றிலும் விடுதலை பெறவேண்டும்!*

நாம் முதலாவதாக அறிந்த பாவங்களைப் போரிடுவதில்

உண்மையுள்ளவர்களாயிருந்தால், எப்போதும் அவருடைய முகத்திற்கு முன்பாக தாழ்மையில் நடப்பவர்களாயிருந்தால், நம் ஆத்தும - ஜீவிய கிரியைகளைக் காண்பதற்குரிய வெளிச்சத்தை தேவன் தருவார்! இதைத் தவிர, நம் ஆத்தும கிரியைகளைக் கண்டறிய வேறு வழியில்லை.

நாம் கர்த்தரிடம் கொண்ட **தனிப்பட்ட தியானத்தில்** *வளரவில்லை யென்றால், கொஞ்ச கொஞ்சமாய் பின்மாற்றம் அடைந்து விடுவோம்! நம்முடைய வார்த்தைகளில் 'யாதொரு அபிஷேகமும்' இராது! கிறிஸ்துவின் சரீரத்தை எந்த இடத்திலும் கட்ட இயலாது!*

ஆத்துமாவிற்கும் ஆவிக்கும் இடையிலான வித்தியாசத்தை தெளிவாய் அறிந்துகொள்ள, கீழ்கண்ட செய்தியை வலைதளத்தில் கேளுங்கள்:

https://cfcindia.com/sermon/soulish-or-spiritual-0

சுயத்திற்கு மரிக்கும் வழியில் நடக்கும் தலைவர்கள்

நம் ஜீவியத்தில் கனிதரும் வாழ்விற்கு இயேசு கற்றுக்கொடுத்த 'அங்கீகரிக்கப்பட்ட ஒரே வழி மாத்திரமே' உண்டு: அது, ஒரு கோதுமை மணி நிலத்தில் விழுந்து கனிகொடுப்பதைப்போலவே நாமும் நம் 'சுயத்திற்கு' நிலத்தில் விழுந்து மரிக்க வேண்டும்! (யோவான்.12:24).

நம்முடைய சுயத்திற்கு நாம் தினசரி மரிப்பதற்கு உண்மை யுள்ளவர்களாயிருக்கிறோமா? என்று காணவே தேவன் விரும்புகிறார். அந்த உண்மையை வேறொருவராலும் காண இயலாது. உங்களைச் சுற்றிலும் 'கடினமான ஜனங்களை' தேவன் வைத்திருப்பாரென்றால், நீங்கள் உங்கள் சுயத்திற்கு மரித்திட 'ஏராளமான சந்தர்ப்பங்களை' அளித்திருக்கிறார் என்பதை மறவாதிருங்கள். ஆகவே, அவ்வித ஜனங்களை அன்புகூர்ந்து, ஆசீர்வதியுங்கள்!

> **நீங்கள் உங்கள் மாம்சத்தின் கறைகளிலிருந்து இரட்சிக்கப்பட விரும்புகிறவரா யிருந்தால், உங்கள் அன்றாட அலுவல்களில், உங்கள் சுயத்திற்கு மரிக்கும்படி அதிக சந்தர்ப்பங்கள் கிடைப்பதைப் பார்ப்பீர்கள்!**

நாம் ஜனங்களை "ஒரு மனுஷீக நீதிக்குள்" நடத்திச் செல்லாதபடிக்கு கவனம் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய அழைப்பு, நாம் **திவ்விய சுபாவத்தில் பங்கு பெறுவதும்,** *மற்றவர்களையும் அவ்வாறே பங்குபெறச் செய்வதேயாகும் (2பேதுரு.1:3). அதை அடைவதற்கு ஒரே வழி "இயேசுவின் மரணத்தை, எப்போதும் நம் சரீரத்தில்" சுமந்து வாழ்வதே யாகும். இந்த பங்கிற்காகவே 2கொரிந்தியர்.4:10-12 வசனங்கள் கூறுகிற படி "தேவன் நம்மை தொடர்ச்சியாய் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார்".*

மற்ற சபைகளிலுள்ள கிறிஸ்தவர்களைக் காட்டிலும் 'ஒரு நல்ல ஜீவியத்தை' வாழ்வதாக நாம் திருப்தி அடைந்தோம் என்றால், நியாயப்பிரமாணத்தின் நீதியை விட மேலான ஒரு ஜீவியத்திற்கு நாம் ஒருபோதும் வளர்ந்திட முடியாது. இந்நிலையில், நாம் மற்றவர்களை உயர்ந்த தரத்திற்கு நடத்தவும் முடியாது! ஆகவேதான், மனுஷர்கள் நம் நீதியைப் போற்றும் எந்த சாட்சிக்கும், நாம் யாதொரு மதிப்பும் தந்துவிடக்கூடாது. நமக்கென்றும், நம் நற்குணத்திற்கென்றும், நம் நீதிக்கென்றும் **கனத்தைத் தேடுவது** *பரிசேயத்துவத்தின் ஆவியேயாகும்! அந்த ஆவி, கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதமாயிருக்கிறது. ஆகவேதான் இதுபோன்ற ஆவியை "அந்திக்கிறிஸ்துவின் ஆவி" என அழைக்கப் படுவது ஏதுவாயிருக்கிறது. நாம் ஜெயம் கொண்டவர்களாய் நிலைநிற்க விரும்பினால், இந்த ஆவி கண்டிப்பாய், மரணத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். வெகு கொஞ்சம் பேர்களே, இவ்விஷயத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அந்த கொஞ்சம் பேர்களில் நீங்களும் ஒருவராயிருக்க வேண்டும்.*

இவ்வாறு சுயத்திற்கு மரிக்கும் "சிலுவை பாதையை" நாம் தொடர்ச்சியாக பேசுவதினிமித்தம், அநேகர் மனம் புண்படமுடியும்! ஆனால் அது ஒன்றும் நம் பிரசங்கத்தை நிறுத்த விட்டுவிடக்கூடாது.

> ***சிலுவையின் செய்தியை தொடர்ச்சியாய் கேட்பதற்கு சோர்வடையும் யாராயிருந்தாலும், அவர்கள் நீதியின் மேல் மெய்யான பசியும் தியாகமும் அற்றவர்கள் என்பதை நிரூபிக்கிறார்கள். அதுபோன்ற ஜனங்கள் மனத்தாங்கல் அடைந்து வீழ்ச்சி அடைந்திட தேவனே அனுமதித்து விடுவார்!***

தங்களுக்கென்று கனத்தை தேடும் பிரசங்கிகள், செவித்தினவுள்ள வர்களின் இச்சைகளுக்கு இணங்கி, ஒவ்வொரு சமயமும் 'புதிதாய்' ஏதாகிலும் பேசிட சிந்தித்துக்கொண்டிருப்பார்கள்! (2தீமோ.4:3,4; அப்.17:21). ஆனால் நாமோ, சிலுவையின் உபதேசத்தை தொடர்ந்து பிரகடனப்படுத்த வேண்டும். அந்த உபதேசம் கெட்டுப் போகும் சுபாவ மனதுடையவர்களுக்கு பைத்தியமாகவும், "இயேசு நடந்ததைப் போலவே நடந்திட" ஆசை கொண்டு "அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதைப் போலவே தங்களையும் சுத்திகரித்துக் கொள்ள" விரும்புகிறவர்களுக்கும் **"தேவ பெலனாய்"** *எப்போதும் இருந்திடும்! (1யோவான்.2:6; 3:3).*

பாபிலோனிலிருந்து எருசலேம் நோக்கி முன்னேறிச் செல்லுங்கள்

தானியேல் புத்தகத்தில், தேவனுடைய ஜனங்கள் பாபிலோனிலிருந்து எருசலேம் நோக்கி சென்றதைக் காண்கிறோம். அதற்கு ஒப்பாகவே, இன்றுள்ள தெய்வ பயம் கொண்ட ஜனங்கள் ஒத்த

வேஷ கிறிஸ்தவத்திலிருந்து, தேவனுடைய புதிய உடன்படிக்கை சபையை நோக்கி முன்னேறிச் செல்கிறோம். இந்த பயணம் தேவன் தந்த அழைப்பாகிய "பாபிலோனைவிட்டு வெளியே வாருங்கள்!" (வெளி.18:4) என்ற கட்டளைக்கு இணங்கிய அழைப்பேயாகும்.

இந்த முன்னேறிச்செல்லும் இயக்கம், ஒத்த வேஷம் தரியாத ஒரு மனிதன் 'தானியேல்' பூர்வ பாபிலோனில் தொடங்கியதாகும். தேவனுடைய நோக்கத்திற்காக அவன் அக்கறைக் கொண்டு, உபவாசித்து அந்த பயணம் முற்றுப்பெற ஜெபித்தான். எந்த ஒரு இடத்திலும், தேவனுக்கென்று ஒரு தூய்மையான சபையைக் கட்டுவதற்குரிய பாரம் 'ஒரு மனிதனிடமிருந்தே' துவங்குகிறது. அந்த ஒருவன், தேவனுக்கு முன்பாக பாரத்தோடும் மிகுந்த ஜெபத்தோடும் "கர்த்தாவே, இந்த ஸ்தலத்தில் உமக்கென்று **ஒரு தூய்மையான சபையை கட்ட** *நான் விரும்புகிறேன்! அதற்கென எந்த விலைக்கிரயமும் செலுத்த ஆயத்தமாயிருக்கிறேன்" என்றே ஜெபித்து ஜீவிப்பார்கள். இந்த பாரம், அது நிறைவேறும் காலம் வரை, ஒருவன் நீண்டகாலம் சுமக்க வேண்டியதாயிருக்கும். ஒருதாய் தன் குழந்தையை தன் கருவில் சுமப்பதைப்போல், இந்த பாரத்தை அவன் இருதயத்தில் சுமந்திருக்க வேண்டும். அவ்வாறாகவே, தானியேல் பாரத்தை சுமந்திருந்தான்!*

தானியேலுடைய ஜீவியத்தில் காணப்பட்ட ஒரு விசேஷித்த குணாதிசயம் என்னவென்றால்: "தன்னை தீட்டுப்படுத்தலாகாது என்று, **தன் இருதயத்தில் தீர்மானம்** *பண்ணிக்கொண்டான்"(தானி.1:8). தேவனுடைய வார்த்தையிலுள்ள சிறிய கட்டளைகளைக்கூட கீழ்ப்படிவதற்கு, அவன் முற்றிலும் ஒத்தவேஷம் தரித்திட மறுத்து நின்றான். இயேசுவும் அவ்வாறே "இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன்* **பரலோக இராஜ்ஜியத்தில் எல்லாரிலும் சிறியவன்** *என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ,* **பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவன்** *என்னப்படுவான்"(மத்.5:19)என கூறினார். புதிய உடன்படிக்கை சபைகளைக் கட்டுவதற்கு தேவன் பயன்படுத்தும் மனிதர்கள், ஆண்டவருடைய பெரிதான கற்பனைகளாகிய கோபத்தை விட்டு விலகுவதற்கும்! பாலிய அசுசியை விட்டு விலகுவதற்கும்! போதிப்பார்கள் (மத்தேயு.5:22,28). அதேபோலவே ஆண்டவருடைய சிறிய கட்டளையாகிய, சபை கூட்டங்களில் ஸ்திரீகள் ஜெபிக்கும்போதோ அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும் போதோ* **ஸ்திரீகள் தங்கள் தலையை முக்காடிட்டுக் கொள்ளவேண்டும்** *என்பதையும் வலியுறுத்துவார்கள் (1கொரி.11:1-16).*

ஆரம்பத்தில் எல்லா யூத மக்களும் ஒத்தவேஷம் தரித்தபோது தானியேல் தனியாய் நிற்கவேண்டியிருந்தது. இப்போது, அனனியா, மீஷாவேல், அசரியா (பாபிலோனில் எல்லோராலும் அறியப்பட்ட அவர்களின் பெயர் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ) தேவனுக்கென்று **தானியேல் உறுதியாக நிற்பதைக்கண்டு** *அவர்களும் தைரியம் கொண்டு அவனோடே சேர்ந்து கொண்டார்கள் (தானி.1:11).*

இன்றும் இந்த அனனியா மீஷாவேல் அசரியாவைப்போலவே அநேகர் தங்கள் ஸ்தலங்களில் "கர்த்தருக்கென்று ஓர் தூய சாட்சியை கட்டுவதற்கு" ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கோ தாங்களாகவே உறுதியாக நின்றிட தைரியம் இருப்பதில்லை. அவர்களை நடத்துவதற்கு 'ஒரு தானியேல்' தேவையாயிருக்கிறான். அந்த கிராமத்தில் அல்லது அந்த நகரத்தில் ஒரு தானியேல் எழும்பியவுடன், அவர்கள் அவனுடன் வந்து நிச்சயமாய் சேர்ந்து கொள்வார்கள்!

பாபிலோனில் நான்கு முழு இருதயம் கொண்ட வாலிபர்கள், தேவனுக்கு ஒரு வல்லமையான சாட்சியாய் விளங்கினார்கள்! ஆனால் ஒத்தவேஷம் தரித்த ஆயிரக்கணக்கான யூதர்கள், தங்கள் ராஜாவை பிரியப்படுத்தவே விரும்பினார்கள்.

> தானியேலும் அவனுடைய மூன்று நண்பர்களும் தேவனுக்காக நின்ற உறுதியான நிலை, அந்நாட்களில் வல்லரசு நாடாய் திகழ்ந்த பாபிலோனுக்கும் அவர்களின் ராஜாக்களுக்கும் ஓர் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது!

அரை-குறை இருதயம் கொண்ட கிறிஸ்தவர்கள், பல ஆயிரம் இருந்தாலும், தங்களின் எந்தப் பட்டணத்திலோ அல்லது தேசத்திலோ கர்த்தருக்கு ஒரு வெளிச்சமாய் இருந்திட முடியாது! தேவனுக்கு, முழு இருதயம் கொண்ட விசுவாசிகளே தேவை! அதுஏனென்றால், "பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" என சகரியா 4:6-ல் காண்கிறோம்.

இன்றும் தேவன், என்ன விலைக்கிரயமானாலும், ஒருபோதும் ஒத்த வேஷம் தரியாமல், புதிய உடன்படிக்கை சபையை தங்கள் ஸ்தலங்களில் கட்டுவதற்கு பாரம் கொண்ட புருஷர்களையே எதிர்நோக்குகிறார்!

5

மதவாத குழுவா? அல்லது, கிறிஸ்துவின் சரீரமா?

சபை, கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது! அது வாரந்தோறும் கூடிவரும் வெறும் விசுவாசிகளின் கூட்டமல்ல. எனவே நாம் கட்டுவது **ஒரு சரீரமே அல்லாமல் "ஒரு மதவாத கிறிஸ்தவ குழு அல்ல"** என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். எந்த மனிதனும், ஒரு மதவாத குழுவை கூட்டிச் சேர்த்திட முடியும். ஆனால், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கோ தேவனிடமிருந்து "கிருபையும் அபிஷேகமும்" அருளப்பட வேண்டும். அதற்கு நாம் செய்வதெல்லாம் நம்மை நாமே வெறுத்து, அனுதினமும் மரித்து, பரிசுத்தாவியினால் நிறைந்திருப்பதே அவசியமாகும்.

பழைய உடன்படிக்கையில் இஸ்ரவேலர்கள் 'ஒரு கூட்டமாய்' கூடி வந்தார்கள்..... ஒரு சரீரமாய் அல்ல! இன்றுள்ள அநேக பெரிய சபைகளும் 'கூட்டமாய் உள்ளார்கள்' ஓர் சரீரமாய் அல்ல! அதை ஒப்பிடுகையில், வீடுகளில் கூடும் சிறிய சபைகளே நலம் என கூறலாம்.... ஏனென்றால் இவர்கள் ஒரு சரீரமாய் இருக்கிறார்கள், மற்றவர்களோ 'மன்றங்களாய் - (Club)' இருக்கிறார்கள். ஆனால் இயேசுவோ, தம்முடைய சரீரத்தையே கட்டிக்கொண்டிருக்கிறார்.

ஒரு **கூட்டத்திற்கும்**, ஒரு **மன்றத்திற்கும்**, ஒரு **சபைக்குமுள்ள** வித்தியாசத்தை, தெளிவாய் அறிந்து கொள்ள கீழ்காணும் வலை தளத்தில் கேளுங்கள்:

"The Congregation, the Club and the Church" (*By Santosh Poonen)

https://www.cfcindia.com/sermon/the -congregation-the-club-and-the-church.

நிந்தையால் மூடப்பட்டிருத்தல் அவசியம்

'முதல் கிறிஸ்துவின் சரீரம்' மனுஷரால் காணப்பட்டபோது கால்நடை தீவன-கொட்டிலில் கிடத்தியிருந்தது. இப்படி ஒரு தாழ்விடப் பிறப்பின் நிந்தையே, கிறிஸ்துவின் சரீரத்திற்கு

அடையாளமாய் மேய்ப்பர்கள் கண்டார்கள் (லூக்கா.2:12). மீண்டுமாய் கிறிஸ்துவின் சரீரம் கடைசியாகவும், நிந்தைமிகுந்த, ஒரு குற்றவாளியின் சிலுவையில், கல்வாரியில் தொங்கி காட்சியளித்தது.

பிறப்பிலிருந்து இறப்புவரை முதல் கிறிஸ்துவின் சரீரம் ஓர் நிந்தையின் குணாதிசயமாய் இந்த லௌஹீக உலகத்திற்கும், மதவாத உலகத்திற்கும் இருந்தார்.

இன்றும் கிறிஸ்துவின் சரீரத்தின் உண்மையான தோற்றம், இந்த உலகத்திற்கும், பாபிலோனிய கிறிஸ்தவத்திற்கும் அதே நிந்தையின் மாதிரியை அனுபவமாய் கொண்டிருக்கும். நம்முடைய ஸ்தலசபை இதுபோன்ற **'கிறிஸ்துவின் நிந்தையால்' மூடப்படாதிருந்தால்,** *ஒருவேளை நாம் ஒத்தவேஷக்காரர்களாகவும், 'பாபிலோன் பாளையத்திற்கு புறம்பே' சென்று நிந்தையை ஏற்றுக்கொள்ளாதவர்களாயும் இருக்கக் கூடும்! (எபி.13:13). இருப்பினும், கிறிஸ்துவின் நிந்தை என்பதற்கும் நம் சொந்த பாவம், அல்லது மதியீனம் அல்லது குளிர்ந்துபோன தன்மை ஆகியவைகளால் ஏற்படும் நிந்தைக்கும் ஏராளமாய் வித்தியாசம் உள்ளது. ஒன்றுக்கொன்று உள்ள வித்தியாசத்தை நாம் தவறாய் எடுத்துக்கொள்ளக்கூடாது!*

இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசன வார்த்தையில் "அவருக்கு அழகுமில்லை, சௌந்தர்யமுமில்லை.... அவர் அசட்டை பண்ணப் பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார்" (ஏசாயா.53:2,3). அவருடைய மகிமை, கிருபையினாலும் சத்தியத்தி னாலும் நிறைந்த.... ஆகிலும் அதிகபட்சமான மனுஷருடைய கண்களுக்கு முன்பாக மறைந்திருந்த "அவருடைய உள்ளான ஜீவியமாகவேயிருந்தது"(யோவான்.1:14). அவ்விதமே நம் ஸ்தல சபைகளும் லௌஹீக உலகத்திற்கோ அல்லது பாபிலோனிய கிறிஸ்தவத்திற்கோ ஓர் கவர்ச்சியாய் இருந்திடக்கூடாது! ஒரு தேவபக்தியான வாழ்க்கையைத் தேடி உள்ளே வரும் மக்களுக்கே, சபையின் மகிமை அழகுள்ளதாய் காணப்படவேண்டும். ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளே இருந்த திரைச்சீலைகள் அழகுள்ளதாய் இருந்தது! ஆனால் அதன் வெளியே போடப்பட்டிருந்ததோ கரும்-மரக் கலரிலான செம்மறியின் தோலினால் மூடப்பட்டிருந்தது. அதின்மேல் தூசியும் அழுக்கும் படிந்திருந்தன. கூடாரத்தின் உள்ளே, எல்லா உட்புற திரைச்சீலைகளும் அழகுள்ளதாயிருந்தது. **கிறிஸ்துவின் மணவாட்டியும் "தன் அந்தரங்க ஜீவியத்தில் அழகுள்ளவள்"** *(சங்கீதம்.45:13). மேலும் "அவளுடைய உள்ளான அழகின் மகிமைக்கு மேலாக (நிந்தை நிறைந்த) கூடாரமுண்டாயிருக்கும்" (ஏசாயா.4:5) என வாசிக்கிறோம்.*

இங்குதான், சபை தலைவர்களுக்கு ஓர் மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. அவர்கள் சபையை எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதை வைத்தே அந்த சபை, இயேசுவைப்போலவே மனுஷர்களால் புகழப்படாமல் அல்லது உலகத்தின் கனத்தைப் பெறாமல் இருக்கிறதா? என்பதை அறிந்திட முடியும். மாம்சீக அல்லது ஆத்துமத்திற்குரிய கிறிஸ்தவர்களிடத்திலிருந்து அல்லது இந்த உலகத்திலிருந்து, ஒரு நல்ல மதிப்பை நாம் தேடுவோமென்றால், நாம் நிச்சயமாய் பாபிலோனைக் கட்டும் பரிதாபத்திற்கு உள்ளாவோம். இவ்வாறாக, இன்றுள்ள கிறிஸ்தவ உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாம் பிரபல்யமாய் மாறினால், நாம் நிச்சயமாய் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்ற தவறி விடுவோம்.

இதை இயேசு கூறும்போது என்னிமித்தம் “உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்! சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே” (மத்தேயு.5:11,12) என்றார்.

ஏரோதும் அவன் வீரர்களும் ‘முதல் கிறிஸ்துவின் சரீரமாகிய’ ‘குழந்தை இயேசுவை’ 20 நூற்றாண்டுகளுக்கு முன்பாக கொலை செய்ய வகைதேடினார்கள். இன்றும் அநேக இடங்களில், கிறிஸ்துவின் சரீரம் ஆரம்பிக்கும்போதே, அதை அழித்திட அநேகர் முயற்சிக்கிறார்கள்.

ஆனால் யோசேப்போ, ‘தேவனுடைய சத்தத்திற்கு உணர்வுள்ளவராய்’ அவருடைய வார்த்தைக்கு துரிதமாய் கீழ்ப்படிந்து, அதன்படி செய்தபடியால் ‘கிறிஸ்துவின் சரீரத்தை’ பாதுகாத்துக்கொண்டார்! (மத்.2:13-15).

அந்த அளவிற்கு, கிறிஸ்துவின் சபையில் பொறுப்புள்ளவர்களாயிருக்கும் நாமும், இந்த யோசேப்பைப்போலவே நடந்துகொள்ள வேண்டும். நாமும் ‘கவனித்து கேட்கிறவர்களாய்’ ஆவியானவர் நம்மிடம் பேசியவுடன், அவர் நமக்கு சொன்னபடியே துரிதமாய் கீழ்ப்படிந்திட வேண்டும். அவ்வாறு கவனித்து கீழ்ப்படியவில்லையென்றால், நம் ஸ்தலத்திலுள்ள ‘கிறிஸ்துவின் சரீரம்’ ஏதாகிலும் ஒரு வகையில் நஷ்டமடையும்! கடைசிநாளில், அதற்கு நாமே பொறுப்பாளிகளாய் நிற்போம்! இந்த விஷயத்தில், நம்முடைய பொறுப்பை நாம் கவனமாய் எடுத்து கொள்ளவேண்டும்.... ஏனெனில், நமக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவின் பொறுப்பையும் தேவனுக்கு முன்பாக நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபிரெயர்.13:17).

தாழ்மை–கிறிஸ்துவின் சரீரத்தின் பிரதான அடையாளம்

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்கு சிங்காசனம். இதைவிட மேலாய் நீங்கள் எனக்கு ஒரு தங்கும் ஸ்தலத்தை கட்டமுடியுமோ? ஆனால், ***தாழ்மை கொண்டு தன் இருதயத்தில் நொறுங்குண்டு*** *என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நான் கிருபையாய் கண்டு, அவனே என்னுடைய வீட்டை கட்டுவதற்கு உதவி செய்வேன்" (ஏசாயா.66:1,2-விரிவாக்கம்).*

முதல் கிறிஸ்துவின் சரீரம், இயேசுவின் மானிட சரீரமாய் 33½ ஆண்டுகள் இந்த பூமியில் வாழ்ந்தார். ஆகவே இன்று கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் இருக்கும் நாம், இந்த பூமியில் ஒரு மானிடனாய் இயேசு வாழ்ந்து முன்வைத்த மாதிரியையே, நாமும் பின்பற்றவேண்டும். அவர் ஜீவித்த அதே கோட்பாட்டின்படி, நம் ஜீவியத்திலும் ஊழியத்திலும் கொண்ட எல்லா பகுதிகளிலும் வாழவேண்டும்! கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அவயவமாய் இருக்கும் ஒவ்வொருவரும், இயேசுவையே எல்லாவற்றிற்கும் மாதிரியாய் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறாக நாம் அவரோடு இணைந்து ஐக்கியமாய் செய்யமுடியாத யாதொன்றையும் ஒருபோதும் செய்யவோ அல்லது பேசவோ கூடாது!

ஒரு மானிட சரீரத்தில் இயேசு வந்த போது, அவர் செய்த முதலாவது செயல் "தன்னை தாழ்த்தியதுதான்". எனவே, இயேசுவின் மாதிரியை பின்பற்றுவதற்கு, இதிலிருந்துதான் நாமும் துவங்க வேண்டும்:

- **தாழ்மை படி 1–** *இயேசு, தான் தேவனாய் இருந்த சமநிலையை விட்டுவிட்டு தன்னை தாழ்த்தி ஒரு மனிதனாய் வந்தார்!*
- **தாழ்மை படி 2 –** *ஒரு மனிதனாய் இயேசு தன்னை தாழ்த்திய பிறகும், அடுத்த படியாக எல்லோருக்கும் 'வேலைக்காரனாய்' மாறினார்!*
- **தாழ்மை படி 3 –** *இன்னும் அதிகமாய் இயேசு தன்னை தாழ்த்தி ஒரு வேலைக்காரனுக்கும் கீழாய் சென்று, அவமானத்திற்குரிய மரணத்தை தெரிந்து கொண்டு, கள்ளர்களோடு சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார்!*

இந்த மூன்று படிகளும், பிலிப்பியர்.2:5-8 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. இதுவே, கிறிஸ்தவ ஜீவியத்தின் 3 இரகசியங்களாகும்: தாழ்மை, தாழ்மை, தாழ்மை! இந்த 3 இரகசியங்களை நாம் கற்று கொள்ளாவிட்டால், தேவனுடைய நோக்கத்தை நம் ஜீவியத்தில் ஒருபோதும் நிறைவேற்றிடமுடியாது. ஆகவே நம் கண்கள் எப்போதும் இயேசுவை நோக்கி இருந்தால், நாம் ஒருக்காலும் பெருமை அடைந்திட மாட்டோம்! ஒரு பாமாலையில் நாம் பாடுவதைப்போல்:

மகிமையின் பிரபு மரித்தார்! மரித்த அந்த
ஆச்சரியமான சிலுவையை உற்று நோக்கினேன்.
அது தந்த ஐசுவரிய ஆதாயத்தை,
நான் எண்ணும்படி துணிந்தேன்.
ஆ, அது இலாபமல்ல, அது நஷ்டமே!
ஆம், என் எல்லா பெருமையின் மீதும்
சிலுவை கொட்டிய நிந்தையை கண்டேன்!

நாம் இயேசுவை நோக்கி பார்ப்பதிலிருந்து விலகி மற்றவர்களைக் கண்டு, அவர்களோடு நம்மை ஒப்பிடுவோமென்றால், அன்று பேதுரு கடலில் மூழ்கியதுபோலவே, நாமும் **பெருமைக்குள் மூழ்கிவிடுவோம்!** (மத்தேயு.14:30). பெருமை, ஜனங்களை நரகத்திற்கு அனுப்புகிறது! தேவனை நம்முடைய சத்துருவாய் மாற்றுகிறது! (1பேதுரு.5:5). முடிவில், நம் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்து விடுகிறது! ஒரு காலத்தில் தங்கள் தேசங்களில் தேவனுடைய தீர்க்கதரிசிகளாய் மாற வேண்டிய அருமையான வாலிப சகோதரர்கள், தொடர்ந்து தாழ்மையில் தங்கியிராதபடியால், பெருமை அவர்களை அழித்துவிட்டது! தேவனோ, தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே தன் கிருபையைத் தருகிறார்!

"உனக்கு உண்டாயிருக்கிறவைகளில், நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நான் பெற்றுக்கொண்ட அனைத்துமே தேவனுடைய இலவசமான ஈவுகளேயாகும்! ஆகவே, இனியும் நீங்கள் யாராயிருந்தாலும் அல்லது எவைகளை வைத்திருந்தாலும், ஒருபோதும் மேன்மைபாராட்டாதிருங்கள்" (1கொரி.4:7 - Living).

"ஆவியில் ஏழையாய் இருப்பவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தங்களை எவ்விதத்திலும் முக்கியமற்றவர்கள் என மதிப்பிட்டபடியால், பரலோக ராஜ்ஜியம் அவர்களுக்குச் சொந்தம்!" (மத்தேயு.5:3 - Amplified)

இதுபோன்ற ஆவிக்குரிய ஏழ்மையில் நம் ஜீவகாலமெல்லாம் வாழ்ந்து விட்டால், இந்த பூமியில் ஒரு 'மகிமையான ஜீவியம்' வாழ்வது மாத்திரமல்லாமல், முடிவாக தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் "ஓர் சம்பூர்ண பிரவேசத்தையும்" அடைவோம்!

தேவனிடத்தில் எவ்வித பட்சபாதமும் இல்லை! அவர் நம்முடைய ஊழிய சாதனைகளைக் கொண்டு திருப்தியாவதில்லை. "பெருமையுள்ள எல்லோரையும் அவர் எதிர்த்து நிற்கிறார்! தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே கிருபையைத் தருகிறார்!"

யூதாஸ்காரியோத்து, அனனியா, சப்பீராள் ஆகிய இவர்களின் பாவங்கள் பகிரங்கமாக்கப்பட்டது! ஏனென்றால், தேவன் வல்லமையாய் கிரியைச் செய்து கொண்டிருந்த அவருடைய ஜனத்தாரோடு, இவர்களும் ஐக்கியத்தை நாடினார்கள் என்ற காரணமேயாகும்!

அதுபோலவே, மாய்மாலமும் பெருமையும் கொண்ட சகோதரர்கள் "ஒரு வல்லமையான சபையில்" சேர்ந்து கொண்டால், சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ அவர்களையும் தேவன் வெளியரங்கமாக்கி விடுவார்!

ஏனென்றால், தேவன் தம்முடைய சபையைத் தொடர்ந்து சுத்திகரித்துக் கொண்டே இருக்கிறார். சிலசமயங்களில், ஒரு தலைவனிடத்தில் காணப்படும் மாய்மாலத்தையும் பெருமையையும் கூட, தேவன் நீண்டகாலமாய் காத்திருந்து வெளிப்படுத்துகிறார்! ஆனால் எப்படி இருந்தாலும் கடைசியில் வெளிப்படுத்தியே தீருவார்.

ஆனால், ஒருவன் தன் அந்தரங்கத்தை தொடர்ச்சியாய் நியாயந்தீர்த்து, மனம் புண்படாமல், மற்றவர்களிடமிருந்து **திருத்துதலை ஏற்றுக்கொள்ள** மனதுடைய ஒருவராகிலும், கர்த்தரை விட்டு வீழ்ச்சி அடைவதில்லை!

அதிகாரங்களுக்கு அடங்கியிருத்தல் வேண்டும்

ஒருவன், ஒரு சபையின் பங்காக இருப்பதற்கு தெரிந்து கொண்டால், அந்த சபையின் மூப்பர்களுக்கு 'சபைக்குரிய விஷயங்கள் யாவற்றிற்கும்' அடங்கியிருக்கவேண்டும். மற்ற விஷயங்களில், அவன் தன் மூப்பரை ஆலோசிக்க தேவையில்லை. ஆகிலும் ஒரு மூப்பன் தன் ஜீவியத்தின் மூலமாகவும், ஊழியத்தின் மூலமாகவும் அந்த சகோதரனின் நம்பிக்கைக்கு பாத்திரமாயிருந்தால் அவரிடம் மற்ற ஆலோசனை களையும் கேட்கலாம். ஒரு பக்தியுள்ள தலைவன் தனது அதிகாரத்தை, ஒரு தகப்பன் "தன் பிள்ளைகளை அபாயங்களிலிருந்து காப்பதற்கு" ஒப்பாகவே பயன்படுத்தி, அவர்களை நல்ல பாதையில் நடத்துவான். தலைவர்கள், தங்கள் மந்தைக்கு உதவும்படி.... தேவையானால், எந்த தியாகமும் செய்வதற்கு விருப்பம் கொண்டவராயிருக்கவேண்டும்.

மேலும் தங்கள் சொந்த ஸ்தல சபைக்கு வெளியே, மூப்பர்களுக்கு "எந்த பொறுப்பும் இல்லை" என்பதை நினைவுகூர வேண்டும். இருப்பினும், மற்ற சபையிலுள்ள மூப்பர்கள் தாங்களாகவே ஏதேனும் உதவி கேட்டால் மாத்திரமே அவ்வாறு செய்யலாம். ஆகவே, நீங்கள் வேறொரு சபைக்கு போகும்போது, அங்குள்ள ஸ்தலசபையிலுள்ள

மூப்பர்களின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்பவராயிருக்க வேண்டும். வேறொரு சபையிலுள்ள விஷயங்கள் எதுவுமே உங்களுக்கு தெரியாவிட்டால்.... அவர்கள் என்ன செய்யவேண்டும்? அல்லது என்ன செய்யக்கூடாது? போன்ற யாதொரு ஆலோசனைகளும் கூறாமல் இருப்பதே நல்லது. ஏனென்றால், அதுபோன்ற புத்திகூறுதல் பெரிய குழப்பங்களை ஏற்படுத்தமுடியும்.

எனவே உங்கள் சொந்த ஸ்தல சபையிலுள்ள எல்லையை மாத்திரமே நீங்கள் உணர்ந்திருக்கவேண்டும்! ஒருவேளை தேவன் மற்றொரு சபையின் மீது உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருந்தால், அச்சமயங்களில்கூட, அந்த சபை மூப்பர்களால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதாயிருக்க வேண்டும்!

சபை மூப்பர்கள், சபையை ஸ்தாபித்து அதற்கு மூப்பர்களை நியமித்த அப்போஸ்தல அதிகாரத்திற்கு அடங்கியிருந்தல் வேண்டும். ஒரு மூப்பனை நியமித்த அப்போஸ்தலனாயிருப்பவருக்கு, அவரை மூப்பர் ஸ்தானத்திலிருந்தே 'அவசியமானால் நீக்குவதற்கும்' அதிகாரம் உண்டு.

அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள்:

நம் தனிப்பட்ட ஜீவியம் "கிறிஸ்துவின் மீது மாத்திரமே" அஸ்திபாரம் போடப்பட்டிருக்க வேண்டும் (1கொரி.3:11). ஆகிலும் சபையின் அஸ்திபாரமோ "அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களோடு கிறிஸ்துவை மூலைக்கல்லாய் கொண்டு" போடப்படுகிறது (எபேசியர்.2:19,20). கிறிஸ்து வானத்திற்கு மேலாய் எடுத்துக் கொள்ளப்பட்டபிறகும், சபையில் அப்போஸ்தலர்களை நியமனம் செய்தார் (எபேசியர்4:10,11). சபைக்கு கிறிஸ்து: அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் ஆகிய புருஷர்களை வரங்களாய் தந்திருக்கிறார் (எபேசியர்.4:11). இவர்களில் அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும், போதகர்களும் முதல் மூன்று தகுதிக்குள் வருகிறார்கள் (1கொரி.12:28). இருப்பினும், வரங்கள் பெற்ற இந்த புருஷர்கள், எல்லா சாதாரண விசுவாசிகளும் சீர்பொருந்தப்படுவதற்கே அழைக்கப்பட்டு, அவர்கள் எல்லோரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை கட்டுவதற்கே முன் நிற்கிறார்கள் (எபேசியர்.4:12). ஆகவே, கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும், கிறிஸ்துவின் சரீரத்தை கட்டுவதற்கு பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்கள்!

ஒரு அப்போஸ்தலன் ஒரு குறிப்பிட்ட பணிக்காக "தேவனால் அனுப்பப்பட்டவனாய்" இருக்கிறான்!

புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறபடி, ஒரு அப்போஸ்தலனுடைய முக்கிய பணிகள்:

1. அவன் சபைகளை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்துகிறான் (அப்.13-19).
2. அவன், ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை நியமிக்கிறான் (அப்.14:23; தீத்து.1:5).
3. அவன், மூப்பர்களுக்கு ஒரு தகப்பனாயிருக்கிறான் (1கொரி.4:15).
4. அவன், சபைகளை உபதேச ரீதியில்! நடைமுறை விஷயங்களில்! வழிகாட்டுகிறான் (அப்.15:6-29;அப்.6:3).
5. சபைகளில் பிரச்சனை வரும்போது, ஜனங்களை கண்டித்து ஒழுங்குபடுத்துகிறான் (1கொரி.1:11; 1கொரி.5:4,5,13; 2கொரி. 13:2).
6. அவன், சர்வாதிகாரியான மூப்பர்களிடமிருந்து விசுவாசிகளைப் பாதுகாக்கிறான் (1தீமோ.5:20; 3யோவான்.9).
7. அவன், சபைகளுக்கு நிருபங்கள் எழுதி எச்சரித்து, வழிநடத்து கிறான்! (இதைப்பவுல் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தார்).

யார் மூலமாய் தேவன் தம்முடைய சபைகளை ஸ்தாபிக்கிறாரோ, அவர்களுக்கே கர்த்தர் அப்போஸ்தல அதிகாரத்தைத் தருகிறார். ஆகிலும், ஒரு அப்போஸ்தலன் தன் அதிகாரத்தை எந்த விசுவாசிகள் மீதும் திணிக்கமாட்டான் (2கொரி.1:24). சபைகள், தங்கள் சொந்த பாதுகாப்பிற்கு மகிழ்ச்சியோடும், விருப்பத்தோடும் ஒரு அப்போஸ்தலரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்!

தேவனுடைய ஆதி தீர்மானமாய் இருந்ததெல்லாம், ஒவ்வொரு சபையும் "அப்போஸ்தல தீர்க்கதரிசிகளுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படவேண்டும்" என்பதுதான் (எபேசியர்.2:20).

ஒரு தீர்க்கதரிசியாயிருப்பவன், ஜனங்களுக்கு 'அப்போதுள்ள தேவையை' பேசுவதற்கு, தேவனிடமிருந்து தெளிந்த பகுத்தறிவை பெற்றவனாயிருப்பான். மேலும், அவன் அச்சமின்றி தேவனுடைய வார்த்தையை பேசி, மனதுருக்கம் கொண்டு தேவஜனங்களை மனந்திரும்புதலுக்குள் நடத்துவான் (அப்.15:32). ஒரு தீர்க்கதரிசியின் ஊழியம் சவாலிடுவதாயும்! பக்திவிருத்தி அடையச் செய்வதாயும்! ஜனங்களைக் கட்டுவதாயும்! இருக்கும் (1கொரி.14:3). ஜனங்கள் ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேட்கும்போது, அவர்களுடைய இருதயம் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரியும்

(லூக்கா.24:32). அதன் விளைவாய், ஜனங்கள் தங்களுடைய மறைவான பாவங்களைக் கண்டு "மெய்யாகவே தேவன் இங்கு இருக்கிறார்" எனவும் கூறுவார்கள் (1கொரி.14:25).

சுவிசேஷகர்கள், *பாவிகளை கிறிஸ்துவிடத்திலும், பின்பு சபைக்கும் கொண்டு வருவார்கள்!*

மேய்ப்பர்கள், *தங்கள் சபை விசுவாசிகளை பராமரித்து, ஆலோசனைக்கூறி போஷிப்பார்கள்.*

போதகர்கள், *தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய 'ஆழமான சத்தியங்களை' எல்லா சபைகளுக்கும் சென்று போதிப்பார்கள்.*

அந்தந்த சபையை மூப்பர்கள் நடத்துவார்கள்

பழைய உடன்படிக்கையின் கீழ், இஸ்ரவேலில் 'ஒரே ஒரு பிரதான ஆசாரியர்' அவர்களுக்கு ஆவிக்குரிய அதிகாரம் கொண்டவரா யிருந்தார். ஆனால், புதிய உடன்படிக்கையில் ஒரு சபை **'குறைந்தபட்சம் இரண்டு மூப்பர்களால்'** *நடத்தப்படவே தீர்மானித்துள்ளார். ஒரு குடும்பத்தில், ஒரு தகப்பனை மாத்திரமல்ல, ஒரு தகப்பனையும் ஒரு தாயையும் தேவன் நியமனம் செய்து, அந்த குடும்பத்தில் ஒரு சமநிலையான தலைமைத்துவத்தை ஏற்படுத்தியுள்ளார். அதுபோலவே, ஒரு ஸ்தல சபையை நடத்த 'ஒரு பன்மைக்குட்பட்ட மூப்பர்களை' தேவன் நியமனம் செய்கிறார். ஒரு சபையும் 'பரலோக குடும்பமாய்' இருக்கிறபடியால், அதன் தலைமைத்துவமும் ஓர் சமநிலையுடையதாய் இருக்கவேண்டும்.*

இதுதான் புதிய உடன்படிக்கையின் மாதிரியாய் இருந்தாலும், இன்றுள்ள அநேக சபைகளில் இது காணப்படவில்லை! நாம் அதிகமாய் காண்பதெல்லாம்:

i. *இன்றுள்ள அநேக ஸ்தாபனங்களில், ஒரு பிஷப் அல்லது, சூப்பரிண்டெண்ட் அல்லது ஒரு போப் ஆகிய அதிகப்பட்ச வாக்குப்பெற்று தேறியவர்களால் அதிகாரம் திணிக்கப்படுகிறது! இவர்கள், பெரிய பெரிய கம்பெனிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குனர்களைப்போல்* (Directors) *இருக்கிறார்கள்.*

ii. *அல்லது, சுயாதீன சபைகளாய் இருக்கிறார்கள்! அவர்கள் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை, அவர்களே தங்களுக்கு சொந்தமாய் பாஸ்டர்களை நியமித்துக் கொள்கிறார்கள். இதுபோன்ற சபைகள், தனியார் கம்பெனிகளில், தங்கள் விருப்பத்தின்படி தேர்ந்து, நியமனம் செய்வதுபோல 'மேனேஜர்களை' நியமிக்கிறார்கள்!*

இந்த இரண்டு மாதிரிகளுமே, புதிய ஏற்பாட்டில் காணப்படாத 'மனுஷீக தோன்றலே' ஆகும்! மற்ற எல்லா பகுதிகளிலும் புதிய உடன்படிக்கையை பின்பற்ற விருப்பம் கொண்ட அநேகர், புதிய ஏற்பாட்டின் 'சபையின் மாதிரியை' பின்பற்ற ஆர்வம் கொள்ளவில்லை. இதனிமித்தமாய், அவர்கள் "தேவனுடைய சிறந்ததை" இழக்கிறார்கள்!

ஸ்தல சபைகளைக் கட்டுவதற்கு, புதிய ஏற்பாடு "தேவனுடைய சிறப்பான மாதிரியை" காண்பிக்கிறது. ஆனால் மூப்பர்களை நியமனம் செய்யும்படியான ஒரு அப்போஸ்தலன் அங்கு இல்லையென்றால், அங்குள்ள விசுவாசிகள் 'மனுஷீக முறையில்' தேவனுடைய பணியை செய்திட திருப்தி கொண்டவர்களாய் மாறிவிடுவார்கள்!

ஒவ்வொரு தேசத்திலும், அப்போஸ்தலர்கள் அபூர்வமா யிருப்பதற்கு காரணம், இதுபோன்ற ஊழியத்திற்கு 'ஒரு விலைக்கிரயம் கொடுக்க ஆயத்தமுள்ள' விசுவாசிகள் வெகு குறைவாயிருப்பதையே தேவன் காண்கிறார்.

நம் எல்லைகளில் தங்கியிருத்தல் வேண்டும்

ஒவ்வொரு மூப்பருக்கும், அவருடைய ஊழியத்திற்கென்று தேவன் ஒரு எல்லையை அவருக்கென்று வைத்துள்ளார். தேவன் நியமனம் செய்த அந்த எல்லைக்குள் அவர் தங்கியிருக்கும் வரை, தேவன் அவரை வல்லமையாய் ஆதரிப்பார்.

இதை பவுல் மிகத்தெளிவாக 2கொரிந்தியர்.10:13-16 வசனங்களில் "எங்களைப் பொறுத்தவரையில், **தேவன் எங்களுக்குப் பகிர்ந்த அளவு பிரமாணத்தின்படியே உங்களோடு தங்கியிருந்தோம்!** *எங்கள் ஊழியமும் அந்த அளவிற்குள் அடங்கும். நாங்கள் உங்களிடத்தில் வந்தபோது, நீங்கள் இருந்த எல்லைக்குள் இருந்தோமே அல்லாமல், உங்களை விட்டு அளவிற்கு மிஞ்சி வெளியே போகவில்லை.....* **தேவன் எங்களுக்கென்று வைத்த அளவை கடந்து,** *மற்றவர்களுடைய எல்லைக்குள் செய்யப்பட்டவைகளைக் குறித்து நாங்கள் மேன்மை பாராட்டுவதில்லை! அதற்குப் பதிலாக, உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது, நாங்களும் உங்களிடம் பெரிய கிரியைகளைச் செய்வோம்!* **ஆகிலும் தேவன் எங்களுக்குத் தந்துள்ள அளவிற்குள் அடங்கியே எப்போதும் செய்திடுவோம்** *(TEV)" என வாசிக்கிறோம்.*

ஒரு மூப்பர், தேவன் அவருக்கென்று தந்த ஊழிய எல்லையைத் தாண்டி செல்லும்போது, அவர் தேவனுடைய ஊழியத்தில் குழப்பத்தையே கொண்டு வருவார். தேவன் அவருக்கு நியமித்த எல்லையை தாண்டிச் செல்லும்போது, தேவன் ஒருபோதும், எல்லைக்கு வெளியே செய்யப்பட்ட ஊழியத்தை ஆதரிக்க மாட்டார்.

இதை வேதாகமம் கூறும்போது "அடைப்பை (தேவன் அவனுக்கு நியமித்த எல்லையின் சுவரை) பிடுங்குகிறவனை பாம்பு கடிக்கும்" என கூறுகிறது (பிரசங்கி.10:8).

இது தொடர்பாக உசியா ராஜாவின் சம்பவங்கள் நமக்கு படிப்பினையைத் தருகிறது. உசியா, தன்னுடைய ஊழிய எல்லைக்குள் ஒரு ராஜாவாய் ஏராளமான நன்மைகளைச் செய்தான் (2நாளா.26:3-15). அவனுடைய எல்லைக்குள் மிகப்பெரிய ஆசீர்வாதங்களை தேவன் கட்டளையிட்டார். ஒரு ராஜாவாய் இருந்து, அவன் அடைந்த வெற்றிகள் அவனுக்கு **பெருமையைத் தந்தது!**

இப்போது அவன், தேவன் நியமனம் செய்த எல்லையைக் கடந்து 'ஒரு ஆசாரியனின் வேலையை' செய்யலாம் என துணிந்தான்! அவ்வாறு அவன் செய்தவுடன், தேவன் அவனை குஷ்டரோகத்தினால் தண்டித்து..... அவன் மரிக்கும்போது, ஒரு குஷ்டரோகியாகவே மரித்தான் (2நாளா.26:16-21). இதுவே நம் எல்லோருக்கும் ஒரு எச்சரிக்கையாயிருப்பதாக!

சவுல் ராஜாவும் ஒரு ராஜானாயிருந்து எல்லைக்குள் தங்கியிராமல் அவன் எல்லையைக் கடந்து வெளியே சென்று, அதே பிழையை செய்தான். ஆம், ஒரு ராஜானாய் தேவன் அவன் ஊழியத்தை ஆசீர்வதித்தப்படியால், **ஒரு ஆசாரிய ஊழியத்தையும் செய்திட** அவன் தீர்மானித்தான். அவ்வாறு அவன் செய்த உடனே, சாமுவேல் அவனிடம் 'அவனுடைய இராஜ்ஜியபாரத்தை, தேவன் அவனிடமிருந்து எடுத்து விட்டார்!' என அறிவித்தார் (1சாமு.13:8-14). இந்த பிழை, இன்றும் தொன்றுதொட்டு வருவது ஆச்சரியமாயிருக்கிறது.

ஆகவே, நம்முடைய சொந்த எல்லைக்குள் தங்கியிருப்பது தேவனுடைய பார்வையில் மிக முக்கியமாகும்! கட்டளை பிரமாணமான "உன் அயலானுக்கு தேவன் தந்த யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" என்ற பிரமாணம், ஊழியத்தை இச்சிப்பதற்கும் பொருந்தும்! "எல்லா இச்சைகளும், **விக்கிரக ஆராதனை!**" என (கொலோ.3:5) கூறுகிறது.

தேவன் ஏற்படுத்தித் தந்த இந்த ஒழுங்கை நாம் மீறினால் அல்லது அதற்கு அடங்கியிராவிட்டால், நாம் நிச்சயமாய் தேவனுடைய கிரியைக்கு குழப்பத்தை கொண்டு வருகிறவர்களாயிருப்போம்! ஆகவே, நாம் தேவனுக்குப் பயந்து அவர் நமக்குத் தந்த எல்லைக்குள் தங்கியிருப்போமாக! ஏனெனில் 'அந்த எல்லைக்குள் மாத்திரமே' நாம் தேவனை கண்டடைய முடியும்! (அப்.17:26,27).

அந்தந்த ஸ்தலசபைக்கு தரப்பட்ட சுயாதீனம்

எந்த ஒரு சபையும், மற்ற சபைகளுக்கு "ஒரு தலைமையகமாய்" மாறிவிடக்கூடாது. அப்போஸ்தலர்கள் நியமித்த சபைகள், ஆண்டவராகிய இயேசுவின் தலைமையின் கீழ் நேரடியாக சுயாதீனத்தை பெற்ற சபைகளாய் திகழ்ந்தன!

பழைய உடன்படிக்கையில், இந்த பூமிக்குரிய எருசலேம் நகரம், மார்க்க சம்மந்தமான அனைத்து கிரியைகளுக்கும், இஸ்ரவேலர்களுக்கு "தலைமையகமாய்" இருந்தது. இன்றுள்ள ஸ்தாபன சபைகளும், இந்த பூமியில் ஏதாகிலும் ஒரு இடத்தை தங்கள் தலைமையகமாய் கொண்டிருக்கிறார்கள்.

புதிய உடன்படிக்கையில், நாம் 'பரலோக மக்களாய்' இருக்கிற படியால், இந்த பூமியில் நமக்கு யாதொரு தலைமையகமும் இல்லை (கலா.4:26). அடையாள பூர்வ வித்தியாசம் என்னவெனில்: பழைய உடன்படிக்கையின்படியான, யூதர்களுடைய 7 கிளைகளை கொண்ட விளக்குத் தண்டு.... இப்போது, புதிய உடன்படிக்கையில் 7 தனித்தனி குத்து விளக்குகளாய், கிறிஸ்து அதன் நடுவில் இருக்கிறார்! (வெளி.1:11-20).

ஆகவேதான், இந்தபூமியில் பவுல் ஸ்தாபித்த எந்த ஒரு சபையும் "எருசலேமையோ, அல்லது அந்தியோகியாவையோ" தலைமையகமாய் கொண்டிருக்க பவுல் மறுத்துவிட்டார். இந்த அவரது செயல், ஆதி சபைகள் ஒரு செத்த ஸ்தாபனமாய் மாறாமல் இருப்பதற்கு உதவியது!

> இந்த சபைகள் அனைத்தும், கிறிஸ்துவின் தலைமைத்துவத்திற்கு கீழாகவே மாத்திரமே இருந்தன. ஒவ்வொரு சபையும், அதன் சொந்த மூப்பர்களால் கண்காணிக்கப்பட்டு, ஒவ்வொரு சபையும் பொருளாதார ரீதியில் சுயாதீனம் கொண்டவர்களாகவே இருந்தன.

அங்கு 'டயோசீஸ்' என அழைக்கப்படும் பல சபைகளை ஆளுகைச் செய்யும் பிஷப்புகளோ அல்லது ஆர்ச் - பிஷப்புகளோ இல்லை! இவை அனைத்தும், இன்றைய பாபிலோனிய கிறிஸ்தவத்தாரில் மாத்திரமே காணப்படுகிறது. நாம், புதியஉடன்படிக்கை மாதிரியை பின்பற்றினால், ஒரு சபையிலுள்ள கறை, மற்ற சபைகளுக்கு பரவிட முடியாது! இதற்கு நேர்மாறாக, இன்றைய ஸ்தாபன சபைகளில், ஒட்டுமொத்தமாய் கறைப்படுகிறார்கள்!

தலைவர்களுக்குள் காணப்படும் ஐக்கியம், சபைகளுக்குள் காணப்படும் ஐக்கியம் எப்போதுமே "ஒருவருக்கொருவர் கொண்ட பரஸ்பர அன்பை" ஆதாரமாகக் கொண்டதேயாகும்! அவர்கள்

ஒருவருக்கொருவர் கொண்ட மதிப்பை பொருத்ததுமாகும்! இருப்பினும், அந்த ஐக்கியம் முற்றிலும் பொதுவான இலக்காய் கொண்டிருக்கும் "முற்றிலும் கிறிஸ்துவைப் போலாகும்" வாஞ்சைக் குரியதாகவே இருக்க வேண்டும்! இதைத் தவிர, அது ஒரு **"ஸ்தாபன ஐக்கியத்தை"** *ஸ்திரப்படுத்துவதாய் இருக்கக் கூடாது.*

தேவனுடைய போதனைகளை பழுதில்லாமல் பின்பற்ற வேண்டும்

அன்று **நோவா** *பேழையைக் கட்டிய முக்கியத்துவத்தைப்போல,* **மோசே** *கட்டிய ஆசரிப்பு கூடாரத்தைப்போல..... இன்று, சபையை கட்டும் பணி ஒரு மகா மேன்மையான பணியாய் இருக்கிறபடியால்..... அதைக் கட்டுவதற்கு கர்த்தரிடமிருந்து நமக்கு கிருபையும், ஞானமும் பெற்றிட மிகவும் அவசியமாயிருக்கிறது.*

"மலையிலே **உனக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே** *நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு! ஏனென்றால்,* **அவைகள் பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது!** *என தேவனால் எச்சரிக்கப்பட்டார்!" (எபி.8:5).*

பேழையும், ஆசரிப்பு கூடாரமும், மனுஷன் கட்டும்படி தேவன் கட்டளையிட்ட இரண்டு வித்தியாசமான வரைபடமாகும்! அதன் சரியான அளவின் தகவலை நோவாவிற்கும், மோசேக்கும் தேவன் தந்தார்.

ஆனால் நோவாவும் மோசேயும், தேவன் தந்த வரைபடத்தை, அவருடைய புள்ளி விபரத்தின்படி இல்லாமல், சில புத்திகூர்மை கொண்ட ஜனங்களாலோ, அவர்களின் சொந்த புத்திகூர்மையை வைத்தோ மாற்றிவிடக்கூடாது என எச்சரிக்கப்பட்டிருந்தார்கள்.

> இவ்வாறு, அவர்கள் தேவனுடைய புள்ளி விபரங்களை, அப்படியே கீழ்ப்படிந்து செய்தபடியால், தேவனுடைய ஆசீர்வாதம் அவர்களின் கிரியை மேல் தங்கியது! அந்த ஆசரிப்பு கூடாரத்தின் மீது "தேவனுடைய மகிமை" வந்து இறங்கியது!

சபையை கட்டுகிற நாமும், இவைகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்!

6

மற்றவர்கள் பின்பற்ற உகந்த ஒரு தலைவன்

உயர்ந்த தரமுள்ள சபைகளைக் கட்டுவதற்கு, மிகச்சிறந்த தலைவர்களே தேவையாயிருக்கிறார்கள்.

“என்னை பின்பற்றுங்கள்!” என்றே இயேசு கூறினார் (லூக்.9:23).

“நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னை பின்பற்றுங்கள்!” என்றார் பவுல் (1கொரி.11:1; பிலி.3:17). பக்தியுள்ள ஒவ்வொரு மூப்பர்களும், **யாருக்கெல்லாம் பிரசங்கிக்கிறார்களோ அவர்களிடம் என்ன கூறவேண்டுமென** *பரிசுத்தாவியானவர் எதிர்பார்க்கும் ‘திராணியை’ பவுலின் வார்த்தைகளில் காண்கிறோம்.*

அனேக மூப்பர்கள், “என்னை பின்பற்றாதீர்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்” என்றே கூறுகிறார்கள். இது கேட்பதற்கு மிக தாழ்மையாய் தோன்றினாலும், அது அவர்களின் தோற்றுப்போன ஜீவியத்தை மூடி மறைக்கும் செயலாகவே உள்ளது. இவர்களின் கூற்று, மேலே கூறப்பட்ட பரிசுத்தாவியின் போதகத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்!

எந்த மூப்பர்கள் “நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதைப் போல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்!” என கூற முடிகின்றதோ, அவர்களை மாத்திரமே நாம் மதித்து பின்பற்ற வேண்டும்! துயரம் என்ன வென்றால், அதுபோன்ற மூப்பர்கள் நம் நாட்களில் அபூர்வமாகவே இருக்கிறார்கள்.

பவுல் மனம் மாறுவதற்கு முன்பாக, முற்றிலும் தோற்கடிக்கப் பட்டவராய் இருந்தார். இருப்பினும் தேவன் அவரை மாற்றி, அவர் பூரணராய் இல்லாவிட்டாலும், மற்றவர்கள் பின்பற்றக் கூடிய ஓர் மிகப்பெரிய **மாதிரியாய் உருவாக்கினார்** *(பிலி.3:12-14). இந்த உலகத்தில் உள்ள தலைசிறந்த கிறிஸ்தவன் கூட, பூரணத்தை நோக்கி இன்னமும் முன் செல்கிறவரே அல்லாமல், பூரணர் அல்ல!*

ஆகவே, கடந்த காலத்தில் நீங்கள் முற்றிலும் தோற்கடிக்கப்

பட்டவராய் இருந்தாலும், தேவன் உங்களையும், மற்றவர்கள் பின்பற்ற உகந்த ஓர் பக்தியுள்ள தலைவராய் மாற்றிட முடியும்.

தேவனுடைய ஜனத்திற்கு ஓர் தலைவனாய் இருப்பவர்கள் வாஞ்சிக்க வேண்டிய ஏழு குணாதிசயங்கள் உண்டு:

1. **நீங்கள், எளிதில் மற்றவர்கள் உங்களிடத்தில் வரும்படியான தாழ்மையுள்ளவராய் இருக்க வேண்டும்!**

   இயேசு, மற்றவர்கள் எளிதில் அவரை நெருங்கக் கூடிய தாழ்மையுள்ளவராய் இருந்தார் (மத்தேயு.11:29). எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் ஜனங்கள் அவரிடத்தில் எளிதாய் போக முடிந்தது. நிக்கொதேமு, இயேசுவின் வீட்டில் அவரை நடு இராத்திரியில் எளிதாய் சந்திக்க முடிந்தது! பொது இடங்களில், இயேசுவிடம் எந்த நேரத்திலும் யார் வேண்டுமானாலும் பேச முடிந்தது! **'இயேசுவின் தாழ்மையே'** *தரித்திரருக்கு சுவிசேஷத்தை ஆர்வமுடன் பிரசங்கித்திட தகுதிப்படுத்தியது (லூக்கா.4:18). தன் தவறை துரிதமாய் அறிந்து, அதற்காக உடனே மன்னிப்பு கேட்கக்கூடிய தாழ்மையுள்ளவராய் இருந்தார் பவுல் (அப்.23:1-5). இவ்வாறு, பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் பாராமல், தங்களைக்குறித்து யாதொரு 'மேன்மையான எண்ணமும்' இல்லாமல், தங்கள் தவறுகளுக்கு உடனே மன்னிப்பு கேட்டு* **எப்போதும் சாதாரண சகோதரர்களாய்** *நிலைத்திருக்கும் மூப்பர்களை மாத்திரமே நாமும் பின்பற்ற வேண்டும்!*

2. **நீங்கள், உங்களுக்காகவோ அல்லது உங்கள் ஊழியத்திற்காகவோ ஒருவரிடமும் ஒருபோதும் பணத்தை கேட்காதவராய்! எளிய வாழ்க்கை கொண்டவராய்! இருக்க வேண்டும்:**

   ஒருவேளை நீங்கள் பணத்தை வாங்கி இருந்தாலும், அதை பவுல் அவ்வப்போது வாங்கியதைப் போல 'மனப்பூர்வமான காணிக்கையாய்' இருந்திருக்க வேண்டும் (பிலி.4:16-18). ஆகிலும், பவுல் தன்னை விட ஏழையாய் இருந்த ஒருவரிடமும் அவ்வாறு பணம் பெற வில்லை! தன்னைவிட வசதியானவர்களிடமிருந்தே காணிக்கை களைப் பெற்றார். இயேசு தனக்காகவோ அல்லது தன் ஊழியத்திற் காகவோ யாரிடத்திலும் ஒருபோதும் பணம் கேட்டதில்லை. அவரைவிட அதிக ஆஸ்தி கொண்டவர்களிடமிருந்து மாத்திரமே காணிக்கைகளைப் பெற்றார் (லூக்கா.8:3). இயேசுவும், பவுலும் மிக எளிய வாழ்க்கை தரத்தை கொண்டிருந்தார்கள். இவ்வாறு, பணத்தின் மீதும் உலகப்பொருட்களின் மீதும் இயேசுவும் பவுலும் கொண்டிருந்த மனப்பான்மையுடைய மூப்பர்களையே நாமும் பின்பற்ற வேண்டும்!

3. நீங்கள், ஒரு தேவ மனிதன் என்ற சாட்சி பெற்றவராய் இருக்க வேண்டும்!

ஓர் பக்தியுள்ள, பரிசுத்தத்தின் மீது பேராவல் கொண்ட நேர்மையாளனாய் நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் உங்களுக்காக யாதொன்றையும் தேடாமல், உங்கள் நாவை அடக்கி வைத்திருப்பவராய் இருக்க வேண்டும் (யாக்கோபு.1:26, எபேசியர்.4:26-31). நீங்கள், தோல்வியடைந்தவர்களுக்கு இரக்கம் செய்கிறவராயும், உங்கள் ஜெபத்தையோ, உங்கள் உபவாசத்தையோ அல்லது உங்கள் ஈகையையோ குறித்து ஒருபோதும் பெருமை பாராட்டாதவராய் இருக்க வேண்டும் (மத்.6:1-18). கொஞ்ச வயதானவர்களோ அல்லது அதிக வயதானவர்களோ ஆகிய எல்லா ஸ்திரீகளிடமும் 'முழுமையான பரிசுத்தம் கொண்ட' சாட்சியுடையவராய் எப்போதும் இருக்க வேண்டும் (1தீமோ.5:2). இவ்வாறு தங்கள் ஜீவியத்தில் 'தேவ பக்தியின் நறுமணம் கொண்ட' மூப்பர்களை மாத்திரமே நாம் பின்பற்ற வேண்டும்!

4. நீங்கள், உங்கள் பிள்ளைகளை தேவ பக்தியின் வழியில் வளர்த்தவராய் இருக்க வேண்டும்!

நீங்கள், கிறிஸ்துவை பின்பற்றுகிறதைப் போலவே, உங்களுடைய பிள்ளைகளும் 'உங்களைப்' பின்பற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும். முதலாவது, தன் சொந்த பிள்ளைகளை தேவபக்தியில் நடத்தவில்லையென்றால், ஒரு சபையை முன் நடத்தும் தலைவனாய் இருந்திட முடியாது என பரிசுத்தாவியானவர் கூறுகிறார் (1தீமோ.3:4,5; தீத்து.1:6). வீட்டில் நம்முடைய பிள்ளைகளே நம்மை எப்போதும் காண்கிறபடியால், மற்றவர்களைவிட நம் பிள்ளைகளே நம்மை அதிகமாய் அறிந்திருப்பார்கள். வீட்டில், நாம் பக்தியான வழியில் வாழ்வதைக் காணும் அவர்களும், கர்த்தரை முழு இருதயமாய் பின்பற்றுவார்கள்! இவ்வாறு, பக்தியிலும், தாழ்மையிலும், எல்லா ஜனங்களையும் மதித்து நடப்பதிலும், தங்கள் பிள்ளைகளை வளர்த்த மூப்பர்களை மாத்திரமே நாம் பின்பற்ற வேண்டும்!

5. நீங்கள், தேவனுடைய முழு ஆலோசனைகளையும் அச்சமின்றி பிரசங்கிக்கிறவராய் இருக்க வேண்டும்!

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட எல்லாவற்றையும் பிரசித்தம் செய்கிறவராய், எந்த மனிதனையும் பிரியப்படுத்த விரும்பாமல், ஒவ்வொரு கட்டளைகளையும், ஒவ்வொரு வாக்குதத்தத்தையும் அறிவிப்பவராயும் இருக்க வேண்டும் (அப்போ.20:27, கலா.1:10).

நீங்கள் மெய்யாகவே, பரிசுத்தாவியினால் தொடர்ச்சியாக அபிஷேகம் பண்ணப்பட்டவராய் இருந்தால், இயேசுவைப் போலவும் பவுலைப்போலவும், உங்கள் செய்திகள் எப்போதும் 'சவால் நிறைந்ததும் உற்சாகம் தருவதாயும்' இருந்திருக்க வேண்டும்! இவ்வாறு, ஒரு மூப்பர் பேசும்போது **'தேவனுடைய அபிஷேகம்'** *அவரில் இருப்பதை நாம் உணர்ந்தால், அதுபோன்ற மூப்பர்களை மாத்திரமே நாம் பின்பற்ற வேண்டும்!*

6. **நீங்கள், ஸ்தல சபைகளை கிறிஸ்துவின் சரீரத்தின் பிரதிபலிப்பாய் இருக்கும்படி கட்டுவதற்கு பேரார்வம் கொண்டவராய் இருக்க வேண்டும்!**

ஜனங்களின் எல்லா பாவங்களிலிருந்தும் இரட்சிப்பதற்காக மாத்திரமே இயேசு வராமல், **அவருடைய ஜீவனை வெளிப்படுத்தும்** *ஓர் சரீரமாக 'அவரது சபையை கட்டுவதற்கும்' இயேசு இந்த பூமிக்கு வந்தார்! (மத்.16:18). அவ்வாறு எல்லா இடங்களிலும் கிறிஸ்துவின் சரீரமாய் செயல்படும் ஸ்தல சபைகளை ஸ்தாபிப்பதற்கே பவுல் பேரார்வம் கொண்டிருந்தார் (எபே.4:15,16). இந்த இலக்கை அடைவதற்கே, அவர் கடினமாய் பாடுபட்டார் (கொலோ.1:28,29). அதே இலக்கை முன்வைத்து ஸ்தல சபைகளை கட்டுவதற்கு வாஞ்சை நிறைந்த மூப்பர்களை மாத்திரமே நாம் பின்பற்ற வேண்டும்!*

7. **நீங்கள், 'உங்களைப் போன்ற தரிசனமும் ஆவியும் உடைய' குறைந்தது சில உடன் ஊழியர்களையாவது எழுப்பி இருக்க வேண்டும்!**

ஒரு தேவ பக்தியான மூப்பர், கர்த்தருடைய தூய்மையான சாட்சி, **அடுத்த சந்ததிக்கும்** *பாதுகாக்கப்பட எப்போதும் கரிசனை கொண்டவராய் இருக்க வேண்டும். இயேசுவால் எழுப்பப்பட்ட 11 சீஷர்களும் அவரது ஆவியை முழுமையாய் பருகி, அவருடைய உயர்ந்த தரத்தின்படி வாழ்ந்து, கர்த்தரின் பணியை சீரும் சிறப்புமாய் மேற்கொண்டார்கள். பவுல் எழுப்பிய தீமோத்தேயும், தீத்துவும்,* **தாழ்மையின் ஆவியில்** *வாழ்ந்தவர்களாய், ஊழியத்தை சுய நலம் ஏதுமில்லாமல், தொடர்ச்சியாய் செய்தார்கள் (பிலி.2:19,21; 2கொரி.7:13-15). இவ்வித தரம்கொண்ட, சில உடன் ஊழியர்களை யாவது உருவாக்கிய மூப்பர்களை மாத்திரமே நாம் பின்பற்ற வேண்டும்!*

நீங்கள் ஒரு மூப்பராய் தேவனால் அழைக்கப்பட்டிருந்தால், அவர் தம்முடைய **பரிசுத்தாவியினால்** *உங்களை தொடர்ச்சியாக அபிஷேகித்திட ஜெபம் செய்திட வேண்டும். அதன் மூலமாய், மேலே குறிப்பிடப்பட்ட எல்லா திவ்விய தரங்களையும் உடையவர்களாய், மற்றவர்கள் பின்பற்ற உகந்த ஓர் மாதிரியாய் நீங்கள் மாறிட வேண்டும்!*

7

சிறந்த தலைவர்களின் சில குணாதிசயங்கள்

கீழ்காணும் சில தரங்களை நீங்கள் வாஞ்சித்து பெறும்போது, பிறர் உங்கள்மீது நம்பிக்கை கொண்டிருப்பார்கள்! உங்களிடம் அவர்கள் காண விரும்புவது:

- *நீங்கள் மனுஷருடைய அங்கீகாரத்தைத் தேடாமல் (பக்தியுள்ள புருஷர்களின் அங்கீகாரத்தைக்கூட தேடாமல்) தேவனுடைய அங்கீகாரத்தைத் தேடவேண்டும்!*
- *உங்களின்* **முதல் பிரதானம்** *தேவனுடைய இராஜ்ஜியமும் அவருடைய நீதியுமாயிருக்க வேண்டும்!*
- *நீங்கள் முழுவதும் ஆண்டவராகிய* **இயேசுவின் சீஷனாய்** *இருக்க வேண்டும்!*
- *உங்களிடம் தேவன் மீது கொண்ட அன்பு பற்றி எரிய வேண்டும்!*
- *நீங்கள் மெய்யாகவே தேவனுடைய மகிமைக்கும், ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திற்கும் அக்கறை கொண்டவராயிருக்க வேண்டும்!*
- *நீங்கள்* **தாழ்மையும் நொறுங்குண்ட ஆவியும்** *பெற்றிருத்தல் வேண்டும்!*
- *நீங்கள் தேவபக்தியை கவர்ச்சியுள்ளதாய் கொண்டிருக்க வேண்டும்!*
- *நீங்கள் சபையை, பரிசுத்தத்தில் நிலைநிறுத்த வைராக்கியம் கொண்டவராயிருக்க வேண்டும்!*
- *நீங்கள் சத்தியத்திற்கு தைரியமாய் இருக்கவேண்டும்!*
- *உங்கள் தீர்மானத்தின்படி வாழ்ந்து, நீங்கள் பிரசங்கித்த ஒவ்வொன்றையும் கடைபிடித்தவராயிருக்கவேண்டும்!*
- *நீங்கள் நிதானத்தை இழக்காதவரும், ஒருபோதும் 'மனசு - சரியில்லாது' போகாதவராயிருக்க வேண்டும்!*

- *நீங்கள் வார்த்தையையும், கிரியைகளையும் நேசிப்பவராய் இருக்க வேண்டும்!*
- *நீங்கள் எல்லா ஜனங்களிடமும் கொண்ட நடவடிக்கைகளில்* **மன துருக்கம்** *கொண்டிருக்க வேண்டும்!*
- *உங்கள் சுபாவத்தில் இயற்கை உடையவராய், எவ்வித "கற்பனை பரவசம்" அற்றவராயிருக்க வேண்டும்!*
- *உங்களைவிட மற்ற ஒருவரையும் 'குறைவாய்' எண்ணாதவர்களாய் இருக்கவேண்டும்!*
- *உங்களின் நடவடிக்கைகள் ஒரு சாதாரண சகோதரனாய் இருக்க வேண்டும். ஒரு 'பெரிய சகோதரராக' இருக்கக் கூடாது!*
- *உங்களிடம் எல்லா நேரங்களிலும் எளிதில் நெருங்கி வரக்கூடியவராய் இருக்கவேண்டும்!*
- *உங்கள் அன்பார்ந்த நட்பால், உங்களிடம் வரும் ஜனங்கள் 'ஒரு குடும்பத்திற்குள்' வருவதைப்போல் உணர வேண்டும்!*
- *உங்கள் வீட்டில் 'உபசரிப்பு தன்மை' உடையவராயிருக்க வேண்டும்!*
- *நீங்கள் பக்தியுள்ளவர்களாய் மாத்திரமல்ல, ஒரு தகப்பனின் தன்மையும் கொண்டிருக்க வேண்டும்!*
- *உங்கள் சகோதர சகோதரிகளின் 'நித்திய நன்மையை' எந்நாளும் நாடுகிறவராயிருக்க வேண்டும்!*
- *உங்கள் சபையிலுள்ள அனைவரிடமும் முற்றிலும் பாரபட்சமற்ற மனதுடையவராயிருக்க வேண்டும்!*
- *உங்கள் குடும்ப தொடர்பாகவோ அல்லது சமுதாய அல்லது வேறு எதனிமித்தமாவது, யாரிடமும் 'முன் பதித்த' நல்லெண்ணமோ அல்லது தீய எண்ணமோ அல்லது தப்பான எண்ணமோ கொண்டிருக்கக்கூடாது!*
- *இளைஞனோ, வயோதிபனோ, ஒரு பிள்ளையோ அல்லது வேலைக் காரனோ ஆகிய யாவருடைய கௌரவத்தையும் பாதுகாக்கிற வராயிருக்க வேண்டும்!*
- *எல்லோரிடமும், குறிப்பாக உங்களைவிட வயது சென்றவரிடமும் நீங்கள் மரியாதையாக பேச வேண்டும்!*
- *வாலிபர்களுக்கும், பிள்ளைகளுக்கும் குறிப்பாக ஏழைகளுக்கும் அக்கறை கொண்டவராயிருக்க வேண்டும்!*
- *உங்கள் சகோதர சகோதரிகளை, உங்கள் இருதயங்களில் தாங்கி யிருக்க வேண்டும்!*

- உங்கள் அனுபவத்தின்மீது இல்லாமல், தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உங்கள் அதிகாரம் இருக்க வேண்டும்!
- உங்கள் சிந்தையை அவசரப்பட்டு கூறாதவராய், உங்கள் பேச்சில் கவனம் கொண்டிருக்க வேண்டும்!
- நீங்கள் கிறிஸ்துவைப்போல் வளர்வது எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும்!
- உங்கள் சொந்த காரண யுக்தியின்படி அல்லாமல் பரிசுத்தாவியை சார்ந்து தீர்மானங்கள் எடுக்க வேண்டும்!
- உங்களிடத்தில் 'தனிப்பட்ட நம்பிக்கையில்' கூறப்பட்ட எல்லா விஷயங்களுக்கும் 'அதை உங்கள் மனைவியிடம் கூட கூறாத' உண்மை உடையவராயிருக்க வேண்டும்!
- சொன்ன வார்த்தையை கைக்கொள்ளும் முழு நம்பகத்திற்குரியவரா யிருக்க வேண்டும்!
- கொடுத்த பொறுப்பை 'அப்படியே' நிறைவேற்றுகிறவராய் இருக்க வேண்டும்!
- சத்தியத்தை ஜனங்களிடம், 'அன்போடு நேர்மையுடன்' பேசுகிற வராயிருக்க வேண்டும்!
- ஒருவரையும் வஞ்சியாதவராயிருக்க வேண்டும்!
- எல்லா மனிதரிடமும் பொறுமையுள்ளவராயிருக்க வேண்டும்!
- நீங்களும் மானிட பெலவீனம் கொண்ட 'ஒரு மண்பாண்டம்' என்ற உண்மையை மறைக்காதவராய் இருக்க வேண்டும்!
- கடினமாய் இராமல், இணங்கி, மாற்றிக்கொள்ளவும் விருப்ப முள்ளவராயிருக்க வேண்டும்!
- உங்கள் ஆள்த்துவத்தைக்கொண்டோ அல்லது உங்கள் வரங்களைக் கொண்டோ, யார் மீதும் எந்த கட்டாயமும் செலுத்தாதவர்க ளாயிருக்கவேண்டும்!
- ஒருவரிடமும் உங்கள் **புத்திமதியை திணிக்காமல்,** உங்களுக்கு மறுப்பதற்கும் ஜனங்களுக்கு சுயாதீனம் கொடுத்திருக்க வேண்டும்!
- நீங்கள் அப்பியாசிப்பதை, மற்றவர்களும் பின்பற்றுவதற்கு அதை 'ஒரு பிரமாணமாய்' மாற்றாது இருக்கவேண்டும்!
- ஒரு கூட்டத்தை அல்ல, தனிநபர் மீது அக்கறை கொண்டவராயிருக்க வேண்டும்!

- *பிறருடைய பிரச்சனைகளை அனுதாபத்தோடும் மெய்யான அக்கறை யோடும் அணுகுகிறவர்களாயிருக்கவேண்டும்!*
- *ஜனங்களின் கடந்தகால தோல்விகளை தொடர்ந்து ஞாபகப்படுத்து கிறவராயிருந்திடக்கூடாது!*
- *பிறருடைய பெலவீனங்களையும், அவர்களின் தவறுகளையும் தாங்கிக்கொள்கிறவராயிருக்கவேண்டும்!*
- *சகோதரர்களையும் சகோதரிகளையும்,* **தேவன் அவர்களை காண்கிற விதமாய்** *நீங்களும் கண்டு, யார்மீதும் நம்பிக்கை இழக்காதவர் களாயிருக்க வேண்டும்!*
- *ஜனங்கள் தோல்வி அடைந்தாலும், எதிர்காலத்து நம்பிக்கையை காண்பிக்கிறவராயிருக்கவேண்டும்!*
- *பெலவீனமானவருக்கு உண்மை நண்பனாயிருக்க வேண்டும்!*
- *உங்கள் சத்துருக்களைப்பற்றி பேசும்போதுகூட, யாதொரு காழ்ப் புணர்ச்சி இல்லாதவர்களாயிருக்கவேண்டும்!*
- *பாவத்தைக் குறித்த கண்டிப்பில் தனிமையாய் பேசும் போதும் அல்லது பொதுவாய் பேசும்போதும், நீங்கள் வலிமையாய் புத்தி சொல்ல வேண்டும்!*
- *உங்கள் ஊழியத்தில்,* **தேவனுடைய வார்த்தை கண்டித்து பேசுவதை மாத்திரமே** *நீங்களும் கண்டித்துப் பேச வேண்டும்!*
- *உங்களைவிட முதிர்ச்சி இல்லாதவர்களிடத்திலும், உங்கள் பொறுப்பை பகிர்ந்து கொடுப்பவராய் இருக்கவேண்டும்!*
- *சபை விஷயங்களில் உங்கள் மனைவி தலையிட அனுமதிக்காதவராய் இருக்கவேண்டும்!*
- *ஜீவிய விஷயங்களை ஜாக்கிரதையாய் கையாண்டு, பொறுப்பில்லாத 'ஜோக்' செய்யாதவராய் (சிரிக்க வைப்பவராய்) இருக்கவேண்டும்!*
- *நகைச்சுவை உணர்வை பெற்றவராயிருக்கவேண்டும்! ஆனால் அதைக் கொண்டு யாரையும் பாதிப்படையச் செய்யாதவராயிருக்க வேண்டும்!*
- *ஜனங்களை உங்களோடு இணைத்துக் கொள்ளாமல், தலையாகிய கிறிஸ்துவோடு இணைந்திடச் செய்யவேண்டும்!*

எவ்வாறு நம்பிக்கை இழக்கிறார்கள்

ஜனங்கள் படிப்படியாய் உங்களிடம் நம்பிக்கை இழக்கும் காரணங்கள்:

- உங்களுக்கு இல்லாத விஷயங்களில் **'வீண் அலுவல்காரராய்'** பிரவேசிக்கும்போது,
- ஆவிக்குரியவரைப்போல் பாசாங்கு செய்து, **இயற்கைக்கு முரணாக** நடக்கும்போது,
- தாழ்மையாய் இருப்பதைப்போல் நடித்து, **ஒரு மாயமான தாழ்மை** கொண்டிருக்கும்போது,
- உங்கள் பெயர் பிரஸ்தாபத்தையும், சொந்த ஆர்வத்தையும் பிரதானமாய் நாடும்போது,
- சபையின் சகோதர சகோதரிகளை, உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்திற்கோ ஆதாயமான காரியங்களை செய்யவைத்து, அந்த பணிகளுக்கு ஏற்ப கூலி தராதவர்களாயிருந்தால்,
- சபையிலுள்ள உங்கள் சகோதர சகோதரிகளைக் காட்டிலும் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு, அதிக மதிப்பு தந்தால்,
- உங்கள் ஜீவிய பாதையில் உண்மையற்றவர்களாய், தந்திரமுள்ளவர் களாய், வஞ்சகமுள்ளவர்களாயிருந்தால்,
- பிறருடைய ஆலோசனைகளை கேட்க விருப்பமற்றவராயிருந்தால்,
- உங்களையே நியாயப்படுத்துகிறவராயிருந்தால்,
- மற்றவர்களுக்கு உங்களை மேன்மையானவராய் காண்பிக்கும்படி, சகோதரர்களிடமிருந்து தூரமாயிருந்தால்,
- நீங்கள், சிலரைக் குறித்து கேள்விப்படுகிற அனைத்தையும், அதை சோதித்துப் பார்க்காமல் நம்பினால்,
- இரக்கத்தை துரிதமாய் காண்பிக்காமல், நியாயத்தீர்ப்பை துரிதமாய் வழங்கினால்,
- உண்மையற்றவராயிருந்தால்,
- உங்களை அன்புகூருகிறவர்களை மாத்திரமே அன்புகூர்ந்தால்,
- சில ஆதாயம் கருதி, ஜனங்களை முகஸ்துதி செய்தால்,
- ஒரு சகோதரனை ஞானமில்லாமல் புகழ்ந்து, அவன் கெடுவதற்கு காரணமாயிருந்தால்,
- ஐசுவரியமுள்ளவர்களை மாத்திரம் சந்தித்து, ஏழை விசுவாசிகளை புறக்கணித்தால்,
- ஆவிக்குரிய விஷயங்களில் ஒத்தவேஷம் தரிப்பவராயிருந்தால்,
- பிறரை துன்புறுத்தும் 'ஜோக்குகள்' பேசினால்,
- மன்னிக்க முடியாமல், உள்ளத்தில் காய்மாரம் கொண்டிருந்தால்,

- *சபை விஷயங்களில் உங்கள் சொந்த நலனுக்கேற்ப அல்லது உங்கள் குடும்ப வசதிக்கேற்ப தீர்மானங்கள் எடுத்தால்,*
- *பிறருடைய சிறு சிறு தவறுகளை 'கண்டும் காணாமல்' விட்டுவிட முடியாமல், அதை பெரிய விஷயமாய் மாற்றினால்,*
- *நீங்கள் பேசும் போது அந்த ஜனங்களின் முகத்தை நேருக்கு நேராய் பார்க்காமலிருந்தால்,*
- *போரடிக்கிற செய்திகளை பிரசங்கித்து, அதற்குரிய உணர்வில்லாத வர்களாயிருந்தால்!*

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்ட "தேவபக்தியான குணாதிசயங்கள்" உங்களிடமிருந்தால், உங்களை "தேவன் தந்தருளிய மூத்த சகோதரனாக" மந்தையிலுள்ளவர்கள் அறிந்து கொள்வார்கள்!

மேலே கூறப்பட்ட 'குறைவான பகுதிகள்' உங்களிடமிருப்பதை நீங்கள் கண்டால், நீங்கள் தேவனுடைய உதவியை நாடி அந்த பெலவீனத்தை மேற்கொள்ளுங்கள்! இவ்வாறாக உங்கள் அழைப்பை தெய்வ பயத்தோடு நிறைவேற்ற உத்தமமாய் நாடுங்கள்!!

8

ஒரு தலைவனுக்குரிய பொறுப்பு

வெளிப்படுத்தின விசேஷம்- 2,3, அதிகாரங்களில், ஆசியாவிலுள்ள ஏழு சபை மூப்பர்களுக்கு ஆண்டவர் அனுப்பிய செய்திகளை வாசிக்கிறோம். சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக இந்த ஏழு மூப்பர்களும், அப்போஸ்தலர்களால் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்போதோ, அவர்களில் **ஐந்து மூப்பர்கள்** *பின்மாற்ற நிலையில் இருந்தார்கள். அவர்களின் சபைகளும் ஓர் பரிதாபமான நிலைக்குள் இருந்தார்கள்! ஆகிலும், அந்த சபைகளை ஸ்தாபித்த அப்போஸ்தலர்களை, அவர்களின் வீழ்ச்சி சார்ந்ததாயில்லை.*

பவுல் ஏற்கெனவே எபேசு சபை ஊழியர்களை எச்சரிக்கும்போது 'அவர் சென்றவுடன், ஓநாய்கள் மந்தையை பட்சிக்க வரும்' என்றே கூறி எச்சரித்தார் (அப்.20:29,30). ஆனால் அந்த அப்போஸ்தலர்களோ, பவுலின் எச்சரிக்கையை ஜாக்கிரதையாய் எடுத்துக்கொள்ளவில்லை, மனந்திரும்பவும் இல்லை. எனவேதான், எபேசு சபையும் அதன் மூப்பர்களும் ஆண்டவர் மீது வைத்திருந்த அன்பை இழந்து, பின்மாற்றம் அடைந்தார்கள் (வெளி.2:4). இவ்வாறாக, உப்பின் சாரம் இழந்து, வெளிச்சம் மங்கத் தொடங்கியது!

மூப்பர்களைப் போலவே மாறும் ஓர் சபை

பின்மாற்றமடைந்த ஐந்து சபையின் மூப்பர்கள், தங்கள் சபையை அப்போஸ்தலர்களாகிய பவுல் அல்லது யோவான் ஸ்தாபித்தார்கள் என்றோ! அவர்கள் தங்களை மூப்பர்களாக நியமித்தார்கள் என்றோ! மேன்மை பாராட்டி இருக்கலாம். அதுபோன்ற மேன்மை பாராட்டுதல் **"ஆபிரகாம் எங்கள் தகப்பன்"** *என மேன்மை பாராட்டிய யூதர்களுக்கு ஒப்பான மதியீனமேயாகும் (மத்.3:9;யோவான்.8:39). இன்றும்கூட, அநேக சபைகளில் உள்ள தலைவர்கள், தங்களை சபையை ஸ்தாபித்த 'யாரோ ஒரு தேவ மனிதனின் தொடர்பு' அவர்களுக்கு இருப்பதை மேன்மை பாராட்டி கொண்டிருக்கிறார்கள். 'இப்போது சபையில்*

இருக்கும் மூப்பர்' ஆவிக்குரிய மனதுடையவராய் இல்லையென்றால், இதுபோன்ற மேன்மை பாராட்டுதல் புத்தியீனம் என்றே கூறலாம்.

பொதுவாக கூறும்போது, ஒவ்வொரு சபையும் அதன் தலைவர்களோடு சேர்ந்தே எழும்பி நிற்கிறது! அல்லது, அந்த தலைவர்களோடு வீழந்துபோகிறது! அது ஏனென்றால், அநேக விசுவாசிகள் ஆடுகளைப் போலவே, யாதொரு கேள்வியும் கேட்காமல் தங்கள் மேய்ப்பர்களைப் பின்பற்றுகிறார்கள். ஆகவே தலைவர்களாயிருக்கும் நம் பொறுப்பு, தேவனுக்கு முன்பாக மிகப்பெரியதாயிருக்கிறது. இதை எப்போதும் நம் ஞாபகத்தில் வைத்திருந்தால், நம் முகத்தை தேவனுக்கு முன்பாக தூசியில் வைத்து, அவருடைய கிருபையை நாடி இருப்போம்.

பின்மாற்றமடைந்த ஐந்து சபைகளில், அந்த தலைவன் 'கர்த்தர் மீது வைத்த அன்பை இழந்தவுடன்' சபையும் அதே நிலைக்குச் சென்று விட்டது. ஒரு தலைவன் 'பிலேயாம் உபதேசமாகிய' ஒத்தவேஷம் தரிப்பதும், கனத்திற்காகவும் பணத்திற்காகவும் தேவனுக்கு ஊழியம் செய்வதும் என ஈர்க்கப்பட்டு செல்லும் போது, இந்த பிலேயாமைப் போலவே அந்த சபையிலுள்ள விசுவாசிகளும் மாறிவிட்டார்கள்!

ஓர் தலைவன் ஆவிக்குரிய மரணமடைந்து அல்லது பெருமை கொண்டவனாயிருந்தால், அவனை கவனித்து கேட்கும் மற்றவர்களும் 'அவனைப்போலவே' மாறுவார்கள்! (வெளி.2,3).

ஆகிலும், அவர்களைப்போல் மாறாதவர்களும் இருந்திருக்கிறார்கள்! வெளி.3:4 கூறும்போது **சர்தை** சபையிலிருந்த சிலர், தங்கள் தலைவரைப்போலவே பின்மாற்றமடையாமல் இருந்தார்கள் என காண்கிறோம். தங்கள் மூப்பர் மரித்த நிலையிலிருந்தாலும், அவர்கள் தங்களை முழு இருதயம் கொண்டவர்களாய் காத்துக் கொண்டார்கள்! அதற்கு சமமாகவே வேறு விதமாயும் அந்த சபைகளில் இருந்திருப்பார்கள். அதாவது, "சபையிலிருந்த மற்றவர்கள் ஆவிக்குரிய மரணம் அடைந்த நிலையில் இருக்கும்போது" இவர்களோ, '**சிமிர்னா** மற்றும் **பிலதெல்பியா** சபையைப்போல்' உயிருள்ளவர்களாய் இருந்திருக்க முடியும்!

ஆகிலும், பொதுவாய் கூறும்போது, ஒரு சபையானது தன் தலைவரோடு எழுகிறது அல்லது வீழ்கிறது! எனவேதான் தேவனுக்கு முன்பாக தலைவராயிருக்கும் நம்முடைய பொறுப்பு அதிக ஜாக்கிரதையுடையதாயிருக்கிறது.

மூப்பர்கள் 'ஆவிக்குரிய செவிடர்களாய்' மாறிடும் நிலை

வீழ்ச்சியடையும் மூப்பர்கள், தங்கள் வீழ்ச்சியுற்ற நிலையைக் குறித்து முற்றிலும் உணராதவர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய

நிலைமையை, யோவான் அப்போஸ்தலனின் மூலம் தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தது. அவர்களின் ஆவிக்குரிய நிலையை "**தேவனிடமிருந்து நேரடியாக கேட்க முடியாமல்**" யோவானின் மூலமாக கூறவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? புதிய உடன்படிக்கையில் ஒவ்வொரு விசுவாசியிடமும் நேரடியாக பேசுவதற்கே தேவன் விரும்புகிறார். அப்படியிருந்தும், அவர்களோ, சபைக்கூட்டங்களில் 'அவர்கள் மற்றவர்களுக்கு என்ன பேசவேண்டும்' என்ற சிந்தையிலேயே மூழ்கிப்போனபடியால், தேவன் பேசியதை கேட்க முடியவில்லை.

இவ்வாறு 'மற்றவர்களுக்கு ஒரு பிரசங்கியாய்' நம் மனதைச் செலுத்தும்போது, நம்முடைய சொந்த ஆவிக்குரிய நிலையின் அறியாமையில் வீழ்வது மிக எளிதாய் சம்பவிக்கிறது!

இந்த தலைவர்களுக்கு ஆண்டவருடைய செய்தியானது தனிப்பட்ட தொடர்பில் அனுப்பப்படவில்லை என்பதை கவனியுங்கள். ஆம், அந்த செய்திகள் எல்லா சபைகளுக்கும் திறந்த முகமாய் வாசிக்கப்பட்டது (வெளி.1:11). இவ்வாறாக, எல்லா சபைகளும் மற்ற எல்லா சபைகளின் மூப்பர்களின் ஆவிக்குரிய நிலையை கேட்டறிந் தார்கள்! உண்மையில், இந்த செய்திகளை கவனமுடன் கேட்டவர் களுக்கு 'ஒரு ஆசீர்வாதமும்' வழங்கப்பட்டது (வெளி.1:3).

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "பாவத்தில் தொடர்ந்து ஜீவிக்கும் மூப்பர்கள், மற்ற எல்லோருக்கும் முன்பாக கடிந்து கொள்ளப்பட்டு, மற்றவர்களுக்கும் பாவம் செய்வதற்கு பயம் உண்டாகக்கடவது" என கூறினார் (1தீமோ.5:20).

ஆகவேதான் தன் உடன்ஊழியனாகிய **தேமாவின்** பெயரை பவுல் குறிப்பிட்டு, அவன் வீழ்ச்சியடைந்த காரணமாகிய 'இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்தான்'..... அதாவது, பணம், சொகுசு, மனுஷர் புகழ்ச்சியைத் தேடினான் என்ற காரணத்தையும் குறிப்பிட்டார் (2தீமோ.4:10). தன்னை எதிர்த்து நின்ற சிலருடைய பெயர்களையும் "**பிகெல்லு, எர்மொகெனே, அலெக்சந்தர், இமெனே**" என குறிப்பிட்டார் (2தீமோ.1:15; 4:14; 1தீமோ.1:20). கலாத்தியா சபையாருக்கு பவுல் எழுதும்போது 'பேதுரு, பர்னபாவின்' மாய்மாலமான செய்கைகளையும் சுட்டிக்காட்டினார் (கலா.2:11-16).

இவ்வாறு தலைவர்களைக் குறித்துப் பேசுவதற்கு எல்லா விசுவாசிகளுக்கும் தேவன் அனுமதி தரவில்லை. ஆனால் அவ்வாறு பேசும்படி 'பரிசுத்தாவியானவரால் உந்தப்பட்டால்' ஒரு

அப்போஸ்தலன் பேசலாம். மாம்சீகமான விசுவாசிகள், தேவனுடைய வழிகளை அறியாதபடியால், தலைவர்களின் பெயர்களை பகிரங்கப் படுத்திய பவுலை குற்றமாய் எண்ணிடமுடியும். ஆனால் ஓர் அப்போஸ்தலனோ பரிசுத்தாவியினால் நடத்தப்பட்டே அவ்வாறு செய்கிறார்!

ஒரு அப்போஸ்தலனிடமிருந்து, இதுபோன்ற கடிந்துக்கொள்ளு தலையும் திருத்துதலையும் ஏற்றுக்கொண்டு அவருக்கு கீழாக உங்களை தாழ்த்த முடியுமென்றால், நீங்கள் பாக்கியவான் என்றே கூறவேண்டும்.

தேவனுக்கு பயந்த தலைவர்கள்

பழையஏற்பாட்டில் யூதர்கள் எப்போதெல்லாம் பின்மாற்றம் அடைந்தார்களோ, அந்த எல்லா சமயங்களிலும் அவர்களின் தலைவர்களாகிய ராஜாக்களோ, ஆசாரியர்களோ அல்லது கள்ளதீர்க்க தரிசிகளோ காரணமாயிருந்தார்கள்! அவர்களை தேவன், தன்னுடைய தீர்க்கதரிசிகளை அனுப்பி கடிந்து கொண்டார். தங்கள் தலைவர்கள் விழிப்பில்லாமல், கவனக்குறைவாய் இருந்ததினிமித்தமே இஸ்ரவேல் ஜனங்கள் வழிதவறிச் சென்றார்கள்! தலைவர்கள் தெய்வ பயம் இழந்தபடியால், ஜனங்களும் தெய்வபயத்தை இழந்தார்கள்.

புதிய உடன்படிக்கையில் "தெய்வபயத்தோடே பரிசுத்தமாகுதல் பூரணப்படக்கடவது" என கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (2கொரி.7:1).

> **மூப்பர்களாயிருப்பவர்களின் பரிசுத்தம், கடந்த வருடத்தை விட 'இன்று அதிக பூரணத்திற்குள்' வளரவில்லையென்றால், தேவனுடைய ஜனத்தை நடத்துவதற்கு நாம் தகுதியற்றவர்கள்!**

மற்றவர்களின் தெய்வ பயத்தை விழிப்பாய் பார்த்துக்கொண்டு, எந்த ஒருநபரும் நம்மை கவனித்துப்பார்க்க முடியாத நிலை ஏற்படக்கூடும்! அப்படி இருந்தால், அது மிக மோசமான நிலையாகும். இந்நிலையில், மற்றவர்கள் நம்மை திருத்த வரும்போது, யாதொரு பிரயோஜனமும் ஏற்படாத மோசமான நிலை ஏற்படக்கூடும்!

அப்படியிருந்தால், நாம் என்ன செய்யவேண்டும்? தேவனே அந்த சூழ்நிலையை தம்முடைய கரத்தில் எடுத்து, நம்மோடு கடினமாய் இடைபடும்படி ஒப்புக்கொடுக்கவேண்டும்! இல்லையென்றால், நாம் மொத்தத்தில் வீழ்ச்சிக்குள்ளாவோம். கர்த்தருடைய ஆவியானவர் இயேசுவுக்கு செய்தது யாதெனில் "அவருக்கு தெய்வபயத்தை, துரிதமாய் உணரக்கூடிய உகந்த வாசனையைப்போல்" வைத்திருந்தார் (ஏசாயா.11:3). அதுபோலவே ஆவியானவர் நம்மிடத்திலும்

இடைபடுவதற்கு அனுமதித்திருந்தால், இயேசுவைப்போலவே தெய்வ பயத்தின் உணர்வை பெற்றிருந்திருப்போம். இதை நாம் புரிந்து கொள்வது எப்படியெனில், "தேவன் நம்மை பாதித்து விடுவாரோ என்ற பயமல்ல! மாறாக, நாம் தேவனை பாதித்து, அவரை துக்கமடையச் செய்து விட்டோமோ என்ற பயமே!" ஆகும்.

இந்த தெய்வ பயமே, முதலாவதாக நம் சொந்த ஜீவியத்தில் ஓர் எழுப்புதலை ஏற்படுத்த வேண்டும். ஆகவே நாம் தேவனை தனிப்பட்ட விதத்தில் முகமுகமாய் கண்டு மாற்றமடையாமல், சபைக்கூட்டங்களில் வாரந்தவறாது நாம் பேசும் சடங்காச்சாரமான நிகழ்விலிருந்து நம்மை இரட்சிக்கும்படி தேவனிடத்தில் நாம் கேட்க வேண்டியது மிக அவசியம்! பவுல் கூறும்போது, ஒழுங்கின் ஜீவியம் தனக்கு இல்லையென்றால், "**பிரசங்கிக்கிற நானே ஆகாதவனாய் போக முடியும்**" என தெய்வ பயம் கொண்டிருந்தார். அதுபோலவே, பிரசங்கிக்கிற நாமும் கடைசி நாளில் தேவனால் புறக்கணிக்கப்பட முடியும் என பயந்திருக்கக் கடவோம்! (1கொரிந்தியர்.9:27).

பரிசுத்தாவியின் அபிஷேகமும் வரங்களும்

நம் நாட்களில், "பரிசுத்தாவியில் நிறைந்த அபிஷேகம்" மதிப்பில்லாததுபோல் காணப்படுவதைக் குறித்து நாம் கரிசனை கொள்ள வேண்டியது அவசியமாகும். இன்றைய கிறிஸ்தவத்தில், இரண்டு எதிர்முனை காணப்படுகிறது: 1)பரிசுத்தாவியின் அபிஷேகத்தையே மறுப்பவர்கள். 2) தரம் இழந்த உணர்ச்சி அடிப்படையிலான போலி அனுபவத்தை மேன்மை பாராட்டுபவர்கள். இந்நிலை கொண்டவர்களால், கர்த்தருடைய ஊழியத்தில் வல்லமையும் இல்லை! அல்லது ஜீவியத்திற்குரிய பரிசுத்தமும் இல்லை! இந்த இரண்டு எதிர்முனைகளுக்கும் நாம் விலகி நின்று, **'மெய்யான வல்லமையினால்'** நாம் ஆட்கொள்ளப்பட தேவனைத் தேட வேண்டும். அப்போது மாத்திரமே, நாம் தேவனுக்கு ஏற்றவிதமாய் ஜீவித்திடவும், ஊழியம் செய்திடவும் முடியும்!

நாம் வளர்ந்திருக்கிற அளவைவிட, ஒரு சபையை மேலாக நடத்திட முடியாது. நம்மிடம் போலியான அனுபவம் மாத்திரமே இருந்தால், மற்றவர்களையும் 'போலி அனுபவத்திற்குள் மாத்திரமே' நடத்த முடியும். ஆகவேதான், நாம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் நிஜமாகவே மூழ்கி இருக்க வேண்டும். அத்தோடு முற்றுப்புள்ளி அல்ல! நாம் கர்த்தருக்கு வல்லமையுடையவர்களாயிருக்க வேண்டுமென்றால் ஓர் **தொடர்ச்சியான ஆவியின் நிறைவில்** ஜீவிக்க வேண்டியது

அவசியமாகும். இதை எபேசியர்.5:18 கூறும்போது "ஆவியினால் நிறைந்து" - Be being filled with the Spirit என எப்போதும் ஆவியில் நிறைந்து வாழ கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய சபையில், வலிமையான ஊழியத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்றால், சபையிலுள்ள சகோதர சகோதரிகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒரு மெய்யான கரிசனை வேண்டும். இதுவே நாம் 'தீர்க்கதரிசன வரத்தை' பெறுவதற்கு தேவனை நாடும்படி நம்மை உந்திச் செல்லும்! அப்போதுதான் நம்முடைய விசுவாசிகளுக்கு நாம் வல்லமையாய் ஊழியம் செய்திட முடியும். **ஆவியின் வரம் இல்லாமல்,** *நாம் தேவனுக்கு ஏற்றவிதமாய் ஊழியம் செய்வது ஒருக்காலும் முடியாது! ஆகவே, நம் முழு இருதயத்தோடு பரிசுத்தாவியின் வரத்தை நாடுவோமாக. பாதி இராத்திரியில், தன் அயலான் வீட்டிற்குச் சென்று, தன் சிநேகிதனுக்காக அப்பங்கள் கேட்ட ஒருவனைப் பற்றிய உவமையை இயேசு கூறியது 'இந்த அபிஷேகத்தை' ஒருவன் பெறுவதற்கு கூறியதேயாகும். இவ்வாறாகவே, தேவை மிகுந்த சபை மக்களுக்காகவும் அக்கறை கொண்டு தேவனிடம் கேட்கும்படியே இயேசு போதித்தார்.*

> அப்போது மாத்திரமே, நாம் தேவனுடைய கதவைத் தட்டி "நமக்குத் தேவையானதாகிய பரிசுத்தாவியின் வல்லமையை" கண்டடையும்படி தேவன் செய்வார் (லூக்கா.11:8,13).

புதிய உடன்படிக்கையில், தீர்க்கதரிசனம் சொல்வது, *நாம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தினால் நிறைந்து தேவனுடைய வார்த்தையை பேசுவதேயாகும்! அந்த வார்த்தையே ஜனங்களுக்கு புத்தியும், பக்திவிருத்தியும் அடையச்செய்து, சபையை கட்டுவதா யிருக்கிறது! (1கொரி.14:4,24,25). 1கொரிந்தியர் 14 - ம் அதிகாரத்தில், ஸ்தல சபை கூட்டங்களில் தீர்க்கதரிசனம் சொல்வதின் முக்கியத் துவத்தை பவுல் வலியுறுத்தினார். இவ்வித அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் இல்லாமலே சபை கட்டப்படும் என்றால், தேவன் இந்த வரத்தை சபைக்குத் தேவையில்லாமல் கொடுத்திருக்கிறார் என்றே கூற வேண்டும். அப்படியிருந்தால், "தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" என்ற புத்திமதியும், ஓர் தேவையற்ற புத்திமதியா யிருக்கும் (1கொரி.14:1,39). இங்கு கூறப்படும் சத்தியம் என்னவெனில் சபை கட்டப்படுவதற்கு 'இந்த வரம்' முக்கியமானதாகும்! ஒரு சபையில், ஆவியில் நிறைந்து தீர்க்கதரிசனம் சொல்லக் கூடிய 'ஒரு சகோதரன்கூட' இல்லையென்றால், அந்த சபை, வெகு சீக்கிரத்தில் ஆவிக்குரிய மரணத்தை அடைந்துவிடும்!*

அதற்கு சமமாகவே 'பெந்தெகொஸ்தே நாளில் வந்திறங்கிய பரிசுத்தாவியும்' தேவையற்றதாய் மாறி, ஆவியானவருடைய வல்லமை இல்லாமல், நாமாகவே கர்த்தருடைய பணியை செய்துவிட முடியும் என்பதாய் மாறிவிடும்! இவ்வாறு பரிசுத்தாவியின் அபிஷேகத்தை அலட்சியப்படுத்துவது, ஒரு மிகப்பெரிய தவறு என்றே கூற வேண்டும்! அது, இந்த பூமிக்கு ஆண்டவராகிய இயேசு திரும்ப வருவது தேவையற்றது எனவும்! அவர் இல்லாமலே, நாமாக தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்துவிட முடியும் எனவும்! பொருள்படுத்து வதாயிருக்கும். ஆகவே, திரித்துவத்தின் 'மூன்றாவது நபராகிய பரிசுத்தாவியை' புறக்கணிப்பது, திரித்துவத்தின் 'இரண்டாவது நபராகிய இயேசுவை' புறக்கணிப்பதற்கு சமமான பாவமேயாகும்!!

பரிசுத்தாவியின் அபிஷேகம், இன்றுள்ள சில விசுவாசிகளால் அபகீர்த்தி செய்யப்படுவதினிமித்தம், நாம் ஒருநாளும் ஆவியின் அபிஷேகத்தின் மதிப்பை இழந்துவிடக்கூடாது. உங்களிடம் ஆவியின் வல்லமை இல்லையென்றால், கர்த்தருடைய பணியை செய்வதற்கு உங்கள் சொந்த தாலந்துகளையும், அனுபவங்களையும் சார்ந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அதுபோன்ற **மனுஷீக பெலன்** *தேவனுடைய நோக்கத்தை ஒருபோதும் நிறைவேற்றிட முடியாது!*

நாம் ஜனங்களை பரிசேயத்துவத்திலிருந்தும், பிரமாணத்துவத்தி லிருந்தும் விடுதலை செய்வது ஒருபுறம் இருக்க, மறுபுறமோ ஒத்த வேஷத்திலிருந்தும், இந்த உலக மாயையிலிருந்தும் ஜனங்களை விடுதலை செய்ய வேண்டியதாயிருக்கிறது. இதுபோன்ற ஊழியத்திற்கு யார் போதுமானவர்களாய் இருக்க முடியும்? பரிசுத்தாவியினால் பெலன் கொண்டவர்களால் மாத்திரமே, அவ்வித ஊழியத்தை நிறைவேற்றிட முடியும். இதனிமித்தமே, பரிசுத்தாவியின் ஞானத்தையும், அவரது வல்லமையையும் தேவனிடமிருந்து பெற நாம் தொடர்ச்சியாய் நாட வேண்டும். எபேசு கிறிஸ்தவர்களுக்காக பவுல் ஜெபித்தபோது, அவர்கள் பரிசுத்தாவியின் ஞானத்தையும் அவரது வல்லமையையும் பெற்றுகொள்ள வேண்டும் என்றே ஜெபித்தார்! (எபேசியர்.1:17; 3:16). இதையே நாமும் நாடி ஜெபிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது!

பிரமாணத்துவ மற்றும் உலக மாயை அபாயங்கள்

நம் அனைவரும், நம் முழு இருதயத்தோடு, "எல்லாவித பிரமாணத் துவங்களிலிருந்தும்" விடுதலை பெற நாட வேண்டும். அப்போது மாத்திரமே, நாம் **புதிய உடன்படிக்கை சபைகளைக் கட்ட** *முடியும்!*

பிரமாணத்துவம் எப்போதுமே பிறரை நியாயந்தீர்க்கிறதாயிருக்கிறபடியால், எவ்வாறு உலக மாயை தேவனுடைய கிரியையை அழித்திட முடியுமோ, அதேபோன்ற அழிவை கொண்டுவரமுடியும். ஆகவேதான் பிரமாணத்துவமும், உலக மோக மாயையும் இரண்டு எதிர் கோடியில் நின்று, முடிவில் பாபிலோன் சபைகளைக் கட்டுவதற்கே வழிநடத்தும்.

இந்த இரண்டு எதிர்முனையில், பிரமாணத்துவமே அதிக அபாயம் நிறைந்ததாகும். ஏனெனில், அது உலக மோகத்தைப்போல் அல்லாமல் "ஆவிக்குரியது போல" தோற்றமளிப்பதேயாகும்! பிரமாணத்துவ சபைகள், லௌஹீகமான சபைகளை விட அதிக ஆவிக்குரியதைப் போல் தோன்றினாலும், அந்த சபைகளில்தான் அதிக மாய்மாலமும், போலித்தன்மையும், உலக ஈர்ப்பு கொண்ட சபைகளை விட அதிகமாய் வைத்திருக்கிறார்கள்!

பரிசேயர்கள் பிரமாணத்துவம் கொண்டவர்கள்! ஏரோதியர்கள் உலக மோகத்துக்குரியவர்கள்! இவர்கள் இருவரில் 'இயேசு சிலுவையில் அறையப்படவேண்டும்' என பரிசேயர்கள் தீவிரமாய் இருந்தார்கள், ஏரோதியர்கள் அல்ல! நாம் இவ்வாறுதான், பிரமாணத்துவத்தின் அபாயத்தை தெளிவாக காணமுடிகிறது.

*ரோமர் **6**, பாவத்திலிருந்து அடையும் விடுதலையைக் கூறுகிறது! ரோமர் 7, பிரமாணத்துவத்திலிருந்து அடையும் விடுதலையை குறிப்பிட்டுக் கூறுகிறது! நமக்கோ, இந்த இரண்டின் மேலும் விடுதலை வேண்டும்.*

சபையின் மூப்பர்கள் பிரமாணத்துவத்திற்குரியவர்களாய் இருப்பதற்கு 'ஒரு உதாரணத்தைப்' பாருங்கள்: **'ஆபரணங்கள் அணிவதை'** *லௌஹீகம் என போதிப்பார்கள்.*

இவ்விஷயத்தில் இரண்டு காரியங்களை நாம் தெளிவாய் அறிந்திருக்க வேண்டும்:

முதலாவதாக: *உலகத்தின் ஈர்ப்பு, பிரதானமாய் நம்* **மனதை** *பொருத்ததாகும். ரோமர் 12:2 கூறும்போது "உங்கள் மனது.... உலகத்தோடு ஒத்தவேஷம் தரியாமல் இருக்கக்கடவது" என்றே கூறுகிறது. உலகத்தின் ஈர்ப்பானது, பலவழிகளில் வெளிப்படமுடியும் .... தீமை பேசுதல், புறங்கூறுதல், பணஆசை, உலகத்திலோ அல்லது சபையிலோ 'ஜனங்களிடமிருந்து' கனத்தைத் தேடுதல் ..... மேலும், தங்கள் விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் மூலமாய் தன்னை வெளிக்காட்டுதல் அடங்கியதாகும். ஆனால் ஆபரணங்கள் அணிவதை விட பிறரை தீமை பேசுவது பல ஆயிரம் மடங்கு மோசமானதாகும்.*

ஏனென்றால், தீமை பேசுதல் மற்ற ஜனங்களைப் பாதிக்கிறது. ஆனால், உலக ஈர்ப்போ 'நம் மனதில்' துவங்குகிறது. எனவே முதலாவதாக, சிந்தையில் குடிகொண்ட உலக மோகமே, வேரோடு அகற்றப்பட வேண்டும். இதன் பின்புதான், பாத்திரத்தின் வெளிப்புறம் 'தானாகவே' சுத்தமாகிவிடும். இந்த போதகத்தை மத்தேயு.23:26 - ம் வசனத்தில் இயேசுவே போதித்துள்ளார்!

இரண்டாவதாக: *யாதொன்றைச் செய்யும்படி ஒரு விசுவாசி கட்டாயப்படுத்தப்பட்டால், அது ஓர் செத்த கிரியை! அதற்கு, தேவனுக்கு முன்பாக எந்த மதிப்பும் இல்லை. "நாம் செத்த கிரியைகளுக்கு நீங்கலாகி" மனந்திரும்பவே அழைக்கப்பட்டிருக் கிறோம் (எபி.6:1). ஆகவே, நம் சபைகளிலுள்ள ஒருவரையாவது, 'ஒழுக்கக்கேடான* **பாவமில்லாத' யாதொரு விஷயத்தைக் குறித்தும் செய்யும்படி கட்டாயப்படுத்தக் கூடாது!** *உதாரணமாக, தீமை பேசுவதை நிறுத்தும்படி (அது பாவமாயிருக்கிறபடியால்) நாம் ஜனங்களை கண்டிப்புடன் கூற வேண்டும்! ஆனால், நாம் ஒருவரையும் அவர்களது ஆபரணங்களை கழற்றும்படி கட்டாயப்படுத்தக் கூடாது! (ஏனெனில், அது பாவத்திற்கு சம்பந்தப்படாததால், அது எளிய ஜீவியத்திற்கு சம்பந்தப்பட்டது). எளிமையான ஜீவிய விஷயத்தில், நாம்* **ஜனங்களுக்கு சுயாதீனம் அளித்து,** *அவர்களுக்கு உணர்த்துவித்தபடி உடை உடுத்த (நம்முடைய உணர்த்துதலின்படி அல்ல) சுயாதீனம் கொடுத்துவிட வேண்டும்!*

இங்கு நான் ஒரு குறிப்பை சேர்க்க விரும்புகிறேன். நானும் என் மனைவியும் ஒருபோதும் ஆபரணங்கள் அணிந்ததில்லை! ஏனெனில் அதை 1தீமோத்தேயு.2:9 - ம் வசனத்தில் நாங்கள் மிகவும் தெளிவாக "பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது தங்களை அலங்கரி யாமல்" என கூறப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறோம்! அதுபோலவே 1பேதுரு.3:3 - ம் வசனத்தில் "பொன் ஆபரணங்கள் உங்களுக்கு அலங்காரமாயிராமல்" என தேவனுடைய வார்த்தையில் ஓர் தெளிவான கட்டளையை நாங்கள் பெற்றிருக்கிறோம். ஆனால், ஆபரணங்கள் அணிந்தவர்களை நாங்கள் ஒருபோதும் நியாயந் தீர்ப்பதில்லை. நாங்கள் இந்த வசனங்களை தெளிவாக கண்டதுபோல, அவர்கள் காணும்படி தெளிவடையவில்லை என்றே கருதிக் கொள்கிறோம்!

பவுலும் பேதுருவும், ஆடம்பரத்திற்கும், வெளிப்புறத் தோற்றத்திற்கும் எதிரடையாக நின்று "எளிமையும் அடக்கமுமான" உடுத்துவதை 1தீமோத்தேயு.2:9, 1பேதுரு.3:3 வசனங்களில்

வலியுறுத்தினார்கள். சபையிலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் "கவர்ச்சியான அலங்கரிப்பு, விலையுயர்ந்த ஆடம்பரத்திற்குரிய தேவையற்ற பணவிரயம்" என புத்தி கூறினார்கள். இங்கு பொன், முத்துக்கள், விலையுயர்ந்த ஆடைகள், விலையுயர்ந்த தலைமுடி அலங்காரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், அநேக விசுவாசிகள் தங்கள் வீட்டில் வைத்திருக்கிற, வேறு பல ஆடம்பர பொருட்களும் இந்த பட்டியலில் இருந்திட முடியும்!

நம் யாவருக்கும் இயேசு வழங்கிய கட்டளை என்னவென்றால் "தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" என்பதேயாகும் (யோவான்.7:24). ஆகவே, ஆபரணங்கள் அணிந்திருக்கும் சகோதரியை நீங்கள் குறைசொல்வதற்கு முன்பாக, உங்கள் வீட்டில் ஏதேனும் தேவையில்லாத, ஆடம்பர பொருட்கள் ஏதும் இருக்கிறதோ? என உங்களை கேட்டுபார்ப்பது நல்லது. அப்படியிருக்குமென்றால், நான் உங்களுக்கு கூறுவதெல்லாம்: உங்கள் மாய்மாலத்திலிருந்தும், பிரமாணத்துவத்திலிருந்தும், சுயநீதியிலிருந்தும், நியாயந்தீர்க்கும் ஆவியிலிருந்தும் முற்றிலும் நீங்கும்படியாக, **உங்களையே முதலாவதாக நியாயந்தீர்த்திடுங்கள்.** நீங்கள் உங்கள் வீட்டில் வைத்திருக்கும் சில விலையேறப்பெற்ற, தேவையில்லாத ஆடம்பர பொருட்களோடு ஒப்பிடும்போது, ஒரு சகோதரி அணிந்திருக்கும் சில சாதாரண முலாம் பூசிய ஆபரணத்தை நீங்கள் எவ்வாறு குறைகூறிட முடியும்?

வேதாகமம் கூறுவது என்னவெனில்: "உன் விரலை பிறரை நோக்கி காட்டும்போது, சிறிது நேரம் சிந்தனை செய்! எப்போதெல்லாம் பிறரை குறை கூறுகிறாயோ, அப்போதெல்லாம் உன்னையே குற்றவாளி என தீர்த்து கொள்கிறாய். பிறரை நியாயந்தீர்த்து குறைசொல்லுதல், உங்கள் சொந்த வீழ்ச்சியை கண்டுபிடிப்பதிலிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ள நாடும் வழியேயாகும். ஆனால், தேவன் தன்னை வஞ்சிக்கவொட்டார். அவர் உங்கள் எல்லா மாய்மாலத்தையும் ஊடுருவக் கண்டு, நீங்கள் செய்த செயலுக்கு, உங்களையே பொறுப்பாளியாக காண்பார்.

நீங்கள் உங்கள் விரலை மற்றவர்கள் மீது காண்பித்து, தேவனை திசை திருப்பி, உங்கள் தவறுகளை தேவன் காண முடியாமல், உங்களை கடினமாய் நியாயந்தீர்க்காமல் அவரை வைத்து விடலாம் என எண்ணிக்கொள்வது சரிதானா?

உங்களைக்குறித்து வரும்போது, அவர் அன்புள்ள தேவன், மன்னித்து விட்டுவிடுவார் என நீங்கள் எண்ணிக்கொள்வது நியாயமா? அப்படி இல்லை! நீங்கள் தப்பித்துக்கொள்ள இயலாது! எனவே, மனந்திரும்பி குணப்படுங்கள்" என ரோமர் 2:1-5 Message விரிவாக்க மொழிபெயர்ப்பு கூறுகிறது.

மேற்கண்ட வசனத்தின் தாற்பரியம், ஆபரணங்கள் அணிவதற்கும் மேலாக அநேக விஷயங்களை உள்ளடக்கியிருக்கிறது! ஏனெனில் பிரமாணத்துவம், வெவ்வேறு தோற்றத்திலும், வெவ்வேறு நிறத்திலும் வெளிப்படுகிறது. ஆகவே இவை எல்லாவற்றிலும் நாம் மிகுந்த கவனம் கொண்டிருக்கவேண்டும். ஒரு சகோதரன் 'என்ன மாடல் கார் வைத்திருக்கிறார்?' என்றும்! அல்லது, ஜீன்ஸ் உடை உடுத்துவதைக் குறித்தும்! அல்லது என்ன நிறத்தில் சட்டை போட்டிருக்கிறார் என்றும்! இவ்வாறாக..... ஒரு சகோதரனை நீங்கள் நியாயந்தீர்த்துக்கொண்டே இருக்கலாம்.

இதுபோன்ற விஷயங்களுக்கு முடிவுரையாக இருப்பதெல்லாம்: "**அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை** உடையவனாயிருக்கக் கடவன்" (ரோமர்.14:5) என்பதேயாகும்! "ஒருவன் எவ்வளவு விஸ்தாரமான வீட்டில் வாழவேண்டும்? என்ன மாடல் கார் அல்லது ஸ்கூட்டர் வாங்கவேண்டும்? தன்னுடைய குடும்பத்தினர் எவ்வித நாகரீகத்தில் உடை உடுத்தவேண்டும்? எவ்வகையான உணவு சாப்பிட வேண்டும்? தன் குடும்பத்தின் திருமணத்திற்கு எவ்வளவு செலவழிக்க வேண்டும்?" போன்றவைகளைக் குறித்த நிச்சயத்தை அவன் மனதில் கொண்டிருக்கக்கடவன். இந்த எல்லா பகுதியிலும், உலக கவர்ச்சி நிச்சயமாய் இருக்கக்கூடும். இருப்பினும், அதுபோன்ற விஷயங்களை நாம் ஒருபோதும் நியாயந்தீர்க்கக்கூடாது. இவ்விஷயங்களில், நம்மை மாத்திரமே நியாயந்தீர்க்க வேண்டும்! பாபிலோன் கட்டப்படுவது, ஆபரண அலங்கரிப்பு கொண்டவர்களை வைத்தும் அல்லது சில ஆடம்பரங்கள் கொண்டவர்களை வைத்தும் கட்டப்பட்டதல்ல! மாய்மாலக்காரர்களைக் கொண்டும், தாங்கள் பிரசங்கித்ததைக் கைக்கொள்ளாதவர்களைக் கொண்டும், பிறரை ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பவர்களை வைத்துமே கட்டப்படுகிறது!

நியாயந்தீர்த்தாலும், ஆக்கினைப்படுத்தாமல் இருந்திட வேண்டும்

இன்றைய கிறிஸ்தவர்களிடத்தில் "பிறரை நியாயந்தீர்ப்பது சரிதானா? அல்லது இல்லையா?" என்ற ஏராளமான குழப்பம் உள்ளது. அதற்கு காரணம், "**நியாயந்தீர்ப்பது**" என்ற வார்த்தையை தவறாய் விளங்கிக்கொண்டதே காரணம்.

விசுவாசிகளாகிய நாம் 'பிறரை நியாயந்தீர்ப்பதின் பொருள்' **'ஜனங்களை நாம் நிதானித்திட வேண்டும்'** என்பதேயாகும். தேவனுடைய வார்த்தையோ, ஒருவர் பிரசங்கித்ததை நாம் கேட்ட பின்பு "அவர் பேசிய செய்தியை நிதானித்து அறிய வேண்டும்" அல்லது "நியாயந்

*தீர்த்துப் பார்க்க வேண்டும்" என்றே அர்த்தமாகும் (1கொரி.14:29). ஆகவே, நாம் ஒவ்வொருவருடைய 'பிரசங்க செய்தியையும்' நியாயந்தீர்த்து பார்க்க வேண்டுமென்றே பரிசுத்தாவியானவர் கட்டளையிடுகிறார். இன்றைய கிறிஸ்தவ உலகில் காணப்படும் ஏராளமான வஞ்சக பிரசங்கிகளிடமிருந்து நம்மை காத்துக் கொள்வதற்கு "***இது ஒன்றே***" வழியாகும்!*

*மேலும் தேவனுடைய வார்த்தை கூறும்போது "உலகத்தில் அநேகம் கள்ளதீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் **தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்**" (1யோ.4:1) என்றே கூறுகிறது.*

நாம் பிறரை எவ்வாறு நிதானித்து அறிய வேண்டும் என இயேசு கூறும்போது "உங்கள் தீர்ப்பில் நேர்மையாயிருங்கள்! வெளித் தோற்றத்தின்படி தீர்மானிக்காமல், நியாயமாகவும் நீதியாகவும் தீர்ப்பு செய்யுங்கள்" (யோவான்.7:24 - விரிவாக்க வேதாகமம்) என்றார்.

ஆகவே "ஒருவரையும் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்" என இயேசு மத்தேயு.7:1-ம் வசனத்தில் கூறியதின் அர்த்தம் என்ன?

*"நியாயந்தீர்ப்பது" என்ற வார்த்தையின் மற்றொரு அர்த்தம் "**ஆக்கினைக்குள்ளாக்குவது**" என்றே கிரேக்க மூலபாஷையில் உள்ளது. எனவே, விரிவாக்க வேதாகம மொழிபெயர்ப்பு இந்த வசனத்தைக் கூறும்போது "நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடி பிறரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதிருங்கள்" (மத்.7:1) என கூறுகிறது. இயேசு தன்னைக் குறித்து கூறும்போது "நான் ஒருவனையும் ஆக்கினைக் குள்ளாகவோ அல்லது மரணத்திற்கேதுவாகவோ" தீர்ப்பதில்லை (யோவான்.8:15-விரிவாக்க வேதாகமம்) என கூறினார். ஆகவே, ஒருவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதும், மரணத்திற்கு ஏதுவாக தீர்ப்பதும் (நம் வார்த்தையினாலோ அல்லது மனதினாலோ) தடைசெய்யப் பட்டிருக்கிறது. அவ்வாறு செய்திட தேவனுக்கு மாத்திரமே உரிமை உண்டு! ஆகிலும் அதை நாமே சோதித்து நிதானித்து அறிய வேண்டும்!*

இயேசுவைப் பற்றி தீர்க்கதரிசனமாய் கூறப்பட்டது என்னவெனில் "அவர் தமது கண் கண்டபடி, தமது காது கேட்டபடி நியாயந் தீர்க்காமல், நீதியாய் ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" (ஏசா.11:3,4) என்றே கூறுகிறது. நாமும் அவருடைய மாதிரியை பின்பற்றி, யாதொன்றையும் அல்லது யாதொருவரையும் நாம் காண்கிறபடியோ அல்லது கேட்கிறபடியோ நியாயந்தீர்த்துவிடக்கூடாது. ஒரு விஷயத்தை முழுவதும் விசாரித்தபின்பே, நீதியாகவும் யாதொரு பாரபட்சமில்லாமலும் நியாயந்தீர்த்திட வேண்டும்!

தேவனுடைய குடும்பமாயிருக்கும் நாம், முதலாவது நம்மையே நியாயந்தீர்த்திட வேண்டும் என 1பேதுரு.4:17 கூறுகிறது. ஆகிலும், 'நமக்குள்' இருப்பதை வைத்து நம்மை நியாயந்தீர்த்து வாழக்கூடாது. நாமோ, **இயேசுவின் மாதிரியை அவருடைய ஜீவியத்தின் ஒளியில் கண்டு,** நம்முடைய சொந்த குறைகளைப் பார்த்து, பின்பு நம்மையே நியாயந்தீர்க்க வேண்டும். எழுதியிருக்கிறபடி "கர்த்தாவே, உம்முடைய ஒளியில், நாங்கள் வெளிச்சத்தைக் காண்கிறோம்" (சங்.36:9).

தேவனுடைய ஒளியில் நம்மை நியாயந்தீர்ப்பது, நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடமாகும். இந்தப் பாடத்தை அநேகர் கற்றுக்கொள்ளாதபடியால், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எந்த வளர்ச்சியும் இல்லா திருக்கிறார்கள். இப்போது தங்களை இவ்வித உத்தமத்தோடு நியாயந் தீர்த்துக் கொண்டவர்களுக்கு "கடைசிநாளில், அவர்கள் தேவனால் நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள்" என்ற ஆச்சரியமான வாக்குதத்தம் அவர்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. ஆம் "நம்மை நாமே சரியாக நியாயந்தீர்த்து கொண்டால், நமக்கு நியாயத்தீர்ப்பில்லை"(1கொரி.11:31).

நாம் பிறரை நியாயந்தீர்க்காவிட்டாலும், நாமோ பாவத்தை வலிமையாய் கண்டித்துப் பிரசங்கிக்கவேண்டும்! சில குறிப்பிட்ட பாவங்களை இயேசு வலிமையாய் கண்டித்துப் பேசினார்! கோபம், கண்களின் பாலிய இச்சை, பணத்தை நேசிப்பது, கவலைப்படுவது, பயம், பொல்லாத சிந்தைகள், பொய்சொல்லுதல், மனுஷனுடைய கனத்தைத் தேடுதல், நம் சத்துருக்களை வெறுப்பது போன்ற பாவங்களை மத்தேயு.5,6,7 அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளார். இதோடு சேர்த்து, இன்றுள்ள நாகரீக பாவங்களையும் நாம் கண்டித்துப் பேச வேண்டும். குறிப்பாக "அருவருப்பான பாலிய செயலை கவனித்திடும் வலைதளப் பாவத்தையும்" கண்டித்து.... அதேசமயம் யாரையும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்காமல் பேசவேண்டும்! இயேசு யாரையும் ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதற்கு இந்த உலகத்திற்கு வராமல், உலகத்தை இரட்சிக்கவே வந்தார் (யோவான்.3:17). "தேவன் ஒருவர் மாத்திரமே எல்லோருக்கும் நீதிபதியான கட்டளை தருவதற்கும், அழிப்பதற்கும் வல்லவர்!" (யாக்.4:12).

பெருமை, அகந்தை கொண்டவர்களை, சபையிலிருந்து நீக்குகிறார்!

சபையிலுள்ள பெருமையும் அகந்தையும் கொண்ட விசுவாசிகளை தேவன் பகிரங்கமாய் எதிர்த்து நிற்கிறார். இதுபோன்ற ஜனங்களிடம் ஒரு மூப்பர் மென்மையாகவோ அல்லது கண்டும் காணாமலோ

நடந்துவிடக்கூடாது. மாறாக, அவர் தன்னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கூறும்போது, மிகுந்த தைரியமாய் கூறி, கர்த்தருடைய நாமத்திற்கு அபகீர்த்தி கொண்டுவரும் பெருமையான எல்லா ஜனங்களையும் கண்டித்துப் பேசவேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகளில் தேவன் **இந்த மூப்பர்களை சோதித்து,** *அவர்கள் மனுஷரைப் பிரியப்படுத்துகிறார்களா? அல்லது, சபையில் அவருடைய மகிமையைக் குறித்த கரிசனை கொண்டிருக்கிறார்களா? என அறிந்து கொள்கிறார்.*

நம்முடைய திருத்துதலை ஏற்காமல், **மனம் புண்பட்டு** *சிலர் சபையை விட்டு போய்விட்டால், அதைக் குறித்து நாம் சிறிது கூட சஞ்சலமடையக்கூடாது! ஏனென்றால், தேவனே "எல்லா பெருமைக் காரர்களையும்" சபையிலிருந்து அகற்ற தீர்மானம் செய்துள்ளார்.*

இந்த உண்மையை, செப்பனியா 3:11-18 வசனங்களின் Living Bible மொழிபெயர்ப்பு கீழ்கண்டவாறு கூறுகிறது: தேவன் சொல்லுவது என்னவென்றால், "நான் உன் நடுவிலிருந்து பெருமையும் அகங்காரமும் கொண்ட ஜனங்களை விலக்கி விடுவேன். என்னுடைய பரிசுத்த பர்வதத்தில் (சபையில்) இனி முதற்கொண்டு யாதொரு பெருமையும் அகங்காரமும் இருப்பதில்லை. மீதியாய் இருக்கும் ஜனங்களே எளிமையும் தாழ்மையும் கொண்ட ஜனமாய் கர்த்தருடைய நாமத்தை நம்பி இருப்பார்கள்! அவர்கள் வஞ்சகம் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் அமரிக்கையோடும், சமாதானத்தோடும் பாதுகாப்பாய் படுத்துக் கொள்வார்கள். இனியும் அவர்களை ஒருவரும் பயமுறுத்த இயலாது. இனி, உரத்தசத்தமாய் கெம்பீரித்து மகிழ்ந்து பாடுங்கள்! உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடு அமர்ந்து ஜீவிக்கிறபடியால், இனி எதற்கும் நீங்கள் பயப்படத்தேவையில்லை. ஆகவே களிகூர்ந்திருங்கள். அவரே உங்களது வல்லமையான இரட்சகர். அவர் உங்களுக்கு ஜெயம் தருவார். உங்கள் மீது கர்த்தர் சந்தோஷமாய் மகிழ்ந்திருப்பார். அவர் உங்களை நேசிப்பாரே அல்லாமல், உங்களை குறைகூறமாட்டார்!" என வாசிக்கிறோம்!

இயேசு கூறும்போது "பிதா எனக்குத் தந்தவர்கள் அனைவரும் என்னிடத்தில் வருவார்கள்" (யோவான்.6:37) என்றார். இதே வசனத்தை இப்போது நாமும் கூறிட முடியும்: 'யாருக்கு ஊழியம் செய்யும்படி பிதா விரும்புகிறாரோ, அவர்கள் நம்மோடு தங்கி இருப்பார்கள்'. எனவே, நம்மோடு தங்கியிருக்கும் விசுவாசிகளையே நாம் விரும்புகிறோம்! மற்ற 'போகிற அனைவரும்' போகட்டும்.... ஏனெனில், அதுபோன்றவர்கள் நம்மோடு தங்கியிருந்தால், தொடர்ந்து பிரச்சனைகளையே உருவாக்கிக் கொண்டிருப்பார்கள்!

எனவே, வேறு சபைகளோ அல்லது பாஸ்டர்களோ, உங்கள் சபையிலிருந்து சில ஜனங்களை தங்களோடு இழுத்துக் கொண்டால், அவர்களை நீங்கள் விட்டுவிடவேண்டும். அதைக்கூட ஒரு சிறந்த காரணத்திற்காகவே தேவன் தம்முடைய 'சர்வ ஆளுகையில்' அனுமதித்திருப்பார்.

இதை யோவான் அப்போஸ்தலன் கூறும்போது "அவர்கள் நம்மைவிட்டு பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாய் இருக்கவில்லை! நம்முடையவர்களாய் இருந்தார்களானால், நம்முடனே நிலைத்திருப்பார்களே! 'எல்லோரும் நம்முடையவர்கள் அல்லவென்று' வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்" (1யோவான்.2:19).

அவ்வித "சலிக்கப்படும் வேலையை" தேவன் அனுமதிக்கும்போது "பெலவீனமான ஒரு உண்மை விசுவாசியை கூட" நாம் இழந்து போகமாட்டோம் என்பது உறுதி! கர்த்தர் தொடர்ந்து கூறும்போது "இதோ, இஸ்ரவேல் வம்சத்தாரை சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும், ஒரு (உண்மையான) கோதுமை மணியும் தரையிலே விழுவதில்லை" என ஆமோஸ்.9:9-ல் கூறினார். இது கர்த்தருடைய வாக்குதத்தம்! கோதுமையை புடைப்பதுபோல், **சபை புடைக்கப்படுவது அவசியம்.** *இல்லையென்றால், சபையில் தேவன் செய்து கொண்டிருக்கும் அப்பத்தில்,* **கற்களும்** *சேர்ந்து வந்துவிடும். ஆகவே, நாம் தேவனைப் போலவே, நம்முடைய சபையின்* **தரம் ஒன்றின் மீது மாத்திரமே** *ஆர்வம் கொண்டிருக்கவேண்டும், எண்ணிக்கையின் மீது அல்ல!*

சபையின் ஒழுங்கு நடவடிக்கை

சபையில், தேவனுடைய உயர்ந்த தரத்தை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்! ஆகவே, சில சமயங்களில், பாவம் செய்த ஒரு சகோதரனை தவிர்க்க முடியாத பட்சத்தில், **சபையை விட்டு புறம்பாக்குவது அவசியமாயிருக்கிறது.** *இந்த அப்போஸ்தல அதிகாரத்தை பவுல் கையாண்டு, ஒரு சமயம் "அப்படிப்பட்ட ஒரு விசுவாசியின் ஆவி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக அவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன்" (1கொரி.5:5) என கூறினார். இவ்வாறு நடந்தால் மாத்திரமே, ஒரு சபை தூய்மையுள்ளதாய் இருக்க முடியும்!*

மூப்பர்கள்கூட, தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருந்தால், முழு சபைக்கும் முன்பாக அவர் கடிந்து கொள்ளப்பட வேண்டும் என பரிசுத்தாவியானவர் கட்டளையிட்டிருக்கிறார். இதே வேத வாக்கிய

பகுதியில், உண்மையுள்ள மூப்பர்களுக்குத் தரவேண்டிய இரட்டிப்பான கனமும்! அவர்கள் பாவம் செய்யும்போது எடுக்க வேண்டிய ஒழுங்கு நடவடிக்கையும்! ஓர் கட்டளையாக சேர்ந்தே எழுதப்பட்டுள்ளது (1தீமோ.5:17,20). கர்த்தர் **மோசேயையும் பேதுருவையும்** எல்லோருக்கும் முன்பாக கனம் செய்தார். அதே சமயம், அவர்களை எல்லோருக்கும் முன்பாக கடிந்து கொள்ளவும் செய்தார். இதே செயலை, பின்மாற்றமடைந்த ஐந்து சபை மூப்பர்களுக்கும், தேவன் செய்ததை வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் காண்கிறோம்.

> **ஒரு ஸ்தல சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, சபையிலிருந்து புறம்பாக்கப்பட்ட சில விசுவாசிகளிடமோ அல்லது ஒரு சபையில் ஒரு முரட்டாட்ட ஆவியோடு விலகிய விசுவாசிகளிடமோ நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என தேவனுடைய வார்த்தை மிகத் தெளிவாய் கூறுகிறது. பரிசுத்தாவியானவர் கூறும்போது "அப்படிப்பட்டவனுடனேகூட கலந்திருக்கக்கூடாது" (1கொரி.5:11, 2தெச.3:14) எனவும் "அவர்களை விட்டு விலக வேண்டும்" (ரோமர்.16:17) என புத்தி கூறினார்.**

சில விசுவாசிகள், பரிசுத்தாவியானவர் எழுதிய இந்த வசனங்கள் அதிக கடினம் என்று எண்ணி, மதியீனமாய் இவ்வித முரட்டாட்ட காரர்களை ஆறுதல் செய்யும்படி போகிறார்கள். இதன் விளைவு என்னவென்றால், முரட்டாட்டம் செய்து சபையை விட்டு விலகியவர்கள் "பன்றிகளோடு புசித்ததை இனி ஒருபோதும் விட்டு விடாமல், மனந்திரும்பி பிதாவின் வீட்டிற்கு வராதவர்களாகவே" போய் விடுகிறார்கள் (லூக்கா.15:16,17). அதனிமித்தமாய், அவர்கள் நித்திய இழப்பை அடைகிறார்கள். இதுபோன்ற நேரங்களில் செய்திடக்கூடிய ஞானமுள்ள செயல் என்னவென்றால் "அந்த முரட்டாட்ட விசுவாசிகள் மனந்திரும்பி" தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, தேவனோடும் அவருடைய ஜனத்தோடும் மீண்டும் ஐக்கியத்தை நாடும்படி **புத்தி சொல்வதேயாகும்**!

சபையில், நீதிக்கு விரோதமாய், ஒருவர் பக்கமாவது 'ஒரு பொய்யான விசுவாச உணர்வோடு' அவருக்கு சார்பாய் இருந்துவிடக் கூடாது. எந்த சகோதரனையும் சார்ந்து கொண்டு, தேவனுடைய தூய்மையான தரத்தை நாம் ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. திவ்விய அன்பு, சத்தியத்தில் எப்போதும் மகிழ்ந்திருக்கும்! அது அநீதியில் ஐக்கியம் வைத்திருப்பதில்லை!! (1கொரி.13:6). இங்குதான், நாம் "தனிமனித ஆராதனை குழுவிலிருந்து" (CULT) வேறுப்பட்டிருக் கிறோம். அதுபோன்ற தனிநபர் ஆராதனை குழுவினர்கள், தங்கள் சக அங்கத்தினர் அநீதியான செயலை செய்தாலும், அதை ஆதரிப்பார்கள்.

இதுபோன்ற பல உதாரணங்களை நாங்கள் கண்டிருக்கிறோம். தனிநபர் ஆராதனை குழுவினர், நம்முடைய சபைகளிலிருந்து 'அவர்களின் பாவத்தினிமித்தம்' புறம்பாக்கப்பட்டவர்களை, அவர்கள் மனந்திரும்பாமலும் அல்லது ஒப்புரவாகாமலும் இருந்தபோதும் தங்களோடு வரவேற்று சேர்த்து கொள்கிறார்கள்!

ஒரு நபரின் **நித்தியமான நன்மையே** *நமக்கு மேலோங்கியதாய் இருக்க வேண்டியதே அல்லாமல், நம் சபையில் எண்ணிக்கையை பெருக்குவதாய் இருந்திடக்கூடாது!*

உங்கள் சபை ஒரு கெட்ட சாட்சியுடையதாயிருந்தால், அதை ஒத்துக்கொள்வதே நலம்! அல்லாமல், எல்லாம் சரியாய் இருப்பதைப் போல், பாசாங்கு செய்து, காரியங்களை மூடி மறைத்துவிடக்கூடாது. இயேசு ஒருபோதும், தம்முடைய ஐந்து சபைகளின் வீழ்ச்சியை மறைத்திட முயற்சிக்கவில்லை (வெளி.2,3). அதற்குப் பதிலாக, எல்லோரும் வாசிக்கும்படி அவர்களின் வீழ்ச்சியை வெளியரங்கப் படுத்தினார். சுய நீதி கொண்டவர்களைத் தேடி அவர் வராமல், தங்கள் பாவங்களை நேர்மையாய் ஒத்துக்கொண்டவர்களைத் தேடியே வந்தார்! தங்கள் வீழ்ச்சியை மூடுகிறவர்களுக்கு "யாதொரு சுத்திகரிப்பும்" அடைவதற்கு வாய்ப்பில்லை.

*ஒரு புதிய உடன்படிக்கை சபைக்கு 'மூப்பராய்' இருப்பது மிகப்பெரிய பாக்கியமாகும். ஆகிலும், அது மிகப்பெரிய பொறுப்பை நம்மீது கொண்டு வருகிறது! அந்தப் பொறுப்பு, நாம் கர்த்தருக்கு முன்பாக நடுங்கி நிற்க வேண்டிய இடத்திற்கும் நடத்துகிறது. ஒரு மூப்பராய் இருப்பதினிமித்தம் பெற்றுக்கொண்ட கனத்தையும் சிலாக்கியத்தையும் நாம் ஒருபோதும் "தியானித்துவிடக்" கூடாது! ஒரு மூப்பருக்குரிய நம்முடைய பொறுப்பு ஒன்றை மாத்திரமே நாம் எப்போதும் சிந்தனை கொண்டிருக்க வேண்டும்! நாம் தாழ்மையில் தரித்திருந்தால் "*__முடிவுபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருப்பதற்கு__*" தேவன் நமக்கு கிருபை அளிப்பார்!*

சபையின் ஐக்கியம் கட்டப்படவேண்டும்

தங்கள் சபைகளில் "தேறிவரும் ஐக்கியத்தைக் காண்பதற்கு" மூப்பர்கள் பாரம் கொண்டவர்களாயிருக்கவேண்டும். ஆகிலும், அந்த ஐக்கியம் முதலாவது மூப்பர்களிடத்தில் துவங்குவதாயிருக்கவேண்டும்! யோவான்.17:21-ம் வசனத்தில் "ஐக்கியத்தின் ஆச்சரியமான தரத்தை" கர்த்தர் நமக்கு முன்பாக வைத்துள்ளார். இயேசு இந்த பூமியில் இருந்த போது, அவர் பிதாவோடு கொண்டிருந்த **'அதே ஐக்கியத்தை'** *சீஷர்களும்*

*பெற்றிருக்க இயேசு விரும்பினார். இந்த பூமியில், தன் பிதாவிடம் கொண்ட ஐக்கியத்தை இயேசு நிலை நிறுத்திய ஒரே வழி "***தன் சுயசித்தத்தை எப்போதும் வெறுத்தார்***" என்பதேயாகும் (யோவான்.6:38; மத்தேயு.26:39). இதனிமித்தமே "சிலுவை" நம் ஜீவியத்தின் மையமாய் எப்போதும் இருக்கவேண்டும்.*

தங்களுக்கானதைத் தேடாமல், தங்கள் சுயத்தை வெறுத்து, ஒருவருக்கொருவர் ஐக்கியமாய் நடந்திடும் மூப்பர்கள் கொண்ட ஒரு சபையில், சாத்தான் ஒருபோதும் உள்ளே பிரவேசித்திட முடியாது!

பழைய ஏற்பாட்டு வேதவாக்கியத்தில், ஆகாய் ஜனங்களைப் பார்த்து "உங்களுக்கானதைத் தேடாமல், உங்கள் சுயத்தை வெறுத்து, தேவனுடைய வீட்டை கட்டுங்கள்!" என சவால் உரைத்து கூறினார்:

"என்னுடைய வீடு பாழாய் கிடக்கும்போது நீங்கள் ஆடம்பர வீட்டில் குடியிருக்கும் காலம் இதுவோ? இதனால் ஏற்பட்ட விளைவைப் பாருங்கள்: நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுவடை செய்தீர்கள். உங்களுடைய சம்பாத்திய வருமானம், பொத்தல் பையிலே போட்டதைப்போல் மறைந்து விடுகிறது.... அதிகம் வரும் என்று நீங்கள் எதிர்பார்த்து வெகு கொஞ்சமே பெறுகிறீர்கள்! அந்த கொஞ்சத்தை வீட்டிற்கு கொண்டு வரும்போது, அதுவும் இல்லாது போகிறது! ஏன்? என்வீடு பாழாய் கிடக்கும்போது நீங்களோ அதற்கு அக்கறைப்படவில்லை. உங்களிடம் நீங்கள் வைத்திருந்த ஒரே கரிசனை உங்கள் சொந்த வீடேயாகும். இதனிமித்தமே வானத்திலிருந்து உங்களுக்கு மழையை வருஷிக்கப் பண்ணாமலும், பூமியில் பலன் கிடைக்காமலும் போனது.... அப்போது, ஜனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்! அவர்கள் வந்து தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலை செய்தார்கள்!" (ஆகாய்.1:3-14 Living Bible & NASB).

அவ்வாறாகவே, முழு அர்ப்பணத்தோடு அவருடைய சபையை கட்டுவதற்கு நம்முடைய இருதயங்களையும் கர்த்தர் எழுப்புவதற்கு விரும்புகிறார்!

"கிறிஸ்து சபையை அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபேசியர்.5:25) என வாசிக்கிறோம்.

திவ்விய சுபாவத்திலும் ஊழியத்திலும் காண வேண்டிய வளர்ச்சி

நம் ஜீவியத்தில், **திவ்விய சுபாவத்தில்** *வளருவது மாத்திரமே கொண்டிருந்து 'ஒரு பக்க வளர்ச்சியாய்'* **கர்த்தருடைய ஊழியத்தில்** *வளராமல் இருந்துவிட முடியும். இயேசுவைப்போலவே மாறுவது, அவரைப் போன்ற திவ்விய சுபாவத்திலும், அவரைப் போன்ற*

ஊழியத்திலும் சேர்ந்ததேயாகும். அப்படி இல்லையென்றால், சரீரத்தின் ஒரு பாதியில் அதிக சதை கொண்டவர்களாய் (திவ்விய சுபாவத்தில் மாத்திரமோ அல்லது ஊழியத்தில் மாத்திரமோ) ஆனால், **அடுத்த பாதியில்** *எலும்பும் தோலும் உடையவர்களாய் நாம் காணப்படுவோம்!*

பாவத்தை ஜெயித்து வாழ்வதை மாத்திரமே கொண்டு, ஆண்டவருடைய சபையைக் கட்டுவதற்கு நம்மிடம் கரிசனை இல்லையென்றால், நாம் இயேசுவைப் போல் இல்லை! நாம் நித்திய காலமும், பரலோகத்தின் தேவனை ஆராதிப்பதின் பாக்கியம் பெற்றிருந்தாலும், "இந்த ஒரே வாழ்க்கையில்தான்" நாம் அவருக்கு தியாகமுடன் ஊழியம் செய்திட வாய்ப்பு உண்டு!

*நம்முடைய சுபாவம் கிறிஸ்துவைப்போல் வளர்ச்சி அடைய நாம் செய்திட வேண்டிய தியாகம் "***நம் சுயசித்தத்திற்கு மரிக்கும்***" ***உள்ளானதொன்றே ஆகும்.** *ஆனால், நாம் சபையை கட்ட வகைதேடும் போது,* **வெளியரங்கமான தியாகங்களையும்....** *தூக்கத்தை இழப்பது, ஓய்வு இழப்பது, சொகுசு இழப்பது, ஆரோக்கியம் மற்றும் பணத்தை இழப்பது ஆகிய அநேக தியாகங்கள் செய்திட வேண்டும்! இயேசு நாசரேத்தூரில் ஜீவித்த 30 வருடங்களில், வெளிப்படையான தியாகங்கள் வெகு கொஞ்சமே ஆகும். ஆனால், அவர் ஊழியத்தை துவங்கிய உடன் ஏராளமான கடும்பயணங்கள் செய்ய வேண்டியதாயிருந்தது! படுத்து உறங்க இடமில்லாதிருந்தது! சாப்பிடுவதற்கு நேரமில்லாதிருந்தது! சாத்தானிடமிருந்தும் ஜனங்களிடமிருந்தும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியதாயிருந்தது!*

ஆகவே இயேசுவின் மாதிரியை பின்பற்றி நம் ஜீவியத்திலும் நம் ஊழியத்திலும் தியாகத்துடன் நடப்போமாக!

9

வேலைக்கார – தலைவனின் ஆவிக்குரிய அதிகாரம்

தே*வன் மாத்திரமே ஒரு மனிதனை ஆவிக்குரிய தலைவனாய் நியமனம் செய்திட முடியும். ஒரு ஊழியத்திற்குரிய நியமனமோ அல்லது சபையிலுள்ள ஒரு அலுவலகத்தின் நியமனமோ, மனுஷரால் மாத்திரமே ஏற்பட்டதாயிருந்தால், நீங்கள் ஒருபோதும்* **கிறிஸ்துவின் அதிகாரத்தை** *அப்பியாசப்படுத்த இயலாதே!*

இயேசுவின் மாதிரியை பின்பற்றுங்கள்

கிறிஸ்துவை பின்பற்றுவதற்குரிய முதல் அடிச்சுவடு காட்டும் வசனமாவது: "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக்கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, **அடிமையின் ரூபமெடுத்து,** *மனுஷர் சாயலானார்" (பிலி.2:5-7) என்பதேயாகும்.*

"எல்லா மனுஷருக்கும் ஓர் அடிமையாய் மாறுவதே" நம் ஆண்டவர் எடுத்து வைத்த முதல் அடிச்சுவடு ஆகும். மூப்பர்களாகிய நாமும், இந்த முதல் அடிச்சுவடை எடுத்து வைக்க வேண்டும்! ஒரு மூப்பனுடைய பதவியில், நீங்கள் மற்றவர்களைக்காட்டிலும் மேலானவர்கள் என எப்போது எண்ணத் துவங்குகிறீர்களோ, அப்போதே ஒரு மூப்பனுக்குரிய தகுதியை இழக்கிறீர்கள்!

மூப்பர்கள் 'பரிசுத்தவான்களின் கால்களைக் கழுவுகிறவர்களாய்' இருக்க வேண்டும்! மேலும் "ஆவிக்குரிய ரீதியில்.... சபையை சுத்தப்படுத்தும், கழிவறை - துப்புரவு செய்கிறவராய்" இருக்க வேண்டும். இவ்வாறாக, அவர்கள் எப்போதுமே சாதாரண சகோதரர்களாய் நிலைத்திருக்க வேண்டும். மூப்பராய் இருக்கும் ஸ்தானத்திலிருந்து இறங்கிட ஆயத்தமுள்ளவர்களாயும், எந்த நேரத்திலும் ஒரு சாதாரண சகோதரனாய் இருந்திட விருப்ப

முடையவராய் இருக்க வேண்டும்! ஒரு வீட்டில் உள்ள கழிவறை சுத்தம் செய்கிறவரைப் பார்த்து "இனி கழிவறையை கழுவாமல், இனி முதல் ஒரு குடும்பத்தின் அங்கத்தினராய் மேஜையில் உட்காருங்கள்" என கூறியதைக் கேட்டு எந்த ஒரு வேலைக்கார கழிவறை - கழுவுபவனும் மனம் புண்பட மாட்டான். அதுபோலவே எந்த ஒரு மூப்பரும், ஒரு நாளில் அவருடைய மூப்பர் பதவியிலிருந்து விலகி, சபையில் ஒரு சாதாரண சகோதரனாய் அமர்ந்திருக்கச் சொல்லும்போது, மனம் புண்படக்கூடாது!

உங்கள் மூப்பர் பொறுப்பை ஓர் இறுகிய கரம் கொண்டு பிடித்துக் கொள்ளாமல், அதை திறந்த கையில் வைத்திருப்பதாக கொண்டிருந்து, எப்போது வேண்டுமானாலும் தேவன் அதை உங்களிடமிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்! உங்கள் மூப்பர் பொறுப்பை, **உங்களுக்குச் சொந்தமாய்** *இறுகப்பிடித்து கொண்டால், இப்போது உங்கள் மூப்பர் பதவி "உங்களுக்கு ஓர் விக்கிரகமாய்" மாறிவிட்டது! இதனிமித்தம், நீங்கள் இயேசு கிறிஸ்துவின் சீஷராயும் இருந்திட முடியாது! (லூக்கா.14:33).*

ஒரு தலைவன், ஒரு சகோதரனாகவே இருக்கிறான்

ஒரு ஆவிக்குரிய தலைவன், தன் மந்தையை "சிலுவையின் பாதையில்" எப்போதுமே நடத்த வேண்டும். இதனிமித்தமே, அவன் உண்மையுள்ளவனாய் "சுயமாகிய தன்னையே வெறுக்கும் வழியில்" தொடர்ந்து நடந்து வரவேண்டும்.

> கிறிஸ்துவைப் போலவே, எல்லோருக்கும் ஒரு வேலைக்காரராக இருக்க விரும்பும் வாஞ்சை இல்லாத ஒருவரும், கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒரு தலைவராய் இருந்திட முடியாது.

இதை இயேசு கூறும்போது "இந்த பூமியில் உள்ள இராஜாக்களும், பெரிய மனிதர்களும் ஜனங்களை ஆளுகை செய்கிறார்கள்! நீங்களோ அப்படி இருக்கக்கூடாது. உங்களுக்குள், பெரியவராய் இருக்க விரும்புகிறவர், **உங்கள் வேலைக்காரனாய்** *இருக்கக்கடவன். எல்லோரையும்விட மேலாய் இருக்க விரும்புகிறவர்,* **எல்லோருக்கும் அடிமையாய்** *இருக்கக்கடவர்! உங்கள் மத்தியில் மேசியாவாக இருக்கும் நான்கூட, ஊழியம் கொள்ளும்படி வராமல் பிறருக்கு ஊழியம் செய்து உதவிடவே வந்தேன்! (மாற்கு.10:42-45* Living*) என இயேசு கூறினார். ஒரு மாபெரும் அப்போஸ்தலனாய் விளங்கிய பவுல், வேறு யாரைக் காட்டிலும் அதிக அதிகாரத்தை கொண்டவராயிருந்தும், மற்ற*

எல்லாருக்கும் ஒரு வேலைக்காரனாகவே இருந்தார்! (2கொரி.4:5; 1கொரி.9:19).

ஒரு ஆவிக்குரிய தலைவன், அவனுக்கு கீழாக தேவனால் தரப்பட்ட ஜனங்கள் மீது அதிகாரத்தை அப்பியாசப்படுத்திடவே அழைக்கப்பட்டிருக்கிறான். அதேசமயம், அவன் அவர்களுக்கு ஒரு சகோதரனாகவும், ஒரே சரீரத்திலுள்ள உடன் அவயவமாயும் இருப்பான். இவ்வாறு **தலைவனான – சகோதரன்** *என்ற உறவை சமமாய் வைத்து பாவிப்பது சற்று கடினமேயாகும். நாம் ஏதாவது ஒரு வகையில் சமநிலை இழந்திட உந்தப்படுகிறோம். ஆகவேதான், நாம் தொடர்ச்சியாய் ஒரு சாதாரண சகோதரனாய் இருந்திட ஆண்டவரிடமிருந்து அதிக கிருபை பெறவேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த சமநிலையை நாம் பாதுகாத்திட வேண்டுமென்றால்,* **தேவனோடு நெருங்கிய முக-முகமான உறவில்** *வாழ வேண்டியது அவசியமாகும். இதுவே, 20 இலட்சம் தேவ ஜனங்களுக்கு, அவர்களின் மிக மோசமான சூழ்நிலைகளிலும், 40 வருடங்களாய்* **மோசே** *வலிமையான தலைமை தாங்கி நடத்தி வந்ததற்குரிய இரகசியமாயிருக்கிறது (உபாகமம்.34:10; எண்ணாகமம்.12:8).*

தேவனால் வழங்கப்படும் ஆவிக்குரிய அதிகாரம், நாம் மற்றவர்கள் மீது அதை திணிக்க வேண்டும் என்பதாகவோ அல்லது மற்றவர்கள் அந்த அதிகாரத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமென நிர்பந்திப்பதோ அல்ல! நாம் ஒருபோதும், பிறர் நாம் சொல்வதைக் கேட்க வேண்டுமென்றோ அல்லது நமக்கு கீழ்ப்படிய வேண்டுமென்றோ, கட்டாயப்படுத்தக் கூடாது.

> **தேவனுடைய ஸ்தானத்தில் நிற்பவர்களை எதிர்த்து நிற்கும் யாராயிருந்தாலும், அவர்கள் மீது தேவனே நடவடிக்கை எடுப்பார். ஆகவேதான், கர்த்தருடைய ஊழியன் யாரிடமும், ஒருபோதும் வாக்குவாதம் செய்யமாட்டான் (2தீமோ.2:24,25).**

தேவன் உங்களைத் தாங்குவாரென்றால், உங்களுடைய ஸ்தானத்தை தற்காத்துக் கொள்ள நீங்கள் ஏன் முயற்சிக்க வேண்டும்? தேவனே உங்களை தற்காத்து உங்கள் அதிகாரத்தை நிலைப்படுத்துவார்! இதற்கு மாறாக நீங்களே உங்கள் அதிகாரத்தை காத்துக்கொள்ள முயற்சித்தால், உங்கள் அதிகாரம் தேவனால் தரப்பட்டதல்ல என்பதற்கு 'அதுவே' அடையாளமாயிருக்கிறது!

நாம் ஒருபோதும் 'தலைவன்' (குரு) என்ற பட்டத்தை நமக்கென எடுத்துக்கொள்ளக்கூடாது (மத்தேயு.23:10). மேலும், நாம் 'பாஸ்டர்' என்றும் அழைக்கப்படக்கூடாது. ஏனெனில் எபேசியர்.4:11 கூறுகிறபடி

'மேய்ப்பர்கள்' ஆண்டவரால் சபைக்கு அருளப்பட்ட ஒரு வரமாகவே இருக்கிறார்! அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள் என்பதைப் போலவே மேய்ப்பர்களும் இருக்கிறார்கள்! இந்த ஊழியங்கள் யாதொன்றும் சபையில் இயங்கும் அலுவலகம் அல்ல! இந்த ஊழியங்கள் செய்திடும் ஒருவருக்கும் 'பட்ட பெயராய்' தரப்பட்டதும் அல்ல!

தூற்றுவோருக்கு நாம் காண்பிக்கும் பிரதிபலிப்பு

ஒரு ஆவிக்குரிய தலைவன் தாக்கப்படும்போதோ அல்லது தூற்றப்படும்போதோ, அவன் தன்னை தற்காத்துக்கொள்ளவோ அல்லது தன்னை நியாயப்படுத்தவோ அல்லது தன்னை நிரூபிக்கவோ கூடாது! வேதம் கூறுகிறபடி "கிறிஸ்துவே உங்கள் மாதிரி! அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள்..... அவர் வையப்படும்போது பதிலுக்கு வையவில்லை! அவர் பாடுபடும்போது, அதைத் தவிர்க்க பயமுறுத்தவும் இல்லை! அவரோ தன்னுடைய காரியத்தை, நியாயமாய் தீர்ப்பு செய்கிற தேவனுடைய கரத்திலேயே எப்போதும் ஒப்புக் கொடுத்தார்" (1பேதுரு.2:21,23 - Living*).*

மாபெரும் அதிகாரமாய் விளங்கிய தேவகுமாரன், மனுஷர்களோடு போரிடவோ, அவர்கள் மீது கொண்டிருந்த ஆளுகையை வற்புறுத்தவோ, மறுத்து விட்டார்! தன்னைப் பாதுகாத்து நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பை தேவனிடமே கொடுத்து விட்டார்! இந்த பாதையிலேதான் சபையிலுள்ள எல்லா மேய்ப்பர்களும் நடந்து வரவேண்டும்.

> **தேவனுடைய அதிகாரத்திற்கு கீழ் ஓர் ஆவிக்குரிய தலைவனாய் நீங்கள் வாழ்ந்து வரும்போது, நீங்கள் சகலத்தையும் அவருடைய கரங்களில் ஒப்புவித்துவிட்டு நிம்மதியாய் இருப்பீர்கள். உங்கள் மீது வரும் தூற்றுதலையும், குறை கூறுதலையும், புறங்கூறுதலையும் உங்களால் தாங்கிக் கொள்ள முடியும்.**

அதுஏனென்றால், "அவரே தன்னுடைய ஊழியர்களை இதுபோன்ற தாக்குதல்களிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்வார்" என தேவனுடைய வாக்குதத்தம் கூறுகிறது (ஏசா.54:17). யாரோ சிலர் நம்மீது சகதியை வீசும்போது, அதைத் துடைத்துவிட நாமாக முயற்சித்தால், அந்த சகதி நம் ஆடைகளைக் கறைப்படுத்தி விடும். அதை அப்படியே விட்டுவிட்டால், குறிப்பிட்ட காலத்திற்குள் அது காய்ந்து தானாகவே கீழே விழுந்துவிடும். அந்த இடத்தில் கறை இருப்பதில்லை. இதுவே, 'தீமை பேசுகிறவர்களிடத்தில்' நாம் நடந்து

*கொள்ளவேண்டிய ஞானமுள்ள வழியாகும். இன்றுள்ள சபைகளில், "**ஆவிக்குரிய மனது கொண்ட**" தலைவர்களுக்கு பெரும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபடியால், பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இன்று அநேகர் பட்டங்களைப் பிடித்து கொண்டிருக்கிறார்கள்! தங்கள் அலுவலக அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்! ஆனால், "உண்மையான ஆவிக்குரிய தலைமைத்துவம்" வெகு அபூர்வமாய் போய் விட்டது. தன்னை நோக்கி வந்த கூட்டமான ஜனங்களைக் கண்ட இயேசு அவர்கள் மீது மிகுந்த மனதுருக்கம் கொண்டு, "அவர்களுடைய பிரச்சனைகள் ஏராளமாயிருக்கிறது! தாங்கள் என்ன செய்யவேண்டு மென்று அறியாதிருக்கிறார்கள்? உதவிக்கு எங்கே போவது என தெரியாதிருக்கிறார்கள்? 'ஒரு மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலவே' இருக்கிறார்கள்" (மத்தேயு.9:36 -* Living*) என கூறினார். அன்றுள்ள அதே நிலைமையே இன்றும் காணப்படுகிறது!*

ஒரு மேய்ப்பனின் இருதயம் கொண்ட! ஒரு வேலைக்காரனின் ஆவிகொண்ட! தேவனுக்குப் பயந்து, அவருடைய வார்த்தைக்கு நடுங்குகிற புருஷர்களாகிய தலைவர்களே, சபைக்கு அதிகமாய் தேவைப்படுகிறார்கள்!

'அடங்கியிருத்தல்' ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், திணிக்கப்படக் கூடாது

மற்றவர்கள் நம்மை "மாபெரும் தேவமனிதனாக" ஏறிட்டுப் பார்க்க அல்லது நம்மை விக்கிரகமாய் மாற்றிக்கொள்ள அனுமதித்து விடக்கூடாது! ஜனங்கள் நம்முடைய 'ரசிகர்களாய்' மாற்றுவதற்கும் அனுமதித்துவிடக்கூடாது! அவர்கள் யாவரும் நம்முடைய சகோதரர்க ளாகவே எப்போதும் இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், அவர்கள் ஒருபோதும், தங்கள் **தலையாகிய கிறிஸ்துவோடு ஓர் தனிப்பட்ட உறவுகொண்டு** *வளர்ந்திட முடியாது.*

நாம் ஒருவரையும் நம்மோடு இணைத்துவிடக்கூடாது. அதற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் தேவனுடைய முகத்துக்கு முன்பாக வாழும்படி மாத்திரமே ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் செய்கின்ற எந்த விஷயத்திலும் "நம்முடைய அங்கீகாரத்தை" தேடக்கூடாது. **நம்மோடு யாராவது ஒட்டிக்கொள்வதுபோல்** *தோன்றினால், அதுபோன்ற ஒருவரை உடனே உதறி விடவேண்டும். நாம் சகோதரனுக்கு ஒரு ஆலோசனைகூறும்போது, அதற்கு அவர் மறுப்பதற்கும் சுயாதீனம் தரவேண்டும்! நம்முடைய ஆலோசனையைப் புறக்கணிக்கவோ அல்லது அவர் விரும்புகிறவிதமாய் அந்தக் காரியங்களை சுதந்திரமாய் செய்திடவோ விட்டுவிட வேண்டும். அச்சமயத்தில், அவர் ஏதாவது*

தவறு செய்துவிட்டால், நாம் துரிதமாய் அவருக்கு உதவி செய்ய வேண்டும்! அப்படி இல்லாமல் "நான் உனக்கு ஏற்கெனவே சொன்னேன் அல்லவா?" என்று ஒருபோதும் கூறிடக் கூடாது!

ஒரு மூத்த சகோதரன் "தேவன் சபையில் நியமித்த ஆளுகைக்கு அடங்கியிருக்க வேண்டும்" என்ற முக்கியத்துவத்தை 'தந்திரமான முறையில் போதித்து' சபையில் உள்ள எல்லோரும் தனக்கு அடங்கியிருக்கவேண்டும் என உணர்த்துவது சாத்தியமேயாகும். இதுபோன்ற நிலை, ஜனங்களின் இருதயத்தில் பயத்தை உண்டுபண்ணி, தங்கள் மூத்த சகோதரனோடு 'ஒத்துப்போகமுடியாத நிலையை' கூறமுடியாத அளவிற்கு அச்சம் கொண்டவர்களாய் மாற்றிடமுடியும்! இது தீமையானதாகும்! **அடங்கியிருத்தல், மற்றவர்கள் நம்மீது கொண்ட நம்பிக்கையின் அளவை மாத்திரமே பொருத்ததாகும்!** அதுஏனென்றால், நம் ஜீவியத்தில் தேவனுடைய கிரியையை காண்பதினிமித்தமோ, நம் குடும்ப ஜீவியத்தின் தேவபக்தியான வாழ்க்கையை காண்பதி னிமித்தமோ, அவர்களின் 'தேவையான நேரத்தில்' அபிஷேகிக்கப்பட்ட நம் வார்த்தையினால் உதவி பெற்றதினிமித்தமோ மாத்திரமே அந்த நம்பிக்கை உருவாகிறது!

நாம் மூப்பர்களாய் இருப்பதினிமித்தம் மற்றவர்களை நமக்கு அடங்கியிருக்கச் செய்வது, நாம் மெய்யாகவே தேவனை அறியாத நம்முடைய 'பாதுகாப்பற்ற தன்மையையே' சுட்டிக்காட்டுகிறது! ஏனென்றால், ஜனங்கள் தனக்கு அடங்கியிருப்பதற்கும் அல்லது தனக்கு முரட்டாட்டம் செய்வதற்கும் **தேவனே** சுயாதீனம் கொடுத்திருக்கிறார்! ஆகவே, நாம் தேவனை விட பெரியவர்களல்ல. எனவே மூப்பர்களா யிருப்பவர்கள், யாரிடமிருந்தும் 'அடங்கியிருத்தலை' நிர்ப்பந்திக்கக் கூடாது. நாம் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோமே அல்லாமல், அடங்கியிருத்தலை நிர்ப்பந்தம் செய்வதற்கு அல்ல!

நம்முடைய **ஆத்தும வல்லமையான** நம் ஆள்த்துவத்தின் மேன்மையைக் கொண்டும், யாரையும் நமக்கு அடங்கியிருக்கச் செய்யாதவர்களாய் இருப்பதற்கு கவனம் கொள்ளவேண்டும். ஒரு திட மனம் கொண்ட மூப்பர், தன்னுடைய ஆள்த்துவ வல்லமையை பயன்படுத்தி, சபையிலுள்ள சிலரிடம் "ஒரு வசீகர பிடிப்பை" வைத்திருக்க முடியும்! இதுபோன்ற அனைத்தும் ஆத்துமத்திற்குரியதும், தீமையுமாகும். **எல்லா ஆத்தும-வல்லமையும் மரணத்திற்கு ஊற்றப்பட வேண்டும்.** சபையிலுள்ள நம்முடைய ஜனங்கள், நம்மோடு விடுதலையாய் பழகவேண்டும்! ஒருவராகிலும் நம்மைக் குறித்த யாதொரு பயமும் கொண்டிருக்கக்கூடாது!

பிரமாணத்துவ சர்வாதிகாரமும், செத்தகிரியைகளும்

நாம் ஒருபோதும் சபையை சர்வாதிகாரமாய் நடத்தி, அங்குள்ள சகோதர சகோதரிகள் ஏராளமான சட்டதிட்டங்களை கைக்கொள்ளும் பாரத்திற்கு உட்படுத்தக்கூடாது. அப்படி இருந்தால், அந்த சபை ஒரு பிரமாணத்துவ 'கிளப்பாக' மாறி, உண்மையான தெய்வபயம் கொண்ட சகோதர சகோதரிகளால், **ஒரு வீட்டிலிருக்கும் உணர்வை அடையாமல்** *போய்விடுவார்கள். அதற்கு மாறாக, எல்லாவற்றிற்கும் 'ஆமாம்' கூறி நமக்கு உடனே கீழ்ப்படிகிறவர்கள், சபையில் ஒரு வல்லமையை பெற்று விடுவார்கள்!*

அநேக பிரமாணங்களைத் தந்து, நாம் பிறரிடம் பரிசுத்தத்தை உருவாக்கிட முடியாது. நாம் தேவனுடைய வார்த்தையையே பிரசங்கித்திட வேண்டும், ஆனால் ஒரு குறிப்பிட்ட மாதிரியை வைத்து, அதைப்போலவே ஒத்துஇருப்பதற்கு நாம் ஜனங்களை கட்டாயப் படுத்தக்கூடாது.

> **ஓர் தனிப்பட்ட உணர்த்துதல் இல்லாமல், நம்மை பிரியப்படுத்துவதற்கு மாத்திரமே ஜனங்கள் ஏதாவது செய்தால், அவர்களுடைய செய்கைகள் அனைத்தும் வெறும் செத்த கிரியைகளாகவே இருக்கும்!**

அந்த கிரியைகள் மனுஷருடைய கண்களுக்கு 'நீதியுள்ளதாகவும்' நல்லதாகவும் தோன்றினால் கூட, அது செத்த கிரியைகளே ஆகும்.

மனுஷர்களைப் பிரியப்படுத்துவதற்கோ, அல்லது கவர்ச்சிப் பதற்கோ அல்லது அவர்தன் மனசாட்சியை சமாதானப்படுத்துவதற்கோ செய்கின்ற அனைத்தும், நல்ல கிரியைகளாய் இருந்தாலும்! செத்த கிரியையே ஆகும்! எல்லா செத்தகிரியைகளும், தேவனால் ஏற்று கொள்ளப் படாதவைகளேயாகும். ஆண்டவரை மாத்திரமே பிரியப்படுத்தும்படி செய்யப்படும் கிரியைகளையே தேவன் ஏற்றுக்கொள்கிறார். இதுபோன்ற சிறந்த கிரியைகளைச் செய்வதற்கு சகோதர சகோதரிகளை நாம் நடத்த விரும்பினால், அன்று ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் தேவன் சுயாதீனமாய் விட்டு விட்டதைப்போலவே, அவர்களுக்கும் சுயாதீனம் தரப்பட வேண்டும். மெய்யான பரிசுத்தம், தெய்வ பயத்தினால் மாத்திரமே பூரணப்பட முடியும் (2கொரி.7:1). கிறிஸ்தவ தலைவர்களுக்கு பயப்படுவதினால் அல்ல!

ஓர் தகப்பனின் இருதயம் வேண்டும்

நாம் ஒருபோதும் நம்முடைய ஸ்தானத்தையோ அல்லது 'மூப்பர் என்ற பட்டத்தையோ' இச்சிக்கக்கூடாது. எவ்விதத்திலும், நம் எல்லா

சகோதர சகோதரிகளையும் விட பெரியவர்களாக ஒருபோதும் சிந்தித்து விடக்கூடாது. சபையிலுள்ள மற்றவர்களை, நம்மை காட்டிலும் மேன்மையானவர்களாக கருதவே நாம் மெய்யாகவே கட்டளையிடப் பட்டிருக்கிறோம் (பிலிப்பியர்.2:3).

நம் ஸ்தலத்திலுள்ள ஊழியத்தில் சிலரை தேவன் எழுப்பி, நம்மைவிட அவர்கள் மீது சகோதரர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தால், அதை தேவனுடைய கிரியையாகவே ஏற்றுக்கொண்டு **"அபிஷேகம் நிறைந்த அந்த சகோதரர்களுக்கு" சபையில் முக்கியத்துவம் அளித்து,** *நம்முடைய ஸ்தானத்தை அவர்களுக்கு விட்டு கொடுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், நாம் தேவனிடமே போராடுவதற்கு ஒப்பாகும்!*

ஒரு ஆவிக்குரிய தகப்பன், தன் ஆவிக்குரிய பிள்ளைகள் தன்னை விட ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து வருவதையே நாடுவான்! பிறர்மீது அதுபோன்ற வாஞ்சை நமக்கு இராவிட்டால், நாம் ஆவிக்குரிய தகப்பன்மார்கள் அல்ல! இந்நிலையில், நாம் மூப்பராயிருப்பதற்கும் தகுதியற்றவர்கள்! அப்படி இருந்தால், நம்முடைய ஸ்தலத்தில் கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படுவதற்கு நாமே இடையூறாய் இருந்துவிடுவோம்.

அசைக்கப்படுகிற யாவையும் தேவனே அசைத்துவிடுவார்

நம்முடைய வேதஅறிவு, பிரசங்கத்திறன், பிறர்மீது நாம் கொண்டிருக்கும் ஆத்தும வல்லமை, ஆகிய யாதொன்றும் தேவன் நம்மீது மகிழ்ச்சியாய் இருக்கிறார் என நியாயப்படுத்தும் அடையாளங்கள் அல்ல. தேவன் எப்போதுமே நீடிய பொறுமை யுள்ளவராய், முடிவான நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நீண்ட காலம் காத்திருப்பவராயிருக்கிறார்!

சில மூப்பர்கள், தங்கள் சர்வாதிகார மனப்பான்மையையும், சபையிலுள்ள தங்களுக்கு நெருக்கமான நண்பர்கள் மீது காண்பித்திடும் பாரபட்சத்திலிருந்தும் நீங்கிவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கலாம். ஆனால், ஆண்டவரோ சகலத்தையும் கவனத்துடன் நோக்கி, எல்லா விஷயங்களையும் துல்லியமாக குறிப்பெடுத்து வைத்திருக்கிறார். காலம் நிறைவேறும்போது, அவர் விரைந்து செயல்படுவார். அந்நாளில் அவர் ஒரு மாய்மால மூப்பனையோ அல்லது தன் மந்தையை ஆளுகைச் செய்யும் மூப்பனையோ அல்லது கடினமாய் அவர்களை நடத்தும் மூப்பனையோ அவர் விட்டு வைப்பதில்லை என்பதை காணலாம். அந்நாளிலே, தேவனிடத்தில் யாதொரு பாரபட்சமும் இல்லை

என்பதையும் நாம் காணமுடியும், ஆகவே "தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்" (1கொரி.10:12).

எபிரெயர்.12:26-28 வசனங்கள் நமக்கு கூறுவது என்னவெனில் "தேவன் அசைத்து, அசைவுள்ளவைகளை நீக்கிப்போட்டு, அசையாத வைகளை நிலைத்திருக்கும்படிச் செய்வார்" என்பதேயாகும். நம்மைச் சுற்றியுள்ள கிறிஸ்தவ உலகத்தில், வல்லமையான பிரசங்கிகள் பாவத்தில் விழுவதையும், புதியஏற்பாட்டு மாதிரியை பின்பற்றுவதாக கூறிக்கொள்ளும் சபைகள் பிளவுபட்டு, அசைக்கப்படுவதையும் காண்கிறோம். இவ்வாறு உலகமும், ஒத்தவேஷமும் ஒரு பக்கமாக..... பிரமாணத்துவமும் பரிசேயத்துவமும் மற்றொரு பக்கமாக கிறிஸ்தவ உலகில் எங்கு பார்த்தாலும் அசைவுண்டாயிருக்கும் இந்த காலத்தில், **அசைவில்லாத கிறிஸ்துவின் சரீரத்தை நாம் கட்டுவது எப்படி?** *ஆம் "நாம் பயத்தோடும் பக்தியோடும்.... நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்" என்ற உணர்வை எப்போதும் முன்வைத்து ஊழியம் செய்திடக்கடவோம்! (எபி.12:28,29).*

துணிகரமான பாவம்

சபையில் உட்கார்ந்து கொண்டே ஒரு விசுவாசி, எத்தனை நல்லது போல் பேசிக்கொண்டு சபையை குறைகூற தேவன் அனுமதிக்க மாட்டார்! ஒருவன் 'ஏதோ சில காரணங்களுக்காக' ஒரு சபையில் மகிழ்ச்சி அற்றவனாயிருந்தால், அவன் அந்த சபையை விட்டுவிட்டு வேறு ஏதாவது சபையில் சேர்ந்து கொள்ள வேண்டும்!

இந்த உதாரணத்தைப் பாருங்கள்: ஆசரிப்பு கூடாரத்தில் லேவியன் வம்சத்தார் மாத்திரமே தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை கையாளுவதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள். ஆனால், லேவியன் அல்லாத ஊசா, 'உடன்படிக்கை பெட்டியை சாய்ந்து விடாமல் பிடித்திருக்கும் நல்ல நோக்கத்தோடு' கைநீட்டி தொட்டபோது தேவன் அவனை அடித்தார்! அவன் மரித்துப்போனான்! (2சாமுவேல்.6:6,7). இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும்?

சபை ஆண்டவருக்கு உரியது! அவர் ஒருவருக்கே சபையை குறை சொல்லுவதற்கும், தான் அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டு திருத்துவதற்கும் அதிகாரம் உண்டு. வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில், மூப்பர்களையும் சபைகளையும் திருத்துவதற்கு அப்போஸ்தலர்கள் மூலமாகவே அவ்வாறு செய்தார்.

ஆகவே, அதுபோன்ற அதிகாரத்தை கர்த்தரிடமிருந்து பெறாத ஒருவராகிலும், சபையை திருத்துவதோ அல்லது குறைகூறுவதோ சரியானதல்ல. 'சபை கவிழப்போகிறது' என எண்ணி திருத்தினாலும் அது தவறு! **எந்த ஊசாக்களின் உதவியும் இல்லாமல், தேவன் தன்னுடைய சபையை பாதுகாத்திட முடியும்!**

ஒரு விசுவாசி தனிப்பட்ட விதத்தில் அவனுக்கு விரோதமாய் குற்றம் செய்தவர்களை கடிந்து கொள்ள முடியும் (லூக்கா.17:3, மத்தேயு.18:15). ஆனால், ஒரு ஸ்தல சபையை அவ்வாறு குறை சொல்லிட அவனுக்கு அனுமதி இல்லை. ஏனெனில், அந்த சபையின் மீது தேவன் அவனுக்கு பொறுப்பைத் தரவில்லை. நம்முடைய சபைகளில் உள்ள ஒவ்வொருவரும், இவ்விஷயங்களில் தங்கள் எல்லையை அறிந்திருக்க வேண்டும்.

விசுவாசிகள், தங்கள் ஸ்தல சபையை குறைகூறி குற்றப்படுத்தினால், அவர்கள் தேவனுக்கு பயந்திருக்கவில்லை என்பதையே நிரூபிக்கிறார்கள். அவர்கள் ஊசாக்கள்! இதுபோன்றவர்களை, ஏதாவது ஒருவகையில் தேவன் தண்டிப்பார்!

அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்றால், அவர்கள் செய்திட வேண்டிய ஒரே செயல் 'அந்த சபையை விட்டு வெளியே போவதுதான்!'

'பெரும்பான்மை' என்ற தோற்றம் அதிக பட்சத்தில் தவறே ஆகும்

தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகவும், இயேசுவின் போதனைக்கு விரோதமாகவும் போதித்திடும் ஒருவரிடமும் யாதொரு ஐக்கியமும் நாம் வைத்திருக்கமுடியாது. தேவன் இல்லாத திரள் கூட்டத்தில் நாம் நிற்பதைவிட, தேவனோடு நாம் தனித்து நிற்பதே நலம்! இன்றைய கிறிஸ்தவ உலகில் பொதுவாக, 'பெரும்பான்மை' தவறாகவே இருக்கிறது!

இதைக்குறித்து, ஐந்து உதாரணங்களை தேவனுடைய வசனத்திலிருந்து நாம் காணலாம்:

1. **பெரும்பான்மையான இஸ்ரவேலர்கள்** 'கன்றுகுட்டியை' ஆராதித்தபோது, கர்த்தருடைய பட்சத்தில் நிற்பவன் யார்? என மோசே கேட்டார். அப்போது ஒரே ஒரு கோத்திரத்தார் மாத்திரமே (லேவி) அவரோடு நின்றார்கள். ஆகவேதான், அவர்களுக்கே ஆசாரித்துவம் கொடுக்கப்பட்டது (யாத்திராகமம்.32,33). பெரும்பான்மையான 11- கோத்திரத்தார் தவறாயிருந்தார்கள்.
2. கானான் தேசத்தை பார்த்து வர 12 வேவுகாரர்கள் அனுப்பப்

பட்டார்கள். **பெரும்பான்மையான 10 பேர்** *விசுவாசிக்கவில்லை! (எண்.13,14). ஆனால் தேவனோ சிறுபான்மையில் நின்ற யோசுவாவோடும் காலேப்போடும் இருந்தார். அந்த பெரும்பான்மை ஜனத்தின் தீர்மானமும், கீழ்ப்படியாமையும் 6,00,000 ஜனங்கள் வனாந்திரத்தில் மரிக்கும்படி நடத்தியது!*

3. *தேவனால் அபிஷேகிக்கப்பட்ட* **தாவீதை** *தாக்குவதற்கு* **சவுல்** *எடுத்த தீர்மானம், பேரழிவிற்குள் நடத்தியது. இஸ்ரவேலில் பெரும்பான்மையினர், சவுலோடு இருந்தார்கள். ஆனால், தேவனோ தாவீதோடு இருந்தார்! (1சாமு.16). பிற்காலங்களில், தன் தகப்பன் தாவீதை, அப்சலோம் துரத்தியபோதும் அவனோடு பெரும்பான்மையான இஸ்ரவேலர்கள் இருந்தார்கள். ஆனால், தேவனோ தாவீதோடு இருந்தார்! (2சாமு.15).*

4. *இயேசு இந்த பூமிக்கு வந்தபோது, அவரை புறக்கணித்திட யூதர்கள் எடுத்த முடிவு, சுமார் 1900 ஆண்டுகள் அவர்களை சிதறடிக்கும் நிலைக்கு கொண்டு போய்விட்டது.* **பெரும் பான்மையினர், யூதர்களோடும் பரிசேயர்களோடும்** *நின்றார்கள். ஆனால் தேவனோ, இயேசுவோடு நின்று, அவரை மரணத்தி லிருந்து உயிரோடு எழுப்பினார்!*

5. *பவுலின் ஜீவிய கடைசியில், பெரும்பான்மையான பவுலின் நண்பர்கள் அவரை விட்டு விலகினார்கள்! ஆனால், கர்த்தரோ முடிவுபரியந்தம் பவுலோடு இருந்தார்! (2தீமோ.1:15; 4:16-18).*

10

முழுமையும் சார்ந்து, அவரை சேவியுங்கள்

ஒரு பொல்லாங்கனையும் ஒரு நீதிமானையும் பற்றி இன்றைய மார்க்க கிறிஸ்தவ உலகம் வைத்திருக்கும் கண்ணோட்டத்திற்கு தேவனுடைய வார்த்தை கொண்டிருக்கும் கண்ணோட்டம், மிகப் பெரிய வித்தியாசம் கொண்டதாயிருக்கிறது. பாவமான காரியங்களைச் செய்கிறவர்கள் 'பொல்லாத ஜனங்கள்' என மதவாத கிறிஸ்தவ உலகம் எண்ணுகிறது! அதுபோலவே 'நல்லவைகளைச் செய்து', சபைக்கு சென்று, வேதம் வாசித்து, ஜெபிப்பவர்களை நீதிமான்களாகிய ஜனங்கள் என்றும் எண்ணுகிறார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையோ, ஆபகூக்.2:4-LivingBible மொழிபெயர்ப்பின்படி "பொல்லாத அகங்காரம் கொண்டவர்கள் **தங்களை மாத்திரமே நம்பி** *இருக்கிறார்கள், தோற்றுப்போகிறார்கள்! ஆனால், நீதிமான்களோ* **தேவனை நம்பி,** *பிழைத்திருக்கிறார்கள்!" என காண்கிறோம்.*

ஆகவே, துன்மார்க்கம் கொண்ட ஒரு மனிதனின் அடையாளம், அவன் தன்னை நம்புவதும்! நீதிமானாயிருக்கும் ஒரு மனிதனின் அடையாளம், அவன் தேவனையே நம்பியிருக்கிறான்! என்பதேயாகும்.

இந்த தெரிந்து கொள்ளுதலையே, ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதாமுக்கு வைத்திருந்தார். அதை இருவகை மரங்களாய் வைத்திருந்தார். 1)நன்மை, தீமை அறிந்திடும் அறிவு விருட்சம்! 2) ஜீவ விருட்சம்! எனவே நன்மை தீமை அறிந்திடும் அறிவை உங்களுக்குள் வைத்துக்கொண்டு, எது நன்மை? எது தீமை? என **நீங்களாகவே** *முடிவு செய்யும் நிலை! இதுபோன்ற ஒரு ஜீவியமே, உங்களையே நம்பி வாழும் ஜீவியமாகும். அல்லது, தேவனுடைய ஜீவனை உங்களுக்குள் வைத்து, எது நன்மை? எது தீமை? என* **தேவன் உங்களுக்குச்** *சொல்வதை கேட்பதாகும்! இந்த ஜீவியமே, தேவனை மாத்திரமே நம்பி வாழும் ஜீவியமாகும். இதை இயேசு குறிப்பிட்டு கூறும்போது, மனுஷன் "தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தையினால் பிழைத்திருக்க வேண்டும்" என உரைத்தார் (மத்.4:4). இதுவே புதிய*

உடன்படிக்கை ஜீவியத்தின் முழு ஆதாரமாய் இருக்கிறது..... எப்போதும் தேவன் கூறுவதைக் கேட்டு, அவர் கூறியப்படி ஜீவிக்கும் ஓர் ஜீவியம்! இதற்கு எதிர்ப்பதமான ஜீவியமோ, சொந்த காரணங்களைப் பயன்படுத்தி வாழும் 'நன்மை தீமை அறிந்திடும் **அறிவின் விருட்சம்** *ஆகும்'. இந்த விருட்சமோ, மனுஷருடைய பார்வையில் 'வெளித்தோற்றத்தின்படி' ஓர் நேர்மையான ஜீவியமாய் இருந்திட முடியும்! ஆனால், அது "தேவனுடைய பார்வையில்" ஓர் பூரணமான ஜீவியமல்ல! (வெளி.3:2). ஏனெனில், அது தேவனையே தொடர்ச்சியாய் சார்ந்து வாழும் 'விசுவாச ஜீவியம்' அல்ல! அவரை சார்ந்து வாழும் ஜீவியமே* **'ஜீவ விருட்சம்'.**

இருதயத்தில் விருத்தசேதனம் வேண்டும்

பழைய உடன்படிக்கையின் அநேக 'சடங்காச்சாரங்கள்' புதிய உடன்படிக்கையில் ஓர் நிறைவைக் கண்டுள்ளது. 'விருத்தசேதனம்' பழைய உடன்படிக்கையின் கீழ் ஒரு முக்கியமான சடங்காச்சாரமா யிருந்தது! மெய்யாகவே, இதுபோன்ற ஓர் முக்கியமான சடங்காச்சார நிகழ்ச்சி புதிய உடன்படிக்கையில் மிக ஆழமான ஆவிக்குரிய அர்த்தம் கொண்டதாயிருக்க வேண்டும்..... அவ்வாறே அது இருக்கிறது! இதனுடைய அர்த்தத்தை பிலி.3:3,4 வசனங்களில்: "மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், தேவனுடைய ஆவியினாலே அவருக்கு ஆராதனை செய்பவர்களே, மெய்யான விருத்தசேதனம் உள்ளவர்கள்" என வாசிக்கிறோம். ஆவியில் ஆராதனை செய்வதென்பது, 'நம் மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைத்திடாமல்' கிறிஸ்துவை மாத்திரமே மகிமைப்படுத்தும் ஜீவியமேயாகும்!

ஜனங்கள் தங்கள் சரீரத்தில் விருத்தசேதனம் செய்துகொண்ட போது 'தங்கள் சரீரத்தின் ஒரு பகுதியிலுள்ள மாம்சத்தை' வெட்டி விடுவார்கள்! ஆவிக்குரிய விருத்தசேதனமோ, நம் சொந்த ஜீவியமாகிய **'மாம்சத்தின் மீது கொண்ட நமது நம்பிக்கையை' வெட்டி எறிந்து,** *அதை மரணத்திற்கு உட்படுத்துவதேயாகும். பழைய ஏற்பாட்டில், விருத்த சேதனம் செய்திடாதவர்கள், இஸ்ரவேலின் ஒரு பங்காய் இருந்திட இயலாது (ஆதி.17:14). புதிய ஏற்பாட்டில், 'தன்மீது நம்பிக்கைக் கொண்ட ஒருவராகிலும்' இயேசு கிறிஸ்துவின் மெய்யான சபையில் ஒரு பங்காய் இருந்திட இயலாது! அதுபோலவே, மற்றவர்கள் கட்டி யிருப்பதைவிட நம் சபையை மேன்மையாய் கட்டியிருக்கிறோம்! என நாம் மேன்மைப்பாராட்டினாலும், அவருடைய உண்மையான சபையில், நாம் பங்குபெற தேவன் அனுமதிக்க மாட்டார்!*

"தன் கையின் கிரியைகளில் மேன்மைப்பாராட்டிய" ஜனங்களைக் குறித்து அப்போஸ்தலர்.7:41-ம் வசனத்தில் வாசிக்கிறோம். நாம் சாதித்த யாதொன்றைக் குறித்து மேன்மைப்பாராட்டினாலும், ஆவிக்குரிய ரீதியில் நாம் இன்னமும் விருத்தசேதனம் பண்ணப்படாதவர்கள். யாதொன்றைக்குறித்தும் **'நீங்கள் சாதித்ததாக' எண்ணினால்,** *உங்கள் விசுவாசம் தோற்றுப்போய் விட்டது! பின்பு தேவன், உங்கள் மீது கொண்ட அன்பினிமித்தம் "இராமுழுவதும் மீன் பிடிக்கச் சென்றும், ஒன்றும் பிடிக்கவில்லை!" (யோவான்.21:3) என்ற நிலைக்கு உங்களை அனுமதித்து, அவரையே முற்றிலும் சார்ந்திருக்க போதிப்பார்!*

ஒரு நாள் நேபுகாத்நேச்சார் தன் அரண்மனையின் உப்பரிகையில் நின்று கொண்டு "நான் கட்டின மகா பாபிலோன்" என மேன்மை பாராட்டினான் (தானி.4:29,30). அவ்வாறு அவன் எண்ணியவுடன், அவனுடைய இராஜ்ஜியத்தை தேவன் அவனிடமிருந்து அகற்றி, அவனையோ ஒரு மிருகமாய் மாற்றிவிட்டார்! ஒரு கறைபடாத எண்ணத்திற்கு அவன் திரும்பிவர அவனுக்கு பல வருடங்கள் ஆகிவிட்டது. அதுபோலவே, அநேக விசுவாசிகள் 'தாங்கள் தேவனுக்கு செய்ததை எண்ணி' தங்களுக்குள்ளாக மேன்மைப்பாராட்டுகிறார்கள். நேபுகாத்நேச்சாரோ, கடைசியில் தன் மதியீனத்திற்காக மனந்திரும்பி தேவனை மகிமைப்படுத்தினான்! (தானி.4:34-36). முடிவில், அவன் தன் இருதயத்தில் விருத்தசேதனம் பெற்றான். மிக வருத்தமான காரியம் என்னவென்றால், அநேக கிறிஸ்தவ தலைவர்கள், இன்னமும் தாங்கள் "ஆவிக்குரிய விருத்தசேதனத்தை" அனுபவிக்காமலே இருக்கிறார்கள். நம் இருதயத்தை தேவன் விருத்தசேதனம் பண்ணி, நம் முழு இருதயத்தோடும் அவரை அன்புகூரவேண்டும் என்றே தேவன் விரும்புகிறார் (உபா.30:6).

தேவனுடைய தேவையே பிரதானம், மனுஷனுடைய தேவை, அல்ல!

நீங்கள் கர்த்தருக்குச் செய்த ஊழியத்தில் மேன்மைப்பாராட்டத் தொடங்கினால், இன்னமும் தேவன் உங்களுக்குத் தந்த வரம் உங்களோடு இருந்தாலும், **பரிசுத்தாவியின் அபிஷேகம்** *உங்களைவிட்டு நீங்கிவிடும். ஒரு சிறந்த தூதனாக சிருஷ்டிக்கப்பட்ட சாத்தான், இன்னமும் தேவன் அவனுக்குத் தந்த வரங்களை உடையவனாயிருக்கிறான். ஆனால் அவனோ, தேவனுடைய அபிஷேகத்தை இழந்தான்! அவன் ஒருநாளில் "அபிஷேகிக்கப்பட்ட* **கேருப்"** *ஆக இருந்தான், ஆனால் இப்போது இல்லை! (எசே.28:14,18).*

இதன்பின்பு, உங்களின் 'கிறிஸ்தவ ஊழியம்' இப்போது

'ஜனங்களுக்கு ஊழியமாய்' இருக்குமே அல்லாமல் 'தேவனுடைய ஊழியமாய்' இருப்பதில்லை. இந்த இரண்டு ஊழியங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை நீங்கள் அறிந்திருக்கவேண்டும்.

அநேக தலைவர்கள், ஜனங்களிடத்திலுள்ள தேவையை அறிந்து அதை அவர்கள் பூர்த்தி செய்ய நாடுகிறார்கள். அதன் மூலமாய், தாங்கள் தேவனுக்கு ஊழியங்கள் செய்வதாக எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் மனதோ மனுஷருடைய தேவைக்கு திருப்பப்பட்டிருக்கிறதே அல்லாமல், தேவனுடைய தேவைக்கு அல்ல!

மனுஷருடைய தேவையோ, அவன் இரட்சிக்கப்படவேண்டும்! சுகமாக்கப்படவேண்டும்! விடுதலையாக்கப்படவேண்டும்! போன்றவை களேயாகும். ஆனால், தேவனுடைய தேவையோ அவருடைய நாமம் மகிமைப்படவேண்டும்! அவருடைய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்! அவருடைய சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படவேண்டும்!.... ஆகிய இவைகளுக் காகவே, ஜெபிக்கும்படி இயேசு கற்றுக்கொடுத்தார் (மத்.6:9,10). "அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்ற ஜெபம் நல்ல ஜெபமாய் இருந்தாலும், அந்த ஜெபம் "தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக" என்ற வரிசையின்கீழ் வருவதாக இருக்க வேண்டும். உங்கள் ஊழியம், 'மனுஷனை மையமாகக் கொண்ட' ஓர் ஆழமற்ற ஊழியமாய் இருந்திடக்கூடாது!

நம்முடைய பிரதான ஜெபமாய் இருக்கவேண்டியதெல்லாம், ஆண்டவராகிய இயேசுவின் நாமம் சபையில் மகிமைப்படவேண்டும் என்பதேயல்லாமல், ஜனங்களின் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதல்ல! நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்க வேண்டிய விதத்தை இயேசு கூறும்போது, நம்முடைய நற்கிரியைகளை ஜனங்கள் கண்டு "**தேவனை மகிமைப்படுத்துவதாய்**" *இருக்கவேண்டும் என்றே கூறினார் (மத்தேயு.5:16). நம்முடைய இருதயத்தில் நாம் விருத்தசேதனம் அடையும்போது, நம்முடைய ஒரே ஆர்வமாய் இருப்பதெல்லாம் "தேவனை மகிமைப்படுத்துவது" ஒன்றேயாகும்! ஆவிக்குரிய விருத்தசேதனம் பெற்றிடாத மனுஷருடைய ஆர்வமாயிருப்ப தெல்லாம், மனுஷரால் உண்டாகும் மகிமையே ஆகும். யாராவது சிலர், "நீங்கள் பகிர்ந்து கொண்ட வார்த்தை எங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது" என கூறிவிட்டால், உடனே அதைக் குறித்து மேன்மைப் பாராட்ட துவங்கி விடுவார்கள்! இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கிரியைகளைக் கண்டார்கள்! ஆனால் மோசேயோ 'தேவனுடைய வழிகளையும்' கண்டான்! (சங்.103:7). இன்றும், தேவனை அறியாத அநேக கிறிஸ்தவர்கள் 'அவர் கிரியைகளைக் கண்டு' பரவசமடைகி*

றார்கள். ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு சுகமாவதினிமித்தம் மகிழ்ச்சி யடைகிறார்கள். ஆனால் அவர்களோ தேவனுடைய நாமம் மகிமைப் படவேண்டுமே என நாடுவதில்லை!

நம்முடைய இருதயத்தின் முதல் விண்ணப்பமாய் இருந்திட வேண்டியதெல்லாம் "தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும்" என்பதேயாகும். நம் வியாதிகளைக் குறித்தோ அல்லது நம் பொருளாதார கஷ்டங்களைக் குறித்தோ, அல்லது நம் குடும்பத்தின் தேவைகளைக் குறித்தோ 'முதல் ஜெபமாய்' நாம் கொண்டிருத்தல் கூடாது! இதற்கு மாறாக 'கர்த்தருடைய நாமம்' நமக்குள்ளும், நம் மூலமாகவும் மகிமைப்படவேண்டும் என்பதாகவே இருக்கவேண்டும். மற்ற அநேக பிரச்சனைகள் நமக்கு இருக்கலாம்.... அவைகளைத் தீர்ப்பது நமது இரண்டாவது பகுதியேயாகும். தேவனுடைய நாமம் மகிமைப்படுவது ஒன்றே, நமது அக்கறையாய் இருக்கவேண்டும் (1கொரி.10:31). அதன்பின்பு நம்முடைய எல்லா பிரச்சனைகளையும், தேவனே நமக்கென தீர்வு காண்பார். இவ்வாறெல்லாம் சம்பவித்திட, நாம் முதலாவதாக நம் இருதயத்தில் விருத்தசேதனம் பெற்றிருக்க வேண்டும்!

"மனுஷருடைய தேவையை அறிந்து" இயேசு இந்த பூமிக்கு வந்ததாக அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால், பிதா அவரை அனுப்பிய பிறகு மாத்திரமே அவர் வந்தார்! ஆதாம் பாவம் செய்து 4000 வருடங்களாய், அவர் பரலோகத்தில் காத்திருந்தார். நாம் எண்ணுவதோ, ஆதாம் பாவத்தில் விழுந்தவுடன், இயேசு இந்த பூமிக்கு விரைந்து வந்திருக்கவேண்டும்! என்றே எண்ணுகிறோம். ஆனால், தேவன் செய்திடும் எல்லா கிரியைக்கும் அவருக்கென்று, **ஓர் சரியான காலம்** உண்டு.

திரளான ஜனங்களை 'மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல்' இயேசு கண்டபோது, அந்த தேவையை பூர்த்தி செய்யும்படி தன்னுடைய சீஷர்களுக்கு கூறவில்லை. அப்படிச் செய்யவில்லை! மாறாக, அவர்களைப் பார்த்து "பிதா தமது அறுப்புக்கு வேலை யாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றே கூறினார் (மத்.9:38). பிதா மாத்திரமே, உண்மையான மேய்ப்பர்களை அனுப்பமுடியும்! இதற்கு நேர்மாறாக, இன்றைய கிறிஸ்தவ உலகில் "மிஷனெரி சவால்" தரப்படுவதையும், அந்த தேவைகளைக் கேட்ட ஜனங்கள், **தேவனுடைய அழைப்பிற்கு காத்திராமலே** மிஷனெரி ஸ்தலங்களுக்கு அனுப்பப்படுவதையும் காண்கிறோம். இன்றைய கிறிஸ்தவ ஊழியத்தில், ஏராளமான குழப்பங்களுக்கு இதுவே பிரதான காரணமாயிருக்கிறது.

பரிசுத்தாவியினால் நடத்தப்பட வேண்டும்

சபைகளை ஸ்தாபித்து, தங்கள் ஒரே ஒரு ஜீவியத்தில் ஏராளமாய் தேவனுக்கென்று சாதனை செய்த தேவமனிதர்களின் ஊழியத்தை 'உற்று நோக்கினால்' அவர்கள் தேவனால் நடத்தப்பட்டார்கள் என்பதுதான்! அவர்கள் எங்கே போக வேண்டுமென்று தேவன் விரும்பினாரோ, அங்கே அவர்கள் சென்றார்கள்! வசனத்தை விதைப்பதற்கோ! அல்லது அறுவடை ஊழியத்திற்கோ! துல்லியமாக நடத்தப்பட்டு சென்றார்கள். அவ்வாறாக, தங்கள் ஜீவியத்திலும் தேவனுடைய திட்டத்தை வெகு துல்லியமாய் செய்து முடித்தார்கள்!

பல்வேறு ஊழியங்களை முயற்சித்து, பின்பாக அவைகள் தேவனுடைய பூரண திட்டத்திற்குள் அடங்கியதல்ல என கண்டுபிடித்து, நம் ஜீவியத்தை வீணாக்கிவிடக் கூடாது. இதுபோன்ற தோல்விகளை நாம் தவிர்க்க வேண்டுமென்றால், **"தேவனிடம் கவனித்துக் கேட்கும்" பழக்கத்தை வளர்த்து கொள்ளவேண்டும்.** *அதன் மூலமாய் நம் ஊழியத்திற்குரிய அவருடைய திட்டங்களைக் கண்டுபிடித்து, அவர் என்ன செய்ய சொல்கிறாரோ, அதை துல்லியமாய் செய்து! அவர் எங்கே போகச் சொல்கிறாரோ, துல்லியமாய் அந்த இடத்திற்குச் சென்று! அவருடைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். எந்த மனுஷர்களாலும் நாம் நடத்தப்படாமல், தேவனால் மாத்திரமே நடத்தப்பட வேண்டும்.*

தனக்கு காத்திருக்க பொறுமையாய் இருந்து, அவருடைய சத்தத்தை கேட்க கவனமாயிருப்பவர்களிடமே தேவன் பேசுகிறார். வேதாகமத்தின் முதல் அதிகாரமே, "ஒவ்வொரு நாளும் தேவன் பேசுகிறார்" என நமக்கு கூறுகிறது. மேலும், அவர் பேசும் போதெல்லாம் அற்புதங்கள் நடந்தன!

> **இன்றும் கூட, தேவனுடைய சத்தத்தைக் கேட்டு அந்த நாளை துவங்கவும், அந்த நாள் முழுவதும் அவரை கவனித்து கேட்கவும் தேவன் விரும்புகிறார்.**

ஏசாயா.50:4 கூறுகிறபடி "காலைதோறும் என்னை எழுப்புகிறார்! அவருடைய சித்தத்தை அறியும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார்" என வாசிக்கிறோம். இவ்வாறாக, "ஓர் நிறைவேற்றப்பட்ட வாழ்க்கையை" அடைந்திட வேண்டுமென்றால் "தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் நாம் கவனித்து கேட்டால் மாத்திரமே" அது சாத்தியமாகும்! (மத்.4:4).

ஆசியாவிற்குச் செல்ல கலாத்தியா தேசத்தின் வழியாய் பவுல் சென்று கொண்டிருந்த போது, பரிசுத்தாவியானவர் ஆசியாவிற்கு

போகாதபடி தடைசெய்தார் (அப்.16:6). இங்கு நாம் காண்பது என்னவென்றால், "தான் எங்கே செல்லவேண்டும்?" என்ற வழி நடத்துதலை **பவுல் தொடர்ச்சியாக தேவனிடத்தில் கவனித்து கேட்டார்!** *இவ்வாறாகவே, அவரது ஒரே வாழ்க்கையில் ஏராளமான காரியங்களை அவரால் சாதிக்க முடிந்தது! மற்றொரு சமயம், கலாத்தியா பட்டணத்தில் சிலகாலம் தங்கியிருக்கும்படி நடத்தப்பட்டார். இவ்வாறாகவே கலாத்தியாவில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. "நல்ல மனிதனின் நடைகள் (அல்லது அவன் நிற்பது) கர்த்தரால் கட்டளையிடப்படுகிறது" என சங்கீதம்.37:23-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.*

கலாத்தியா நிருபத்தில் பவுல் எழுதும்போது, அவருக்கு சரீர பெலவீனத்தை அனுமதித்து பரிசுத்தாவியானவர் பவுலை கலாத்தியா பட்டணத்தில் இருக்கும்படி செய்தார்! அவர் சரீர பெலவீனமாயிருந்தாலும், கலாத்தியர்கள் அவரை "ஒரு தேவனுடைய தூதனாக" ஏற்றுகொண்டனர் (கலா.4:14). இன்று, பெருமை கொண்ட அநேக கிறிஸ்தவர்கள், ஒரு தேவமனிதனை அவருடைய சுகவீனத்தினிமித்தம் நியாயந்தீர்த்து 'அவருடைய ஜீவியத்தில் அறிக்கைச் செய்யப்படாத பாவம் இருக்கலாம்' என்றோ அல்லது அவர் சுகமடைவதற்கு ஏற்ற 'விசுவாசம் இல்லை என்றோ' தீர்ப்பு கூறி விடுகிறார்கள். ஆனால், கலாத்தியர்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருந்தபடியால், பவுலை அவ்வாறு நியாயந்தீர்க்கவில்லை! தனக்கு ஏற்பட்ட சுகவீனத்தைக் குறித்து பவுலும் யாதொரு குறையும் சொல்லவில்லை! இவ்வாறாக தேவனுடைய பூரணதிட்டத்தை பவுல் நிறைவேற்றி முடித்தார். பவுலைப்போலவே, நாமும் முற்றிலுமாய் நம்மை தேவனுக்கு அர்ப்பணித்து விட்டால் 'நம்முடைய நோய்களைக்கூட' அவருடைய பூரணதிட்டம் நம் வாழ்வில் நிறைவேறும்படியாக தேவன் கிரியை செய்திடுவார்!

அப்போஸ்தலர்.16:10-ம் வசனத்தில், 'எங்களை' என பவுல் கூறி வந்ததை திடீரென்று 'நாங்கள்' என மாற்றிவிட்டார்! இங்குதான், மருத்துவராயிருந்த லூக்கா (அப்போஸ்தல நடபடிகளை எழுதியவர்) பவுலோடு சேர்ந்து கொண்டார். வியாதிப்பட்டிருந்த பவுல், ஒரு மருத்துவரை வைத்துக் கொள்ள ஏழையாயிருந்தார்! ஆகவேதான், அது முதற்கொண்டு **மருத்துவர் லூக்கா பவுலோடு சேர்ந்து பயணிக்க தேவன் அனுப்பி வைத்தார்.** *இவ்வாறாக, தன்னையே நம்பி சார்ந்து கொண்டு, தன் மாம்சத்தின் மீது நம்பிக்கை வைத்திடாத தம்முடைய ஊழியர்களின் ஒவ்வொரு தேவையையும் கர்த்தர் அருளிச்செய்கிறார்!*

ஊழியம் நம் உள்ளான ஜீவியத்திலிருந்தே பாய்ந்தோட வேண்டும்

'வெளிப்பாட்டை' தேடுகிறவர்களை, ஊக்குவிக்கும்படியான வேதவாக்கியங்கள் ஏராளம் இருக்கிறது. விலையேறப்பெற்ற வேதவாக்கிய பொக்கிஷங்கள் தரையின் மேல் பரப்பில் காணப்படுவதில்லை! நாம் அவைகளை கண்டுபிடிக்க வேண்டுமென்றால், **ஆழமாய் தோண்டி** *பரிசுத்தாவியின் வெளிப்பாடுகளுக்காக கூக்குரலிட்டு ஜெபிக்க வேண்டும் (நீதி.25:2).*

இயேசுவிடத்திலிருந்து எடுத்து, அதை நமக்கு வெளிப்படுத்தும்படியே பரிசுத்தாவியானவர் வந்துள்ளார் (யோவான்.16:14). இந்த வசனம் குறிப்பிடுவது "இயேசு வியாதியஸ்தர்களை சுகமாக்கியது, பிசாசுகளை துரத்தியது" போன்ற விஷயங்கள் அல்ல! இதுபோன்ற விஷயங்களை காண்பதற்கு 'பரிசுத்தாவியின் வெளிப்பாடு' உங்களுக்குத் தேவையில்லை. நம்முடைய உள்ளான ஜீவியத்தையும், இயேசுவின் மனப்பான்மைகளையும் நமக்கு எடுத்துக்காட்டவே பரிசுத்தாவியானவர் வந்துள்ளார். உதாரணமாக, அப்போஸ்தலர்கள் 3½ ஆண்டு காலம் இயேசுவோடு நடந்தபோதும் "அவர்களைப் போலவே இயேசு எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும், ஒருபோதும் பாவம் செய்யாதவராயிருந்தார்!" என்ற சத்தியத்தை அறியாமலே இருந்தார்கள். "அந்த வெளிப்பாடு" அவர்கள் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்ட பிறகே அவர்களுக்குக் கிடைத்தது!

இயேசுவின் முழு ஊழியமும், அவருடைய உள்ளான ஜீவியத்திலிருந்தே பாய்ந்தோடியது. நம்முடைய ஊழியமும், நாம் தேவனோடு கொண்ட உள்ளான ஜீவியத்தின் நடக்கையிலிருந்தே பாய்ந்து வர வேண்டும்! அப்படியில்லையென்றால், நம்முடைய ஊழியம் மேலோட்டமானதாகவே இருக்கும். அநேக விசுவாசிகள் வெளிப்புறத்தில், நல்லவர்களாகவே தோன்றுகிறார்கள். ஒரு சாதாரண பிளை-வுட் மேல் புறத்தில் தேக்கு மரத்து மெல்லிய இழை ஒட்டப்பட்டு, தேக்கு மரத்தைப்போல் காட்டுவதற்கு ஒப்பாக இருக்கிறார்கள்! அந்த தேக்குமர இழையில் ஏதேனும் ஒன்று உரசி விட்டால், அதன் போலித்தன்மை தெரிந்துவிடும். அதுபோலவே, யாரோ சிலரின் எரிச்சலூட்டும் செயல்கள், அவர்களின் உள்ளான ஜீவியத்தில் என்ன இருக்கிறது? என்பதை வெளியரங்கமாக்குகிறது. ஆகிலும், தேவன் நமக்குள் கிரியைச் செய்யும்போது, அது நம் உள்ளான ஆழத்திற்குள் செல்கிறது! இவ்வாறு, நம்முடைய இருதயத்தில்தான் 'விருத்தசேதனத்தை' தேவன் செய்து முடிக்கிறார்! அதன்பின்பு, நாம் மெய்யாகவே முற்றிலுமாய் 'பரிசுத்தம்' கண்டடைவோம்!

தேவனுக்கு முன்பான நமது மறைவான ஜீவியம்

புதிய உடன்படிக்கையில் விசுவாசத்தின் அர்த்தமானது, தேவனை நம்பியிருப்பது! அவருக்கு மகிமையைச் செலுத்துவது! நமக்கு நாமே நம்பிக்கை இல்லாதிருப்பது! என்பதை, இன்று சிலர் ஏன் விசுவாசிக்கக்கூடாமல் இருக்கிறார்கள்? என்ற காரணத்தை இயேசு கூறும்போது "**மனுஷரால் வரும் மகிமையை**" **அவர்கள் தேடுவதே** *அதற்குரிய காரணம் என இயேசு கூறினார் (யோவான்.5:44).*

ஒரு சபையிலுள்ள இரண்டு சகோதரர்களும் வெளிப்புறத்தில் தாழ்மையுள்ளவர்களாகவும், இருவருமே ஏராளமான 'நல்ல' கிரியைகளைச் செய்கிறவர்களாகவும் காணப்படலாம்.

> **ஆனால், அவர்களில் ஒருவர் மாத்திரமே தேவனுடைய முகத்திற்கு முன்பாக ஜீவித்து, இயேசுவை மாத்திரமே நோக்கிப் பார்த்து, தன்னைத்தானே நியாயந்தீர்த்து..... தானாய் யாதொன்றும் செய்யமுடியாது என உணர்ந்து, ஆண்டவரையே முற்றிலுமாய் சார்ந்து கொண்டவராய் இருப்பார்!**

மற்ற சகோதரனோ வெளித்தோற்றத்தில் தாழ்மையாய் தோன்றினாலும், சுய- நம்பிக்கை கொண்டவராய், மற்றவர்களைக் காட்டிலும் தானே மேலானவன்! என உள்ளூர எண்ணுகிறவராய் இருக்கக்கூடும்! முதல் சகோதரனின் கிரியை, விசுவாசத்தின் கிரியையாய், நித்தியத்திற்கும் நிலைத்து நிற்கும்! இரண்டாவது சகோதரனின் கிரியையோ, இந்த மண்ணோடு அழிந்துபோகும்!

ஆகவே தேவனுடைய பார்வைக்கு முன்பாக மாத்திரமே ஜீவித்திடக்கடவோம். மேலும், உங்களை இயேசுவோடு மாத்திரமே ஒப்பிட்டு, வேறு ஒருவரோடும் உங்களை ஒப்பிட்டு பார்க்காதிருக்கக் கடவீர்கள்! "பிறரோடு தங்களை ஒப்பிட்டு பார்க்கிறவர்கள், ஆவிக்குரிய மதியீனர்கள்" என 2கொரிந்தியர்.10:12 கூறுகிறது. **தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக எலியா நின்று பேசினான்!** *(1இராஜ.17:1). நாமும் அவ்வாறே, கர்த்தருக்கு முன்பாக மாத்திரமே நின்று பேசினால், ஜனங்களை கவர்ச்சிக்கும்படியாக ஒருபோதும் பேசமாட்டோம்!*

இஸ்ரவேலர் பின்மாற்றம் அடைந்தபோது, விருத்தசேதனம் இல்லாத ஜனங்களை அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு அனுமதித்த லேவியர்களை, இனிமுதற்கொண்டு "**ஜனங்களுக்கு மாத்திரமே**" *ஊழியம் செய்திட அனுமதிக்கப்படுவார்களே அல்லாமல், கர்த்தருக்கு ஊழியம் செய்திட முடியாது என தேவன் கூறி விட்டார் (எசே.44:6-14). அதுவே அவர்களுக்குக் கிடைத்த தண்டனையாயிருந்தது. ஆம், இனியும் அவர்கள், கர்த்தருக்கு ஊழியம் செய்திட முடியாது!*

ஆகிலும், சாதோக்கின் புத்திரர்கள் ஜனங்களோடு வழிதவறிச் செல்லாதபடியால், "கர்த்தருக்கு ஊழியம் செய்திட" அநுமதிக்கப்பட்டார்கள்! (எசே.44:15). கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கும், ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கும் உள்ள வித்தியாசம் 'மலைக்கும் மடுவுக்கும்' உள்ள வித்தியாசத்தை போல் மிகப்பெரியதாகும்!

ஆலயத்தின் உட்பிரகாரத்தில், சாதோக்கின் புத்திரர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்தபின்பு, ஜனங்களிடத்தில் போகும்போது, அவர்களின் பரிசுத்த உடையாகிய 'சணல் வஸ்திரத்தை' பரிசுத்த அறை வீட்டில் வைத்துச் செல்லும்படி, கர்த்தரால் போதிக்கப்பட்டிருந் தார்கள்! (எசே.44:19). கர்த்தருக்கு முன்பான பரிசுத்த உடுப்பை ஜனங்கள் காண்பதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லை. நம்முடைய உள்ளான ஜீவியத்தில், நாம் கர்த்தரோடு கொண்டிருக்கும் 'இரகசிய உறவை' ஜனங்களுக்கு முன்பாக காண்பித்திடக்கூடாது! நாம் உபவாசிக்கும் போது 'நாம் உபவாசிப்பதாக' மற்றவர்களுக்கு காட்டக் கூடாது என மத்தேயு.6:17,18 வசனங்களில் இயேசு கூறினார். நாம் கர்த்தரோடு கொண்ட தனிப்பட்ட உறவை ஜனங்களிடம் கூறுவதினிமித்தம், அவர்களை நாம் பரிசுத்தமாக்க இயலாது. தங்கள் இருதயங்களில் விருத்தசேதனம் பெற்றவர்கள் மாத்திரமே, பரிசுத்தமாக முடியும்!

விசுவாசத்தில் ஜீவிப்பவர்கள் மாத்திரமே, "தேவனோடு ஓர் மறைவான வாழ்க்கையில்" நடப்பார்கள்! யாராகிலும் தங்கள் போற்றுதலை அவர்களுக்குத் தெரிவித்தால், உடனடியாக 'மகிமையை' தேவனுக்கே கொடுத்து விடுவார்கள்! அவ்வாறு கொடுப்பதைக் கூட 'ஜனங்களின் கனத்தைப் பெறுவதற்காக' அவர்கள் காதுகள் கேட்க கொடுத்திடாமல், உள்ளான அந்தரங்கத்தில் தேவனுக்கு செலுத்துவார்கள்!

நம்மை ஆவிக்குரிய பெருமையிலிருந்து காத்துக் கொள்வது, நமக்கு கடினமேயாகும்! ஆனால், அதை மெய்யாகவே நாடும் நம் இருதய வாஞ்சையைக் காணும் தேவன், நிச்சயமாய் நமக்கு உதவி செய்வார். நம்முடைய முழு வாஞ்சையும் "தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையில் நடப்பதுதான்!" என்பதைக் காணும் கர்த்தர்,

எப்போதெல்லாம் நம்முடைய கண்களுக்கு முன்பாக நாம் பெரியவர்களாக மாறுகிறோமோ, அச்சமயங்களில் 'சில சூழ்நிலைகளை தேவனே ஏற்படுத்தி' நாம் தாழ்மைப்படும்படிச் செய்வார். அவ்வாறாகவே, "மாம்சத்தில் ஒரு முள்ளை தந்து" தேவன் பவுலுக்கு உதவினார்.

அதுபோலவே, நமக்கும் ஏதாவது ஒருவகையில் உதவி செய்வார். இதை நாம் விசுவாசிப்போமென்றால், சகலமும் நம்மால் கூடும்!

(மாற்கு.9:23). இன்று அநேகர் தேவனுடைய வார்த்தையை வாசிக்கிறார்கள், ஆனால் அந்த வார்த்தைகளின் மூலமாய் 'அவருடைய குரலை' அவர்கள் கேட்பதில்லை! விசுவாசமானது வேதவாசிப்பினால் மாத்திரம் வருவதில்லை.... கிறிஸ்துவின் வார்த்தைகளை 'கேட்பதினால்' வருகிறது! (ரோமர்.10:17). 'பாவத்தின் மேல் வெற்றி பெற்றவர்களால்' எல்லாம் கூடும்! என எழுதப்படவில்லை! ஆனால்.... 'விசுவாசிக்கிற வர்களால்' மாத்திரமே எல்லாம் கூடும். நம்முடைய ஜீவியத்தில் நாம் பரிசுத்தமாய் வாழ்ந்தும், விசுவாசமில்லையென்றால், நாம் தேவனிடமிருந்து அதிகமானவைகளைப் பெற்றிட இயலாது!

கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து பெற்றிடும் சிட்சை

*நம்மை தேவன் அனுப்புகிற இடத்திற்கு மாத்திரமே செல்ல வேண்டும்.... நாம் விரும்பும் இடத்திற்கெல்லாம் சென்று விடக்கூடாது! நம் ஜீவியத்திற்கு நாமாகவே திட்டமிட்டு 'நித்திய மதிப்பிற்குரிய' யாதொன்றையும் நாம் நிறைவேற்றிட முடியாது! மனுஷீகமாய் கூற வேண்டுமென்றால், நமக்குள்ளே பல வித்தியாசங்கள் உண்டு. சிலர் புத்திகூர்மையாய் இருப்பதைப்போல் மற்றவர்கள் இருப்பதில்லை. ஆனால் "***அபிஷேகமே***" தேவனுடைய ஊழியத்திற்கு நம்மை வலிமை கொண்டவர்களாய் மாற்றுகிறது. ஏனெனில், கர்த்தருடைய அபிஷேகம் ஒருபோதும் மனுஷீக திறமைகளை சார்ந்திராமல், விசுவாசத்தையும் தாழ்மையையும் சார்ந்ததாய் இருக்கிறது!*

இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் (மத்தேயு.12:34). நம் வார்த்தையில் மிக கவனமாய் இருந்தாலும், **'நம்முடைய சத்தத்தின் தொனி'** *நம் இருதயத்தில் ஒளிந்திருக்கும் பெருமையை வெளிப்படுத்தி காட்டிட முடியும். இதுபோன்ற பெருமையை நீங்கள் கண்டுபிடித்து, உங்களை தாழ்த்துகிறவராய் இருந்தால், நீங்கள் மெய்யாகவே ஒரு பாக்கியவான் என்றே கூறவேண்டும்!*

ஒரு சகோதரனிடத்தில் காணப்படும் 'கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை காண்பித்தும்' பரிசுத்தாவியானவர் நம்மை உணர்த்த முடியும். நாம் கேட்கின்ற செய்திகளின் மூலமாக தேவனுடைய மகிமையை நாம் காண்பது மாத்திரமல்லாமல், தேவபக்தியான சகோதரர்களின் ஜீவியத்தின் மூலமாகவும் நாம் தேவனுடைய மகிமையை காணமுடியும்!

நாம் சபைக்குள் வரும்போது, பல்வேறு வடிவத்தில் நம் அறிவுத் திறனிலும், கல்வி திறனிலும் இருக்கிறோம். ஆனால், தேவன் தம்முடைய சபையில் கொண்டிருக்கும்

சிட்சையின் மூலமாய், நம் அனைவரையும் ஒரே அளவிற்கு கொண்டு வர விரும்புகிறார். இதுபோன்ற சுத்திகரிப்பிற்கு, 'ஒரு உண்மையான சபையில் நாம் அமர்ந்திருக்கவேண்டியது' சிறந்ததாயிருக்கும்!

நம்முடைய இருதயங்கள் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமென்றால், தேவன் நம்மை உடைப்பதற்கும், தாழ்த்துவதற்கும் ஏற்படுத்தும் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் நம் மனதார ஏற்றுகொள்ளவேண்டியது அவசியம்.

நமக்கு பதில்தர தேவன் ஏன் தாமதிக்கிறார்?

நம்முடைய சில ஜெபங்களுக்கு பதில்தர தேவன் ஏன் தாமதிக்கிறார்? என புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆகிலும் அவருடைய வழி உத்தமமாய் இருக்கிறபடியால்.... நம்முடைய வழியையும் அவரே செவ்வைப்படுத்துகிறார்! (சங்.18:30,32) அப்போஸ்தலர் 1:7 வசனத்தில் இயேசு கூறும்போது "பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிவதற்கு" நமக்கு அனுமதி தரப்படவில்லை! அது, தேவனுடைய சொந்த ஆளுகைக்கென்றே வைக்கப்பட்டிருக்கிறது!

<u>சில விஷயங்கள், தேவனுக்கு மாத்திரமே உரியது! உதாரணமாக:</u>

1. ஆராதனையை ஏற்றுக்கொள்வது (மத்தேயு.4:10).
2. மகிமையை ஏற்றுக்கொள்வது (ஏசாயா.42:8).
3. பழிவாங்குவது (ரோமர்.12:9).
4. நிகழ்வுகளின் காலங்களை அறிந்து கொள்வது (அப்.1:7).

ஆகிய இவைகளை 'மனுஷன்' செய்வதற்கு அனுமதிக்கப் படவில்லை. இந்த நான்கு தன்மைகளும் 'தெய்வ ஆதினத்திற்கு' உரியவைகள்! எல்லா கிறிஸ்தவர்களும் முதல் குறிப்பையும் இரண்டாவது குறிப்பையும் உடனே ஏற்றுக்கொள்வார்கள். இன்னும் சில பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மூன்றாவது குறிப்பையும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், ஆவிக்குரிய மனிதர்களோ முதல் மூன்று குறிப்புகளை உடனடியாக ஏற்றுக்கொள்வதைப்போலவே நான்காவது குறிப்பையும் ஏற்றுக்கொள்வார்கள்! ஆகவே, நம்முடைய சில ஜெபங்களுக்கு பதில்தர, கர்த்தர் நீண்ட தாமதம் செய்யும்போது, அவருடைய சித்தத்தை நாம் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தேவன் தம்முடைய சிங்காசனத்தில்தான் இன்றும் வீற்றிருக்கிறார்! தம்முடையவர்களை அவர் எப்போதும் நினைவு கூர்ந்திருக்கிறார்!

சகலமும் நம்முடைய நன்மைக்கென்றே நடந்திடச் செய்கிறார்!

"தன்னையே சார்ந்துக்கொண்டவர்களை"

அவர் வெற்றி சிறக்கச் செய்கிறார்!

அவர்களுக்கு, 'எந்த சந்தர்ப்பமும்' இழக்கப்படுவதில்லை!

தன்னை கிரயம் தந்து பெற்ற அவர்களின் ஜெயத்தில்,

'தேவனுடைய சித்தமே' மதுரம் என கண்டார்கள்!

ஆகவே "ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தை போதிக்கிற ஊழியத்திலும்" நாம் இடைவிடாமல் தரித்திருக்கக்கடவோம்! (அப்.6:4). இவ்வாறு நாம் செய்தால் "தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை" **தடையில்லாமல்** *செய்து கொண்டிருப்போம்! (அப்.28:31).*

'ஜீவதண்ணீர்' நம்மூலம் தொடர்ந்து பாயட்டும்

புதிய உடன்படிக்கையின் நற்செய்தியை கேட்கும்படியாக 'தேவை நிறைந்த விசுவாசிகள்' உலகமெங்கும் இருக்கிறார்கள். இந்நாட்களில், பல தேசங்களிலுள்ள விசுவாசிகள், பணஆசை கொண்ட பிரசங்கி களாலும், தனிமனித - ஆராதனை தலைவர்களாலும் (Cult-Leaders) *சுரண்டப்பட்டு, ஆதிக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற 'சிறைப்பட்ட விசுவாசிகள் அனைவருக்கும்' விடுதலை தருவதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

நாம் எங்கு செல்லவேண்டும்? என நாம் அறிவதற்கு **பரிசுத்தாவியின் நடத்துதலுக்கே** *நாம் மிகுந்த உணர்வுடையவர்களாயிருக்கவேண்டும்! (ஏசாயா.30:21). அநேக விசுவாசிகள் "சத்தியத்தை கேட்க விரும்பாத" காலம், வெகு சமீபமாய் வந்து விட்டது! ஆகவே, "சமயம் வாய்த்தாலும், வாய்க்காமல் போனாலும்" நாம் கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கித்திட எல்லா நேரங்களிலும் ஆயத்தமாயிருக்க வேண்டும்! (2தீமோ.4:2,3).*

தேவன் நமக்குத் தரும் வாக்குதத்தத்தை கேளுங்கள்: "அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் நம் சபையிலிருந்து எல்லா திசைக்கும்... கிழக்கு தொடங்கி மேற்கு வரைக்கும்.... வருடம் முழுவதும் இருக்கும்!". இவ்வசனங்களை அப்படியே விசுவாசித்து, நமக்கு சொந்தமாக்கிக் கொள்ளக்கடவோம்! (சகரியா.14:8).

11

ஆவிக்குரிய பெருமையும் தேவனுடைய அங்கீகாரமும்

இரண்டு காரியங்கள் 'தேவனுக்கு அருவருப்பாய்' இருக்கிறது. 1)மாய்மாலம். 2)ஆவிக்குரிய பெருமை. மற்ற எல்லா தீமைகளைக் காட்டிலும் இந்த இரண்டு தீமைகளே மிக மோசமானது என நாம் அறியாவிட்டால் 'நாம் ஒரு அபாயத்தில் இருக்கிறோம்' என்றே கூற வேண்டும். இயேசு இந்த பூமியில் இருந்தபோது, இந்த இரண்டு தீமைகளை பரிசேயர்களிடம் கண்டு, யாருக்கும் பயன்படுத்தாத 'ஐயோ' என்ற வார்த்தையைக் கூறி அவர்களை வெகுவாய் கண்டித்தார் (மத்தேயு.23). அவர் இன்றும் மாறாதவராய் இருக்கிறபடியால், எங்கெல்லாம் பரிசேயத்துவத்தை அவர் காண்கிறாரோ "அதே கடின வார்த்தையை" கூறுவார்.... அதுவும், அந்த தீமைகளை சபையின் மூப்பர் களிடத்தில் கண்டால், இன்னும் அதிகமாய் கூறுவார்!

பெருமை கொண்ட ஒவ்வொரு மனிதனையும், அவர் விசுவாசியோ அல்லது அவிசுவாசியோ, மூப்பரோ அல்லது இளையவரோ ஆகிய யாராயிருந்தாலும் அவர்களை தேவன் எதிர்த்து நிற்பார். தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே 'தம் கிருபையை' அவர் தருகிறார். **இதுவிஷயத்தில், எந்த பாரபட்சமும் அவர் காட்டுவதில்லை** *(1பேதுரு.5:5). இதை சித்தரித்து விளக்கவேண்டுமென்றால்: நாம் தாழ்மையுள்ளவர்களாயிருந்தால், நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் தொடர்ச்சியாய் முன்னேறிச்செல்லும்படி நம் பின்னாலிருந்து உந்தி தள்ளுவார்! ஆனால், நாம் பெருமை கொண்டவர்களாயிருந்தால், நமக்கு முன்னால் மறித்து நின்று, தொடர்ச்சியாய் பின்னோக்கித் தள்ளுவார். ஏற்கெனவே, சாத்தானும், உலகமும், மாம்சமும் நம்மை பின்னோக்கித் தள்ளுகிறது. ஆகவே, தேவனும் நம்மை பின்னோக்கித் தள்ளுவாரென்றால், நமக்கு யாதொரு நம்பிக்கையும் இல்லை!* **இன்று அநேக மூப்பர்கள் யாதொரு ஆவிக்குரிய வளர்ச்சியும் தங்கள் ஜீவியத்தில் அடையாமல் இருப்பதற்கும், அவர்களின் செய்திகளில் அபிஷேகம் இல்லாததற்கும் பிரதான முதல் காரணம், பெருமையேயாகும்!**

வலிமையான மூப்பர்களாய் திகழ வேண்டுமென்றால், நாம் முழு இருதயமாய் தாழ்மையை பின் தொடர வேண்டும்.

யோவான்ஸ்நானகனின் மாதிரி

நம் அனைவருக்கும், யோவான் ஸ்நானகன் ஓர் சிறந்த மாதிரியாய் இருக்கிறார். 'கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு' ஜனங்களை ஆயத்தப்படுத்தும்படி, அவர் தேவனால் அனுப்பப்பட்டிருந்தார். இப்போது **'கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு'** *நாம் ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

'எல்லா தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் பெரியவன்' என இயேசுவால் அழைக்கப்பட்ட யோவான் ஸ்நானகனிடமிருந்து சில முக்கியமான பாடங்களை நாம் கற்று கொள்ளமுடியும்:

1. *யோவான் ஸ்நானகன் தன்னை 'வெறும் சத்தம்' என்றே கூறினார் (யோவான்.1:19-23). அவர் தன்னை ஒரு தீர்க்கதரிசியாகவோ அல்லது ஒரு தேவ மனிதனாகவோ காட்டிக்கொள்ள விரும்ப வில்லை. தான் தேவனுக்கு 'ஒரு சத்தமாய்' மாத்திரமே இருப்பதற்கு திருப்தி கொண்டவராயிருந்தார்.*
2. *தான் தொடர்ந்து சிறுகி கொண்டே போகவும், மற்றவர்களுக்கு முன்பாக, இயேசு பெருகிக் கொண்டே போகவும் விரும்பினார் (யோவான்.3:30).*
3. *'இயேசுவின் பாதரட்சையை அவிழ்ப்பதற்குக்கூட' தான் தகுதியற்றவன் என கூறினார் (மத்தேயு.3:11). நாம் இயேசுவோடு எவ்வளவு நெருங்கி ஜீவித்திருந்தாலும்,* **தேவன்** *என்ற ஸ்தானத்தில் அவர் மீது நாம் கொண்டிருக்கும் 'பயபக்தியை' நாம் ஒரு போதும் இழந்துவிடக் கூடாது.*
4. *யோவான்ஸ்நானகன் தன்னை விளம்பரப்படுத்தவில்லை! ஆகிலும், அநேகர் அவனிடம் கேட்கும்படி வந்தார்கள் (மத்.3:5). நீங்கள் அபிஷேகிக்கப்பட்ட ஒரு தேவ மனிதனாய், தேவனுடைய செய்தியை பெற்றவராயிருந்தால்.... தெய்வபயம் நிறைந்த மக்கள் பல மைல்கள் பயணித்து, அங்கு வந்து உங்களை கேட்க விரும்புவார்கள். உங்களுடைய சபை யோவான்ஸ்நானகனின் வனாந்தரம் போல் 'தூரத்திலிருந்தாலும்' உங்களிடம் வந்து கேட்பார்கள்!*

நாம் எப்போதெல்லாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கி றோமோ, அப்போதெல்லாம், நாம் எவ்வாறு நம்மை மறைத்து

கிறிஸ்துவை வெளிப்படுத்தவேண்டும் என விளக்கும் ஓர் அருமையான பாடல் உண்டு:

அந்த நாளில் ‘சத்திய தீபம்’ ஏந்திய கரம் ஒன்று,
ஒருவரும் வழி தவறாதபடி உயர்த்தி காண்பித்து
சத்தியத்தை எல்லோரும் தெளிவாய் கண்டு
உலகத்தின் மாபெரும் ஒளியை ஆர்வமுடன்
காண்பித்த அந்த கரங்களை உற்று நோக்கினேன்
ஆ, விளக்கேந்திய கரத்தை மங்கலாய் கண்டேன்!

அந்த நாளில் தண்ணீர் பாத்திரத்தை குனிந்து,
எளியோர்களின் உதடுகள் பருகிட தந்து,
தவித்த பரிசுத்தவான்களின் தாகத்தை தீர்த்து
தங்கள் தவிப்பு நீங்க பருகி நின்ற அவர்கள்
தண்ணீர் வார்த்த பாத்திர கையை உற்றுநோக்கிட
ஆ, பாத்திரமேந்திய கையை மங்கலாய் கண்டேன்!

அந்த நாளில் ‘‘மெல்லிய எக்காளம்’’ அன்புடன் ஊதி
‘‘நொறுங்குண்ட பாவியாயினும்’’ பயமேன்?
எனக்கூறி..... திடுக்கிடும் சத்தம் உயர்த்தி
சாத்தானின் கோட்டைகளைத் தகர்த்த
அந்த எக்காளத்தை உற்று நோக்கினேன்
ஆ, எக்காளம் ஏந்திய கையை மங்கலாய் கண்டேன்!

இறங்கி வந்த எஜமான் ‘‘நல்லது
உண்மையும் உத்தமுமான ஊழியனே வா!’’
உன் பாத்திரத்தையும் விளக்கையும் வைத்துவிடு!
உன் எக்காளத்தையும் வைத்துவிட்டு....
உன் கூடாரத்தையும் விட்டு, வா!
தொய்ந்து போன கரத்தை இப்போது கண்டேன்
அக்கரம், ஆணிகடாவிய கரங்களுக்குள் இருந்தது!

(Selected)

இந்த பாடல் வரிகளைப்போலவே **மறைந்திருக்கும் ஊழியத்தில்** *உண்மையான ஆர்வம் கொண்டிருந்தால், கிறிஸ்து நமக்குள் காணப்படுவார்! நம் ஜீவியத்தின் மூலமாய் தேவன் மகிமைப்படுவார்!! ஆகிலும், எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டு சாத்தான் நம்மை ‘பெருமை அடையச்செய்து’ நம்மை அழித்திட வகை தேடுவான். ஆனால் நாமோ, மிகுந்த எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்!*

மூப்பர் ஸ்தானத்தை, ஒரு வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரனைவிட உயர்ந்த ஸ்தானமாகவோ, இயேசு செய்ததைப் போல **'ஜனங்களின் கால்களைக் கழுவும் பணிக்கு'** *மேலாகவோ நாம் எண்ணினால், பெருமை நம்மிடத்தில் பிரவேசிப்பது நிச்சயம்.... அதைத் தொடர்ந்து, நாம் பின்மாற்றம் அடைந்திடுவோம். நாம் தேவனுடைய கிருபையிலிருந்து விழ்ச்சி அடைவது வெகு துரிதமாய் நடந்து விட முடியும். நம்முடைய மூப்பர் ஸ்தானத்தை எப்போது இச்சிக்க தொடங்குகிறோமோ, நாம் ஏற்கெனவே வழிதவறிப் போய் விட்டோம் என நிச்சயப்படுத்திக் கொள்ளமுடியும்.*

பாவம் வாசற்படியில்தான் படுத்திருக்கிறது

சபையில் ஒரு ஊழியத்தைப் பெற்றிருக்கிற அனைவருக்குமே 'ஆவிக்குரிய பெருமை' என்ற பாவம், நம் வாசற்படியில் காத்திருக்கிறது. தன்னையே உயர்த்திக் கொள்ளும்படியான அபாயம் இருந்ததை பவுல் உணர்ந்து கூறினார் (2கொரி.12:7). தன்னுடைய அபாயத்தை அவ்வாறு உணர்ந்தபடியால், அதிலிருந்து அவர் காக்கப்பட்டார்.

ஆவிக்குரிய பெருமையின் அபாயத்தை முன்னிட்டு நாம் தொடர்ந்து ஜாக்கிரதையாய் ஜீவிப்போமென்றால், 'அந்த பெருமை' நம்முடைய இருதயத்தில் ஒருபோதும் பிரவேசித்திட முடியாது!

தன் ஜீவகாலமெல்லாம் "அசட்டை பண்ணப்படுவதற்கும் மனுஷரால் புறக்கணிக்கப்படுவதற்கும்" தெரிந்து கொண்ட **இயேசுவின் தாழ்மையின் மகிமையை** *தேவ ஆவியானவர் நமக்கு எல்லா நேரங்களிலும் காண்பிக்கும்படி வேண்டி நிற்கவேண்டும்! (ஏசா.53:3). நம்முடைய ஆவிக்குரிய தன்மைக்கோ அல்லது நமது ஊழியத்திற்கோ, நமக்கென்று ஒரு பெயர் புகழை உண்டாக்கும் 'சிந்தையைக்கூட' நாம் வெறுத்து விடவேண்டும்!*

சபையில், பாவத்தை மிகுந்த தைரியத்தோடு கடிந்து கொள்ள வேண்டும்! ஆனால் இதுபோன்ற திவ்விய அதிகாரத்தை, நம்மை முதலாவது சுத்திகரித்துக்கொள்ள உண்மையுள்ளவர்களாயிருந்தால் மாத்திரமே சாத்தியமாகும்.

நம்முடைய சொந்த மாம்சத்தில் நியாயந்தீர்த்து வாழ்ந்ததை வைத்தே, சபையையும் நியாயந்தீர்த்திட முடியும். அவ்வளவே தவிர அதற்கு மேல் இல்லை!

நம்முடைய மாம்சத்தில் நாம் கண்டு நியாயந்தீர்த்த வரையறைக்கு மேலாக பிரசங்கித்திடும் எல்லா பிரசங்கங்களும், வெறும் மாய்மாலமே யாகும்!

தேவன் நம்மை ஆசீர்வதித்தவுடன் ஏற்படும் ஆவிக்குரிய பெருமை

எல்லா சமயங்களிலும் 'ஆவிக்குரிய பெருமை' என்ற பெரிய அபாயத்தை நாம் எல்லோருமே சந்திக்க வேண்டியதாயிருக்கிறது! குறிப்பாக, கர்த்தர் நம்முடைய பிரயாசங்களை ஆசீர்வதிக்கும் சமயங்களிலெல்லாம் தோன்றும் அபாயம் உள்ளது! அந்நேரங்களில், நாம் ஒரு பொருட்டாக இல்லாதபோதும், நம்மை ஒரு பொருட்டாக எண்ணிக்கொள்வது வெகு எளிதாயிருக்கும். அப்படியிருந்தால், தேவனே நம்மை எதிர்த்து நிற்பார்! நமக்கு எதிராக போரிடுவார்! அதுஏனென்றால், அவர்கள் யாராயிருந்தாலும் "பெருமையுள்ள அனைவருக்கும் தேவன் எதிர்த்து நிற்கிறார்!" நாம் வரம் பெற்றிருக்கும் போது, அல்லது நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்திலோ அல்லது குடும்ப ஜீவியத்திலோ சகலமும் நேர்த்தியாய் நடக்கும்போது அல்லது நம் சபை வளரும்போது அல்லது பொருளாதார ரீதியில் நாம் ஐசுவரியம் காணும்போது.... நாம் மிக எளிதில் பெருமை அடைந்திட முடியும்!

மற்ற எல்லா பாவத்தையும் விட, நம்முடைய ஆவிக்குரிய **பெருமை! சுயநலம்!** *ஆகியவற்றின்மீது அதிக வெளிச்சத்தை நாம் பெற வேண்டும். இந்த இரண்டு பகுதிகளைக்குறித்து, நம்மை வஞ்சித்துக் கொள்வதும் மிக எளிது. எப்படியெனில், நாம் பெருமையுள்ளவர்களாயும், சுயம்-மையம் கொண்டவர்களாயும் வாழ்ந்து கொண்டே, நம்மை வெகு தாழ்மை கொண்ட! சுயநலமற்ற! மனிதர்களாய் எண்ணிக் கொள்ள முடியும். சாத்தான் அப்படி ஒரு திறமையான வஞ்சகன்!*

> **நம்முடைய உண்மை நிலையைக் காட்டும் 'ஆவிக்குரிய பெருமையின்' சில நிரூபணங்களைப் பாருங்கள்: மனம் புண்படுதல், கோபம் அடைதல், பாலியத்தில் குறிப்பாக 'சிந்தையில்' அசுசி கொண்டிருத்தல், தவறுகளை ஏற்றுக்கொள்ள மனதில்லாதிருத்தல், தாமதமாய் மன்னிப்பு கேட்டல், சபையிலுள்ள நம் சக விசுவாசிகளிடம் ஐக்கியத்தை சரிசெய்திட தாமதித்தல் போன்றவைகளேயாகும்!**

தன் மனைவியிடம் விரைந்து ஐக்கியத்தை சீர்ப்படுத்திக்கொள்ளும் ஓர் மூத்த சகோதரன், அதே ஆர்வத்தை மற்ற விசுவாசிகளிடமும், மூப்பர்களிடமும் ஐக்கியத்தை சீர்ப்படுத்திக்கொள்ள ஏன் அதே ஆர்வத்தை காட்டுவதில்லை? மனைவியினிடத்தில் அன்புகூருவதைப் போலவே, சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டும் என இயேசுவின் கட்டளை தெளிவாகவே கூறுகிறது! எபேசியர்.5:25; யோவான்.13:34 ஆகிய அன்பின் கட்டளை ஒரே சமமாகவே இருக்கிறது. அப்படியிருக்க, மனைவியிடம் மாத்திரம் ஏன் விரைந்து ஒப்புரவாகிறார்கள்? ஏனென்றால், அவனுடைய வீட்டில் அவனுக்கு சமாதானம்

அதிக தேவையாயிருக்கிறது என்பதுதான்! ஆனால், அதேபோன்ற சமாதானத்தின் தேவையை, சபையிலுள்ள தன் சகோதரனிடத்தில் அவன் உணர்வதில்லை! அவனுடைய சுயநலமும், அவனுடைய ஆவிக்குரிய பெருமையும், பரிசுத்தாவியின் உணர்த்துதலைக் கேட்டு தன்னைத் தாழ்த்தி, தன் சகோதரர்களிடம் மன்னிப்பு கேட்க முடியாத அளவிற்கு அவன் கண்கள் குருடாயிருக்கிறது!

ஆவிக்குரிய பெருமை, பாபிலோனைக் கட்டுகிறது

பெருமைகொண்ட ஒரு மூப்பன், தன் சபையில் ஓர் சர்வாதி காரியைப்போல் நடந்து கொண்டு, **ஒரு டைரக்டர் தன் கம்பெனியை நடத்துவதைப்போல்** *நடத்துவான்! அதுபோன்ற ஒருவன், சபையை ஒரு சரீரமாய் கட்டுவதற்கு ஒருபோதும் முடியாது.*

*ஆவிக்குரிய பெருமையானது நம் சரீர துர்நாற்றத்தைப்போலவும், வாயின் துர்நாற்றத்தைப்போலவும் இருக்கிறது. அதை நாம் சுவாசிக்க முடியாவிட்டாலும், மற்றவர்கள் சுவாசித்திட முடியும். உதாரணமாக, தன்னுடைய ஊழியத்தை பெருமைப்படுத்தும் ஒரு மூப்பர், தன்னிடமிருந்து "நாற்றம் பிடித்த ஆவிக்குரிய பெருமை" துர்நாற்றம் வீசச் செய்கிறது என்பதை அறியாதிருக்கிறான்! ஆனால் ஒரு தேவ பக்தியான சகோதரனோ, தன்னிடம் உள்ள ஆவிக்குரிய பெருமையை உடனடியாக உணர்ந்திடுவான்! "பெருமையின் மனப்பான்மை கொண்ட" ஒரு மூப்பரின் மனநிலை, நேபுகாத்நேச்சார் கொண்ட மனநிலைக்கு ஒப்பாக இருக்கிறபடியால், அவனுடைய சபையை "***பாபிலோன் சபையாக***" மாற்றி விடுகிறான்(தானி.4:30). தேவன் அவனை தாழ்த்தி, உடனடியாக அவனை புறக்கணித்தார்.*

ஒரு பரிசேயனுடைய ஜெபத்தை ஒருமுறை இயேசு குறிப்பிட்ட போது "தேவனே! நான் மற்றவர்களைப் போல் இல்லாதபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்...." என ஜெபித்ததைக் குறிப்பிட்டார் (லூக்கா.18:11). அவனும், தேவனால் உடனடியாக புறக்கணிக்கப் பட்டான்!

அரசியல்வாதிகளைப்போல் நடந்து கொள்ளும் மூப்பர்கள்

ஒரு மூப்பர், ஒரு அரசியல்வாதியைப்போல் நடந்து கொள்வது எளிது. தான் செய்வதையும் பேசுவதையும் கொண்டு, தன் சபையிலுள்ள ஜனங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நாடுகிறான்! தன் ஆண்டவரிடமிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ளும் அங்கீகாரத்தை

விட **'ஜனங்களின் அங்கீகாரமே' அவனுக்கு மேலானதாய்** *தோன்றுகிறது! இவ்வாறு நீங்கள் செய்யத் தொடங்கும்போது, நீங்கள் ஒரு பின்மாற்றக்காரராய் மாத்திரமல்லாமல் 'ஒரு கூலிக்காரனாகவும்' மாறிவிடுவீர்கள்! மனுஷர்களைப் பிரியப்படுத்த நாடும் ஒருவராகிலும், கிறிஸ்துவின் ஊழியராய் ஒருபோதும் இருந்திட இயலாது (கலா.1:10).*

> **நமக்கு தேவையாயிருப்பதெல்லாம் "தேவனுடைய அங்கீகாரம் ஒன்று மாத்திரமேயல்லாமல்" சபையிலுள்ள சகோதர சகோதரிகளின் அங்கீகாரமோ** *அல்லது எந்த ஒரு அப்போஸ்தலனுடைய அங்கீகாரமோகூட நமக்கு பெரிதல்ல!*

நம்முடைய மனோதத்துவத்தைக் கொண்டும், சில தந்திரமான ஆளுகையைக் கொண்டும், மனுஷருடைய அங்கீகாரத்தை நாம் பெற்றுக்கொள்வது எளிது! சபையிலுள்ள ஒவ்வொருவரையும், அப்படி ஒரு போலியான மகிழ்ச்சியைக் காண்பித்து, மூப்பர் என்ற ஸ்தானத்தை உங்கள் சபையில் நீங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆனால் தேவன் உங்களிடத்திலோ அல்லது உங்கள் சபையினிடத்திலோ மகிழ்ச்சியாய் இருக்க மாட்டார்.

பவுல் தன்னுடைய **சகல ஊழியப்பிரயாசங்களையும்** *தேவனுடைய பார்வைக்குப் பிரியமாயிருக்கிறதா? என அறிந்துகொள்ள அவைகளை* **தேவனுக்கு முன்பாக** *ஒரு பலியாகக் கொண்டுவர வேண்டிய தேவையை உணர்ந்திருந்தார் (ரோமர்.15:6). தேவனுடைய அங்கீகாரம் பெறுவது எளிதானதொன்றல்ல! ஏனெனில் அவர் நம்முடைய சிந்தைகளையும், நோக்கங்களையும், நம்முடைய மனநிலைகளையும், எதிர்பார்ப்பு களையும் நிறுத்துப்பார்க்கிறார்! அந்தரங்கத்தில் நம் சுய - ஜீவியத்தை மரணத்திற்கு உட்படுத்தவில்லையென்றால், நம்முடைய ஊழிய பிரயாசங்கள் தேவனுடைய பார்வையில் ஒருபோதும் அங்கீகரிக்கப்பட முடியாது! முதிர்ச்சி இல்லாத நிலையில், நாம் அனைவருமே பல தவறுகளையும், அநேக மதியீனமானவைகளையும் செய்கிறோம். ஆனால் நாம் செய்திடும் ஒவ்வொரு தவறிலிருந்தும், ஒவ்வொரு மதியீனத்திலிருந்தும்* **"கற்றுக்கொள்ளும் பழக்கத்தை"** *கடைப் பிடித்திருந்தால், பெரிதான வளர்ச்சியை அடைந்திருக்க முடியும். அதற்குப் பதிலாக, நம்முடைய மூடத்தனத்திற்கே மீண்டும் திரும்பினால், ஒரு நாய் தான் கக்கினதைத் தின்னும்படி திரும்புவதைப் போல் இருக்கும்!(நீதி.26:11).*

ஆவிக்குரிய பெருமை மேற்கொள்ளப்பட வேண்டும்

ஆவிக்குரிய பெருமையானது, தேவனுடைய நற்சாட்சியைப் பெற்ற, வயதில் மூத்த சகோதரர்களுக்கு காண்பிக்க வேண்டிய

மரியாதையை இழக்கச் செய்யும்! அதுபோன்ற ஒரு மூப்பர், தன்னுடைய சபையிலுள்ளவர்கள் தனக்கு அடங்கியிருக்க விரும்புவார்கள், ஆனால் தேவன் அவர்களுக்கு மேல் நியமித்த ஆவிக்குரிய அதிகாரத்திற்கோ அடங்கி வாழ மனதற்று இருப்பார்கள். **இதுபோன்ற மரியாதை குறைவான செயல்,** *இந்த கடைசி நாட்களில், கிறிஸ்தவர்கள் மத்தியில் பெருகிக் கொண்டே போகிறது. இந்நாட்களில் நம்மைச் சுற்றியுள்ள அநேக பிள்ளைகளிடமும், இளைஞர்களிடமும் இதுபோன்று 'வயது சென்ற தேவபக்தியான சகோதரர்களிடம்' மரியாதையின்றி அவர்கள் பேசும் விதத்தை வைத்து காண முடிகிறது.*

3யோவான்.1:9-ல் வாசிக்கும் 'தியோத்திரேப்பு' மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் யோவான் குறிப்பிட்ட ஐந்து சபைகளின் மூப்பர்களும், இதற்கு மாதிரியாக இருக்கிறார்கள். அவர்கள் நம் எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாயிருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே பார்த்தபடி, அந்த மூப்பர்கள் தங்களைத் தாங்களே நியாயந்தீர்த்து வாழ்ந்திருந்தால், அவர்களுடைய தோல்விகளை தேவனே நேரடியாக காட்டியிருப்பார்..... அப்போஸ்தலனாகிய யோவான் மூலம் சுட்டிக்காட்டப்பட வேண்டிய அவசியமிருந்திருக்காது!

நம்மை நியாயந்தீர்ப்பதை நிறுத்தியவுடன், நம்மை மேன்மையானவர்களாக எண்ணி பிரசங்கிக்கத் தொடங்கி விடுவோம். கர்த்தரோ, நமக்குத் துணையாய் நிற்கமாட்டார்! ஆகவே, ஒவ்வொரு நாளும் நம்மை நியாயந்தீர்த்து, நம்மைக் குறித்தும், நம் ஊழியத்தைக் குறித்தும் **தாழ்மையான சிந்தையே** *எப்போதும் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியத்திற்கும் நம்முடைய ஊழியப்பிரயாசங்களுக்கும் தேவன் சாட்சி வழங்குகிறாரா? என்பதை நாம் தொடர்ச்சியாக சோதித்துப் பார்த்திட வேண்டும் (கலா.6:4). அப்படிஇல்லையென்றால், ஏதோ சில காரியங்கள் தவறாய் உள்ளது என்றே அர்த்தமாகும்.*

மூப்பர்களாகிய உங்கள் அனைவருக்கும் நான் கூறும் மூன்று புத்திமதிகள்:

1. *உங்கள் முகத்தை புழுதியில் வைத்து, எப்போதும் தேவனை ஆராதிக்கிறவர்களாயிருங்கள்.*
2. *எப்போதுமே, நீங்கள் ஒரு சாதாரண சகோதரன் என்பதை நினைவு கூருங்கள்.*
3. *நீங்கள் கர்த்தரை அதிகமாய் அன்புகூருவதைப்போல் எண்ணிக் கொள்ளாமல், 'கர்த்தருடைய அன்பையே' அதிகமாய் தியானியுங்கள்.*

"ஆவியில் எளிமை" என்பது, "உங்களை முக்கியமற்றவனாக மதிப்பீடு செய்து" ஓர் தொடர்ச்சியான ஆவிக்குரிய தேவையை உணர்ந்து வாழ்ந்திடுங்கள் (மத்தேயு.5:3 - விரிவாக்க வேதாகமம்)

மூப்பர்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும்

நம்முடைய ஸ்தல சபைகளிலுள்ள சகோதர சகோதரிகளை நடத்திச் செல்லும் சிலாக்கியத்தை வைத்து, நாம் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம் என்று எண்ணிவிடக்கூடாது. சில காலங்களுக்குப் பின்பு, தேவனுடைய அங்கீகாரத்தை நாம் பெற்றுவிட வேண்டும். கர்த்தர் தம்மை நமக்கு ஒப்புவிப்பதற்கு முன்பாக, பல்வேறு சூழ்நிலைகளின் மூலமாய் நம்மை சோதித்துப் பார்ப்பார் (யோவான்.2:24). தீமோத்தேயு 25 ஆண்டு காலமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்திருந்தாலும், அவர் "**தேவனுடைய அங்கீகாரத்தைப்**" பெற்றுக்கொள்வதற்கு பவுல் புத்தி கூறினார் (2தீமோத்தேயு.2:15). தீமோத்தேயுவைப் போல் முழு இருதயம் கொண்டவராயிருந்தாலும், அவர்களும் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற வேண்டியது அவசியமாயிருக்கிறது. அந்த அங்கீகாரத்திற்கு முன்பாக, பவுல் தன்னைக் குறித்து கொண்டிருந்த உயர்ந்த மதிப்புகள் யாதொரு தகுதியும் பெறுவதில்லை! (பிலிப்பியர்.2:19-22).

ஐந்து சபைகளின் தூதுவர்களுக்கு கர்த்தர் அனுப்பிய செய்தி யானது, அந்நாட்களிலிருந்த பெரும்பான்மையான மூப்பர்கள்கூட சீக்கிரத்தில் வழிவிலகிப் போனதை நமக்கு காட்டுகிறது! (வெளி.2,3). அந்த மூப்பர்கள், கர்த்தரால் முழுவதும் அங்கீகரிக்கப்படவில்லை. அப்படியிருந்தும், மூப்பர்கள் என்ற ஸ்தானத்தில் அவர்கள் தொடர்ந்து இருந்து கொண்டு, தங்களை அந்த சபைகளின் தூதுவர்களாக எண்ணிக் கொண்டார்கள். இதுபோன்ற நிலை நம்முடைய இருதயத்திற்குள் ஓர் தெய்வ பயத்தை கொண்டுவர வேண்டும், அந்த அச்சம் நம்மோடு சதாகாலமும் நிலைத்திருக்கவேண்டும்! சவுல் ராஜா தேவனுடைய அபிஷேகத்தை இழந்த பிறகும், கடைசியில் தேவன் அவரை அகற்றும் வரை, சுமார் குறைந்தது 10 ஆண்டுகளுக்கு மேலாய் சவுல் சிங்காசனத்தின் மேல் அமர்ந்திருந்தார்!

வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் ஏழு சபை மூப்பர்களுக்கும் கர்த்தர் கூறியதைப்போலவே, இப்போது நமக்கும் "உன்னுடைய கிரியைகளை நான் அறிந்திருக்கிறேன்...." என்றே கூறுகிறார்.... ஆகிலும், கர்த்தரிடத்தில் யாதொரு பட்சபாதமும் இல்லை.

மூப்பர்கள் சாதாரண சகோதரர்களாய் இருந்திடவேண்டும்

அநேக "பாஸ்டர்கள்" தங்கள் சபையிலுள்ள விசுவாசிகளுக்கும் கிறிஸ்துவுக்கும் நடுவே இருக்கும் **மத்தியஸ்தர்களைப் போல்** *நடந்து கொள்கிறார்கள். இதுபோன்ற தோற்றத்தை, நாம் ஜனங்களுக்கு தந்துவிடக் கூடாது. பல வருடங்களாய் 'இதுபோன்ற பாஸ்டருக்கு' கீழாய் இருந்த பல சபை மக்கள் நம்மிடத்தில் வரும்போது, ஆரம்பத்திலிருந்தே 'இந்த மத்தியஸ்தர் எண்ணத்தை' அந்த எளிய ஜனங்களின் சிந்தையிலிருந்து அகற்றுவதற்கு நாம் தீர்மானம் கொண்டிருந்தால் மாத்திரமே, இது சாத்தியமாகும்! உங்கள் சபையிலுள்ள ஜனங்கள் உங்களை* **'பாஸ்டர்-மத்தியஸ்தர்'** *என எண்ணி இருந்தால், அந்த தவறு முற்றிலும் உங்களையே சார்ந்ததாகும். அவர்கள் உங்களைத் தங்களுடைய வேலைக்காரனாகவும், தங்களுடைய சகோதர னாகவும், அவர்களைப்போலவே 'ஒரு சாதாரண சகோதரனாகவும்' காணவேண்டும்!*

பாஸ்டர் என்ற பட்டத்தை நீங்கள் வைத்திராவிட்டாலும், ஒரு 'சர்வாதிகார - பாஸ்டராய்' நடந்துவிடாமலிருப்பதற்கு மூப்பராகிய நீங்கள் ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும். ஒருவரையும் உங்களோடு இணைத்துக் கொள்ளாமல்! அல்லது ஆவிக்குரிய ரீதியில் ஒருவரும் உங்களைச் சார்ந்து கொள்ளாமல்! இருக்கவேண்டும். உங்கள் புத்திமதிகளை ஒருவன் பின்பற்றவில்லையென்றால், அதை பாவம் என எண்ணிவிடக்கூடாது. அவர்கள் உங்களுக்கு கீழ்ப்படியாததினிமித்தம் அல்ல, தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் போதே பாவம் செய்கிறார்கள் என்ற உண்மையை சபையில் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்!

சபையிலுள்ள ஒவ்வொருவரையும், முதிர்ச்சி நிலைக்கு கொண்டு வர நாம் கடினமாய் பிரயாசப்படவேண்டும். அப்படி இல்லை யென்றால், நம்முடைய ஊழியம் தோற்றுப் போய்விடும்! நம்மை சுற்றிலும் "ஆமாம் சகோதரரே.... ஆமாம் சகோதரரே" எனக்கூறும் சகோதரர்களை வைத்திருக்க முயற்சிக்கக் கூடாது. நம் சபையிலுள்ள சகோதரர்கள், தனிப்பட்ட விதத்தில் தேவனை அறியும்படி வளர வேண்டும். அது அல்லாமல், நம்மையே அவர்கள் தொடர்ந்து சார்ந்திருக்கும்படி செய்திடக்கூடாது.

நம்மில் வலிமையான ஆள்த்துவம் கொண்ட சகோதரர்கள், தங்களது ஆத்தும - வல்லமையை மரணத்திற்குள் ஊற்றி, நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நம்மை சார்ந்துக் கொள்ளாமல், முதிர்ச்சியில் வளர்ந்திடச் செய்ய வேண்டும்!

நம்முடைய ஊழியம் தேவனுக்குப் பிரியமாயிருந்தால், **சபையை ஒரு குடும்பமாய்** கட்டுவதற்கு ஏற்ற கிருபையை தேவன் நமக்குத் தருவார். நம்முடைய சொந்த குடும்பத்தில் பிள்ளைகள் முதிர்ச்சி நிலைக்கு வளர்வதைப் போலவே, தேவனுடைய சபையிலும் செய்வார்!

உங்கள் ஜீவியத்தைக் குறித்தும், உங்கள் பிரசங்கத்தைக் குறித்தும், உங்களைவிட முதிர்ச்சி கொண்ட வேறு சிலரிடம் "நேர்மையான பரிந்துரையை" தைரியமாய் உண்மையை சொல்லுகிறவர்கள் மூலமாக நீங்கள் அறிந்து கொள்ள நாடுவது நலம். இவ்விஷயத்தில், உங்கள் மனைவி போதுமான ஆவிக்குரிய வளர்ச்சி கொண்டவர்களாயிருந்தால், அவர்களே அவ்விதமாய் உங்களைக் குறித்து சொல்வது நலமாயிருக்கும்! உங்கள் மனைவி ஆவிக்குரியவர்களாய் இல்லா திருந்தால், உங்களுக்கு நம்பிக்கையான வேறு பக்தியான சகோதரர்கள் உங்களைக்குறித்தும் உங்கள் ஊழியத்தைக் குறித்தும் என்ன எண்ணுகிறார்கள்? என கேட்டறிவது நலம். அந்த பக்தியான சகோதரரிடம் "சகோதரா, நீங்கள் சொல்ல வேண்டிய உண்மையை முற்றிலும் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் எனக்குச் சொல்ல வேண்டும்" என முன்கூட்டியே கேட்டுக் கொள்ளுங்கள். அதன் பின்பு, அவர் உங்களுக்கு கூறுகிற உண்மையின்படி, உங்களை நியாயந்தீர்த்து, திருத்திக்கொள்ளுங்கள்! **தேவபக்தியான மனிதர்கள், உங்கள் ஆவிக்குரிய நிலையை, நீங்கள் காண்பதைவிட அதிக தெளிவாக கண்டிருப்பார்கள்.**

உங்கள் சபையிலுள்ள சகோதர சகோதரிகளை 'ஒரு சர்வாதிகாரியாக' ஆளுகைச் செய்வது எளிது! இயேசு கூறும்போது: "இந்த தலைவர்கள், சபை விருந்துகளில் முதல் ஆசனத்தில் அமர விரும்புகிறார்கள். தங்கள் கௌரவத்தை நாடி சபை மக்களின் முகஸ்துதியை விரும்பி, தங்களை 'டாக்டர்' என்றும் 'ரெவரெண்ட்' என்றும் அழைக்கப்பட விரும்புகிறார்கள். அவ்வாறு ஜனங்கள் உங்களை அழைப்பதற்கு விட்டுவிடாதிருங்கள். அது உங்களை 'மிதிவண்டி சக்கரத்தில்' ஏற்றிவைத்ததைப்போல் ஆக்கிவிடும்! **உங்கள் யாவருக்கும் ஒரே போதகர் மாத்திரமே உண்டு,** நீங்கள் அனைவரும் அவருடைய வகுப்பில் அமர்ந்திருக்கும் தோழர்கள். எந்த ஒரு ஜனமும் சாமர்த்தியமாய் 'தங்களை பொறுப்பெடுத்துக் கொள்ளும்படியாக' உங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்காதீர்கள்! உங்களுக்கும் அவர்களுக்கும் ஒரே ஒரு ஜீவிய-தலைவர் மாத்திரமே இருக்கிறார்! அவர் கிறிஸ்து! நீங்கள் எழுந்து நிற்க விரும்புகிறீர்களா? அப்படியானால் தாழ இறங்குங்கள்! ஒரு வேலைக்காரனாய் இருங்கள்! உங்களை உயர்த்திக் கொள்ள விரும்புகிறீர்களா? அப்படியானால் ஒரு காற்று கூட உங்களைத் தாக்கி விழச் செய்துவிடும்! ஆனால், நீங்களாகவே இருப்பதற்கு ஓர் எளிமையான திருப்தி

கொண்டிருந்தால், உங்களின் ஜீவியம் அநேகருக்கு பயனுள்ளதாய் மாறும்" (மத்தேயு.23:6-12-Message விரிவாக்கம்). தன் மந்தையிலுள்ள ஜனங்களின் 'தனிப்பட்ட ஜீவியத்தில்' மூப்பர்கள், யாதொரு ஆளுகையும் வைத்திருக்க நாடக் கூடாது. "சபை விஷயங்களுக்கும்" "தனிப்பட்ட விஷயங்களுக்கும்" உள்ள வித்தியாசத்தை நாம் செம்மையாய் அறிந்திருக்கவேண்டும். மூப்பர்களாய் இருக்கும் நாம், தனிநபரின் ஜீவியத்திலுள்ள ஒவ்வொரு பகுதியையும் நடத்தும்படி அழைக்கப் படவில்லை. சுமார் 90% அளவிற்கும் மேலான விசுவாசிகளின் விஷயங்கள், தனிப்பட்ட விஷயங்களேயாகும். அதுபோன்ற எல்லா விஷயங்களிலும், **அவர்களே சொந்தமாய் முடிவெடுக்க சுயாதீனம்** பெற்றிருக்க வேண்டும். அவ்விஷயங் களில் ஒரு மூப்பரின் தலையீடு கூடாது. அவ்வாறில்லாமல், சர்வாதிகார மூப்பர்களைக் கொண்ட சபைகள் "தனிமனித ஆராதனை குழுக்களாய்" மாறமுடியுமே அல்லாமல், கிறிஸ்துவின் சரீரமாய் கட்டப்பட முடியாது.

பிந்தினோர் முந்தினோராய் மாறிடும் நிலை

தேவனுடைய கண்ணோட்டத்தின்படி, இந்த உலகத்தில் கடைசியாய் இருப்பவர்களே, முதலாவதாய் காணப்படுகிறார்கள். இது ஒரு ஆச்சரியமான சத்தியம். இதைக் குறித்து இயேசு கூறிய ஏழு உவமைகளில் காண்கிறோம்:

1. மத்தேயு.20:1: பதினோராம் மணிக்கு வேலைக்கு வந்தவர்கள், தங்கள் ஜீவியத்தின் 90% (11/12 மணிகள்) வீணாக்கிய அவர்களே, முதல் பங்கை பெற்றார்கள்.
2. லூக்கா.15:22: இளைய குமாரன் தன் பங்கிலுள்ள தகப்பனின் 50% ஆஸ்தியை வீணாக்கி, தன் தகப்பன் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி இருந்தாலும், அவனே "உயர்ந்த வஸ்திரமும்" "மோதிரத்தையும்" பெற்றான்! இந்த இரண்டையும் சுய-நீதியில் வாழ்ந்த மூத்த குமாரன் பெறவில்லை!
3. லூக்கா.7:41: அதிக பாவம் செய்தவன் (அதிகம் மன்னிக்கப் பட்டவன்) அதிக அன்புகூருகிறவனாய் (ஆண்டவருக்கு மிக நெருக்கமானவனாய்) மாறினான்!
4. மத்தேயு.21:28: முதலில் முரட்டாட்டம் செய்த மகன், தன்னுடைய சகோதரனைப்போல் அல்லாமல், முடிவில் தகப்பனுடைய சித்தத்தை நிறைவேற்றியவனாய் மாறினான்.
5. லூக்.15:3: காணாமல் போன ஆடு, மற்ற ஆடுகளைவிட மேய்ப் பனுக்கு மிக நெருக்கமாய், மேய்ப்பனின் தோளில் தூக்கி வரப்பட்டது.

6. *லூக்கா.14:10:* கல்யாண விருந்தில் தாழ்ந்த இடத்தில் உட்கார்ந்தவன் உயர்ந்த இடத்தில் அமரும் பாக்கியம் பெற்றான்.

7. *லூக்கா18:9 :* பாவியாகிய ஆயக்காரன், பரிசேயனைக் காட்டிலும் தோற்றத்தில் மோசமானவனாய் இருந்தாலும், அவனே 'நீதிமான்' என தேவனால் அறிவிக்கப்பட்டான்.

இந்த உவமானங்கள் அனைத்தும் வழங்கிடும் ஒரே செய்தி என்னவென்றால், மோசமாய் துவங்கிய அநேகர், பந்தயப் பொருளை பெற்றவர்களாய் முடிவடைந்தார்கள்! நாம் பந்தயத்தை துவங்கியதை விட, பந்தயத்தை முடிப்பதே முக்கியமானதாகும். பவுலைப்போல், தங்கள் ஆரம்ப ஜீவியத்தில் மோசமாய் துவங்கியவர்கள் அதைரியமடையாமல் அல்லது தங்களை ஆக்கினைக்குட்படுத்தாமல் இருப்பார்களானால், ஆரம்பத்தில் நன்றாய் துவங்கின அநேகரை விட, முடிவில் முதலிடத்தை அடைவார்கள்.

ஜீவியத்தில் பிழை செய்த அனைவருக்கும், இந்த செய்தி உற்சாகமளித்து, ஒரு போதும் மனச்சோர்வடையாமல், பந்தயத்தில் முன்னேறிச்செல்ல உதவுவது நிச்சயம்!

இயேசுவை சந்திப்பதற்கு முன்பாக, பவுல் தன் முதலாவது 30 ஆண்டு ஜீவியத்தை வீணாக்கிவிட்டார். ஆனால் "ஒன்றையே நாடுவேன்" என அவர் தீர்மானித்த பிறகு: தன்னுடைய கடந்த கால தோல்விகளை மறந்து, இந்த பூமியில் எஞ்சியுள்ள குறைந்த காலத்தில் **'இயேசுவைப்போல் மாறவேண்டும்' என்பதையே முன்னால் வைத்து** தொடர்ந்து ஓடினார் (பிலிப்பியர்.3:13,14). இதில், தேவன் அவரை அழைத்த ஊழியத்தின் நிறைவும் அடங்கியிருக்கிறது. தன் ஜீவியத்தின் முடிவில் பவுல் கூறும்போது "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என கூறினார் (2தீமோத்தேயு.4:7).

கொரிந்துவிலுள்ள மாம்சீக கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறும்போது "பந்தயத்தின் **முதல் பரிசை** பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்" என கூறினார் (1கொரிந்தியர்.9:24). கிறிஸ்தவ ஓட்டத்தில், மாம்சீகமான கிறிஸ்தவர்கள்கூட, மனந்திரும்பி ஓர் தீர்மானமான கட்டுப்பாட்டோடு ஓடினால், முதலிடத்தைப் பெற்றுவிட முடியும். மூப்பர்களாகிய நாம், தோற்றுப்போன ஒவ்வொரு கிறிஸ்தவர் மனந்திரும்பி, என்ன கிரயம் செலுத்தியாகிலும் கிறிஸ்துவைப்போல் மாறும் இலக்கை அடைந்திட ஓர் தீர்மானத்தோடு ஓடினால், அந்த இலக்கை பெற்றிட முடியும் என்ற நம்பிக்கையை அவர்களுக்குத் தந்திட வேண்டும்!

12

சபையில் பொருளாதார விஷயங்கள்

கர்த்தருடைய ஊழியத்திற்காக தரப்படும் பணமே, இந்த உலகத்திலுள்ள எல்லா பணத்தையும்விட மகா பரிசுத்தமுள்ளதா யிருக்கிறது. அதில் ஒருவன் உண்மையாயிராவிட்டால், தனக்கும் தன் குடும்பத்திற்கும் ஓர் சாபத்தை நிச்சயமாய் வருஷித்துக் கொள்ளுவான். பணவிஷயத்தில் உண்மையில்லாதவர்கள், வேறு எந்த விஷயத்திலும் உண்மையாயிருக்கமாட்டார்கள்!

இயேசு கூறும்போது பணவிஷயத்தில் உண்மையாயிருப்ப வர்களுக்கு மாத்திரமே **'தன்னுடைய மெய்யான ஐசுவரியத்தை'** தேவன் தருவார் என கூறினார் (லூக்கா.16:11). நாம் பணவிஷயத்தில் கவனக் குறைவாயிருந்தால், நம் ஜீவியத்திற்குத் தேவையான தேவனுடைய மெய்யான ஐசுவரியத்தை இழந்து விடுவோம்!

பணமும் பாபிலோனும்

இன்றைய கிறிஸ்தவத்திலுள்ள 'பாபிலோனிய இயக்கங்களில்' மூன்று குணாதிசயங்கள் உண்டு:

1. அவர்கள் சீஷத்துவத்தை பிரசங்கிப்பதில்லை! ஆகவே ஒரு சில சீஷர்களைக்கூட அவர்கள் உருவாக்குவதில்லை. மனம் மாறியவர்களை உருவாக்குகிறார்கள்! அவர்களிலும்கூட, உண்மையான மனமாற்றம் கொண்டவர்கள் இருப்பதில்லை.
2. அவர்கள் புதியஉடன்படிக்கை சபையின் கோட்பாடுகளை பிரசங்கிப்பதில்லை! ஆகவே, 'செத்த ஸ்தாபனங்களிலிருந்து' அவர்கள் பிரிந்து வருவதில்லை. அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பான ஒரு ஸ்தலசபையை கட்டுவதற்குரிய 'முயற்சிகள்கூட' எடுப்பதில்லை. அவர்கள் பழைய உடன்படிக்கை கூட்டங்களையும் (Congregations), கிறிஸ்தவ கழகங்களையும் (Clubs) மாத்திரமே கட்டுகிறார்கள்.

3. *இயேசுவும் பவுலும் பின்பற்றிய 'பொருளாதார கோட்பாடுகளை' அவர்கள் பிரசங்கிப்பதுமில்லை, அப்பியாசப்படுத்துவதுமில்லை. அவர்கள், தங்கள் ஊழியங்களை விஸ்தாரமாய் விளம்பரம் செய்து, சிறிதுகூட வெட்கமில்லாமல், செத்த ஸ்தாபனங்களிலுள்ள 'பெயர் கிறிஸ்தவர்களிடம்' பணத்திற்கு மண்டியிட்டு நிற்கிறார்கள். இந்த உலகத்திலுள்ள ஆட்சியாளர்கள் தங்கள் வேலையாட்களுக்கு சம்பளம் தருவதைப்போல, தங்கள் பாஸ்டர்களுக்கு மாத சம்பளம் வழங்குகிறார்கள்!*

இயேசு கூறும்போது நாம் ஊழியம் செய்திட "தேவன் அல்லது பணம்" ஆகிய இரண்டு எஜமான்கள் மாத்திரமே இருப்பதாக கூறினார்! ஆகவே, பணத்தை சரியான விதத்தில் கையாளுவது ஒவ்வொரு மூப்பருக்கும், ஒவ்வொரு சபைக்குமுள்ள மிக முக்கியமான விஷயமாகும்.

கேயாசி, *தேவனுடைய பணிக்காக நாகமானிடம் பணத்தை கேட்டு வாங்கி, அதை தனக்காகவே வைத்து கொண்டபடியால் அவன் மேல் சாபம் வந்தது (2இராஜா.5:21-27).* **யூதாஸ்காரியோத்து,** *தரித்திரர்களுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை திருடியபடியால், அவன் மேலும் சாபம் வந்தது!*

இவ்வாறு கேயாசிகளும், யூதாஸ்காரியோத்துகளும் கிறிஸ்தவ உலகில் எங்கும் நிறைந்திருக்கிறார்கள்.

இயேசுவின் சபையில்கூட ஒரு யூதாஸ் இருந்திருந்தால், உங்கள் சபையிலும் 'சில யூதாஸ்கள்' நிச்சயமாய் இருக்கக்கூடும்.

சாத்தான் தன்னுடைய பிரதிநிதிகளை எல்லா இடங்களிலும் வைத்திருக்கிறான். ஆகவே, மூப்பர்கள் சபையின் பணத்தைக்குறித்து, **தங்கள் பணத்தைவிட** *அதிக ஜாக்கிரதை கொண்டிருக்கவேண்டும்.*

நாம் எவ்வாறு தேவனுடைய பணத்தை பயன்படுத்துகிறோம் என்பதே, தேவன் நமக்கு ஒப்படைத்த ஊழியங்களைக் குறித்து கொண்டிருக்கும் 'மனப்பான்மையை வெளிப்படுத்தும்' ஓர் அடையாளமாயிருக்கிறது. தேவனுடைய ஜனங்கள், தங்கள் சபை ஊழியத்திற்காக தாராளமாயும் தியாகத்தோடும் கொடுத்த பணத்தை, எவ்வாறு பயன்படுத்துகிறார்கள்? என்பதைக் குறித்து, மூப்பர்கள் தேவனிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

பாபிலோனும், பணமும் நெருங்கிய தொடர்பு கொண்டவைகள். இதை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தின விசேஷம் 18-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். பாபிலோனில் கையாளப்படும்

கோட்பாடுகளே, உலகத்திலுள்ள கிட்டதட்ட எல்லா நாடுகளிலுமுள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் கையாளப்படுகிறது. அதுபோன்ற ஸ்தாபனங்களில் இருந்திடும் விசுவாசிகளுக்கு நாம் வைத்திருக்கும் ஒரே செய்தி என்னவென்றால்: "பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்" என்பதுதான் (வெளி.18:4).

கடனிலிருந்து விடுதலை

பணவிஷயத்தில் நாம் எடுத்து வைக்கவேண்டிய முதல்படி "நீதியாய் நடந்து கொள்வதே ஆகும்!". அதற்கு நாமே முதலாவதாக, எல்லா கடனிலிருந்தும் விடுதலை பெற்று! அதன்பின்பு, நம்முடைய விசுவாசிகளும் கடனிலிருந்து விடுதலை பெற்றிட போதித்திட வேண்டும்!

அநேக மூப்பர்கள், புதியஏற்பாட்டின் கட்டளையாகிய 'கடனிலிருந்து விடுதலையாகும்' செய்தியை வலிமையாய் போதிப்பதில்லை. "**யாதொன்றிலும், யாதொருவனுக்கும் (Anything to Anyone) கடன்படாதிருங்கள்**" *என்றே பரிசுத்தாவியானவர் தெளிவான கட்டளை கொடுத்திருக்கிறார் (ரோமர்.13:8). பரிசுத்தாவியானவர், "விசுவாசிகள் ஒருபோதும், ஒருவரிடத்திலும் கடன் வாங்க முடியாது!" என கூறவில்லை. எதிர்பாராத மருத்துவ செலவுகளோ அல்லது தன் பிள்ளைகளின் படிப்பிற்கு செலுத்த வேண்டிய அதிகமான கல்விக்கட்டணமோ ஆகிய* **அவசரத்தேவைகளுக்கு ஏழை விசுவாசிகள் கடனாய் பணம் பெறவேண்டிய நிலையை தேவன் அறிந்திருக்கிறார்.** *அவ்வாறு அவர்கள் செய்யும்போது, ஒரு வரையறை காலத்திற்குள் திரும்ப செலுத்த முடியாத அளவிற்கு 'அதிக பணத்தை' வாங்கிவிடக் கூடாது. அதற்குப் பதிலாக, பணத்தை எவ்வளவு சீக்கிரம் செலுத்த முடியுமோ, அதற்குரிய முயற்சி எடுத்து, மாதாமாதம் ஒரு சிறிய தொகையையாவது திருப்பி செலுத்திட போதிக்கப்பட வேண்டும்.*

ஒரு கடன் மிகப்பெரிய தொகையாக இருக்கும்போது, அதை செலுத்துவதற்கு ஒரு சகோதரன் கடினமாய் உணர்ந்தால், தன்னுடைய விலை கூடிய வீட்டையோ அல்லது வேறு பொருட்களையோ விற்று அந்த கடனை அடைத்து விட வேண்டும்! துரதிருஷ்டவசமாக அநேக மூப்பர்கள்கூட இந்த தேவனுடைய கட்டளையை 'சீரியஸாய்' எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவேதான் தேவன் அவர்களுக்குத் தம் அதிகாரத்தை தந்து தாங்கிட முடியவில்லை!

மூப்பர்கள் தங்கள் சபை விசுவாசிகளுக்கு: 1) எவ்வாறு எளிய வாழ்க்கை வாழ்வது! 2) எவ்வாறு ஒவ்வொரு மாதமும் சிறிது

பணத்தையாவது சேமிப்பது! என்ற நடைமுறை ஆலோசனைகளைக் கொடுத்திருக்க வேண்டும். அதன் மூலமாக, பின்னால் ஏற்படக்கூடிய ஒரு அவசரத்தேவையில், அவர்கள் கடன்படாது தங்களை காத்துக் கொள்ளமுடியும். எங்கள் சபையில் வந்து சேர்ந்த அநேக விசுவாசி களிடம், அவர்கள் கடனிலிருந்து எவ்வாறு விடுதலையாக முடியும் என்பதை "பணத்தைக் கொடுத்து அல்ல" ஆனால் எளிய வாழ்க்கை வாழ்வது எப்படி? பொருளாதார கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்துவது எப்படி? போன்ற போதகத்தை தந்து அவர்களுக்கு உதவி செய்திருக்கிறோம்.

"கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை" (நீதி.22:7). ஆகவே, யாராகிலும் ஒருவருக்கு 'ஒரு தேவனுடைய பிள்ளை' அடிமையாயிருப்பது நல்லதல்ல. நம்மிடத்தில் கொஞ்சமாய் இருந்தாலும், அதை வைத்து நம்முடைய கடனை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு வேகமாய் தீர்த்திட வேண்டும். நம்மிடம் இருப்பது குறைவாய் இருந்தாலும், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய நமக்கு மனதிருக்கிறதா? என்பதையே காண விரும்புகிறார் (2கொரி. 8:12).

மூப்பர்களாகிய நாம், நம்முடைய சபை அங்கத்தினர்கள் கடனில்லாது வாழவேண்டும் என போதிப்பதற்கு தேவனுக்கு முன்பாக பொறுப்புள்ளவர்களாய் இருக்கிறோம். நம்முடைய விசுவாசிகளை 'விபச்சாரத்தில் ஜீவிப்பதற்கு' நாம் அனுமதிக்காததைப்போலவே, நம்முடைய விசுவாசிகள் 'கடன்படும்' இந்தப் பாவத்திலும் ஜீவித்திட நாம் அனுமதித்திடக் கூடாது.

குறிப்பு: ஒரு வீட்டை கடன் உதவிக்காக அடமானம் வைப்பதோ அல்லது ஒரு வாகனம் வாங்குவதற்கான உதவித்தொகையோ "**கடன்**" என கருத முடியாது. ஏனென்றால் கடன் உதவிக்கு பெற்ற வீடும் அல்லது வாகனமும் இருக்கிறபடியால் 'கடன்' எனக் கூறிட இயலாது. ஒரு வியாபாரம் நல்ல இலாபமூட்டும் நிலையில் இருக்கும்போது, அதற்காக கடன் வாங்குவதுகூட 'அனுமதி உண்டு' என்றே கூறலாம். ஆனால் அநேக விசுவாசிகள் 'வியாபார திறமையில்லாமல்' வாங்கிய கடனில் பலவருடங்கள் சிக்கி இருக்கிறார்கள்! சொந்த வியாபாரத் திறமையோ அல்லது மார்கெட் நிலவரமோ தெரியாமலே வியாபாரத்தை தொடங்குகிறவர்கள் 'கடன் தொல்லையில்' சிக்கி கொள்கிறார்கள். வியாபாரத்திற்கென பெருந்தொகையை கடன் வாங்க தீர்மானித்தவர்கள், முதலாவதாக தங்கள் மூப்பர்களிடம் ஆலோசனையைப் பெறும்படி அறிவுறுத்துவது நல்லது.

கடன் அட்டை (Credit Card) கடன் வெகு மோசமானதாகும்! அது வெகு விரைவில் மிகப்பெரிய கடனாய் மாறிவிடும். விசுவாசிகள் டெபிட் கார்டு (Debit Card) எடுப்பது, தங்கள் பணத்திலிருந்து எடுப்பதாய் இருக்கிறபடியால், அதை வைத்துக்கொள்வது நம் சொந்த வசதியேயாகும். நாம் கிரெடிட் கார்டு உபயோகித்தால், ஒவ்வொரு மாதமும் அதிலிருந்து வரும் பில் தொகையை கட்டவேண்டியது வரும். அவ்வாறு பணம் கட்டுவதில் 'ஒருமாதம் கட்டாவிட்டாலும்' உடனே விழிப்படைந்து தங்களை கட்டுப்படுத்தி, அந்த கடனை முழுவதும் செலுத்தும்வரை கிரெடிட் கார்டு பயன்படுத்தக்கூடாது! இவ்வாறு, தங்கள் கடனை தீவிரமாய் அகற்ற செயல்படுகிறவர்களை, தேவன் கனம் செய்கிறார்! 'அதிக விலை கொண்ட பொருட்களை' கடனாக வாங்கிடக்கூடாது என விசுவாசிகள் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு தேவையான பணத்தை சேமித்து வைத்து, பின்பு வாங்க வேண்டும்! இயேசுவும் இந்த முறையை கையாண்டே பொருட்களை வாங்கியிருப்பார். அநேக கடன்களுக்கு 'பொருளாசையே' காரணமாயிருக்கிறது! மேலும், ஒழுங்கற்ற விதத்தில் வாழ்ந்து செலவழிப்பதும் ஓர் காரணமாயிருக்கிறது!

சிறு எறும்பிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் பணத்தை சேமித்து வைத்திட, விசுவாசிகளுக்கு மூப்பர்கள் போதித்திட வேண்டும்.

> அவ்வாறு சேமிப்பதற்கு, ஒரு குடும்பம் தன்னுடைய மாதாந்திர செலவில் 'கொஞ்சத்தை குறைத்துக்கொண்டு' தங்களை சுற்றியுள்ள மற்றவர்களின் உயர்ந்த நிலைக்கு வாழ்ந்திட முயற்சிக்காமல், குறைந்த அளவின்படி வாழ்ந்து சேமிக்க வேண்டும்.

தேவையில்லாத பொருட்களை வாங்கியோ அல்லது பல விருந்துகளை ஏற்படுத்தியோ பணத்தை வீணாக்கிடக் கூடாது. அநேக விருந்து நிகழ்ச்சிகள், பிறரிடமிருந்து கௌரவத்தைப் பெறுவதற்காக செய்யப்படுகிறபடியால் "அது ஒரு விக்கிரக ஆராதனை" என்றே கூறலாம். நம் குடும்ப பொருளாதார எல்லையின் திராணிக்குட்பட்டே 'விருந்தோம்பல்' கையாளப்பட வேண்டும். தங்களுடைய எதிர்கால தேவைகளுக்கு பணம் சேமித்து வைப்பது அதிக முக்கியமே அல்லாமல், நம் விருந்தோம்பலுக்காக **ஒரு கௌரவத்தைப் பெறுவது முக்கியமல்ல!**

"பெற்றோர்களே, பிள்ளைகளுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்" என 2கொரிந்தியர்.12:14 கூறுகிறது. ஒருவன் தன் குடும்பத்திற்கு சேமித்து வைப்பது 'தேவனை விசுவாசிப்பதற்கு'

முரண்பாடு கொண்டதல்ல. இந்த பூமியில் சிறிய ஜந்துவான எறும்பினிடத்தில் போய் ஞானத்தைக் கற்றுக்கொள்ளும்படி வேதாகமம் கட்டளையிடுகிறது. மழை காலத்தில் ஒரு தாழ்ச்சி உண்டாகும் என்பதை அறிந்து, கோடை காலத்தில் தன் உணவை சேமித்து வைக்கிறது (நீதி.6:6-11). **திடீரென ஏற்படும் எதிர்கால செலவுகளுக்காக சேமித்து வைப்பதை எறும்பினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.** *மனுஷர்களின் பெரிதான மூளையை விட, கடுகுக்கும் சிறிதான எறும்பின் மூளையில் அதிகமான ஞானமிருப்பதை காண்பது ஆச்சரியமாயிருக்கிறது. நம்முடைய பிள்ளைகளை படிக்க வைத்து, மருத்துவ வைத்தியங்கள் செய்து குடும்பத்தை நடத்துவது, அதிக செலவு கொண்டதாகும். இவைகளை முன்வைத்து சேமித்து வைத்திட விசுவாசிகள் போதிக்கப்பட வேண்டும். தன் சொந்த குடும்பத்தின் தேவையை பூர்த்தி செய்யாதவன், ஒரு அவிசுவாசியை விட மோசமானவன் என பரிசுத்தாவியானவர் கூறி வைத்திருக்கிறார் (1தீமோ.5:8).*

அநேக சமயங்களில், ஒரு வீட்டில் உள்ள மனைவி, ஒரு வேலை செய்து சம்பாத்தியம் செய்யாதிருக்கிறபடியால், பணத்தை விரயம் செய்து செலவழிக்க முடியும். ஏனெனில், அவர்களுடைய குடும்பத்தைப் பற்றிய பொருளாதார நிலை என்ன? என்பதை அவள் அறிந்திராமல் இருப்பதே காரணம் ஆகும். இந்நிலையில், குடும்பத்தின் பொருளாதார நிலையை மனைவிக்கு எடுத்துக் கூறவும், அவனால் கொடுக்க முடியாத **உயர்ந்த செலவுகளுக்கு "இல்லை" என மனைவிக்கு மறுப்பு கூறவும்** *கணவன்மார்களுக்கு கற்றுத் தர வேண்டும். இவ்வாறாக எல்லா மூப்பர்களும், கணவன்மார்களாயிருக்கும் யாவருக்கும் தைரியத்தை ஊக்குவித்து, தங்கள் மனைவிகளிடம் மேற்கண்டவாறு "இல்லை" என பதில் கூற கற்றுக்கொடுக்க வேண்டும். அதன் மூலமாய், கணவன்மார்கள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான 'சேமிப்புகளை' சேர்த்து வைக்க முடியும்.*

இதுபோன்ற சேமிப்புகளை ஒவ்வொரு குடும்பத்திலும் வைத்திருக்க முடியும்! அந்த குடும்பம் ஒவ்வொரு மாதமும் பொருளாதார கட்டுப்பாட்டோடு, தங்கள் செலவுகளை சுருக்கிக் கொண்டு வாழ்ந்தால், அவ்வாறு முடியும்! எல்லா கணவன்மார்களும் தன் குடும்பத்திற்கு சேமிக்கும்படி உற்சாகப்படுத்த வேண்டிய கடமை மூப்பர்களைச் சார்ந்ததாகும்!

கடைசி காலம் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்த நாட்களில், விசுவாசிகள் தங்கள் பணத்தை செலவழிப்பதில் அதிகமான கவனம் கொண்டிருக்க வேண்டும். நாமோ **"நிலையற்ற ஐசுவரியத்தில்"** *நம்பிக்கை*

வைப்பதில்லை. நம்முடைய நம்பிக்கையோ, நம்முடைய பரலோக பிதாவின் மீது மாத்திரமே வைத்திருக்கிறோம்! (1தீமோ.6:17). நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, மேலே கூறப்பட்ட எறும்பின் பாடத்தைக் கற்றுக்கொண்டு, தேவனுடைய இராஜ்ஜியத்தையே வாஞ்சையுடன் **முதலாவது** தேடுகிறவர்களாயிருந்தால்..... "தேவன் நம்முடைய **தேவைகளை எல்லாம் நிறைவாக்குவார்** என்ற வாக்குதத்தம் இருப்பதை போதித்திட வேண்டும்! *(மத்.6:33; பிலி.4:19).*

நான் ஒரு விசுவாசியாய் வாழ்ந்த 59 வருடங்களில் (50 வருட என் திருமண வாழ்க்கையும் இதில் அடங்கும்) என் மனைவியோ அல்லது நானோ 'ஒரு ரூபாய்கூட' கடன் வாங்கியதோ அல்லது யாதொரு நாளாகிலும் யாதொரு நபரிடமோ, எந்த சமயத்திலும் கடன்பட்டதில்லை. குடும்பமாய், மிக ஏழ்மைக்குள் வாழ்ந்தாலும் கடன்பட்டதில்லை! எங்கள் வீட்டில் கண்டிப்பான பொருளாதார நெறிகளை, தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து பின்பற்றினோம். எங்களால் வாங்க முடியாத எதையும் நாங்கள் வாங்கியதில்லை! பிள்ளைகளுக்கு புது ஆடைகளை வாங்க வேண்டிய நெருக்கத்திலும், பழைய ஆடைகளோ அல்லது 'இன்னமும் போட்டுக் கொள்ளலாம்' என்ற நிலையிலான ஆடைகளை மனதார உடுத்த பிள்ளைகளுக்கு கொடுத்தோம். அதன் முடிவாகவே தேவன் எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் இன்று ஆவிக்குரிய பிரகாரமாய் ஆசீர்வதித்துள்ளார். இப்போது, நாங்கள் வைத்திருந்த பொருளாதார ஒழுங்குகளை மற்றவர்களுக்கும் போதித்து உதவி செய்கிறோம்!

நான் எப்போதுமே 'ரோமர்.13:8' வசனத்தை அப்பழுக்கில்லாமல் கீழ்ப்படிய நாடி, மத்தேயு.6:33-ம் வசனத்தை அப்படியே என் குடும்பத்தில் ஜீவித்து வாழ்ந்தபடியால், எங்களுடைய பூமிக்குரிய எல்லா தேவைகளையும் அவர் கொடுத்தது மாத்திரமல்லாமல், ஆச்சரியமான ஆவிக்குரிய ஐசுவரியங்களையும் வாரி வழங்கியுள்ளார்.

ஆகவே, இப்போது ஒவ்வொரு விசுவாசிக்கும் "ஒருவன் தன்னுடைய வருமானத்திற்கு உட்பட்டு வாழ்ந்து, கடன் ஏதும் இல்லாமல், தேவனுடைய வார்த்தை தரும் கட்டளையின்படி வாழ்ந்திட..... **என்னைப் பின்பற்றுங்கள்!**" *என தைரியமாய் கூற முடிகிறது.*

இப்போது, நாம் தேவனுடைய வார்த்தை கூறும் தரத்தின்படி வாழ்வதா? அல்லது நம்மைச் சுற்றியுள்ள உலகபூர்வமான கிறிஸ்தவ தரத்தின்படி வாழ்வதா? ஆகிய இந்த இரண்டில், நாம் எதற்கு அதிக மதிப்பு தரப்போகிறோம்? என்ற கேள்வியே நமக்கு முன்பாக

வைக்கப்படுகிறது. ஒரு தேவனுடைய பிள்ளை, தேவனுடைய வார்த்தைக்கு பகிரங்கமாய் கீழ்ப்படியாமல், தொடர்ந்து கடன்பட்ட ஜீவியத்திலிருந்தால், அது வெட்கத்திற்குரியதாகும்! மேலும், அவனி மித்தம் 'தேவனிடத்தில்' சாத்தான் இரவும் பகலும் அவனை குற்றம் சாட்டுவதற்கு இடம் கொடுத்தவனுமாய் மாறுகிறான்! (வெளி.12:10).

நீங்கள் ஒரு மூப்பனாயிருந்து, மிகப்பெரிய கடனுக்குள் இருந்தால், ஒவ்வொரு மாதமும் அதைத் திரும்பச் செலுத்துவதற்கு யாதொரு முயற்சியும் எடுக்காதிருந்தால், **பிரசங்கம் பண்ணுவதை உடனடியாக நிறுத்தி, உங்கள் கடனை திருப்பி செலுத்த முதலாவதாக ஆரம்பியுங்கள்!** *ஏனெனில், நீண்ட கால கடன் எந்த விசுவாசிக்கும் ஒரு மோசமான சாட்சியேயாகும்! குறிப்பாக, ஒரு மூப்பருக்கு இன்னும் அதிக மோசமான சாட்சியாகும்!*

கொடுப்பதிலும்! கடன் கொடுப்பதிலும்! ஞானம் வேண்டும்

'மிக அதிகமான தொகையை' தங்கள் மூப்பர்களை முதலாவது ஆலோசிக்காமல், யாருக்கும் கடனாய் தரக்கூடாது என, விசுவாசிகளுக்கு கூறப்பட்டிருக்க வேண்டும். அப்படி இல்லை யென்றால் ஒரு சபையில் 'ஒருவருக்கொருவர் கொண்ட உறவு' பாதிக்கப்படும். அப்படியானால், இயேசுவின் கட்டளையான "கேட்கிற எவனுக்கும் கொடு, உன்னுடையதை எடுத்து கொள்ளுகிற வனிடத்தில் அதைத் திரும்ப கேளாதே" (லூக்கா.6:30) என்று வசனம் கூறுகிறதே?

ஒரு வேத வாக்கியத்தை நாம் புரிந்து கொள்ள நாடும்போது, அதை மற்றொரு வேத வாக்கியத்தோடு ஒப்பிட்டு பார்க்கவேண்டும். அப்படி இல்லையென்றால், தவறான அர்த்தத்தையே அந்த வசனத்திற்கு நாம் பெற்றிடமுடியும். சாத்தான் இயேசுவை சோதித்தபோது, ஆலயத்தின் உப்பரிகையில் இருந்து தாழக்குதிக்கும்படி கூறினான். அதற்கு அவன் "இப்படி எழுதப்பட்டிருக்கிறதே" என்றே ஓர் வசனத்தை கோடிட்டான். அவனுடைய ஆலோசனையை இயேசு புறக்கணித்து "இவ்வாறாகவும் எழுதியிருக்கிறதே" (It is **also** written) *என பதில் உரைத்தார் (மத்தேயு.4:6,7). ஆகவே வேதவாக்கியத்தின் முழு சத்தியம் "இப்படி எழுதியிருக்கிறது" என்பதில் மாத்திரமில்லை! மாறாக, "இப்படி எழுதியிருக்கிறது" மேலும்* **"இப்படியும் (also)** *எழுதியிருக்கிறது" என்பதை சேர்த்தே இருக்கிறது!*

ஆகவே லூக்கா.6:30-ம் வசனத்தில், "உன்னிடத்தில் கேட்கிற வனுக்கு கொடு! உன்னுடையதை எடுத்துக் கொள்கிறவனிடத்தில்

அதைத் திரும்ப கேளாதே" என வேத வாக்கியத்தை வாசித்திடும் அதே வேளையில், 1கொரிந்தியர்.10:26-ம் வசனத்தில் இப்படியும் எழுதியிருக்கிறதே என "**பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது**" என வாசிக்கிறோம். ஆகவே நாம் முதலாவதாக அறிய வேண்டியதெல்லாம் நம்முடைய எல்லா பணமும், சொத்தும், நம் சேமிப்புகளும் கர்த்தருக்கே சொந்தம்! என்பதாகும். ஆகவே உன்னிடத்தில் கேட்கிறவனுக்கு கொடு என்ற வசனத்திற்கு கீழ்ப்படிவதற்கு முன்பாக, நம்முடைய பணத்திற்கு சொந்தகாரரான கர்த்தரிடத்தில் நாம் முதலாவதாக அனுமதி கேட்க வேண்டும்! அவ்வாறாகவே நாம் கர்த்தரை தேடி கேட்டால், அவர் சில சமயங்களில் 'கொஞ்சம் பணத்தை' சில ஜனங்களுக்கு கொடுக்கும்படி கூறுவார்! சில சமயங்களில், யாரோ சிலருக்கு 'எந்த பணமும்' கொடுக்க வேண்டாம் என்றும் கூறுவார்! இவ்வாறு அவர் கூறுவது, பணம் கேட்கின்ற ஜனங்களின் இருதயங்களில் என்ன இருக்கிறது? என்பதை 'அவர் கண்டு' நம்மோடு பேசுவார்! இவ்வாறாக, ஏமாற்றுகிற ஜனங்களிடமிருந்து, கர்த்தர் நம்மை பாதுகாப்பார்.

இவ்விஷயங்களில் இவ்வாறு, விசுவாசிகள் கவனமாய் இல்லாதிருந்தால், தங்கள் பணத்தை மதியீனமாய் விரயம் செய்திட முடியும்! ஆகவே எல்லா விசுவாசிகளும் ஒருவருக்கு கடன் தருவதற்கு முன்பாக தங்கள் மூப்பர்களிடம் ஆலோசிப்பது நல்லது. ஏனெனில், கடன் வாங்கியவர்களிடமிருந்து பணம் திரும்ப வராமல் போய்விடும் என்பது மாத்திரமல்ல! அதைவிட பெரிய அபாயம் என்னவென்றால், **சீஷத்துவத்தில் அக்கறை இல்லாமல்,** உதாரத்துவம் கொண்ட விசுவாசிகளின் பண உதவி பெறுவதில் நாட்டம் கொண்டவர்கள் சபையில் சேர்ந்து, சபையை கறைப்படுத்திட முடியும் என்பதுதான்!

இதுபோன்ற பணத்தினிமித்தம் வரும் பிரச்சனைகள், 'சீஷத்துவத்தை' பிரசங்கிக்காமல் "அன்பையும் தயவையும்" மாத்திரமே பிரசங்கித்திடும் சபைகளில் கண்டிப்பாய் ஏற்படும்.

இயேசு கற்பித்த சீஷத்துவத்தின் உயர்ந்த தரம் ஒரு சபையில் தொடர்ந்து பிரசங்கிக்கப்பட்டால்! ஒரு மூப்பர், தன்னுடைய சபையின் "எண்ணிக்கை வளர்ச்சியில்" எந்த கனத்தையும் தேடாதவராய் இருந்தால்! அவரது சபையில் ஒரு பக்தியுள்ள குடும்பத்தையே கட்டுவதற்கு ஆர்வம் கொண்டவராயிருந்தால்! .... அதுபோன்ற தரம் நிறைந்தவர்களின் சபை 'இந்த ஏமாற்றுக்காரர்களிடமிருந்து' காக்கப்பட்டிருக்கும்!

எங்கள் சபையில் எளிய ஜனங்களுக்கு உதவி செய்வதற்கு முன்பாக, அந்த நபர் கடந்த இரண்டு வருடங்களில் "**ஒரு சீஷனாய் மாறுவதற்கு**"

ஆர்வம் கொண்டவர்தானா? என்பதை அவர் நிரூபித்த பிறகே, உதவி செய்கிறோம்!

பணவிஷயத்தில் நீதியும், உண்மையுமாய் இருத்தல்

முதல் படியாக, நாம் பணவிஷயத்தில் நீதியாய் இருந்தபிறகு, அடுத்தபடியாக பணவிஷயத்தில் உண்மையாயிருக்கும் ஸ்தானத்திற்கு முன்னேற வேண்டும். நாம் பண விஷயத்தில் யாரையும் ஏமாற்றாமல், திருடாமல், கடன்படாமல்... நீதியாய் இருக்கலாம். அவ்வாறு இருந்தும், நாம் பணத்தை உபயோகிப்பதில் உண்மையில்லாதவர்களாய் இருக்கமுடியும்!

பணவிஷயத்தில் உண்மையில்லாதிருப்பது, நாம் நமக்காகவே பணத்தை விரயமாக்கி செலவு செய்வது, சபையின் பணத்தை விரயம் செய்வது! என்பதே பொருளாகும். அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங் களிலும், சபைகளிலும் அங்குள்ள தலைவர்கள் பணத்தை விரயம் செய்கிறார்கள். அவ்வித வீணான செலவுகளை செய்த பின்பு, தொடர்ந்து தேவனுடைய ஜனங்கள், இன்னும் அதிகஅதிகமாய் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

நம்முடைய சபைகளில் அநேக எளிய சகோதரர்கள் கடின உழைப்பின் மூலம் தங்கள் பணத்தை சம்பாதிக்கிறார்கள். தங்கள் வீடுகளில் சொகுசான யாதொன்றும் அவர்களால் வாங்க முடிவதில்லை. இதுபோன்றவர்களால் சபைக்கு கொடுக்கப்பட்ட பணத்தை நாம் ஒருநாளும் விரயமாய், சபையின் செலவுகளுக்குகூட செய்துவிடக் கூடாது. நம்முடைய நோக்கங்கள் சரியானதாய் இருக்கலாம்! ஆனால், மார்த்தாள்கூட ஆண்டவருக்கும், அவருடைய ஜனத்திற்கும் ஊழியம் செய்திட நல்ல நோக்கமே கொண்டிருந்தாள் (லூக்கா.10:38-42). ஆகிலும், ஆண்டவர் அவளுடைய வேலையினிமித்தம் அவளை கடிந்து கொண்டார். ஆகவே, மரியாளைப்போல் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய திருத்துதல்களையும், கடிந்து கொள்ளுதலையும் கவனித்து கேட்பதே நலம்!

இயேசுவே நம்முடைய மாதிரியும், முன்னோடியுமாய் இருக்கிறார். தேவனுடைய ஜனங்களிடமிருந்து அதிகமான பணத்தை காணிக்கையாய் பெற்றிருக்கிறார். ஆனால் அவரோ, அதை செலவு செய்வதில் மிகுந்த கவனமாயும், மிச்சம் பிடிப்பதாயும், உண்மையாயும் செலவழித்தார்! அவர் பணத்தை செலவு செய்த விதம் "யோவான்.13:29-ம் வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது: மெய்யாய் **தேவையானவைகளை** *மட்டும் வாங்குகள்! ஏழைகளை*

மனதில் வைத்து **அவர்களுக்கு கொடுக்க** *நாடுங்கள்". நம்முடைய செலவு விஷயத்தில், இயேசு வரையறுத்த இந்த மாதிரியை நம் வீட்டிலும் நம் சபையிலும் பின்பற்றுவது நலம்.*

நீங்கள் பண விஷயத்தில் கவனமில்லாமல் வீணாக்கினால் "நீங்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை இழந்து விடுவீர்கள்". இயேசு கூறும் போது "நீங்கள் பண விஷயத்தில் உண்மையாயிராவிட்டால், யார் உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" என்றார் (லூக்கா.16:11).

> **அநேக மூப்பர்கள், தங்கள் சபையை 'அக்கினி மயமாய்' மாற்றி இருக்க முடியும். ஆனால், பண விஷயத்தில் தங்கள் தோல்வியினிமித்தம் 'கர்த்தருடைய அபிஷேகத்தை' இழந்து போனார்கள்.**

பண விஷயத்தில் நம் வீட்டிலும், நம் சபையிலும் உண்மையா யிருப்பதின் பொருள்: ஞானமான வழியிலும்! 'மிச்சம் பிடித்தும்' செலழிப்பதாகும்!

ஏழைகளுக்கு உதவுதல்

சபைகளில் யாதொரு மொழி வித்தியாசம் அல்லது ஜாதி அல்லது வம்சம் வித்தியாசம் இல்லாத "ஒரே குடும்பமாய்" கட்டப்பட வேண்டும்.இவ்வாறு **'கிறிஸ்துவின் சரீரத்தை' நாம் நிரூபித்து காண்பிக்க** *வேண்டி இருப்பதால், ஜனங்களுக்குள் யாதொரு மொழி வித்தியாசமும் கலாச்சார மற்றும் ஜாதி வித்தியாசமோ, எக்காலத்தும் இருந்துவிடக் கூடாது.*

ஆதி சபையில், விசுவாசிகள் ஏழையான விசுவாசிகளுக்கு பணம் கொடுக்க விரும்பினால், அதைத் தங்கள் அப்போஸ்தலர்களாகிய தலைவர்களிடத்தில் கொடுத்தார்கள். "தங்கள் தலைவர்கள் விசுவாசிகளிடத்திலுள்ள தேவை என்ன என்பதை, தங்களை விட நன்கு அறிந்திருப்பார்கள்" என்ற தாழ்மையான எண்ணத்தை கொண்டிருந் தார்கள் (அப்.4:34,35). ஏழை விசுவாசிகளுக்கு, மற்ற விசுவாசிகள் பணம் கொடுத்து உதவிட 'மூப்பர்களிடம் கொடுத்து' அதை அவர்கள் பாரபட்சமற்ற வழியில், தேவையுள்ள ஜனங்களுக்கு கொடுப்பதே எப்போதுமே சிறந்த வழியாகும்!

இவ்வாறு இல்லாமல், விசுவாசிகள் தாங்களாகவே 'ஏழை விசுவாசிகளுக்கு' நேரடியாக கொடுப்பதினிமித்தம், அவ்வாறு உதவி பெற்ற ஏழை விசுவாசிகள், சில காலம் கழித்து தங்கள் தேவையை ஏதாவது ஒரு வகையில் விளம்பரப்படுத்தி, அதன் மூலம் அவர்கள்

அதிகமாய் பெற்று கொள்வதும், உண்மையான தேவையுள்ளவர்களுக்கு யாதொன்றும் கிடைக்காமல் இருப்பதற்கோ வாய்ப்பு உண்டு!

தேவனுடைய ஊழியத்திற்காக கொடுக்கப்படும் பணம், 'ஞானமான விதத்தில் மூப்பர்களால், தேவைக்கு ஏற்ப' பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு ஏழை சபைக்கு பணம் அனுப்பப்படும்போது, நன்றாய் ஸ்தாபிக்கப் பட்ட சபைகளுக்கே அப்படி அனுப்ப வேண்டும். அந்த சபை 'பன்மையான' மூப்பர்களால் நடத்தப்பட்டு, அவர்களுடைய வரவு செலவுகள் சரியான விதத்தில் பராமரிக்கப்பட்டதாயிருக்க வேண்டும். அதுபோன்ற சபைக்கு பணம் கொடுக்கப்பட்ட பிறகு, எதற்காக கொடுக்கப்பட்டதோ, அதன்படி பணம் ஞானமாய் செலவழிக்கப் பட்டதா? என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்!

'அவிசுவாசிகளுக்கு நாம் உதவி செய்யக்கூடாது' என்பதில்லை! ஆனால், நம்முடைய பிரதானமான பொறுப்போ "நம் ஸ்தல சபை குடும்பமேயாகும்". உதாரணமாக, உங்கள் ஊரிலுள்ள ஏழை பிச்சைக்காரர்களுக்கு உதவும்படி பணத்தைக் கொடுப்பது ஓர் நல்ல செயலாகும்! ஆனால், உங்கள் சொந்த பிள்ளைகள் பசியோடு இருந்தால் உங்கள் நல்ல செயல்..... மதியீனமான செயலாய் மாறிவிடும்! நம்முடைய சொந்த பணத்தில், அதுபோன்ற மதியீனத்தை நாம் ஒருபோதும் செய்திட மாட்டோம். அதுபோன்ற மதியீனத்தை, தேவனுடைய பணத்தை முன்னிட்டும் நாம் செய்திடக் கூடாது!

வேதம் கூறும்போது "ஒருவன் தன் சொந்த வீட்டாரை விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்" (1தீமோ.5:8) என்றே கூறுகிறது. "ஆகையால் நமக்கு கிடைக்கும் வாய்ப்பின்படி, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" (கலா.6:10) என வாசிக்கிறோம்.

ஒரு தகப்பன், தன் சொந்த பிள்ளைகளிடமிருந்து பணம் கேட்க முடியும்

கொரிந்திய கிறிஸ்தவர்களிடம் பெறப்படும் காணிக்கைகளை, எருசலேமிலுள்ள 'ஏழை பரிசுத்தவான்களின் தேவைக்கு' அனுப்பும்படி பவுல் துரிதப்படுத்தினார் (2கொரி.8,9; 1கொரி.16:2). ஆனால், கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களாகிய 'தன் சொந்த ஆவிக்குரிய பிள்ளைகளிடமே' அவ்வாறு செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அவரோ, ரோமாவிலுள்ள அல்லது கொலோசெவிலுள்ள கிறிஸ்தவர்களிடம், வேரிடத்திலுள்ள ஏழை விசுவாசிகளுக்கு பணம் அனுப்பும்படி அவர் ஒருபோதும் கேட்டதில்லை! ஏனென்றால், மற்ற

சபைகளை அவர் ஸ்தாபிக்கவில்லை. ஆகவே, அவர்கள்மீது அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஒரு ஆவிக்குரிய தகப்பன், தன் சொந்த பிள்ளைகள் 'ஏழை விசுவாசிகளுக்கு' பணம் தரும்படி கேட்க முடியும்! ஆனால் மற்றவர்களுடைய பிள்ளைகளும் 'அதேபோல் செய்வதற்கு' கேட்பதற்கு அவரால் முடியாது. இந்த நடைமுறைகளை நாம் பின்பற்றினால், நாம் பாதுகாப்பாய் இருந்திட முடியும். இன்றுள்ள அனைத்து பாபிலோனிய சபைகள் வீழ்ச்சி அடைந்த "பொருளாதார குழிக்கு" நாம் தப்ப வேண்டுமென்றால், மேற்கண்ட "ஆவிக்குரிய மதிப்புகளை" நாம் எப்போதும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நாம் மிக உறுதியாக விசுவாசிப்பதெல்லாம் "தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் முதலாவதாக தேடுகிற யாவரும், தங்கள் பரமபிதாவினால் பூமிக்குரிய அனைத்து தேவைகளும் கொடுக்கப்பட்டதை அறிந்திருப்பார்கள்!" (மத்தேயு.6:33).

> அதற்கு சமமாய், நாம் இன்னமும் விசுவாசிப்பது என்னவென்றால் "நாம் கர்த்தருடைய பணியை புதிய உடன்படிக்கை கோட்பாட்டின்படி செய்தால், அவருடைய பணிக்குத் தேவையான எல்லா பொருளாதார தேவைகளையும் தேவன் கொடுப்பார்" என்பதுதான்.

பணத்தின் மீது பவுல் கொண்டிருந்த மனப்பான்மை

பண விஷயத்தில் பவுலின் நல்ல மாதிரியை கீழ்க்காணும் வசனங்களில் நாம் காணலாம்:

1கொரிந்தியர்.9:11-19:

"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைப்பாராட்ட எனக்கு இடமில்லை. ஆகிலும் நான் உந்தப்பட்டுச் சொல்லுகிற காரியம் என்னவெனில்..... அதினால் எனக்கு பலன் என்ன? கிறிஸ்துவின் **சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்கு பலன்!** *அதன் மூலமாய் நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாய் இருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்தி கொள்ளும்படிக்கு என்னைத்தானே எல்லோருக்கும் அடிமையாக்கினேன்!" என்றார்.*

எல்லா மனுஷர்களையும் ஆதாயப்படுத்திக் கொள்ளும்படியான ஓர் அடிமையாவதற்கு பவுல் கண்ட ஓர் வழிதான் "யாதொரு செலவில்லாமல் இலவசமாய்" அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே ஆகும்!

2கொரிந்தியர்.11:7-12 (NASB, Living *மொழிபெயர்ப்பு):*

"நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்தி, தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்கு

பிரசங்கித்ததினாலே குற்றம் செய்தேனோ? .... நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும் ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை... எவ்விதத்திலேயும் உங்களுக்கு பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாய் இருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதையாய் இருப்பேன். அகாயா நாட்டின் திசைகளிலே இந்தப் புகழ்ச்சி என்னை விட்டு நீங்குவதில்லை. இப்படிச் சொல்ல வேண்டியது என்ன?.... தங்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிற காரியத்தில், அவர்கள் எங்களைப்போல காணப்படும்படி, நான் செய்வதையே இன்னும் செய்வேன்" என்றார். சபையிலுள்ள விசுவாசிகளுக்கு 'இலவசமாய்' சுவிசேஷத்தை பிரசங்கிப்பது, **நம்மை தாழ்த்தக்கூடிய பங்காய்** *பவுல் குறிப்பிட்டதைப் பாருங்கள்.*

<u>அப்போஸ்தலர் 20:33-35 :</u>

"ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் அல்லது வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை! நீங்கள் அறிந்திருக்கிறபடி, என்னோடேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்த கைகளே வேலை செய்தது. இப்படி பிரயாசப்பட்டு, பெலவீனரைத் தாங்கவும் **'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'** *என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று, எல்லா விதத்திலேயும் உங்களுக்கு காண்பித்தேன்" என கூறினார்.*

<u>2தெசலோனிக்கேயர் 3:7-9:</u>

"இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே! ஒருவனிடத்திலும் இலவசமாய் சாப்பிடாமலும் உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம்! உங்கள் மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லை என்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும் படிக்கு **நாங்கள் உங்களுக்கு மாதிரியாய் இருக்கவேண்டுமென்றே** *அப்படிச் செய்தோம்". இந்த வேத வாக்கியத்தின்படி, இன்றைய கிறிஸ்தவ பாபிலோனிய பிரசங்கிகளுக்கு வித்தியாசமாய், அவருடைய மாதிரியைப் பின்பற்றி வருவதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

பவுல் வயது சென்று வேலை செய்யமுடியாத நிலைக்கு வந்தவுடன், தேவன் அவருடைய தேவையை ஆச்சரியமான வழியில் கொடுத்து போஷித்தார்!

பவுல் எருசலேமின் சிறையில் இருந்த போது, சில யூதர்கள் அவரை கொலை செய்வதற்கு ஒரு சபதம் செய்து கொண்டார்கள் (அப்.23:12-15). தேவனுடைய சர்வ ஞானத்தின்படி, பவுலின் சகோதரியுடைய

மகன் இவர்கள் சபதத்தை கேள்விப்பட்டு, சிறைச்சாலைக்கு வந்து அதை பவுலுக்கு கூறிவிட்டான் (அப்.23:16). இவ்வாறாக பவுலின் ஜீவன் காக்கப்பட்டது! பின்பு அவர் **தேசாதிபதி பேலிக்ஸ்** *முன்பாக நிறுத்தப்படும்படி* **செசரியா** *பட்டணத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார். அச்சமயம், பவுல் தன்னை விடுதலை செய்யும்படிக்கு பணம் கொடுப்பானோ? என்று* **பேலிக்ஸ்** *எதிர்பார்த்தான்! ஆனால் பவுல் பணம் தரவில்லை (அப்.24:26). ஒரு தேசாதிபதி லஞ்சமாய் பணம் கேட்டிருப்பாரென்றால், அது நிச்சயமாய் ஒரு பெரிய தொகையாய் இருந்திருக்கவேண்டும். ஒரு ஏழை பிரசங்கியாயிருந்த பவுல் அதிக பணம் வைத்திருக்கிறான் என தேசாதிபதிக்கு எப்படி தெரியும்?*

அதை நாம் யூகிக்க முடிகிறது!....

பவுல், தர்சு பட்டணத்தின் ஓர் ஐசுவரியமுள்ள வியாபார குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பணக்கார யூதன்! பவுல் ஒரு கிறிஸ்தவனாய் மாறியபோது, அவனுடைய சொத்துக்கள் தரப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால், பவுல் சிறைச்சாலையில் இருப்பதை கேள்விப்பட்டவுடன், அவனுக்கு அனுதாபப்பட்டு, பவுலின் சகோதரி தன் மகன் மூலமாய் "சொத்தின் பெரும் பங்கை" அனுப்பி இருக்க வேண்டும்! இவ்வாறாக, பவுல் ஒரு ஐசுவரியவானாய் மாறினான். இதைக் குறித்து தேசாதிபதி பேலிக்ஸ் கேள்விப்பட்டிருக்கக்கூடும்! சிறையிலிருந்து பவுல் விடுதலை பெற்றபின், இந்த உலகத்திலுள்ள அதிக செலவீனத்திற்குரிய பட்டணமாகிய ரோமாபுரிக்குச் சென்றார். அங்கு, சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கி இருந்தார் (அப்.28:30,31). இதுவும், பவுல் அச்சமயம் அதிகமான பணத்தொகையை பெற்றிருந்தார் என்பதைக் காட்டும் மற்றொரு அடையாளமாய் உள்ளது! பல ஆண்டு காலமாய், தேவனை மகிமைப்படுத்தும்படி, தன் பொருளாதார விஷயங்கள் அனைத்திலும் பவுல் மிக உண்மையுள்ளவராய் இருந்தார்.

இப்போதோ, பவுல் தன் தேவையை பூர்த்தி செய்வதற்கு வேலை செய்ய முடியாத நிலை வந்தபோது "தேவன் பவுலை கனம் செய்து" அவருடைய குடும்ப சொத்துக்கள் கிடைக்கும்படி செய்து அவரது தேவைகளை பூர்த்தி செய்தார்.

இதை எல்லாம் நாம் அறிந்து கொள்வது மிகுந்த உற்சாகமா யிருக்கிறது. எல்லா மூப்பர்களும், பவுல் செய்ததைப்போலவே, தேவனை கனம் செய்திட நாட வேண்டும்! அவர் தன் ஜீவியத்தின் கடைசியில் வைத்திருந்த சாட்சியைப்போலவே நம்முடைய சாட்சியும் "நாங்கள் ஒருவனுக்கும் அநியாயம் செய்யவில்லை! ஒருவனையும் கெடுக்கவில்லை! ஒருவனையும் வஞ்சிக்கவில்லை!" (2கொரி.7:2) என தேவனை கனம் செய்வதாயிருக்கவேண்டும்!

13

மெய்யான தீர்க்கதரிசிகள்! கள்ளத் தீர்க்கதரிசிகள்!

எல்லா விசுவாசிகளும் 'தீர்க்கதரிசிகளாய்' அழைக்கப்படவில்லை. ஆனால், எல்லா விசுவாசிகளும் 'வாஞ்சையுடன் தீர்க்கதரிசனம் சொல்லும்படி' விரும்பவேண்டும் என கட்டளையிடப் பட்டிருக்கிறார்கள் (1கொரி.14:1). இந்த புதிய உடன்படிக்கையின் காலத்தில், பரிசுத்தாவியானவர் ஊற்றப்பட்டதன் பலனில் இதுவும் ஒன்றாகும் (அப்.2:17,18).

புதிய உடன்படிக்கையில், தீர்க்கதரிசனம் சொல்லுவதின் அர்த்தம் என்னவென்றால், ஜனங்களிடத்தில் பேசி, அவர்களை உற்சாகப் படுத்துவதும், அவர்களை சவாலிடுவதும், அவர்களை ஊன்றக்கட்டுவது மேயாகும் (1கொரி.14:3). சபை கூட்டங்களில், ஆவியில் நிறைந்த எல்லோருமே தீர்க்கதரிசனம் சொல்லலாம் (1கொரி.14:31). மற்ற விசுவாசிகள், பேசப்பட்ட வார்த்தைகளை நிதானித்து, பேசப்பட்ட வார்த்தைகளில் எவ்வளவு தேவனிடத்திலிருந்து வந்தவைகள்? எவ்வளவு மனுஷீகத்திற்குரியவைகள்? என்பதை பகுத்து, எல்லா வேத வாக்கியங்களையும் சோதித்தறிய வேண்டும்! (1கொரி.14:29).

சபையில் **'சில தீர்க்கதரிசிகளையே'** *தேவன் நியமனம் செய்திருக்கிறார். இவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டும்படி, சபைக்கு அருளப்பட்ட தேவனுடைய வரங்களாயிருக்கிறார்கள்.* **தீர்க்கதரிசிகளோ, நீண்ட செய்திகளைக்கூறி** *விசுவாசிகளுக்கு சவாலிடவும், அவர்களைப் பெலப்படுத்தவும் செய்வார்கள். "யூதா, சீலா என்பவர்கள் தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே ஒரு நீண்ட செய்தி வழங்கும் வார்த்தைகளினால் சகோதரர்களுக்கு புத்தி சொல்லி அவர்களை திடப்படுத்தினார்கள்" என அப்போஸ்தலர்.15:32-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆனால், வெகு குறைவான விசுவாசிகளே 'தீர்க்கதரிசிகளாய்' சபையில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (1கொரி.12:28; எபேசியர்.4:11).இதை, சபையிலுள்ள யாவரும் நினைவுகூர வேண்டும்.*

ஒரு சபை கூட்டத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களை கவனித்து கேட்பதை, ஒரு வாழைப்பழம் சாப்பிடுவதற்கு ஒப்பிடலாம். 'மனுஷீகமான தோலை தூர எரிந்து விட்டு, தோலிற்கு உள்ளே இருந்ததை மாத்திரம் (தேவனிடத்திலிருந்து வந்ததை மாத்திரம்) நாம் புசித்திட வேண்டும்'. ஒரு வாலிப விசுவாசியிடம், தோல் அதிக கனமாயும் 'உள்ளே இருக்கும் தேவனிடமிருந்து வந்ததோ' வெகு கொஞ்சமாயும் இருக்கக்கூடும். ஆகிலும், அந்த கொஞ்சத்தை நாம் எடுத்து கொள்கிறதற்கு மகிழ்ச்சியாயிருக்கிறோம். முதிர்ச்சி பெற்ற ஒரு விசுவாசியிடமோ, தோல் மெல்லியதாயும் 'தேவனிடமிருந்து வந்ததோ' அதிகமாயும் இருக்கும்!

சகோதரிகளும் தீர்க்கதரிசனம் சொல்லலாம் (அப்.2:17,18). ஆனால், பெந்தெகொஸ்தே நாளில் துவங்கிய புதிய உடன்படிக்கைக்கு பிறகு, யாதொரு "பெண் தீர்க்கதரிசிகளையும்" நாம் காணவில்லை. அதுபோலவே, அப்போஸ்தல ஸ்திரீகளும் காணப்படவில்லை!

அப்போஸ்தலர்.21:9-ம் வசனத்தில் பிலிப்புவின் நான்கு குமாரத்திகளும் **'தீர்க்கதரிசனம் சொன்னார்கள்'** *என வாசிக்கிறோம். ஆகிலும், அவர்கள்* **'தீர்க்கதரிசிகளாய் இல்லை'.** *இதை இன்னும் தெளிவாய், பின்னால் நடந்த நிகழ்ச்சியில் காண்கிறோம்.... பிலிப்பு வீட்டிலிருந்த பவுலுக்கு, ஒரு தீர்க்கதரிசன செய்தியை தேவன் கொடுக்க விரும்பிய போது, தூரத்திலிருந்த அகபு என்னும் பேர் கொண்ட தீர்க்கதரிசியை அழைத்து, அவன் மூலமாய் பவுலுக்கு தன்னுடைய செய்தியை கூறும்படி தேவன் செய்தார்! அந்த செய்திக்கு, பிலிப்புவின் நான்கு குமாரத்திகளில் ஒருவரையும் தேவன் பயன்படுத்தவில்லை (அப்.21:10,11).*

எந்த ஒரு ஸ்திரீயும், இன்று தன்னை ஒரு 'தீர்க்கதரிசியாக' மாற்றிக் கொள்ள முயற்சித்தால், சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவர் ஒரு **யேசபேல்! ஒரு கள்ளதீர்க்கதரிசி.** *இதுபோன்ற ஒரு ஸ்திரீ எந்த ஸ்தல சபையிலிருந்தாலும், அவள் மூலமாய் அந்த சபை முடிவில் அழிந்து போகும் (வெளி.2:20-26; 1இராஜா.19:1,2). இவ்வாறு கூறியதினிமித்தம் எந்த சகோதரிகளாவது மனம் புண்பட்டால், அந்த ஸ்திரீகள் தங்களைத் தாழ்த்தி, புதிய ஏற்பாட்டை கவனமாய் படித்து "புதிய உடன்படிக்கையில், கர்த்தர் ஒரு ஸ்திரீயைகூட தீர்க்கதரிசியாய் நியமனம் செய்யவில்லை" என்பதை அறிந்து கொள்ளக்கடவர்கள்! தேவனுடைய ஊழியம், தேவனுடைய வழியில் செய்யப்படவேண்டும். அது அல்லாமல், யாரோ சிலருடைய சொந்த எண்ணத்தின்படியும், எந்த கவர்ச்சியையும் கொண்டு அல்ல!*

*தீர்க்கதரிசனம் சொல்லுகிற யாராயிருந்தாலும், தங்களுக்குத் தரப்பட்ட விசுவாச அளவின்படியே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும் (ரோமர்.12:6). ஆகவேதான் "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்" என்ற வார்த்தைகளை, தான் தீர்க்கதரிசனம் சொல்லும்போது பயன்படுத்த பவுல் பயந்திருந்தார். அதற்குப் பதிலாய் "என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்" (1கொரி.7:40) என மாத்திரமே கூறினார். சில வேத வாக்கியங்களை குறிப்பிடும் நேரத்தைத் தவிர, நாம் தீர்க்கதரிசனம் சொல்லும்போது "***கர்த்தர் சொல்லுவது என்னவென்றால்***"என்ற வார்த்தையை நாம் ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன்படுத்துவதை, எரேமியா நமக்கு கடினமாய் எச்சரிக்கைத் தந்துள்ளார் (எரே.23:21). மேலும், நாம் தீர்க்கதரிசனம் சொல்லும்போதெல்லாம், மற்ற விசுவாசிகள், நம்முடைய செய்தி கர்த்தரிடம் இருந்து வந்ததா? அல்லது இல்லையா? என சோதித்து தீர்மானித்திட, இடம் தர வேண்டும்!*

நேரடியாக சொல்லுகின்ற தீர்க்கதரிசனத்திற்கு எச்சரிக்கையாயிருங்கள்

புதிய உடன்படிக்கையிலிருந்த தீர்க்கதரிசிகள் ஒருவர்கூட, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் 'மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும்?' என 'திசை காட்டுபவர்களாய்' இருந்ததில்லை. அவ்வாறு, பழைய உடன்படிக்கை தீர்க்கதரிசிகள் மாத்திரமே செய்தார்கள். அப்போஸ்தலர்.11:28-ம் வசனத்தில், ஒரு கொடிய பஞ்சம் வர இருப்பதை **அகபு** *முன்னறிவித்து பேசி இருந்தாலும், அவர் ஒருபோதும், அதனிமித்தம் மற்றவர்கள் என்ன செய்யவேண்டும்? என கூறவில்லை. அதுபோலவே, அப்போஸ்தலர்.21:11-ம் வசனத்தில் பவுல் எருசலேமுக்குச் சென்றால் "அங்கு பவுல் சிறைப்படுத்தப்படுவார்" என அகபு கூறினாலும், பவுல் எருசலேமுக்கு போக வேண்டுமா? போகக் கூடாதா? என யாதொன்றும் கூறவில்லை!*

*அதற்கு காரணம் என்னவென்றால், இப்போது ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்தாவியை பெற்றிருக்கிறார்கள். ஆகவே பரிசுத்தாவி யானவர் மாத்திரமே, ஒவ்வொரு விசுவாசிக்கும், அவன் என்ன செய்திட வேண்டும்? என கூறுவார். பழைய உடன்படிக்கையில், அவர்களை வழிநடத்தும்படி "***ஜனங்களுக்குள்*** *பரிசுத்தாவியானவர் தங்கியிருக்கும்" பாக்கியத்தைப் பெறவில்லை. ஆகவேதான், தேவ ஆவியை பெற்றிருந்த ஒரு தீர்க்கதரிசி, அவர்கள் என்ன செய்ய தேவன் விரும்புகிறார்? என ஜனங்களுக்குக் கூறினார்.*

இதுபோன்ற எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், இன்றும்கூட, அநேக முதிர்ச்சி இல்லாத விசுவாசிகள் 'பழைய உடன்படிக்கை தீர்க்கதரிசிகளைப்போல்' ஜனங்கள் என்ன செய்ய வேண்டும்? என கூறுகிறார்கள். அன்று தீரு பட்டணத்தில், அகந்தை கொண்ட சில முதிர்ச்சி இல்லாத விசுவாசிகள் 'தங்கள் சொந்த ஆவியிலிருந்து' பவுல் எருசலேமுக்குச் செல்ல வேண்டாம்! என, அப்போஸ்தலராகிய பவுலுக்கு 'தீர்க்கதரிசனம்' சொன்னார்கள் (அப்.21:4). ஆனால் பவுலோ, அவர்கள் காண்பித்த வழியை மறுத்து, முன்னேறிச் சென்றார்! (அப்.21:13). பின்பு, "பவுல் எருசலேமுக்குச் சென்றது, தேவனுடைய சித்தமே" என்பதை ஆண்டவர் உறுதிபடுத்தினார் (அப்.23:11). ஆகவே தீரு பட்டணத்திலிருந்த விசுவாசிகள் 'தீர்க்கதரிசனமாய் உரைத்தது' முற்றிலும் தவறாய் இருந்தது. ஏனெனில், அது கர்த்தரிடமிருந்து வரவில்லை! நம்முடைய சபை விசுவாசிகள், ஒருபோதும், அவர்கள் என்ன செய்யவேண்டும்? அவர்கள் என்ன செய்யக்கூடாது? போன்ற **யாதொரு "நேரடியான தீர்க்கதரிசனத்தை" தீர்க்கதரிசனமாய் கவனித்து மோசம் போகக்கூடாது என,** *ஜனங்களை நாம் எச்சரிக்கை செய்திருக்க வேண்டும்!*

புதியஉடன்படிக்கை தீர்க்கதரிசனம் கூறுதலே வேண்டும்!

புதிய உடன்படிக்கை தீர்க்கதரிசனத்தின் பிரதானமான நோக்கம் என்னவென்றால் 1.தேவனுடைய ஜனத்தை, அவர்களுடைய பாவங் களிலிருந்து இரட்சிக்கவும் 2. சபையை கட்டுவதற்குமேயாகும்! இதையே, நம் சபைகளின் எல்லா கூட்டங்களிலும் அறிவித்திட வேண்டும். ஏனென்றால், இரண்டு நோக்கங்களுக்காகவே இயேசு வந்தார்: அதில் முதலாவது, அவருடைய ஜனத்தின் எல்லா பாவங்களி லிருந்து அவர்களை இரட்சிப்பதற்கும் (இதுவே புதிய ஏற்பாட்டின் முதல் வாக்குதத்தமாய் இருக்கிறது-மத்.1:21); இரண்டாவதாக அவருடைய சபையை கட்டுவதற்குமேயாகும்! (மத்.16:18).

இதற்குப் பதிலாக, அதாவது பாவத்திலிருந்து விடுதலை யாவதையும், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஐக்கியம் கட்டப்படுவதையும் விட மேலாக, நீங்கள் ஆவியின் வரங்களை அப்பியாசப்படுத்துவதையே அதிகமாய் பிரசங்கித்தால்.... உங்கள் சபை எல்லா ஆவியின் வரங்களையும் பெற்று அப்பியாசித்த கொரிந்திய சபையைப் போல் வெகு சீக்கிரத்தில் தேய்ந்து விடும்! (1கொரி.1:7). ஆம், அங்கு மாம்சீகமும், வளர்ச்சி குன்றிய போட்டிகளும், பொறாமைகளுமே நிறைந்திருக்கும்! மேலும், உங்கள் சபை லவோதிக்கேயா சபையைப்

போல் நிர்பாக்கியமும், பரிதபிக்கப்படத்தக்கதும், தரித்திரமும், குருடும், நிர்வாணியுமாய் இருக்கிறதை அறியாத சபையாய் மாறி விடுவீர்கள் (வெளி.3:17). அதுவே உங்கள் சபையின் பரிதாபமாய் மாறிவிடும்!

ஒரு புதிய உடன்படிக்கை சபையை நீங்கள் கட்டவிரும்பினால், உங்கள் பிரசங்க செய்தியின் வலியுறுத்தல் எப்போதுமே இயேசுவின் போதகத்தைப்போலவும், அப்போஸ்தலர்களின் போதகத்தைப் போலவும் இருக்கவேண்டுமே அல்லாமல், இன்றைய சபைகளில் திரளான கிறிஸ்தவர்கள் கேட்கும் செய்திகளாய் இருந்துவிடக்கூடாது!

பிரசங்க தயாரிப்பாளரா? கர்த்தருடைய செய்தியாளரா?

நீங்கள் கர்த்தரை தொடர்ச்சியாய் கவனித்து கேட்பவராயிருந்தால், சில சமயங்களில் அவர் உங்களை கடிந்து கொள்வதையும், அவர் உங்களை திருத்துவதையும் கேட்டிருப்பீர்கள். ஆபகூக்கின் அனுபவம், நம் எல்லோரும் பின்பற்ற வேண்டிய நல்ல மாதிரியாய் இருக்கிறது. அவர் கூறினார் "நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலை கொண்டிருந்து, **அவர் எனக்கு என்ன சொல்வாரென்றும்,** *அவர் என்னைக் கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்வேனென்றும்* **கவனித்துப் பார்ப்பேன்**" *என்றே கூறினார் (ஆபகூக்.2:1).*

பவுல் கூறும்போது, நான் கிறிஸ்துவை அறிவித்து "எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" என்று கூறி, கடைசியாக "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு" பிரயாசப்பட்டு.... இதைச் செய்து முடிப்பதற்காகவே "**எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற** *அவருடைய பெலத்தின்படி போராடி பிரயாசப்படுகிறேன்" என கூறினார் (கொலோ.1:28,29).*

> பவுல் முதலாவதாக, கர்த்தர் தனக்குள்ளாக வல்லமையாய் கிரியை நடப்பிக்க ஒப்புக்கொடுத்து, அவருடைய சுய - நம்பிக்கை உடைந்து, மேலும் அவருடைய மனுஷீக பெலன் மரணத்திற்கு ஊற்றப்பட்டு ஆகிய கிரியை அவருக்குள் நடந்த பிறகே.... மற்றவர்களை தேறினவர்களாக நிறுத்த முடிந்தது!

இதையே, நம் ஒவ்வொருவருக்குள்ளும் கர்த்தர் கிரியை செய்ய நாடுகிறார். ஆவியின் பெலத்தைக் கொண்டே, கர்த்தருக்கு வலிமையாய் ஊழியம் செய்திட பவுலை அவர் ஆயத்தப்படுத்தினார். அவ்வாறாக, நம்மையும் கூட அதே ஆவியின் பெலத்தினால் தயார் செய்து, நாமும் அவருக்கு வல்லமையாய் ஊழியம் செய்திட விரும்புகிறார்.

நாம் கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட சபையின் **செய்தியாளராய்** (Anointed Messengers) *இருப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோமே அல்லாமல், மக்களை கவரும்படியான 'பிரசங்க தயாரிப்பாளராய்' இருக்கும்படி அல்ல!*

மக்களை கவரும்படியான பிரசங்கங்களை செய்திட விரும்பும் மூப்பர்கள், பாபிலோனை மாத்திரமே கட்டுவார்கள்! இவர்கள், பணத்திற்காக பிரசங்கிக்கிறவர்களைப்போலவே, மனுஷருடைய கனத்திற்காகவும் பிரசங்கிப்பவர்கள்!

பவுல் கூறும்போது "நாங்கள் தேவனிடமிருந்து வரும் செய்தியாளராய் பேசுகிறோம், உங்களுக்கு சத்தியத்தைக் கூறும்படி அவரால் உத்தமர் என்ற நம்பிக்கையையும் பெற்றிருக்கிறோம். கேட்பவர்களின் செவியின் விருப்பத்திற்கு ஏற்ப 'அவருடைய செய்தியை ஒரு அணுவும் மாற்றாமல்' பிரசங்கிக்கிறோம். ஏனென்றால், எங்கள் இருதயங்களின் ஆழமான சிந்தைகளை சோதித்தறிகின்ற தேவனுக்கு முன்பாக மாத்திரமே நாங்கள் ஜீவிக்கிறபடியால் அவ்வாறு செய்கிறோம். ஒருமுறை கூட இச்சக வசனங்களைக் கூறி உங்களை மாயம் பண்ணவில்லை என்பதற்கு நீங்களே சாட்சி! அல்லது உங்களிடமிருந்து பணம் பெறுவதற்காக 'உங்கள் நண்பர்களைப்போல் பாவனை செய்யவில்லை' என்பதற்கும் தேவனே சாட்சி" (1தெச.2:4,5 - Living).

இதுவே, மூப்பர்களாகிய நாம் அனைவரும் பின்பற்ற உகந்த ஆச்சரியமான மாதிரியாகும்!

கிறிஸ்துவின் சரீரத்தில் பல்வேறு ஊழியங்கள் உண்டு

பவுலும், பர்னபாவும் **பாப்போ பட்டணத்தில்** *ஊழியம் செய்த போது, அவர்கள் ஊழியம் செய்த விதத்தில் ஒருவருக்கொருவர் கூர்மையான வித்தியாசம் ஏற்பட்டது (அப்.13:6-10). பவுல் "பரிசுத்தாவியினால் நிறைந்து"* **எலிமா** *என்ற மாய வித்தைக்காரனை மிக கடுமையாய் கடிந்து கொண்டார். ஆனால்* **பர்னபாவோ.....** *அவரும் "பரிசுத்தாவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவராய்" ஜனங்களை ஒருபோதும்* **பவுலைப்போல் கடிந்து கொண்டதே இல்லை!** *(அப்.11:24). தேவன் பர்னபாவிற்கு ஒரு வித்தியாசமான ஊழியத்தை தந்திருந்தார். இதை அறிந்து கொண்ட பவுல், தன்னைப்போலவே பர்னபாவும் பேச வேண்டும் என அவரிடம் கேட்டதில்லை. பவுலுக்கு தரப்பட்ட கிருபையை அறிந்து கொண்ட பர்னபா, பவுல் பேசிய விதத்தை நிறுத்தும்படி அவரிடம் கூறியதில்லை!*

பவுலோ அல்லது ஸ்தேவானோ ஜனங்களைக் கடிந்து கொண்டதைப்போல், எல்லா பிரசங்கிகளும் 'அவ்வாறே கடிந்து கொள்ள வேண்டும்' என பரிசுத்தாவியானவர் கேட்பதில்லை (அப்.7:51,52). ஏனென்றால், சிலர் பர்னபாவைப்போலவே ஊழியம் செய்திட அழைக்கப்பட்டிருக்கிறார்கள்! ஆனால் அதே சமயம், பவுலைப்போன்ற ஊழியத்தைப் பெற்றவர்கள், அவர்களுடைய ஊழியத்தை நிறைவேற்றும்படி அனுமதித்துவிட வேண்டும்! அல்லாமல், நீங்கள் பேசுவதைப்போல் பேசும்படி எதிர்பார்க்க கூடாது!

கிறிஸ்துவின் சரீரமானது, ஒரு மானிட நம் சரீரத்தைப்போலவே, ஒவ்வொருவருக்கும் ஒரே விதமான ஊழியத்தை தேவன் தருவதில்லை. தான் பெற்றுக்கொண்ட உணவை, தொண்டை மெதுவாக விழுங்குகிறது! அதே உணவில், வயிறு தன்னுடைய அமிலங்களை காரசாரமாய் சுரக்கிறது! வயிறு ஏன் இப்படி உணவின் மீது அமிலத்தை காரசாரமாய் சுரக்கிறது என்பதை தொண்டை அறியாவிட்டாலும், வயிறு தன் பணியை செய்வதை தொண்டை தடுப்பதில்லை. அந்த வயிற்றின் 'ஊழியத்தை' தேவனே தீர்மானம் செய்து வைத்திருக்கிறார். அதன் மூலமாய், உணவு வாந்தி பண்ணப்படாமல், நன்றாய் ஜீரணமாகச் செய்கிறார்.

> கிறிஸ்துவின் சரீரத்திலும் அவ்வாறாகவே, எல்லா ஊழியங்களும் வெவ்வேறாய் இருந்தாலும், சமமான மதிப்புடையதாகவே இருக்கிறது. பர்னபா செய்ய முடிந்ததை, பவுல் செய்ய முடியாது! பவுல் செய்ய முடிந்ததை பர்னபா செய்ய முடியாது! ஆகவே, தேவன் அவரவர்களுக்கு அழைத்த அழைப்பின்படி, நம்மில் ஒவ்வொருவரும், மற்றவர்கள் செய்திட அனுமதிக்க வேண்டும்!

இருப்பினும், சிலர் வேத வாக்கியத்தை மீறி நடக்கும்போது, அவர் தன் பிழையை உணரும்படி 'வேத வாக்கியத்தைக் காண்பித்து' தனியாய் அவரிடம் பேச வேண்டும். ஆனால் தேவன் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை வைத்து, பிறரை நாம் நியாயந்தீர்த்து விடக்கூடாது!

கிறிஸ்துவின் சரீரத்தில், நம் எல்லோருக்குமே, வெவ்வேறு ஊழியங்கள் உண்டு! ஆனால் நாமோ, "நம்முடைய ஊழியமே மிக முக்கியமானது! என எண்ணும் மனப்பாங்கு" கொண்டவர்களா யிருக்கிறோம். ஆனால், தேவனுடைய வசனம் நமக்கு புத்தி சொல்லுவது என்னவெனில் "மனத்தாழ்மையினாலே ஒருவரை யொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" என்பதேயாகும் (பிலிப்பியர்.2:3).

ஆவிகளை சோதித்தறியுங்கள்

வேத வாக்கியத்தின் எச்சரிப்பு என்னவெனில் "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகம் கள்ளதீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவான்.4:1) என்பதேயாகும்.

"தீர்க்கதரிசனங்கள்" என சொல்லப்படும் அனைத்தும் சோதித்தறியப்பட வேண்டும்! ஒருபோதும் கண்மூடித்தனமாய் அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது! (1கொரி.13:29).

மேலும் "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதை பிடித்து கொள்ளுங்கள்" எனவும் 1தெசலோனிக்கேயர்.5:21-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

பழைய உடன்படிக்கையில், கள்ளதீர்க்கதரிசிகளைக் குறித்து தம்முடைய ஜனங்களை தேவன் எச்சரித்தபோது "கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்த தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்" (உபா.18:21,22) என்று கூறினார்.

நாம் வஞ்சகத்திலிருந்து தப்பிக்கொள்வதற்கு முதலாவதாக "நம்மைக் குறித்த சத்தியத்தின் மேல் அன்பு கொண்டிருக்க வேண்டும்". இரண்டாவதாக, நம்மையே நியாயந்தீர்க்க வேண்டும்! குறிப்பாக பணஆசை, கற்பின் தூய்மை, கனத்தைத் தேடுதல், ஆகிய பகுதிகளாகும். இந்த பாவங்களை யாரெல்லாம் எதிர்த்துப் போராடவில்லையோ, அவர்கள் கண்டிப்பாய் வஞ்சிக்கப்படுவார்கள். இதுபோன்ற நிலை, எந்த மூப்பருக்கும் ஏற்பட்டுவிட முடியும்! அவர் எவ்வளவு வேத அறிவு கொண்டிருந்தாலும் ஒரு பொருட்டல்ல!

"தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரிந்தியர்.10:12).

கடைசி நாட்களில், "**வஞ்சகமே**" *பிரதான குணாதிசயமாய் இருக்கும் என இயேசுவும் பவுலும் குறிப்பிட்டதை நினைவுகூருங்கள் (மத்தேயு.24:4,5,11, 23-25; 1தீமோ.4:1,2; 2தெச.2:9-11). நம்முடைய இரட்சிப்பு, ஒரு பூரணமாகும் அனுபவத்தை அடைய வேண்டு மென்றால், இந்த வஞ்சகத்திலிருந்து தப்பி வாழ்வதற்கு ஒரே வழி*

“**நம்மை நாமே தொடர்ச்சியாய் நியாயந்தீர்த்து**” *வாழும் வாழ்க்கையாகும். “நீதிமான் இரட்சிக்கப்படுவதுகூட, அதிக கடின பாதை கடந்தே இரட்சிக்கப்பட முடியும்” என வாசிக்கிறோம் (1பேதுரு.4:17,18). ஆகவேதான், நாம் பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரித்து, மற்றவர்களும் அதில் பிரவேசிக்க முன் நடந்து, சபையை கட்டவேண்டு மென்றால் இதுபோன்ற எல்லா பாவ சிந்தைகளையும் எதிர்த்து நின்றிட* “**பலவந்த புருஷர்களாய்**” *இருக்க வேண்டும் (மத்தேயு.11:12).*

கள்ளதீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்

ஒரு கள்ளதீர்க்கதரிசியை அடையாளம் காட்டும் முக்கியமான பகுதி “**யாரெல்லாம் உங்களிடம் பணம் கேட்கிறாரோ அவர் ஒரு கள்ளதீர்க்கதரிசி! நீங்கள் அவர் கூறுவதைக் கேட்க கூடாது**” *என ஆதி அப்போஸ்தலர்கள் போதித்தார்கள். இந்த குறிப்பு கிறிஸ்துவுக்குப்பின் முதலாம் நூற்றாண்டில், ஆதி கிறிஸ்தவ புத்தகங்களில் ஒன்றான “திடிட்டாஜ் - 12 அப்போஸ்தலர்களின் போதகங்கள்” என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. ‘இந்த தரத்தின் அடையாளத்தைக் கொண்டு’ இன்றைய கிறிஸ்தவ உலகில் கள்ளத்தீர்க்கதரிசிகள் பெருகி வருவதை நாம் தெளிவாக கண்டு கொள்ளலாம்!*

கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் “சுகமளிக்கும் கூட்டங்கள்” இந்நாட்களில் உலகமெங்கும் விசாலமாய் பரவி வருகிறது. உண்மையில் இதுபோன்ற சுகமளிக்கும் கூட்டங்கள் மேஜிக் காட்சிகள் போலவே இருக்கிறது. இந்த கூட்டங்களை நடத்தும் **பிரசங்கிகளின் தனிப்பட்ட ஜீவியம்** *யாதொன்றும் நமக்கு தெரிவதில்லை. அவர்கள் குடும்ப ஜீவியம் எப்படி? அவர்கள் விவாகரத்து செய்தவர்களா? அவர்கள் ஏதாவது ஒரு ஸ்தல சபையை சார்ந்தவர்களா? ஆகிய விவரங்கள் நமக்குச் சொல்லப்படுவதில்லை! ஆனால் அவர்கள் பணத்தின் மீது கொண்ட மனப்பான்மையைக் கண்டு, பொது ஊழியத்தில் கைக் கொள்ளும் அவர்களின் நடைமுறைகளைக் கண்டு,* “**இவர்கள் கிறிஸ்துவின் ஊழியர்கள் அல்ல**” *என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.*

ஒரு பிரசங்கியை, அவருடைய பிரபல்யத்தை வைத்தோ அல்லது அவரது கவர்ச்சி தோற்றத்தை வைத்தோ அல்லது ‘வெளிப்படையான’ நிகழ்வுகளை வைத்தோ நாம் மதிப்பீடு செய்யக்கூடாது. ‘வெளிப்படையான நிகழ்வுகள்’ என நான் இங்கு குறிப்பிடுவது, இன்று வெளித் தோற்றத்தில் கவர்ச்சியாய் காணப்படும் அவர்களது ஊழியம், தேவனால் மதிப்பிடப்படும்போது “மரம், வைக்கோல், புல்லாகவே” தேவனால் மதிப்பிடப்படுகிறது!

அவருடைய நாமத்தில் "மெய்யாகவே அற்புத வல்லமைகளை" செய்த பிரசங்கிகளில் அநேகர், கடைசி நாளில் "அவர்கள் பாவத்தில் ஜீவித்ததினிமித்தம்" புறக்கணிக்கப்படுவார்கள்! என இயேசு கூறினார் (மத்தேயு.7:22,23). அப்படியிருக்க 'பொய்யான அற்புதங்களைக் கொண்டு' ஜனங்களை வஞ்சிப்பவர்கள் மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எவ்வளவு கண்டிப்பாய் இருக்கும்!

கீழ்கண்ட 'பரீட்சை' வைத்து ஒவ்வொரு பிரசங்கியும் மதிப்பிடப்படுவது நல்லது:

1. *அவர் கையாளும் வழிமுறை, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தில் கையாண்ட வழிமுறைக்கு ஒத்து இருக்கிறதா? குறிப்பாக 'பண விஷயத்தில்' புதிய ஏற்பாடு குறிப்பிட்ட கோட்பாடுகளைச் சார்ந்துள்ளதா?*
2. *இந்த பிரசங்கி, அவருடைய பிரசங்கத்தின் மூலமாய் நமக்குள் வெறும் 'உணர்ச்சி உணர்வுகளை' தூண்டி விடுகிறாரா? அல்லது தேவனுடைய வார்த்தை மூலமாய், நம்முடைய மனதை ஈர்த்து, கிறிஸ்துவின் பிரமாணங்களைக் கைக்கொள்ள நம்மை உற்சாக மூட்டுகிறாரா? பரிசுத்தாவியால் அபிஷேகிக்கப்பட்ட செய்திகளுக்கும், இன்றைய அரசியல்வாதி அல்லது TV பேச்சாளர்களைப்போல் 'மனுஷீக சொற்பொழிவுகளுக்கும்' உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்திருக்க வேண்டும்.*
3. *அவருடைய பிரசங்கம், களியாட்டு நிகழ்ச்சியைப்போல், நம்மை சிரிக்கவைக்கிறதா? அல்லது பாவத்தைக் குறித்த உணர்வைத் தந்து, நம்மை மனந்திரும்பச் செய்கிறதா?*
4. *அவருடைய பிரசங்கம், பிரசங்கிப்பவரை நாம் துதிப்பாடச் செய்கிறதா? அல்லது, நம்மை கிறிஸ்துவுக்குள் நெருங்கிவர நடத்துகிறதா?*

இதுபோன்ற ஒரு சிறிய சோதனை குறிப்புகளை வைத்தே, அநேக பிரசங்கிகளை நீங்கள் தவறான கண்ணோக்கில் மதிப்பீடு செய்து விட்டதைக் கண்டுபிடிப்பீர்கள்! அதனிமித்தமாய் உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலும்! 'தந்திர பிரசங்கிகளுக்கு' பணம் கொடுத்து ஏமாந்த பொருளாதார ஜீவியத்திலும்! ஏற்பட்ட நஷ்டத்தை நீங்கள் காண்பீர்கள். இனிமேலாவது, இன்னும் அதிகபணத்தை இழந்து விடாதிருக்க கவனமாயிருங்கள்!

'கர்த்தருடைய நாமத்தைக் கூறி' அநேக பிரசங்கிகள் காணிக்கை எடுக்கிறார்கள்! ஆனால், கர்த்தருடைய நாமத்தை இவர்கள் வீணில் வழங்குகிறார்கள். ஏனென்றால்

ஆண்டவராகிய இயேசு எந்த மனிதரிடமும், எச்சமயத்திலும் இந்த பூமியிலிருக்கும் போது பணம் கேட்டதில்லை! அப்படி இருக்க அவருடைய நாமத்தைக்கொண்டு யாதொருவன் பணத்தைக் கேட்க முடியும்? ஆகவே ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தை இவர்கள் வீணில் தவறாய் பயன்படுத்துகிறார்கள்.

ஆண்டவர் பரத்திற்கு ஏறெடுக்கப்பட்ட பிறகும் 'பண விஷயத்தைக் குறித்து' அவருடைய மனதை மாற்றி கொள்ளவில்லை! புதிய ஏற்பாட்டை கவனமாய் வாசிக்காத, எளிய மனம் கொண்ட விசுவாசிகளை இந்த பிரசங்கிகள் வஞ்சிக்கிறார்கள்!

இன்று "சுகமளிக்கும் சுவிசேஷகர்கள்" என அழைக்கப் படுபவர்கள், பொதுக் கூட்டங்களிலும், தொலைக்காட்சியிலும், தங்கள் பத்திரிக்கை செய்தியிலும், தேவன் உங்களுக்கு எல்லாவற்றையும் செய்வார்.... குருடான கண்களைத் திறப்பார், சப்பாணியை எழுந்து நடக்கச் செய்வார், புற்றுநோயை சுகமாக்குவார், ஏன் மரித்தவர்களைக்கூட எழுப்புவார்" என தாராளமாய் பிரசங்கித்து விட்டு, அவருடைய வார்த்தையை கவனித்துக் கேட்பவர்களிடம் "இப்போது உங்கள் விசுவாசத்தை செயல்படுத்தி, **இந்த அற்புதங்களை பெற்றுக் கொள்ளுங்கள்***" என கூறுகிறார்கள்! இதை எல்லாம் சொல்லி முடித்தவுடன், தங்கள் வார்த்தையை கேட்டுக் கொண்டிருப்ப வர்களிடம் "***ஊழியத்தேவைக்கு தாராளமாய் பணம் கொடுங்கள்!***" என கரம் நீட்டுகிறார்கள். ஆகவே இந்த பிரசங்கிகள் சொல்லும் சேதி என்னவென்றால் "சர்வவல்ல தேவனால் ஒன்று மாத்திரம் செய்ய இயலாது! அவருடைய ஊழியத்திற்கு அவரால் பணம் தரமுடியாது!" என்பதுதான். இது ஒரு அற்பமான மதியீனம் அல்லவா? இவ்வாறாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அவதூறு செய்து, மக்களிடம் பணத்தை பிச்சை கேட்கிறார்கள்! இவ்வாறு பணத்தை பிச்சை கேட்கும் பிரசங்கிகளில் அதிகபட்சமாய், எல்லோருமே "ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை பேசுகிறோம்" என கூறிக் கொள்பவர்கள்! 'சில பொல்லாத ஆவி' அவர்களிடம் ஒளியின் தூதனைப்போல் வந்து, சில போலியான அனுபவங்களைக் கொடுத்து, அதில் அவர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள் என்பது மிக வெளிப்படை யாகவே தெரிகிறது (2கொரி.11:13-15). அவ்வாறு இருந்தும், இலட்சோபலட்ச விசுவாசிகள் இந்த வஞ்சகத்தைக் காணாமல், இன்னும் மதியீனமாய் தங்கள் பணத்தை அவர்களுக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.*

பிரசங்கிகளும் அநேக நூதன கிரியைகள் மூலமாய்.... ஜனங்களை கீழே தள்ளிவிடுவது! அடக்கமுடியாமல் சிரிக்க வைப்பது!

போன்றவைகளைக் கொண்டு, **இவை அனைத்தும் பரிசுத்தாவியின் கிரியைகள்** எனக் கூறி, விசுவாசிகளை ஏமாற்றுகிறார்கள்! இதுபோன்ற பிரசங்கிகளிடமிருந்து உங்களை விலக்கிக் கொள்ள நீங்கள் விரும்பினால், எல்லாவற்றையும் சோதித்து, கீழ்கண்ட நான்கு கேள்விகளைக் கேட்டுபாருங்கள்:

1. இதை இயேசு செய்தாரா? 2. இதை இயேசு போதித்தாரா? 3. இதை அப்போஸ்தலர்கள் செய்தார்களா? 4.இதை அப்போஸ்தலர்கள் போதித்தார்களா?

இந்த நான்கு பரிசோதனையில் அந்த பிரசங்கியின் செயல்பாடுகள் தோற்றுப்போயிருந்தால், அவரும் அவருடைய கிரியைகளும் 'போலி என' புறக்கணிக்கப்பட வேண்டும்! அவர் எவ்வளவு புகழ்பெற்ற அல்லது பிரபல்யமானவராய் இருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல!

ஏழைகளை கொள்ளையிடும் பிரசங்கிகள்

இயேசு எதைக்கண்டு மிக கண்டிப்பாய் செயல்பட்டாரோ, அந்த ஒன்றை குறித்தே நானும் அதிக கண்டிப்பாய் செயல்படுகிறேன். சிலர் தேவனுக்கு ஊழியம் செய்வதாகக் கூறிக்கொண்டு,'ஏழை ஜனங்களிடம்' தேவனுடைய நாமத்தில் பணம் பெறுவதைக் கண்டு, ஒரு சாட்டையை இயேசு உண்டுபண்ணினார்! (யோவான்.2:14-17). பிரசங்கிகள், பேதையான விசுவாசிகளைப் பார்த்து "நீங்கள் தேவனுடைய பணிக்கு பணம் தரவில்லையென்றால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உங்கள் மேல் உண்டாயிருக்கும்" என அச்சுறுத்து கிறார்கள்! இது எப்படி யெனில், ஆண்டவராகிய இயேசு "**பணம் பறிப்பவர்**" என காட்டுவதா யிருக்கிறது. இவ்வாறாக கர்த்தருடைய நாமத்தை அபகீர்த்தி செய்வதைக் கண்டு, எனக்குள் "ஓர் பரிசுத்தமான கோபத்தை" எரிந்திடச்செய்து....'இந்த தீமையை எதிர்த்து' கடந்த 40 வருடங்களுக்கு மேலாய் நான் கண்டிதத்துடன் பிரசங்கித்து வருகிறேன்!

வேதாகமத்தில், மல்கியா.3:8,9 வசனங்கள் 'தவறாய் கோடிடப் பட்டு' 'தவறாய் புரிந்து கொள்ளப்பட்ட' வசனங்களில் ஒரு முக்கியமான வசனமாகும். அதில் தேவன் கூறுகையில் "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும் காணிக்கையிலுந் தானே! நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்" என்றார். ஆனால் இந்த வசனமோ **பழைய உடன்படிக்கையின் கீழ்** வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லப் பட்டதாகும். இஸ்ரவேல் தேசம் தேவனுடைய அரசாங்கத்திற்கு கீழ்,

தேவனையே தங்களுக்கு தலையாகக் கொண்டு வாழ்ந்த தேசம்! ஆகவே, அவர்கள் 'தசமபாகம்' என்று சொல்லப்பட்ட **தங்கள் வருமானவரி 10% செலுத்தி,** அதன்மூலம் அரசாங்க ஊழியர்களாய் இருந்த லேவியர்கள் ஆதரிக்கப்பட்டார்கள். எல்லா தேசங்களைப்போலவே, யாரெல்லாம் வருமானவரி செலுத்தவில்லையோ அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்!

ஆனால், **புதிய உடன்படிக்கையின் கீழ்** வாழும் நமக்கு, அந்த நிலை இல்லை. பழைய உடன்படிக்கை, பெந்தெகொஸ்தே நாளில் அழிக்கப் பட்டது! சபை என்பது, தேவனை தங்கள் தகப்பனாய் கொண்ட ஒரு குடும்பமாய் இருக்கிறது. **எந்த ஒரு தகப்பனும் தன் பிள்ளைகளிடம் வருமானவரி** வசூலிக்கமாட்டான்! இப்போது, தேவனுடைய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட வசனம் 2கொரிந்தியர்.9:7-ல் காணப்படுகிறது: "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்! உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்பதேயாகும்.

இன்று அநேக பிரசங்கிகள் "ஜனங்களின் பணத்தை கர்த்தர் விரும்புகிறார்" என காண்பிப்பது.... அதுவும், கிறிஸ்தவரல்லாத இந்த இந்திய தேசத்தில் காண்பிப்பது, ஓர் வெட்கத்திற்குரிய அவலமாகும்! இதுபோன்ற காரியங்கள் என்னை கோபமூட்டுவது மாத்திரமல்லாமல், கர்த்தருடைய நாமத்திற்கு இவ்வித செயல்கள் கொண்டுவந்த அபகீர்த்தியை எண்ணி, என்னை அழுதிடவும் வைத்து விட்டது!

பவுல் கூறும்போது "சகோதரரே, நீங்கள் என்னோடேகூட பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில் அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞர் என்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது **கண்ணீரோடும் சொல்லுகிறேன்....** அவர்கள் பூமிக்கடுத்தவைகளை (பணத்தை) சிந்திக்கிறார்கள்" என கூறினார் (பிலி.3:17-19).

பவுல் பிரசங்கித்தபோது, பாவத்தைக் குறித்தும், இதுபோன்று பணத்தை அபகரிக்கும் மனநிலையைக்குறித்தும் மிக வல்லமையாய் பிரசங்கித்தபடியால், **தேமா** போன்ற அநேகர், அவரை விட்டு வெளியே சென்றார்கள். பவுல் தனது கடைசி நிருபத்தில் கூறும்போது "ஆசியா நாட்டில் இருக்கிற யாவரும், அவர்களில் **பிகெல்லு, எர்மொகெனே** முதலாய் என்னைவிட்டு விலகினார்கள்" என கூறினார். ஆகிலும், சிலர் மாத்திரமே கடைசிவரை என்னோடு கூட நிலை நின்றார்கள்: "ஒநேசிப்போரும் அவன் வீட்டாரும், என்னைக் குறித்து வெட்கப்பட வில்லை, அவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக" என கூறினார். மேலும்

தீமோத்தேயுவுக்கு கூறும்போது "நான் உனக்கு போதித்த சத்தியங்களை உறுதியாய் கைக்கொண்டிரு" எனவும் கூறினார் (2தீமோ.1:13-16).

முதல் நூற்றாண்டு காலம் தொடங்கி "தேவனுடைய வசனத்தை, மலிவு விலையில் தெருவில் விற்கிறவர்களைப்போல்" தரம் குறைந்த ஊழியர்கள் இருந்தார்கள் (2கொரி.2:17). தேவனும் உலகப்பொருளும், இயேசு கூறியதைப்போல் மனுஷனை ஆள விரும்பும் இரண்டு எஜமான்களாயிருக்கிறார்கள். தேவன் உங்களை முற்றிலுமாய் ஆளுவதற்கு அனுமதிக்காவிட்டால், பணம் உங்களை ஆண்டு கொள்ளும்! இந்த நிலையில் நீங்கள் வஞ்சகர்களாலும், பணத்தை நேசிக்கும் பிரசங்கிகளாலும் ஏமாற்றப்படுவது நிச்சயம்!

இந்த கடைசி நாட்களில், நீங்கள் வஞ்சிக்கப்படாதிருக்க வேண்டு மென்றால் "பண ஆசைக்கு" முற்றிலுமாய் விடுதலை பெற்று வாழுங்கள். புதிய ஏற்பாட்டை பின்பற்றுங்கள்! நம்முடைய ஆண்டவராகிய இயேசு ஜீவித்து, ஊழியம் செய்து, உங்களுக்கு மாதிரியாக வைத்த கோட்பாடுகளையே உறுதியாய் பிடித்துக் கொள்ளுங்கள்! அவ்வாறு நீங்கள் செய்தால், நீங்கள் ஒருபோதும் தவறான பாதைக்கு சென்றுவிட மாட்டீர்கள்.

இந்த கடைசி நாட்களின் வஞ்சகம்

கடைசி நாட்களில் 2தெசலோனிக்கேயர் 2-ம் அதிகாரம் நமக்கு எச்சரிக்கிறபடி, **அந்திக்கிறிஸ்து** *"தன்னை உயர்த்துகிறவனாய், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்காருவான்.... அடையாளங்களோடு பொய்யான அற்புதங்கள் செய்வான்!" என 4,9 வசனங்களில் வாசிக்கிறோம். இங்கு குறிப்பிடப்பட்ட அந்திக் கிறிஸ்துவின் ஆவி, நாம் வாழும் கிறிஸ்தவ உலகில் இருப்பதாக 1யோவான்.2:18-20 வசனங்களில் காண்கிறோம். தன்னை உயர்த்தும் பிரசங்கிகளிடமும், பொய்யான தீர்க்கதரிசனங்கள் கூறி, போலியான அடையாள அற்புதங்களை வைத்து, ஜனங்களைத் தங்களோடு ஈர்த்துக் கொண்டு, ஏலியின் குமாரர்களைப்போல* **காணிக்கைகளை அபகரித்து....** *இன்னும் இதுபோன்ற ஏராளமான வழியில் தன்னை தேவனைப்போல் தன் மந்தைக்கு காண்பித்து, அவர்களை ஆளுகை செய்வான்! (1சாமு.2:12-17). தொடர்ந்து 2தெச.2:10,11 வசனங்கள் கூறும்போது, தேவனே சில ஜனங்களை வஞ்சிக்கப்பட அனுமதிப்பார்! என எச்சரித்து, நாம் வஞ்சிக்கப்படாமல், "இரட்சிக்கப்படத்தக்கதாய் சத்தியத்தின் மேல் உள்ள அன்பை" பற்றிக் கொள்ளும்படி போதிக்கிறது:*

1. நம் சொந்த பாவத்தையும் சுயநலத்தையும் பெருமையையும் தேவன் நமக்கு காண்பிக்கிறபடி **சத்தியத்தை நேசித்தால்,**

2. வசனத்தில், தேவன் காட்டுகிற **சத்தியங்களை நாம் நேசித்தால்,**

3. சுயநலம், பெருமை, பாலிய அசுத்தம், கோபம், பணஆசை போன்ற "எல்லா பாவத்திலிருந்தும் இரட்சிக்கப்பட" **ஆர்வம் கொண்டிருந்தால்,** நாம் வஞ்சிக்கப்படாமலிருப்போம்!

இந்நாட்களில், இந்த உலகிலுள்ள ஏராளமான "கிறிஸ்தவ ஊழியங்கள்" என கூறிக்கொள்ளும், ஊழியங்கள் மூலமாய் 'எல்லா விசுவாசிகளையும்' **தேவன் சோதிக்கிறார்.** ஒவ்வொரு விசுவாசியும், அவனவனுடைய ஆழமான விருப்பத்தை பூர்த்தி செய்யும் ஊழியங் களுக்கு இழுக்கப்படுகிறான். ஆகிலும், ஒரு தேவ பக்தியான வாழ்க்கைக்கு பசியும் தாகமும் கொண்டவர்களே, அதைப் பிரகடனம் செய்யும் மெய்யான ஊழியங்களுக்கு ஈர்க்கப்படுகிறார்கள்!

கர்த்தரோ, அநேக பொய்யான ஊழியங்களை அனுமதித்து அதைப் பெருகவும் விட்டுவிட்டார். 1)சௌக்கிய செழிப்பான சுவிசேஷம் 2)பொய் அந்நியபாஷை பேசும் கூட்டம் 3)ஆவியினால் தள்ளப்பட்டு விழுதல் 4)பொய்யான அடையாள அற்புதங்கள் 5)போலியான தீர்க்கதரிசன ஊழியங்கள் 6) உணர்ச்சி எழுச்சியில் திரும்பதிரும்ப துதி செலுத்தும் பொய்யான 'ஆராதனைகள்' 7)தொடர்ந்து பாவங்களிலிருந்தாலும், ஜனங்களை ஆறுதல் செய்யும் மனோதத்துவ பிரசங்கங்கள் 8)"கிறிஸ்தவ (!)" ராக்-இசைகள் 9)சீஷத்துவமில்லாத சுவிசேஷ ஊழியங்கள் போன்றவைகளாகும். இதுபோன்ற ஊழியங்களை, இந்த கடைசி நாட்களில் பெருகி வரும்படி தேவன் அனுதித்தது ஏன்? **அதைக்கொண்டு, தன்னுடைய சொந்த ஜனங்களை சோதிப்பதற்கேயாகும்.** அநேக விசுவாசிகள் தங்கள் ஜீவியத்தில் பிரதானமாய் "தேவபக்தியை நாடாதபடியால்" இந்த சோதனையில் தோற்றுப்போவார்கள்!

தேவனை மெய்யாய் தொழுது கொள்ளுகிறவர்களோ, இயேசுவை தங்கள் மாதிரியாய் நோக்கிப்பார்த்து, அவருடைய சீஷத்துவ பாதையில் நடந்து வருகிறபடியால், வஞ்சகத்திலிருந்து தப்பித்து கொள்வார்கள். இந்த விசுவாசிகள், தங்கள் பாவத்தைக் குறித்த உணர்வை துரிதமாய் பெறுவார்கள்! அவர்களே, மானிடர்கள் வகுத்த எல்லா பாரம்பரியங் களுக்கும், அவர்களின் சொந்த புத்தியின் காரணங்களுக்கும் விலகி நின்று "வேத வாக்கியத்தின் அதிகாரம் ஒன்றிற்கே" தலை வணங்கு வார்கள்! ஆகவேதான், அவர்கள் வஞ்சிக்கப்பட மாட்டார்கள்!!

14

தேவ வார்த்தை தேவ வழியில் பிரசங்கித்திட வேண்டும்!

"**நா**ம் பிரசங்கிக்கும்போது, **தேவனே** நம் மூலமாய் பேசுவதைப் போல் பிரசங்கித்திட வேண்டும்" *(1பேதுரு.4:11).*

நாம் தேவனுடைய வார்த்தையை வல்லமையாய் மற்றவர்களுக்கு பிரசங்கித்திட வேண்டுமென்றால் "**கர்த்தருடைய சமூகத்தில்**" நாம் ஜீவித்திட வேண்டும். இவ்வாறாகவே ஏசாயா, எசேக்கியேல், யோவான் ஆகியோர்கள், அவருடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படி கர்த்தர் ஆயத்தம் செய்தார்:

- ஏசாயா.6:1-ல் தேவனுடைய மகிமையை ஏசாயா கண்டார்! அப்போது கர்த்தர், ஜனங்களுக்குச் சொல்லும்படி ஒரு செய்தியைத் தந்தார் *(ஏசாயா.6:9).*
- எசேக்கியேல்.1:26-ல் தேவனுடைய மகிமையை எசேக்கியேல் கண்டார்! அதன் பிறகே ஜனங்களிடத்தில் சென்று ஒரு செய்தியை சொல்லும்படி தந்தார் *(எசே.2:3).*
- வெளிப்படுத்தின விசேஷம் 1:17-ல் அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் மகிமையைக் கண்டார்! அதன் பிறகே, தம்முடைய செய்திகளை எழுதி ஏழு சபைகளுக்குத் தரும்படி கூறினார் *(வெளி.1:19).*

நாம் **பரிசுத்தாவி அபிஷேகத்தின் கீழாக** தொடர்ந்து வாழ்ந்தால், கர்த்தருடைய சமூகத்தில் எப்போதும் ஜீவிப்போம். ஆவியின் அபிஷேகம் நம்மை ஸ்திரப்படுத்தி, தேவனுடைய வார்த்தையை ஓர் சமநிலை, தீர்க்கதரிசனத்தின் மூலமாக ஜனங்களுக்குப் போதிப்பார். அந்த வார்த்தை சவாலிடுவதாயும், பக்திவிருத்தி அடையச் செய்வதாயும், தேவ ஜனத்தை ஒன்றாய் கட்டுவதாயும் இருக்கும்! *(1கொரி.14:3).*

ஒரு செய்தியில் வெளிப்படும் நம்முடைய வலிமையான சவாலும், கடிந்து கொள்ளுதலும், மற்றொரு செய்தியில் ஆறுதலும், உற்சாகம் தருவதுமான சமநிலையை கொண்டிருக்க வேண்டும்.

பணவிஷயத்திலும், நம் சம்பாஷணையிலும் உத்தமம் வேண்டும்

நம்முடைய பிரசங்கம், அபிஷேகிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் போதாது! அது, பரிசுத்தாவியின் வெளிப்பாட்டை ஆதாரமாய் கொண்டிருக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களைப் பகிர்ந்தளித்து பிரசங்கித்திடவே அழைக்கப்பட்டிருக் கிறோம். ஆனால் 'அந்த ஐசுவரியங்களை' நாம் தேவனிடமிருந்து எப்படி பெற்றுக் கொள்ளமுடியும்?

தேவனுடைய வார்த்தையை நாம் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும். இதைவிட மேலாகவும் தேவைப்படுகிறது! அதை இயேசு கூறும்போது "தேவனுடைய வார்த்தைகளை கற்றுக் கொள்ளும் வேதபாரகர்கள், தான் கற்றுக்கொண்ட தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் சீஷர்களாயும் மாற வேண்டும்! அதன்பின்பே அவர்கள், புதிதானதும், பழையதுமான **வெளிப்பாடுகளை தேவனுடைய வார்த்தை என்னும் பொக்கிஷ சாலையிலிருந்து** *கொண்டுவரமுடியும்" (மத்.13:52-* Message *விரிவாக்கம்)*

ஒருவன் தேவனுடைய வார்த்தையை வல்லமையாய் பிரசங்கிப் பதற்கு இரண்டு பிரதான பகுதிகளில் அவன் **உண்மையுள்ளவனாய்** *இருக்கவேண்டும்! 1) தன் பணத்தை புழங்குகிற விதம்! 2) தன் நாவை வைத்து சம்பாஷிக்கிற விதம்!*

நம் பணம்: *இயேசு கூறும்போது "அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்" (லூக்கா.16:11) என்றார். மெய்யான ஐசுவரியங்கள்: கிறிஸ்துவின் சாயல், பரிசுத்தாவியின் அபிஷேகம், தேவனுடைய வேத வாக்கியங்களில் பெறும் வெளிப்பாடு! இவைகளேயாகும்.*

நம் தனிப்பட்ட ஜீவியத்தில், பணத்தை நாம் கையாளுகிற உண்மையை வைத்தே இந்த ஐசுவரியங்களை நாம் பெற்றிட முடியும். இந்த பகுதியில் அடைந்திடும் தோல்வியினிமித்தமே, இன்றைய கிறிஸ்தவ உலகில் வெளிப்பாடு மிகுந்த பிரசங்கத்திற்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது!

அநேக பிரசங்கிகள் பண விஷயத்தில் உண்மையில்லாது இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் பண விஷயத்தில் நீதியாய் இருந்தாலும், அவர்களோ அதை உபயோகிக்கும் விதத்தில் உண்மையுள்ளவர்களாய் இல்லை! இதை நாம் ஏற்கெனவே விரிவாய் கற்றுக் கொண்டோம். ஆகவே, அதைவிட இன்னும் அதிகமாய் கூறுவதற்கு அவசியம் இல்லை.

நம் சம்பாஷணை: தேவன் நம் மூலமாய் பேசுவாரா? அல்லது இல்லையா? என்பதை, நம்முடைய சம்பாஷணையில் காணப்படும் உண்மையை வைத்தே அடுத்ததாக நிர்ணயிக்கப்படுகிறது. எரேமியாவிடம் ஆண்டவர் கூறும்போது "(உன்னுடைய சம்பாஷணையில்) நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய்போலிருப்பாய்" (எரேமியா.15:19) என கூறினார். நம் வீட்டில் பேசும், மற்ற இடங்களில் பேசும் தினசரி சம்பாஷணைகளிலிருந்து 'மதிப்பற்ற எல்லாவற்றையும்' நாம் அகற்றி, தகுதியானதும்! மதிப்புள்ளதுமானவைகளையே நாம் பேசினால், நாம் கர்த்தருடைய வார்த்தையை பேசும்போது, தேவன் நம்மோடு இருப்பார்! அதைவிட மேலாய் "**நாம் அவருடைய வாயாக**" இருப்போம். ஆ, இது எத்தனை மகா கனம் பெற்றதாயிருக்கிறது!

எல்லா நேரங்களிலும், சாத்தான் உங்கள் நாவை பயன்படுத்த அனுமதித்துவிட்டு, நீங்கள் பிரசங்கிக்கும் போது உங்கள் நாவை தேவன் பயன்படுத்திட எதிர்பார்த்திட முடியாது! தங்கள் நாவை கவனயீனமாக பயன்படுத்தியதால், அநேக ஜனங்கள் தங்கள் ஊழியத்தையே அழித்துக் கொண்டார்கள்.

இதை வேதாகமம் கூறும்போது "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்" மேலும் "ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்" (நீதி.18:21, 15:4) என கூறுகிறது! எனவே உங்கள் நாவிலிருந்து ஜீவன் வெளிப்படலாம்! அல்லது, அந்த நாவினால் ஜனங்களை 'ஆவிக்குரிய ரீதியாக' கொன்று விடலாம்!

புதிய ஏற்பாட்டில், நாவைக் குறித்து "இரண்டுவித நெருப்பு" குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று "அக்கினிமயமான நாவானது" சீஷர்கள் பரிசுத்தாவியினால் அபிஷேகிக்கப்பட்டபோது, அவர்கள் தலைமீது அமர்ந்தது(அப்.2:3). மற்றொன்று "நரக அக்கினியினால் கொளுத்தப் பட்ட நாவு" (யாக்.3:6). இந்த இரண்டு அக்கினியில், நாம் விரும்பும் நெருப்பை தெரிந்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது!

நம்முடைய நாவை அடக்குவதற்கு முன்பாக, **நம் இருதயத்தையே** முதலாவதாக அடக்கி கட்டுப்படுத்தவேண்டும். இயேசு கூறும்போது "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து, நல்லவைகளையே எடுத்துக் காட்டுகிறான்! பொல்லாத மனுஷன், இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்" என்றார் (மத்.12:34,35). ஆகவே நாம் முதலாவதாக நம் இருதயத்தையே கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர அவசியமாயிருக்கிறது. குழாயிலிருந்து

வரும் தண்ணீர் அழுக்காயிருப்பதற்கு காரணம், அதுவரும் தொட்டியின் தண்ணீர் அழுக்காயிருப்பதுதான்! ஆகவே, முதலாவது தொட்டி சுத்தமாக்கப்பட வேண்டும். அப்போது மாத்திரமே, குழாயிலிருந்து சுத்தமான தண்ணீர் வரமுடியும்!

நாம் எப்போதும் 'நம் இருதயத்தை நிரப்பும் சிந்தைகளிலிருந்தே' பேசுகிறோம். ஆகவே, நீங்கள் தேவனுடைய வார்த்தையை அதிகமாய் தியானித்தால், அந்த சிந்தைகள் தானாகவே உங்களிடமிருந்து புறப்பட்டு வரும்! ஆனால், உங்கள் இருதயம் சில ஜனங்களைக் குறித்த எரிச்சலினால் நிறைந்திருந்தால், அதுவே உங்களிடமிருந்து புறப்பட்டு வரும்.

நம்முடைய இருதயங்களில் ஏதாகிலும் சில கலக்கமான உணர்வுகள் இருந்தால், நாம் ஒருபோதும், பேசவோ அல்லது எழுதவோ கூடாது!

"கிறிஸ்துவின் சமாதானமே" உங்கள் இருதயங்களில் 'பிழைத்திருத்தும் நடுவராய்' இருப்பாராக! இதற்காகவே ஒரே சரீரமாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் (கொலோ.3:15-NASB).

நம்முடைய சமாதானத்தை இழக்கும்போது, நாம் எங்கோ செய்துவிட்ட பிழையை சுட்டிகாட்ட, இந்த நடுவர் தன் ஊதலைக் கொண்டு ஊதுவார்! நம்முடைய பிழையை திருத்திய பிறகே, நாம் மீண்டும் முன் செல்ல அனுமதிப்பார்!

*சங்கீதம்.12:6 கூறுகிறபடி, "கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட, வெள்ளிக்கொப்பான சுத்தச் சொற்களாயிருக்கிறது" என கூறுகிறது. ஆகவே ஏதாகிலும் சஞ்சலமான எண்ணங்கள் உங்கள் மனதை கடந்து செல்லும்போது, அந்த சிந்தைகளை கர்த்தரிடத்தில் கொண்டு செல்லுங்கள்..... திரும்பத் திரும்ப ஏழுமுறை கொண்டு செல்லுங்கள்! அப்போது 'அவருடைய உலை' உங்களின் எல்லா மனுஷீக எரிச்சல்களையும், கோபங்களையும் அகற்றிவிடும். அதன்பின்பு, நீங்கள் பேசுகிற வார்த்தைகள் "***தேவன் பேச விரும்புகிறவிதமாய்***" *தூய்மையுள்ளதாயிருக்கும்! கடிந்துரைக்கும் வார்த்தைகள்கூட தூய்மையாய் மாறிவிடும்! அப்போது, தேவன் உங்கள் ஊழியத்தை தாங்குவார்! இதே போன்ற செயலைத்தான், யாரோ சிலரை திருத்துவதற்கு இ-மெயில் எழுதும்போதோ அல்லது கடிதம் எழுதும்போதோ செய்திடவேண்டும்!*

தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளுதல்

எளிமையாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும்:

நாம் தேவனுடைய வார்த்தையை ஆழமாய் கற்றுக்கொள்வதற்கு அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். வேத வாக்கியத்தோடு

வேத வாக்கியம் ஒப்பிட்டுப் பார்த்து, அவருடைய வார்த்தையில் வெளிப்பாடு தரும்படி தேவனிடம் கேட்கவேண்டும்! பின்பு அவருடைய செய்தியில் 'தெளிந்த சிந்தை' தரும்படி கேட்க வேண்டும்! பின்பு அந்த செய்தியை மற்றவர்களுக்கு பிரசங்கிக்கும்போது 'விடுதலையோடு பேசுவதற்கு' நாடவேண்டும்!

நாம் தேவஜனங்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் அனைத்துமே 'எளிமையும், தெளிவுமான' குணாதிசயம் கொண்டதாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களை கவர்ச்சிக்கும்படியான 'உயர்ந்த தாற்பரியங்களை பிரசங்கிக்க விரும்பும் சோதனையை புறக்கணித்திட வேண்டும்.

நம் தலையிலிருந்து எதைப் பேசுகிறோமோ, அது மற்றவர்களின் தலைக்கு மாத்திரமே செல்லும்! ஆனால், நம்முடைய இருதயங்களிலிருந்து பேசும், எளிமையான, சாதாரண வார்த்தைகள் மற்றவர்களின் இருதயங்களில் சென்றடையும்!

தேவன் நம்மோடு பேசுகிற சில காரியங்களை நாம் எழுதி வைத்துக் கொள்வது நல்லது. வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில், தேவன் யோவானுக்கு பேசியவைகளை எழுதும்படி கட்டளையிட்டார் என நாம் வாசிக்கிறோம் (வெளி.1:11,19; 2:1,8,12,18; 3:1,7,14; 14:13; 19:9; 21:5). இவ்வாறு இல்லையென்றால், தேவன் யோவானுக்கு கூறியதை மறந்திடக்கூடும். ஒரு நாளில், தேவன் நம்மிடம் அவ்வப்போது பேசுகிற படியால் "ஒரு சிறு கைப்புத்தகமும், பேனாவும்" நம்மோடு எப்போதும் எடுத்துச்சென்று, ஆண்டவர் நம்முடைய சிந்தையில் வைப்பதை, நாம் **மறப்பதற்கு முன்பாக எழுதிக் கொள்ளவேண்டும்.** *அல்லது, உங்களிடம் மொபைல் - போன் இருந்தால் 'குறிப்பு'* (Notes) *பகுதியில் நீங்கள் எழுதி வைத்துக் கொள்ளலாம். இலக்குடையதாயும், அபிஷேகிக்கப்பட்ட தாயும் இருத்தல் வேண்டும். தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் போது 'இலக்கை தவறவிடும் மனப்பான்மை' ஏற்படாதபடி கவனமாயிருங்கள். அதுபோலவே, ஒரே விஷயத்தை திரும்பத்திரும்ப கூறாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இப்படிச் செய்வது பாவம் இல்லாவிட்டாலும், அது நிச்சயமாய் ஜனங்களின் நேரத்தை வீணாக்கி, கூட்டத்தில் 'சலிப்பை' உண்டாக்கிவிடும். நீங்கள் பகிர்ந்து கொள்ளும்படி பாரம் கொண்ட* **முக்கியமான விஷயங்களை முன் கூட்டியே எழுதி** *வைத்துக் கொண்டால், உங்கள் செய்தி சுருக்கமாகவும், எளிதில் கவனிக்கக் கூடியதும், வலிமை நிறைந்ததாயும் இருக்கும். சில சகோதரர்கள் நல்ல ஞாபகசக்தி பெற்றிருக்கிறபடியால், யாதொரு குறிப்புகளும் எழுதாமலே வல்லமையுடன் பேச அவர்களால் முடியும்!*

ஆனால் மற்றவர்கள், இவ்விஷயத்தில் தங்கள் சொந்த கனத்தை நாடுவதற்கு மரித்து, குறிப்பு எழுதிப் பேசவேண்டும்! அப்படிச் செய்தால் மாத்திரமே, நாம் ஜனங்களின் நேரத்தை வீணாக்கிட மாட்டோம்.

*பவுலின் பிரசங்கங்கள் "எளிமையாய், நயவசனிப்போ அல்லது மனுஷீக ஞானமோ இல்லாமல்.... பரிசுத்தாவியின் பெலத்தினால்" அவருடைய வார்த்தைகள் நிறைந்திருந்தது (1கொரி2:5-*Living*).நாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கு இதுபோன்ற வாஞ்சை கொண்டவர்களாய் "நம்முடைய வார்த்தைகள் தரையில் விழாதிருக்க" தேவன் கிரியை செய்திட வாஞ்சிக்கவேண்டும் (1சாமுவேல்.3:19).*

இவ்வாறாக, கர்த்தருடைய வார்த்தைகள் பரிசுத்தாவியின் உணர்த்துதலோடு ஜனங்களின் இருதயங்களில் குடிகொள்ளச் செய்ய வேண்டும்!

இயேசு கூறியபோது "சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்! நீங்களும் சாட்சி கொடுப்பீர்கள்!!" (யோவான்.15:26,27) என கூறினார். வேறு விதத்தில் கூற வேண்டுமென்றால் "நாம் பிரசங்கிப்பதை, பரிசுத்தாவியானவர் ஆதரவளித்து தாங்குவார்" என்பதுதான்! ஆகவே, நாம் தேவனுடைய வார்த்தையை வல்லமையாய் பிரசங்கிக்கும் பொருட்டு, பரிசுத்தாவியின் **தொடர்ச்சியான அபிஷேகத்திற்காக** *நாம் தேவனைத் தேட வேண்டும்!*

ஆரோக்கியமான தூய உபதேசம்

பவுல் தன் கடைசி நிருபத்தில் எச்சரித்ததைப் போன்ற காலத்திலேயே, நாம் இப்போது ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்: "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுகதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்" என்றே முன்கூட்டி எச்சரித்தார்! (2தீமோ.4:3,4).

*இதனிமித்தமே, அவர் நம்மை துரிதப்படுத்தி "***சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்** *ஜாக்கிரதையாய் திருவசனத்தை, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" என்றார் (2தீமோ.4:2).*

இங்கு கூறப்பட்ட 'ஆரோக்கியமான உபதேசம்' என்ற பதம் 'தூய்மையும், போஷாக்கும் நிறைந்த உபதேசம்' என்றே அர்த்தமாகும்.

ஓர் நல்ல மருத்துவமனை, அங்குள்ள தரையை எப்போதுமே தூய்மையும், 'கிரிமிநாசினி திரவம் கொண்டு' தரையில் 'ஒரு சிறு கிரிமியையும்' அகற்றி வைத்திருப்பதைப்போல, நம்முடைய பிரசங்கங்களும், அவ்விதமாய் ஜனங்கள் சிறு பாவங்களையும் தங்கள் ஜீவியத்திலிருந்து அகற்ற நடத்துவதற்கு, உறுதி செய்வதாயிருக்க வேண்டும்!

உற்சாகமும், நன்கு விளங்கிக் கொள்வதாயும் இருக்க வேண்டும்

நம்முடைய செய்திகள், எப்போதுமே உற்சாகமாயிருக்க வேண்டும்! நம்முடைய செய்திகள் 'போரடிப்பதைக் கண்டு' நம் சபையை விட்டு ஜனங்கள் விலகினால், அதற்காக ஜனங்களை நாம் குறைகூற முடியாது. அல்லது நம்முடைய பிரசங்கங்கள் அதிக பட்சத்தில் 'ஜனங்களை திட்டுவதாயிருந்தாலும்' ஜனங்கள் அவ்விதமாய் போய் விட முடியும்!

பிரசங்கி.**12:9-11** வசனங்கள் (Living) கூறும்போது "பிரசங்கி ஞானமுள்ளவனாயிருந்தான்! அவன் கற்றுக்கொண்ட யாவையும் தொடர்ந்து பிரசங்கித்து கொண்டே இருந்தான்! நல்ல நீதிமொழிகளை சேர்த்து வைத்து அவைகளை வகை வகையாய் பிரித்து போதித்தான். அந்த பிரசங்கி ஒரு ஞானவானாய் மாத்திரமல்லாமல், ஒரு நல்ல போதகனாயுமிருந்தான்! தான் அறிந்தவைகளை அவன் போதித்தது மாத்திரமல்லாமல், அவைகளை உற்சாகமான விதத்தில் போதித்தான்! ஞானவானின் வார்த்தைகள் தாற்றுக் கோல்களைப் போல், ஜனங்களை கிரியை நடப்பிக்க தூண்டியது! முக்கியமான சத்தியங்களை ஆணி அறைந்ததுபோல் அறைந்து, நிலைநிறுத்தினான்!" என வாசிக்கிறோம்.

மேற்கண்ட வசனத்திலிருந்து, அநேக பாடங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இந்த வசனங்களை மெதுவாகப் படித்து, ஒவ்வொரு வாக்கியங்களையும் தியானித்துப் பாருங்கள்.

> நம்முடைய செய்திகள், மிகுந்த உற்சாகத்துடன் கொடுக்கப்பட வேண்டும். கேட்கின்ற ஜனங்களை 'கிரியை நடப்பிக்கத் தூண்டுவதாய்' இருக்க வேண்டும். அவ்வாறு செய்திட நம்முடைய சிந்தைகளை ஆயத்தம் செய்து, அதை வரிசைப்படுத்த வேண்டும்!

ஒரு சிறந்த மனைவி, தன்னுடைய சுவையான உணவை சமைத்து முடித்தவுடன், அவைகளைச் சாப்பாட்டு மேஜையின்மேல் கவர்ச்சியூட்டும் விதத்தில் எடுத்து வைத்திருப்பதைப்போல்..... நாமும், தேவனிடமிருந்து ஓர் தெளிவான செய்தியை நம் மனதில் பெற்றவுடன்,

அவைகளை ஆர்வமிக்க வகையில்! எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வகையில்! ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்திட, நேரமும், முயற்சியும் தேவைப்படும்! இருப்பினும், **விருப்பத்துடன் நேரத்தை செலவழித்து,** *நம்முடைய செய்தியை பரவசம் நிறைந்ததாய் மாற்றியிருக்க வேண்டும். இவ்வாறாகவே, இயேசு பிரசங்கித்தார்!*

'எஜமானாகிய பிரசங்கியை' பின்பற்ற வேண்டும்

இயேசு எவ்வாறு பிரசங்கித்தார் எனக் கூறும் ஒரு செய்தியை, கீழ்கண்ட வலைதளத்தில் வாசியுங்கள்:

http://www.cfcindia.com/article/jesus-our-example-as-a-preacher

இயேசு பிரசங்கித்த விதத்தை முன் வைத்தே, அதை அடைவதற்கு பல வருடங்கள் ஆனாலும், தீவிரமாய் முன்னோக்கிச் செல்ல வேண்டும்!

இன்றுள்ள அநேக இந்திய பிரசங்கிகள், மேற்கத்திய பிரசங்கிகளின் நடை உடை தோற்றங்களையும், வேடிக்கையான செயல்களையும் பார்த்து, அதைப் பின்பற்றுகிறதைப்போல் நாம் செய்து விடக்கூடாது! "இயேசுவை மாத்திரமே" உங்கள் **பிரசங்க மாதிரியாய்** *வைத்திருங்கள்!*

கிறிஸ்துவின் இரத்தம் செய்திடும் கிரியைகள்

அநேக விசுவாசிகள், தங்கள் கடந்த கால பாவ வாழ்க்கை யினிமித்தம், ஓர் தொடர்ச்சியான கண்டனத்திற்கும், மனச்சோர்வுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். அந்த கட்டுகளிலிருந்து அவர்கள் இன்னமும் விடுதலையாகாமலே அல்லது சாத்தானுடைய குற்றசாட்டுதலை மேற்கொள்ள முடியாமலே தத்தளிக்கிறார்கள்! கர்த்தருடைய ஊழியர்களாயிருக்கும் நாம், அதுபோன்றவர்களை விடுவிப்பதற்கு உதவி செய்திட வேண்டும்.

"கிறிஸ்துவின் இரத்தமும், அது நடப்பிக்கும் கிரியைகளும்" என்ற தலைப்பில், இதுபோன்ற விசுவாசிகளுக்கு ஓர் செய்தியை கீழ்கண்ட வலைதளத்தில் காணுங்கள்:

http://www.cfcindia.com/sermon/the-blood-of-christ-what-it-does

இந்த செய்தியை நீங்கள் கவனித்துக் கேட்டு, அதில் காணும் சத்தியங்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொண்டு, ஆக்கினைக் குள்ளாக ஜீவிக்கும் இதுபோன்ற ஜனங்களை விடுவிக்க முயற்சியுங்கள்.

தேவனுடைய இலவசமான பாவ மன்னிப்பை சாதகமாக்கிக் கொண்டு, தொடர்ந்து பாவத்தில் ஜீவித்து, கிறிஸ்துவின் இரத்தத்தையோ ஒரு மலிவான குழாய் - தண்ணீரைப் போன்று மிதித்து

நடக்கும் விசுவாசிகள் எப்போதுமே இருக்கத்தான் செய்கிறார்கள்! (எபிரெயர்.10:26-29). இப்படிப்பட்டவர்கள் இருப்பதற்காக, நாமோ "கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினாலுண்டாகும் நீதிமானாக்கப்படும்" இந்த செய்தியை பிரசங்கிக்காமல் இருந்து விடக்கூடாது (ரோமர்.5:9). அதன் மூலமாய், தொடர்ந்து தங்களைத் தேவையில்லாமல் 'ஆக்கினைக்குள்ளாக வைத்து வாழும்' உண்மையான விசுவாசிகளைத் தூக்கிவிட வேண்டும்!

மோட்ச பயணம்

350 ஆண்டுகளுக்கு முன்பாக 'ஜாண்பனியன்' என்ற பக்தன் எழுதிய புத்தகமே 'மோட்ச பயணம்' என்ற புத்தகமாகும். இந்த புத்தகம், ஏராளமான தேவனுடைய பிள்ளைகளுக்கு பல நூற்றாண்டு காலமாய், மிகுந்த ஆசீர்வாதமாய் இருந்து வருகிறது. **"இயேசுவின் சிறந்த சீஷனாய் இருப்பது எப்படி?"** *என அறிந்து கொள்வதற்கு இந்தப் புத்தகம் உங்களுக்கு நிச்சயமாய் கை கொடுக்கும்!*

இந்த புத்தகத்தின் அடிப்படையில், நடைமுறை போதகங்களையும், உதாரணங்களையும் வைத்து நான் பேசிய ஒரு செய்தியை கீழ்காணும் வலைதளத்தில் காணுங்கள்:

http//www.cfcindia.com/sermon/pilgrims-progress-what-we-learn-from-it

இதை காண்பது, உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்!

'நல்ல மனப்பான்மையோடு' பிரசங்கித்திட வேண்டும்

ரோமர்.12:3,6: "எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது: உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, **தெளிந்த எண்ணமுள்ளவனாய்** *எண்ண வேண்டும்.... தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன், தன் விசுவாச அளவின்படி சொல்லக்கடவன்" என பவுல் கூறினார்.*

பிரசங்கிக்கிற அநேகர் செய்கின்ற ஒரு பொதுவான தவறு என்னவென்றால் "தங்களுக்கு அருளப்பட்ட கிருபைக்கும் விசுவாசத்திற்கும் ஏற்ற அளவின்படி இல்லாமல்" அதிக நேரம் பேசுகிறார்கள். அது ஏனென்றால் "தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணுகின்ற" அவர்களது எண்ணமேயாகும்.

நாம் பிரசங்கிக்கும்போது "நம்மை எண்ணுவதற்கும், கீழாக எண்ணும்படி" எந்த **எச்சரிக்கையும்** *வேத வாக்கியத்தில் இல்லை. ஏனென்றால், அவ்வாறு எண்ணுவதில் ஒரு* **அபாயமுமில்லை.** *நீங்கள்*

பிரசங்கிக்கும்போது "உங்களைக் குறித்து குறைவாய் எண்ணுவதோ அல்லது உங்களைக் குறித்து மேலாய் எண்ணுவதோ? ஆகிய இவற்றில் எதற்கு அதிக வாய்ப்பு உள்ளது?" என உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள். அதற்குரிய விடையை நாம் அறிந்திருக்கிறோம்! நாம் எப்போதுமே "நம்மைக் குறித்து அதிகமாய் எண்ணும் அபாயமே" நமக்கு எப்போதும் இருக்கிறது!

நம்மைக் குறித்து தாழ்ந்த சிந்தை கொண்டிருப்பது "தாழ்வு மனப்பான்மையின் பாதுகாப்பற்ற நிலை" என பொருளாகாது! நிச்சயமாய் அப்படி இல்லை. நாம் எப்போதுமே நம் பிதாவாகிய தேவனுடைய அன்பில் பூரண பாதுகாப்புடன் இருக்க வேண்டும்! 1)நம்முடைய பரம பிதாவைக் குறித்த மனப்பான்மையில் நாம் எப்போதுமே **முழு நம்பிக்கை** கொண்டவர்களாயிருக்க வேண்டும். 2)சாத்தானைக் குறித்த மனப்பான்மையில், அவனை இயேசுவின் நாமத்தில் **முழுவதுமாய் எதிர்த்து நிற்கும்** மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும். 3)எல்லா மனுஷர்களைக் குறித்த மனப்பான்மையில், நாம் எப்போதுமே **முழுமையான தாழ்மை** கொண்டவர்களாயிருக்க வேண்டும்!

"நாம் தேவனுக்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை வைத்து அல்ல! தேவன் நமக்கு என்ன செய்திருக்கிறார்" என்பதை வைத்தே நாம் எப்போதும் களிகூர்ந்திட வேண்டும் (லூக்கா.10:20 - Message விரிவாக்கம்). நாம் யார் என்பதைக் குறித்த தாழ்ந்த சிந்தையில் இருந்து கொண்டு, நாம் தேவனுக்கு என்ன செய்ய முடியும்? என்ற எண்ணம் கொண்டிருப்பதே அவசியமாயிருக்கிறது. தேவன் யார் என்றும்? அவர் நமக்கு என்ன செய்தார் என்றும்? அவர் இன்னமும் நமக்கு என்ன செய்வார் என்றும்? என்ற இந்த சிந்தையே நம்மில் எப்போதும் மேலோங்கி இருக்க வேண்டும்! அப்போது நம்மைக் குறித்த தெளிந்த கணிப்பு கொண்டவர்களாய், தேவன் நமக்குச் செய்ததையும் அதுபோலவே பிறருக்கும் அவர் செய்திடப் போவதையும் குறித்த விசுவாசத்தை நாம் பெற்றிருப்போம்.

இதுவே, பிரங்கிக்கிற நாம் ஒவ்வொருவரும் வைத்திருக்க வேண்டிய நல்ல மனப்பான்மையாகும்!

பவுல் தொடர்ந்து ரோமர்.12:4-8 வசனங்களில் கூறும்போது: "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படி, வெவ்வேறான வரங்கள் உண்டாயிருக்கிறபடியால், அவனவன் அந்தந்த வரங்களை அதன்படி அப்பியாசிக்க வேண்டும்: போதிக்கிறவன் போதிக்கிறதிலும்! புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும்! ....." என, போதிப்பதும்,

புத்திசொல்லுவதும் ஆகிய இரண்டு வித்தியாசமான வரங்களைக் காண்கிறோம்.

வேத வாக்கியங்களை அபிஷேகத்தோடு பிரசங்கிக்கும் திறமையை, தேவன் சிலருக்கு மாத்திரமே வழங்கியிருக்கிறார். ஆனால், இன்னும் வெகு குறைவானவர்களே வரம் பெற்ற போதகர்களா யிருக்கிறார்கள்! (யாக்கோபு.3:1).

ஆனால், 'புத்தி சொல்லும்' இந்த வரத்தை எல்லா சகோதரர்களும் நாட வேண்டும். இங்கும், மீண்டுமாய் "நமக்கு அருளப்பட்ட கிருபையையும் விசுவாசத்தையும் அவனவன் பெற்றிருக்கிற அளவின் படியே" பயன்படுத்த வேண்டும்.

*சபை கூட்டங்களில் நீங்கள் என்ன பிரசங்கிப்பதற்கு கர்த்தர் விரும்புகிறார்? என கேட்பதை "***கர்த்தருக்கு காத்திருந்து, கேட்பதே***" முக்கியமாயிருக்கிறது! அப்படி இல்லையென்றால், உங்களைக் கவனித்து கேட்பவர்களின் நேரத்தை நீங்கள் வீணாக்கிப் போடுவீர்கள்! ஜனங்களின் நேரத்தை வீணாக்குவதை, அவர்களின் பணத்தை திருடுவதற்கு ஒப்பாக, உங்களை சோதிப்பது நலம்! இந்த வெளிச்சத்தில் நீங்கள் தொடர்ந்து வாழ்ந்தால், உங்கள் பிரசங்கத்திற்கு நீங்கள் எடுத்துக்கொள்ளும் நேரத்தைக் குறித்து அதிக கவனமாயிருப்பீர்கள்! நீங்கள் பிரத்தியேகமான வரத்தைப் பெறாதிருந்தால், உங்கள் பிரசங்கத்தை 20 நிமிடங்களில் முடித்துக் கொள்வது நல்லது. இது பொதுவான வழிகாட்டுதலேயன்றி கண்டிப்பான சட்டம் இல்லை! ஆனால், இந்த எல்லைக்கு மேலாக அநேக பிரசங்கிகள் சொல்லியதையே திரும்பச் சொல்லி, பாரப்படுத்தி, போரடிக்கிறார்கள்!*

> **உங்கள் செய்தியின் முடிவில் உங்களை கவனித்து கேட்டவர்கள் "இன்று நாம் கர்த்தரை சந்தித்தோம்!" என்ற உணர்வை பெற்றவர்களாய் இருக்கவேண்டும் (1கொரி.14:24,25). இவ்வாறாகவே நம்முடைய ஒவ்வொரு சபை கூட்டமும் முடிவு பெற வேண்டும்.**

அவ்வாறு நடைபெறுவதற்கு, நாம் அதிகமாய் ஜெபிக்கவேண்டும்! தேவனுடைய வார்த்தையை கருத்தூன்றி வாசிக்கவேண்டும்! பரிசுத்தாவியின் அபிஷேகத்தை வாஞ்சையுடன் தேடவேண்டும்! தீர்க்கதரிசன வரத்தை விரும்பி தேட வேண்டும்!

குற்றம் சாட்டாமல், ஊக்குவிக்கும் ஊழியம்!

நீங்கள் செய்திடும் ஊழியம், எப்போதும் ஊக்குவிப்பதாகவே இருக்கவேண்டுமே அல்லாமல், குற்றம் சாட்டுவதாயிருக்கக் கூடாது.

எபிரெயர்.3:13 "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனை யினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாள்தோறும் ஒருவருக்கொருவர் **ஊக்கப்படுத்துங்கள்**" *என தெளிவாய் கூறுகிறது. இதுவே, ஒவ்வொரு கூட்டத்திலும் வார்த்தையை நாம் பகிர்ந்தளிக்கும்போது எல்லா சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் தரப்பட்ட அழைப்பாயிருக்கிறது!*

நீங்கள் பிரசங்கிக்கும்போது, ஒருபோதும் குற்றம் சாட்டுகிறவராய் மாறிடக்கூடாது! அப்படிச் செய்தால், நீங்கள் பிரதான குற்றம் சாட்டும் தலைவன் சாத்தானோடு கைகோர்த்தவர்களாய் மாறிவிடுவீர்கள். அதற்குப் பதிலாக நீங்கள் பேசும் போதெல்லாம், உங்கள் சபையிலுள்ள ஒவ்வொரு நபரையும் **ஊக்குவிக்க வேண்டும்** *என தீர்மானித்தே பேசுங்கள்!*

பாவம் வஞ்சனையுள்ளது! ஆகவே, உங்கள் பிரசங்கத்தை கேட்கிறவர்கள், தங்கள் ஜீவியத்திலுள்ள பாவத்தின் வஞ்சனையிலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு ஊக்குவிப்பதாய் இருக்கவேண்டும்.

அதற்குப் பதிலாக, நீங்கள் அவர்களைத் 'திட்டுவதற்கு முற்பட்டால்' உங்கள் பிரசங்கங்கள் அவர்களை "குற்றப்படுத்தும் வளையத்தில் அமர வைத்து" உங்கள் மந்தையினரை சுய ஆக்கினைக்கும், தங்கள் மூத்த சகோதரரைக் குறித்த ஓர் ஆரோக்கியமற்ற பயத்திற்கும் நடத்தி விடும்!

"குற்றப்படுத்தும் பிரசங்கம்" என நான் பேசிய ஒரு செய்தியை கீழே உள்ள வலைதளத்தில் வாசித்து எச்சரிக்கைப் பெறுங்கள்:

http://www.cfcindia.com/article/guilttrip-preaching

உங்கள் பிரசங்கத்தின் மூலமாய், உங்கள் சக விசுவாசிகளின் பாதங்களைக் கழுவும் "ஒரு வேலைக்காரனாகவே" நீங்கள் அழைக்கப்பட்டீர்கள்! என்பதை மறந்து விடாதிருங்கள். ஆகவே, நீங்கள் பேசும்போது **உணர்ச்சிவயப்பட்டு ஒருபோதும் கோபம் அடைந்திடாதிருக்க** *பரிசுத்தாவியானவர் உங்களை ஆண்டுகொள்ள, அவருக்கு எப்போதும் இடம் கொடுங்கள்! உங்களையே நீங்கள் ஒரு தீர்க்கதரிசியாக நியமனம் செய்து கொள்ளாதிருங்கள்!*

3000 வருடங்களுக்கு முன்பாக இஸ்ரவேல் தேசத்தில், மற்ற யாவரையும் காட்டிலும் **'பெருமையான தலை கொண்ட'** *சவுலை, அவனுடைய அந்த பெருமையினிமித்தம் தேவன் அகற்றினார்! (1சாமுவேல்.10:23). அந்த இடத்தில், மற்ற எல்லாரைக் காட்டிலும்* **நல்ல இருதயம் கொண்ட** *தாவீதை அமரச் செய்தார்! (அப்.13:22,*

1சாமு.13:14). மாம்சீகமான கிறிஸ்தவர்கள் **தலையின் திறமையான** *புத்திசாலித்தனம், அறிவு, வரம், ஆகிய இவைகளைப் போற்றி மகிழ்கிறார்கள். ஆனால் தேவனோ,* **இருதயத்தின் - திறமை நிறைந்த** *தாழ்மைக்கும், நற்குணத்திற்கும், அன்பிற்குமே அதிக பாராட்டுதலைத் தருகிறார்!*

நம் தலை எவ்வளவு பெலவீனமாயிருந்தாலும், நம்முடைய இருதயமோ, நம்மை தேவன் அங்கீகரிக்கும் தகுதியாய் இருக்க வேண்டும்! நமக்கு புத்திசாலித்தனம் எதுவும் இல்லாமல், எவ்வித பிரசங்கிக்கும் திறனோ அல்லது அதிகமான வேதவாக்கிய அறிவோ இல்லாதவர்களாய் இருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல! சபையானது, தலையின் - அறிவைக் கொண்டவர்களை வைத்து கட்டப்படுவதில்லை. **தேவனுடைய இருதயத்தைப் பெற்று,** *தேவன் தம்முடைய ஜனத்தைக் குறித்து எண்ணுகிறவிதமாய், உணர்வு கொண்டவர்களை வைத்தே சபையைக் கட்டுகிறார்!*

அடிப்பதற்கு அல்ல, போஷிப்பதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம்

லூக்கா.12:42-ம் வசனத்தில் ஆண்டவர் கூறும்போது "பணிவிடைகாரருக்குத் தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுள்ள விசாரனைக்காரன் யாவன்?" என்றார்.

நாம் தேவனுடைய ஜனத்திற்கென்று செய்திகளை ஆயத்தம் செய்யும்போது, "உண்மையும் விவேகமுள்ள ஊழியர்களாய் இருந்து" அப்படி செய்திட வேண்டும். ஒரு மதிய உணவிற்கு, மிக முக்கியமான விருந்தாளிகள் வரும்போது, அவர்களுக்கு நல்ல உணவு ஆயத்தம் செய்வதற்கு அதிக பிரயாசமும் நேரமும் எடுத்துக் கொள்ளுகிறோம். அப்படி இல்லாமல், ஒரு மலிவான ருசியற்ற உணவை பரிமாறுவது, அவர்களுக்குத் தரும் அவமதிப்பாகும்! ஆகவே நாம் பிரசங்கிக்கும் ஒவ்வொரு நேரமும், நம்மால் முடிந்த மிகச்சிறந்த உணவைத் தருவதற்கு எல்லா முயற்சியும் எடுத்து, நம்முடைய சகோதரர்களையும் சகோதரிகளையும் கனம் செய்திடக்கடவோம்.

> அப்படியெல்லாம் ஊழியம் செய்வதற்கு, அதிக நேரம் செலவழித்து தியாகம் செய்ய வேண்டியது இருக்கதான் செய்யும்! ஆனால் "உண்மையும் விவேகமுமாய் இவ்வாறு ஊழியம் செய்வதற்கு யார் ஆயத்தமாயிருக்கிறார்கள்?" (லூக்கா.12:42).

இதைத் தொடர்ந்து லூக்கா.12:45-ம் வசனத்தில் "தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு சகோதர சகோதரிகளை அடிக்கும் அபாயம்

இருப்பதையும்" ஆண்டவர் எச்சரித்துள்ளார். ஆகவே, ஜனங்களின் தோல்விக்காக, அவர்களைத் தொடர்ந்து குறை சொல்லாதிருக்க கவனமாயிருக்கக்கடவோம். **எல்லா திருத்துதலும், அன்பினால் செய்யப்பட வேண்டும்.** *அப்படி இல்லையென்றால், அவர்களை திருத்துவதும் கூடாது! பிள்ளைகளுக்கு பிரம்பு, அவ்வப்போது மாத்திரமே தேவைப்படும். அவர்களுக்கோ,* **போஷிக்கும் சத்தான உணவே எப்போதும் தேவை!** *தன் பிள்ளைகளுக்கு உணவு தருவதை விட அதிகமாய் அவர்களை அடிக்கும் தகப்பன் அல்லது தாயைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுவீர்கள்? அது மதியீனம் அல்லவா! நாம் அவ்வாறாக இருந்து விடக்கூடாது. ஆனால், அநேக பிரசங்கிகள், அவ்வாறாகவே இருக்கிறார்கள்.*

தன் பிரசங்கத்தில், ஒரு மூப்பர் மாம்சீக வழியில் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி, ஜனங்கள் மீது கடினமாயிருக்க முடியும். அபிஷேகிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசியே, தன்னுடைய செய்திகளில் தேவனுடைய கண்டிப்பையும், கடிந்து கொள்ளுதலையும், திருத்துதலையும் பேசுவதற்கு **கிருபை** *பெற்றிருக்க முடியும். நீங்களோ, அப்படி ஒரு தீர்க்கதரிசியாயிராமல், தீர்க்கதரிசியைப்போல் இருப்பதற்கு முயற்சித்தால், நீங்கள் வெளிப்படுத்தும் கண்டிப்பு, மாம்சத்திற்கு ஏற்ற கண்டிப்பாயும் கடினமாயும் மாறிவிடும்!*

மேலும், உங்களுடைய கண்ணோட்டத்திற்கு மாறாக நிற்பவர்களிடம் நீங்கள் கடினமாய் இருப்பதற்கு சோதிக்கப்பட முடியும். அப்படி இருந்தால், தேவன் உங்களிடமும் கடினமாயிருப்பார்: "தயவுள்ளவனுக்கு தேவன் தயவை காண்பிக்கிறார். ஆனால், மாறுபாடுள்ளவனுக்கு மாறுபாடுள்ளவராகவே இருக்கிறார்! தாழ்மையுள்ளவனை அவர் இரட்சித்து பெருமையுள்ளவனைத் தாழ்த்துகிறார்" (சங்.18:25,26).

வெகு குறைவான மூப்பர்களே "தேவனுடைய கண்டிப்பை" திவ்வியமான வழியில் காட்ட முடியும். ஆகவே, உற்சாகப்படுத்தும் ஊழியத்தை தேடுவதே சிறந்ததல்லாமல், கடிந்து கொள்ளுதலையும், திருத்துதலையும் தெரிந்து கொள்ளக்கூடாது! ஆகவே கடிந்து கொண்டு திருத்தும் ஊழியத்தை "அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசிகளிடம்" கொடுத்து, அவர்கள் தேவனுடைய கண்டிதத்தை, தேவபக்தியான வழியில் அதை வெளிப்படுத்துவார்கள்!

ஒரு சபையில் பிறர் மீது கடினமாய் இல்லாமலே, ஓர் உயர்ந்த தரத்தை காத்துக் கொள்வது சாத்தியமே! கடினமாய், பிறரை திட்டி பேசும் அந்த செய்தியை, அன்போடும் சாந்தமான வழியிலும் கூறிட முடியும்!

சபையிலுள்ள ஒருவராகிலும், நம்மைக் குறித்த பயத்தில் ஜீவித்திடக் கூடாது! அல்லது, நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமே என்ற உணர்வில் நமக்கு கீழ்ப்படிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடக் கூடாது! யோபு.33:7 கூறுகிறபடி "இதோ நீர் எனக்கு பயப்பட்டு கலங்கத் தேவையில்லை! என் கை உன் மேல் பாரமாயிருக்க மாட்டாது!" என்பதாய் இருக்க வேண்டும்.

'நம்மோடு ஒத்துப்போகாதவர்களிடம்' ஓர் 'குளிர்ந்த தன்மை' நாம் கொண்டிருக்கக் கூடாது! அதுபோன்ற தன்மையை தனிமனித - ஆராதனை தலைவர்களும், அரசியல்வாதிகளும் கொண்டிருக் கிறார்கள். அதற்கு மாறாக, நாமோ தாழ்மைக்கும் வேலைக்கார பணிக்கும் ஓர் நல்ல மாதிரியாகவே எல்லோருக்கும் இருந்திட வேண்டும். ஜனங்கள் நம்மை எதிர்ப்பதற்கு தேவன் அனுமதிக்கும் போது, அது நம்மை தாழ்த்துவதற்கும், அவரது கிருபையை நமக்குத் தருவதற்குமேயாகும்!

கடைசியாக, ஏசாயா.49:10 கூறுகிறபடி "தேவனுடைய ஜனத்தின் மீது இரங்குகிறவர்கள் மாத்திரமே, அவர்களை நடத்தவும் முடியும்" என்பதை மனதில் கொள்வோமாக.

உங்கள் சபையிலுள்ள விசுவாசிகளை "மதியீனமான, அரை - குறை இதயம் கொண்ட ஜனம்" என நீங்கள் மிக எளிதாய் கூறுவீர்கள் என்றால், நீங்கள் அவர்களுக்கு மூப்பராய் இருப்பதற்கு தகுதியற்றவர்கள்! ஒரு தேவபக்தியான மூப்பர், தன்னுடைய சொந்த பெலவீனங்களை உணர்ந்திருக்கிறபடியால், அது அவனை மற்றவர்களிடம் மென்மையுள்ளவர்களாய் மாற்றும்.

நாம் எவ்வளவு அதிகம் தேவனிடம் நெருங்கி சேருகிறோமோ, அவ்வளவு அதிகம் நம்முடைய சொந்த பெலவீனத்தை அறிந்தவர்களாயிருப்போம்! நாம் எவ்வளவு அதிகம் பரிசுத்தராய் மாறுகிறோமோ, அவ்வளவு அதிகம் நாம் ஜனங்களிடம் மென்மையுள்ளவர்களாய் மாறுவோம்!

அநேக மூப்பர்கள், இயேசுவைக் குறித்த ஓர் தவறான தோற்றத்தை வைத்திருக்கிறார்கள்! "தேவனுடைய வீட்டில், அவர் எப்போதும் ஜனங்களை அடிக்கும்படி ஒரு சாட்டை உடையவராயிருக்கிறார்!" என்றே காண்கிறார்கள். ஆனால், உண்மையான இயேசுவோ தன்னுடைய 3½ ஆண்டு கால பொது ஜன ஊழியத்தில், இரண்டு நாட்கள் மாத்திரமே சாட்டையை பயன்படுத்தினார்! அவ்வாறிருக்க, நீங்களோ, ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் ஒரு சாட்டையை பயன்படுத்தினால், "வேறொரு இயேசுவை" பின்பற்றுகிறவர்களாயிருப்

பீர்கள்! ஒரு தலைவன், “தானும் பெலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத் தக்கவனாயிருக்கிறான்!” என்றே எபிரெயர்.5:2 கூறுகிறது.

சுவிசேஷங்களில், அநேக சம்பவத்தில் இயேசு ஜனங்களை மனதுருக்கமாய் கண்டார்! என வாசிக்கிறோம். “இயேசு திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் குழப்பமும், திசை அறியாமலும் உள்ள **ஒரு மேய்ப்பனில்லாத ஆடுகளாய்** *இருப்பதைக் கண்டு அவருடைய இருதயம் உடைந்தது” என மத்தேயு.9:36*-Message *விரிவாக்கம் கூறுகிறது. இவ்வாறு, அவரே நம்முடைய மாதிரியாய் இருக்கிறார்!*

அவர் நம்மை அழைத்து “நான் சாந்தமும் மனத்தாழ்மையும் கொண்டிருக்கிறேன். என்னிடமிருந்து கற்று கொள்ளுங்கள்” என்று கூறுகிறார் (மத்.11:29). **மென்மையான சாந்தமும், தாழ்மையும்** *கிறிஸ்தவ தலைவர்களுக்குத் தேவையான இரண்டு முக்கிய தகுதியாகும்.... ஆனால் வெகு குறைவானவர்களே இந்த தகுதியைப் பெற்றிருக்கிறார்கள்.*

மோசேயைப் பற்றி ஓர் அருமையான நிகழ்ச்சி உண்டு. அது வேதாகமத்தில் அல்ல, யூத பாரம்பரிய நிகழ்ச்சியில் சொல்லப்பட்ட தாகும். அவர் ஜெத்ரோவின் மந்தைகளை மேய்த்து கொண்டிருந்த போது, ஒரு சின்ன ஆட்டுக்குட்டி, நீரோடை அருகில் தண்ணீர் குடிப்பதற்குச் சென்று விட்டதை மோசே தூரத்திலிருந்து கண்டான். உடனே மோசே வேகமாய் ஓடிச் சென்று, அந்த ஆட்டுக்குட்டியை தன் கரத்தில் ஏந்தி “நீ தாகமாயிருப்பதை நான் அறிந்திருந்தால், நானே உன்னைத் தூக்கி வந்து நீரோடைக்கு கொண்டு வந்திருப்பேன்” என கூறினார். அப்போது உடனே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி “நீயே இஸ்ரவேலுக்கு ஒரு மேய்ப்பனாயிருப்பதற்கு மெய்யான தகுதி பெற்றவன்!” என சத்தம் உண்டானது!

இது ஒரு பாரம்பரிய கதையாய் இருக்கலாம். ஆனால் அது உண்மையாயிருக்கக்கூடும் என்றே நான் நம்புகிறேன்! அது ஏனென்றால் **“தேவனுடைய இருதயம்”** *அவ்வாறாகவே இருக்கிறது! எப்போதெல்லாம் தேவன் “இதுபோன்ற மனதுருக்கத்தை.... பெலஹீனமான, உதவியற்ற, தவறாய் நடத்தப்பட்ட ஜனங்களிடம் காட்டுவதை ஒரு மனிதனிடம் காண்கிறாரோ, அவனைப் பார்த்து “மெய்யாகவே ஒரு மேய்ப்பனா யிருப்பதற்கு நீ தகுதிப்பெற்றவன்” என கூறிவிடுவார்!*

ஜெபமும், தேவனுடைய வார்த்தையை கொண்ட ஊழியமும்

“நாங்களோ (முதலாவது) ஜெபம் பண்ணுவதிலும், (இரண்டாவது) தேவ வசனத்தை போதிக்கிற ஊழியத்திலும்

இடைவிடாமல் தரித்திருப்போம்"(அப்.6:4) என வாசிக்கிறோம். பிரசங்கிப்பதற்கு முன்பாக மாத்திரம் இயேசு ஜெபிக்காமல், பிரசங்கித்து முடித்தபின்பும் தன் பிதாவிற்கு முழு மகிமையையும் செலுத்தும்படி ஜெபித்தார் (லூக்கா.5:15,16).

நாமும் அவ்வாறே, பிரசங்கித்து முடித்ததும் ஜெபித்திடவேண்டும். 1)இயேசு செய்ததை போல சகல மகிமையும் தேவனுக்கு செலுத்தப்படவும் 2)நம்மை பொறுத்த வரையில், நம்மை நாமே நியாயந்தீர்த்துக் கொள்வதற்கும் ஜெபித்திட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு நான் தொடர்ச்சியாய் பிரயாசப்பட்டு, அதன் மூலமாய் என்னுடைய பிரசங்க ஊழியத்தில் நான் பூரணத்தை நோக்கி கடந்து செல்ல வாஞ்சித்தேன்!

மூப்பர்களாய் இருக்கும் நம்முடைய பிரதான பொறுப்பு "நம் சபைகளில், தேவனுடைய ஜனத்தை கட்டுவதேயாகும்". இதனிமித்தமே, இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய வல்லமையை நாம் பெற்று, தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும்! "இதற்காகவே" நாம் வாஞ்சையுடன் ஜெபிப்பது மிக அவசியமாயிருக்கிறது!

பவுல் சபைகளின் மீது கொண்டிருந்த பாரம்: "நாங்கள் ஜனங்களை எச்சரித்து உபதேசம் பண்ணுகிறோம்.... ஏனெனில் எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாய் நிறுத்தும்படிக்கே விரும்புகிறோம். கிறிஸ்துவின் வல்லமை எனக்குள் வல்லமையாய் கிரியை செய்தால் மாத்திரமே, நான் அவ்வாறு செய்திட முடியும். நான் உங்களுக்காக, **என் ஜெபத்தில் எவ்வளவு மிகுதியாய் போராடினேன்** *என்பதை நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்" (கொலோ.1:28,29; 2:1-*Living*) என கூறினார்.*

கர்த்தரிடத்திலும் அவருடைய ஜனங்களிடத்திலும் அப்படி ஒரு சிநேகத்தை பவுல் வைத்திருந்தபடியால், ஜனங்களுக்கு ஏற்ற வார்த்தைகளை எப்போதும் வைத்திருந்தார்! **ஆமோஸ்** *தீர்க்கதரிசிக்கு தேவன் முன்குறித்து கூறியதைப் போன்ற "ஆவிக்குரிய உணவிற்கு பஞ்சமான நாட்களில்" இன்று நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்: "இதோ நான் தேசத்தின் மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்! ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல,* **கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத** *பஞ்சத்தை அனுப்புவேன்" என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (ஆமோஸ்.8:11). மேலும் கூறுகையில் "அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட, ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசை தொடங்கி கீழ்த்திசை மட்டும் அலைந்து திரிந்தும், அதை கண்டடையாமற் போவார்கள்" (வச.12) என தெரிவித்தார்.*

இதுபோன்ற பஞ்சம் நம் சபைகளில் காணப்படக்கூடாது! நம்முடைய சபைகளுக்கு வருகிற ஒவ்வொருவரும் "கர்த்தருடைய வார்த்தை வல்லமையாய் பிரசங்கிக்கப்படுவதை" ஒவ்வொரு வாரமும் கேட்டிட வேண்டும்! ஆகவே பரிசுத்தாவியின் வல்லமையையும், தீர்க்கதரிசன வரத்தையும், நீங்கள் பிரசங்கித்திடும் ஒவ்வொரு நேரத்திலும் நாட வேண்டும் (1கொரி.14:1).

'தேவனுடைய வார்த்தையிலும்' ஒரு நல்ல அறிவை பெற்றிருக்க வேண்டும்! நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையை கருத்தாய் கற்றுக்கொண்டால் மாத்திரமே இந்த நிலைக்கு வர முடியும்.

பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது "நீ வெட்கப்படாத ஊழியனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமமாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என புத்தி சொன்னார் (2தீமோ.2:15).

பவுல் மேலும் தீமோத்தேயுவுக்கு கூறும்போது "சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு, அவைகளால் அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்" (2தீமோ.2:16) என்று கூறினார். உங்கள் ஜீவியத்தில், "ஜெபத்தை ஒரு முக்கிய பங்காய்" நீங்கள் வைத்திட விரும்பினால், "லௌஹீகமான சீர்கேட்டு வீண் பேச்சுகளுக்கு" நீங்கள் விலகியிருக்க வேண்டும். அநேக விசுவாசிகள் தங்கள் தனிப்பட்ட சம்பாஷணைகளில் தங்கள் நேரத்தை இவ்வாறாகவே வீணாக்குகிறார்கள்! **Face Book** *போன்ற சமூக வலைதளங்களிலும் அதிக நேரத்தைப் போக்குகிறார்கள். "இந்நாட்களின்" அவசரத்தை அறியாதவர்கள், தங்கள் நேரத்தை இவ்வாறு 'வெறுமையைத் தேடி' செல்லட்டும்! ஆனால் ஆண்டவரால் அழைக்கப்பட்ட நாமோ, அவருடைய சபையைக் கட்டுவதற்கு 'முக்கியமானவைகளில்' கவனம் செலுத்தி, தேவனுடைய வார்த்தையை தியானித்து, ஜெபத்தில் கர்த்தருக்கு காத்திருக்கக்கடவோம்!*

"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு! ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" என வாசிக்கிறோம் (1கொரி.6:12). ஆகவே, உங்கள் ஜீவியத்திலிருந்து 'சில நல்லவைகளையும்' அகற்றிவிட்டு, "சிறந்தவைகளைச்" செய்வதற்கே, நேரம் செலவழிப்பவர்களாயிருக்கக்கடவோம்.

கடந்ததை மறந்து, முன்னோக்கிச் செல்வோம்

நாம் ஒவ்வொரு நாளும் "பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி" சென்றிட வேண்டும் (பிலி.3:13). அதாவது,

"கடந்த நாளில் நாம் கர்த்தருக்கு யாதொன்றும் செய்யாதவர்களைப் போல் கண்டு, இன்றுதான் நாம் கர்த்தருக்காக ஒன்றை செய்ய ஆரம்பித்திடும் 'முதல் நாளாக' எண்ணி" ஒவ்வொரு நாளும் ஜீவித்திடக்கடவோம்! மேலும், ஒவ்வொரு நாளும் உண்மையாகவே பொருளை உணர்ந்து "கிறிஸ்து இல்லாமல், என்னால் ஒன்றும் செய்ய இயலாது" எனவும் "கிறிஸ்துவோடு இருந்தால் எல்லாவற்றையும் செய்திட முடியும்" எனவும் அறிக்கை செய்யக்கடவோம்! (யோவான்.15:5; பிலி.4:13). "ஒன்றும் செய்ய இயலாது" (Nothing) *என்பதின் அர்த்தம் "நித்திய மதிப்பில்லாத ஒன்றையும்" என அர்த்தமாகும்! "எல்லாவற்றையும்" என்பதின் அர்த்தம் "என்னுடைய ஜீவியத்திற்குரிய தேவனுடைய சித்தம் எல்லாவற்றையும்" என்பதே அர்த்தமாகும்!*

ஆகவே "உங்களை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" *(2தீமோ.2:15).*

15

தலைவர்கள் வீழ்ச்சி அடைவது ஏன்?

ஒவ்வொரு தலைவனும் சந்திக்கக்கூடிய மிகப்பெரிய அபாயம் "தேவ பக்தியின் தோற்றத்தை" மாத்திரமே வைத்துக்கொண்டு, தாங்கள் "மார்க்க மதவாதிகளாய் இருந்து, ஆவிக்குரியவர்களாய் இல்லை" என்ற வித்தியாசத்தை அறிய முடியாமலே இருப்பதுதான்! "தேவனுடைய வீட்டிற்குரிய மெய்யான அடையாளம், நம்மை நாமே நியாயந்தீர்ப்பதுதான் (1பேதுரு.4:17). நம்மை நாமே நியாயந்தீர்க்கும் போது, நம்மைக் குறித்த வெளிச்சத்தை வெகு துரிதமாய் பெற்றுக் கொள்கிறோம். மூப்பர்களாய் இருப்பவர்கள், தங்களை நியாயந் தீர்ப்பதை நிறுத்திக் கொள்வது மிக எளிது! பிறகு, நம்மைக் குறித்த வெளிச்சத்தைப் பெறுவதும் நின்றுவிடும்! நாம் பல்வேறு விஷயங்களில் வைராக்கியமாயிருந்து, வல்லமையாய் பிரசங்கித்தாலும், இவ்வாறு சம்பவித்திட முடியும்.

"நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனா யிருக்கிறாய்" என்ற இந்த வார்த்தைகளை, ஆண்டவர் ஒரு மூத்த சகோதரனிடமே பேசினார்.

> அவர் யாரெனில், "அவரை மற்றவர்கள் மெச்சிக்கொள்கிறபடியால், தன்னிடம் எல்லாம் சரியாயிருக்கிறது" என எண்ணிக்கொண்டார்! (வெளி.3:1).

ஒரு மேய்ப்பன் உண்மையற்றவனாயிருந்தால், ஆடுகளே கஷ்டத்திற்குள்ளாகும்! என 2சாமுவேல்.24:17-ல் வாசிக்கிறோம். கடைசிநாளில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு, இதுபோன்ற **"உண்மையற்ற மேய்ப்பர்கள் மீது"** *வெகு கண்டிப்பாய் வரும். ஆகவேதான் நாம் எல்லோருமே தேவனுக்குப் பயந்திருப்பது அவசியமாயிருக்கிறது!*

ஆகவே, எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாயிருக்கும் பொருட்டு, சபைகளிலுள்ள தலைவர்களின் வீழ்ச்சிக்குரிய காரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்:

அந்தரங்கத்தில் 'சகலத்தையும் வெறுத்து விடாத நிலை'

சில மூப்பர்கள், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு விரும்பினாலும், அதற்குரிய கிரயத்தைச் செலுத்துவதற்கு மனதற்று இருக்கிறார்கள். ஆகவே, தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பெறும்படி "தங்களுக்கு உண்டான யாவற்றையும் வெறுத்து விட" அவர்களுக்கு விருப்பமில்லை! (மத்தேயு.13:44,46). **தங்களால் முடிந்த 'ஏதோ கொஞ்சத்தை விட்டுவிட்டு' தேவனுடைய சபையைக் கட்டுவதற்கு விரும்புகிறார்கள்.** *தங்கள் வேலையை விரும்புகிறார்கள்! நல்ல உணவை விரும்புகிறார்கள்! அதிகமான பணத்தை விரும்புகிறார்கள்! மற்ற உலக ஜனங்களைப்போலவே இந்த பூமியில் ஒரு சொகுசு வாழ்க்கையை விரும்புகிறார்கள்!.... இவ்வாறு இருந்து கொண்டு, அதே சமயத்தில் 'சபையைக் கட்டும் கனத்தையும்' பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள்!*

தங்களின் சொந்த நிலையில் இருந்து கொண்டே "இரண்டு இராஜ்ஜியங்களின் அருமையானவைகளைப்" பெற்றுவிட துடிக்கிறார்கள்! இதுபோன்ற அவர்களின் விருப்பத்தின் துடிப்பை, அவர்கள் இருதயங்களில் காணும் தேவன், அவர்களின் ஊழியத்தில் குழப்பத்தையும் தோல்வியையும் கொண்டுவருகிறார்!

தேவனிடத்தில் பட்சபாதம் ஏதுமில்லை! சிலர், ஒரு வல்லமையான சபையில் அவர்கள் ஐக்கியம் வைத்திருக்கிறபடியாலோ அல்லது சில சிறந்த தேவனுடைய ஊழியர்களிடம் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கூறிக் கொண்டாலோ, இவைகளினிமித்தம் தேவன் கவரப்படுவ தில்லை! அறிவோ, உபதேசத்தின் வைராக்கியமோ, கூட்டங்களில் அப்பியாசிக்கும் 'புதிய உடன்படிக்கையின் சில நடவடிக்கைகளோ' ஆகிய யாதொன்றும் தேவனை கவர்ச்சிப்பதில்லை.

தேவன் உற்றுநோக்கி தன்னுடைய அங்கீகாரத்தை தருவதெல்லாம் "ஆழமான சீஷத்துவத்திற்கும்! ஒருவனுடைய அந்தரங்க ஜீவியத்தின் உத்தமத்திற்குமே!" அங்கீகாரம் தருகிறார். ஆகவே அவர் அளித்திடும் பிரதிபலன்கள், எப்போதுமே ஒரு தலைவனுடைய உத்தமத்தின் அளவின்படியே தருகிறார்! அதுபோலவே 'உண்மையற்ற தன்மைக்கும்' சரிசமமான பிரதிபலனைக் கொடுத்து விடுகிறார்! ஒருவன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்! .... தேவனை ஒருவனும் வஞ்சித்திட முடியாது! நிலத்தில் விழுந்து மரித்திடும் ஒவ்வொரு தலைவனும், நிச்சயமாய் அதிக பலன்களைத் தருவார்கள். அதை நம்முடைய ஆண்டவரே உத்திரவாதம் தந்திருக்கிறார் (யோவான். 12:24). "மிகுந்த பலன் என்பதற்கு அநேக ஜனங்கள் ஒரு சபையில் சேர்ந்து கொள்வார்கள் என்று அர்த்தமில்லை. மாறாக, சபையில் வெகு

குறைவான ஜனங்களே இருந்தாலும் "அவர்களுடைய ஜீவியம் மாறி, தேவனுடைய சுபாவங்களில் பங்கடைந்திருப்பார்கள்" என்பதே அர்த்தமாகும்!

இவ்வாறு, தேவன் எப்போதுமே தரத்தை வாஞ்சிக்கிறாரே அல்லாமல், எண்ணிக்கை அல்ல!

பணவிஷயத்தில், நீதி இல்லாத நிலை

சில தலைவர்களுடைய வீழ்ச்சி, பணவிஷயத்தில் அவர்கள் அநீதியாய் இருந்ததே காரணமாகும். இதைக் குறித்து, மிக விஸ்தாரமாய் முந்திய அதிகாரத்தில் நாம் கண்டிருக்கிறோம். இருப்பினும், இதை மீண்டும் எச்சரிக்கையாய் சொல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது!

ஏனெனில், அநேக தலைவர்கள், தங்கள் சபை அங்கத்தினர்களிடம் பொருளாதார ரீதியில் 'ஒரு உண்ணியைப்போல்' (Parasites) அவர்களை ஒட்டி சார்ந்து கொண்டு ஜீவிக்கிறார்கள்.

அதேசமயத்தில், தாங்கள் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதாக கூறிக்கொள்ளும் கனத்தையும் பெறுகிறார்கள்! இது ஒரு வஞ்சகமல்லவா?

பணஆசையே எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது! ஆகவே இவ்விஷயத்தில் தேவனுடைய தரம் சிறிது கூட குறைந்துவிடக்கூடாது. அப்போஸ்தலர்கள் அவ்வப்போது தங்களுக்கென காணிக்கைகளைப் பெற்றாலும், வேறு சபைகளிலிருந்தோ அல்லது சில தனிப்பட்ட நபரிடமிருந்தோ "தங்களுக்கு காணிக்கைகள் வரும் என்ற எதிர்பார்ப்பை" அவர்கள் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை!

பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது "பணஆசையை விட்டும், ஐசுவரியவானாய் மாறும் விருப்பத்தை விட்டும் **விலகி ஓடி** *விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், ஜனங்களிடத்தில் சாந்தகுணத்தையும் அடையும்படி* **நாடி ஓடு!**" *(1தீமோ.6:9-11) என்று கூறினார்.*

ஐசுவரியமும் ஆஸ்தியும் அதிக அபாயம் நிறைந்ததாகும். நாம் பொருளாதார ரீதியில், ஓர் போராட்டமான வாழ்க்கையில் இருந்தவரை பத்திரமாகவே இருந்திருக்கிறோம்! ஆனால் நாம் ஐசுவரியவான்களாய் மாறும்போதுதான் மிகப்பெரிய அபாயத்தை சந்திக்கிறோம். ஏனென்றால், ஐசுவரியத்தோடும் ஆஸ்தியோடும், பெருமையும், ஆணவமும் வந்து சேர்கிறது! ஆகவே, நாம் மிகுந்த விழிப்போடு கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை துவங்கிய

போது இருந்ததை விட, **முடிவில்** *நம்முடைய பணத்தின் மீது கொண்ட மனப்பான்மை எவ்வாறு இருக்கிறது? என்பதே அதிக முக்கியமாகும்! இதை வேதாகமம் கூறும்போது "தேவ பக்தியான ஜனங்களுடைய நடக்கையின்* **முடிவை நன்றாய் சிந்தித்து** *அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றுங்கள்" (எபி.13:7) என்றே கூறுகிறது.*

கற்பு ஒழுக்க தூய்மையற்ற நிலை

சில மூப்பர்கள், தங்கள் பாலிய விஷயத்தில் உண்மையற்ற வர்களாயிருந்து வீழ்ச்சி அடைகிறார்கள்.

> **ஒருவன், தன்னை ஸ்திரீகளுக்குரிய தொடர்பில், தன்னை எவ்வாறு கற்புடன் காத்துக் கொள்ள வேண்டுமென்பதை அறியாதிருந்தால், அவன் ஒரு மூப்பனாயிருக்க முடியாது என்பது மாத்திரமல்ல.... அவன், கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாய் இருப்பதற்குக் கூட தகுதியற்றவன்!**

ஒருவன் பாலிய விஷயத்தில் ஜெயம் இல்லாமல், மற்றவர்களுக்கு ஒரு மேய்ப்பனாய் இருந்திடமுடியும் என எண்ணுவது, தன்னையே முற்றிலும் ஏமாற்றிக் கொள்வதாகும். இந்த பகுதியில் உண்மையற்ற நிலைக்கு காரணம், தன் சிந்தை வாழ்க்கையில் கவனமற்று இருப்பதும், அதன் விளைவாய் எதிர்பாலரோடு கொண்ட பாலிய இச்சையில் சாதாரண மனப்பான்மை கொண்டிருக்கும்படி செய்து, 'தெய்வ பயத்தையே' அவன் தள்ளிவிடும் நிலை ஏற்படுகிறது! **வேதாகமத்தில் 'தெய்வபயம்' என முதலாவதாக கூறப்பட்ட நிகழ்ச்சி "ஒரு பாலிய பாவத்தை" தொடர்பு உடையதாய் இருப்பது** *நமக்கு விழிப்பை உண்டாக்க வேண்டும் (ஆதி.20:11). வேதாகமம் கூறும்போது "யார்மீது கர்த்தர் பிரியமில்லாமல் கோபமாயிருக்கிறாரோ, அவனே விபச்சாரத்தில் விழுவான்" என எச்சரிக்கிறது (நீதி.22:14).*

எந்த மனுஷனாயிருந்தாலும், அவன் தொடர்ச்சியாக தன் சிந்தை வாழ்வில் 'பாலிய இச்சைக்கு விலகி ஓடாவிட்டால்' இந்த துன்மார்க்க அசுத்தத்திற்கு பலியாகிட முடியும்! இந்த பகுதியில் தங்கள் சிந்தையிலும், பழக்கவழக்கங்களிலும் தோல்வியுற்றவர்கள், தங்களைக் குறித்து மேட்டிமை சிந்தை கொண்டவர்களாயிராமல், பயந்திருக்க வேண்டும்! பாலிய விஷயத்தில் ஜெயம் இல்லாதிருக்கும்போது, நீங்கள் ஜெயம் பெற்றதைப்போல் மற்றவர்களுக்கு தோற்றம் அளித்தால், தேவன் உங்களை ஒரு நாள் பகிரங்கமாய் வெளியரங்கமாக்கி விடுவார்!

தீமோத்தேயு, பவுலின் நெருங்கிய, முழு இருதயம் கொண்ட உடன் ஊழியனாய் இருந்த போதிலும்: "உனக்கு பொல்லாத பாலிய சிந்தை

*தோன்றப் பண்ணுகிற எந்த இடத்தையும் விட்டு விலகி ஓடு! எல்லா புருஷர்களும் இவ்விஷயத்தில் சோதிக்கப்படுகிறார்கள்! இதற்கு நேர்மாறாக, நீயோ அன்பையும், சமாதானத்தையும், சுத்த இருதயத்தை வாஞ்சிக்கும் சகோதரர்களோடு கொண்ட ஐக்கியத்தையும் அடையும் படிக்கே நாடி, ஓடு!" (2தீமோ.2:22-*Message *விரிவாக்கம்). 'இந்த கட்டளையை' ஒரு மூப்பனாயிருக்கும் நீங்கள் 'சீரியஸாக' எடுத்து வாழ்கிறீர்களா? என்பதை சீர்தூக்கிப் பாருங்கள்.*

அல்லது, இப்போது நீங்கள் முதிர்ச்சி பெற்றவர்களாயும், பல ஆண்டுகள் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாகவும் எண்ணி, உங்களுக்கு இந்த புத்திமதி தேவையில்லை என நீங்கள் உணருகிறீர்களா? தீமோத்தேயு கர்த்தருக்கு 25 ஆண்டு காலமாய் ஊழியம் செய்து கொண்டிருந்தான். அப்படியிருந்தும், அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவை "பாலிய விஷயத்தில் கவனமாயிருக்கும்படி" இன்னமும் எச்சரிக்க வேண்டியது அவசியமாயிருப்பதை உணர்ந்தார். நம் எல்லோருக்குமே இந்த எச்சரிக்கை அவசியமாயிருக்கிறது!

இதுபோன்ற எச்சரிப்புகளை நாம் கவனமாய் கேட்டால் மாத்திரமே, அது நமக்கு இரட்சிப்பாய் முடிவடையும். அப்போது, நம்முடைய சபைகள் கற்பின் தூய்மையில் வளர்ந்து, நம்முடைய மந்தைக்குத் தேவையான **'தீர்க்கதரிசன வார்த்தையை'** *எப்போதும் கொண்டிருப்போம்! இவ்விஷயத்தில் 'எவ்விதத்தில்' தோல்வி ஏற்பட்டிருந்தாலும், அதற்கு ஆழ்ந்த மனந்திரும்புதலும், தன்னையே நியாயந்தீர்த்துக் கொள்ளுதலும் வேண்டும்! நேர்மையுள்ள ஜனங்களையே தேவன் நேசிக்கிறார். இதுவிஷயத்தில், நம் ஜீவகால மெல்லாம் மிகுந்த விழிப்பும் கவனமும் நாம் கொண்டிருக்கவேண்டும்!*

தாழ்மையில் வேரூன்றாத நிலை

'ஒரு மூப்பன்' என்ற ஸ்தானத்தில் பெருமை அடைவதும், சில தலைவர்களின் வீழ்ச்சிக்கு காரணமாயிருக்கிறது. இதைக் குறித்தும், முந்தய அதிகாரத்தில் நாம் கூறியிருக்கிறோம். ஆகிலும் இந்த பகுதியை மீண்டுமாய் நினைவுகூர்வது நல்லது.

> ஒரு தலைவன், தன்னுடைய சிந்தையில் "ஒரு சாதாரண சகோதரனாய்" நிலைத்திருந்தால், ஜீவகாலம் முடியும் மட்டும் அந்த பொறுப்பிலிருப்பான்!

ஏனென்றால் இதுபோன்ற ஒரு மனிதனுக்கே, தேவன் தன்னுடைய கிருபையை எப்போதும் தருகிறார்!

ஆனால், சில தலைவர்கள் மூப்பர் என்ற நியமனத்தில் பெருமை அடைகிறார்கள். ஒரு மூப்பர் எப்போது **தன்னை ஒரு விசேஷித்த**

சகோதரனாய் எண்ணத் துவங்குகிறாரோ, அப்போதே அவருக்கு வீழ்ச்சி ஏற்பட்டுவிடும்! 'சாதாரண சகோதரர்கள்' தங்கள் ஜீவகாலம் முடியும் மட்டும் ஆவிக்குரிய வளர்ச்சியில் பெருகுவார்கள். இதற்கு மாறாக, தங்களை 'விசேஷித்த' சகோதரர்களாய் கருதியவர்கள் எளிதில் வீழ்ச்சி அடைவார்கள்!

இன்றும் அதிகமாய், நீங்கள் வார்த்தையை பகிர்ந்தளிக்கும் வரமுடையவராய், உங்கள் மந்தையினரால் எதிர்பார்ப்புடன் ஏறிட்டுப்பார்க்கக் கூடியவராயிருந்தால்..... நீங்கள் அதிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எந்த விசுவாசியாயிருந்தாலும், மற்றவர்களால் தான் 'விக்கிரகமாக்கப்படுவதை விரும்பினால்' அந்திக்கிறிஸ்துவின் ஆவியினால் தீட்டுப்படுவார்கள். அதுபோன்றவர்களை சாத்தான் எளிதில் தாக்கி விடுவான். நம்முடைய அழைப்போ, 'வேலைக்காரர்களாயிருப்பது மாத்திரமே'. இங்குதான் நம்முடைய பாதுகாப்பு அடங்கியிருக்கிறது.

பரிசுத்தாவியின் அனைத்து ஆசீர்வாதங்களைக் கொண்டும் தேவன் உங்களை ஆசீர்வதிப்பது, அவருக்கு மிகவும் எளிது. ஆகிலும் அவ்வாறு உங்களை அவர் ஆசீர்வதித்த பின்பு, உங்களை "தாழ்மையில் பாதுகாப்பது" அவருக்கு கடினம்! ஏனெனில், உங்களுடைய இசைந்த மனம் இல்லாமல், உங்களை தாழ்மையில் வைத்திருப்பது ஆண்டவரால் கூடாத காரியம்! 'நீங்கள்தான்' நுகத்தின் மறுபக்கத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, அவரிடமிருந்து தாழ்மையை தொடர்ந்து கற்றுக் கொள்ள வேண்டும் (மத்.11:29). இவ்விஷயத்தில் அடைந்த தோல்வியே, அநேக மூப்பர்களின் வீழ்ச்சிக்கு காரணமாய் அமைந்து விட்டது!

நேர்மையில்லாத நிலை

இரட்டைப் பிள்ளை போல், தாழ்மைக்கு நேர்மை இருக்கிறது! இந்த இரு குணாதிசயமும் எப்போதும் இணைந்தே செயல்படுகிறது! அநேக மூப்பர்கள், தாழ்மையோடும் நேர்மை உள்ளத்தோடும் சில மூத்த சகோதரர்களின் உதவியை நாடுவதில்லை! அவர்கள் சில பாவங்களில் சிக்குண்டு 'காரியங்கள் வெளிப்படும் வரை' மாய்மாலக் காரர்களாகவே ஜீவிக்கிறார்கள். பிறகு, அவர்களில் சிலர் தங்கள் அருவருப்பான பாவங்களை மறைப்பதற்கு, "பொய்யும் பேசுகிறார்கள்". அதுவும், மற்றவர்களை 'தேவபக்தியான வாழ்க்கைக்குள்' நடத்த வேண்டிய தலைவர்களிடம்கூட இதுபோன்ற நேர்மையும் உண்மையும் இல்லாதிருப்பதைக் காண்பது, அதிர்ச்சி தருவதாகவே இருக்கிறது!

அநேக மூப்பர்கள், அவர்களின் பாவங்களில் பிடிபடும்போது தங்களை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். கடைசியாக தங்கள் பாவங்களை அவர்கள் ஒத்துக்கொண்டாலும், அதை சவுல் இராஜா செய்ததுபோலவே "ஜனங்களிடமிருந்து இன்னமும் கனத்தை பெறுவதற்காகவே" அவ்வாறு செய்கிறார்கள்! (1சாமுவேல்.15:30).

எப்படியாகிலும் 'மாய்மாலக்காரர்கள்' அனைவரையும் முடிவில் தேவன் வெளியரங்கமாக்குகிறார். அனனியாவும் சப்பீராளும், கொரிந்திய சபையைப் போன்ற 'ஒரு மாம்சீக சபையில்' பங்காய் இருந்தால், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்! நீண்ட காலம் வாழ்ந்திருப்பார்கள்! ஆனால், அந்நாட்களிலிருந்த எருசலேமின் 'தூய்மையான சபையில்' இருந்தபடியால், அந்த சபையில் அவர்கள் வெளிரங்கமாக்கப்படுவதிலிருந்து தப்பிச்செல்ல முடியவில்லை!

> **தேவன் ஒரு சபையையும், அதன் தலைவர்களையும் தாங்குகிறார் என்பதற்கான நிச்சயமான ஓர் அடையாளம் உண்டு! அது என்னவெனில், அந்த சபைக்குள் மாய்மாலக்காரர்களாய் ஜீவிப்பவர்களின் 'பாவத்தை' தேவன் வெளியரங்கப் படுத்துகிறார்! அதுவும், அவர்களில் யாராவது, தாங்கள் தலைவராக வேண்டுமென்று விருப்பம் கொண்டிருந்தால், அவர்களை சீக்கிரமாகவோ அல்லது சற்று தாமதமாகவோ கண்டிப்பாய் வெளிப்படுத்துவார்!**

சக மூப்பர்களை ஆளுகை செய்யும் நிலை

ஒரு வலிமையான மூப்பர், தன்னுடைய சக மூப்பரின் அபிப்பிராயத்திற்கு தாழ்மையாய் செவிக்கொடுப்பதற்குப் பதிலாக, 'தன்னுடைய அபிப்பிராயத்தை' திணிப்பது சாத்தியமேயாகும். ஆகவே, உங்கள் சக மூப்பர்கள், உங்களுக்கு மறுப்பு கூறும் அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்ள, அவர்களுக்கு முழு சுயாதீனம் தர வேண்டும். இவ்வாறாகவே, தேவன் உங்களை அநேக மதியீனத்திலிருந்தும், அநேக தவறுகளிலிருந்தும் காத்துக்கொள்வார்!

ஒரு மூத்த சகோதரன் ஏற்கெனவே வெளிப்படுத்திய அபிப்பிராயங்களினிமித்தம் சிறிதும் பாதிக்கப்படாமல், அவருடைய சக மூப்பர்கள் தங்கள் அபிப்பிராயங்களை நேர்மையாகவும் தைரியமாகவும் பகிர்ந்து கொள்ள, **முழு சுயாதீன உணர்வு** *கொண்டிருக்க வேண்டும். உங்கள் மூத்த சகோதரனுக்கு நீங்கள் ஒத்துக்கொள்ளாத பகுதியை 'மிகுந்த அன்போடு' அவருக்குத் தெரிவிக்க வேண்டும். முடிவில் அவர் எடுக்கும் தீர்மானத்திற்கு நீங்கள் சம்மதம் கூறினாலும் கூட, உங்கள் கருத்தை தெரிவிக்காமல் இருந்திருக்கக் கூடாது.* **ஏனெனில்**

“இசைந்து போகாத தன்மை” ஐக்கிய-இழப்புதன்மை என பொருள்படாது! (Disagreement does not mean disunity).

*ஒரு சபையில் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் சென்ற பிறகும் மற்றொரு சகோதரன் உங்கள் மூப்பர் பொறுப்பை பகிர்ந்து கொள்வதற்கு எழுப்பப்படாதிருந்தால்.... சபையில் ஒரு தனி மூப்பராய் இருக்கும் நீங்கள் “**ஒரு குட்டி- சர்வாதிகாரியாய்**” இருந்திருப்பீர்களோ? என்ற கேள்வியை கேட்டுப்பாருங்கள். ஒருவேளை, இன்னமும் மரணத்திற்கு ஊற்றப்படாத உங்களின் வலிமையான ஆள்த்துவமே, மற்றொரு தலைமைத்துவம் உங்கள் சபையில் இன்னமும் வளராமல் இருப்பதற்கு காரணமாயிருக்கக் கூடும்!*

ஒரு மூத்த சகோதரன், தாலந்துகளைப் பெற்ற ஒரு வலிமையான ஆள்த்துவம் கொண்டவராயிருந்தால் “தன்னுடைய ஆத்துமாவை மரணத்திற்குள்ளாக ஊற்ற” கற்றுக் கொண்டு, சகோதரர்களையும் சகோதரிகளையும் ஆண்டவரின் நேரடித் தொடர்புக்குள் நடத்த வேண்டுமே அல்லாமல், எவ்விதத்திலும் அவரையே சார்ந்து கொள்ளச் செய்வதாய் இருந்து விடக்கூடாது. மாறாக, தன்னை அவர் மற்ற சகோதர சகோதரிகளின் அதே அளவிற்கு கொண்டுவர பிரயாசப்பட வேண்டும். அப்படி இல்லாமல், அவரைப்பற்றிய தொடர்ச்சியான பயமாய், யாருக்கும் இருந்துவிடக்கூடாது! சபையில் உண்மையா யிருக்கும் சகோதரர்களோடு ஒரு மூத்த சகோதரன் ஐக்கியங்கொள்ள நாடவேண்டும். அந்த சகோதரன் உண்மையாயிருந்து, மூத்த சகோதரனைவிட வித்தியாசமாய் இருந்தாலும் ஓர் இணைந்த ஐக்கியம் நாடவேண்டும். அது ஒரு அரசியல் தலைவன், தனக்கு தலை வணங்குகிறவர்களுக்கு மாத்திரம் பதவிகள் தருவதைப் போல் இருந்து விடக்கூடாது!

ஒரு மூத்த சகோதரன் அநேக திராட்சைத் தோட்டங்களை (வெளியிலுள்ள சபைகளை) விசாரித்து விட்டு, தன் சொந்த திராட்சை தோட்டத்தை (உங்கள் ஸ்தல சபையை) புறக்கணித்ததைப்போன்ற குற்றத்திற்கு ஆளாகாதபடி கவனமாயிருக்கவேண்டும்! (உன்.1:6). இவ்வாறாக, இங்குமங்கும் அநேக சபைகளில் பிரசங்கித்துவிட்டு, நீங்கள் அழைக்கப்பட்டிருந்த சபையை உதாசீனம் செய்வது எளிது!

உங்கள் ஸ்தல சபையில் ‘ஒரு சகோதரத்துவத்தைக் கட்டாமலும்’ உங்கள் ஸ்தல சபையில் ‘பொறுப்புணர்வுள்ள சகோதரர்களை எழுப்பாமலும்’ இருப்பீர்களானால், ஒரு மூப்பனாயிருந்து நீங்கள் செய்த ஊழியம் ‘தோல்வி என்றே’ கூறவேண்டும்! நீங்கள் எதைச் செய்து கொண்டிருந்தாலும், அது தோல்விதான்! நீங்கள் மற்ற சபைகளுக்கு

எதைப் பிரசங்கித்திட முடியும்? ஆகவே, உங்கள் ஊழியத்திற்கு தேவன் கிருபையை வழங்கியிருக்கிறாரா என்பது கூட கேள்விக்குறிதான்! ஒரு மூத்த சகோதரனின் ஊழியத்திற்கு தேவன் கிருபையைத் தந்திருந்தால், படிப்படியாய் "**ஒரு சகோதரத்துவம்**" *அந்த ஸ்தலத்தில் கட்டப்படுவது ஒரு முக்கியமான அடையாளமாகும்! அந்த சகோதரத்துவம், எந்த ஒரு நபரையும் சார்ந்து கொண்டதாய் இருக்கக்கூடாது.*

பிரதானமாயிருக்கும் மூப்பர்கள், தனக்கு அடுத்துள்ள 'எல்லாவற்றிற்கும்-ஆமாம்' கூறுகிறவரையே, எழுத்தின்படி இரண்டாவது மூப்பராய் வைத்துக் கொள்கிறார்கள். அதாவது "ஒவ்வொரு சபையிலும் பன்மையில் மூப்பர்கள் இருக்கவேண்டும்" என்ற எழுத்தை கடைப்பிடிக்கிறார்கள்.

அடுத்துவரும் மூப்பர், தனக்கு மூத்த மூப்பர் அதிக ஆவிக்குரிய முதிர்ச்சி உள்ளளவரென்றும், ஞானமுள்ள மூப்பரென்றும் நிச்சயமாய் உணர்ந்திருக்க முடியும்! ஆனால் அந்த இளமையான மூப்பர், தனது மூத்த மூப்பரை கண்மூடித்தனமாய் "ஆம்-சகோதரரே" என பின்பற்றிவிடக்கூடாது!

அப்படிச் செய்தால், ஒரு சக ஊழியனாயிருந்து 'சமநிலைப் படுத்தும் ஊழியத்தை' நிறைவேற்றிட இயலாது. ஆகவே மூத்த சகோதரனாய் இருப்பவர், தனக்கடுத்த இளைய மூப்பர் தன்னுடைய பணியை நிறைவேற்றுவதற்கு, அவரை உற்சாகப்படுத்துகிறவராய் இருக்கவேண்டும்.

பேதுரு தன் சக மூப்பர்களை எச்சரித்து: "உங்கள் மந்தையை இறுமாப்பாய் ஆளாதிருங்கள்! அவர்களிடம் சர்வாதிகாரம் செய்யாதிருங்கள்! அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை ஒரு எஜமானனைப் போல் கூறாதிருங்கள்! அவர்களுக்கு **ஒரு நல்ல மாதிரியாய் இருந்து,** *அன்புடன் நல்ல வழியைக் காட்டுங்கள்" என்றே கூறினார் (1பேதுரு.5:3-பல்வேறு மொழிபெயர்ப்புகள் இணைந்தது).*

மூப்பர்கள் அதிகார போதை கொண்டவர்களாய், மற்றவர்களால் போதிக்கப்பட முடியாத, தங்கள் பகுதிக்கு தாங்களே கை தேர்ந்தவர்கள் என எண்ணிவிடக் கூடாது! திருத்தப்பட முடியாத எல்லையை அவர்கள் கடந்து விட்டால், அப்படிப்பட்டவர்கள் மிகப்பெரும் அபாயத்திற்குள் இருக்கிறார்கள்: "இனி ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய இராஜாவைப் பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி!" என்றே பிரசங்கி.4:13 கூறுகிறது.

ஒரு மூப்பனுக்குரிய மிகப்பெரிய முதல் தகுதியே "யாரையும் ஆளுகைச் செய்ய விருப்பமில்லாதவராய்" இருக்கவேண்டும் என்பது

தான். அதற்குப் பதிலாக ஜனங்களுக்கு ஊழியம் செய்திட மிகுந்த ஆர்வமும், அவர்களின் பாதங்களைத் தாழ்மையுடன் கழுவிட விருப்பமும் கொண்டவராயிருக்கவேண்டும்!

உங்கள் சபையில் வளர்ந்து வரும் இளைய சகோதரர்களின் நம்பிக்கையை நீங்கள் பெற்று, அவர்கள் உங்கள் சபையில் கொஞ்சம் கொஞ்சமாய் பொறுப்பெடுத்துக் கொள்ளவும், வார்த்தைகளைப் பகிர்ந்திடச் செய்யவும் வேண்டும்!

எல்லா மூப்பர்களும், "சபையில் தங்கள் உத்தமத்தை நிரூபித்த" இளைய சகோதரர்களை உற்சாகப்படுத்தி, வார்த்தைகளைப் பகிர்ந்தளிக்க தூண்டவேண்டும்.

ஒரு மூத்த சகோதரன், ஒருபோதும் ஓய்வு பெறுவதில்லை! இருப்பினும், அவரோ மற்றவர்களுக்கு படிப்படியாய் பொறுப்புகளை தர வேண்டும்! அப்படி இருந்தால், அந்த மூத்த சகோதரன் மற்ற சபைகளுக்குச் சென்று உதவிட விடுதலை பெற்றிருப்பார்! ஆகவே, எல்லா சமயங்களிலும் தேவனுடைய முகத்திற்கு முன்பாக பயந்து, உங்களைக்குறித்த தாழ்ந்த சிந்தை கொண்டவர்களாயிருங்கள்! மற்றவர்களுக்கு நீங்கள் 'ஒரு குட்டி- தேவனாய்' மாறி, உங்களை மேல் நோக்கிப் பார்க்கும்படி அனுமதித்து விடாதிருங்கள். நீங்கள் தேவனுக்கு முன்பாக தாழ்மையில் நடந்து கொண்டால், உங்களுக்கு தமது கிருபையை அவர் தருவார்! அதில் அவருக்கு, எந்த ஒரு பாரபட்சமும் இல்லை!

புதியஏற்பாட்டில் சபை மூப்பர்களுக்கென்றே விசேஷமாய் எழுதப்பட்ட: 1தீமோத்தேயு, 2தீமோத்தேயு, தீத்து மற்றும் வெளிப்படுத்தின விசேஷ அதிகாரங்கள் 2,3 ஆகிய இந்த நிருபங்களை வாசித்து அடிக்கடி தியானித்திடவேண்டும். அது உங்களுக்கு மிகப்பெரிய உதவியாயிருக்கும்.

பாரபட்சமாய் நடந்து கொள்ளும் நிலை

ஒரு மூத்தசகோதரன் தனக்கு விசேஷித்த நண்பர்களிடமும் உறவினர்களிடமும் பாரபட்சம் காட்டுவது "தீமையாகும்".

இதை தேவனுடைய வார்த்தை கூறும்போது "நியாய விசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள். **சிறியவனுக்கு முகதாட்சணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும்,** *நீதியாக பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக" (லேவி.19:15) என்றே வாசிக்கிறோம்.*

இந்த விஷயம் அப்படி ஒரு அபாயம் நிறைந்ததாய் மூப்பர்களுக்கு இருக்கிறபடியால், தன்னுடைய முழு இருதயமான, மிகவும் நெருங்கிய

உடன் ஊழியன் தீமோத்தேயுவுக்கு, பவுல் எச்சரித்து "அவன் பட்சபாதத்தோடு ஒன்றும் செய்யாதிருக்க" எச்சரித்தார்! (1தீமோ.5:21). இந்த எச்சரிப்பை வல்லமையான உறுதியோடு "நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமல்.... இவைகளை காத்து நடக்கும்படி, தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்து கொள்ளப்பட்ட தூதர்களுக்கும் முன்பாக **உறுதியாக கட்டளையிடுகிறேன்**" என்றே வலியுறுத்திக் கூறினார்.

இது எதைக்காட்டுகிறது என்றால், ஏற்கெனவே 25 ஆண்டுகள் பவுலோடு உடன்ஊழியனாயிருந்த தீமோத்தேயு 45 வயது கொண்ட சகோதரனாகிய பிறகும், அவன் இன்னமும் பட்சபாதம் காட்டும் அபாயத்தில் இருக்க முடியும்! என்பதையே காட்டுகிறது. அப்படி இருக்காது என்றால், இந்த எச்சரிக்கை அவனுக்கு அவசியமாயிருந்திருக்காது!

ஆகவே, இந்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்தி "நான் ஒருபோதும் பட்சபாதம் கொண்டவனல்ல!" எனக்கூறும் எந்த மூப்பராயிருந்தாலும் அதுபோன்ற மூப்பரே "இந்த பாவத்திற்கு" அதிக குற்றமுள்ளவராயிருப்பார்!

இஸ்ரவேலர்கள் 'பொன் கன்றுக் குட்டியை' வனாந்திரத்தில் தொழுது கொண்டபோது, மோசே மலையிலிருந்து கீழே வந்தார். அச்சமயம் "கர்த்ததருடைய பட்சத்தில் உள்ளவர்கள் அவரோடு சேர்ந்து கொள்ளும்படி" அழைப்பு விடுத்தார். அப்போது, லேவி கோத்திரத்தார் மாத்திரமே மோசேயோடு சேர்ந்து நின்றார்கள். அவர்களைப்பார்த்து "நீங்கள் பாளயத்திற்குச் சென்று விக்கிரகாரதனை செய்த யாவர் மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை செயல்படுத்தி, பாவஞ்செய்தவர்கள் யாராயிருந்தாலும் **பட்சபாதம் ஏதுமில்லாமல், அவர்கள் நெருங்கிய உறவினர்களாயிருந்தாலும் கொன்று போடுங்கள்!**" என மோசே கட்டளையிட்டார். அவ்விதமே அவர்கள் நிறைவேற்றினபடியால், தேவன் அவர்களுக்கு "**இஸ்ரவேலின் ஆசாரித்துவத்தை வழங்கி**" அவர்களை கனம் செய்தார்! (யாத். 32:27-29).

மோசேகூட, தனக்கு அடுத்து வரும் தலைமை நியமனத்தை 'யாதொரு பட்சபாதமும் இல்லாமல்' செய்தார். அவருக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். இஸ்ரவேலின் தலைமைத்துவத்தை அந்த இரண்டு பேர்களில் ஒருவருக்கு கூட தரவில்லை. அதற்குப் பதிலாக, யோசுவாவை தெரிந்து கொண்டார்!

மோசே, தேவனுடைய முகத்துக்கு முன்பாக ஜீவித்து! தேவன் கூறுவதைக் கேட்டு! தேவன் தெரிந்து கொண்டவனையே தானும் தெரிந்து கொண்டார்! இவ்வாறாகவே,

எந்த ஒரு உண்மையான தலைவனும் செயல்படுவான். அப்படி ஒரு தலைவனைப் போலவே நாமும் இருந்திட வேண்டும்.

ஆகிலும், **சாமுவேல் தீர்க்கதரிசி** *இந்த விஷயத்தில் தோற்றுப் போனார். அவர் தன் குமாரர்களிடத்தில் பட்சபாதமாய் நடந்து, தனக்குப் பிறகு அவர்களை நியாயாதிபதிகளாய் நியமனம் செய்தார். ஆனால் அந்த குமாரர்களோ "பண ஆசையில் ஆர்வம் கொண்டவர்களாய், பரிதானம் வாங்குகிறவர்களாய், வழக்குகளை நியாயமாய் விசாரிக்காதவர்களாய்" போய்விட்டார்கள் (1சாமு.8:3). ஆகவே, இந்த பகுதியில் உயர்ந்த புருஷர்களாயிருப்பவர்களும் 'தங்களை நியாயந்தீர்த்து வாழாதிருந்தால்' தோற்றுவிடமுடியும்! ஆகவே, இந்த எச்சரிப்பு நம் எல்லோருக்கும் உரியது!!*

இதற்கு ஒப்பான நிகழ்ச்சிகளை நானும் கண்டிருக்கிறேன்! மூப்பர்கள், தங்கள் குமாரர்களுக்கும், தங்கள் குமாரத்திகளுக்கும், சபையிலுள்ள தங்கள் நெருங்கிய நண்பர்களுக்கும் பட்சபாதம் காட்டி இருக்கிறார்கள். இதன்விளைவாய், அநீதத்திற்கும் வழி வகுத்து விடுகிறார்கள். "எல்லா மனுஷர்களுடைய இருதயத்தையும் காணும் தேவன்" இதுபோன்ற மூப்பர்களிடமிருந்து தன்னுடைய கிருபையை திரும்ப எடுத்துக்கொள்கிறார். இந்த மூப்பர்கள் தங்கள் இரட்சிப்பையோ அல்லது மூப்பர் பதவியையோ இழக்காவிட்டாலும், தங்கள் அபிஷேகத்தையும் தங்கள் ஆவிக்குரிய பகுத்தறிவையும் உடனே இழந்து போகிறார்கள்! படிப்படியாய், அவர்கள் மீது கொண்ட நம்பிக்கையை ஜனங்களும் இழந்து விடுகிறார்கள்!

"பரத்திலிருந்து வரும் தேவ ஞானம், **யாரிடத்திலும் பட்சபாதம் காட்டுவதில்லை**" *(யாக்.3:17-KJV). நம்முடைய ஜீவியத்தை திரும்பிப் பார்த்து, நம்முடைய செயல்களோ அல்லது நாம் எடுத்த தீர்மானங்களோ "பட்சபாத அடிப்படையில் இருந்ததா?" என சோதித்து பார்ப்பது நலம். இதைக் குறித்த வெளிச்சத்தை நமக்குத் தரும்படி தேவனிடம் கேட்கவேண்டும். இதுபோன்ற பகுதிகளில், நம்முடைய மாம்சத்திலுள்ள கறைகளை நாமாக காண்பது இயலாது!*

உங்களுடைய கடந்த கால செயல்களில் அல்லது உங்கள் தீர்மானங்களில், நீங்கள் பட்சபாதமாய் நடந்திருக்கக்கூடும் என நீங்களாக அனுமானித்து கொண்டு 'அந்த விஷயங்களில்' உங்களுக்கு வெளிச்சம் தரும்படி, நீங்கள் தேவனிடத்தில் கேட்பது மிகவும் நல்லது. 'அப்போது' அவர் உங்களுக்கு வெளிச்சத்தைத் தருவார்!

ஆகவே, கீழ்கண்ட கேள்விகளை உங்களிடம் கேட்டுப் பாருங்கள்: யாரோ ஒருவர் உங்கள் நண்பராய் இருந்ததினிமித்தம், அவருடைய

தவறை நீங்கள் எப்போதாவது மறைத்ததுண்டா? நீங்கள் சிலரை விரும்பாததினிமித்தம், சாதாரணமாய் கடிந்து கொள்ளுவதை விட, அதிகமாய் கடிந்து கொண்டீர்களா? இவ்வாறெல்லாம் உங்களை கேட்டுப்பார்த்தால், அது உங்களுக்கு வெளிச்சத்தைத் தரும்!

தேவனுடைய பார்வையில், எல்லா ஜனங்களும் சமமானவர்கள்! அதுபோலவே, நம்முடைய கண்களுக்கும் அவர்கள் சமமானவர்களாய் காணப்படவேண்டும். இதுபோன்ற பட்சபாதத்திலிருந்து உங்களை கழுவிக் கொண்டால், அது உங்கள் ஆவிக்குரிய உணர்வுகளை கூர்மைப் படுத்தி, அதுமுதற்கொண்டு அதிக வலிமையான மூப்பராய் மாறு வீர்கள்! ஒருவன் ஏழையாயிருப்பதினிமித்தம், அந்த ஏழை மனிதனுக்கு பட்சபாதம் காண்பித்துவிடாதிருக்க கவனமாயிருக்க வேண்டும் (யாத்.23:3). ஒரு பணக்காரனுக்கு காண்பித்திடும் பட்சபாதமும், ஒரு ஏழைக்கு காண்பித்திடும் பட்சபாதமும் ஒரே அளவிலான தீமையாகும்!

இருப்பினும், அநேக சபைகளில் பணக்காரர்களுக்கும் படித்தவர்களுக்கும் பட்சபாதம் காண்பிக்கப்பட்டு, கனப்படுத்தப் படுகிறார்கள்! (யாக்.2:1-4). 'இந்த விஷயத்தை' வைத்து உங்களை சோதித்து பார்ப்பது நலம்! நீங்கள் 'சபையில் பொறுப்புகளை கொடுத்த' சகோதரர்களை சற்று கவனித்துப் பாருங்கள்.... அவ்வாறு காணும் போது, அவர்கள் அனைவருமே பணக்காரரும் படித்தவர்களுமாய் இருக்கிறார்கள், உயர்ந்தபட்டம் பெற்றவர்களுமாயிருக்கிறார்கள்! அப்படி இருந்தால், "உங்களையும் அறியாமலே" படிப்பிற்கும் ஆஸ்திக்கும் மதிப்பு கொடுத்து, ஏழையையும் அவர்களை விட குறைந்த படிப்பு கொண்டவர்களை நீங்கள் ஓரமாய் வைத்திருப்பதைக் காண முடியும்!

> இது, "உங்களையும் அறியாமல்" கல்விக்கும், ஆஸ்திக்கும், ஆவிக்குரிய தன்மையைவிட அதிக மதிப்பு கொடுத்திருக்கிறீர்கள் என்பதையே காட்டுகிறது!

இதுபோன்ற மனநிலை, உங்கள் சபையை நாளாவட்டத்தில் அழித்துவிடும்! உங்கள் சாட்சியை ஒன்றுமில்லாமல் போகச் செய்வதற்கு 'எத்தனை வழிகளில்' சாத்தான் முயற்சிக்கிறான், பாருங்கள்!

தம்முடைய அப்போஸ்தலர்களாய் இருப்பதற்கு "மீனவர்களையே" இயேசு தெரிந்து கொண்டார் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்!

16

திருத்துதலை ஏற்றுக்கொண்டு நொறுங்குதல்

முதிர்ச்சிப் பெற்ற சகோதரர்களின் திருத்துதலுக்கு நம்மை ஒப்புக் கொடாவிட்டால், மூப்பர்களாகிய நம்முடைய சொந்த பிழைகளை காண இயலாது! முதிர்ச்சிக்கும், ஒருவருக்கொருவர் உள்ள நம்பிக்கைக்கும் அடையாளம், மூப்பர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் 'வித்தியாசமான கருத்துக்களை' மிக வலிமையாக எடுத்துப் பேசிக் கொண்டாலும், மனம் புண்படாமல் இருப்பதே முதிர்ச்சி அனுபவமாகும்.

திருமணத்தின் ஆரம்ப வருடங்களில் ஒரு கணவனும் ஒரு மனைவியும் மிகுந்த கவனத்தோடு ஒருவருக்கொருவர், என்ன பேசிக் கொள்ள வேண்டும்? எவ்வாறு பேசிக்கொள்ள வேண்டும்? என்றெல்லாம் கவனமாயிருக்கக்கூடும். ஏனென்றால் ஒருவருக்கொருவர் உள்ள அவர்களின் தொடர்பில் 'எந்த சஞ்சலத்தையும்' தாங்கிக் கொள்ள வலிமையான பெலன் அப்போது இருப்பதில்லை. ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்ட **அன்பில் பெலன் கொண்டவர்களாய்** *வளரும் போதும், ஒருவருக்கொருவர் அதிகமான பாதுகாப்பை உணரும் போதும், மிக தாராளமாய் ஒருவருக்கொருவர் பகிர்ந்து பேசிக் கொள்வார்கள்.... எங்கே தன் வாழ்க்கை துணையாய் இருப்பவர் மனம் புண்பட்டுவிடுவாரோ? என்ற அச்சம் இப்போது விலகிவிட்டது!*

> **இதுபோலவேதான், மூப்பர்களுக்குள்ளும் இருந்திடவேண்டும்! ஒருவருக்கொருவர் கொண்ட தேவபக்தியான அன்பின் ஐக்கியத்தில் மூப்பர்கள் வளர்ந்து வருவார்களென்றால், அவர்களிடத்தில் ஏற்படும் மனம் ஒத்தில்லா விஷயங் களையும் அல்லது மற்றொருவரின் தவறையும் கூட 'அன்போடு' மிக வலிமையாய் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள முடியும்!**

அப்படி ஒரு நிலையே சபைக்கு மிகுந்த பிரயோஜனத்தைக் கொண்டுவரும்! மிகுந்த மனதுயரம் என்னவென்றால், அநேக மூப்பர்கள் 'இந்த நல்ல நிலைக்கு ஒருபோதும் வராமல்' தங்கள் ஜீவகால மெல்லாம், 'சிறிய திருத்துதலினிமித்தம்' மனம் புண்பட்டு இருக்கிறார்கள்.

பேதுருவைப் பார்த்து "சாத்தானே!" என இயேசு ஒருமுறை பகிரங்கமாய் கடிந்து கொண்டார். ஆனால் பேதுருவோ, இயேசு கடிந்து கொண்டதினிமித்தம் மனம் புண்படவில்லை! (மத்தேயு.16:23). பவுல்கூட ஒருமுறை, பேதுருவை பகிரங்கமாய் கடிந்து கொண்டார் (கலாத்தியர்.2:11). அப்போதும்கூட பேதுரு மனம் புண்படவில்லை! இவ்வாறாக எல்லோரும் அறிந்துகொள்ளும்படியான **ஒரு ஆவிக்குரிய மனிதனாய் பேதுரு திகழ்ந்தார்!** *யூதாஸ்காரியோத்தோ இயேசு தந்த "ஒரு சிறிய திருத்துதலைக்கூட ஏற்றுக்கொள்ளாமல்" மனம் புண்பட்டான்! அதனிமித்தம், உடனே வெளியே சென்று, தன் ஆண்டவரை காட்டிக் கொடுத்தான் (யோவான்.12:4-8 வசனத்துடன் மத்தேயு.26:10-16 வசனங்களை சேர்த்து வாசியுங்கள்).*

பேதுருவும், பவுலும் தேவன் மீதுகொண்ட உறவில் மிகுந்த பாதுகாப்புடன் இருந்தபடியால், ஒருவரையொருவர் அன்புகூர்ந்து, ஒருவருக்கொருவர் மனம் புண்படவில்லை! இதுபோன்ற உச்சித நிலையை அடையவே "மூப்பர்கள் ஒருவருக்கொருவர் கொண்ட உறவில்" முன்னோக்கிச் செல்ல வேண்டும்! இருப்பினும் இந்த உச்சிதத்தை அடைவதற்கு, இந்த வரிகளை நான் உங்களுக்கு கூற வேண்டும்: நீங்கள் பிறருக்கு திருத்துதலை கொடுப்பதற்கு முன்பாக, முதலாவது நீங்கள் மனம் புண்படாமல், எந்த திருத்துதலையும் ஏற்றுக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்!

1&2தீமோத்தேயு நிருபங்கள் கற்றுத்தரும் பாடங்கள்

பவுல் தீமோத்தேயுவைப் பார்த்து "உன்னைக் குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தை கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்" எனக் கூறினார் (1தீமோ.4:16).

தீமோத்தேயு, பவுலின் சிறந்த ஊழியனாய் திகழ்ந்தார்! ஆகிலும், பவுல் அவரை அநேக விஷயங்களுக்குப் புத்தி சொல்லவும் திருத்தவும் அவசியமாயிருந்தது. பவுல் அவருக்கு தந்த 14 புத்திமதிகளைப் பாருங்கள்:

1தீமோத்தேயு நிருபத்தில்:

1. *4:7 : ஒரு தேவ பக்திக்கேதுவான வாழ்க்கைக்கு உன்னை ஒழுங்கு செய்து கொள்!*
2. *4:12: உன் பேச்சிலும், நடக்கையிலும், அன்பிலும், விசுவாசத்திலும், கற்பிலும் நல்ல மாதிரியாயிரு!*

3. *5:21: ஒன்றையும் பட்சபாத ஆவியோடு செய்யாதே!*
4. *5:23: உன் சரீர சுகத்தைக் குறித்து கவனமாயிரு. இதுவும் மிக முக்கியமான புத்திமதி! உலக ஜனங்கள் நீண்ட ஆயுசுடன் வாழ்ந்து, சுகமுடன் ஜீவித்தால், தேவனுடைய ஊழியர்களா யிருக்கும் நாமும் நீண்ட ஆயுசுடன் வாழ்ந்து 'தேவனுடைய மகிமைக்காக' ஆரோக்கியமாய் வாழ்ந்திட ஏன் முடியாது?*
5. *6:5-11: எந்த பொருளாதார சூழ்நிலைக்கும் 'போதுமென்ற' மனதுடன் இரு!* **பண ஆசைக்கு விலகி ஓடு.** *உன்னுடைய பிரசங்கம் உனக்காக பணம் சேர்க்கும் ஆதாயமாய் மாறாதபடி கவனமாய் இரு! (தேவமனிதனாய் வாழ்ந்த தீமோத்தேயுவுக்கும் இந்த புத்திமதி அவசியமாயிருந்தது).*
6. *6:20: வீணான எல்லா உலக சம்பாஷணைகளுக்கும் விலகு! (இதே புத்திமதியை தனது இரண்டாவது நிருபத்திலும் பவுல் தந்துள்ளார்).*

2தீமோத்தேயு நிருபத்தில்:

7. *1:6,7: எப்போதும் தேவனுக்கு* **அனல் கொண்டவனாயிரு!** *ஒருபோதும் கோழையாயிராதே!*
8. *2:3: சுவிசேஷத்திற்காக கஷ்டங்கள் அனுபவி!*
9. *2:4: பூமிக்குரிய விஷயங்களில் அதிக ஈடுபாடு கொள்ளாதே!*
10. *2:7,15: கர்த்தருடைய வார்த்தையைப் புரிந்து கொள்ள, அவரை தீவிரமாய் தேடு! அப்போது மாத்திரமே, மற்றவர்களுக்கு அதை நீ பகுத்து போதித்திட முடியும்.*
11. *2:22:* **பாலிய இச்சைகளுக்கு விலகி ஓடு!**
12. *2:24,25: சாந்தமும், தயவுள்ளவனாயிரு! ஒருபோதும் வாக்குவாதம் செய்யாதே!*
13. *4:2: எல்லா நேரங்களிலும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்திட ஆயத்தமாயிரு! (அதாவது ஒவ்வொரு கூட்டங் களிலும், பகிர்ந்து கொள்ள 'ஏதாவது பக்திவிருத்தியான வார்த்தைகள்' கொண்டவனாயிரு).*
14. *4:2: ஒருவரையும் பிரியப்படுத்தவோ அல்லது கவர்ச்சிக்கவோ ஒருபோதும் நாடாமல், கடிந்து கொண்டு! கண்டனம் பண்ணி! அவர்களுக்குப் புத்திசொல்லு!*

தீமோத்தேயு 25 வருடங்களாய் பவுலோடு சேர்ந்து முழு இருதயத்தோடு தேவனுக்கு ஊழியம் செய்த பிறகும், இந்த 45-வது வயதிலும் இந்த புத்திமதிகளை தீமோத்தேயுவுக்கு பவுல் தந்தார்!

திருத்துதலை ஏற்றுக்கொள்ள தாழ்மை வேண்டும்

ஒரு மூத்த சகோதரனிடமிருந்து, இன்று சில புத்திமதிகளை நீங்கள் பெற்றுக்கொண்டதினிமித்தம் **உங்களுடைய பிரதிபலிப்பு** *என்னவாயிருக்கும்? உங்களை முதிர்ச்சி பெற்றவராக எண்ணி, உங்களுக்கு இதுபோன்ற திருத்துதல்! கடிந்துகொள்ளுதல்! தேவையில்லை என உணருகிறீர்களா? அதுபோன்ற உங்கள் மனநிலையை தேவன் காணும்போது, இனியும் உங்களை திருத்துவதற்கு ஒருவரையும் அனுப்பமாட்டார்! இதனிமித்தம் இழப்பை அடைவது நீங்கள்தான்! முடிவில் உங்களுடைய நிலையானது "நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருந்து" இந்த உங்கள் உண்மை நிலையை அறியாதவர்களாகவே கதியடைய முடியும் (வெளி.3:17).*

"ஒருவன் மூடரின் பாட்டை கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்" (பிரசங்கி.7:5) என்றே வாசிக்கிறோம். 'மூடர்களின் பாடலில்' எதையும் நிதானிக்கத் தெரியாத, முதிர்ச்சி ஏதுமில்லாத சகோதர சகோதரிகளின் **'வீணான முகஸ்துதியே'** *இருக்கும்! இதுபோன்ற 'பாடல்களை' நீங்கள் கேட்டு அவைகளில் மகிழ்ந்து தியானிக்கும்போது, அது உங்களை மயக்கச்செய்து,* **மேட்டிமை எண்ணம் கொண்டவர்களாய் மாற்றி,** *இனியும் உங்களுக்கு எந்த திருத்துதலும் தேவையில்லை என்ற உணர்வை படிப்படியாய் தந்து விடும்!*

தேமா ஒருசமயம் பவுலின் உடன்ஊழியனாய் இருந்தான், (கொலோ.4:14). தீமோத்தேயு பவுலிடமிருந்து திருத்துதலை பெற்றுக்கொண்டதைப் போலவே, தேமாவும் திருத்துதலைப் பெற்றிருந்தான்! (2தீமோ.4:10). ஆனால், அவன் மனம் புண்பட்டு பவுலைவிட்டு 'உலகத்திற்குள்' சென்று விட்டான் (2தீமோ.4:10).

யாக்கோபு 1:21-ம் வசனம் கூறும்போது "நீங்கள் வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளும்போது இரட்சிக்கப்படுவீர்கள்" என்றே கூறுகிறது. இந்த வசனம் அல்லது வார்த்தையில் "திருத்துதலின் வார்த்தையும்" உள்ளடங்கும்!

இஸ்ரவேலர்கள் பின்மாற்றம் அடைந்தபோது, தீர்க்கதரிசிகள் மூலமாய் 'தலைவர்களையே' தேவன் கடிந்து கொண்டார். ஆகவே,

தங்கள் **தலைவர்கள் அக்கறையற்று** *கவனக்குறைவாயிருந்தபோது, இஸ்ரவேல் ஜனங்கள் வழிதப்பிப்போனார்கள். இஸ்ரவேலின்* **தலைவர்கள் 'தெய்வபயத்தை இழந்தபடியால்'** *ஜனங்களும் தெய்வ பயத்தை இழந்தார்கள்!*

தேவனுக்குப் பயந்து திருத்துதலை ஏற்றுக்கொள்ளுங்கள்

"தெய்வபயத்தோடே பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்துங்கள்" என்ற கட்டளையை 2கொரிந்தியர்.7:1-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆகவே, கடந்த வருடத்தைவிட இன்று **நம்முடைய பரிசுத்தம் அதிக பூரணத்திற்குள் வளரவில்லையென்றால்,** *நாம் தேவனுக்குப் போதுமான அளவு பயந்து வாழவில்லை என்றே நிரூபணமாகிறது. நாம் சகோதரர்களின் காவலாளராயிருக்கிறபடியால், இவ்விஷயத்தில் மூப்பர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். ஆகவேதான், ஒவ்வொரு சபையிலும் ஒரு மூப்பருக்கும் அதிகமாக தேவன் நியமனம் செய்கிறார்! "நாம் பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டு போகாதபடி" ஒருவருக்கொருவர் நாள்தோறும் புத்தி சொல்ல வேண்டுமென எபிரெயர்.3:13 கூறுகிறது. இவ்வாறாகவே, நாம் வஞ்சிக்கப்படாமல் இருப்பதற்கு, ஒருவருக்கொருவர் உதவி செய்திட முடியும்.*

ஏசாயா.13:3-ம் வசனத்தில், கர்த்தருடைய ஆவியானவர், இயேசுவை "கர்த்தருக்கு பயப்படுகிற பயத்திற்கு உணர்வுள்ளவரா யிருக்கும்படிச் செய்தார்" என காண்கிறோம்.

> **இவ்வாறு பரிசுத்தாவியானவருக்கு நாம் இடம் கொடுத்தால், நம்மையும் தெய்வ பயத்திற்கு உணர்வுள்ளவர்களாய் மாற்றுவார்! நாம் மெய்யாகவே பரிசுத்தாவியினால் நிறைந்திருந்தால், தெய்வ பயத்தாலும் நிறைந்திருப்போம்!**

தேவன் எப்போதுமே நம் பட்சத்தில் இருக்கிறபடியால் பரிசுத்தாவியால் நாம் நிரப்பப்பட வேண்டும் என்பதற்கு மேலாய், அவரே நம்மைப் பரிசுத்தாவியால் நிறைப்பதற்கு அதிக ஆர்வம் கொண்டுள்ளார்! நமக்கு எவ்வளவு பெலவீனங்கள் இருந்தாலும், நம்மில் யாரைக் கொண்டும் 'பெரிய கிரியையை' தேவன் செய்திட முடியும். நாம் செய்ய வேண்டியதெல்லாம், நம்மை நாமே தாழ்த்தி, அவருடைய முகத்தை தொடர்ச்சியாய் தேடுவதுதான்! ஆகவே, மாம்சத்திற்கு விரோதமாகவும், பிசாசுக்கு விரோதமாகவும் நின்றிட, தேவன் எப்போதும் நம் பட்சத்திலேயே இருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் "ஒருபோதும் சீஷத்துவத்தை முன் வைக்காத" **வேறொரு இயேசுவை** *பிரசங்கித்திடும் காலத்திலேயே நாம்*

இப்போது ஜீவிக்கிறோம்! ஜனங்களை பரிசுத்தமாக்காமல் 'போலி வரங்களை' வழங்கும் **'வேறொரு ஆவியே'** *இன்று ஜனங்கள் பெரும்பாலும் பெற்றிருக்கிறார்கள்! சுகமும், செல்வ செழிப்பும் பிரசங்கிக்கப்படுகிற* **"வேறொரு சுவிசேஷமே"** *இன்று காணப்படுகிறது (2கொரி.11:4). ஆகவே, இதுபோன்ற நாட்களில் வாழும் நாம் உண்மை இயேசுவையும்! உண்மை பரிசுத்தாவியையும்! தேவனுடைய கிருபையாகிய உண்மை சுவிசேஷத்தையுமே! நாம் உயர்த்திட வேண்டும்.*

நம்மை நியாயப்படுத்தாமல் மன்னிப்பு கேட்க வேண்டும்

நம்முடைய ஆவியில் நொறுங்குண்டு ஏழ்மையில்லாதவர்களா யிருந்தால், சில தவறுகள் செய்ததை நாம் அறிந்தவுடன், அதை எல்லா தாழ்மையோடும் மன்னிப்பு கேட்பதற்கு, ஒன்று அக்கறையற்றிருப் போம் அல்லது தயக்கம் உள்ளவர்களாயிருப்போம்!

மனுஷர்களில் பெரும்பாலோனோருக்கு அதிக கஷ்டமான 'பத்து வார்த்தைகள்' உண்டு: **"I am Sorry. That was my mistake. Please forgive me"** *அதாவது, "நான் வருந்துகிறேன். அது என்னுடைய தவறுதான். தயவுசெய்து என்னை மன்னியுங்கள்" என்ற வாக்கியங்களே ஆகும்.*

> **'ஒரு நொறுங்குண்ட ஆவி இல்லையென்றால்' நாம் மன்னிப்பு கேட்கும்போது, நம்மை 'நியாயப்படுத்தவும்' செய்வோம்! ஆனால், ஒரு மன்னிப்பு கேட்பதில் 'தன்னை நியாயப்படுத்தும் யாதொன்று காணப்படாமலும்' அது, மன்னிப்பு கேட்டதாய் கருதப்பட முடியாது!**

நம்முடைய மன்னிப்பு கேட்பதில் "ஒரு சிறிய தன்னை நியாயப்படுத்தும் வாசனை இருந்தாலும்" நாம் இன்னமும் நொறுங்கவில்லை என்பதை நிச்சயத்துக் கொள்ளலாம். தன்னை நியாயப்படுத்துவதை "பரிசேயர்களின் ஓர் அடையாளமாய்" இயேசு கூறினார் (லூக்கா.16:15).

நாம் செய்த ஒன்று, தவறு என உணர்ந்தால், அதை **உடனடியாக** *ஏற்றுக்கொண்டு,* **உடனடியாக** *சரி செய்ய வேண்டும்! இவ்வாறு செய்வதற்கு நொறுங்குண்ட ஒரு மனிதனுக்கு யாதொரு சிரமமும் இருப்பதில்லை. நொறுங்காத ஒரு மனிதன் மாத்திரமே இந்த இரண்டு பகுதியையும் செய்வதற்கு தாமதிப்பான்! அப்படியே அவன் மன்னிப்பு கேட்டாலும், யாரோ சிலரை குற்றம் சாட்டவும் செய்வான்! ஆதாம் பாவம் செய்தபோது, விலக்கப்பட்ட கனியை, தான் புசித்ததை ஒத்துக் கொண்டான். ஆனால், அதை அவன் நியாயப்படுத்தி "தேவன் அவனுக்கு தந்த ஸ்திரீயே, தனக்கு அந்த பழத்தை தந்தாள்" என்றான்.*

இவ்வாறாக, அவன் மனைவியை குற்றம் சாட்டினான்! இதுபோன்ற மனைவியை கொடுத்ததற்காக தேவனையும் குற்றம் சாட்டினான்! எந்த ஒரு பாவத்தையோ அல்லது தவறையோ அறிக்கைச் செய்வதற்கு இது சரியான வழி அல்ல!

தாவீது தன் பாவத்தை சங்கீதம் 51-ல் எவ்வாறு அறிக்கைச் செய்தார் என்பதைப் பாருங்கள். அதில் 'தன்னை நியாயப்படுத்துதல்' சிறிது வாசனைகூட வீசவில்லை.

அதுவே, மெய்யாகவே நொறுங்குண்ட மனிதனின் உண்மை அடையாளம். நீங்கள் யாவருமே 51-ம் சங்கீதம் முழுவதும் தியானித்து, மெய்யான நொறுங்குதலை அறிந்து கொள்ள தேவனைத் தேடுங்கள்! உங்கள் பாவங்களை எவ்வாறு அறிக்கை செய்ய வேண்டும்? என்பதையும் அறிந்துகொள்ள நாடுங்கள்!

மேலும், உங்களை நியாயப்படுத்துவதற்காக 'ஒரு பொய்' சொல்லும் நிலைகூட ஏற்படலாம். அந்த பொய் வெகு சிறிதான அளவில் 'மிகைப்படுத்தி பேசியோ' அல்லது உங்களை 'நல்ல வெளிச்சத்தில் காண்பிக்கும் பொருட்டு' சில நிகழ்ச்சிகளை மறைத்தோ .... இருந்திட முடியும். **ஒரு பொய் சொல்லுவது எளிது. ஆனால் 'ஒரே ஒரு பொய்' சொல்லுவது கடினம்!** *ஏனென்றால் நீங்கள் ஒரு பொய் சொன்னவுடன், அந்த பொய்யை பாதுகாப்பதற்கு அநேக பொய்கள் சொல்ல நேரிடும்! நாம் பொய் சொல்வதை வெறுத்து, உண்மை பேசுதலையே முழு இருதயமாய் நாடவேண்டும். அப்படி இல்லை யென்றால், நம்முடைய அபிஷேகத்தை நாம் இழப்போம்! தேவன் நம் ஜீவியத்தின்மீது கொண்டிருக்கிற தயவுள்ள சித்தத்தையும் இழப்போம்! இதுவே நாம் தாங்கி கொள்ளக்கூடிய எந்த இழப்பையும் விட, ஒரு கொடிய இழப்பாகும்.*

'சில பெருமைகளை' தேவன் நம்மிடத்தில் காணும்போது, அது வெளியரங்கமாக்கப்பட்டு அழிக்கப்படவே விரும்புகிறார். ஆகவே சில சிறிய சம்பவங்களை சம்பவிக்க அனுமதித்து 'அந்த இடறல் மூலம்' நம்மை தடுக்கி விழச்செய்து எச்சரிப்பார்! இதையே எசேக்கியேல்.3:20 வசனத்தில் "நீதிமான் திரும்பும்படி.... நான் அவன் முன் இடறலை வைப்பேன்" என ஆண்டவர் கூறினார்.

நாம் வீழ்ச்சி அடையும்போது, கீழ்கண்ட பரீட்சையின் மூலம் தேவன் நம்மை சோதிப்பார். (1) நம்மை விழச்செய்த 'பெருமையை' உணர்ந்து கொண்டோமா? (2) நம்முடைய பாவங்களை அறிக்கை செய்கிறோமா? (3) அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துகிறோமா? (4)மனுஷருக்கு முன்பானவைகளை சரி செய்கிறோமா? ஆகியவைகளே

யாகும். இவ்வாறு நம்மை நியாயந்தீர்த்து செயல்படத் தொடங்கி விட்டால், நாம் நியாயந்தீர்க்கப்படுவதில்லை! ஆனால் நம்மை நாமே நியாயப்படுத்திக் கொண்டால், 'நொறுங்காத நிலையில் தேங்கியிருந்து' ஒரு நாளில், இந்த உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவோம்.

நம்முடைய தவறுகளை **'நேர்மையாய் ஒத்துக்கொள்ள'** தேவன் விரும்புகிறார்!

ஆனால், அநேக மூப்பர்கள் தங்கள் தவறுகளை நேர்மையாய் ஒத்துக்கொள்வதில்லை. இது பெருமையினால் ஏற்படும் ஓர் சீரியஸான விஷயமாகும். இவ்வித நிலையில், அவருடைய ஊழியத்திற்கு யாதொரு கிருபையும் தரமாட்டார்! ஏனெனில், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்!

தங்களை நியாயந்தீர்த்துக் கொள்பவர்களையும், தங்கள் பிழைகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்கிறவர்களையும் தேவன் அதிகமாய் மதிக்கிறார். ஒரு சகோதரன் என்னிடம் 'ஒரு பொய் சொல்வதை' நான் கண்டுவிட்டால், அல்லது தன்னுடைய பிழைகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்பதற்கு அக்கறையற்று இருப்பதை நான் காணும்போது, அந்த சகோதரன் மீது நான் எப்போதும் நம்பிக்கை இழந்து விடுகிறேன்!

நாம் எல்லோருமே தவறு செய்கிறோம். தேவன் ஒருவர் மாத்திரமே, ஒரு தவறும் ஒருபோதும் செய்ததில்லை. நாம் ஒரு தவறு செய்யும்போது, அதை ஒத்துக்கொண்டு, அதை உடனடியாக தேவனிடமும், நம் தவற்றினால் பாதிக்கப்பட்ட எல்லோரிடமும் அறிக்கை செய்திட வேண்டும்!

இவ்வாறு, நாம் பாதிக்கப்பட்ட சக விசுவாசிகளிடம், அந்த பாவத்தை அறிக்கை செய்வதின் மூலமாகவே, ஒரு மூப்பராயிருக்கும் நம்முடைய தாழ்மை சோதிக்கப்படுகிறது!

மூப்பர்களாயிருக்கும் நாம் யாவரும் ஒரு நல்ல கேள்வியை தங்களிடம் கேட்டுப் பார்த்திட வேண்டும். "நான் ஒரு தவறை அல்லது பாவத்தை, மற்றொரு சகோதரனிடம் நான் எப்போது கடைசியாக மன்னிப்பு கேட்டேன்?"

இவ்வாறு நாம் நேர்மையாக நம்முடைய பாவங்களை தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் அறிக்கைச் செய்தால் மாத்திரமே, "**உங்களுடைய பாவங்களை** நான் ஒருபோதும் நினைவுகூர மாட்டேன்" என தேவன் நம்மிடம் கூறுவார் (எபி.8:12).

நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்: நம்முடைய கடந்த கால தவறுகள் மூலமாய், நாம் 'பாடங்களை' கற்றுக்கொள்ளக்கடவோம்! அப்படி இல்லையென்றால், அந்த பாவங்களை நாம் மீண்டும் செய்வோம்!

தேவன் நம்மை நொறுக்கிட அனுமதிக்க வேண்டும்

ஐந்து அப்பங்களைக் கொண்டு, ஒருமுறை இயேசு திரளான ஜனங்களைப் போஷித்திட பயன்படுத்தினார். அவர் முதலாவதாக அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் செய்தார்! அல்லது ஆசீர்வதித்தார்! ஆனால், அந்த ஐந்து அப்பங்களும் இன்னமும் ஐந்து அப்பங்களாகவே இருந்தது! திரளான ஜனங்கள் போஷிக்கப்படவில்லை! அந்த அப்பங்கள் **'பிட்கப்பட்ட பிறகுதான்' (Broken)**, *திரளான ஜனங்கள் போஷிக்கப்பட்டார்கள். ஆகவே, ஆவியின் 'அபிஷேக ஆசீர்வாதத்தை' பெற்றால் மாத்திரம் போதாது..... நாம் கர்த்தரால் நொறுக்கப்படவும் வேண்டும்! இவ்வாறாக, நம்முடைய முகத்தை புழுதியில் வைத்திருக்கும் நிலையிலிருந்துதான் "தேவனுடைய வல்லமை" நம் மூலமாய் யாதொரு தடையும் இல்லாமல் பாய்ந்தோட முடியும்!*

மோசேயும், ஆரோனும் ஒரே சமயத்தில் தேவனுடைய ஜனத்திற்கு தலைவர்களாய் யாத்திராகமம் 4-ம் அதிகாரத்தில் நியமனம் செய்யப்பட்டார்கள். அதில் **ஆரோன் நன்றாய் பேசத்தகுந்தவர்!** *ஆனால் மோசேயோ, அப்படி இருக்கவில்லை! (யாத்.4:10,14). இருப்பினும் தேவன் மோசேயைத்தான் பயன்படுத்தினார், ஆரோனை அல்ல! ஏனெனில்,* **மோசே ஓர் நொறுங்குண்டவனாயிருந்தான்!** *ஆனால், ஆரோன் அப்படி இல்லை.*

வனாந்திரத்தில் 40 வருட கால 'நொறுங்குதலுக்கு' தேவன் மோசேயை நடத்தினார். தேவன் அவரை தாழ்த்தி, ஒரு அரண்மனையின் அதிபதியாய் இருப்பதிலிருந்து.... ஒரு பாலைவனத்தில் மேய்ப்பனாயிருக்கும் ஸ்தலம் வரை, அவரை தாழ்விடங்களுக்கு கொண்டு சென்றார். அங்கே அவருடைய மாமனாரோடு 40 வருடங்கள் தங்கியிருக்கச் செய்தது மாத்திரமல்லாமல், அங்கே அவருக்காக வேலையும் செய்தார்! இதுவே, அவரை தேவன் நொறுக்குவதற்கு முற்றிலும் போதுமானதாயிருந்தது. இதுபோன்ற நொறுங்கும் அனுபவத்தை ஆரோன் பெறவில்லை. 'இந்த நொறுங்குதலே' இந்த இரண்டு மனிதர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை ஏற்படுத்தியது!

இவர்கள் இருவருக்கும் இடையிலான **வலிமை வித்தியாசத்தை** *யாத்திராகமம் 32-ம் அதிகாரத்தில் காண்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் 'ஒரு நொறுங்குண்ட மனிதன் மோசே' தங்களோடு இருக்கும்வரை கர்த்தரைப் பின்பற்றினார்கள். ஆனால், மோசே அவர்களை விட்டு வெறும் 40 நாட்கள் மாத்திரமே தூரம் சென்றபோது,* **ஆரோன்** *அவர்களின் தற்காலிக தலைவராய் இருந்த சமயத்தில்.... அவர்கள் விக்கிரகாராதனைக்கு வழிவிலகி, 'பொன் கன்றுகுட்டியை' உடனடியாக ஆராதிக்க தொடங்கிவிட்டார்கள். ஆரோன் அழகுபட பேச வல்லமை கொண்டவன்! ஆனால் அவனோ, ஜனங்களை பிரியப்படுத்துகிறவனாய் இருந்தபடியால், தேவனுடைய ஜனத்தை பரிசுத்தமாய் பாதுகாக்க முடியவில்லை!*

"**உடைபடாத மூப்பர்கள்**" *எப்போதும் தங்கள் சொந்த கனத்தை தேடி, தங்கள் சபையிலுள்ள ஜனங்களைப் பிரியப்படுத்த முயற்சிப்பார்கள். ஆகவேதான், அங்குள்ள ஜனங்கள் கர்த்தரை விட்டு தாறுமாறான வழியிலே செல்லுகிறார்கள்!*

"ஒரு நொறுங்குண்ட மனிதன் மோசே" 2-மில்லியன் ஜனங்களை தேவனுடைய வழியில் வைத்து, அந்த வனாந்திரத்தில் 40 வருடங்கள் நடத்த முடிந்தது! இவ்வாறாகவே, சபையின் சரித்திரத்தில் நூற்றாண்டு காலங்களாய் நடந்து வருகிறது.

"நொறுங்குண்ட மனிதர்களையே" கர்த்தருடைய சபையை, அவருடைய வழியில் பாதுகாப்பதற்கு, தேவன் பயன்படுத்தி வருகிறார்!

'நொறுங்குண்ட நிலைக்கு' நடத்தும் அடங்கியிருத்தல்

நம்முடைய மூப்பர்களுக்கு அடங்கியிருக்கும்படிச் செய்து தேவன் நம்மை நொறுக்குகிறார். நான் எழுதிய "ஆவிக்குரிய தலைவன்" புத்தகத்திலிருந்து சில குறிப்புகளை காணுங்கள்:

> "ஒரு தேவமனிதனுக்கு அடங்கியிருப்பது, அநேக மதியீனமானவைகளை நாம் செய்திடாதிருப்பதற்கு நம்மை பாதுகாப்பதுமல்லாமல், அவரிடமிருந்து ஏராளமான ஞானத்தை கற்றுக்கொள்ளவும் வகைச் செய்கிறது. அவர், 'நாம் அறியாத அபாயங்களை' சந்தித்தபடியால், நம்மை அவர் எச்சரித்திட முடியும்! ஆகவே ஆவிக்குரிய அதிகாரத்திற்கு அடங்கியிருப்பது 'பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கு கீழாக அடங்கியிருக்கும்' பாதுகாப்பிற்கு சமமாகும்!
>
> "பேதுரு.5:5-ம் வசனத்தில், வாலிபர்கள் தங்கள் மூப்பர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும், ஏனெனில் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நின்று தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபையைத் தருகிறார்! என வாசிக்கிறோம். இங்குதான்

நாம், தேவனிடமிருந்து 'ஆவிக்குரிய அதிகாரத்தை' பெற்றுக் கொள்வதற்குரிய மிகப்பெரும் இரகசியத்தைக் காண்கிறோம்.

நான் சில அருமையான சகோதரர்களை கண்டிருக்கிறேன். அவர்களுக்கு தேவன் 'ஆவிக்குரிய அதிகாரத்தை' கொடுக்காதிருந்ததற்கு ஒரே காரணம்: தங்கள் முழு ஜீவியத்திலும் ஒருவருக்குக்கூட அவர்கள் அடங்கிவாழ கற்றுக் கொள்ளவில்லை என்பதுதான்! இதனிமித்தமாய் "அவர்களின் வலிமையான சித்தம்" ஒருபோதும் உடைபடவில்லை. உடைபடாத ஒரு மனிதனின் கையில் அதிகாரம் இருப்பது மிகப்பெரும் அபாயமாகும். நீங்கள் முதலாவது நொறுங்குண்டு வாழாமல், அதிகாரத்தை ஜனங்கள் மீது அப்பியாசிக்க முயற்சித்தால், நீங்கள் அவர்களை சீரழிப்பது மாத்திரமல்லாமல், காலா வட்டத்தில் உங்களையே கெடுத்துக் கொள்வீர்கள். ஆகவேதான், 'நம்முடைய பெருமையின் வலிமையை' முதலாவதாக உடைத்த பிறகே, யாரிடத்திலும் தன்னுடைய ஆவிக்குரிய அதிகாரத்தை ஒப்புக்கொடுப்பார்.

"என்னுடைய சொந்த அனுபவத்தை இங்கு நான் சுருக்கமாய் கூறுகிறேன்: என்னுடைய 20 முதல் 30 வயது பத்து வருட ஜீவியத்தில், என் ஊழியத்தில் பொறாமை கொண்ட மூப்பர்களால் பல வருடங்கள் கீழே தள்ளப்பட்டு, பகிரங்கமாய் ஒரு சபையின் மேலான இடங்களில் இருந்து தாழ்த்தப்பட தேவன் அனுமதித்தார்! இந்த எல்லா சமயங்களிலும், என்னுடைய வாயை மூடிக்கொண்டு, யாதொரு கேள்வியும் கேட்காமல் அந்த மூப்பர்களுக்கு அடங்கியிருக்க ஆண்டவர் கூறினார். அவ்வாறு செய்ததினிமித்தம், அவர்களோடு சபையிலிருந்த நாட்களில் ஓர் நல்ல உறவை வைத்துக்கொண்டது மாத்திரமல்லாமல், அவர்களின் சபையை விட்டு வெளியே வந்த பிறகும், அவர்களோடு சீரான உறவை வைத்திருந்தேன். அந்த வருடங்களில் என் எதிர்காலத்திற்குரிய 'தேவ ஊழியம்' என்னதென்று நான் அறியாதிருந்தேன். ஆகிலும், பல வருடங்களாய் தேவன் என்னை உடைபடச்செய்து, அதன்மூலம் 'ஆவிக்குரிய அதிகாரத்தை' நான் செயல்படுத்திட தேவன் என்னை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அப்படி தேவன் என்னை நொறுக்குவதற்குரிய செயல் இன்னமும் முடியவில்லை! கடந்த சில வருடங்களாய், தேவன் என்னை, இதுவரை நான் அனுபவித்திராத புதிய துன்பங்களுக்கு என்னை நடத்தினார்..... மார்க்க தலைவர்களால் பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டு, சுமார் 10 வருடங்கள் நான் வழக்கு மன்றத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டேன். இவை எல்லா நிகழ்ச்சியிலும், என் ஜீவியத்தின் மீது தேவன் ஒரே ஒரு நோக்கத்தையே வைத்திருந்தார்: என்னை "இன்னமும் அதிகமாய் உடைத்து" அதன்மூலம், அதிகமான அவருடைய ஜீவனையும், அவருடைய அதிகாரத்தையும் எனக்கு ஒப்புவிக்கும்படி அவ்வாறு செய்தார்!

"நம்முடைய சுய பெலனையும் பெருமையையும், நம் தலைவர்கள் மூலமாய் தேவன் உடைக்கிறார். கிட்டதட்ட 'எல்லா விசுவாசிகளும்' திருத்துதலை ஏற்றுக்கொள்ள அதிகம் கஷ்டப்படுகிறார்கள். ஓர் இரண்டு வயது பிள்ளைகூட

திருத்துதலை எளிதாய் ஏற்றுக்கொள்வதில்லை.... அதுவும் குறிப்பாய் 'பகிரங்கமாய் திருத்தும்போது' ஏற்றுக்கொள்வதில்லை!

நீங்கள் எப்போது கடைசியாய் பகிரங்கமான திருத்துதலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டீர்கள்? அப்படி ஒரு திருத்துதலை, உங்கள் ஜீவியத்தில் ஒருமுறையாவது ஏற்றுக்கொண்டதுண்டா? அப்படி இல்லையென்றால், "உங்களிடத்தில் ஆவிக்குரிய அதிகாரம் காணப்படவில்லை" என்பதற்கு, யாதொரு வியப்பும் இல்லை.

"நொறுக்கப்படாத ஜனங்கள், தனிமையான ஜனங்களாகவே இருந்திட விரும்புவார்கள்! அவர்கள் யாருக்கும் அடங்கியிருப்பதில்லை. அவர்கள் எங்கே செல்ல விரும்புகிறார்களோ, அங்கே செல்வார்கள்! எதைச் செய்ய விரும்புவார்களோ, அதைச் செய்வார்கள்! அதுபோன்ற உடைபடாத விசுவாசிகள் 'தங்களுக்குள்ளாக கீழ்ப்படிகிறவர்களோடும், தாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்பவர்களோடும் மாத்திரமே' ஊழியம் செய்து கொள்வார்கள். இதுபோன்ற தனித்து நிற்கும் விசுவாசிகளுக்கு தேவன் தம்முடைய ஆவிக்குரிய அதிகாரத்தை ஒருபோதும் தந்திட இயலாது! ஏனெனில், தேவன் "ஒரு சரீரத்தை" கட்டிக்கொண்டிருக்கிறாரே அல்லாமல் "தன் இஷ்டம் கொண்ட தனிமை விசுவாசிகளின் கூட்டத்தை அல்ல!".

17

சாத்தான் மேற்கொள்ளப்பட வேண்டும்

சபையை குறிப்பிட்டு இயேசு பேசத்துவங்கிய ஆரம்பத்திலேயே "சாத்தானின் சத்துவங்களுக்கு விரோதமான ஆவிக்குரிய போர் களத்தை" முன்வைத்தே பேசினார். அவர் கூறும்போது "நான் என்னுடைய சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றே கூறினார் (மத்தேயு.16:18).

அவர் கூறிய வாசகங்களை கவனமாய் பாருங்கள். "சபையின் வாசல்கள்" இருளின் சத்துவத்தால் தாக்கப்படும் என கூறாமல் **"பாதாளத்தின் வாசல்களே" சபையினால் தாக்கப்படும்!** *என இயேசு கூறினார். சபைகளிலுள்ள மூப்பர்கள் அனைவரும் இந்த உண்மையை தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்! சபையானது 'சாத்தானின் தாக்குதலை' எதிர்கொண்டு தன்னை காப்பாற்றிக் கொள்ள அழைக்கப் படவில்லை! மாறாக, 'முதல் கிறிஸ்துவின் சரீரமாய் வந்த' இயேசு செய்ததைப்போலவே* **சாத்தானை எதிர்கொண்டு ஜெயித்திட** *வேண்டும்! இவ்வாறாக, சாத்தானின் சத்துவங்களை அழிப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்!*

சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்

சாத்தான் ஏற்கெனவே சிலுவையில் தோற்கடிக்கப்பட்டவன் என்பதை நாம் முதலாவதாக உறுதிபட அறிந்திருக்கவேண்டும்.

நான்கு விஷயங்கள் சிலுவையில் 'ஜெயமாய்' சம்பவித்தது:

1. *கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் (1கொரி.15:3). ஆகவேதான், நம்முடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படமுடியும்!*
2. *கிறிஸ்து நமக்காக சிலுவையில் சாபமானார் (கலா.3:13). ஆகவே, மூதாதையர் சாபமோ அல்லது வேறு எந்த சாபமோ, இனி ஒருபோதும் நமக்கு வராது!*

3. *கிறிஸ்துவுடனேகூட,* **நம் பழையமனிதன் சிலுவையில் அறையப் பட்டான்** *(ரோமர்.6:6). ஆகவே, நம் எஞ்சிய காலங்கள் முழுவதும் இனி நாம்* **பாவத்தை சேவித்திட அவசியமில்லை.**

4. *சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டு, அவனுடைய ஆயுதங்கள் உரிந்து போடப்பட்டன (கொலோ.2:15, எபி.2:14). ஆகவே இனியும்* **அவனுக்கு நம்மீது எந்த வல்லமையும் இல்லாதபடியால்,** *நாம் ஒருபோதும் அவனுக்கு அஞ்சிடத் தேவையில்லை!*

ஆனால், பெரும்பாலான விசுவாசிகள் 'சாத்தான் தோற்கடிக்கப் பட்ட' இந்த நான்கு சத்தியங்களை அறியாமலே இருக்கிறார்கள்.

*இயேசு கூறும்போது "***சாத்தானாகிய பலவானை** *முந்தி கட்டினாலொழிய, பலவானுடைய வீட்டிற்குள் ஒருவன் புகுந்து அவன் உடைமைகளை எப்படி கொள்ளையிடக்கூடும்? அவ்வாறு கட்டிய பிறகே, அவனுடைய வீட்டை கொள்ளையிட முடியும்! 'இந்த யுத்தத்தில்' எனக்கு உதவியாயிராத யாதொருவனும் எனக்கு விரோதியாயிருக்கிறான்!" (மத்தேயு.12:29,30-*NASB&Living*)என்றார்.*

ஆகவே சாத்தானின் தோல்வியை குறித்த நிச்சயமுடையவர்களாய் நாம் இருக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டு நாட்களில், இஸ்ரவேலர்கள் சாத்தானை எதிர்த்து நிற்க தேவன் அனுமதிக்கவில்லை! ஏனென்றால் அப்போது சாத்தான் தோற்கடிக்கப்படாது இருந்தபடியால், இஸ்ரவேலர்கள் சாத்தானால் மேற்கொள்ளப்பட்டு விடமுடியும்!

'ஆனால் இப்போது' சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டபடியால், சபை சாத்தானை எதிர்த்து நின்று, அவனை தொடர்ச்சியாக ஜெயித்திட முடியும்! நாம் அவனை எதிர்த்து நின்றால், அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான் (யாக்.4:7).

இப்போது நாம் சாத்தானோடு போரிட அவசியமில்லை, அவனை எதிர்த்து நின்றால் போதும்! இதை நம் இருதயத்தில் விசுவாசித்து, "சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்" என நம் வாயினால் அறிக்கை செய்தால், அவனுக்கு நம் மீது எந்த வல்லமையும் இருக்காது! இப்போது நாம், இயேசுவின் நாமத்தில் அவனை எதிர்க்கும்போது, அவன் நம்மை விட்டு ஓடிப்போவான்! இந்த அறிக்கையை நாம் உறுதியாக பற்றிக் கொண்டிருக்கும் பட்சத்தில், சாத்தான் நம்மை சோர்வடையச் செய்யவோ அல்லது நம்மை தோல்வி அடையச் செய்யவோ முடியாது. "இந்த நம்முடைய சாட்சியின் வசனத்தைக் கொண்டே" நாம் சாத்தானை மேற்கொண்டு ஜெயிக்கிறோம்! (வெளி.12:11).

சாத்தானின் தாக்குதலும், பிசாசின் உபதேசங்களும்

சபையை 2000 வருடங்களாக தாக்கிய அனுபவம் சாத்தானுக்கு உண்டு! ஆகவே இப்போது அவன் சில பாடங்களைக் கற்று கொண்டான்:

1. *'வெளியே உள்ள உபத்திரவங்களை வைத்து' சபைக்கு துன்பம் செய்வதை விட 'சபையின் உள்ளிருந்தே தாக்குதல்' தொடுத்து 'துன்பம் செய்வதே' சிறந்தது என சாத்தான் அறிந்திருக்கிறான்! ஏனென்றால், வெளியிலிருந்து தாக்குதல் தொடுத்தால், சபையிலுள்ள எல்லா மக்களும் 'அவனுக்கு விரோதமாய்' இணைந்து நிற்பார்கள்! என்பதை அவன் அறிந்திருக்கிறான்.*
2. *ஒரு தலைவனை 'கற்பு ஒழுக்கக் கேட்டைக் கொண்டு' வீழ்ச்சி அடையச் செய்வதைவிட, ஓர் நல்ல ஜீவியத்திலிருக்கும் அவர் 'கள்ள உபதேசத்தை பிரசங்கிக்கச் செய்து' சபையை தாக்குவதே சிறந்தது என அவன் அறிந்திருக்கிறான். ஏனென்றால், 'கற்பு ஒழுக்கத்தில்' வீழ்ச்சி அடையும் ஒரு தலைவன் மீது விசுவாசிகள் எளிதில் தங்கள் நம்பிக்கையை இழந்து விடுவார்கள்! ஆனால், அதிகபட்சமான விசுவாசிகள் 'பகுத்து உணர' அறியாதபடியால் ஒரு நல்ல ஜீவியம் கொண்ட தலைவனை 'கள்ள உபதேசத்தால்' வஞ்சித்து, ஜனங்களை மிக எளிதாக வழிதவறி போகச்செய்திட முடியும் என்பதை சாத்தான் அறிந்திருக்கிறான்!*
3. *'ஒரு ஒளியின் தூதனாய்' வேதாகமத்தை கோடிட்டு காட்டி, சத்தியத்திற்கு ஒத்தவேஷம் தரிக்கும் 'மாய-அன்பை' பிரசங்கித்தால், ஏராளமான விசுவாசிகளை வழிதவறிப் போகச் செய்ய முடியும் என சாத்தான் அறிந்திருக்கிறான். இதுபோன்ற சாதகம், 'ஒரு இருளின் அதிபதியாய்' வேறொரு மார்க்க புத்தகத்தை கோடிட்டு காட்டி அல்லது 'கசப்பை' நேரடியாய் பிரசங்கித்து வந்தால், தன் நோக்கம் கிட்டுவதில்லை என்பதை அவன் அறிந்திருக்கிறான்!*

அநேக விசுவாசிகள் வேத வாக்கியங்களின் முழு பகுதியையும் அறியாதபடியால், சத்தியத்தின் ஒரு பகுதியை மாத்திரம் காண்பிக்கிறவர்கள் மூலமாக, எளிதில் வழிதவறி போகிறார்கள்! இவ்வாறாகவே சத்தியத்தின் ஒருபகுதியை மாத்திரம் சாத்தான், இயேசுவிடம் கூறியபோது, அவரோ **சத்தியத்தின் மறுபக்கத்தை** *காண்பித்து அவனை மேற்கொண்டார் (மத்தேயு.4:6,7). அநேக கள்ள உபதேசக்காரர்களும், தனிமனித ஆராதனை குழுவினர்களும்* (CULT)

கிறிஸ்தவ உலகில் தோன்றியதற்கு முக்கிய காரணம், அதை ஆரம்பித்து வைத்தவர்கள், சமநிலைப்படுத்தும் சத்தியத்தின் முக்கிய பகுதிகளை புறக்கணித்துவிட்டு.... ஏதாகிலும் ஒரே ஒரு வசனத்தை மிகைப்படுத்தி விடுகிறார்கள்!

1தீமோத்தேயு.4:1-3வசனங்களில் நாம் முன்கூட்டியே எச்சரிக்கப் பட்டது என்னவென்றால் **'பிசாசின் உபதேசங்களை'** *கையாண்டு வஞ்சிக்கும் ஆவிகள், ஏற்கெனவே கிறிஸ்தவத்தில் படையெடுத்து நிற்கிறார்கள்! இவர்களின் உபதேசங்கள், புத்தகங்கள் மூலமாகவும், வலைதளத்தின் மூலமாகவும் தங்கள் உபதேசங்களை பரப்புகிறார்கள்! இவ்விதமான பிசாசின் உபதேசங்கள், "பாலியல்-அருவருப்பு காட்சிகளைவிட" அதிக அபாயம் நிறைந்ததாகும். ஏனெனில் பாலிய-அருவருப்பு காட்சிகளை தீமை என எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளமுடியும்! ஆனால், பிசாசின் உபதேசங்களை, அவ்வளவு எளிதில் தீமை என நாம் அறிந்து கொள்ள இயலாது!*

இந்த பூமியில், ஆரம்ப இரண்டு பிரபல்யமான "பிசாசின் உபதேசங்களைப்" பாருங்கள்:

1. *சாத்தான் ஏவாளிடத்தில் "நீ தேவனுக்கு கீழ்ப்படியாவிட்டாலும் சாகவே சாவதில்லை!" (ஆதி.3:4) என கூறினான். இதன்மூலம் சாத்தான் நிலைவரப்படுத்த விரும்பியது என்னவென்றால் "ஒரு அன்புள்ள தேவன்" தன்னுடைய சிருஷ்டிப்புகளில் யாதொன்றையும், அவர்கள் பாவத்தினிமித்தம் தண்டிக்கப்பட அனுமதிக்கமாட்டார்! என்பதேயாகும். இன்றும்கூட, 'இதே பொய்யை' சாத்தான் பிரபல்யப்படுத்தி "***நீங்கள் பாவம் செய்தாலும் பரவாயில்லை!*** *ஒரு அன்புள்ள தேவன், உங்கள் ஒருவரையாகிலும் நித்திய நரகத்திற்கு அனுப்பிவிட மாட்டார்!" என்பதேயாகும்.*
2. *சாத்தான் ஏவாளிடத்தில் "நீயும் தேவனைப் போல் மாறி, தேவனை விட்டு விட்டு சுதந்திரமாய் இருக்கலாம்" என்று கூறினான். இதன் மூலம் சாத்தான் போதிப்பது என்னவென்றால், பல்லாண்டு களுக்கு முன்பாக சாத்தான் முரட்டாட்டம் செய்ததைப் போலவே "***அதிகாரங்களை எதிர்த்து நின்று முரட்டாட்டம் செய்யலாம்!***" என்பதேயாகும். இன்று அநேக கிறிஸ்தவர்களுடைய குணாதிசயங்கள் இவ்வாறாகவே இருக்கிறது: "அவர்கள் எந்த அதிகாரத்திற்கும் அடங்கியிருப்பதில்லை!". ஆகவேதான், அவர்கள் எளிதில் கள்ள உபதேசங்களுக்கு வழிதப்பிச் செல்கிறார்கள். ஒரு வீட்டில் இருப்பதைப்போலவே, "***பிள்ளை களைப்" பாதுகாப்பதற்கென,*** *சபையிலும் ஆவிக்குரிய பிதாக்களை*

தேவன் நியமனம் செய்துள்ளார். "பிதாக்களின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கும்" யாராயிருந்தாலும் அவர்கள் அபாயத்திலிருக்கிறார்கள்!

ஏவாள், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டதைப் போலவே, இன்றும் அநேகர் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்று, தேவனுடைய சமூகத்தை விட்டு ஏவாள் துரத்தப்பட்டாள்! இன்றும், சாத்தானின் உபதேசங்களை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் தேவனுடைய சமூகத்தை விட்டு நிரந்தரமாய் தள்ளப்படுவார்கள்!

பரலோக தூதர்களின் தலைவனாயிருந்து, பின்பு சாத்தானாய் மாறிய அவன், 'தன்னுடைய இந்த முரட்டாட்ட ஆவியின் ஒரு சிறு தடயம் பெற்ற தூதர்களைக்கூட' தன்னோடு சேர்த்து கொண்டான். அதன்பிறகு, 'அவர்கள் அனைவரையும்' ஒரு நொடிப்பொழுதில் பரலோகத்திலிருந்து தேவன் கீழே தள்ளி விட்டார். இவ்வாறாகவே பரலோகம் சுத்திகரிக்கப்பட்டது.

இன்றும், இதே வழிமுறையை தொடரச்செய்து, சபையில் முரட்டாட்ட ஆவி கொண்டவர்கள், தங்களைப்போன்ற அதே முரட்டாட்ட ஆவி கொண்டவர்களோடு 'ஒன்று சேரும்படி' அனுமதிக்கிறார்! அவர்கள் சபையில் பிளவு ஏற்படுத்த அனுமதிக்கிறார்! இவ்வாறாகவே சபை சுத்திகரிக்கப்படுகிறது. இந்த ஊழியத்திற்கு பெயர் "**லூசிபர் ஊழியம்**". இன்றும் அநேக சபைகளில் இந்த ஊழியம் நடைபெற்று.... தன் சபையை சுத்திகரிப்பதற்கு தேவன் அனுமதிக்கிறார்!

குற்றம் சாட்டுதல்

எந்த விசுவாசிகளையும் விட, 'சாத்தானே' பிரதான குற்றம் சாட்டுகிறவன்! (வெளி.12:10). ஆகிலும், இந்த பணிக்கென, விசுவாசிகளிடையே சில **உடன் ஊழியர்களை** தனக்கென எப்போதும் தேடுகிறான். அதுபோன்ற உடன் ஊழியர்கள் இந்த உலகத்தில் ஏராளமாய் அவனுக்கு கிடைக்கிறார்கள்!

சாத்தான் நம்மிடம் மாத்திரமே பொய் சொல்ல முடியும்! ஆனால், அவன் தேவனுக்கு முன்பாக நின்று குற்றம் சாட்டும்போது, நமக்கு விரோதமான ஒவ்வொரு குற்றச்சாட்டும் உண்மையாய் இருந்திட வேண்டும். ..... ஏனென்றால், தேவனுக்கு முன்பாக பொய்சொல்லிட சாத்தான் அஞ்சுகிறான்! எப்படியிருந்தாலும், தேவனுக்கு முன்பாக உண்மையை கூறினாலும், அவனுடைய ஆவி "**குற்றஞ்சாட்டும் ஆவியேயாகும்!**". இதன் மூலமாய் நாம் கற்று கொள்ள வேண்டிய காரியங்கள் உண்டு! அது என்னவெனில்: ஒரு சகோதரனின்

பாவங்களை அவனுடைய முகத்திற்கு முன்பாக பேசாமல், அவனுக்கு **மறைவாக பின்புறத்தில் பேசினால்,** *என்னதான் நாம் பேசிய அனைத்தும் உண்மையாய் இருந்தாலும்.... 'குற்றஞ்சாட்டும் ஊழியத்தில்' நாம் சாத்தானுக்கு உடன்ஊழியர்களாய் சேர்ந்து விடுவோம்.*

அதுபோன்ற ஒரு ஐக்கியத்தை 'குற்றஞ்சாட்டுகிறவனோடு' நாம் ஒருபோதும் வைத்திருக்கக்கூடாது. ஒரு சகோதரன் பாவம் செய்தால், 'சாந்தமுள்ள ஆவியோடு' அவனைத் தூக்கி எடுக்க முயற்சிக்கும்படி நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (கலா.6:1). நாமோ, அதை நேரடியாகவே அவரிடம் பேசவேண்டும். அதற்கு அவர் செவி கொடாமற்போனால், அந்த நபரைக் குறித்து மூப்பர்களிடம் சொல்ல வேண்டும். அந்த மூப்பருக்கும் அவர் செவிகொடாமற்போனால், ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிய மனமற்ற அவருடைய நிலை, முழு சபைக்கும் அறிவிக்கப்படவேண்டும். பின்பு, 'அந்த நபர்' சபையிலிருந்து நீக்கப்படவேண்டும். இந்த வழிமுறை, ஆண்டவராகிய இயேசுவினால் மிகத்தெளிவாக மத்தேயு.18:15-20 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து இயேசு கூறுகையில், இவ்வாறாகவே சபையில் எழும்பும் **சாத்தானின் குற்றஞ்சாட்டும் கிரியைகளை நாம் கட்டி வைக்க வேண்டும்!** *என கூறினார்.*

ஒரு மூப்பருக்கு விரோதமான குற்றச்சாட்டை, இரண்டு அல்லது மூன்று **'நம்பகமிக்க ஜனங்கள்'** *எடுத்து வைக்கும்போது, அதையும் சீரியஸாய் கண்காணிக்கவேண்டும் (1தீமோ.5:19). அந்த விஷயம், முதிர்ச்சி பெற்ற மூப்பர்களால் கவனமாய் விசாரிக்கப்படவேண்டும். பழைய உடன்படிக்கையின் கீழ், தேவன் மிகத்தெளிவாக கட்டளை யிட்டு "நீ நன்றாய் விசாரித்து, கேட்டு ஆராய்ந்து, அப்படிப்பட்ட அருவருப்பான காரியம் உன் நடுவே நடந்தது மெய்யும் நிச்சயமும் என்று காண்பாயானால்" (உபா.13:14)..... இவ்வாறு ஒரு மூப்பர் தன்னுடைய பாவத்தில் தொடர்ச்சியாய் ஜீவிப்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சபையில் எல்லோருக்கும் முன்பாக, ஒரு மூத்த மூப்பரால் பகிரங்கமாய் கடிந்து கொள்ளப்படவேண்டும்! (1தீமோ.5:20).*

ஒரு மூத்த மூப்பர், 'ஒரு பொய்யான மனஉருக்க உணர்வு கொண்டவராய்' அந்த சகோதரனை பகிரங்கமாய் கடிந்து கொள்ள மனதில்லாதிருந்தால்.... பரிசுத்தாவியானவரைவிட, தானே சிறந்த மேன்மை எண்ணம் கொண்டவர் என்பதைக் காட்டவே விரும்புகிறார்! நாம் தாழ்மையில் நடந்து கொண்டு, தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறதோ அதற்கு கீழ்ப்படிவதே உத்தமம்!

பிறரால் பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இரண்டு வாக்குதத்தங்கள் அருளப்பட்டுள்ளது:

"அவர்களுடைய பொய்யுரைகள் என்னை பாதித்திடமுடியாது! ஏனெனில் சர்வவல்லவராகிய கர்த்தர் எனக்கு உதவியாயிருக்கிறார். அவர்களுடைய தீங்கை தாங்கிக் கொள்ளும்படியாக என் முகத்தை கற்பாறையைப்போலாக்கினேன்! தேவன் என் சமீபமாய் இருக்கிற படியால் நான் வெட்கப்பட்டுப் போவதில்லை. **நான் குற்றம் இல்லாதவன் என்பதை தேவனே நிரூபிப்பார்.** *எனக்கு விரோதமாய் வழக்காட தைரியம் கொண்டவர்கள் யார்? எனக்கு எதிராளி, என்னோடு வழக்கு மன்றத்திற்கு வரட்டும்! அவன் தன்னுடைய குற்றஞ்சாட்டுதலைக் கூறட்டும்! சர்வவல்ல கர்த்தர் எனக்குத் துணை செய்வார். என்னுடைய குற்றத்தை நிரூபிப்பவன் யார்? என்னை குற்றஞ்சாட்டுகிறவர்கள் அனைவரும் மறைந்து போவார்கள்! பொட்டு பூச்சி அரித்த வஸ்திரத்தைப்போலாவார்கள்.... யாரையெல்லாம் நீங்கள் அழிக்க வகை தேடினீர்களோ, நீங்கள் அனைவரும் உங்கள் சொந்த தந்திர சதிகளில் அழிந்து போவீர்கள்! இதை, கர்த்தரே சம்பவிக்கும்படி செய்வார்" (ஏசாயா.50:7-11* Good News Bible*) எனவும்,*

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்த்திடாது! உனக்கு விரோதமாய் வழக்கு மன்றத்தில் எழும்பும் **ஒவ்வொரு பொய்யிலும், உனக்கு நீதி உண்டாகும்!** *இது கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு தரப்பட்ட சுதந்திரம்! இதுவே நான் உனக்குத் தரும் ஆசீர்வாதம்! என கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா.54:17-*Living*) எனவும் வாசிக்கிறோம்.*

தம்முடைய ஜனத்தை சாத்தான் சோதிக்கும்படி தேவன் அனுமதிக்கிறார்! அதன் மூலமாய், தேவனுடைய நாமத்தை தொழுது கொள்ளுவோரின் 'உத்தம இருதயத்தை' எல்லோரும் காணும்படிச் செய்கிறார்!

> இவ்வாறு, நாம் அநேக பரீட்சிக்கும் சூழ்நிலைகளைக் கடந்து வரும்படி ஆண்டவர் அனுமதிப்பார். அதன்மூலமாய் பொய்யும் வெறுப்பும் நிறைந்த இந்த உலகில், நாமோ சத்தியத்திலும், அன்பிலும் முடிவுவரை நிலைத்திருக்கிறோமா? என நம்மை அவர் சோதித்து அறிந்து கொள்ளுவார்.

இதன்மூலமாய், காண்கின்ற கண்ணுடையவர்கள், நன்றாய் பகுத்தறிந்து, யார் தேவபக்தியுள்ளவர்கள்? யார் தேவபக்தியற்றவர்கள்? யார் நன்மையை முன்னோக்கிச் சென்றவர்கள்? யார் பொறாமையையும் வெறுப்பையும் முன் வைத்து சென்றவர்கள்? என்பதை விளங்கிக்

கொள்வார்கள். ஆகிலும் சிலர் 'பரிசேயர்களைப்போல்' தொடர்ந்து குருடர்களாகவும், யாதொரு பகுத்தறிவு அற்றவர்களாகவும் கடைசி வரையும் அப்படியே இருப்பார்கள். **ஆம், அந்த அக்கினியில் சுத்த பொன் இன்னும் அதிக சுத்தமாகும்! 'வைக்கோல்' சாம்பலாய் தூர்ந்து போகும்!**

இயேசு சாத்தானை ஜெயித்தார்

சிலுவையில் இயேசு "எல்லாம் முடிந்தது" என கூறியபோது, பிசாசின் இராஜ்ஜியமே முடிவடைந்து விட்டது! ஆகவேதான், நாம் இன்று எதிர்த்து நிற்கும் சத்துரு 'ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டவன்'.

நாம் எப்போதெல்லாம், நம் ஜீவியத்தில் துன்பங்களை சந்திக்கிறோமோ, 'இந்த உண்மையை' நம் மனதில் எப்போதும் வைத்திருக்கவேண்டும். ஒரு கடினமான சூழ்நிலையை உங்கள் வீட்டில் சந்திக்கும்போது அல்லது பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது அல்லது உங்கள் தொழிற்சாலையில் கஷ்டங்களை சந்திக்கும் போது அல்லது கஷ்டமான ஒரு பிள்ளையோடு இருக்கும் போது..... நீங்கள் நினைவுகூர வேண்டியதெல்லாம் **'சாத்தானுடைய வல்லமை' சிலுவையில் முடிந்து விட்டது!** என்பதுதான். உங்களுக்கு எதிராக எவ்வளவு கடின சூழ்நிலையை அவன் ஏற்படுத்தினாலும் 'அவன் தோற்கடிக்கப்பட்டபடியால்' உங்களுக்கு விரோதமான இந்த யுத்தத்தில், அவன் ஒருக்காலும் ஜெயித்திட முடியாது! ஆகவே, "எல்லாம் முடிந்தது" என்ற இயேசுவின் இந்த வார்த்தைகளை எப்போதும் நினைவுகூர்ந்து, சாத்தானிடம் திரும்பி 'நீ தோற்கடிக்கப்பட்டவன், உனக்கு என்னிடம் யாதொரு வல்லமையும் இல்லை!' என கூறுங்கள்.

ஒருசமயம் இரட்சிக்கப்படாத ஒரு சகோதரியை ஜெபத்திற்கென்று எங்கள் வீட்டிற்கு சிலர் அழைத்து வந்தார்கள். நானும் என் மனைவியும் அந்த சகோதரியிடம் பேசினோம். அவ்வாறு பேசிய பிறகு ஜெபம் செய்யத் தொடங்கினோம். அந்த சகோதரியைப் பார்த்து, அந்த ஜெபவேளையில், சாத்தானிடம் சொல்லும்படி கூறி "சாத்தானே, இனி நான் உன்னுடையவள் அல்ல. இயேசுகிறிஸ்து உன்னை சிலுவையில் தோற்கடித்து விட்டார்!" என்று சொல்லும்படி சொன்னேன். அந்தப் பெண் தன் குரலை உடனே மாற்றி "நான் சிலுவையில் தோற்கடிக்கப்படவில்லை!" என்றாள். அப்போதுதான், அவளுக்குள் ஒரு பிசாசு குடிகொண்டிருப்பதை நான் உணர்ந்தேன். ஆகவே, அந்த பிசாசிடம் மெதுவான குரலில், ஆனால் மிகுந்த அதிகாரத்தோடு "பிசாசே, நீ ஒரு பொய்யன்! நீ மெய்யாகவே சிலுவையில்

தோற்கடிக்கப்பட்டாய்! இயேசுவின் நாமத்தில் இப்போதே இவளைவிட்டு வெளியே செல்" என கட்டளையிட்டேன். அந்த பிசாசு அவளைவிட்டு உடனே வெளியே போய் விட்டது. தெளிந்த புத்தி அடைந்த அந்த சகோதரி, இப்போது மிகுந்த தைரியத்தோடு சாத்தானைப் பார்த்து "இயேசு கிறிஸ்து உன்னை சிலுவையின் மேல் ஜெயித்து விட்டார்!" என அவளால், கூற முடிந்தது.

உங்கள் மனசாட்சி சுத்தமாயிருந்து, உங்களுக்கு விசுவாசம் இருக்குமென்றால் ஒரு பிசாசை துரத்துவதற்கு உங்கள் சத்தத்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை! அவனை விரட்டுவதற்கு ஒரு முறைக்கு மேலாக கூறவேண்டியதுமில்லை! மத்தேயு.8:16 கூறுகிறபடி "இயேசு அசுத்தாவிகளை தமது ஒரு வார்த்தையினாலே துரத்தினார்" என்றே வாசிக்கிறோம்! அதை அவர் அமைதியாகவே செய்தார். இப்போது அவருடைய நாமத்தில், நாமும் அவ்வாறே செய்திட முடியும். அந்த நாளில் ஒரு பாடத்தை நான் கற்றுக்கொண்டேன். **'சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்' என்ற அறிக்கையை சாத்தான் விரும்பவில்லை, என்பதுதான்!**

எவ்வளவுதான் உங்கள் துன்பங்கள் கடினமும், நெடிதுமா யிருந்தாலும், மனம் தளர்ந்து போகாதிருங்கள்! நீங்கள் நிச்சயம், சாத்தானின் எல்லா தாக்குதல்களையும் மேற்கொண்டிட முடியும். அவனை எதிர்ப்பதில் உறுதியாயிருங்கள், அந்த எதிர்ப்பை சிறிதும் விட்டு விடாதிருங்கள்! தேவன் உங்களை நிச்சயமாய் ஜெயத்திற்குள் நடத்துவார்! தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பவர்கள், ஒருபோதும் வெட்கப்பட்டு தோற்றுப்போனதில்லை! ஆகவே ஒருக்காலும் அதைரியம் அடையாதிருங்கள். "சாத்தானுக்கு எதிராக, தேவன் எப்போதும் நம் பட்சத்தில் இருக்கிறார்!". ஆகவே, அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்!

பயத்திலிருந்து விடுதலை

'பயத்திற்கும்' சாத்தான் அதிபதியாயிருக்கிறான்! இயேசு எவ்வாறு பாவத்திற்கு எதிராய் இருக்கிறாரோ 'அதே போலவே' பயத்தையும் அவர் எதிர்த்து நிற்கிறார்.

> அநேக சமயங்களில், அவர் ஜனங்களைப் பார்த்து "பாவம் செய்யாதிருங்கள்! என எவ்வாறு கூறினாரோ, அது போலவே பயப்படாதிருங்கள்!" எனவும் கூறினார். ஜனங்கள் பாவத்தில் ஜீவித்து கொண்டிருப்பதைப் அவர் எதிர்த்திருந்ததைப் போலவே பயத்தில் ஜீவித்து கொண்டிருக்கும் ஜனங்களையும் அவர் எதிர்த்து நிற்கிறார்!

நாம் கர்த்தரை நம்பி இருக்கிறபடியால், நாம் ஒருபோதும் பயந்திடத் தேவையில்லை. நாம் எப்போதாவது வழுகி போய், ஏதோ சிலவற்றைக் குறித்து பயந்தோ அல்லது கவலையோ கொண்டிருந்தால், அதிலிருந்து துரிதமாய் நாம் வெளியே வந்து, அந்த பயத்தை தேவனிடம் அறிக்கைச் செய்து, "அவர் நம்மை விசாரிப்பார்" என்ற விசுவாசத்திற்கு திரும்பி விடவேண்டும்.

"தேவனுடைய ஊழியத்தை" பல்வேறு வழிகளில் சாத்தான் தாக்குகிறான். ஆனால் தேவனோ, தம்முடைய பிள்ளைகளின் ஜெபங்களுக்குப் பதில் தருகிறார். இயேசு ஒருமுறை கூறும்போது, சில வகையான பிசாசுகளை **'ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி'** துரத்திட இயலாது, என்று கூறினார். அதன் பொருள் என்னவென்றால், 'நாம் உபவாசித்து ஜெபிக்காமல்' சில பிசாசுகள் அங்கேயே தங்கியிருந்து 'தேவனுடைய ஊழியத்திற்கு இடையூறு செய்திட' முடியும்! இந்த பூமியில் தேவன் தன்னுடைய பணிகளை, 'கிறிஸ்துவின் சரீரமாகிய' நம்மைச் சார்ந்திருக்கும்படியே செய்திருக்கிறார். அது நமக்களிக்கப்பட்ட மிகப்பெரும் சிலாக்கியம்.... மிகப் பெரும் பொறுப்பாகும்! ஆண்டவரும் நம்மிடம், "இருளின் அதிகாரங்கள் சபையை மேற்கொள்ள இயலாது" எனவும் வாக்குரைத்துள்ளார்!

இந்த உலகத்தில், ஏராளமான கிறிஸ்துவுக்கு விரோதமான சத்துவங்கள் செயல்படுகின்றன. ஆனால் நமக்கோ தேவன், பயத்தின் ஆவியைத் தரவில்லை! அவரை கனம் செய்கிற யாவரும், தேவனால் கனம் செய்யப்படுவார்கள். எனவே, எந்த சமயத்திலும் நாம் 'பயத்தினால்' அசைக்கப்படுவதற்கு இடம் தந்துவிடக்கூடாது. அன்று தாவீது சவுலின் ஆயுதங்களைப் பயன்படுத்த மறுத்ததைப்போலவே, இதுபோன்ற நேரங்களில் நாமும் மனுஷர்களையோ அல்லது மாம்ச புயபலத்தையோ நமக்கு உதவியாக நாடி சார்ந்து கொள்ளக் கூடாது. தாவீது கோலியாத்தை, ஆவிக்குரிய பட்டயமாகிய "கர்த்தருடைய நாமத்தைக்" கொண்டு யுத்தம் செய்தான். நம்முடைய ஆயுதமும், அதுபோலவே ஆவிக்குரிய ஆயுதமாய் இருக்க வேண்டும் (2கொரி.10:4). அப்படியிருந்தால், நாம் நிச்சயமாய், எப்போதும் ஜெயம் பொறுவோம்!

இயேசு கூறும்போது, இந்த பொல்லாத உலகத்திற்குள் நம்மை "ஆடுகளை ஓநாய்களுக்குள் அனுப்புவதைப்போலவே" அனுப்பு வதாகக் கூறினார். அதே வசனத்தில் மேலும் கூறும்போது "சர்ப்பங் களைப்போல் வினாவுள்ளவர்களாயிருங்கள்" (மத்.10:16) எனவும் கூறினார்.

நம் ஆண்டவர் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவர்! நாம் சகல ஜாதிகளையும் சீஷர்களாக்கும்படி புறப்பட்டு போனால், "அந்த அதிகாரத்தை" நமக்காகவே 'எல்லா நேரங்களிலும்' செயல்படுத்துவேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறார் (மத்.28:19,20). அவர் நம்மோடு இருந்தால், அதுபோதும்! அவர் நம் பட்சத்தில் இருக்கும்போது, எதிர்ப்புகளை..... முழு உலகத்திலிருந்து வரும் எதிர்ப்புகளையும் நாம் எதிர்கொள்ள முடியும்!

இயேசு கூறும்போது "உங்களுக்குள் ஆத்திரமடைந்து கலங்க ஆரம்பிப்பதை தொடர்ந்து அனுமதியாமல் உடனே நிறுத்துங்கள்! **சோர்வடைந்து, கோழையாய் நிலையற்றுப்போக** *உங்களை அனுமதியா திருங்கள்!!" என கூறினார் (யோவான்.14:27 -* Amplified Bible*).*

தேவனுடைய வார்த்தை நமக்கு கட்டளையிட்டு கூறுவது என்னவெனில் "மற்ற திரளான ஜனங்கள் செய்வதுபோல் 'பீதி' அடையாதீர்கள்! சேனைகளின் கர்த்தராகிய ஒருவருக்கே தவிர, யாதொருவருக்கும் அல்லது யாதொன்றிற்கும் பயப்படாதிருங்கள்! **நீங்கள் தேவனுக்குப் பயந்திருந்தால் 'எதற்குமே' பயந்திடத் தேவையில்லை!** *அவரே உங்கள் பாதுகாப்பாய் இருப்பார்" (ஏசா.8:12 -* Living Bible*).*

கர்த்தர் சொல்கிறார் "நான் உன்னை விட்டு போய்விடமாட்டேன்! ஒருபோதும் கைவிடமாட்டேன்" என கூறியபடியால் நாம் மிகுந்த தைரியம் கொண்டு "கர்த்தர் எனக்கு உதவி செய்வார்! நான் பயப்பட மாட்டேன்! மனுஷன் யாராயிருந்தாலும், அவன் எனக்கு என்ன செய்திட முடியும்?". மேலும், இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறாரே! (எபி.13:5-8).

'பயத்தின்' தொடர்பில் இரண்டு காரியங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும்:

1. *நாம் எதையும்* **தேவன்மீது கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில்** *எப்போதும் முடிவெடுக்க வேண்டுமே அல்லாமல், பயத்தின் அடிப்படையில் எந்த தீர்மானத்தையும் ஒருபோதும் எடுக்கக் கூடாது.*
2. *பயம் சாத்தானுடைய ஆயுதம்! ஆகவே யாதொரு வகையில் பிறரை பயமுறுத்தி அல்லது மிரட்ட முயற்சிக்கிறவர்கள்..... மெய்யாகவே, (அவர்கள் அறியாமலே) சாத்தானோடு ஐக்கியமா யிருக்கிறார்கள். ஆகவே, 'அச்சுறுத்தும் ஆயுதத்தை' நாம் யார் மீதும் ஒருக்காலும் பயன்படுத்தக்கூடாது! (எபே.6:10; 2தீமோ.1:7).*

"மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமைகளை" தேவன் பயன்படுத்தி, புதிய வெளிப்பாடுகளை தம்முடைய வார்த்தையில் தருவதற்கும், அவருடைய கிருபையில் புதிய அனுபவங்களை பெறுவதற்கும் செய்கிறார்! இத்தனை பெரிய பாக்கியத்தை 'பிறரின் தீமை நமக்கு சம்பவிக்காமல்' நாம் பெற்றிருக்க முடியாது.

தேவனுடைய வார்த்தை கூறுவது என்னவெனில் "நாம் மனுஷர் களோடு போராடாமல், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிக்குரிய சேனைகளோடும், அதிகாரங்களோடும், இருளின் பிரபஞ்ச வல்லமைகளோடும் போராடுகிறோம்!" (எபே.6:12 - TEV*). இந்த வசனத்திலிருந்து கர்த்தர் எனக்கு கற்றுக்கொடுத்தது என்னவெனில் "நான் சாத்தானுடைய அதிகாரங்களை வல்லமையோடு போராட விரும்புகிறவனாயிருந்தால், எந்த மனுஷரோடும் நாம் ஒருபோதும் போராடக்கூடாது" என்ற பாடமேயாகும்.*

பழைய உடன்படிக்கையின் கீழ், இஸ்ரவேலர்கள் 'மனுஷர் களோடு' போராடினார்கள். ஆனால், புதிய உடன்படிக்கையில், நாம் மனுஷர்களோடு ஒருபோதும் போராடக்கூடாது! ஆனால், சாத்தானோடும், அவனுடைய பிசாசுகளோடும் மாத்திரமே போராட வேண்டும்! இதை இயேசு தன்னுடைய சொந்த மாதிரியை வைத்தே நமக்கு காண்பித்திருக்கிறார். அநேக விசுவாசிகள், ஏன் சாத்தானை மேற்கொள்ள முடியவில்லை? ஏனென்றால், அவர்கள் தங்களுடைய மனைவியரோடும், தங்கள் கணவன்மாரோடும், தங்கள் அயலகத்தாரோடும், மற்ற விசுவாசிகளோடும் போராடுகிறார்கள், என்பதுதான்!

*இனிவரும் எதிர்காலத்திலாவது "***ஒரு மனிதனிடமும் நான் ஒருபோதும் சண்டையிட மாட்டேன்!***" என தீர்மானம் எடுங்கள்! அப்படிச் செய்தால், சாத்தானோடு நீங்கள் மேற்கொள்ளும் யுத்தம் மிகுந்த வல்லமை கொண்டதாயிருக்கும்!*

நாம் தேவனுடைய வழிகளை அப்பழுக்கில்லாமல் பின்பற்றினால், நாம் சாத்தானையும், அவனுடைய தந்திரங்களையும், எல்லா நேரங்களிலும் தொடர்ச்சியாக ஜெயித்து வாழ்வோம்!

18

உபத்திரவம் வரும் வேளையில்?

கிறிஸ்தவத்தின் முதலாவது 300 ஆண்டுகள், கிட்டத்தட்ட எல்லா கிறிஸ்தவர்களுமே 'கிறிஸ்தவரல்லாத ஆட்சியின் கீழ்' வாழ்ந்து, துன்புறுத்தப்பட்டு, அவர்களில் அநேகர் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள். தேவன் தம்முடைய அளவில்லாத ஞானத்தின்படி, தம்முடைய பிள்ளைகள், ஜனங்களால் துன்புறுத்தப்படும்படி அனுமதித்து, அவரை மகிமைப்படுத்தச் செய்தார்! இன்றும், தன்னுடைய மிகச்சிறந்த பிள்ளைகளை **'துன்புறுத்தும் அரசாங்கத்தின் கீழ்'** வாழும்படி அனுமதித்துள்ளார்!

சபை உபத்திரவத்தை சந்திக்கும்

உபத்திரவத்தின் கீழ்தான், சபை எப்போதும் பெருகி உள்ளது! எங்கெல்லாம் எளிதும், சொகுசும், பொருளாதார ஐசுவரியமும் சபை அனுபவித்ததோ, அங்கெல்லாம் சபை அதிகபட்சத்தில் உலகத்திற்குரியதாய் மாறி விட்டது. நாம் உலகத்திலிருக்கும் காலம் வரை, உபத்திரவத்தையும், துன்புறுத்தலையும், பரீட்சைகளையும் சந்திப்போம்.

> ஆகவே, இந்த உலகத்தின் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், ஒரு சொகுசான ஜீவியத்தை நம்முடைய வேலை ஸ்தலத்திலோ அல்லது நம் தனிப்பட்ட ஜீவியத்திலோ எதிர்பார்த்திட முடியாது.

மேலும், பொருளாதார கஷ்டத்தின் நாட்களும் வரும்! ஆகவே, இப்போதிருந்தே மிக **எளிமையான வாழ்க்கை வாழ்ந்திட** நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆடம்பர ஜீவியத்திலிருப்பவர்கள், வரப்போகும் அந்த நாட்களில் அதிக கஷ்டப்படுவார்கள். விசுவாசிகள், எதிர்காலத்திற்கென்று கொஞ்ச பணத்தை சேமித்து வைப்பதற்கு ஞானமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். அப்போதுதான், நாம் பிறரை சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகிலும் நம்முடைய நம்பிக்கையை 'நம் சேமிப்புகளில் வைத்திடாமல்' ஆண்டவர் மீது மாத்திரமே வைத்திருக்க வேண்டும்!

தேவன் வைராக்கியமுள்ள தேவனாய் இருக்கிறபடியால், சிருஷ்டிக்கப்பட்ட யாதொன்றின் மீதும் நம்முடைய நம்பிக்கையை வைத்திட அவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்.

இந்த உலகத்தின் 'பொருளாதார கோட்பாடுகளை' தேவன் அசைப்பார்! சிருஷ்டிக்கப்பட்டவைகளின் மீது நம்பிக்கை வைத்திருந்தவர்கள், அசைக்கப்பட்டு போவார்கள். இயேசு கூறியதைப் போல், சகோதரர்கள் தங்கள் சகோதரர்களை காட்டிக் கொடுப்பார்கள்! நம்முடைய வீட்டாரே நமக்கு எதிரியாய் மாறுவார்கள்! (மத்.10:21). அந்நாட்களில், அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும், விசுவாசிகளுக்கு தீவிரமான உபத்திரவங்கள் ஏற்படும்! ஆகிலும், அவை அனைத்தும் நம்மை சுத்திகரித்து **'சிறந்த கிறிஸ்தவர்களாய்'** *நம்மை மாற்றும்!*

1பேதுரு.3:13 கூறுகிறபடி **'நாம் எப்போதும் நன்மை செய்ய நாடுகிறபடியால்' ஒருவரும் நமக்கு தீங்கு செய்ய இயலாது!** *ஆகவே தேவனுடைய கிருபையைக் கொண்டு "எல்லோருக்கும் நன்மை செய்திடவே" நாம் தீர்மானம் எடுத்துக் கொள்ளவேண்டும்! நம்மை பகைக்கிறவர்களை அன்புகூர வேண்டும்! நம்மை சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்! நமக்கு தீங்கு செய்கிறவர்களை மன்னித்து ஜெபிக்கவேண்டும்! அப்படி இருந்தால், நமக்கு ஒருவரும் தீங்கு செய்திட முடியாது. சாத்தானும் அவனுடைய கைகூலிகளும் நம்மை ஏமாற்றலாம், துன்புறுத்தலாம், இடையூறு செய்யலாம், கொள்ளையாடலாம், காயப்படுத்தலாம், சிறையிடலாம், நம் சரீரத்தை கொலையும் செய்யலாம்! ஆனால் இவை யாதொன்றும் "***ஆவிக்குரிய பிரகாரமாய்***" நமக்கு ஒருபோதும் தீங்கு செய்திட முடியாது!*

கர்த்தரே நம்மை எப்போதும் தாங்குவார்

கர்த்தர் நம்மை விட்டு ஒருபோதும் விலகுவதில்லை. நம்மை ஒருபோதும் கைவிடுவதுமில்லை! உபத்திரவத்தின் நேரத்தில் நம் கால் சறுக்கி தோல்வி அடைந்தால் கூட **'உடனே நம்மை தாழ்த்தி விட்டால்'** *நம்மை விட்டு அவர் விலகமாட்டார்! நொறுங்குண்ட இருதயம் கொண்டோருக்கு கர்த்தர் சமீபமாய் இருக்கிறார். "நாம் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை (மரணத்திற்கு ஏதுவாயிருப்பதில்லை). ஏனெனில் கர்த்தர் தமது கையினால் நம்மைத் தாங்குகிறார்" (சங்.37:24-* Living*)*

தேவனுடைய சர்வவல்ல ஆளுகை மகா பெரியதும், முழுமையுமாயிருக்கிறது! மற்றவர்கள் நமக்குச் செய்கின்ற தீமைகளை, நம்முடைய

நன்மைக்காகவே செய்து முடிப்பார்! மாத்திரமல்ல 'நம்முடைய சொந்த தோல்விகளையும்' நம் நன்மைக்கு ஏதுவாகவே செய்து முடிப்பார்! இவ்வாறு 'சகலமும்' நம்முடைய மிகச்சிறந்த நன்மைக்கு ஏதுவாகவே செய்து முடிப்பார் (ரோமர்.8:28). இவ்வாறாக ஒவ்வொரு தீமையிலிருந்தும் கர்த்தர் நம்மை விடுதலையாக்கி ஜெயமாய் கொண்டு நிறுத்துவார்! நம்முடைய முழு நம்பிக்கையும் "முடிவுவரை நம்மை காத்திட வல்லவர் மீதே அல்லாமல்" நம் சொந்த பெலனைச் சார்ந்து முடிவு வரை நிலைத்து நிற்பது அல்ல! ஆகவேதான், நம்முடைய **எதிர்காலத்தை 'யாதொரு பயமும் இல்லாமல்'** *மிகுந்த நம்பிக்கையோடு காண்கிறோம்!*

வேறெதையும் காணாமல் "இயேசுவை நோக்கிப் பார்த்தே" நம்முடைய பந்தய ஓட்டத்தை ஓடுகிறோம்! (எபி.12:2). அதாவது நம்முடைய **கடந்த கால** *தோல்விகளைத் திரும்பிப் பார்க்காமல், நம்முடைய* **நிகழ்கால** *பெலவீனங்களை காணாமல், நம்முடைய* **எதிர்கால** *பயத்தை முன்வைக்காமல் ஓடவேண்டும், என்பதுதான்! கர்த்தரோ, நாம் எவ்வளவு பெலவீனர்களாயிருந்தாலும், நாம் எவ்வளவுதான் கடந்த காலத்தில் தோல்வி அடைந்திருந்தாலும், நம்மை ஜெயங்கொள்ளுகிறவராய் மாற்றுவார். இனிவரும் நாட்களில், தங்கள் விசுவாசத்திற்காக உபத்திரவங்களை சந்திக்கும் உலகிலுள்ள எல்லா கிறிஸ்தவர்களையும் நாம் ஆயத்தம் செய்யவேண்டியதாயிருக்கிறது! அந்த நாட்களுக்கென்று, நான்கு கட்டளைகளை ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிறார்:*

1."சர்ப்பங்களைப்போல் வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருங்கள்" *(மத்.10:16).*

நாம் சாட்சி பகர்வதில் மதியீனமாயில்லாமல், வினாவுள்ள வர்களாய் அல்லது ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் வாழும் ஸ்தலம், மற்றும் வேலை செய்யும் ஸ்தலம் ஆகிய இடத்தில், **நம் சொந்த ஜீவியமே கிறிஸ்துவை பேசுவதாயிருக்கவேண்டும்!** *நாம் கர்த்தருக்காக சாட்சி கொடுக்கும்போது, 'இயேசு கிறிஸ்து என்ற ஒரு நபரைக் குறித்தே' பேசுகிறோம் என்பதை தெளிவுப்படுத்த வேண்டும்! அல்லாமல் 'மற்ற எல்லா மதங்களிலும் கிறிஸ்தவ மதமே உயர்ந்தது' என குறிப்பிட்டு பேசக்கூடாது! நாம் இயேசுவை உயர்த்தும்போது மாத்திரமே, அவர் ஜனங்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்ளுவார்! (யோவான்.12:32).*

மேலும் 'கிறிஸ்தவரல்லாத வேவுகாரர்களை' நாம் பகுத்தறிய கவனம் கொண்டவர்களாயிருக்கவேண்டும். அவர்கள், கிறிஸ்தவத்தில் ஆர்வம் கொண்டவர்களைப்போல் பாசாங்கு செய்து, நம்மிடம்

வருவார்கள்..... ஆனால், அவர்களின் உண்மையான நோக்கமோ, நாம் பேசுகின்ற சில வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு, நம்மைக் குற்றஞ் சாட்டவேண்டும் என்ற நோக்கமேயாகும்! அதைக்கொண்டு நம்மை வழக்குமன்றத்திற்கு இழுத்துச் சென்று "அவர்களை மதம் மாற்றுவதற்கு நாம் கட்டாயப்படுத்துவதாக" பிராது செய்வார்கள்!

ஆகவே இயேசுவைப்போல நாம் ஞானமும், அதே சமயம் அன்பும் உடையவர்களாயிருக்கவேண்டும்:

a) *இயேசு சில ஜனங்களிடம் தன்னை ஒப்புவிக்கவில்லை! ஏனெனில்,* **அவர்களுக்குள்** *இருந்ததை அவர் அறிந்திருந்தார் (யோ.2:23-25). ஆகவே நாம் ஒவ்வொருவரையும் நிதானித்து அறிய வேண்டும்.*

b) *"யூதர்கள் இயேசுவை கொலை செய்ய வகை தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல், கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார்" (யோவான்.7:1). எனவே, நாமும் தேவை யில்லாத அபாயத்தை தவிர்த்துவிட வேண்டும்.*

c) *"உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு.5:44). ஆகவே, நல்லவர்களாயிருங்கள், பிறர் தீமையா யிருப்பதினிமித்தம் நீங்களும் தீமையாய் மாறாதிருங்கள்.*

2."தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைத்திருங்கள்" *(மத்.4:4).*

நாம் துன்புறுத்தப்படும் சமயங்களில், மிக முக்கியமான தேவையா யிருப்பதெல்லாம் 'நம்முடைய இருதயங்களில் பேசும் தேவனுடைய வார்த்தையை உணர்வதேயாகும்'. ஒவ்வொரு நாள் முழுவதும், **தேவனை கவனித்து கேட்கும்** *மனப்பான்மையே ஓர் நல்ல பழக்கமாய் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் தேவனிடம் கேட்பதை, அப்படியே விசுவாசித்து கீழ்ப்படியவும் வேண்டும்! அப்படி இல்லையென்றால், அதற்கு யாதொரு மதிப்பும் இல்லை! ஆகவே நாம் தேவனுடைய வார்த்தையை, அதிலும் குறிப்பாய் புதிய ஏற்பாட்டின் வேத வாக்கியங்களை அதிகமாய் தியானிக்க வேண்டும்! அப்போது மாத்திரமே, நாம் 'தேவனுடைய சத்தத்தை' தெளிவாய் பகுத்தறிய முடியும்! பின்பு, அதற்கு "நம்பி, கீழ்ப்படிய வேண்டும்!"*

3."நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்! நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" *(யோவான்.13:34,35).*

நம்முடைய வீட்டிலும், நம்முடைய சபைகளிலும், எல்லாவித ஒருவரையொருவர் நியாயந்தீர்ப்பதையும், எல்லாவித ஒருவரை யொருவர் புறங்கூறுதலையும், எல்லாவித ஒருவரோடொருவர் வாக்கு வாதத்தையும், எல்லாவித ஒருவரையொருவர் சந்தேக மனப்பான்மையும் நிறுத்திவிட வேண்டும். **பகுத்தறிவது ஓர் திவ்விய குணாதிசயமாகும்! ஆனால், சந்தேகப்படுவது சாத்தானின் ஓர் குணாதிசயமாகும்!** நம் ஜீவியத்தில் பாவத்தையும், சாத்தானையும் போரிடுவதற்கு கவனம் செலுத்திட, இதுவே காலமாகும்! நம்முடைய வாழ்க்கை துணையாயிருப்பவர்களை, நம் சக-விசுவாசிகளை, தீவிரமாய் அன்புகூருவதற்கும், இதுவே காலமாகும்!

4.''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்'' (யோவான்.16:33).

தேவன் சிங்காசனத்தில் இருக்கிறபடியால், தம்முடையவர்களை ஒருபோதும் கைவிடமாட்டார். 2000 வருடங்களுக்கு முன்பாகவே சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டான். **நாம் தேவனுடைய 'கண்மணியாய்' இருக்கிறபடியால்,** நம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலாய் இருப்பார்! (சகரியா.2:5,8). உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்! (ஏசாயா.54:17). ஆகவே, ''நமக்கு இருப்பது போதுமென்றிருக்கக்கடவோம்! 'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, நான் உன்னை கைவிடுவதுமில்லை' என்று தேவனே சொல்லியிருக்கிறார்! அதினாலே நாம் தைரியம் கொண்டு 'கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன்! மனுஷன் எனக்கு என்ன செய்வான்?'' (எபி.13:5,6) என்று நாம் கூறிட முடியும்!

நாம் தொடர்ந்து ஏக்கத்துடன் ஜெபிப்பதெல்லாம் ''கர்த்தராகிய இயேசுவே வாரும்!'' என்பதேயாகும் (வெளி.22:20).

துன்புறுத்தப்படுகையில் ஞானமாயிருக்க வேண்டும்

மாறிவரும் இன்றைய இந்திய சூழ்நிலையில், சபையிலுள்ள மூப்பர்கள் எதற்காக உறுதியாக நிற்கவேண்டும்? எதைக் குறித்து அதிக உறுதியான நிலை அவசியமில்லை? என அறிவதற்கு சபையிலுள்ள மூப்பர்களுக்கு அதிக ஞானம் தேவைப்படுகிறது. இது விஷயமாக, நம்முடைய சக விசுவாசிகளுக்கு அறிவுரை கூறுவதற்கும் நமக்கு ஞானம் தேவைப்படுகிறது.

'துன்புறுத்தப்படுதல்' என்பது 'எதிர்க்கப்படுதல்' என்ற நிலைக்கு வித்தியாசமானதாகும். நாம் புதியஉடன்படிக்கையின் கோட்பாடுகளுக்கு

உறுதியாய் நிற்பதினிமித்தம் ஏற்படும் வெவ்வேறு அளவிலான எதிர்ப்புகளை எப்போதும் சந்திக்க வேண்டியதாயிருக்கும். ஆனால் 'துன்புறுத்தப்படுவது' கிறிஸ்தவரல்லாதவர்களிடமிருந்து நம் உயிருக்கு சரீர பிரகாரமாய் ஏற்படும் அச்சுறுத்தலேயாகும்!

தன் சீஷர்களை, சுவிசேஷ ஊழியத்திற்கு இயேசு அனுப்பியபோது, ஒரு நகரத்தில் அவர்கள் துன்புறுத்தப்பட்டால், அவர்கள் அடுத்த இடத்திற்கு ஓடிவிடவேண்டும்! என கூறினார் (மத்.10:23). நாம் வேறொரு தேவையான இடத்திற்கு சென்று, மிகுந்த விடுதலையோடு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கூடுமென்றால், துன்புறுத்தப்படும் ஒரு இடத்தில் தொடர்ந்து சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் யாதொரு தெய்வ பண்பும் இல்லை. "சண்டை போட்டு ஓடுகிறவன், அடுத்த நாளும் சண்டை போடுவதற்கு பிழைத்திருப்பான்!" என்பது ஓர் பொதுவான அறிவுரை.

ஆகிலும் இங்கு இரண்டு விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும்:

முதலாவதாக: *யூதேயாவில், தன் ஜீவனுக்கு அபாயம் இருப்பதை இயேசு அறிந்தவுடன், அங்கு* **அவர் செல்லவில்லை!** *(யோவான்.7:1; 11:53,54). ஆனால், அங்கு செல்லும்படி தன் பிதாவின் தெளிவான நடத்துதலை உணர்ந்தவுடன், இயேசு* **அங்கு சென்றார்!** *ஒருவரும் அவரை தடுத்து நிறுத்த முடியவில்லை! (லூக்கா.9:51). இவ்வாறாகவே பவுலுக்கும் சம்பவித்தது(அப்.21:11,13). ஆகவே, ஒரு தெளிவான குறிப்பிட்ட நடத்துதலை கர்த்தரிடமிருந்து அங்கு போகும்படி நடத்தப்பட்டால், ஓர் அபாயம் நிறைந்த ஸ்தலத்திற்குகூட நாம் சென்றிடமுடியும்! ஆனால், அவ்வாறு நடத்தப்படும் நேரம் வரை,* **நாமாக போய்விடக்கூடாது!**

இரண்டாவதாக: *சபையைக் கட்டுவது, சுவிசேஷ ஊழியத்திற்கு வித்தியாசமானதாகும்! கர்த்தருடைய மந்தைக்கு நாம் ஒரு இடத்தில் பொறுப்புடையவர்களாயிருந்தால், துன்புறுத்தப்படும் வேளையில் மந்தையை விட்டு விட்டு நாம் ஓடி விடமுடியாது. ஓநாய்கள் வரும்போது 'கூலிக்காரன்' மாத்திரமே அவ்வாறு மந்தையை விட்டு ஓடுவான் என இயேசு கூறினார்(யோவான்.10:12). ஆகவே இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு 'வேறொரு பட்டணத்திற்கு ஓடுங்கள்' என மத்தேயு.10:23-ல் கூறிய அந்த சமயத்தில், அவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருந்தார்கள்! அல்லாமல், சபையை கட்டும் பணியில் இல்லை! இருப்பினும் ஒரு சபையின் மேய்ப்பர்களா யிருப்பவர்கள், அவர்களின்* **உயிருக்கு அபாயம் இருக்கும்போது** *'மிகுந்த ஞானத்துடன்' செயல்படவேண்டும். சில சமயங்களில், அந்த தலைவன்*

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு 'தற்காலிகமாக செல்வது' பவுல் செய்ததைப் போன்று ஞானமுள்ளதாயிருக்கும் (அப்.17:10). "விசுவாசத்தினால் ஜீவிப்பது" நம்முடைய 'பொது அறிவை' பயன்படுத்த முடியாது என பொருளல்ல! விசுவாசமானது 'ஒரு குறிப்பிட்ட தேவனுடைய வார்த்தையை' சார்ந்ததாயிருக்கிறது (ரோமர்.10:17). அப்படி ஒரு 'குறிப்பிட்ட வார்த்தை தேவனிடமிருந்து உண்டாகாத பட்சத்தில்' நாம் எப்போதும் பொது அறிவையே பயன்படுத்தவேண்டும்! அவ்வாறு இல்லாத பட்சத்தில், ஒரு பொய்யான தைரிய உணர்வில் மதியீனமாய் செயல்பட்டு விடுவோம். அந்த செயல், இன்று சிலர் வியாதியாயிருக்கும்போது மருந்து எடுப்பதற்கு மறுப்பதை போன்ற ஒரு **பொய்யான தைரியத்திற்கு,** *ஒப்பாயிருக்கிறது!*

அன்று இயேசு கூறியதைப்போலவே, இனிவரும் நாட்களில் கிறிஸ்தவர்கள் அதிக அதிகமாய் "ஓநாய்களின் மத்தியில் இருக்கும் ஆடுகளைப் போலவே" இருக்கிறார்கள் (மத்.10:16). ஆகிலும் நம் பரமபிதாவோ நம் தலையிலுள்ள முடிகளைக்கூட எண்ணி வைத்து நம்மை விசாரிக்கிறார்! இந்த உலகத்திலுள்ள எல்லா பறவைகளைக் காட்டிலும் நாம் அதிக மதிப்புள்ளவர்கள்! (மத்.10:29,30).

ஆகவே நாம் எந்த மனிதர்களுக்கும் அல்லது சாத்தானுக்கும் அஞ்சுவதில்லை! அதுபோலவே, எந்த கிறிஸ்தவமல்லாத நிறுவனங்களுக்கும் அல்லது அரசிற்கும் நாம் அஞ்சுவதில்லை!

நாம் அரசாங்கத்தின் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிவோம் .... ஆகிலும், கிறிஸ்துவின் போதகத்தையும், வேதாகமத்தின் போதகத்தையும் அடிப்படையாகக் கொண்டு, நம் மனசாட்சி அனுமதிக்கும் எல்லை வரை மாத்திரமே கீழ்ப்படிவோம். ஏனெனில், நாம் சத்தியமென விசுவாசிக்கும் யாதொன்றிற்கும் ஒருபோதும் ஒத்தவேஷம் தரிப்பதில்லை!

ஆகவே அரசாங்கம் விதிக்கும் எந்த பிரமாணமும் "தேவனுடைய வார்த்தையிலுள்ள கற்பனைகளுக்கு தீங்கு ஏற்படாத பட்சத்தில்" அவை அனைத்தையும் நாம் மதித்து கீழ்ப்படிவோம்! நாம் அரசு அதிகாரங்களுக்கு கீழ்ப்படிய முடியாத ஒரே இடம் "தேவனுடைய வார்த்தையில் தடைசெய்யப்பட்டவைகளை" நாம் செய்திட கூறும் போது மாத்திரமே கீழ்ப்படிய மறுத்திட வேண்டும்! (அப்.5:29).

அதே சமயத்தில் "பாம்பைபோல் வினாவுள்ளவர்களாய்! புறாவைப்போல் கபடற்றவர்களாய்!" இருப்பதற்கும் இயேசு கூறியிருக்கிறார் (மத்.10:16). ஆகவே, நாம் ஒருவரையும் நம்முடைய

செய்கையினாலோ அல்லது நம்முடைய வார்த்தையினாலோ கபடு அல்லது தீங்கு யாருக்கும் செய்திடக்கூடாது!

கடைசியாக: *நாம் எப்போதும் செய்யவேண்டுமென்ற இரண்டு முக்கியமான விஷயங்களை நம் ஞாபகத்தில் வைத்திருக்கக்கடவோம்:*

1. *நாம்* **எப்போதும் தாழ்மையில் ஜீவித்து, ஓர் நல்ல மன சாட்சியை** *உடையவர்களாயிருக்கக்கடவோம். அப்போது, தேவன் நம்மோடு இருப்பார்! ஆகவே "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" என கூறலாம்! (ரோ.8:31).*
2. *எப்போதும்* **விசுவாசத்தின் அடிப்படையில்** *தீர்மானங்கள் எடுங்கள்! ஒவ்வொரு செயலிலும், கவனமாயும், ஞானமுள்ளவர்களாயுமிருங்கள்! ஒருபோதும் பயத்தின் அடிப்படையில், தீர்மானம் எடுக்காதிருங்கள்!*

குறை சொல்லாதிருக்க கவனமாயிருங்கள்

மற்ற மதங்களையும், அவர்களின் விக்கிரகங்களையும் பெயர் சொல்லி அதற்கு விரோதமாய் பேசாதபடி, நாம் கவனமாயிருக்க வேண்டும். அவைகளை வேடிக்கையாய் பேசுவதும் கூடாது! அவ்வாறாக இயேசு ஒருபோதும் பேசியதில்லை. "மெய்யான தேவனை அறிந்து கொண்டதாக" மாய்மாலம் செய்தவர்களையே இயேசு அதிகமாய் குறிப்பிட்டு பேசினார்.

பவுலின் மாதிரியை கவனித்துப் பாருங்கள்: அவர் எபேசுவில் இருந்தபோது, சத்தியத்தை ஒத்தவேஷம் தரியாமல் பிரசங்கித்தபடியால் நகரத்தில் கலவரம் ஏற்பட்டது. கடைசியாக பட்டணத்து சம்பிரதியானவன் ஜனங்களை அழைத்து **"இந்த மனுஷன் உங்கள் கோவில் தேவியை தூஷிக்கவில்லை" என எடுத்துக் கூறினான்** *(அப்.19:37). பவுல் கிறிஸ்துவையே பிரசங்கித்தார். எபேசுவில் ஜனங்கள் 'பொய் தேவர்களை' ஆராதித்து கொண்டிருப்பதை இழிவாய் பேசவில்லை! அவருடைய செய்தி மிகவும் சாதகமான ஒன்றாகவே இருந்தது.... ஆம், "உங்கள் பாவங்களிலிருந்து கிறிஸ்து உங்களை இரட்சிப்பார்" என்ற செய்தியேயாகும். அது ஒரு, எதிர்மறையான அவர்களின் பொய்தேவனையும், அவர்களின் விக்கிரகங்களையும் குறை கூறும் செய்தியாயிருக்கவில்லை! அப்படி அவர் செய்தது, திவ்விய ஞானமாயிருந்தது! ஒருவன் கிறிஸ்துவினிடத்தில் வந்த பிறகு, விக்கிரகத்திலிருந்து ஜனங்களை விடுவிக்கும் பணியை ஆண்டவரே செய்து விடுவார்!*

இந்த ஞானமே நம் எல்லோருக்கும் வேண்டும். நாம் யாதொரு மதத்தையோ அல்லது அவர்களுடைய நம்பிக்கையையோ அல்லது அவர்களுடைய வழிபாடுகளையோ குறைகூற கூடாது! அது நம்முடைய செய்தி அல்ல! நாம் கிறிஸ்துவை மாத்திரமே பிரசங்கிக்க வேண்டும்: இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார்! மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்! இன்றும் பரலோகில் உயிருடன் இருக்கிறார்! இந்த உலகை நியாயந்தீர்ப்பதற்கு சீக்கிரமாய் திரும்ப வருவார்! இவ்வாறு ஒவ்வொருவரையும் அவர்கள் பாவங்களிலிருந்து திரும்பி, கிறிஸ்துவை தங்கள் சொந்த ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அழைக்கிறோம்..... இதுவே நம்முடைய செய்தி! ஆனால், இதைச் செய்வதற்கு நாம் ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. அவைகளை நாம், சிறு பிள்ளைகளுக்குகூட பிரசங்கிக்கிறோம்! 'கிறிஸ்துவை ஏற்று கொள்ள' நாம் அவர்களை அழைக்க வேண்டும், அவர்களை கட்டாயப்படுத்தக்கூடாது. 'ஒவ்வொருவருக்கும்' தேவன் சுயாதீனம் வழங்கியிருக்கிறார்! நாமும் ஜனங்களுக்கு சுயாதீனம் தரவேண்டும். ஜனங்கள் மெய்யாகவே கிறிஸ்துவை தங்கள் ஜீவியத்தில் ஏற்றுகொள்ளும்போது, அவர்கள் ஜீவியத்திலுள்ள மற்ற பொய்யானவைகள் "பரிசுத்தாவியானவர் அவர்கள் பாவங்களை உணர்த்துவிக்கிறபடியால்" கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்துவிடும்!

நம்முடைய அழைப்போ இந்த உலகத்திற்கு கிறிஸ்து ஒருவரே இரட்சகர்! என அறிவிப்பதேயாகும். மேலும் பாவத்திற்கு எதிராகவும் நாம் பேசவேண்டும்! முதலாவது நம்மையே நியாயந்தீர்த்து பார்த்து பின்பு 'மற்றவர்களின் மாய்மாலத்தை' வெளியரங்கமாக்க வேண்டும்!

அநேக வைராக்கியமுள்ள ஆனால் ஞானமில்லாத சகோதரர்களும் சகோதரிகளும், சில சமயங்களில் 'பிற மதங்களை' தங்கள் பேச்சிலும், தங்கள் ஜெபத்திலும் தேவையில்லாமல் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு பேசுவதைக் குறித்து கவனமாயிருக்கும்படி, நாம் அவர்களை எச்சரிக்க வேண்டும். **எந்த மதத்தையும் குறிப்பிட்டு பேசாமல் "கிறிஸ்தவரல்லாதவர்கள்" என பேசுவதே நல்லது.** *தேவன் தன் குமாரனை, இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி அனுப்பாமல் 'இரட்சிக்கும்படியே' அனுப்பினார் (யோவான்.3:17). நம்முடைய அழைப்போ, இயேசுவின் மாதிரியை பின்பற்றுவதுதான்! ஆகவே, நாம் எப்போதும் பிறரை இரட்சிப்பதற்கே நாடவேண்டும், அவர்களை ஆக்கினைக்குட்படுத்த அல்ல!*

வழக்கறிஞர்களின், மற்றும் 'செல்வாக்கு' உள்ளவர்களின் உதவியை ஏற்றுக் கொள்ளுதல்

நாம் காவல் நிலையத்திற்கு அல்லது வழக்கு மன்றத்திற்கு குற்றம் சாட்டி இழுக்கப்படும்போது, **ஒரு வழக்கறிஞர் நமக்காக வாதிடும் சேவையை** *பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை.*

தங்கள் சத்துருக்களை சந்திக்க வேண்டிய நேரத்தில் 'ஒரு பட்டயத்தை' கொள்ளக்கடவன்! என்றே சீஷர்களுக்கு இயேசு கூறினார் (லூக்கா.22:36-38). அந்தப் பட்டயத்தை வைத்து, அவர்களின் எதிரிகளை தாக்குவதற்கு அல்ல! அவ்விதமாய் பேதுரு தாக்கியபோது, இயேசு உடனடியாக, அவனுடைய பட்டயத்தை உறையில் போடும்படி கூறினார்! மேலும் பட்டயத்தை எடுப்பவன், தன் பட்டயத்தால் மடிவான் என்றும் கூறினார் (மத்தேயு.26:52). சில எதிராளிகள் நம்மைத் தாக்கும்போது, தன்னை தற்காத்து கொள்வதையே இந்த பட்டயத்திற்குரிய அர்த்தமாகும். ஆகவே நியாயமான காரணங்களுக்காக, நம்மை தற்காத்துக் கொள்வதற்கு, ஒரு வழக்கறிஞரின் சேவையையோ அல்லது காவல் துறை அதிகாரிகளிடம் புகார் செய்வதற்கோ நமக்கு உரிமை உண்டு! பவுல், வழக்கு மன்றத்தில் தன்னை தற்காத்து வாதிட்டதுமல்லாமல், ரோம் நகரத்தின் **உயர்நீதிமன்ற இராயனிடம்** *மேல் முறையீடும் செய்தார்! (அப்.25:11).*

நாம் அறிந்திருக்கும் 'யாதொரு செல்வாக்குள்ள ஜனங்களையும்' நமக்கு உதவும்படி 'அந்த செல்வாக்கை' (Influence) *பயன்படுத்தவும் முடியும். அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, தான் பிலாத்துவிடம் கொண்டிருந்த செல்வாக்கை பயன்படுத்தி, சிலுவையிலிருந்து கிறிஸ்துவின் சரீரத்தை இறக்கி, அவரை அடக்கம் செய்தான்! ஆகவே, செல்வாக்குள்ள ஜனங்கள் தேவனுடைய பணியின் வளர்ச்சிக்கு நமக்கு உதவ மனதுள்ளவர்களாயிருந்தால், அவர்களின் உதவியை நாம் தாராளமாய் பெற்றுக்கொள்ள முடியும்.*

> ஆகிலும் நாம் வழக்கறிஞர்களையோ அல்லது செல்வாக்குள்ள ஜனங்களையோ பயன்படுத்தினாலும் "நம்முடைய நம்பிக்கை கர்த்தரிடம் மாத்திரமே இருக்க வேண்டும், எந்த மனுஷரிடமும் அல்ல!"

அதுபோலவே, ஒரு மருத்துவ சிகிச்சைக்காக நாம் மருத்துவரிடம் செல்லும்போது, மருத்துவர் மீதோ அல்லது அவர் தரும் மருந்துகளின் மீதோ நம்பிக்கை வைக்காமல், நமக்கு சுகம் தரும் கர்த்தர்மீது மாத்திரமே முழு நம்பிக்கையும் வைத்திருக்க வேண்டும்! (எரேமியா.17:5-8).

நாம் மேலும் அறிந்திருக்க வேண்டியது என்னவென்றால், நாம் அதிகாரிகளுக்கு முன்பாக நிறுத்தப்படும்போது, நாம் என்ன பேச வேண்டும்? என்ற ஞானத்தை கர்த்தரே நமக்குத் தருவார்! என்பதுதான் (லூக்கா.12:11,12; மற்றும் 21:12-15).

இருளும் பொல்லாததுமான இந்த உலகத்தில், "ஆண்டவருக்கு சாட்சிகளாய் இருப்பதற்கு வாஞ்சிக்கும் நமக்கு" எல்லா சமயங்களிலும் உதவி செய்யும்படி 'நம்முடைய பரம பிதா' இருப்பதை, நாம் எப்போதும் நம்பி இருக்க வேண்டும். நமக்கு உதவும்படி தம்முடைய தூதர்களையும் அனுப்புகிறார் என்பதை நாம் மறவாதிருக்கக்கடவோம் (எபிரெயர்.1:14).

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிப்பார்கள்

இயேசு கெத்செமனேயிலிருந்தபோது "சீமோன் பேதுரு தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான்! அப்போது இயேசு பேதுருவை நோக்கி "உன் பட்டயத்தை உறையிலே போடு! பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்றார் (யோவான்.18:10,11).

அங்கு பேதுரு யூதாஸ்காரியோத்தையும், ரோம போர்ச் சேவகர்களையும் மாத்திரமே கண்டார். ஆனால் இயேசுவோ தான் பருகும்படியான பாத்திரத்தை **அவருடைய பிதா தந்ததை கண்டார்!** *ஒரு தபால்காரன் கொண்டு வந்த பாத்திரமாகவே, யூதாஸை கண்டார்!*

> **மத்தேயு.5:8 -ம் வசனத்தில் "இருதயத்தில் சுத்தமுள்ளவன், தேவனை தரிசிப்பான்!" என வாசிக்கிறோம். எனவே, நம் முழு இருதயத்தோடும் தேவனை நேசித்தால், ஒவ்வொரு சூழ்நிலையிலும் "தேவனை மாத்திரமே நாம் காண்போம்!" அப்படி இல்லாமல், நம்முடைய மனது நம் எதிரிகளாலும், நம் கடினமான சூழ்நிலைகளாலும் நிறைந்திருந்தால், 'நம்முடைய இருதயம் சுத்தமாயில்லை' என்பதையே நிரூபிக்கிறது.**

ஏசாயா.6:3-ம் வசனத்தில், பரலோகத்திலுள்ள சேராபீன் தூதர்கள் "பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று கூறினார்கள். அவர்கள் தேவனுடைய மகிமையை பரலோகத்தில் மாத்திரமல்ல, பூமியிலும் கண்டார்கள்! அதன்பொருள் என்னவெனில், பூமியில் சம்பவிக்கும் எல்லா சம்பவங்களையும் **ஆளுகை செய்பவராய் தேவனை கண்டார்கள்!** *என்பதுதான். தானியேல்.4:35-ம் வசனத்தில் நேபுகாத்நேச்சார் கூறும்போது "பூமியின் குடிகளெல்லாம், ஒன்று*

மில்லை என்று எண்ணப்படுகிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார். அவருடைய கையை தடுத்து, அவரை நோக்கி "என்ன செய்கிறீர்?" என்று சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை" என்று கூறினார்.

தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறபடியால், அவருடைய பிள்ளைகளில், 'பெலவீனமானவர்களைக்கூட' அவர் ஒருபோதும் மறப்பதில்லை!

2கொரிந்தியர்.11:3-ம் வசனம், சாத்தான் நம்மை "கிறிஸ்துவைப் பற்றிய முழு அன்பின் தியானத்திலிருந்து" விலகச் செய்திட நடத்தும் அபாயத்தை எச்சரிக்கிறது! அந்த வசனம் மேலும் கூறும்போது, ஏவாளை சாத்தான் வழிதப்பி போகச் செய்து 'நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு' நடத்தினான் என்பதை கூறுகிறது. 'தேவனுடைய சமூகத்திலிருந்து ஏவாள் விலகும்படி' அந்த விருட்சம் இருந்தது! இவ்வாறாக நம்முடைய ஜீவியத்திலும், **கர்த்தரிடமிருந்து நம்மை விலகச் செய்வதற்கு ஏராளமான வஞ்சனைகள் வரக்கூடும்.** *அவ்வாறு நம்மை விலகச் செய்யும் யாதொன்றிற்கும், நாம் பயந்திருப்போமாக! இந்த நாட்களில் நமக்கு தேவையாயிருப்பதெல்லாம், பவுல் 1கொரிந்தியர்.7:35-ம் வசனத்தில் கூறியதுபோல "நீங்கள் விலகுவதற்கு ஏதுவில்லாமல், கர்த்தரை முழு அன்பின் தியானத்தோடு பற்றி கொண்டிருக்க வேண்டுமென்று" கூறினார்!*

19

தேவ மனிதர்களின் ஐம்பது அடையாளங்கள்

ஒவ்வொரு மூப்பரும், கண்டிப்பாய் ஓர் தேவ மனிதனாய் இருக்க வேண்டும்! மெய்யான தேவ மனிதர்களின் 50 அடையாளங்கள் இங்கே தரப்பட்டுள்ளது:

1. *அனுதினமும் தேவனுடைய முகத்திற்கு முன் நின்று, அவர் குரல் கேட்பார்கள்,*
2. *தேவனேயன்றி "தங்கள் இருதயத்தில்" வேறு எவர்மீதும் அல்லது எந்தப்பொருளின் மீதும் விருப்பமற்றவர்கள்,*
3. *தெய்வ பயத்தால் ஆட்கொள்ளப்பட்டு, 'பாவம்' அது எந்த ரூபமாயிருந்தாலும் அதைக் கடுமையாய் வெறுத்து, தங்கள் வழிகளிளெல்லாம் நீதியையும் சத்தியத்தையும் சிநேகிப்பார்கள்,*
4. *கோபத்தையும், பாவமான காம சிந்தைகளையும் ஜெயித்து, "சாகத்துணிவார்களேயல்லாமல்" அவைகளால் தங்கள் சிந்தையிலும் பாவம் செய்யாதவர்கள்,*
5. *சிலுவை சுமந்து வருவது, அவர்களது தினசரி வாழ்க்கைக் கோலமாயிருந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்கள் இரட்சிப்பு நிறைவேறத் "தொடர்ச்சியாக" பிரயாசப்பட்டு பூரணத்தை நோக்கி கடந்து செல்பவர்கள்,*
6. *என்னதான் கோபமூட்டும் சூழ்நிலை உருவானாலும், எந்த மனிதரிடமும் அன்பற்ற சுபாவம் கொள்ளும்படி சிறிதும் அசைக்கப்படாமல் "பரிசுத்தாவியினால் நிறைந்து" அன்பில் வேரூன்றி நிலைத்திருப்பார்கள்,*
7. *மனுஷீகப் புகழ்மாலையோ, ஆவிக்குரிய வளர்ச்சியோ, தேவனால் தரப்பட்ட ஊழியமோ, அல்லது வேறெதுவோ ஆனாலும் 'அவைகள்' அவர்களைத் "தாங்கள் பரிசுத்தவான்கள் எல்லாரிலும் மிகச் சிறியவன்" என்ற விழிப்புணர்வை இழக்கச் செய்யாமல், தாழ்மையில் வேரூன்றி நிலைத்திருப்பார்கள்,*

8. தேவனுடைய சுபாவத்தையும்-நோக்கத்தையும் அவரது வார்த்தையின் மூலமாய் அறிந்து, அது எவ்வளவு சிறிய கற்பனையானாலும் அதற்குக் கீழ்ப்படியாமல் போகாதபடிக்கு அல்லது மற்றவர்களுக்கு அதைப் போதிப்பதற்கு அலட்சியமாயிராதபடிக்கு, அவரது வார்த்தைகளுக்கு நடுங்குவார்கள்,

9. தேவனுடைய முழு ஆலோசனைகளையும் பறைசாற்றி, வேசி மார்க்கத்தையும், வசனத்திற்குப் புறம்பான மனுஷீகப் பாரம்பரியத்தையும், வெளியரங்கமாக்குகிறவர்கள்,

10. தேவபக்தியின் இரகசியமான, கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டது குறித்தும், அந்த மாம்சத்தினூடே இயேசு திறந்து வைத்த "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைக்" குறித்தும் பரிசுத்தாவியின் வெளிப்பாடு பெற்றவர்கள்,

11. ஜாக்கிரதை உள்ளவர்கள்! கடின வேலை செய்பவர்கள்! அதே சமயம் நகைச்சுவை உணர்வுள்ளவர்களும், இளைப்பாறியிருக்க அறிந்தவர்களும், சிறுவர்களோடு விளையாட அறிந்தவர்களும், தேவனுடைய இயற்கை ரம்மியத்தை ரசித்து ருசிப்பவர்கள்,

12. துறவறம் அற்றவர்களாய், அதே சமயத்தில் கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்பவர்களாயும், எந்த கஷ்டத்திற்கும் அஞ்சாதவர்களாயும் இருப்பார்கள்

13. விலையுயர்ந்த ஆடைகளை உடுத்த வேண்டுமென்ற ஆர்வமோ, புதுஇடங்களைக் காணவேண்டுமென்ற விருப்பமோ இல்லாதவர்கள், பக்திவிருத்தி இல்லாத நிகழ்ச்சிகளுக்கு தங்கள் நேரத்தை வீணடிக்காதவர்கள், தங்கள் பணத்தை இஷ்டமான பொருட்களை வாங்கி சீரழிக்காதவர்கள்,

14. 'விதவித' உணவுப் பதார்த்தங்களின் விருப்பத்தைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தியவர்களாயும், இசை-விளையாட்டு-மற்றும், நியாயமான களியாட்டுகளுக்கு கூட அடிமையாகாதவர்கள்,

15. அக்கினிமய உபத்திரவங்கள், வசை மொழிகள், பாடுகள், பொய்யாய் குற்றஞ்சாட்டப்படுதல், சரீர சுகவீனங்கள், பொருளாதார நெருக்கடிகள், உறவினர்கள் மற்றும் மார்க்கத் தலைவர்களிடமிருந்து எழும்பும் எதிர்ப்புகள், மூலமாய் தேவனுடைய கரத்தில் வெற்றிகரமாய் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்,

16. இழிவான பாவியோ, மோசமான விசுவாசியோ அவர்களுக்காய் பரிதபித்து, "தாங்களே பாவிகளிலும் பிரதான பாவி" என்ற உண்மையை அறிந்தவர்களாய், அவர்களின் மீதும் நம்பிக்கை

வைத்து, இரக்கத்தால் நிறைந்தவர்கள்,

17. தங்கள் பரலோகத்தகப்பனின் அன்பின் பாதுகாப்பில் ஆழமாய் வேரூன்றி, ஒன்றையும் குறித்து ஒருபோதும் மனக்கிலேசம் அடையாதவர்களாயும், சாத்தானுக்கோ; பொல்லாத மனிதர்களுக்கோ நெருக்கடியான சூழ்நிலைகளுக்கோ .... கொஞ்சம் கூட அஞ்சாதவர்கள்,

18. ஆளுகை செய்யும் சர்வ வல்லவர், தங்கள் வாழ்வில் இடைப்பட்டும் சகலத்தையும், தங்கள் நன்மைக்கென்றே கிரியை செய்கிறார் என்பதை விசுவாசிப்பதால், எல்லா மனிதர்களுக்காகவும்- எல்லாவற்றிற்காகவும் - எல்லா சூழ்நிலைகளுக்காகவும் எப்போதும் ஸ்தோத்தரித்து தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்கள்,

19. "மனசு சரியில்லாமற்" போகச்செய்யும் எல்லாவற்றையும் ஜெயித்து, கர்த்தரின் மகிழ்ச்சியால் எப்போதும் நிரம்பியவர்கள்,

20. தங்கள் மீதோ, தங்கள் திறமை மீதோ நம்பிக்கை வைக்காமல், தேவனே தங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் உதவி செய்பவர் என்று அவர் மீதே தங்கள் முழு நம்பிக்கையையும் வைத்திடும் "உயிருள்ள விசுவாசம்" பெற்றவர்கள்,

21. தங்கள் சுய அறிவு உந்துகிறபடி ஜீவிக்காமல், பரிசுத்தாவியின் வழி நடத்துதலின்படி ஜீவிப்பவர்கள்,

22. உணர்ச்சித் தூண்டுதலால் பெற்ற போலி அனுபவமாயும் அல்ல; வேத அறிவை தர்க்கித்து தாங்களாக அனுமானித்திடும் அனுமானமாயும் அல்ல.... கிறிஸ்துவால் நிஜமாகவே பரிசுத்தாவியாலும், அக்கினியாலும் அபிஷேகிக்கப்பட்டவர்கள்,

23. "தொடர்ச்சியான ஆவியின் அபிஷேகத்தில்" நிலைத்திருந்து, தேவனால் அருளப்பட்ட உன்னத வரங்களைப் பெற்றவர்கள்,

24. சபையானது கிறிஸ்துவின் சரீரமென்ற (ஓர் கூட்டம் அல்ல அல்லது ஓர் ஸ்தாபனமும் அல்ல) வெளிப்பாட்டைப் பெற்று, தங்கள் முழு பெலத்தையும், ஆஸ்தியையும், ஆவிக்குரிய வரங்களையும் அச்சபை கட்டப்படுவதற்கே அர்ப்பணித்தவர்கள்,

25. பரிசுத்தாவியின் உதவியால் தங்கள் நாவை அடக்குவதற்கு கற்றுக்கொண்டு, இப்போது அவர்களின் நாக்கு பரத்திற்குரிய வார்த்தைகளால் பற்றி எரிபவர்கள்,

26. எல்லாவற்றையும் வெறுத்து விட்டு, பணத்தின் மீதும் உலகப்

பொருட்களின்மீதும் ஈர்ப்பு இல்லாதவர்களாய், பிறரிடத்தி லிருந்து யாதொன்றும் அன்பளிப்பாய் பெற விருப்பம் அற்றவர்கள்,

27. எல்லா தேவைகளுக்கும் "தேவனையே" நம்புகிறவர்களாய், தங்கள் தேவையைக் குறித்து 'பேச்சுவாக்கில்' தெரியப்படுத்தாத வர்களாய், கடிதம் அல்லது சுற்றறிக்கை மூலமாய் தங்கள் ஊழியத்தை ஜம்பம் செய்யாதவர்கள்,

28. பிடிவாத குணம் இல்லாமல் மென்மையானவர்களாயும், குறை சொல்லப்படுவதற்கு மனம் திறந்தவர்களாயும், தங்களின் விவேகமுள்ள மூத்த சகோதரர்களால் திருத்தப்படுவதற்கு ஆர்வம் கொண்டவர்களாய் இருப்பார்கள்,

29. பிறரை ஆளுகை செய்ய அல்லது புத்தி சொல்ல ஆர்வம் அற்றவர்களாய் (ஆலோசனை கேட்கும் போது புத்தி சொல்வது தவறில்லை) சாதாரண சகோதரனாய் எல்லோருக்கும் வேலையாளாய் இருப்பதற்கு மாத்திரமே விருப்பம் கொண்டு, மூத்த சகோதரன் அல்லது லீடர் என எண்ணப்படுவதற்கு ஏக்கம் அற்றவர்களாய் இருப்பார்கள்,

30. இசைந்து போவதற்கு இலகுவானவர்களாயும், பிறரால் அசௌகரியமாக்கப்படுவதற்கும்; தங்களில் ஆதாயம் அடைந்திட விட்டுத் தருபவர்களாயும் இருப்பார்கள்

31. கோடீஸ்வரன்- பிச்சைக்காரன், வெள்ளைத் தோல் உடையவன்- கருப்புத்தோல் உடையவன், புத்திமான்-புத்தியீனன், நாகரீகவான் - நாகரீக மற்றவன்; ஆகிய வேற்றுமை பாகுபாடும் காட்டாமல் எல்லோரையும் சமமாய் நடத்துவார்கள்,

32. கிறிஸ்துவின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதற்கு அல்லது கிறிஸ்துவைப் பற்றும் தியானத்திலிருந்து "சிறிதேனும் கூட" குளிர்ந்துவிடுவதற்கு..... தங்கள் மனைவியாலோ பிள்ளை களாலோ, உறவினர்களாலோ, நண்பர்களாலோ, அல்லது வேறு விசுவாசிகளாலோ சிறிதும் வசப்படுத்தப்பட முடியாதவர்கள்,

33. சாத்தான் வழங்கும் புகழ், பணம், அல்லது வேறு யாதொன்றிற் காகவும் ஒத்தவேஷம் தரிப்பதற்கு "லஞ்சம்" தரப்பட முடியாதவர்கள்,

34. கிறிஸ்துவுக்கு அஞ்சாநெஞ்சுடை சாட்சிகளாய், மார்க்கத் தலைவர்களுக்கோ, அரசாட்சி தலைவர்களுக்கோ அச்சமற்றவர்கள்,

35. இந்த பூமியில் எந்த மனிதரையும் பிரியப்படுத்த விருப்பமற்ற

வர்களாய், தேவனை மாத்திரமே பிரியப்படுத்துவதற்கு 'ஒருவேளை' எல்லா மனிதரையுமே இடறச்செய்வதற்கும் ஆயத்தமுள்ளவர்கள்,

36. வாழ்க்கையின் தேவை, சொந்த வசதி என்ற எல்லையைக் கடந்து, தேவனுடைய மகிமையையும், அவரது சித்தத்தையும், அவரது இராஜ்ஜியத்தை எக்காலமும் தலையானதாய் தேடும் மனிதர்கள்,

37. தேவனுக்கு "செத்த கிரியைகளைச்" செய்யும் கதியை அடையும் படி மற்றவர்களாலோ அல்லது தங்கள் சுயபுத்தியாலோ கட்டாயப்படுத்த முடியாதவர்கள், ஆனால், தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்கோ ஆர்வமும், அதில் மனநிறைவும் காண்பவர்கள்,

38. கிறிஸ்தவ ஊழியங்களில் மனுஷீகத்திற்கும், ஆவிக்குரிய வற்றிற்கும் உள்ள வேறுபாட்டை ஆவியில் பகுத்தறியக் கூடியவர்கள்,

39. உலகப்பொருட்களை பூமிக்குரிய கண்ணோக்கின்படி அல்ல, பரலோக கண்ணோட்டத்தின்படி காண்பவர்கள்,

40. தேவனுக்கு செய்யும் ஊழியத்திற்காக வழங்கப்படும் உலகப் புகழ்ச்சியையும், பட்டங்களையும் ஏற்றுக்கொள்ள மறுத்து நிற்பவர்கள்,

41. இடைவிடாமல் ஜெபிப்பதற்கு அறிந்தவர்கள், தேவையான வேளைகளில் உபவாசித்து ஜெபிக்க அறிந்தவர்கள்,

42. தாராளமாயும், மனப்பூர்வமாயும், அந்தரங்கமாயும், ஞானத்தோடு கொடுப்பதற்கு கற்றுக்கொண்டவர்கள்,

43. எப்படியாகிலும் சிலரை இரட்சிப்பதற்கு, எல்லா மனுஷருக்கும் 'எல்லாமுமாய்' மாறுவதற்கு இணக்கம் உள்ளவர்கள்,

44. பிறர் 'இரட்சிக்கப்பட்டது' மாத்திரமல்லாமல் அவர்கள் 'சீஷர்களாக்கப்பட்டு' சத்தியத்தை அறிகிற அறிவுக்கும், தேவனுடைய பிரமாணங்கள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிவதற்கு வாஞ்சை கொண்டவர்கள்,

45. இப்பூமியின் எல்லை எங்கும், தேவனுக்கென்று "தூய்மையான சாட்சிகள்" நிலைநிறுத்தப்படுவதைக் காண்பதற்கு ஏக்கம் நிறைந்தவர்கள்,

46. சபையில் கிறிஸ்து மகிமைப்படுவதைக் காண்பதற்கு பட்சிக்கும் பக்தி வைராக்கியம் நிறைந்தவர்கள்,

47. எந்த விஷயத்திலும் தனக்கானதை நாடாதவர்கள்,

48. ஆவிக்குரிய அதிகாரமும், அந்தஸ்தும் நிறைந்தவர்கள்,

49. அவசியமேயானால், இப்பூவுலகில் தேவனுக்கென்று தனித்து நிற்கவும் துணிந்தவர்கள்,

50. தங்களுக்கு முன் சென்ற அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் போன்று, முழுக்க முழுக்க ஒத்தவேஷம் தரியாத புருஷர்கள்,

பாவமும் வேசித்தனமும் நிறைந்த இன்றைய சந்ததி நடுவில், ஒத்த வேஷத்தில் மூழ்கித்திளைக்கும் இன்றைய கிறிஸ்தவத்தின் மத்தியில், தேவனுக்கென்று நீங்களே இப்படிப்பட்ட மனிதராய் இருப்பதற்கு உங்கள் முழு இருதயத்தோடும் தீர்மானம் எடுங்கள்.

தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை! ஆகவே, நீங்களும் இத்தனை குணாதிசயம் நிறைந்த **ஒரு தேவபக்தியான மூப்பராய்** உங்கள் சபையில் உங்களை விளங்கச் செய்வதற்கு, தேவன் மிகுந்த வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார்!

20

ஆவிக்குரிய இயக்கங்களின் எழுச்சியும், வீழ்ச்சியும்!

"கர்த்தாவே! இரக்கம் செய்யும்! பக்தியுள்ள மனிதர்கள் வேகமாய் மறைந்து விட்டார்கள். இந்த உலகமெங்கிலும் **'நம்புவதற்கு பாத்திரமான மனிதர்கள்'** *எங்கே இருக்கிறார்கள்? எந்த ஒருவனும் ஏமாற்றுகிறான்! இச்சகம் பேசுகிறான்! பொய் சொல்லுகிறான்! 'உண்மை தன்மை' எங்கும் காணோம்" (சங்கீதம்.12:1,2*-Living*) என வாசிக்கிறோம். இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட நிலைதான், இன்றைய கிறிஸ்தவத்தின் பரிதாபமாயிருக்கிறது. ஒரு காலத்தில் தேவபக்தியை நாடி பின்பற்றிய விசுவாசிகள், இப்போது வஞ்சகமும், முகஸ்துதியும், பொய்யும் நிறைந்து.... தங்களையே சேவித்துக் கொள்கிறார்கள்.*

ஜனங்கள் வேதாகமத்தை மாத்திரம் அறிந்து, தேவனை அறியவில்லையென்றால், 'அவர்களே' எளிதில் வஞ்சிக்கப்படுவார்கள். ஏனென்றால், இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவ குழுக்களும் வேதாகமத்தை தங்கள் வழிகாட்டி புத்தகமாய் காண்பித்து, தங்கள் நூதனமான உபதேசங்களை பிரபல்யப்படுத்த "நிரூபணப்படுத்த அவர்கள் விரும்பும் வசனங்களைக் கோடிட்டு காட்டுகிறார்கள். இதனிமித்தமே கடந்த 150 ஆண்டுகளில் "தனிமனித-ஆராதனை குழுக்கள்" (CULTS) *காளான்கள் போல் பெருகி, அநேக ஜனங்களால் ஏற்கப்பட்டும் இருக்கிறார்கள். இதனிமித்தமாய், அநேக விசுவாசிகள் வழிதவறிப் போய் தங்கள் இரட்சிப்பை இழந்து கொண்டிருக்கிறார்கள்!*

புதியஉடன்படிக்கையின் கீழ், தன்னுடைய ஒவ்வொரு பிள்ளைகளும் **அவரை தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொள்ள** *தேவன் விரும்புகிறார் (எபிரெயர்.8:11). பழைய உடன்படிக்கையின் கீழ், அவ்வப்பொழுது எழும்பும் தீர்க்கதரிசி மாத்திரமே, தேவனை தனிப்பட்ட விதத்தில் அறிந்திட முடிந்தது. புதிய உடன்படிக்கையின் பாக்கியம் என்னவென்றால், தேவனுடைய ஒரு பிள்ளை, பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்த 'மாபெரும் தீர்க்கதரிசியை விட'*

தேவனை அதிகமாய் நெருங்கி அறிந்து கொள்ள முடியும்! இதை இயேசு, மிகத்தெளிவாக மத்தேயு.11:11-ம் வசனத்தில் கூறியுள்ளார்.

> ‘தேவனையே’ அறிந்து கொள்ளவேண்டும்! என்ற தீராத ஏக்கம் கொண்ட விசுவாசிகள் வெகு கொஞ்சமாகவே இருக்கிறார்கள்.

அநேக விசுவாசிகள் தங்கள் வேத அறிவை பெருக்கிக்கொள்ளவும், பரவசமான அனுபவங்களை பெற்றுக்கொள்ளவுமே கவனமாயிருக்கிறார்கள். இதனிமித்தமே, இன்று பெரும்பாலோர் வஞ்சிக்கப்பட்டு, புதிய உடன்படிக்கை சத்தியங்களிலும், கிறிஸ்துவின் சரீரம் கட்டப்பட வேண்டும் என்பதிலும் ‘யாதொரு வெளிப்பாடும்’ இல்லாமல் இருக்கிறார்கள்!

பின்மாற்றமும், சீர்திருத்தமும்!

கடைசி நாட்களில் “ஒரு கிறிஸ்தவனாய் வாழ்வது கடினம்!” (2தீமோ.3:1-Living) என கூறப்பட்டிருக்கிறோம். அது, உபத்திரவத்தினிமித்தம் அல்ல.... மாறாக, ‘அநேக கிறிஸ்தவர்கள்’ “தேவபக்தியின் வேஷத்தை மாத்திரம் தரித்து கொண்டு, அதன் உள்ளான வல்லமையை மறுதலிப்பார்கள்” (2தீமோ.3:5) என்ற நிலைதான்! இதை வேறு விதமாய் சொல்லவேண்டுமென்றால், அவர்கள் தங்களின் சரியான போதகத்தை பிரபல்யபடுத்தி, கிறிஸ்துவின் மீது கொண்ட தனிப்பட்ட அன்பின் தியானத்தையும் அல்லது நடைமுறை தேவபக்தியையும் அலட்சியப்படுத்துகிறார்கள்!

மரித்த நிலையிலிருக்கும் ஸ்தாபன கிறிஸ்தவத்தை விட்டு, ஆவிக்குரிய சத்தியத்தை நாடி அநேகர் வெளியே வந்திருக்கிறார்கள். ஆனால் அதிகபட்சத்தில், சிலகாலம் கழித்து, சாத்தான் அவர்களை பரவச கிறிஸ்தவத்திற்கும்! பிரமாணத்துவத்திற்கும்! அல்லது ஒத்தவேஷம் தரிப்பதற்கும்! வழிதவறச்செய்து, சாத்தான் அவர்களை மேற்கொண்டு விட்டான்!

> முதலாம் நூற்றாண்டில்கூட, ஆதி அப்போஸ்தலர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சில சபைகள், உலகத்திற்கும் ஒத்தவேஷத்திற்கும், 50 வருடங்களுக்குள் இழுக்கப்பட்டுப் போனதை நாம் கண்டிருக்கிறோம்!

அதைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில், கிறிஸ்தவ சபைகள் இன்னும் அதிகமாய் பின்மாற்றத்திற்குள் சென்றன! ஆகிலும், அவ்வப்பொழுது, சபைகளின் நிலையை ஆதி தரத்திற்கு மீட்டுக் கொள்ள பாரம் நிறைந்த “**ஒரு முழு இருதயமான மனிதனை**” *தேவன் கண்டுபிடித்தார்! பின்பு தேவன், அந்த நபரின் மூலமாய் ஓர் சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்தார்!*

இவ்வாறு சபையின் சரித்திரத்தில் தோன்றிய ஒவ்வொரு சீர்திருத்த இயக்கமும், 'ஒரு தீரமான மனிதனைக் கொண்டு ஆரம்பித்து' அவர் மூலமாய் ஒருமித்த மனம் கொண்ட "ஒரு சிறு குழுவை" தேவன் கூட்டினார். அந்த முழு மனம் கொண்டவர்கள், அந்நாளிலிருந்த 'செத்த சபையிலிருந்து' வெளியே வந்தார்கள்! இவ்வாறு தோன்றிய ஒரு இயக்கம், கொஞ்சம் கொஞ்சமாய் எங்கும் பரவியது.

இவ்வாறு கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்படும் இதுபோன்ற 'பிரிவினைகளைக் குறித்து' பரிசுத்தாவியானவர் கூறும்போது: "உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்க பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே!" என கூறியுள்ளார் (1கொரி.11:19).

அதுபோன்ற பிரிவினைகளை தேவனே ஏற்படுத்துகிறார்! அதன் மூலமாய், தம்முடைய நாமத்திற்கு "ஓர் தூய்மையான சாட்சியை" பாதுகாக்கிறார்.

ஆதியில் தேவன் ஒளியை உண்டாக்கியபோது, ஒளியை இருளிலிருந்து உடனடியாக பிரித்தெடுத்தார் (ஆதி.1:4). இதே செயலை, சபையின் சரித்திரத்தில் தொடர்ச்சியாக அவர் செய்து கொண்டிருக்கிறார்!

அபாயம் தரும் மனுஷருடைய அங்கீகாரமும்! ஐசுவரியமும்!

ஆதி நாட்களில் துவங்கப்பட்ட, தேவனுடைய புதிய இயக்கங்கள், பொதுவாய் மற்ற கிறிஸ்தவர்களால் உதாசினம் செய்யப்பட்டும், தள்ளப்பட்டும் இருந்தது! மேலும் இந்த இயக்கங்களில் இருந்த ஜனங்கள் 'ஏழையாகவும்' இருந்தார்கள். இதுபோன்ற நிலை, எந்த ஒரு இயக்கத்தையும் பத்திரமாய் பாதுகாக்கும்! ஏனென்றால், அங்குள்ள ஜனங்கள் 'எப்படியாகிலும் தேவனை மாத்திரமே பிரியப்படுத்த' ஆதங்கம் கொண்டிருப்பார்கள்!

இந்த இயக்கங்களின் மீது படிப்படியாய் தேவனுடைய ஆசீர்வாதம் பெருகியவுடன், மற்ற கிறிஸ்தவர்களால் மதிக்கப்படுவதும் படிப்படியாய் உயர்கிறது. இந்த சமயத்தில்தான் அபாயம் உள்ளே பிரவேசிக்கிறது. ஏனெனில் இதுமுதற்கொண்டு 'தேவனுடைய அங்கீகாரத்தை மாத்திரமே நாடிய பேராவல்' இப்போது குறையத் துவங்குகிறது.

காலங்கள் உருண்டோட, அன்று ஆரம்பத்தில் கூடிவந்த முழு இருதயமான ஜனங்களைப்போல் இப்போது இல்லாமல், முழு இருதயம் இல்லாத ஜனங்கள் 'அதிகமாய் வந்து' இவர்களோடு சேர்ந்து கொள்கிறார்கள். இந்த குழுவில் உள்ள பிள்ளைகளும், இப்போது

வளர்ந்து வாலிபர்களாய் மாறிவிட்ட நிலையில், தங்கள் பெற்றோர்கள் முழு இருதயம் கொண்டவர்களாய் இருந்ததைப்போல் இவர்கள் இருப்பதில்லை!

இந்த இயக்கம் இப்போது எண்ணிக்கையிலும் வளர்ச்சி அடைந்து, அதிக பணமும் வந்து சேர்கிறபடியால்..... அபாயம் இன்னமும் அதிகமாகிறது. பணம் ஒரு நல்ல வேலைக்காரன்! ஆனால் ஒரு பயங்கரமான எஜமான்! அந்த இயக்கத்திலுள்ள தலைவர்கள் தொடர்ச்சியான விழிப்பும், பணத்தை செலவழிக்கும் விதத்தில் அதிக கவனமும் கொண்டிருக்காவிட்டால், அந்த இயக்கத்தைப் பணம் அழித்துவிட முடியும்! கிறிஸ்தவ உலகில், மிக அருமையான நல்ல இயக்கங்களை 'திரளான பணத்தை பயன்படுத்தி' அவர்களை சாத்தான் அழிக்க வகை தேடியிருக்கிறான்!

சில இடங்களில் அந்த இயக்கத்தை ஸ்தாபித்தவர், இதுபோன்ற வீழ்ச்சியை எதிர்த்து நிற்கிறார்! ஆகிலும், அவர் தெளிவாய் காண்பதுபோல அவருடைய எல்லா உடன் ஊழியர்களும் காண்பதில்லை. ஆகவே, அவர் மரித்தவுடன், அந்த இயக்கம் பின்மாற்றம் அடைந்து **'ஆதியில் கொண்டிருந்த தன்னுடைய தரிசனத்தை'** *இழந்து விடுகிறது! அதன் பின்பு, மற்றொரு முழு இருதயமான மனிதனை கண்டுபிடிக்கும் வரை, தேவன் காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது.*

> **ஒரு இயக்கத்தின் ஆவிக்குரிய தன்மை, அங்குள்ள தலைவர்கள் வைத்திருக்கும்: கிறிஸ்துவின் மீதுகொண்ட அன்பின் தியானத்தையும், அவர்களின் தாழ்மையையும், பாவத்தின் மீதுகொண்ட உணர்வுள்ள ஜீவியத்தையும், பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் நிலைத்திருக்கும் வாஞ்சையையும், பண ஆசையிலிருந்து விடுதலை பெறுவதையும், தங்கள் சக மூப்பர்களை மதித்து நடப்பதையும், தங்கள் மந்தையின் மீதுகொண்ட அன்பையும், தேவனோடு அனுதினமும் இசைந்து நடக்கும் ஜீவியத்தையும்.... பொறுத்ததேயாகும்!**

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்கள்

ஆண்டவர் தம்முடைய ஜனங்களுக்கு வாக்குதத்தங்கள் கொடுத்தபோது "நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாக தெரிந்து, உங்களை சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வந்து, உங்களுக்கு **என் இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன்!** *அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்" என எரேமியா.3:14,15 வசனங்களில் கூறினார்.*

இங்கு குறிப்பிடப்பட்ட 'சீயோன்' தேவனுடைய உண்மையான சபையைக் குறிக்கிறது. தன்னுடைய 'சீயோனுக்கு' ஊரில் ஒருவனும், குடும்பத்தில் இரண்டு பேருமாக ஜனங்களைக் கொண்டு வந்து சேர்க்கிறார். இந்த ஜனங்கள், ஆண்டவர் கட்டும் சபைக்குள் வரும் போது, "அவர்களுடைய இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களைக்" கொடுக்கிறார்! ஆகவே, ஒரு உண்மையான தேவனுடைய சபைக்கு காணப்படும் பிரதான அடையாளம், அந்த சபையில் 'தேவனுடைய இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்கள்' இருப்பார்கள் என்பதுதான்!

தேவனுடைய இருதயம், ஒரு அன்பின் இருதயமாகும்! அந்த அன்பு தனக்கான யாதொன்றும் தேடாது! ஆகவே, தேவனுடைய இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்கள், **யாதொரு விஷயத்திலும் தனக்கானதைத் தேட மாட்டார்கள்!** *அதுபோன்ற மேய்ப்பர்கள், யாதொருவர் பணத்தையோ அல்லது அவர்களின் கனத்தையோ தேடமாட்டார்கள்! அவர்கள் மனுஷர்களைப் பிரியப்படுத்தவோ அல்லது அவர்களைக் கவர்ச்சிக்கவோ முயற்சித்திடமாட்டார்கள். அதற்குப் பதிலாக, விசுவாசிகளை தீவிரமாய் கட்டி எழுப்பி* **"அவர்களை கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாய் நிறுத்தும்படிக்கே"** *பிரயாசப்படுவார்கள் (கொலோ.1:28). இதுபோன்ற வாஞ்சை நிறைந்த ஒரு மனிதனை ஒரு நகரத்திலோ அல்லது ஒரு கிராமத்திலோ, எந்த சந்ததியில் காணப்பட்டாலும், அவர்கள் மூலமாகவே தன்னுடைய சபையை தேவன் கட்டுவார்!*

இதற்கு மாறாக, தங்கள் ஸ்தாபனங்களைவிட்டு வெளியேறிய அநேக விசுவாசிகள் "புதிய ஏற்பாட்டின் மாதிரியை" பின்பற்ற விரும்பி, அவர்களின் உபதேசங்கள் அனைத்தும் மிகச் சரியாக இருந்தாலும் "பணத்தை நேசித்து! தங்களுக்கானத்தை நாடி" அதோடு சேர்த்து 'கிறிஸ்துவின் சரீரத்தை' தாங்கள் கட்டுவதாகவும் எண்ணிக் கொள்கிறார்கள்! இவ்விதமான அவர்களுடைய பிரயாசங்களில் குழப்பமும், ஒழுங்கின்மையுமே நிலவுகிறது! அவர்கள் கட்டியவைகள், முடிவில் மற்றொரு பாபிலோனாய் மாறுகிறது!

> ஒரு மனிதன், தனக்கானதை தேடாதிருப்பதை தேவன் காணும் போது மாத்திரமே, அங்கு அவர் தன்னுடைய உண்மையான சபையைக் கட்ட முடியும். இதுபோன்ற "தேவனுடைய இருதயத்தின் பாரத்தை ஜனங்களோடு பகிர்ந்துகொள்ளும்" ஒரு மனிதன் போதும்! அவர், ஒரு ஆயிரம் அரை-குறை விசுவாசிகளாய் இருந்து கொண்டு 'வெறும் புதிய உடன்படிக்கையின் தாற்பரியங்களை பின்பற்றுகிற வர்களாய்' இருப்பவர்களைக் காட்டிலும், தேவனுக்கு அதிக மதிப்புடையவர்கள்!

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மேய்ப்பனாயிருப்பது.... தியாகமும், அசௌகரியமும், துன்பமும் நிறைந்ததாகும்! மேலும்

தவறாய் புரிந்து கொள்ளப்பட்டு பாடுபடுவதற்கு விருப்பத்தையும், எதிர்ப்பையும், இழிவு செய்யப்படுவதையும், புறங்கூறுதலையும்.... மனதார ஏற்றுக்கொள்பவர்களாயிருக்க வேண்டும்! அதுபோன்ற ஒரு மேய்ப்பன் 'தனக்கானதைத் தேடாத ஒரு மனைவியினால்' ஆசீர்வதிக்கப் பட்டிருந்தால், அவனுடைய வீட்டில் 'தேவன் எதைச் செய்ய விரும்புகிறாரோ' அதைச் செய்வதற்கு அவனுடைய வீடு எப்போதும் திறந்திருக்குமென்றால்.... அந்த தம்பதியரைக் கொண்டு 'தேவன் என்னவெல்லாம் செய்வார்' என்பதற்கு யாதொரு வரம்பும் இல்லை!

இங்கு நான் 'ஏராளமான ஜனங்களை' கூட்டி வைப்பதை பேசவில்லை! நானோ கூடிவந்த ஜனங்களின் 'தரம் ஒன்றையே' பேசுகிறேன். தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு 'எண்ணிக்கை' எக்காலத்தும் ஒரு அடையாளமல்ல!

ஏராளமான "தனிமனித ஆராதனை குழுவினர்களும், பொய்யான மார்க்கங்களும்" கோடிக் கணக்கில் பெருகி இருக்கிறார்கள். இதை வைத்து சாதித்ததற்குரிய ஒரு நிரூபணமும் இல்லை!

இயேசுவின் நாட்களில், அவர் கண்களை ஏறிட்டுப் பார்த்து "ஒரு மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல்" ஜனங்கள் இருப்பதையே கண்டார். அதே நிலைதான் இன்றுமுள்ளது. எங்கும் நிறைந்த தேவையாய் இருப்பதெல்லாம் "தேவனுடைய இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்களே" ஆவர்!

இஸ்ரவேலைக் குறித்த ஒரு நீண்ட சரித்திரம் பழைய ஏற்பாட்டில் நமக்குத் தரப்பட்டுள்ளது. அது ஏனென்றால் "அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, அவைகளை நாம் தவிர்த்து விடவேண்டும்" என்பதற்காகவேதான்! ஒரு ஞானமுள்ள மனிதன், இஸ்ரவேலின் சரித்திரத்திலிருந்து "தான் தேவனைவிட்டு வழி விலகுவதை எவ்வாறு தவிர்க்கலாம்?" என்பதை கற்றுக் கொள்வான்!

தேவ பக்தியான யோசுவாவின், தாவீதின் காலங்கள்:

யோசுவா ஒரு தேவ பக்தியான மனிதன்! அவர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபோது, இஸ்ரவேலுக்கு மிக அருமையான தலைமைத்துவத்தை ஏற்று நடத்தினார்! அவர் தன் முழு குடும்பத் தோடும் .... மற்ற இஸ்ரவேலர்கள் கர்த்தரை விட்டு தூரம் சென்றிட தீர்மானித்தாலும், தன் குடும்பமாய் கர்த்தரையே சேவிக்க தீர்மானம் கொண்டிருந்தார் (யோசுவா.24:15). இவ்வாறு 'தேவையானால்' தான் மாத்திரம் தனியாய் நிற்பதற்கு துணிந்த ஒரு மனிதனே "தேவபக்தி நிறைந்த தலைமைத்துவத்தை, எந்த ஒரு சபைக்கும்" இன்று கொடுத்திட

முடியும். யோசுவாவின் ஜீவிய காலத்தில், இஸ்ரவேல் தொடர்ச்சியான ஜெயத்தில் முன்னோக்கிச் சென்றது!

ஆனால், யோசுவா மரித்து விட்டார்! அவருக்குப் பிறகு என்ன நடந்ததோ, அதுவேதான் இப்போதும் நடப்பதை நாம் காண முடிகிறது. ஆம், ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, ஒரு குறிப்பிட்ட தேசத்தில் தேவன் ஒரு மனிதனை எழுப்பும்போது.... அவர் தன்னுடைய பூமிக்குரிய ஓட்டத்தை முடித்து கடந்து சென்று விடுகிறார்!

நியாயாதிபதிகள் புத்தகத்தில், இஸ்ரவேல் எவ்வாறு வீழ்ச்சி அடைந்தது? என வாசிக்கிறோம், யோசுவாவின் தலைமையின் மூலமாய் பெற்ற வேகத்தை, இரண்டாவது சந்ததி கொஞ்சகாலம் மாத்திரமே வைத்திருந்து ஜீவித்தார்கள்! அதன்பின்பு அவர்கள் விக்கிரகாராதனைக்குள் வீழ்ந்தார்கள்! யோசுவாவின் காலத்தில், இஸ்ரவேல் 'ஒரு ரயில்வண்டி' தன் வல்லமையான எஞ்சினைக் கொண்டு குன்றின்மேல் இழுத்து செல்லப்பட்டதைப்போல் இருந்தது. யோசுவா மரித்தவுடன், எஞ்சின் துண்டிக்கப்பட்டு போனது! அதன்பிறகு, ரயில் வண்டியை இணைத்துச் செல்ல, வேறொரு எஞ்சின் இல்லை! ஆகவே அந்த ரயில்வண்டி மெல்ல பின்வாங்கி, நின்று.... குன்றின் அடிவாரத்திற்கு உருண்டு, நொருங்கிப் போனது!

இதுபோன்ற நிலைதான் தாவீதின் காலத்திலும் சம்பவித்தது!

இஸ்ரவேலருக்கு, சவுல் முதல் இராஜாவாய் இருந்தார். அவருடைய ஆரம்பம் மிகுந்த தாழ்மையுடன் இருந்தது. ஆனால், அவருடைய பின்மாற்றமும் வேகமாய் சம்பவித்தபடியால், அவர் மீது வைத்திருந்த அபிஷேகத்தை தேவன் நீக்கி விட்டார். முதலாம் சந்ததியிலிருந்த இயக்கங்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி "சவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியின்" சித்திரமாகவே இருக்கிறது! இவ்வாறாகவே, கிறிஸ்தவ உலகில் ஏராளம் சம்பவித்துவிட்டது!

> சாமுவேல் மூலமாக தேவன் சவுலிடம் பேசியபோது, இராஜ்ஜியத்தை "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனிடம்" தேவன் கொடுக்கப் போவதாக கூறினார்! (1சாமு. 13:14). தாவீதே, அந்த மனுஷன்!

இந்த தேவனுடைய தீர்மானம், சவுலை சொல்லொண்ணா பொறாமைக்குள் வீழ்த்தியது! சவுல், தாவீதை கடுமையாய் வெறுத்தது மாத்திரமல்லாமல், அவனை கொலை செய்யவும் விரும்பினான்!

ஆகிலும் அன்று இஸ்ரவேலில், தேவனுடைய அபிஷேகம் எங்கு உள்ளது என அறிந்தவர்கள், தாவீதோடு இணைந்து கொண்டார்கள்!

இவ்வாறாக தாவீதை சூழ்ந்து ஒரு சிறிய குழு ஆரம்பமாகியது. ஆனால் அவர்களோ, சவுலினால் அந்த தேசம் முழுவதும் துரத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, வேட்டையாடப்பட்டார்கள்! அவர்கள், தங்கள் ஜீவனை காத்துக் கொள்ள தப்பி ஓடவேண்டியதாயிருந்தது! இருப்பினும், அந்த சிறிய குழுவோடு தேவன் இருந்தார்!

இருப்பினும் பின்மாற்றம் அடைந்த அநேக கிறிஸ்தவ தலைவர்கள், தாங்கள் பெற்ற தேவனுடைய அபிஷேகத்தை பல வருடங்களாய் இழந்த பிறகும், தங்கள் மந்தையை ஆளுவதைப் போலவே, சவுலும் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் பல ஆண்டுகள் அமர்ந்து ஆண்டான்! ஆகிலும் சவுலை சூழயிருந்த திரளான ஜனங்கள் அவனிடம் நேசம் காட்டினார்கள்! அதுபோலவே இன்றுள்ள அநேக கிறிஸ்தவ தலைவர்கள் தங்கள் குழுவினரால் சூழப்பட்டிருக்கிறார்கள். தேவன் அவர்களோடு இல்லாமலே, ஒரு பெரிய கூட்டம் பின்பற்றிச் செல்வதில் யாதொரு மேன்மையும் இல்லை! கிறிஸ்தவரல்லாத மார்க்கத்தலைவர்கள் கூட, தங்களைச் சுற்றி திரள் கூட்டத்தை வைத்திருக்கிறார்கள்!

ஒவ்வொரு சந்ததியிலும், தேவனுக்காக முழு இருதயமாய் நிலைநின்ற அவருடைய 'மிகக் குறைந்த அளவு' ஜனங்களைக் கொண்டு, தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதை 'சபையின் சரித்திரம்' மறுபடியும் மறுபடியுமாக நிரூபித்துள்ளது!

அதுபோன்ற தேவபக்தியான 'குறைந்த ஜனங்கள்' தவறாய் கணிக்கப்பட்டு, கிறிஸ்தவ ஸ்தாபன நிறுவனங்களால் துன்புறுத்தப் பட்டனர்! அன்று சவுல் தாவீதை துன்புறுத்தியதைப் போலவே 'தங்கள் காலத்தில்' தேவன் என்ன செய்கிறார்? என்ற யாதொரு அறிவும் இல்லாத ஜனங்களால் துன்புறுத்தப்படுகின்றனர்!

தேவனோ தாவீதைப் பாதுகாத்து, அவனோடு இருந்த ஒரு சிறிய குழுவையும் பாதுகாத்து, அவன் இஸ்ரவேலின் இராஜாவாய் 40 ஆண்டுகள் அரசாண்டான்! அவனுடைய அரசாட்சியைக் குறித்து **"தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தான்!"** *என எழுதப்பட்டுள்ளது (அப்.13:36). இங்கு, தாவீது தேவனுடைய சித்தத்தை* **"தன் சந்ததியில் மாத்திரமே"** *நிறைவேற்றினான் என கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்!*

அவனுடைய மரணத்திற்குப் பிறகு, வீழ்ச்சி வேகமாய் நிகழ்ந்து விட்டது! அவனுடைய மகனாகிய சாலமோன் மோசமான பின்மாற்றம் அடைந்து, பேரழிவில் முடிந்தான். ஆரம்பத்தில், தன்னுடைய தேவ பக்தியான தகப்பனிடமிருந்து பெற்ற உற்சாகத்தைக் கொண்டு,

முன்னேறிச் சென்றான். ஆனால் அதே முன்னேற்றத்தின் திசையில் தொடர்ந்து செல்வதற்கு,

> "தேவன் மீது அப்படி ஒரு தாகம் இல்லாதபடியால்" ஆஸ்தியினாலும், ஸ்திரீகளாலும் வழிதவறிப் போனான் (1இராஜா.10:23;11:1-9). அன்றுபோலவே, அநேக கிறிஸ்தவ பிரசங்கிகள் 'இன்றும்' இருக்கிறார்கள்.

இவ்வாறாக தாவீதின் - சாலோமோனின் சரித்திரத்தில் நாம் கண்ட அதே வீழ்ச்சி, இன்றும் கிறிஸ்தவத்தில் மீண்டும் மீண்டும் சம்பவிக்கிறது. தேவனோடு இணைந்து ஓர் நல்ல இயக்கமாக அல்லது கிறிஸ்தவ ஸ்தாபனமாக துவங்கியவர்கள்... அவர்களின் இரண்டாவது அல்லது அதற்கு அடுத்த சந்ததியில் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதை கவனித்துப்பாருங்கள். அநேகமாக எல்லா இடங்களிலும், நான் கூறியதைப்போல் அவர்கள் வீழ்ச்சியின்படியில் இருக்கிறார்கள் என்ற உண்மையை காண்பீர்கள். இவ்வாறு ஏன் சம்பவித்தது? அதன் விடை எளிதாகவே இருக்கிறது: அந்த விசுவாசிகள், 'தனி நபராகிய இயேசு கிறிஸ்துவிடம்' ஈர்க்கப்படாமல், வேத வாக்கிய எழுத்திற்கே முக்கியம் தர ஆரம்பித்து விட்டார்கள். எங்கெல்லாம் 'கிறிஸ்துவின் மீது கொண்ட தனிப்பட்ட அன்பின் தியானத்தைவிட' உபதேசங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆவிக்குரிய வீழ்ச்சி துவங்கி, சுய நீதியும்! பரிசேயத்துவமும்! நிலை கொண்டுவிடும்.

எபேசு சபை

எபேசு சபையின் சரித்திரத்தை சீர்தூக்கிப் பாருங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அங்கு 3 வருடங்கள் தங்கி, இரவும் பகலுமாய் "தேவனுடைய முழு ஆலோசனைகளையும்" பிரசங்கித்தார் (அப்.20:27-31). ஆகவே, எபேசு கிறிஸ்தவர்கள், பவுலிடமிருந்து பல நூறு பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். மேலும், அவர்கள் நடுவில் பல விசேஷித்த அற்புதங்களையும் அவர் மூலம் கர்த்தரால் செய்யப் பட்டிருக்கிறதை கண்டிருக்கிறார்கள் (அப்.19:11.). அவர்கள் நடுவில் 'கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து', வெகு குறைவான இரண்டு வருடங்களில் **ஆசியா மைனரின்** *எல்லா சுற்றுப் பகுதிகளுக்கும் வியாபித்துச் சென்றது (அப்.19:10,19). அப்போஸ்தலர் காலங்களிலிருந்த எல்லா சபையினரையும் விட இவர்களே அதிக சிலாக்கியம் பெற்றவர்களாயிருந்தார்கள். அந்நாட்களில், எபேசு சபையே, ஆசியா மைனர் பகுதியில் தலைசிறந்த ஆவிக்குரிய சபையாய் விளங்கியது. இதை, எபேசு சபைக்கு பவுல் எழுதிய நிருபத்திலிருந்து நாம் காணலாம். அவர் மற்ற சபைகளுக்கு நிருபங்கள் எழுதியதைப்*

போன்று இல்லாமல், எபேசு சபைக்கு எழுதின நிருபத்தில் "யாதொரு திருத்துதலையும்" எழுத வேண்டிய அவசியமில்லாதிருந்தது!

பவுல் எபேசுவை விட்டுப் போகும்போது, அங்குள்ள மூப்பர்களை எச்சரித்து "நான் போன பின்பு, மந்தையை தப்ப விடாதபடி கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்! உங்களில் சிலர் எழும்பி சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளை போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்" (அப்.20:29,30) என கூறினார்.

பவுல் அங்கு இருந்த காலம் வரை, எபேசு மந்தையில் ஒரு ஓநாய்கூட உள்ளே பிரவேசிக்கத் துணியவில்லை! ஏனென்றால், பவுல் ஓர் கண்டிப்பான வாசல் காப்பவராய், கர்த்தரிடமிருந்து ஆவிக்குரிய அதிகாரத்தை பெற்றவராயும் இருந்தார் (மாற்கு.13:34).

ஆகிலும், அங்கிருந்த மூப்பர்கள், அவரைப்போல் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்தவர்களாய் இல்லை என்பதை காணக்கூடிய 'பகுத்துணர்தலையும்' பெற்றிருந்தார். ஆகவேதான், தான் அங்கிருந்து சென்ற பின்பு, அவர்கள் சபையின் தலைமைத்துவத்திற்கு வந்தவுடன், வெகுசீக்கிரத்தில் சபை சிதைவடையும்! என அறிந்திருந்தார்.

எபேசு சபைக்கு என்ன நடக்கும்? என்பதற்கு "ஓநாய்கள் உள்ளே வரும்!" என்ற ஒரு தீர்க்கதரிசனத்தை அந்த மூப்பர்களுக்கு பவுல் தரவில்லை! அப்படி நிச்சயமாய் இல்லை! அவர் கூறியது ஒரு **'எச்சரிக்கையே'** *ஆகும்! அங்குள்ள மூப்பர்கள் தங்களையே நியாயந் தீர்த்து, மனந்திரும்பி வாழ்வார்களென்றால் 'பவுல் எச்சரித்தைப் போல்' நடைபெற அவசியமில்லை. நினிவேயின் அழிவை, யோனா பிரசங்கித்தான். ஆனால், அவன் முன்னுரைத்ததைப்போல் சம்பவிக்க வில்லை! ஏனென்றால், நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பி விட்டார்கள்! அதுபோலவே எபேசிலிருந்த சபையும் மனந்திரும்பி விட்டால், பவுல் முன்னுரைத்த வீழ்ச்சியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்! ஆனால் அங்கிருந்த மூப்பர்களோ, பவுலின் எச்சரிப்பை 'சீரியஸாக' எடுத்துக் கொள்ளாதபடியால், அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிச் சென்றார்கள்.*

ஐம்பது வருடங்களுக்குப் பின்பு, எபேசு சபை, உண்மையாகவே ஒரு மோசமான நிலைக்கு வந்துவிட்டது. அவர்களுடைய உபதேசங்கள் இன்னமும் சரியாகவே இருந்தது! அவர்கள் இன்னமும் கிறிஸ்தவ ஊழியங்களுக்கு வைராக்கியம் கொண்டிருந்தார்கள்! அவர்களுடைய முழு நேர ஜெப கூட்டங்களும், அவர்களுடைய விசேஷித்த

கூட்டங்களும், தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது. ஆனால், அவர்களின் **ஆவிக்குரிய நிலையானது** *மிக மோசமாய் மாறியபடியால் 'அவர்களை ஒரு சபையாய் வைத்திருந்த தன்னுடைய அங்கீகாரத்தை' கர்த்தர் எடுத்துபோடும் எல்லைக்கு வந்துவிட்டது!*

அவர்கள் இழைத்த தவறு என்ன? அவர்கள், கர்த்தர் மீது கொண்டிருந்த தங்களது அன்பின் தியானத்தை இழந்துவிட்டார்கள்! (வெளி.2:4,5).

எபேசு சபையின் சரித்திரம் நமக்கு போதிப்பது என்ன? எந்த உபதேசமோ அல்லது மார்க்க ஊழியங்களோ "கர்த்தர்மீது கொண்ட ஊக்கமான அன்பின் தியானத்தைவிட" முக்கியமானது அல்ல. மெய்யான ஆவிக்குரிய தன்மையின் அடையாளம் ஒன்றே ஒன்றுதான்: இயேசுவின் ஜீவன், நம்முடைய வாழ்க்கையில் அதிகஅதிகமாய் பெருகுவதேயாகும்! இதுபோன்ற வளர்ச்சி, "ஆண்டவர்மீது கொண்ட தனிப்பட்ட தியானத்தில்" நாளுக்கு நாள் பெருகுவதின் மூலமே சாத்தியமாகும்! (2கொரி.11:3).

முதலாவது சந்ததி.... இரண்டாவது சந்ததி

பவுல்கூட, தன்னுடைய சந்ததியில் மாத்திரமே 'தேவனுடைய நோக்கத்தை' நிறைவேற்ற முடிந்தது. அவரோடு ஜீவித்த 'தீமோத்தேயு போன்ற' வெகு குறைவானவர்களே அவருடைய ஆவியைப் பருகி, 'சுயநலமற்ற' கிறிஸ்துவின் மீது கொண்ட தியானத்தில் ஜீவித்தார்கள் (பிலி.2:19-21). மற்றபடி, **பவுல் தன்னுடைய ஆவிக்குரிய தரத்தை,** *அவர் ஸ்தாபித்த சபைகளிலுள்ள 'இரண்டாவது சந்ததி விசுவாசிகளிடம்' கொடுக்க முடியவில்லை. அது ஏனென்றால், 'அவர்களாகவேதான்' தங்கள் தேவனை அறிந்து கொள்ள வேண்டும்!*

கிறிஸ்தவ உலகின் சரித்திரத்தில் தேவனால் அனுப்பப்பட்ட ஒவ்வொரு பக்தி நிறைந்த சீர்திருத்தவான்களும் "தேவனுடைய நோக்கத்தை" தங்கள் சொந்த சந்ததியில் மாத்திரமே செய்திட முடிந்தது!

ஒரு குறிப்பிட்ட சந்ததியில், அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த சத்தியத்தைக் கொண்டு, 'சபையை உயிர்ப்பித்து' ஜனங்களை தேவபக்தியான வாழ்க்கைக்குள் நடத்த, ஒரு தேசத்தில் **'ஒரு தேவ பக்தியான மனுஷனையே' தேவன் எழுப்புகிறார்!** *இவ்வாறாகவே, 'அந்த பக்திகொண்ட மனுஷனை சூழ்ந்து' அவர்களின் சந்ததியில் உண்மையற்ற மாய்மாலங்களைக் கண்டு சோர்வடைந்த 'முழு இருதயமான சில விசுவாசிகள்' கூடி வருகிறார்கள்! இவ்வாறாகவே, ஒரு இயக்கம் படிப்படியாய் துவங்குகிறது. வெகு சீக்கிரத்தில்,*

கர்த்தருக்கென்று ‘ஒரு தூய்மையான சாட்சி’ அவர்களின் ஸ்தலத்தில் நிலைநிறுத்தப்படுகிறது.

அதுபோன்ற குழுவினர், ஆரம்ப நாட்களில் எப்போதுமே குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களாயிருப்பார்கள்! முன் இருந்த சபைகளால் தீவிரமாய் பகைக்கப்பட்டு துன்பமும் அடைவார்கள்! இன்னும் அதிகபட்சத்தில், ஏழைகளாகவே இருப்பார்கள்! எல்லோரையும் விட, அந்த குழுவின் ஸ்தாபகரே பகைப்படுவார்! தேவனால் முன்பிருந்த சந்ததியில் எழுப்பப்பட்ட குழுவினரே.... இப்போது தேவன் எழுப்பியிருக்கும் தலைவரை அதிகமாய் பகைப்பார்கள். கர்த்தர் தங்களுடைய குழுவை விட்டு விலகியதை அறியாதவர்களாய், ‘தேவன் எழுப்பிய புதிய குழுவினர் மீது பொறாமை’ கொண்டிருப்பார்கள்! சாத்தானும் அவர்களோடு கைகோர்த்து ‘இந்த புதிய குழுவினரை’ தாக்குகிறான்!

> **முன்பு இருந்த குழுவில் உள்ள விசுவாசிகள் மூலமாய் “குற்றம் சாட்டும் ஆவி கொண்டு” சாத்தான் தன்னுடைய கிரியையை செய்கிறான். ஆனால், எல்லாவித துன்புறுத்தலும், மனுஷீக தந்திரங்களும், பிசாசின் கிரியைகளும் தேவனுடைய பணிக்கு இடையூறு செய்ய முடிவதில்லை.**

தேவன் எழுப்பிய அந்த மனுஷன் மூலமாய், அந்த புதிய சந்ததியில் “தம்முடைய நாமத்திற்கு ஓர் தூய்மையான சாட்சியை” தேவன் ஜெயமாய் நிலை நாட்டுகிறார்!

ஆனால், அந்த இயக்கத்தின் ஸ்தாபகர் மரித்தவுடன் என்ன நடக்கும்? அதுபோன்ற ஒவ்வொரு சமயத்திலும், அடுத்த சந்ததியில் அவரைப் பின்பற்றினவர்கள், தங்கள் தலைவன் போதித்த **‘உபதேசங்களை’ அதிகமாய் வலியுறுத்தி,** *கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பின் தியானத்தை இழக்கிறார்கள்! இப்போது, ‘தேவபக்தியின் வேஷமே’ சகல முக்கியத்துவத்தையும் பெற்று ‘தேவ பக்திக்குரிய பெலன்’ புறக்கணிக்கப்பட்டது! இவ்வாறாகவே, வீழ்ச்சியும், சீர்கேடும் ஏற்படுகிறது!*

இந்நிலையில் இந்த இயக்கம், மூன்றாவது சந்ததிக்கு செல்லும் போது, அந்த குழுவில் ஏற்பட்ட கறையும், அழிவும் **முற்றிலுமாய்** *நிகழ்ந்து விடுகிறது. இனி அந்த குழுவில், அவர்களின் ‘ஸ்தாபகர்’ வைத்திருந்த தேவபக்தியும் ஆவிக்குரிய தன்மையும் அந்த குழுவில் இருப்பதில்லை. தங்கள் ஸ்தாபகரின் ‘அதே உபதேசங்களை’ அவர்கள் பிரசங்கித்தாலும், தங்கள் ஸ்தாபகரின் பேரை வைத்து மேன்மை பாராட்டிக்கொண்டாலும்..... அவர்களோ, இப்போது*

பாபிலோனையே கட்டிக் கொண்டிருக்கிறார்கள்! ஒரு ஆவிக்குரிய இயக்கமாக துவங்கிய ஒரு குழுவினர், மனுஷீக ஆத்துமத்திற்குரியவர்களும்! மாம்சத்திற்குரியவர்களுமாய், முற்றுப்பெற முடியும். இன்னும் சொல்லப்போனால் ஒரு தேவ மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட அந்த இயக்கம் "ஒரு தனிமனித ஆராதனை குழுவாகவும்" முடிவடைய முடியும்! இதுசமயத்தில், எந்த உபதேசமும் அது எவ்வளவு முக்கியமும் அல்லது நன்மையுமாயிருந்தாலும் "இயேசுவின் மீது கொண்ட அன்பின் தியானத்திற்கு" ஓர் மாற்றாக இருந்திட முடியாது!

> **இந்த எல்லா ஆவிக்குரிய இயக்கங்களின் ஸ்தாபகர்கள் 'கர்த்தரை அறிந்திருந்தார்கள்'. இரண்டாவது சந்ததியினரோ, தங்கள் ஸ்தாபகரையும், அவர் பிரசங்கித்த உபதேசங்களையும் மாத்திரமே அறிந்திருந்தார்கள்!**

இரண்டாவது சந்ததியை அடையும் ஒவ்வொரு இயக்கத்திற்கும் பொதுவாய் நிகழும் சம்பவம் என்னவென்றால், அந்த இயக்கம் பணமும் ஐசுவரியமும் கொண்டதாய் மாறுகிறது! அந்த இயக்கத்திலுள்ள அங்கத்தினர்கள், திரளான பணத்தையும், வீடுகளையும், நிலங்களையும் கொண்டவர்களாய் மாறுகிறார்கள்! என்பதுதான். **ஐசுவரியம் வரும்போது, அது தன்னோடுகூட பெருமையையும்,** தன்னம்பிக்கையையும், சுய கௌரவத்தையும் சேர்த்தே கொண்டு வர வழி திறக்கிறது. வெகு குறைவான விசுவாசிகள் மாத்திரமே, சரியான விதத்தில் ஐசுவரியத்தை கையாண்டிட, அறிந்திருக்கிறார்கள்!

பொதுவாய், அந்த இயக்கத்தின் முதல் சந்ததி பொருளாதார போராட்டத்தில் இருக்கிறபடியால், அவர்கள் தேவனோடு நெருங்கியிருப்பார்கள். இரண்டாம் சந்ததியினரோ, தங்களின் சகல ஐசுவரியத்தோடும் 'உலகத்தை நெருங்கியிருக்கிறபடியால்' தங்கள் ஆவிக்குரிய தன்மையை இழந்து விடுகிறார்கள்! இப்போது, அந்த குழுவிலிருந்து தேவன் தன்னை விலக்கிக் கொள்கிறார்! அந்த குழு பாபிலோனின் ஒரு பங்காய் முடிவடைகிறது!

இவ்வித துயர நிலை, சபையின் சரித்திரத்தில் ஒவ்வொரு சீர்திருத்த இயக்கத்திற்கும் சம்பவித்துள்ளது.

> **அதுபோன்ற ஒவ்வொரு சமயத்திலும், அந்த முதலாவது இயக்கம் பின்மாற்றம் அடைந்தவுடன், மற்றொரு சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு, எங்கோ ஒரு ஸ்தலத்தில் "வேறொரு மனிதனை" தேவன் எழுப்ப வேண்டியதாயிருக்கிறது.**

இவ்வாறாகவே "மரணமும் உயிர்த்தெழுதலும்" கிறிஸ்தவ சரித்திரத்தில் மாறி மாறி நிகழ்ந்து வருகிறது. இவ்வித அவரின் கிரியையின் மூலமாய், எல்லா காலங்களிலும், இந்த பூமியில்

“தம்முடைய நாமத்திற்கு தூய்மையான சாட்சிக்கொண்ட” சிறு குழுவை தேவன் பாதுகாத்து வருகிறார்!

ஞானமுள்ளவர்கள் மாத்திரமே, தங்களைச் சுற்றிலும் பார்த்து, தங்கள் சந்ததியில் ‘இப்போது’ எங்கு தேவனுடைய அபிஷேகம் தங்கியிருக்கிறது?” என்பதைக் கண்டு, அப்படிப்பட்ட ஒரு சபையில் முழுவதுமாய் தங்களை இணைத்துக் கொள்வார்கள்! இதற்கு முன் இருந்த சந்ததிகளில், யாரிடத்தில் அபிஷேகம் இருந்தது? என்பது அவர்களுக்கு அக்கறை இல்லை. **இப்போது தேவன் அசைவாடுவதை காண்பார்களே அல்லாமல், முன் அல்லது இரண்டு சந்ததிக்கு முன்பாக தேவன் அசைவாடியதை காண்பதற்கு எத்தனிக்க மாட்டார்கள்!**

வேத வாக்கியம் மிகத்தெளிவாக “தேவபக்தியின் வேஷத்தை மாத்திரம் கொண்டவர்களை, நீ விட்டு விலகு” என கூறுகிறது (2தீமோ.3:5). மேலும் “சுத்த இருதயத்தோடே, கர்த்தரை தொழுது கொள்ளுகிறவர்களிடம் மாத்திரமே” ஐக்கியமாய் இருக்கும்படி நாடு! (2தீமோ2:22) எனவும் கூறுகிறது. ஓர் சுத்த இருதயம் கொண்டவர்கள், கர்த்தரை தங்கள் முழு இருதயமாய் அன்பு கூருகிறவர்கள்! அதுபோன்ற விசுவாசிகள், அதிக பணத்திற்கோ அல்லது சொகுசிற்கோ அல்லது கனத்திற்கோ நாட்டம் வைத்திருக்கமாட்டார்கள். அவர்கள், கர்த்தரிடம் மாத்திரமே முழுதியானம் வைத்திருப்பார்கள்.... அல்லாமல் வேறு எந்த உபதேசத்தின் மீதும் அல்ல! அதுபோன்ற விசுவாசிகளிடம் மாத்திரமே, நாம் எப்போதும் ஐக்கியத்தை நாட அழைக்கப் பட்டிருக்கிறோம்!

இவ்வாறாகவே, தேவனுடைய கிரியை ஒரு சந்ததியிலிருந்து மறு சந்ததிக்கு முன்சென்று.... ஒவ்வொரு சந்ததியிலும் “தன்மீது தியானம் கொண்ட புருஷர்களை” தேவன் ‘தப்பாமல்’ எழுப்புகிறார்! இவ்வாறாக, சாத்தானுடைய சகல முயற்சிகளும், தேவனுடைய நோக்கத்தை பாதிப்படையச் செய்திட முடியவில்லை!

21

'இருதயத்தின்' அந்தரங்க சிந்தைகள் வெளிப்படும்

இயேசுவைக் குறித்து சிமியோன் தீர்க்கதரிசனம் உரைத்தபோது "அவர் நியமணம் செய்யும் ஒரு தரத்தை, அநேகர் தாக்குவார்கள்! **அதன் மூலமாய்,** அவர்களுடைய இருதயங்களின் அந்தரங்க யோசனைகளை அவர் வெளிப்படுத்துவார்" என்று கூறினார் (லூக்கா.2:34,35-J.B.Phillips-விரிவாக்கம்). இந்த புத்தகத்தில் பிரகடனம் செய்யப்பட்ட அநேக உயர்ந்த தரத்தை குறை சொல்லும்படி அநேகர் தூண்டப் படுவார்கள். ஆகவே, **முடிவுரையாக நான் கூறுவதெல்லாம்:** இயேசு உயர்ந்த தரத்தை காண்பித்தபோது, அவரை ஜனங்கள் குறைகூறி தாக்கினார்கள். அவர்களுடைய செயல்களும், வார்த்தைகளும், மெய்யாகவே "அவர்களின் உள்ளான கறைப்பட்ட இருதயத்தை வெளிப்படுத்தி விட்டது!" என்பதை அறியாதிருக்கிறார்கள். இயேசு அவர்களுடைய நடுவில் வரவில்லையென்றால், இதுபோன்ற அந்தரங்கத்தைக் காணும் சந்தர்ப்பம் நிகழ்ந்திருக்காது!

இயேசு ஒருசமயம் கப்பர்நகூமில் உள்ள ஜெப ஆலயத்தில் போதித்துக் கொண்டிருந்தபோது, அசுத்தாவி பிடித்த ஓர் மனிதன் உரத்த சத்தமிட்டான்! அந்த மனிதனிடம் வாசம் செய்த அசுத்தாவி, அதே ஜெபஆலயத்தில் பல வருடங்களாய் பரிசேயர்கள் போதித்தும், அவனுக்குள் அமைதியாய் குடிகொண்டிருந்தன. ஆனால், இயேசு வந்து பிரசங்கித்தவுடன், "அந்த மனுஷனுடைய உள்ளான நிலைமை", வெளிப்படுத்தப்பட்டது! (மாற்கு.1:21-27).

ஆம், எப்போதெல்லாம் இயேசு அவர்கள் நடுவில் வந்தாரோ, அப்போதெல்லாம் ஜனங்களின் உள்ளான நிலைமையும், அவர்கள் இருதயங்களின் நோக்கமும் வெளியரங்கமானது!

ஜெபஆலயத்திலிருந்த மார்க்கத்தலைவர்கள் எல்லோருமே, ஜனங்களின் பார்வைக்கு 'பரிசுத்தர்களாகவே' தோற்றமளித்தார்கள்! ஆனால் அவர்கள் நடுவில் இயேசு வந்தவுடன், அவர்களின் வெளித் தோற்றத்தின் வஞ்சகங்கள் உரிக்கப்பட்டு, அவர்களின்

மாய்மாலங்களும் வஞ்சனைகளும் வெளியரங்கமாயின!

விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு ஸ்திரீயை பரிசேய குழுவினர் 'அந்த ஸ்திரீயை கல்லெறிந்துக்கொள்ள' விரும்பிய சமயம், **இயேசு அவர்கள் நடுவில் வந்தார்!** அச்சமயத்தில் 'அவர்களுடைய உள்ளான இருதயத்தின் நோக்கங்கள்' உடனடியாக வெளியரங்கமானது (யோவான்.8:3-11). அந்த நிகழ்ச்சியில் 'இயேசுவின் மீது ஏதாகிலும் குற்றம் சாட்டுவதற்கே' பரிசேயக் குழுவினர் விரும்பினார்கள் (யோவான்.8:6). ஆனால் இயேசுவோ "உங்களில் பாவம் இல்லாதவன் முதலாவதாக கல்லெறியக்கடவன்" எனக்கூறினார். உடனடியாக 'அவர்கள் இருதயத்தின் உள்ளான நிலைமை' வெளியானது! அவர்கள் அனைவருமே, கல்லை கீழே போட்டு போய்விட்டாலும், "**பெரியோர்களே முதலாவதாக!**" வெளியேறினார்கள். 'மூத்த பரிசேயர்களே' மிகப்பெரிய மாய்மாலத்தில் எப்போதும் இருந்தார்கள்! ஒரு ஸ்திரீயின் பாவத்தை ஏதுவாய் கொண்டு அவளை குற்றம் சாட்டியவர்களின் துன்மார்க்கம் வெளிப்படும்படி தேவன் செய்தார். இங்கும், அவர்கள் நடுவே இயேசு வந்தவுடன் அவ்வாறு சம்பவித்தது.

இன்றும், நம்முடைய இருதயங்களில் "பிறரை ஆக்கினைக் குள்ளாக தீர்க்காதிருங்கள்! உங்களில் பாவம் இல்லாதவன் முதலாவதாக கல்லெறியக்கடவன்" எனக்கூறும் இயேசுவின் வார்த்தைகளை நாம் கவனித்து கேட்காவிட்டால், நாமும்கூட இந்த பரிசேய கூட்டத்தில் ஒருவராய் மாறி, இயேசுவின் சமூகத்தை விட்டு நித்தியமாய் விலகி விடுவோம். ஆகவே, "எல்லா நியாயத்தீர்ப்புகளையும்" நாம் தேவனிடம் விட்டு விடுவதே நலம்! ஏனெனில், அவர் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி!

பிலாத்து, ஒருவருக்கும் பயப்படாத யாருடைய அபிப்பிராயங் களையும் பொறுட்படுத்தாத, ஒரு வல்லமையான அதிபதி போல் காணப்பட்டான். ஆனால், **இயேசு அவனுக்கு முன்பாக நின்று பேசியபோது,** 'பிலாத்தின் உண்மையான நிலை' உடனடியாக வெளியரங்கமாக்கப் பட்டது. "இயேசு குற்றமற்றவர்" என பிலாத்து அறிந்திருந்தபோதும், அவரைச் சிலுவையில் அறைவதற்கு ஜனங்களிடம் பிலாத்து ஒப்புக் கொடுத்து விட்டான்! இவ்வாறாக,

> **பிலாத்து ஒரு கோழை என்பதும்! ஜனங்களின் அபிப்பிராயங்களுக்குப் பயந்தவன் என்பதும்! வெளியரங்கமானது!**

இவ்வாறு எல்லா சமயங்களிலும் இயேசுவுக்கு நேர்ந்த ஜனங்களின் எதிர்ப்பு 'அவர்களின் உள்ளான நிலையை' வெளியரங்கப்படுத்தியது! இவ்வாறாகவே, இயேசுவைக் குறித்து சிமியோன் தந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது!

இன்று, கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாய் இருக்கும் நாமும், அன்று கிறிஸ்துவின் முதல் சரீரம் (இயேசு) நிறைவேற்றிய அதே ஊழியத்தை நாமும் நிறைவேற்ற அழைக்கப்பட்டிருக்கிறோம்!

நாம் இயேசு பிரசங்கித்த ஜீவியத்தின் உயர்ந்த தரத்தை அறிவிக்கும் போது, மாம்சீகமான கிறிஸ்தவர்கள் நம்மை குறைகூறுகிறார்கள்! அவ்வாறு குறை சொல்லுபவர்கள், 'தங்கள் சொந்த இருதயத்தின் மனுஷீகத்தை' வெளிப்படுத்துகிறார்கள் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிவதில்லை! நாம் அவர்கள் நடுவில் சென்று "புதிய உடன்படிக்கையின் தரத்தை" அறிவிக்காவிட்டால், மற்றவர்களின் அந்தரங்கங்கள் வெளியரங்கமாவதற்கு வாய்ப்பில்லை!

அதற்கு ஓர் உதாரணமாய்: புதிய உடன்படிக்கை தரத்தை அறைகூவி "பொருளாதார விஷயங்களில் இயேசுவும் அப்போஸ் தலர்களும் நம்முடைய மாதிரியாயிருக்கிறார்கள். அவர்களைக் குறித்து 'ஓர் பரலோக அந்தஸ்து' இருந்தபடியால், தங்கள் சொந்த தேவைக்கோ அல்லது தங்கள் ஊழியத்திற்கோ ஒருமுறைகூட, ஒருவரிடமும் பணம் கேட்டதில்லை! என அறிவிக்கிறோம். தேவனுடைய தரத்தின்படியான இந்த வார்த்தையை நாம் அறிவிப்பதைக் கேட்ட மாம்சீக பிரசங்கிகளும், பாஸ்டர்களும், உடனடியாக எதிர்த்து 'பழைய உடன்படிக்கையிலுள்ள லேவியர்களின் உதாரணத்தை வைத்து' கேள்வி கேட்பார்கள். இவ்வாறாக அவர்களின் இருதயங்களில் மறைந்திருக்கும் சிந்தைகள் வெளியரங்கமாகின்றன:

1. *பொருளாதார விஷயங்களில் 'புதிய உடன்படிக்கையின் இந்த தரத்தை' அவமதிக்கிறார்கள்!*
2. *அவர்களின் தேவையை தருவதற்கு வல்லமையான தேவன் உண்டு! என ஏற்கமுடியாத அவர்களின் அவிசுவாசம்!*
3. *பழைய உடன்படிக்கை அழிக்கப்பட்டு, இப்போது இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களுமே நம்முடைய மாதிரி! லேவியர்கள் அல்ல! என்ற சத்தியங்களின் மீது கொண்ட அவர்களது அறியாமை! (எபிரெயர்.8:7-13; 12:1; 1கொரி.11:1; பிலி.3:17).*

இந்த ஒரு உதாரணமோ? ஏராளமான உதாரணங்கள் உள்ளன!

ஆகவே, 'இயேசு எதிர்க்கப்பட்டதைப்போலவே' மார்க்கத் தலைவர்களாலும் இன்றைய பிரசங்கிகளாலும் நாமும் எதிர்க்கப்படும் போது, அதைக் குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை! முதல் கிறிஸ்துவின் சரீரமாய், இந்த பூமியில் 20 நூற்றாண்டுகளுக்கு முன்பு

இயேசு நிறைவேற்றிய 'அதே ஊழியத்தை' நாமும் செயல் படுத்துகிறோம். இதனால் ஏற்படும் விளைவு ஒரே விதமாகவே இருக்கும்: நம்முடைய செய்திகளை எதிர்க்கும் ஜனங்களைப் பயன்படுத்தி, அவர்களின் இருதயங்களிலுள்ள மாம்சீக சிந்தைகளையும் வெளிப்படுத்துகிறார்.

சில சமயங்களில், தேவனுடைய ஜனங்களின் பாடுகளையும் பயன் படுத்தி, பிறருடைய 'இருதயத்தின் உள்ளான நிலையை' வெளிப்படுத்து கிறார். யோபு கடந்து சென்ற துன்பங்களை தேவன் பயன்படுத்தி, அவரிடம் பிரசங்கிக்க வந்த மூன்று பிரசங்கிகளின் சுய நீதியையும், அவர்களுடைய கடின இருதயத்தையும் தேவன் வெளிப்படுத்தினார்! (யோபு.1-42).

இயேசு சிலுவையில் தொங்கி பாடுபட்டபோது, அநேக ஜனங்களின் 'உள்ளான சிந்தைகள்' வெளிப்படுத்தப்பட்டன. அவரை கடந்து சென்றவர்கள் பரியாசம் செய்து, தங்கள் இருதயங்களில் படிந்திருந்த கறையை வெளிப்படுத்தினார்கள். இதற்கு நேர்மாறாக, ஒரு ரோம போர்ச்சேவகனின் 'அந்தரங்க உண்மையும்' வெளியானது..... அவன் "மெய்யாகவே இயேசு தேவ குமாரன்" என அறிவித்தான். சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்வனின் கறைப்பட்ட இருதயம் வெளியானது, அவன் நரகத்திற்கு சென்றான்! மற்றொரு சிலுவையில் அறையப்பட்ட கள்வனின் 'உண்மையான மனந்திரும்புதல்' வெளியானது..... அவன் பரதீசிக்குள் பிரவேசித்தான்!

மாற்கு.3:2 - ம் வசனத்தில் இயேசு ஒரு ஜெப ஆலயத்திற்கு சென்ற போது, அவர் மீது கோபமாயிருந்த எதிரிகள், அவர்மீது ஏதாவது குற்றஞ் சாட்டலாம் என்று "அவரை நெருக்கமாய் கவனித்துப் பார்த்தார்கள்" இன்றைய - நாகரீக உலக பரிசேயர்களும், இவ்வாறாகவே நீதியாய் வாழும் விசுவாசிகளை, குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக 'ஏதாகிலும் கண்டுபிடிக்க' மிக கவனமாய் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

நீங்கள் எவ்வளவு அதிகம் சிலர் மீது கோபமாயிருக்கிறீர்களோ அல்லது பொறாமையாயிருக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய், அவர்களின் வாழ்க்கையை உற்று நோக்கி, அவரிடத்தில் சில பிழைகளை காண்பதற்கு துடித்து நிற்பீர்கள்!

பொதுவாய் எல்லா ஜனங்களிடமும் காணப்படுவது போலவே, அவர்களுடைய ஜீவியத்திலும் அல்லது அவர்களுடைய வீட்டிலும் அல்லது அவர்களுடைய குடும்பத்திலும் **'சில அற்பமான தவறுகள்'** *காணப்படக்கூடும். ஆனால் தேவனோ, தன்னுடைய ஊழியர்களின் மீது கூறப்பட்ட அற்ப தவறுகளை வைத்து, அவர்களை நியாயந் தீர்ப்பவர்களின் 'பொல்லாத இருதயத்தை' வெளிப்படுத்துகிறார்!*

மேலும் ஆண்டவர் “என்னுடைய ஜனங்களில் பொல்லாத மனுஷர்கள் உண்டு! அவர்கள், வேட்டையாடுபவன் இருளில் பதுங்கி வேட்டையாடுவதுபோல் ‘மனுஷரைப் பிடிக்க’ கண்ணிகளை வைக்கிறார்கள்! அவர்களுடைய வீடுகளில் தந்திர கபடங்கள் நிறைந்திருக்கிறது.... இதை காணும் நான், ஒன்றும் நடக்காததைப் போல், விசாரியாதிருப்பேனோ?” எனக்கூறினார் (எரே.5:26,29-Living).

ஒருசமயம் பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து “ஏராளமான கேள்விகளை அவருக்கு முன் வைத்து, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழையை கண்டுபிடித்து அவரை அகப்படுத்தி கைது செய்யலாம்” என உபாயம் செய்தார்கள் (லூக்.11:53,54-Living). மற்றொரு சமயம், இந்த பரிசேயர்கள் “மார்க்க தலைவர்களை அவரிடம் அனுப்பி, அவரோடு சம்பாஷிக்கும் நேரத்தில் ஏதாகிலும் கண்ணியை வைத்து அவரைப் பிடிக்கலாம்” என முயற்சித்தார்கள் (மாற்கு.12:13-Living). இந்த பரிசேயர்களின் சந்ததிகள் தேவனுடைய ஊழியர்களை கேள்விகள் கேட்டு, அவர்களைக் கண்ணியில் சிக்க வைப்பதற்காக அவர்களைச் சுற்றி விழிப்புடன் கண்காணிப்பவர்கள் இன்றைய கிறிஸ்தவத்தில் ஏராளம் பெருகி விட்டார்கள்! ஆகவே “ஆடுகள் ஓநாய்களுக்குள்ளே அனுப்பப்படுகிறதுபோல” செல்லும் நாம் ‘சர்ப்பங்களைப்போல் ஞானமுள்ளவர்களாய்’ இருந்திடவேண்டும் (மத்தேயு.10:16).

முதல் தரமான பரிசேயராய் நீங்கள் சீக்கிரமாய் மாறுவதற்குரிய ஒரு வழி என்னவென்றால் “மற்ற விசுவாசிகளின் பிழை காண நெருங்கி கவனிப்பதேயாகும்” நீங்கள் அப்படி ஒரு பரிசேயனாய் மாற விரும்பாத வர்களாயிருந்தால், ‘இந்த பழக்கத்தை’ முற்றிலுமாய் ஒழித்து விடுங்கள்! ஏனென்றால், ‘இதுபோன்ற பழக்கம்’ ஜனங்களுக்கு உதவும் படி, நல்ல நோக்கமாய் ஒருபோதும் இருப்பதில்லை! மாறாக, அவர்களிடம் குற்றம் கண்டுபிடிக்கும் கெட்ட நோக்கமாகவே இருக்கும்!

‘பரிசேயத்துவ’ விஷத்தை முறிக்கும் மாமருந்து ‘இரக்கமே’ ஆகும்! ஆகவே தேவன் நம்மீது இரக்கமாயிருப்பதைப்போலவே, பிறரிடம் இரக்கமாயிருக்க நாம் கற்றுகொள்வோமாக! இந்த பூமியில் இயேசு நடந்து சென்ற போது, அவர் ஜீவியத்தின் மூலமாய் தெய்வ அன்பும்! தெய்வ இரக்கமும்! தெய்வ தயவும்! பிரவாகித்து வெளிப்பட்டது!

இன்று, நாமும் பரிசுத்தாவியினால் (கிறிஸ்துவின் ஆவியினால்) நிறைந்து அதே தெய்வஅன்பும், இரக்கமும், தயவும் நம் ஜீவியத்திலும் பிரவாகித்து வெளிப்படுவதாக! இதுவே, ரோமர் 5:5-ம் வசனத்தில் வாக்குதத்தமாய் கூறப்பட்டுள்ளது! இந்த வாக்குதத்தமே, நம் எல்லோருடைய ஜீவியத்திலும் நிறைவேறுவதாக! ஆமென்.